மறை வழி கண்ட
மாமன்னர்
சேரமான் பெருமாள்

எழுதியவர்:

அல்ஹாஜ் A.M. யூசுப்

ஆசிரியர், "மறுமலர்ச்சி" (வாரம்)

வெளியீடு:

'மறுமலர்ச்சி' பதிப்பகம்

61, காயிதே மில்லத் சாலை

திருச்சி – 620 001 Ph : 42808

PDF ISLAM

முதற்பதிப்பு – 1991

ஹிஜ்ரி 1412 முஹர்ரம்

அறிமுகம்!

இந்தத் தொடர் வரலாற்று நவீனத்தில் மூழ்க விரும்புவோர், அறிமுகத்தைப் படித்து மனதில் நிலை நிறுத்திக் கொண்டால் தொடர்ந்து படிக்க மிகச் சுவையாக இருக்கும்.

விலை ரூ:45

Printed at polyglot Printers, C 1, Quaid-e-Millat Road (Palakara

Main Road, Trichirapalli - 620 001 (Phone 42808)

PDF ISLAM

பதிப்புரை

'மறுமலர்ச்சி' வார ஏட்டில் ஏறக்குறைய ஒன்றரை ஆண்டாகத் தொடர்ந்து வெளிவந்து, பல்லாயிரக் கணக்கான வாசக நேயர்களால், பாராட்டி வரவேற்கப்பட்ட, "**மறை வழிகண்ட மாமன்னர் சேரமான் பெருமாள்**" என்ற வரலாற்று நவீனத்தை இப்போது நூல் வடிவில் வெளியிடும் வாய்ப்புப் பெற்றமைக்குப் பெருமகிழ்வடைகிறோம்.

கடந்த 48 ஆண்டுகளுக்கு முன்பு, காரைக்காலிலிருந்து வெளிவந்த "பால்யன்" என்ற வாரப் பத்திரிகையில் எழுத்துலகில் புகுந்து, 1948 – 49ம் ஆண்டுக்களில், சிங்கப்பூரிலிருந்து வெளிவந்த, "**மலாயா நண்பன்**" தினசரி - மற்றும் - வாரப் பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றி, கடந்த 40 ஆண்டுகளாக, திருச்சியிலிருந்து வெளிவரும் 'மறுமலர்ச்சி' வாரப்பத்திரிகையின் ஆசிரியராக இருந்து வரும், அல்ஹாஜ் A.M. யூசுப் சாஹிப் அவர்களின் வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்நூலை நமது இரண்டாவது நூலாக வெளியிடுவதில் பெருமையும் படுகிறோம்.

புத்தகக் காகிதத்தின் விலை சமீப காலமாக, இரு மடங்கு அதிகரித்து விட்டதால், நாங்கள் நிர்ணயிக்க இருந்த விலையை விட அதிகமாக வைக்க நேர்ந்துள்ளது. ஆதலால் புத்தகத்தின் விலையைப் பார்த்து மதிப்பிடாமல் அதன் தரத்தை முன் வைத்து, ஆதரவு நல்குவீர்கள் என எதிர்பார்க்கிறோம்.

பதிப்பாளர்கள்

PDF ISLAM

அறிமுகம்

கி.பி. 560–ம் ஆண்டிலிருந்து 610–ம் ஆண்டுவரை யுள்ள ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளுக்கு உட்பட்ட காலக் கட்டம்!

இந்திய தீபகற்பத்தின் தென்பகுதி, சேர– சோழ– பாண்டிய மன்னர்களின் செழிப்பான செங்கோல்களின் கீழ், சீரும் சிறப்புமாக இயங்கிக் கொண்டிருந்த சமயம்!

நாடு மூன்றெனச் சொல்லப்பட்டு, பழக்க வழக்கங்கள், பண்பாடுகள், மொழி வழிகள் ஆகியவற்றில் மாறுபாடுகள் காணப்படினும், மக்கள் அனைவரும் ஒரு இனத்தவரே என்ற தன்மையினால் உவப்பும் உறவும் கொண்டு கலந்து வாழ்ந்த காலம்!

அக்காலத்தே, 'சேர நாடு' என்று சொல்லப்பட்ட தென்னகத்தில் மேற்குக் கரையோரப் பிரதேசங்கள் (அநேகமாக இன்றைய கேரளாவை விட சற்று அதிகமான நிலப்பரப்புடன்,வடக்கே மங்களூர் மாவட்டம் வரை, தெற்கே நாகர்கோவில் சமீபம் வரை – எல்லையாகக் கொண்ட பகுதிகள்) சேரமான் வம்சத்தினரின் ஆளுகையின் கீழ்இருந்தது.

இந்தப் பரம்பரையின் மூத்தவரான முதலாம் சேரமான் பெருமாள் காலத்தில் தான், தென்னகத்தில் சமண மதம் தலை தூக்கி சைவ சமயத்துக்கு எதிராகப் போர்க் கொடி உயர்த்தியது. இன்றைய தமிழகத்தின் அன்றைய ஆட்சி களான சோழ, பாண்டிய நாடுகளில், பல நாயன்மார்கள் வெளிப்பட்டு, தம் பணிகளாலும், இசையாலும், கவிதை யாலும், தர்க்கத்தாலும் சமண மத விவாதங்களை முறியடித்து, சைவத்தை நிலைநாட்டி வந்தனர். இவர்களின்

PDF ISLAM

தலையானவர்களாக, திருஞான சம்பந்தர், அப்பர் சுவாமிகள், திருநாவுக்கரசர், சிறுத்தொண்டர், அப்பூதி அடிகள் முதலான பதினோரு நாயன்மார்கள், நாடு முழுவதும் வலம் வந்து நற்றவக் கொடியை ஏற்றி வந்தனர்.

சேர நாட்டை பொறுத்த வரையில், கி.பி. 561-ம ஆண்டில் ஆட்சி பீடமேறிய முதலாம் சேரமான் பெருமாள் ஒரு அரசராக மட்டுமல்லாமல் சைவசித்தாந்தத்தில் குருமகா சந்நிதானமாகவும் விளங்கினார். பெரிய புராணத்தில் 63 நாயன்மார்களில் ஒருவராக இவரையும் சொல்லப்படுகிறது. இவரைப் பற்றிய குறிப்பொன்று, பதினோராம் திருமுறையின் கண்ணே, "மதி மலி புரிசை மாடக்கூடல்" என்று தொடங்கும்'' திருமுகப் பாசுரம் " இவருக்கு வரையப்பட்டதாகவும், "திருக்கைலாய உலா" இவர் பாடியதாகவும், இறுதியில் வெள்ளைப் பரியேறி கைலாயம் சென்றதாகவும் புராணங்கள் கூறுகின்றன.

இவருக்குப் பிறகு கி.பி. 572-ல் அரியாசனம் ஏறிய, இரண்டாவது சேரமான் பெருமாள் முன்னவரைப் போன்றே ஞானக் கடலாகத் தாகழ்ந்தார் இவரே, ஆழ்வார்களில் பன்னிருவர்களில் ஒருவராகச் சைவப் பெருமக்களால் கொண்டாடப்படுகிறார். வட மொழியில் "முகுந்த மாலா" என்ற காப்பியத்தையும், தென் மொழியில் "பெருமாள் திருமொழி" யையும் பாடியவர் எனப் புகழ் பெற்ற அறிஞராகத் திகழ்ந்தார். இவர் ஆட்சி 12 ஆண்டு காலம் நடந்தது., இவருடைய மரணம் பற்றி பல கதைகள் கூறப்படுகின்றன. இவர் அரசியலையே கவனிக்கவில்லையென்றும், முற்றிலும் ஞான வழியிலேயே மூழ்கியிருந்தார் என்றும், ஒரு நாள் கடலோரத்திலேயே தவம் இருந்து, பூதவுடலோடு, கைலாயம் போய்விட்டார் என்ற கதையே பரவியுள்ளது.

இவருடைய ஆட்சிக் காலத்திலேயே இரண்டாது சேரமான்பெருமானை எதிர்த்துப் போராடிக்கொண்டிருந்த அவருடைய படைத் தளபதி மார்த்தாண்ட வர்மன் என்பவர்

PDF ISLAM

கி.பி. 584–ம் ஆண்டில் மன்னரானார். இவர் போர்க்குணம் நிறைந்தவராகவும், மக்களின் அமைதியான வாழ்வைச் சீர் குலைக்கக் கூடியவராகவும் விளங்கினார். பாண்டிய நாட்டுடன் வீணான யுத்தத்தைத் தொடுத்து,நாட்டில் வறுமையைத் தாண்டவமாடச் செய்தார். ஆதலால்அனைவருடைய வெறுப்புக்கும் ஆளாகியிருந்தார் என்றும், இவர் நாட்டைவிட்டு விரட்டப்பட்டார் என்றும் கூறப்படுகிறது.

இவருக்குப் பின் கி.பி. 598ம் ஆண்டு, முடிசூட்டப்பட்டவர்,மூன்றாம் சேரமான் பெருமாள் என்று குறிப்பிடப் படுபவர். இவருடைய இயற்பெயர்,பாஸ்கர ரவி வர்மன் என்பதாகும். இவர் பன்மொழி ஞானம் நிறைந்த பண்டிதர் ஆவார். கூர்ந்த மதியும், சிந்தனை சக்தியும், பொறுமைமிக்க வராகவும் விளங்கிய இவர், தம் குடிமக்களிடையே பாரபட்ச மற்ற அன்பைக் காட்டினார். சமய உணர்வில் தம் முன்னோர்களின் வழியாகிய சைவ சமய சித்தாந்தத்தைப் பின் பற்றி வந்தார். சைவ சமய வளர்ச்சிக்காக அரசுப் பூர்வமாகச் செய்ய வேண்டியவற்றை யெல்லாம் மிகத்தாராள மாகச் செய்து வந்தார். சேரமான் பரம் பரையினர் சைவ சித்தாந்தத்தின் காவலர்கள் என்ற நற்பெயருக்குக் களங்க மில்லாமல் காப்பாற்றி வந்தார். அதேசமயம் ஆட்சித் திறனிலும் வல்லவராக விளங்கினார் நீதி வழங்குவதில் துலாக்கோல் முள்ளின் முனையாகத் திகழ்ந்தார்.

நமது இந்த வரலாற்று நவீனம், சேர மன்னர்களின் வழியில் வந்த இந்த மூன்றாம் சேரமான் பெருமாள் அவர்கள் வாழ்வோடு சம்பந்தப்பட்டது. இது முற்றிலும் கற்பனையல்ல! வரலாற்றை ஆதாரமாகக் கொண்ட உண்மைகளின் வெள்ளப்பெருக்கு! இதில், இந்தியாவில் இஸ்லாத்தின் தொடக்கமும், தென்னிந்தியாவில் இஸ்லாத் தின் பெருக்கமும் ஜீவ நதிகளாகக் கலக்கின்றன.

இந்த வரலாற்று நவீனத்துக்குள் புகப்போகும் வாசகர்கள், இந்தக் காலக் கட்டத்தில், சேர நாட்டுக்கு ஏறக்

PDF ISLAM

குறைய 1700 மைல்கள் கடல் பரப்புக்கு அப்பால், மேற்கே யுள்ள அரபு பூமியின் நிலையையும், சேர நாட்டுடன் அரபு வர்த்தகர்கள் கொண்டிருந்த கடல்வழி வாணிபத் தொடர்பை யும் ஓரளவு தெரிந்து வைத்துக்கொள்ளல் அவசியமாகும்.

அரபு நாட்டுக் கடல்வழி வணிகர்கள், எந்தக் காலத்தி லிருந்து, சேர நாட்டுடன் வாணிபத் தொடர்பு கொண்டி ருந்தனர் என்பதைத் திட்டவட்டமாகச் சொல்ல முடிய வில்லை. ஆயினும் முதலாம் சேரமான் பெருமாள் காலத் துக்கு முன்பிருந்தே "முழு வெள்ளை ஆடைகள் உடுத்திய, தலையைத்துண்டுகளால் மறைத்துக் கொண்டிருந்த சிவந்த மேனியுடையோரும், இடுப்பில் மட்டும் பாதியளவு முரட்டுத் துணியணிந்திருந்த மிகக கறுப்பு நிறத்திலுள்ள அவர் களுடைய அடிமைகளும், நீண்ட ஆழமான மரக்கலங்களில் அடிக்கடி கடற்கரை ஊர்களில் காணப்படுவர். அவர்கள் வியாபாரப் பொருள்களை மாற்றிச் செல்வர். அவர்கள் யாருக்கும் எந்தத் தொல்லைகளையும் அளிப்பதில்லை. ஆனால் அவர்களுடைய அடிமைகளைச் சவுக்கால் அடிப்பார்கள்" என்ற குறிப்புகள் சரித்திரங்களில் உள்ளன. இவர்கள் அரபியர்களே என்று நம்ப வலுவான ஆதாரங்கள் உள்ளன.

அரபுகள என்போர் ஒரு குறிப்பிட்ட பகுதியிலிருந்து மட்டிலுமல்லாமல் அரேபிய தீபகற்பத்தின் பல துறைமுகப் பட்டினங்களிலிருந்தும இந் நாட்டுக்கு வந்திருக்கின்றனர், என்றும் சில குறிப்புகளிலிருந்தும் தெரியவருகிறது.

இன்று எமன் தேசம் என்று குறிக்கப்படுகின்ற நாட்டின் முக்கிய துறைமுகப்பட்டினங்களான, "மோஷா" "அல் ஹுதைதா" "அல் இத்திஹா" மற்றும் இன்றைய சவூதி அரேபியாவைச் சேர்ந்த, அன் குன்ஃபிதா, கிஷ்ரான், ஜெத்தா ஆகிய மக்காவை ஒட்டிய ஊர்களிலிருந்தும், "யன்பு" அல்பஹ்ர்" "அல் வஜ்ஹ்" "ராபிஃ" முதலான மதீனாவை யொட்டிய கடலோர கிராமங்களிலிருந்தும் வந்துள்ளார்கள் எனவும், பழமையான ஏட்டுச்சுவடிகளில் உள்ள சொற்களிலிருந்து கண்டறிய முடிகிறது.

இந்த "வெள்ளை உடையுடுத்திய செந்நிறத்தவர் இடைக்

PDF ISLAM

காலங்களில் சில ஆண்டுகளாகக் காணபபடவில்லை" என்ற குறிப்புகளும் உள்ளன. இதிலிருந்து, "முந்திய காலம்" என்பது அரேபியாவில் முஹம்மது (ஸல் – அம்) அவர்கள் 'நுபுவ்வத்' பெறுவதற்கு முன்னுள்ள காலமென்றும், "இடைக் காலம்" என்பது, அங்கு இஸ்லாம் பரவத் தொடங்கி, மக்கத்து காபிர்கள் இஸ்லாத்தை எதிர்த்துப் போர் நடத்திக் கொண்டிருந்த காலம் என்பது, "பிந்திய காலம்" என்பது மக்கா வெற்றிக்குப் பிறகு, புதிய சமுதாய அமைப்பு உருவாகிக் கொண்டிருந்தகாலம் என்பதும் யூகித்து அறிந்து கொள்ள முடிகிறது.

மூன்றாம் சேரமான் பெருமாளின் ஆட்சிக் காலம், மதீனா மாநகரில் நபிகள் நாயகம் (ஸல்–அம்) அவர்கள் உயிரோடிருந்த கடைசி கால கட்டம் என்பதும், (அதாவது இஸ்லாம் மார்க்கம் பூரணமாக நிறைவு பெற்று விட்ட காலம் என்பதும்) இஸ்லாம் மார்க்கம் முறையான ஆட்சி அமைப்புகளைப் பெற்று, பெருமானார் (ஸல்–அம்) அவர்களின் ஆசியுடன், ஸஹாபா பெருமக்கள் சுதந்திரமாக தங்கள் வர்த்தகங்களை நாடி, தரை கடந்தும், கடல் கடந்தும் பயணப்பட்ட காலம் என்பதும் தெளிவாகவுள்ளது.

அந்தக் காலத்தின் நிகழ்ச்சிகளையொட்டியதே இந்த வரலாற்று நவீனம்.

சுமார் 25 ஆண்டுகளுக்கு முன் 'மறுமலர்ச்சி'யில் 'அமுது என்ற சகோதரரால் தொடர் வரலாறாக ஆரம்பிக்கப்பட்டு, சில வாரங்கள் மட்டும் வெளிவந்து, முற்றுப் பெறாமல் நின்று விட்டது. அவர் தந்துள்ள தகவல்களோடு, மேலும் பல தகவல்களைச் சேகரித்து இவ் வரலாற்று நவீனத்தை நிறைவு படுத்தியுள்ளோம். நூல் வடிவம் பெறுவதற்கு அவருடைய உணர்வே காரணமாகும். அன்பர் "அமுது"க்கு என் ஆழ்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

A.M. யூசுப்

PDF ISLAM

சேர நாடு முழுவதும் அன்று பொது விடுமுறை! நாடெங்கும் அன்று வாணிபமில்லை; செய் தொழில்கள் இல்லை; ஏழை எளியவர்கள் யாருக்கும் அன்று எக் கவலையு மில்லை! அவர்களில் தேவையானவர்கள் வேண்டிய உணவு தான்யங்களையும் புதிய ஆடைகளையும் கூட இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்! அன்று அரசாங்க அலுவலகங்கள் அனைத்தும் அள்ளி வழங்கும் அன்பளிப்புச் சாலைகளாகத் திகழ்ந்தன, அன்ன சத்திரங்களோ விருந்து மண்டபங்களா கத் திகழ்ந்தன! விருப்பமுடையோர் வேண்டியமட்டும் அறுசுவை உணவுகளை அங்கு உண்டு களிக்கலாம்! கோயில் கள் அனைத்தும் பூஜை-நைவேத்திய ஒலிமயமாய் விளங்கின! சேர நாட்டின் எந்தப் பகுதியைப் பார்த்தாலும் இதே நிலை தான்!

பொங்கும் மகிழ்வினை மனத்தே தேக்கி பூரித்த முகத் துடன் ஆண்களும்-பெண்களும்-குழந்தைகளும் நாடு முழு வதும் குதூகலத்துடன் நடமாடிக்கொண்டிருந்தனர்.

தலைநகர் கள்ளிக்கோட்டையோ தனி எழிலுடன் திகழ்ந்து கொண்டிருந்தது. முதல் நாளிலிருந்தே வாகனங் கள் வாயிலாகவும், கால்நடையாகவும் கூட்டங் கூட்டமா கத் தலைநகருக்கு வந்து குவிந்துகொண்டிருந்த மக்கள் நக ருக்கே புதுப் பொலிவைத் தந்துகொண்டிருந்தனர். மச்சு மாடி வீடுகளானாலும், சின்னஞ்சிறு குச்சு குடிசைகளானா லும் அவை புத்தெழிலுடன் புது முகம் காட்டி நின்றன. வீதிகளெல்லாம் தோரணங்களால் எழில் நிறைந்து விளங் கின. பாவையர், வண்ணக் கலவைகளால் தம் இல்ல வாயில்களைக் கோலமிட்டு அழகு பொங்கச் செய்திருந்தனர்.

பா: 1

PDF ISLAM

புத்தம் புதிய ஆடையணிந்து சித்தமெல்லாம் மகிழ சின்னஞ்சிறுர்கள் சுற்றி சுற்றி வந்துகொண்டிருந்தனர்.

இந்த குதூகலம், அந்த நகரிலோ, நாட்டிலோ புதுமையானதொன்றல்ல. ஆண்டுக்கொருநாள் வருவதாயினும், இதுபோன்ற ஆனந்த நாள் அந்நாட்டில் வேறென்றுமில்லை: எத்தனை விழாக்கள் நடந்தபோதிலும் இத்தனை சிறப்புக்குரிய விழாவாக மற்றொரு விழா அந் நாட்டு மக்களுக்கு இல்லை. அவர்களுக்குத் தங்கள் மன்னரைவிட உயர்ந்தவராக யாரும் இல்லை. அவருடைய பிறந்த நாள்-முடிசூட்டு விழா நாளைவிட சிறந்த நாளாக எதையும் மதித்ததில்லை,

இவ்வளவுக்கும் மன்னர் சேரமான் பெருமாள் முடிசூட்டப்பட்ட இரண்டாவது ஆண்டுதான் அது? அவருக்கு முன்னால் ஆட்சி புரிந்த மார்த்தாண்டவர்மனை எதிர்த்து, நான்காண்டுகள் போராடிய மக்கள், அக் கொடுங்கோலனை நாட்டை விட்டு விரட்டி, சேர வம்சத்தின் சரியான வாரிசான பாஸ்கர ரவி வர்மாவை மூன்றுவது சேரமான் பெருமாளாக முந்திய ஆண்டில்தான் முடி சூட்டினர். சிறந்த அறிவுத்திறனும், ஆற்றலுமிக்க பாஸ்கர ரவி வர்மா, ''எனக்கு அரசியல் வேண்டாம்; ஆத்மார்த்திகமே போதும்'' என்று ஒதுங்கியிருந்த நிலையிலும், சேரமான் பெருமாள் வம்சத்தின் சரியான வாரிசான அவரை மக்கள் வற்புறுத்தி, பட்டத்துக்கு உரியவராக ஆக்கினர்.

முடி சூட்டப் படுவதற்கு முன்பு பாஸ்கர் ஒரு நிபந்தனை விடுத்தார். ''நான் ஆட்சிக்கு வந்து என்ன நன்மைகளை உங்களுக்குச் செய்யப்போகிறேனே, எவ்வளவு காலம் பதவியில் இருக்கப்போகிறேனே எனக்குத் தெரியாது, ஆதலால் ஒரு நாளாவது நான் என் மக்களைப் பூரண மகிழ்வுடனும், திருப்தியுடனும் காணவேண்டும். ஆதலால் எனது முதல் முடிசூட்டு விழாவன்று, இன்னென்ன காரியங்களைச் செய்ய

PDF ISLAM

வேண்டும் என்று ஒரு திட்டத்தை வகுத்தளித்து, அது தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் நடைபெற வேண்டும் என்றும் நிபந்தனை விடுத்தார். இதில் மற்றொரு தனிச் சிறப்பு என்ன வெனில் பாஸ்கர ரவி வர்மா, தான் பிறந்த நாள் நட்சத்திரத்தைக் குறிப்பிட்டு, அதே நாளில், அதே நேரத்தில் தான் தனக்கு முடிசூட்ட வேண்டும் என்றும் நிர்ணயித்தார். இதன் மூலம் அது இரட்டை திருநாளாகவும் சிறப்புப் பெற்றது.

இந்தப் பெரு விழாத்தான் சென்ற ஆண்டும் நடந்தது; இந்த ஆண்டும் நடந்துகொண்டிருந்தது.

அரண்மனையில் அலங்காரம் ஏகப் பிரமாதம்! அந்தப் புனித நாளன்று தம் கோமானின் தரிசனத்தைப் பெற அரண்மனையின் வெளி மைதானம் முழுவதும், மக்கள் வெள்ளம் காலையிலிருந்தே கரைபுரண்டு பரவிக்கொண்டிருந்தது. முடிசூட்டு விழா நடைபெறும் நேரம்வரை, கூடியிருக்கும் மக்களின் பொழுது மகிழ்வாகக் கழிந்துகொண்டிருக்க, பல்வேறு துறை கலைஞர்கள் தங்கள் திறமைகளை வெளிக்காட்டிக்கொண்டிருந்தனர். வீர விளையாட்டுகள் தெரிந்தவர்கள், சிலம்பம், வாள்வீச்சு, மல்யுத்தம், பளுதூக்குதல் போன்றவைகளையும். நடனக் கலைஞர்கள், கதகளி, குச்சிப்புடி, புலிவேடம், போன்றவைகளையும், வாத்தியக் கருவிகளை இசைக்கத் தெரிந்தோர் பல் வேறு இசைக்கருவிகளைக் கொண்டும் ஆங்காங்கே தங்கள் திறமைகளை வெளிப்படுத்திக்கொண்டிருந்தனர். விருப்புவோர் வட்டம் வட்டமாகக் கூடி நின்று தாங்கள் விரும்பும் கலையை ரசித்துக்கொண்டிருந்தனர்,

அரண்மனை ராஜரீக மண்டபத்தில், மந்திரிப் பிரதானிகள், சேனைத் தலைவர்கள், கலைஞர்கள், கவிஞர்கள், பிரமுகர்கள் வேதிய பிராமணர்கள் அனைவரும் முன் கூட்டியே வந்துகூடி, அவரவர் ஆசனத்தில் வந்தமர்ந்து. மன்னர் பெரு

PDF ISLAM

மான் அந்தப்புறத்திலிருந்து வருவதை ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டிருந்தனர். மன்னர் நடந்துவரும் வழியெல்லாம் மலர்த்தூவ, மலர்க்கூடையை ஏந்திய இளநங்கையர் வழிமேல் விழி வைத்துக் காத்துநின்றனர். ஆடிப்பாடி அனைவருக்கும் ஆனந்தம் விளைவிக்க ஆடலழகிகளின் கூட்டம் ஒன்று ஒரு பக்கம் நின்று கொண்டிருந்தது.

அந்தப்புரத்திலிருந்து அரியாசன மேடைக்கு வரும் வாயிலின் காவலர்கள், தங்கள் கையிலிருந்த நீண்ட குழாயை ஊதி, மன்னரின் வருகையை அறிவிக்க உடனே நாதஸ்வரங்களும் மேளங்களும் முழங்க, மலர்த் தட்டுகளை வைத்திருந்த மாதர்கள் வழி முழுவதும் வரிசையாக நின்று மலர்களைத் தூவ, பாதுகாவலர்கள் நான்குபேர் முன்னும் பின்னும் வெள்ளித் தடிகளைத் தட்டி நடக்க, அமர்ந்திருந்தவர்களெல்லாம் எழுந்து நின்று மரியாதையுடன் மகிழ்வொலி பரப்ப, நீதிக் குடையின் கீழ் நெஞ்சு நிமிர்ந்தவாறு, தன் மேல் அணிந்திருந்த மஞ்சள் பட்டுத் துண்டின் பாதியை இடக் கையில் தொங்கவிட்ட நிலையில் மன்னர் பிரான் மூன்றும் சேரமான் பெருமாள், அடிமேல் அடி வைத்து அழகுற நடந்து வந்து சிம்மாசனத்தில் அமர்ந்து, அனைவரும் அமருமாறு சைகைக் காட்டினர்.

அனைவரும் அமர்ந்த அடுத்த விநாடியில் வேதியர்கள் வேத பாராயணங்களை முழங்கி, திருஷ்டி கழித்து, சடங்குகள் பல செய்து வெகுமதிகளைப் பெற்றனர். அதைத் தொடர்ந்து, ஆஸ்தான கவிஞரும், மற்றும் பல கவிஞர்களும், கருத்தாழமிக்கக் கவிதைகளால், மன்னர் புகழ்பாடி பரிசுகளைப் பெற்றனர். அடுத்து ஆடலழகிகள் ஆடிப்பாடி ஆபரணப் பரிசுகள் பெற்றனர். அதைத் தொடர்ந்து, ''காணிக்கை சமர்ப்பணங்கள்'' ஆரம்பமாயின. மக்கள் தாங்கள் கொண்டு வந்திருந்த பலவித அன்பளிப்புப்

PDF ISLAM

பொருள்களை மன்னர் பிரான் காலடியில் குவித்து மரியாதை செய்துகொண்டிருந்தனர். மன்னரோ மனமகிழ்வுடன் அலைகளை ஏற்று ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்துக்கொண் டிருந்தார்.

இந்த சமயத்தில் ஒரு காவலன் மிக வேகமாக வந்து, பிரதான அமைச்சர் ராம நம்பி காதில் ஏதோ ரகசியமாக ஊதினன். அவர் உடனே அரசரை நெருங்கி, அவர் காதில் அந்த ரகசியத்தை மெதுவாக ஓதினர். அதைக் கேட்ட மன்னரின் முகத்தில் மகிழ்ச்சி வெளிப்பட்டது.

''அவர்களுக்கு மாத்திரம் என்ன விதி விலக்கா ? கௌரவத்துடன் அவர்களை நீங்கள் போய் அழைத்து வாருங்கள்'' என சிறிது சப்தமாகவே மன்னர் கூறினர். முதலில் ஏதோ ''அரசு ரகசியம்'' என நினைந்த மற்ற அமைச்சர்களும் பிரமுகர்களும் மன்னரின் சப்தமான பதிலிலிருந்து பிரதான அமைச்சர் போய் நேரில் அழைக்கக்கூடிய அந்தஸ்துள்ள யாரோ அபூர்வ விருந்தினர்கள் வந்திருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொண்டு அவர்கள் யார் எனத் தெரிந்து கொள்ள நுழைவு வாயிலை ஆர்வத்துடன் நோக்கத் தொடங்கினர்.

ஆனால், மன்னரின் உத்திரவைக் கேட்ட பிரதம அமைச்சர் ராம நம்பி ஒரு நிமிடம் மலைத்து நின்றுவிட்டு, மற்ற அமைச்சர்களைத் தன்பால் அழைத்து ஏதோ அவர்களிடம் கருத்து மாறிக்கொண்டு, மீண்டும் காதில் மட்டும் மெதுவாக ''அவர்கள் மிலேச்சர்கள்...சூத்திரர்களிலும் கீழ்ப் பட்டவர்கள்'' என்ருர்.

இதைக் கேட்டு ஒரு விநாடி யோசித்த மன்னர், பக்கத்திலுள்ளோர் கேட்கும் விதத்தில் ''அவர்களுக்குத் தனி இடம் கொடுத்துவிடலாமல்லவா ?'' என்று சாதாரணமாக வினவினர்.

PDF ISLAM

பிரதம அமைச்சர் ராம நம்பியால் அதற்கு மேல் பேச முடியவில்லை. ஆனால் அவர் முகத்தில் இதுவரை காணப் பட்ட சந்தோஷ பாவனை மாறி அடியோடு மாறிவிட்டது. அதை வெகு சிரமத்துடன் மறைத்துக்கொண்டு, போலி யான சிரிப்பை முகத்தில் காட்டியவராக ''தனிஇடம் அளிக் கலாம்...தனிஇடம் அளிக்கலாம்'' என்று தடுமாறியவாறு கூறிவிட்டு, ' மன்னர் பிரானே ! தங்கள் ஆணைப்படி நான் போய் அவர்களை அழைத்து வரத் தயங்கவில்லை. ஆனால், அது முறையாகாது...மேலும் வழக்கமில்லை ! நம்முடைய படைத் தலைவரையும், சில காவலாளிகளையும் வேண்டு மானால் அனுப்பலாம்'' என்று கூறினர்.

அரசர் அவரை ஏறிட்டுப் பார்த்த பார்வை யிலேயே, ராம நம்பியின் யோசனையை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை என்று தெரிந்தது. ''மற்ற அமைச்சர்களை அனுப்பலாமல்லவா ?'' என்று மன்னர் கேட்டபாணி, ''அனுப்புங்கள்'' என்று உத்திரவிடுவதுபோல் இருந்தது. அதைப் புரிந்துகொண்ட, பிரதம அமைச்சர், அதற்கு மேல் விவாதிக்காமல், பக்கத்தில் நின்ற மற்றஅமைச்சர்களிடம் ஏதோ ரகசியமாகப் பேச அவர்களில் இருவர், மன்னருக்கு மரியாதைச் செய்துவிட்டு, அங்கிருந்து புறப்பட்டனர். இந்தக் காட்சிகளைக் கண்ட மக்களுக்கு, ஏதோ ஒரு தனி விசேஷம் நடைபெறப் போகிறது என்று ஆர்வம் மேலும் அதிகரித்தது.

ராம நம்பி பிரதம அமைச்சர் மட்டுமல்ல, சேர நாட்டு அரசவையின் ராஜகுருவும்கூட ! வேத வழி முறைப்படி மன் னர் செங்கோலோச்ச வழி காட்டியும் அவரேயாவார். மத ஞானத்தில் மேதை; பக்தியில் சாணக்கியர்; வயதிலும் முதிர்ந்தவர்; அனுபவசாலியும்கூட !

இரண்டாவது சேரமான் பெருமாளுக்கும் இவரே பிர தம மந்திரியாகவும் ராஜ குருவாகவும் இருந்தார். அவர்

PDF ISLAM

கடலோரம் சென்று அங்கிருந்து மாயமாய் மறைந்த பிறகு, மார்த்தாண்ட வர்மனை ஆட்சிக்குக் கொண்டு வந்தவரும் இவரே! மார்த்தாண்ட வர்மனின் கொடுங்கோல் ஆட்சியை எதிர்த்து மக்கள் கிளர்ந்தெழுந்து போராடத் தொடங்கியபோது, அந்தப் போராட்டத்தை நசுக்க எடுக்கப்பட்ட கொடுமையான நடவடிக்கைகளுக்கு இவருடைய ஆலோசனைகளே காரணம் என்று மக்கள்பகிரங்கமாக பேசத் தலைப்பட்டனர். ஆனால், கடைசி சமயத்தில் அவர் மக்களுடன் சேர்ந்து கொண்டு, மார்த்தாண்ட வர்மனை எதிர்க்க முற்பட்டதனால், அவர் மீதுள்ள ஆத்திரம் மக்களுக்குத் தணிந்தது. ஆனாலும் அரசியல் அறிவுடையவர்களுக்கு அவர் மீதுள்ள சந்தேகம் முற்றிலும் தீர்ந்துவிடவில்லை, மார்த்தாண்டன் மக்கள் கையில் சிக்காமல் தப்பி ஓடச் செய்தவர் அவரே என நினைத்தனர். தலை மறைவாகிவிட்ட மன்னனுடன் அவருக்கு ரகசியத் தொடர்பு உண்டென்றும் சிலர் ஐயமுற்றனர்.

ஆயினும் ராஜ குருவைப் பற்றி பகிரங்கமாக எதிர் கருத்துக்களைக் கூற யாருக்கும் துணிவில்லை. ஏனெனில், அவருடைய செல்வாக்கு அரசவையில் மட்டுமல்ல, கோயில்கள் அனைத்திலும் இருந்தது. நாட்டிலுள்ள அனைத்துக் கோயில்களும் அவருடைய அதிகாரத்தில்தான் இருந்தன. அவர் அனுமதியின்றி எந்தக் கோயில் ஆண்டவனும் அசைய முடியாது என்ற நிலை தொடர்ந்து இருந்தது.

மேலும் அவர் தனக்கு ஏராளமாக ஒற்றர்களை வைத்துள்ளார் எனவும் அவருக்கு எதிராக யார் மூச்சுவிட்டாலும் அது உடனடியாக அவருக்கு எட்டிவிடுமென்றும், அவர்களை தந்திரமாகப் பழிவாங்கிவிடுவார் என்ற பீதியும் மக்களிடையே பகிரங்க ரகசியமாகப் பரவி இருந்தது.

இரண்டாம் சேரமான் பெருமாள் மறைவு குறித்து, ராஜ குருவுக்கு ஏதோ ரகசிய சம்பந்தமுள்ளது என்றும் சிலர் ரகசியமாகப் பேசிக்கொண்டிருந்தனர்.

PDF ISLAM

ராஜ குரு ராம நம்பிக்கு மன்வருக்கு வலப்புரத்தில் சிறிது தள்ளி, சம நிலையில் தனி ஆசனம் போடப்பட்டிருந்தது. மற்ற அமைச்சர்களுக்கு, அவருக்கு கீழே ஆசனங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இடப் புறத்தின் கீழே படைத் தளபதிக்கும் பாதுகாவல் தலைவர்களுக்கும் ஆசனங்கள் நிறுவப்பட்டு இருந்தன.

★

அமைச்சர்கள் இருவர் வெளியே சென்ற சிறிது நேரத்தில், ஐந்து அபூர்வ விருந்தினர்கள் பின் தொடர அவர்கள் உள்ளே நுழைந்தபோது, கூடியிருந்த மக்களெல்லாம் ஆச்சரியத்தோடு அவர்களை நோக்கினர். அந்த விருந்தினர்கள் பார்ப்பதற்கே விசித்திரமாக இருந்தனர். உடலமைப்பில் ஆஜானுபாகுகளாகக் காணப்பட்ட அவர்கள், உடல் முழுவதும் ஒரே மாதிரியாக வெண்ணிற ஆடையால் மூடியவர்களாக, தலையை மறைத்து அதையும் ஒரு வெள்ளைத் துணியால் கட்டி இரு காதுகளையும் பார்க்க முடியாதவாறு மறைத்தவர்களாக, கால்களில் முழு காலணிகளை அணிந்தவர்களாகக் காட்சியளித்தனர். அவர்களில் நால்வர், வெள்ளைக் கலந்த முழு சிவப்பு நிறத்தவராகவும், ஒருவர் அவர்களுக்கு நேர் மாற்றமாகக் கன்னங்கரேல் என்ற கறுப்பராகவும் தோற்றமளித்தனர் அவர்கள் ஒவ்வொருவர் இடுப்பிலும் ஒரு வளைந்த வாள் கட்டப்பட்டிருந்தது.

இவற்றையெல்லாம்விட ஒரு தனி வியப்புக்குரிய விஷயம் என்னவென்றால், அவர்கள் வயதிலே வாலிபர்களானாலும், முகத்தில் வட்டமாக தாடி வைத்தவர்களாகவும், சேர நாட்டுக் கலாச்சாரத்துக்கே முற்றிலும் மாறுபட்டுக் காட்சியளித்ததே யாகும்.

அவர்கள் ஐவரும் கம்பீரமாக நடந்து வந்து, மன்னர் முன்னால் நின்று உடலைப் பாதியளவுக்கு வளைத்துத் தம் கைகளை நெஞ்சுவரை உயர்த்தி மூன்று முறை அசைத்துவிட்டு

PDF ISLAM

நிமிர்ந்து நின்றனர். அவர்கள் மன்னருக்கு மரியாதை செய்த விதமும் இதுவரை யாரும் பார்த்திராத வகையில் புதுமையாக இருந்தது.

அவர்களை வரவேற்க, அமைச்சர்களுடன் சென்ற காவலர்கள், அவர்கள் கொண்டுவந்த காணிக்கைப் பொருள்களைச் சுமந்து வந்து மன்னருக்கு முன்னால் வைத்த னர். அவைகளில் ஒரு கூடை நிறைய சிவந்த நிறமுடைய உருண்டையான ஏதோ பொருள்கள் இருந்தன.

அவர்களில் ஒருவர் சில அடிகள் முன்னால் சென்று, ஏதோ இரண்டு சிறுகையளவுள்ள கூஜா போன்றதை மன்ன ரிடம் நேரில் கொடுக்க முயன்றார். உடனே ராஜகுரு பாய்ந் தெழுந்து, தன் கைத்தடியால் கட்டிக் காட்டி, அதை மன்னரின் காலடியில் வைகக சைகைக் காட்டவே, அதன் படி அவர் அதை வைத்துவிட்டுத் திரும்பி தன் குருவுடன் வந்து சேர்ந்துகொண்டார். அதன்படியே மற்றும் ஒருவர் முன்னால் சென்று சிறு பை போன்ற ஒன்றை. அதற்குப் பக் கத்தில் வைத்துவிட்டு, திரும்பி வந்து நின்றுகொண்டார். மீண்டும் அவர்கள் முன்போல் குனிந்து மரியாதை செய்த காட்சியைக் கண்டு மக்கள் ஆரவாரம் செய்தனர்.

தங்கள் காணிக்கைப் பொருட்களைச் செலுத்திவிட்ட அவர்கள் மேற்கொண்டு என்ன செய்வது என்று சுற்றும் முற் றும் பார்த்துவிட்டு, தாங்கள் அங்கு அமர்ந்து மற்ற நிகழ்ச்சி களைப் பார்க்க எந்த இடவசதியும் செய்யப்படாததைக் கண்டு, மரியாதையாகத் திரும்பிச் செல்ல முற்பட்டனர்.

மன்னர் சேரமான் பெருமாள், முகத்தில் கவலையை வெளிப்படுத்தியவாறு கேள்விக் குறியோடு, ராஜகுருவை நோக்கினார். மன்னரையே கவனித்துக்கொண்டிருந்த ராஜ குரு, உடனே எழுந்து வந்து மன்னர் காதில், ''அவர்கள் அனைவரும் மிலேச்சர்கள்...மிலேச்சர்கள் யாரையும் மண்ட

PDF ISLAM

பத்தில் நாம் அனுமதிக்கவில்லை. அவர்கள் வெளியேதான் உள்ளனர். அங்குபோய் இவர்களும் சேர்ந்து கொள்வார்கள்'' என்றார்.

மன்னர் முகத்தில் கோப உணர்வு வெளிப்பட்டதை அனைவரும் பார்க்க முடிந்தது. அதை அவர் அடக்கிக் கொண்டு, விருந்தினர்களை அழைக்கச் சென்ற அமைச்சர்களில் ஒருவரை நோக்கி, சிறிது உரத்த குரலில், ''அவர்களை அழைத்து வந்து, இங்கே அவர்களுக்கு ஆசனமளியுங்கள்'' என்று கூறி, தனது இடப் பக்கத்தைச் சுட்டிக் காட்டினார்.

மன்னர் சார்பாக ஒவ்வொரு உத்தரவையும் ராஜகுருவும் பிரதம மந்திரியுமான ராம நம்பியே வெளியிடுவது வழக்கம். மன்னரும் தம் எண்ணம் ஒவ்வொன்றையும் அவரிடமே கூறுவார். மற்ற அமைச்சர்களிடம் அவர் நேரடியாகத் தனது ஆணையைப் பிறப்பித்தது இதுவே முதல் தடவையாகும்.

மன்னரின் உத்தரவைக் கேட்ட துணை அமைச்சருக்கோ, தன்னிடம் நேரடியாக மன்னர் பேசியது பெரிய பாக்கியமாகப் பட்டதுபோலும், அவர் உடனடியாக விரைந்து சென்று திரும்பிச் சென்ற அந்த விருந்தினர்களுக்கு முன்னால் நின்று, தனது சைகையின் மூலம், ''இப்படி வாருங்கள்'' என அழைத்து வருவதற்கிடையில், மன்னருக்கு இடப்பக்கத்தில் காலியாக இருந்த சமமான மேடையில், காவலர் தலைவர்கள் ஐந்து ஆசனங்களைப் போட்டு வைத்தனர்.

தன்னை மீறிய இந்த நிகழ்ச்சிகளைக் கண்ட ராஜகுரு ராம நம்பிக்கு உள்ளுக்குள் கடுமையான ஆத்திரம் எழுந்தாலும், மிகவும் தந்திரசாலியான அவர் அதை ஒரு சிறிதும் வெளியே காட்டிக்கொள்ளாமல், முகத்தில் போலியான ஒரு புன் சிரிப்பை வரவழைத்துக்கொண்டு, அவரை கவனிக்கின்ற மக்கள் அவர் சம்மதத்தின் பேரில்தான் அந்

PDF ISLAM

தக் காரியங்கள் நடைபெறுவதுபோல், மன்னரையும், மற்றவர்களையும் பார்த்துத் தலையை அசைத்துக் காட்டினார்.

அவையில் கூடியிருந்த மக்களெல்லாம் வந்த விருந்தினரை வியப்புடன் பார்த்துக்கொண்டிருந்தனர். அவர்கள் தங்கள் முகங்களில் புன்சிரிப்புத் தவழ, துணை அமைச்சரைப் பின் தொடர்ந்து சென்று, அரசருக்கு இடப் பக்கத்தில் அவர்களுக்கெனப் போடப்பட்ட ஆசனங்களில் அமர்ந்தனர்.

இந்தப் புதுமையான மனிதர்கள் யார்? இவர்கள் இங்கு எதற்காக வந்திருக்கிறார்கள்? என்பன போன்ற கேள்விகள் சபையோர் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் எழுந்து கொண்டிருந்தது. அந்த ஐயத்தை தீர்க்கும் வகையில், ராஜகுரு ராம நம்பி எழுந்து சபையோர்களை நோக்கி நின்று, அவர்களை அறிமுகப்படுத்தத் தொடங்கினார்.

அன்புக்குரிய அவையோரே !

''நம்முடைய உயிரினும் மேலான சமய ஞானமும், ராஜரீக ஆற்றலும், கொடையுள்ளமும், வீர பராக்கிரமும் நிறைந்த நமது மன்னர் பிரான் புகழ், அவர்கள் பதவி ஏற்ற ஓராண்டுக்குள் உலகமெல்லாம் பரவி நிற்கின்றது. அவர்களுடைய கீர்த்தி மேலும் பரவவேண்டும் என்பது பகவானின் நாட்டம் போலும்! அதற்கு அடையாளமாகவே, நம் நாட்டிலிருந்து பல ஆயிரம் காதங்கள் தூரமுள்ள, கடல் கடந்த பூமியான, அரபு என்ற நாட்டிலிருந்து, இந்த வர்த்தகர்களை பகவான் நமது பூமியில் இறங்கச் செய்திருக்கிறார்!

இவர்களின் முன்னோர்கள் ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன்பு நம்முடைய நாட்டுக்கு அடிக்கடி வந்துபோய்க் கொண்டிருந்ததாக நமது சுவடிகளில் குறிப்புகள் இருக்

PDF ISLAM

கின்றன, ஆனால் இடையில் நீண்டகாலம் இவர்கள் வர வில்லை. அடுத்து முதலாம் சேரமான் காலத்தில் ஒருமுறை வந்திருக்கிறார்கள். அப்போது அவர்களின் நடத்தை சரி யில்லை என்பதை அறிந்த அந்த மகா மன்னர், கடலோர சத்திரத்திலேயே அவர்களைத் தங்க வைத்துத் திருப்பி அனுப்பிவிட்டார். அதன் பிறகு இரண்டாவது சேரமான் காலத்தில் ஒரு கப்பலில் வந்தார்கள். புத்தி தீட்சண்ய மிக்க அந்த மன்னர் பெருமான், அவர்கள் பொது மக்க ளோடு தொடர்பு வைக்கக்கூடாது என்று உத்தரவிட்ட தால், அவர்களுக்குத் தேவையான வர்த்தகப் பொருட்களை அரசு சார்பிலேயே வாங்கிக் கொடுத்து வழியனுப்பிவிட் டோம்.

''அதற்குக் காரணம் அவர்களுடைய நாட்டில் கல வரங்கள் நடந்துகொண்டிருந்தன. ''முஹம்மது'' என்ற ஒரு புரட்சிக்காரர் தோன்றி, அந்த நாட்டு மன்னருக்கு எதிராக உள் நாட்டுப் போரைத் தூண்டிவிட்டார். தனக் குத் துணையாகக் கீழ் ஜாதியினரைக் கிளப்பிவிட்டு, நாட் டில் ரத்த ஆறு ஓடச் செய்துகொண்டிருந்தார். மக்கள் ஒன்று சேர்ந்து அந்த முஹம்மதை நாட்டைவிட்டு ஓடச் செய்துவிட்டனர். அவர், மதீனா என்ற நாட்டுக்கு ஓடிப் போய் ஒளிந்துகொண்டார் என்றாலும் விடா முயற்சி யுடைய அந்தப் புரட்சிக்காரர், அங்கிருந்து படையெடுத் துச் சென்று மக்கா என்ற நாட்டைக் கைப்பற்றி, அங்குள்ள வர்களை யெல்லாம் கொன்றது மன்னியில், அங்குள்ள கோயில்களை யெல்லாம் இடித்துத் தள்ளிவிட்டார். அவ ரைச் சேர்ந்தவர்கள்தான் அன்று வந்திருந்தார்கள். ஆத லால் நாம் அவர்களை நாட்டுக்குள் அனுமதிக்கவில்லை.

''இப்போது வந்துள்ளவர்களும் அந்த ''முஹம்மது'' உடைய ஆட்களே ஆவார்கள். இவர்கள் நாட்டில் சண்டை கள் ஓய்ந்து, சமாதானம் நிலவுவதாகவும், முஹம்மது என்ற மன்னர் நேர்மையாக ஆட்சி புரிவதாகவும் நேற்று நான்

PDF ISLAM

விசாரணை செய்தபோது, இவர்கள் கூறினார்கள். தனக்கு உதவி செய்த மிலேச்சர்களுக்கும், புலையர்களுக்கும் பெரிய பதவிகளை அளித்துள்ளார் என்றும் தெரிகிறது. இப்போது வந்திருப்பவர்களில் ஒரு நபர் கீழினத்தவர் என்பதை நீங்களே புரிந்துகொண்டிருக்கலாம் !

''எனினும் நமது காருண்யமும் தாராள உள்ளமும்மிக்க மன்னர் பிரான் அவர்கள் மிகவும் பெருந்தன்மைகொண்டு அவர்களுக்கு நமது அவையில் சம அந்தஸ்து அளித்து இடம் கொடுத்துள்ளார்கள். மேலும் அவர்களுடைய காணிக்கைப் பொருட்களையும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். இவர்கள் அனைவரும் மிலேச்சர்கள். ஆயினும், வெளி தேசத்தவராக இருப்பதாலும், காணிக்கை செலுத்த வந்துள்ளதாலும், மன்னர் பிரானின் பிறந்தநாள் மற்றும் முடிசூடிய நாளாகிய நமது மகிழ்ச்சிக்குரிய புனித விழாவில் கலந்துகொள்வதற்காகவே வந்துள்ளதாலும், மன்னர் பெருமான் அவர்களுக்கு கண்ணியம் அளித்துள்ளார்கள். ஆதலால் இது முற்றிலும் ராஜரீக விஷயமாகும். நீங்கள் இவர்களைப் பொருட்படுத்த வேண்டியதில்லை ! நாங்கள் அவர்களின் மற்ற விஷயங்களை கவனித்துக்கொள்வோம் ! வாழ்க ! நமது மன்னர் சேரமான் பெருமாள் ! வளர்க நமது மன்னர் பிரான் புகழ் !''

இவ்விதம் ராஜகுரு ராம நம்பியார் கூறி முடித்தவுடன் அவையில் மிகப் பெரும் நிசப்தம் நிலவியது. ஒவ்வொருவரும் வந்திருந்த விருந்தினர்களின் முகங்களையே உற்று நோக்கினர். அவர்களில் நால்வரின் முகங்கள் சர்வ சாதாரணமாக-அதாவது பேசப்பட்ட பேச்சுக்களைப் புரிந்துகொள்ளாத நிலையில் காணப்பட்டது. ஆனால், கறுப்பாக இருந்தவர் முகத்தில் மட்டும் புன்சிரிப்புத் தவழ்ந்து கொண்டிருந்தது. சில நிலையில் பேசப்பட்ட வார்த்தைகளை அவர் புரிந்துகொண்டது போலவும் முகபாவனையில் காட்டிக்கொண்டிருந்தது.

PDF ISLAM

ராஜகுருவின் அறிமுகப் பேச்சில் மன்னர் சேரமான் பெருமாள் அவர்கள் திருப்தியடையவில்லை என்பதை அவர் முகம் தெளிவாகக் காட்டிக்கொண்டிருந்தது. சில நேரங் களில் மன்னர் பிரானின் முகத்தில் வேதனையும் கோபக் குறி களும் தென்பட்டதையும் அவையோர் கவனிக்கவில்லை.

ராஜகுரு பேச்சுக்குப் பிறகு, மன்னர் பிரான், அந்த அரபு நாட்டு விருந்தினர்களை நோக்கி தமிழ் மொழியில், ''உங்கள் அன்பளிப்புப் பொருட்களை அவையோர் முன் காட்டுங்கள்!'' என்றார்.

அவர்களில் கறுநிறத்தவராக இருந்தவர் அதைப் புரிந்துகொண்டது போல எழுந்தார். உடனே ராஜகுரு துள்ளி எழுந்து மன்னர் காதின் சமீபம் வாயை வைத்துக் கொண்டு ஏதோ ரகசியம் கூறினார். அவர் கூறிய முறையிலி ருந்து, அவர்களின் அன்பளிப்பை பகிரங்கப்படுத்த வேண் டாமென்றோ, அல்லது ஏற்றுக்கொள்ளாமல் திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்றோ கூறுவதுபோல் இருந்தது. மன்னர் சேரமான் பெருமாள் தன் தலையை மறுப்பாக அசைத்ததிலிருந்து, ராஜகுருவின் யோசனையை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் தெரிந்தது.

இதற்கிடையில், எழுந்து நின்ற அந்தக் கறுநிறத்த வரிடம் மற்ற அரபிகள் ஏதோ கேட்டனர். அதற்கு அவர் அரபி மொழியில் கூறியதிலிருந்து, மன்னரின் அறிவிப்பை அவர் அரபி மொழியில் கூறியிருக்க வேண்டும் என்று புரிந்துகொள்ள முடிந்தது.

இந்நிலையில் மக்களுக்கு ஏற்பட்ட வியப்பு யாதெனில், மன்னர் தமிழ் மொழியில் கூறியதை அந்த ஆறடி உயரம் உள்ள கறுப்பு விருந்தினர் எப்படிப் புரிந்துகொண்டார் என்பதே ஆகும். மேலும், அவர் புரிந்துகொள்வார் என் பது மன்னருக்கு எப்படித் தெரியும் என்பதுமாகும்.

PDF ISLAM

கறுப்பு நிறமுடைய ஆஜானுபாகுவான அந்த உயர்ந்த மனிதர் எழுந்து சிறிது முன்வந்து மன்னர் முன் நின்று, இடுப்பளவு குனிந்து தனது வலது கையால் நெஞ்சை மூன்று முறை தொட்டு மரியாதை செய்துவிட்டு, பிறகு மக்களை நோக்கி அதேபோன்று மரியாதை செய்து விட்டுக் கீழே குனிந்து, மன்னரின் காலடி சமீபத்தில் தாங் கள் வைத்த பரிசுப் பொருட்களில் ஒரு சிறு பையை எடுத்து, அதில் கையைவிட்டு அள்ளி வெளியே எடுத்தார். அவர் கை நிறைய தங்கக் காசுகள் மினுமினுத்தன. அவை யிலுள்ளோர் அதைப் பார்க்க ஆர்வத்துடன் எழுந்தனர்.

கறுப்பு நிறத்தவர் சிரித்த முகத்துடன்- ''இவை தங்க மொஹராக்கள் ! அரச பெருமான் தனது ஆபரணங் களோடு இணைத்துக்கொண்டால் மிகவும் அழகாக இருக் கும் ! மன்னருடைய 39-வது வயதின் நினைவாக, இந்தப் பையில் 39 மொஹராக்கள் இருக்கின்றன!'' என்ற வார்த் தைகளைத் திக்கு முக்காடி அரை குறைத் தமிழில் கூறி அந் தப் பையைத் தனது இரண்டு கைகளிலும் வைத்து மன் னர் முன் நீட்டினார். மக்கள் கரவொலி எழுப்பி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

அரசர் ராஜ குருவைப் பார்க்க, அவர் முன் வந்து அந்தப் பையை தன் கரங்களால் எடுத்துக்கொண்டார். அவர் முகத்தில் மகிழ்ச்சிக்குப் பதிலாக ஒருவித கடுகடுப்பு மிகைத்து நின்றது. அந்தக் கறுத்த மனிதர் மீண்டும் குனிந்து, மற்றொரு சிறு பையை எடுத்து, அதிலுள்ள வற்றை, எல்லோரும் பார்க்கும்படியாகக் கையில் கொட்டி னார். அவை அனைத்தும் சுத்தமான வெண் முத்துக்கள் என்று அனைவரும் தெரிந்துகொண்டனர்.

''இந்தப் பையில் 100 முத்துக்கள் இருக்கின்றன ! மன்னர் பிரான் 100 ஆண்டுகள் வாழ வேண்டும்'' என்று அந்தக் கறுப்பு மனிதர் அரை குறைத் தமிழில் சொல்ல,

PDF ISLAM

சபையிலுள்ளோர் அனைவரும், ''எங்கள் சேரமான் வாழ்க !'' என்று உணர்ச்சிக் குரல் எழுப்ப அதையும் ராஜ குரு பெற்றுக்கொண்டார்.

மூன்றாவதாக மெல்லிய ஜவ்வினால் செய்யப்பட்ட ஒரு சிறிய கூஜாவைப்போல் காணப்பட்ட ஒன்றைஅந்தக் கறுப்பு மனிதர் எடுத்து உயரே தூக்கிப் பிடித்தார் அதனுள்ளே சிவப்பாக ஏதோ திரவகம் போல் இருந்ததை அனைவரும் பார்க்க முடிந்தது. அவர் அதைத் திறக்க முற்பட்ட போது, ராஜகுரு ஆத்திரத்துடன் எழுந்து, ''அதைத் திறக் காதே ! அதைத் தனியாகச் சோதனை செய்யப்பட்ட பிறகே அனுமதிக்கப்படும் !'' என்று தனது கம்பீரக் குர லில் கூறினார். இதைக் கேட்டவுடன் கூட்டத்தில் ஒரு பரபரப்பு ஏற்பட்டது.

கறுத்த மனிதர் தன் முகத்தில் கொஞ்சம்கூட மாற்றம் காணப்படாத நிலையில், அந்தக் கூஜாவை திறக்காத நிலையில் ''இது முற்றிலும் மணம் நிறைந்த ரோஜாவினால் தயாரிக்கப்பட்ட பூனான் தேசத்து வாசனைத் திரவியமே தவிர அல்லது, சந்தேகத்துக்குரிய எந்தப் பொரு ளும் அல்ல !'' என்று, ராஜ குருவுக்கு பதில் சொல்வது போல மன்னரைப் பார்த்து மரியாதையாகக் கூறினார்.

ராஜகுரு அதே சந்தேக பாணியில் அவரை நோக்கி, ''அப்படியானால் அதைத் திறந்து முதலில் உம்மீதும் உம் நண்பர்கள்மீதும் பூசிக்காட்டும் !'' என்று உத்திரவிட்டார்.

அதைக் கேட்ட அக் கறுப்பு மனிதர் முகத்தில் புன் சிரிப்புத் தவழ்ந்தவாறு, தன் நண்பர்களை நோக்கி அரபி மொழியில் ஏதோ கூற அவர்கள் நால்வரும் எழுந்து அரசர் முன் வந்து நின்று மரியாதை செய்துவிட்டு நின்ற னர்.

அந்தக் கறுப்பு மனிதர் மெதுவாக அந்தச் சவ்வுக் கூஜாவைத் திறந்து, மிகச் சிறிதளவு தன் உள்ளங் கையில்

PDF ISLAM

கொட்டி இருகைகளையும் ஒன்றாகச் சேர்த்துத் தேய்த்த போது, அந்த அவை முழுவதும் ஒரே ரோஜா மலர் வாடையாகக் கமழ்ந்தது. தனது கையைத் தன் ஆடை மேலும், முகத்தின் மேலும் தடவிக்கொண்டு அந்தக் கூஜாவை மற்றொருவரிடம் கொடுக்க அவரும் அதுபோல் செய்ய, சபை முழுவதும் இன்னும் அதிகமான வாசனைக் கலந்தது. அவர் மற்றொருவரிடம் கொடுக்க முனைந்தபோது, மன்னர் சேரமான் பெருமாள் தனது வலது கரத்தை உயர்த்தி, ''போதும்'' எனக் கூறிவிட்டு, ராஜகுருவைப் பார்க்க, அவர் வேண்டா வெறுப்போடு அதைப் பெற்றுக் கொண்டார்.

நான்காவது பரிசுப் பொருள் பெரியகூடை அளவில் இருந்ததால் அதைத் தூக்கிச் காட்ட முடியவில்லை. சிவப் பாகவும் கறுப்பாகவும் உருண்டை வடிவத்தில் இருந்த சிலவற்றைக் கையில் எடுத்து, ''இவை எங்கள் நாட்டுப் பேரீத்தம் பழங்கள், கிருபையுள்ள அல்லாஹ், எங்கள் பாலைவன பூமிக்கு அளித்துள்ள பாக்கியமாகும்! தேன் நிறைந்தது!'' என்று கூறி, ராஜகுருவைப் பார்த்தவாறு மரியாதைச் செய்து, ''இதில் சந்தேகம் வேண்டாம்! நாங் களே முதலில் சாப்பிடுகிறோம்'' என்று சொல்லியவாறு ஐவ வரும் ஆளுக்கொரு பழத்தைச் சாப்பிட்டுக் காட்டினர். சபையோர் கரவொலி எழுப்பினர்.

மன்னர் சேரமான் பெருமாள் தன்கையில் சிலபழங் களைப் பெற்று ஒன்றை சாப்பிட்டபின், ராஜகுருவை அழைத்து அவர் காதில் ஏதோ ரகசியமாகக் கூற, அவர் படைத் தளபதியை அழைத்து அவரிடம் ஏதோ சொல்ல அவர் தன் காவலர்களில் ஒருவரை அழைத்து, அந்தப் பழக்கூடையைத் தூக்கிக்கொள்ளச் சொல்லி, அவையிலி

பா: 2

PDF ISLAM

ருந்த ஒவ்வொருவரிடமும் சென்று, ஆளுக்கு இரண்டு பழங்கள் வீதம் வழங்கத் தொடங்கினர்.

அவையோர் அனைவரும் தங்களிடம் அளிக்கப்பட்ட பேரீத்தம் பழங்களைப் பெற்று, அவற்றை வியப்புடன் திருப்பித் திருப்பிப் பார்த்துவிட்டு, அதைப் பிய்த்துச் சிறிது சிறிதாகச் சுவைத்துப் பார்த்தனர். அவர்களின் முகங்களில் மகிழ்ச்சி பொங்கியது. ஆனால், ராஜகுரு ராமநம்பியின் முகத்தில் மட்டும் ஒருவித வெறுப்பும், கடுகடுப்பும் பிரதிபலித்துக்கொண்டிருந்தது. அவர் தனக்கென பேரீத்தம் பழம் எதுவும் எடுத்துச் சுவைக்கவில்லை. இதை மன்னரின் கூறிய கண்கள் கவனித்துவிட்டு, அதைப் பொருட்படுத்தாதது போல் திரும்பிக் கொண்டன.

மன்னர் சேரமான் பெருமாள் ஒரு சைக்கினையின் மூலம் அந்தக் கறுப்பு நிறத்தவரை அழைத்தார். அவர் எழுந்து வந்து, மரியாதையாக மன்னரின் காலடியில் அமர்ந்து, தனது வலது கையை வலது காது பக்கம் வைத்து, மன்னர் சொல்வதைக் கேட்பதற்கு தயாரானர். மன்னர் சிறிது குனிந்து, அவரிடம் ஏதோ இரண்டொரு வார்த்தைகள் சொன்னர்.

இந்தச் சம்பவம், ராஜகுருவுக்கும் மற்ற அமைச்சர்களுக்கும் மட்டுமல்லாமல், அவையோர் அனைவருக்குமே புதுமையாக இருந்தது. ஏனெனில் மன்னர் வாயைத் திறந்து எதைச் சொல்வதானாலும், பிரதம மந்திரியும் ராஜகுருவுமான ராமநம்பியின் மூலமே சொல்வது வழக்கம். எப்போதாவது அரிதாக, பிரதம மந்திரிக்கு அடுத்த ஸ்தானத்திலுள்ள சேதுபத்திர வர்மா மூலமோ, படைத்தளபதி மார்த்தாண்ட பூபதி மூலமோ தனது கட்டளைகளையிடுவார். வேறு எந்த நபர்களிடமும் அரசவையில் நேரடியாகப் பேசமாட்டார். இந்த வழக்கத்துக்கு மாருக, வெளி நாட்டிலிருந்து வந்த நபரை அழைத்து மன்னர்

PDF ISLAM

பேசியது அனைவருக்கும் வியப்பூட்டியது. அவர் என்ன கட்டளையிட்டார் என்பதைத் தெரிந்துகொள்வதில் எல்லோருமே ஆர்வம் காட்டினர். ராமநம்பி அதையெல்லாம் பொருட்படுத்தாமல் தனது ஆசனத்தில் கம்பீரமாகச் சாய்ந்துகொண்டு கேலியாக அந்தக் கறுப்பு நபரையும், மக்களையும் பார்த்துக்கொண்டிருந்தார்.

மக்களுடைய ஆர்வம் அதிக நேரம் சோதிக்கப்படாமல், அந்தக் கறுப்பு மனிதர், மன்னரின் சமீபத்திலிருந்து பின்னோக்கி நகர்ந்துவந்து எழுந்து நின்று, மக்களை நோக்கி குனிந்து நிமிர்ந்து மரியாதை செய்து, தன் குளறுபடியான தமிழில், ''மகத்துவம் பொருந்திய மன்னர் சேரமான் பெருமாள் அவர்கள் நீடூழிகாலம் வாழ அல்லாஹ்விடம் பிரார்த்திக்கிறோம்'' என்றார்.

மக்களெல்லாம், ''மன்னர் பிரான் வாழ்க ! வாழ்க !'' என்று குரல் கொடுத்தனர். கறுப்பு மனிதர் தன் பேச்சைத் தொடர்ந்தார்.

''கிருபைமிக்க மன்னர் பிரான் அவர்கள், எங்களை நாங்களே உங்களிடம் அறிமுகப்படுத்திக்கொள்ள அனுமதி கொடுத்துள்ளதற்கு எங்கள் ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். என்னுடைய பெயர் முஸ்லிம் பின் அத்ஹம், என்னுடனுள்ள என் நண்பர்களின் பெயர்களாவன..'' என்று கூறி ஒவ்வொருவரையும் அழைத்து, இவர் குலைப்பின்தார், இவர், அப்து மனாஃப் இவர் கப்பாப் பின் ஹகம், இவர், அப்துல்லா இப்னு குஹாபா என்று கூற, அவரவரும் எழுந்துவந்து, முதலில் மன்னருக்கும், அடுத்து ராஜகுருவுக்கும் பின்பு மக்களுக்கும் தலை குனிந்து மரியாதை செய்தனர். கறுப்பு நிறத்தவரான முஸ்லிம் பின் அத்ஹம் தொடர்ந்து பேசலானார்.

''ஒரு காலத்தில் மனிதர்களின் அடிமையாக நான் இருந்தபோது, இரண்டுமுறை இந்த பூமிக்கு வந்து, ஒவ்

PDF ISLAM

வொரு தடவையும் சில மாதங்கள்வரை இங்கு தங்கியிருந்திருக்கிறேன். அதன் பாக்கியமாக உங்கள் மொழியை நான் நன்ருக விளங்கிக்கொள்ளவும், குற்றங் குறைகளோடு ஓரளவு பேசவும் முடிந்தவனுக இருக்கிறேன். என்னுடைய நண்பர்களில் ஒருவரான கப்பாப் பின் ஹகம் அவர்களும் ஏற்கனவே ஒருமுறை இந்த பூமிக்கு வந்துபோனவராக இருப்பதால், அவர் தமிழ் மொழியைப் புரிந்துக்கொள்ளக் கூடியவராக இருக்கிருர். ஆனுல் பேசுவதற்கு அவரால் முடியாது. சைக்கினைகளின் மூலம் அவரால் பதில் சொல்ல முடியும்! மற்றமுன்று நண்பர்களும், இந்த பூமிக்கு முற்றிலும் புதியவர்கள் ஆவார்கள்.

''நாங்கள் கடல் வழி வாணிபம் செய்யக்கூடியவர்கள். சொந்த நாட்டுக்குப் பொதுவான பெயர் அல்-அரப் ஆகும். ஆயினும் நாங்கள் ஹிஜாஸ் பகுதியைச் சேர்ந்த அல் வஜஹ் என்ற கடற்கரைப் பட்டணத்தைச் சேர்ந்தவர்கள்,

''ஒவ்வொரு ஆண்டும், காற்றுப் பருவ காலத்தில், எங்கள் நகரைவிட்டுப் புறப்பட்டு, எங்கள் நாட்டுக்கு நேர் எதிராக குறைவான கடல் தூரம் உள்ள மிஸ்ர் (இன்றைய பெயர் எகிப்து) நாட்டின் துறைமுகப்பட்டினங்களிலும் மஸ்ஸாவா (இன்றைய எத்தியோப்பியா)வின் ஒரு பகுதியாகிய எரிட்ரியா) விலும், மோட்சா (இன்றைய எமன் நாட்டின் நகரம்) ஆகிய கடற்கரை பகுதிகளெல்லாம் நாங்கள் நங்கூரம் பாய்ச்சி ஒரு நாட்டின் பொருளை வாங்கி மற்றொரு நாட்டில் விற்றும், சில பொருட்களை எங்கள் நாட்டுக்குக் கொண்டு சென்றும் வாணிபம் செய்வது எங்கள் பாரம்பர்ய தொழிலாகும். மேலும் காற்று எங்களுக்குச் சாதகமாக இருந்தால், ஜிபுத்தியில் வைரங்களையும் நன்முத்துக்கள் தாராளமாகக் கிடைக்கும் சொகோட்ரா ஹதீபா தீவுகளை அடைந்து அங்கு முத்துக்களையும் வாங்கிக் கொண்டு, அகன்ற ஆழ்கடலைப் பல வாரங்கள் கடந்து,

கிழக்கு நோக்கி வந்து, அல்லக்காவில் (இன்றைய லட்ச தீவுகளில்) ஓய்வு எடுக்கிறேம். அங்கிருந்து நேராக இந்த செஹ்ர் (சேர) பூமிக்கு வருகிறேம். இங்கு சில காலம் தங்கி எங்கள் வியாபாரப் பொருட்களை விற்றும், இங்குள்ள பொருட்களை வாங்கிக்கொண்டும், முஹல்ல தீவுகளுக்கு (இன்றைய மால்தீவ்ஸ்) சென்று அங்கும் வர்த்தகங்களை கவனித்துவிட்டு, நேமர எங்கள் தாயகம் திரும்புகிறேம். அந்தப் பயணவழியில், நாங்கள் ''அல்லக்கா''(லட்ச தீவுக்கு) வந்தபோது மகிமை பொருந்திய மன்னர் சேரமான் பெருமாள் அவர்களின் பிறந்த நாள் விழாவும் முடிசூட்டு ஆண்டுவிழாவும் நடக்கும்நன்னுளை அறிந்து, அதில் நாங்களும் பங்கு கொள்ளவேண்டும் என்று மூன்று தினங்களுக்கு முன்பே இங்கு வந்து சேர்ந்தோம். ஆனல் எங்களுடைய சோதனைக் காலத்தின் காரணமாக கடமை உணர்வுமிக்க இந்நாட்டுக் காவலர்களின் சந்தேகத்துக்கு உள்ளாகிவிட்டோம். அவர்கள் இரண்டு தினங்களாக எங்களைக் கரை இறங்கவிடாமல் தடுத்துவிட்டார்கள். நேற்றுதான், கண்ணியம் வாய்ந்த ராஜகுரு அவர்களின் சந்நிதானத்தில் ஆஜர் செய்யப்பட்டு அவர்களின் கருணையால் நாங்கள் ஐவர் மட்டும் கரை இறக்க அனுமதிக்கப்பட்டு, இந்த அருமையான விழாவில் கலந்துகொள்ள பாக்கியம் பெற்றேம். கப்பலோட்டிகளான மேலும் 30 பேர்கள் கடலிலேயே காவலில் உள்ளதால், இன்றைய மகா சிறப்பான காட்சிகளைக் காணும் பாக்கியம் அவர்களுக்குக் கிடைக்கவில்லை...'' என்று சொல்லி நிறுத்தினர்.

இந்தச் செய்தியையே புதியதாகக் கேள்வி படுபவர் போல், மன்னர் சேரமான் பெருமாள் ஆச்சரியம் மேலிட்டவராய் ராஜ குருவை நோக்கினர். அவரோ தன் புருவங்களைச் சுளித்தவராய் முஸ்லிம் பின் அந்ஹமையே முறைத்துப் பார்த்துக்கொண்டிருந்தார். அவையிலிருந்த மக்களுக்கோ அந்தக் கறுப்பு மனிதர் குறிப்பிட்ட பயண வழிகளோ, ஊர்களின் பெயர்களோ, அவருடையவும், அவர்

PDF ISLAM

நண்பர்களின் பெயர்களோ எதுவும் விளங்கவில்லை. ஆனால் அவர்கள் யார். அவர்களுடைய பயண நோக்கம் யாது என்பதை யெல்லாம் புரிந்துகொண்டனர். மேலும் அவர் களுடன் வந்த 30 பேர்களையும் பற்றி ஒருவருக்கொருவர் ஏதோ பேசிக்கொண்டனர்.

இந்த சமயத்தில் ராஜகுரு ராம நம்பியவர்கள் தன் ஆசனத்திலிருந்து எழுந்து, மன்னரின் காதில் மெதுவாக ஏதோ சொன்னார்.

மன்னர் சேரமான் பெருமாள் சிறிது தயங்கிவிட்டு, துணைப் பிரதமர் மற்றும் இரு அமைச்சர்களை அழைத்து ஏதோ ஆலோசனை கேட்டார். அவர்கள் சொன்ன ஆலோசனை, ராஜ குருவின் கருத்துக்கு எதிராக அமைந்ததுபோல் காணப்பட்டது. அவர் முகம் சுருங்கியவாறு மீண்டும் தனது ஆசனத்தில் போய் அமர்ந்து கொண்டார்.

துணைப் பிரதமர் சேது பத்திர வர்மா அவர்கள் முஸ் லிம் பின் அத்ஹமை நோக்கி, ''நீங்கள் மேற்கொண்டும் ஏதேனும் சொல்ல வேண்டியுள்ளதா ?'' என்று கேட் டார்.

அதற்கு அவர் மிகவும் மரியாதையாக, ''மாட்சிமை தங்கிய மன்னர் பிரான் சமுகம் "அங்கீகாரம் அளித்தால்'' என்று நிறுத்தினார்.

மன்னரின் அங்கீகாரத்தை, சேது பத்திரர்எதிர்பார்ப் பதற்கு, முன்பு, மன்னர் சேரமான் பெருமாள் அவர்கள் தமது தலையை அசைத்து மேற்கொண்டும் அவர் பேச அனுமதித்தார்.

முஸ்லிம் பின் அத்ஹம், தன்னுடைய தட்டுத் தடு மாறிய தமிழில் அமைதியாகப் பேசலுற்றார்:-

''மாட்சிமைத் தங்கிய மன்னர்பிரான் அவர்கள் என்னை மேலும் பேச அனுமதி அளித்துள்ளதற்கு ஆயிரம்

PDF ISLAM

நன்றிகளை என் சார்பாகவும், என் குழுவினர் சார்பாகவும் சமர்ப்பித்துக்கொள்கிறேன். இந்த பூமிக்கு முற்றிலும் அப்பாற்பட்டவர்களாகிய எங்களைப் பற்றியும், எங்கள் மத நம்பிக்கையைப் பற்றியும், அரசர் பற்றியும், ஆட்சி முறையைப்பற்றியும், பெருமைக் குரிய மன்னர் பிரான் அவர்களும் கண்ணியம் வாய்ந்த ராஜகுரு அவர்களும், அமைச்சர்களான அறி வார்ந்த பெருமக்களும், அவையோரான அறிவிற் சிறந்த நீங்களும் சரியான உண்மைகளைத் தெரிந்துக்கொள்ள செய் வதை எங்கள் கடமை என உணர்கிறோம்.

''கண்ணியம் வாய்ந்த ராஜகுருநாதர் அவர்கள், எங் களுடைய முன்னோர்கள் பல நூறு ஆண்டுகளுக்கு முன் னர் இந்த பூமிக்கு அடிக்கடி வந்து போனதாக ஓலைச் சுவடி களில் குறிப்புகள் இருப்பதாக அறிவித்துள்ளதற்கு மிகவும் மகிழ்ச்சியும் நன்றியும் சமர்ப்பித்துக்கொள்கிறோம். இடை யில் நீண்டகாலம் வரவில்லை என்பதும், முதலாம் சேரமான் பெருமாள் மன்னர் பிரான் காலத்தில் ஒருமுறை வந்ததாக வும், அப்போது அவர்களின் நடத்தை சரியில்லை என்பதை அறிந்த அந்த மகா மன்னர் அவர்களைக் கடலோர சத்திரத் திலேயே தங்க வைத்துத் திருப்பி அனுப்பிவிட்ட உண்மை யையும் குருநாதர் அவர்கள் வாயிலாக அறிந்துகொள்ளும் பாக்கியம் பெற்றோம். அதன் பிறகு இரண்டாவது சேர மான் பெருமாள் காலத்தில் ஒரு கப்பலில் வந்ததாகக் குறிப்பிட்டார்களே? அந்தக் கப்பலில் வந்த அடிமைகளில் இந்த எளியவனும் ஒருவன் என்பதை மிகவும் தாழ்மை யுடன் தங்கள் சமூகத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்!

''இப்போது எங்களுடன் வந்த மாலுமிகளெல்லாம் ''கரை இறங்கக்கூடாது'' என்று ஆணையிடப்பட்டு, அவர் கள் கப்பலிலேயே இருந்துகொண்டிருப்பதுபோல, அன்றும் இதே போன்று ஆணையிடப்பட்டு, அவர்கள் அனைவரும் கடலிலேதான்இருந்தார்கள். ஆனால் அன்று இளைஞராக வும், சுறுசுறுப்பு மிக்கவனாகவும் இருந்த இந்த அடிமையும்,

PDF ISLAM

என்னுடன் மேலும் மூன்று அடிமைகளும் மட்டும், எங்கள் எஜமானர்களுக்குப் பாதுகாப்புக்காகவும் அவர்கள் வாங்கும் சாமான்களைத் தூக்கிச் சென்று கப்பலில் சேர்க்கப்படுவதற்காகவும், பூமியில் நடமாட அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இந்த சமயத்தில் மன்னர் சேரமான் பெருமாள், ராஜகுரு ராமநம்பிக்கு ஏதோ சைக்கினைச் செய்ய, அவர் எழுந்து மன்னரின் வாய்க்கு சமீபத்தில் தன் காதுகளை வைத்துக் கொண்டு கேட்க, மன்னர் ஏதோ மெதுவாகச் சொல்ல ராஜகுரு கம்பீரமாக நிமிர்ந்து, ''ஓய்! கறுப்பரே! நீர் உமது பேச்சில் ''அடிமை அடிமை'' என்று சொல்கிறீரே! அதன் பொருள் என்ன?'' என்று கேட்டார்.

முஸ்லிம் பின் அத்ஹம், முகத்தில் இலேசான சிரிப்பைத் தவழவிட்டவாறு, ''அப்போது எங்கள் நாட்டில் கறுப்பு நிறத்தவராகிய நாங்கள் மனித உருவத்தில் உள்ள மிருகங்கள் என்று பொருள்! எங்களை விலை கொடுத்து வாங்கிக்கொள்ளும் எங்கள் எஜமானர்கள் ஏவுகின்ற அனைத்துக் காரியங்களையும் நாங்கள் செய்துகொண்டே இருக்கக்கூடியவர்கள்! இடுப்பில் ஒரு துண்டைத் தவிர வேறு எந்த ஆடையும் நாங்கள் அணிந்துக் கொள்ள முடியாது. தப்பித் தவறி ஒரு குற்றமும் செய்துவிடக்கூடாது. அப்படிச் செய்தால் சவுக்கினால் அடித்தும் சித்திரவதைச் செய்தும் எங்களைத் தண்டிப்பார்கள். சில சமயங்களில் வேதனைப் பொறுக்காமல் எங்களில் பலர் செத்தும் விடுவார்கள். எங்களில் திடகாத்திரமானவர்களுக்கு நல்ல விலையும் கிடைக்கும்! அடிக்கடி எங்களை விற்பனையும் செய்துக் கொள்வார்கள். நாங்கள் யாரிடமும் பேசவும் கூடாது! சத்தமிட்டு அழவும் கூடாது! அத்தகைய எங்களுக்கு ''அப்து''என்றுபெயர்.எங்களைப் பொதுவாக ''ஹபஷிகள்'' என்று சொல்வார்கள்'' என்று கூறி நிறுத்தினார்.

PDF ISLAM

''உங்கள் கதை வேடிக்கையாக இருக்கிறது! தொடர்ந்து சொல்லும்! நீர் மட்டும் எப்படி சில காலம் இங்கு தங்கினீர்? மன்னர் பிரானுக்கு உம்முடைய கதை நல்ல பொழுதுபோக்காக இருக்கிறது!'' என்று ஒருவித ஏளனச் சிரிப்புடன் கூறினார் ராஜகுரு ராம நம்பியார்.

''அப்போது அரசு உத்திரவெல்லாம் எனக்குத் தெரியாது! எங்கள் எஜமானர்கள் தாங்கள் கொண்டுவந்த முத்துக்கள், பவளங்கள், வைர, வைடூரியங்கள், தங்க மொஹராக்கள், வாள்கள், கத்திகள். பேரீத்தம் பழங்கள், ஜைத்தூன் எண்ணெ, பாதம் பருப்புகள். பிஸ்தா பழங்கள், முதலானவற்றை இங்கு கொடுத்துவிட்டு, அவற்றுக்குப் பதிலாக, மிளகு. ஏலக்காய். கிராம்பு. பூண்டு, வெங்காயம், பலாப் பழம், மரவள்ளிக் கிழங்கு, தேன். யானைத் தந்தம், தேயிலை, காப்பிக்கொட்டை முதலான பொருள்களைப் பண்டமாற்றுகள் செய்தார்கள். அரசைச் சேர்ந்தவர்களும் விலையுயர்ந்த பொருட்களை வாங்கினார்கள்! சாதாரண மக்கள் மற்ற பொருட்களை வாங்கவும், மாற்றுப் பண்டங்கள் கொடுக்கவும் செய்தார்கள். மாட்சிமை தங்கிய அன்றைய மன்னர் பிரான் அவர்கள் எங்கள் எஜமானர்கள் சுதந்திரமாக வியாபாரம் செய்ய அனுமதித்தார்கள் என்றே எனக்கு ஞாபகமிருக்கிறது...'' என்றார்.

''நீங்கள் ஒழுங்கீனமாக நடந்துகொண்டதால், உங்களில் சில பேர்களைப் பிடித்து வைத்துக்கொண்டு, உங்கள் கப்பல் திருப்பி அனுப்பப்பட்டது உமக்கு ஞாபகமில்லையா?'' என்று ராஜகுரு குறுக்கிட்டு ஒரு கேள்வி கேட்டார்,

''குருமகான் அவர்கள் என்னை மன்னிக்கவேண்டும்! அடிமையாகிய நாங்களோ அல்லது எங்கள் எஜமானர்களோ எந்தவிதமான ஒழுங்கீனமும் செய்யவில்லை என்பதை நான் உறுதியாகக் கூறமுடியும்! மேலும் எங்களை

PDF ISLAM

யாரும் பிடித்துவைக்கவும் இல்லே. மன்னர்பிரான் அவர்கள் குதிரைகள் வேண்டும் என்று கேட்டதால் அவர்கள் போய்த் திரும்பும்வரை எங்கள் எஜமானர்களில் ஒருவரும் அடிமைகளில் நானும் மற்றொருவரும், இங்கு தங்கிக் கொள்ள அனுமதியளிக்கப்பட்டது. அதன்படி நாங்கள் தங்கியிருந்தோம்! அதன் காரணமாக சுமார் நான்கு மாத காலம், இந்த அழகான பூமியில் வாழ்வதற்கும், மக்களோடு பழகுவதற்கும்- இந் நாட்டு மொழியை விளங் கிக்கொள்ளவும், பேசவும், பாக்கியம் பெற்றோம்! எங்கள் குதிரைகளுடன் திரும்பி வந்து வியாபாரத்தை முடித்த வுடன் திரும்பி விட்டோம். சேரமான் மன்னர் பிரான் ஆட்சியில் எங்களுக்கு ஒரு சிரமமும் அளிக்கப்படவில்லே!'' என்றார் முஸ்லிம் பின் அத்ஹம்.

''அப்படியானால், உங்கள் நாட்டில் முகம்மத் என்பவர் உள் நாட்டுப்போர் நடத்தினார் என்பதும், கீழ் ஜாதி மிலேச்சர்களின் படையைத் திரட்டிக்கொண்டு, ''குறைஷ்'' என்ற தெய்வீக நம்பிக்கையுடைய ஆலயங்களின் பாது காவலர்களைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றினர் என் பதும் நடக்கவில்லே என்கிறீரா?'' என்று ராஜகுரு கடு கடுத்த முகத்தோடு கேட்டார்.

முஸ்லிம் பின் அத்ஹம் தனது முகத்தில் சிறிதும் மாற்றமின்றி, புன் சிரிப்புத் தவழ்ந்த முகபாவத்துடன், ''மகாகனம் பொருந்திய ராஜகுரு மகான் அவர்களின் கருத் துக்கு மாறாக நான் பேசுவதற்கு அன்புகூர்ந்து மன்னித்துக் கொள்ளவேண்டுகிறேன், எங்களுடைய நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலேஹிவஸல்லம் அவர்கள் பற்றித் தவறா னத் தகவல்களே மகா பிரபு அவர்களுக்கு யாரோ சொல்லியிருக்கிறார்கள் என்று தெரிகிறது. முதலாவதாக, இந்த அழகான நாட்டில் அமைந்துள்ளதுபோல, எங்கள் பூமியில் மன்னர்களோ அவர்களின் பாரம்பர்யங்களோ, ஆட்சி அமைப்புகளோ, படை பட்டாளங்களோ, கோட்

PDF ISLAM

டைக் கொத்தளங்களோ எதுவும் இல்லே மன்னர்கள் அல் லது ஆட்சித் தலைவர்கள் என்று இருந்தாலல்லவா, அதிகா ரத்தைக் கைப்பற்ற யாராவது முயற்சித்திருக்கவேண்டும்? அப்படியாரும் இருக்கவில்லே'' என்று கூறியபோது, ராஜ குரு குறுக்கிட்டு நீர் சொல்வது வேடிக்கையாக இருக்கி றதே! அவ்விதம் ஒரு நாடு எப்படியிருக்க முடியும்?'' என்று கேலியாகக் கேட்டார்.

''குரு மகான் அவர்கள் மன்னிக்க வேண்டும்! நாங்கள் ஒரு பரந்த பூமியில் வசித்தாலும், ''அரபி'' என்ற ஒரே மொழியை அனைவரும் பேசிவந்தாலும், எங்களில் பொதுவாக இரண்டு பிரிவினர்தான் வாழ்ந்து வந்தோம். ஒன்று ''அரபிகள்'' மற்றவர்கள் ''அஜமிகள்'' என்று குறிப்பிடுவார்கள், அரபிகள் என்ருல் பேசும் அதிகாரம் உடையவர்கள் என்றும், அஜமிகள் என்ருல் பேச அதிகார மில்லாதவர்கள் அதாவது ''அப்துகள்'' என்போர் (அடிமைகள்)என்றும்பிரிவினராவார்கள். இவர்கள் ஆப்ரிக்க நாடுகளிலிருந்தும், காடுகளிலிருந்தும் பிடித்து வரப்பட்ட அடிமைகளாக விற்பனை செய்யப்பட்டு இவர்களை விலேக்கு வாங்கிய எஜமானர்களான அரபிகள் ஆணையிடுவதை அப் படியே கேட்டு நடக்க கூடியவர்கள். யார் ஒருவர் எத் தனே அடிமைகளேயும் ஒட்டகங்களேயும் வைத்துள்ளாரோ அவரே அந்தந்தப் பகுதிகளில் வாழும் அரபிகள் கூட்டத் தின் செல்வந்தவராவார்கள். எனினும் ஏழைகளாகவுள்ள அரபிகள் அவரின் வியாபாரத்தோடு ஒத்துழைப்பார்கள். அதற்கு கூலி வாங்குவதோ அங்கு வழக்கமில்லே. அவரவர் களின் ஒத்துழைப்புக்குத் தக்கவாறு, சிறிதாகவோ பெரி தாகவோ பங்கு கொடுத்துவிடுவார்கள். அதன் பிறகு அவர் கள் விருப்பப்பட்டால்தான் அந்தச் செல்வந்தருக்கு ஒத் துழைப்பார்கள். இல்லாவிட்டால், வேறு நபர்களுடன் சேர்ந்துக்கொள்வார்கள். யாருக்கும் நிரந்தர வேலேக் காரர்களாக இருக்கமாட்டார்கள், ஒவ்வொரு அரபுக் குடும்

PDF ISLAM

பழும் சுதந்திரமானதே ! கூலியோ, பங்கோ எதுவும் இல்லாமல் உழைக்கக்கூடியவர்கள் அடிமை வர்க்கத்தவரே! மற்றவர்களிடம் விற்கப்படாதவரை முதலில் விலைக்கு வாங்கிய எஜமானரைவிட்டு அவர்கள் எந்த காரணத்தாலும் விலக முடியாது...'' என்று முஸ்லிம் பின் அத்ஹம் சொல்லிக் கொண்டிருக்கும்போது, ராஜகுரு குறுக்கிட்டு, அந்தக் கதையெல்லாம் இங்கு எதற்கு? நான் கேட்ட முகம் மதைப் பற்றிச் சொல்லும் !'' என்று கட்டளையிட்டார்.

''குருமகான் அவர்களின் அனுமதியை மீறி நான் எதையும் சொல்லமாட்டேன். அவர்கள் ''அரசர் இல்லாமல் ஒரு நாடு எப்படி இருக்க முடியும்?'' என்று கேட்டதினால் தான் நான் இதைக் கூறினேன். அன்பு கூர்ந்து மன்னிக்க வேண்டுகிறேன்'' என்று அவர் குனிந்து மரியாதைச் செய்து விட்டு, மேலும் தொடர்ந்தார்:-

''முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை நேரில் பார்க்கும் பாக்கியம் இன்னும் எங்களுக்கு கிடைக்கவில்லை அவர்கள் உள்நாடாகிய மதீனா நகரில் இப்போது இருந்துகொண்டிருக்கிறார்கள். கடலோரப்பட்டணமாகிய எங்கள் ஊருக்குக் கிழக்கே இருநூறு காதங்களுக்கு அப்பால் அந்த நகர் இருக்கிறது. அவர்களுடன் நெருங்கிப் பழகும் மதீனாவாசிகள் சிலருடன் எங்களுக்கு வியாபாரத் தொடர்பு இருக்கிறது. அவர்கள் பட்டினத்துக்கு வந்து எடுத்துக்கூறிய உண்மைகளை நாங்கள் அறிந்துள்ள வகையில் முஹம்மத் அவர்கள் நம்மை போன்ற சாதாரண மனிதர்களில் ஒருவரல்ல. அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார்கள். அல்லாஹ்வின் கட்டளையை உலகுக்கு எடுத்துக் கூறுபவராவார்கள்...'' என்று சொல்லிக்கொண்டு வரும்போது, ராமநம்பியார் திடீரென சப்தம் போட்டுச் சிரிக்க ஆரம்பித்தார். அவர் சிரிப்பதைக் கண்ட வேறு சிலரும் சிரித்தார்கள்.

அந்தச் சிரிப்பைத் தொடர்ந்து, ''நல்ல வேடிக்கைப் பேச்சுப் பேசுகிறீர்கள் ! முகம்மதைப் பற்றி நான் கேட்டதற்கு, இப்போது ''அல்லாஹ்'' என்ற ஆசாமியைப் பற்றித் திடீர் எனச் சொல்லுகிறீர் ! அந்த அல்லாஹ் என்பவர்தான் உங்கள் நாட்டின் பெரியஅரசர் என்றும், அவருடைய தூண்டுதலின்படிதான் முகம்மத் உள் நாட்டுக் கலவரங்களை நடத்துகிறார் என்றும் இப்போது சுற்றி வளைத்துக் கொண்டு ஒப்புக்கொள்கிறீர் ! முதலில் எங்கள் நாட்டில் பெரிய அரசரே இல்லை என்றும் சொன்னீர் ! நீர் ஒரு பொய்க்காரர் ! ஏமாற்றுக்காரர் ! நீரும் உம் சகாக்களும் முகம்மதுடைய ஒற்றர்கள் ! எங்கள் மாட்சிமை தங்கிய மன்னர் பிரானுக்கு எதிராக சதி செய்ய அனுப்பப்பட்டிருக்கிறீர்கள் !'' என்று ஆக்ரோஷத்துடன் இரைந்தார்.

ராஜகுருவின் பேச்சைக் கேட்ட மக்களில் சிலரும் அதற்கு ஆதரவளிக்கும் விதத்தில் அவையில் கூச்சல் போட்டார்கள்.

இந்த சூழ்நிலை மாற்றத்தைக் கண்ட முஸ்லிம் பின் அத்ஹம் திடுக்கிட்டார். மன்னர் சேரமான் பெருமான் அவர்கள் அமைதியோடு ராஜகுருவை நோக்கி ஏதோ சைக்கினை செய்வதற்குள். அவர் சேனாதிபதியை நோக்கி, ''இவர்களைக் கைது செய்யுங்கள் !'' காரக் கிரகத்தில் அடையுங்கள் !'' என்று உத்திரவிடவே, சேனாதிபதி தலைமையில் படையினர் சிலர் பாய்ந்து வந்து அவர்களை சுற்றி வளைத்துக்கொண்டனர். அவை முழுவதும் ஒருவித குழப்பமும் பரபரப்பும் ஏற்பட்டது. ஒரு சில ''மன்னர் பெருமான் வாழ்க !'' என்ற கோஷத்தையும் எழுப்பினர்.

முஸ்லிம் பின் அத்ஹம் ஒன்றுமே புரியாத நிலையில் திடுக்கிட்டதைப் போலவே அவருடன் வந்த மற்ற நான்கு சகாக்களும், தங்களைச் சுற்றி ஆயுதங்களுடன் காவலர்

PDF ISLAM

கள் சூழ்ந்துகொண்டதைக் கண்டு, என்ன விபரீதம் விளைந்துவிட்டதோ என பிரமித்து, அச்சத்துடன் எழுந்து நின்றனர். அவர்களுக்குத் தமிழ் தெரியாததால், தங்களுடைய சகா முஸ்லிம் பின் அத்ஹம் ஏதோ தவறுதலாகப் பேசிவிட்டார் என்று நினைத்தனர். அவர்கள் வியப்புடன் அவரையும், காவலர்களையும் நோக்கினர். மக்களுடைய கொந்தளிப்பையும் கண்டு, அவர்கள் உள்ளத்தில், அச்சம் ஏற்பட்டுள்ளதை முகங்கள் பிரதிபலித்துக் காட்டின.

ராஜ குருவின் இந்த திடீர் பேச்சையும், கைது உத்திரவையும். அங்கு ஏற்பட்ட புதிய சூழ்நிலையையும் கண்ட மன்னர் சேரமான் பெருமாள் திடீரென எழுந்து நின்றார். மன்னர் எழுந்து நின்றால் சபையோர் அனைவரும் எழுந்து நிற்பது மரபாதலால், அவையிலிருந்த அனைவருமே எழுந்து விட்டனர், இதனால் சில விநாடிகளில் கூச்சல் அனைத்தும் அடங்கிவிட்டது. அனைவரும் மன்னரை நோக்கி நின்றனர்.

மன்னர் சேரமான் பெருமாள் தம்முடைய வழக்கத்துக்கு மாறாக, நின்ற நிலையிலேயே, தம் கைகளை அசைத்துக் காட்டி அனைவரையும் அமைதியாக இருக்கச் சைகை செய்து, ''என் அன்பான மக்களே ! நான் பிறந்த நாளையும். உங்கள் சேவகனாக அரசப் பொறுப்பேற்ற நாளையும் ஒன்றாக இணைத்து. இன்றைய தினத்தை மகிழ்ச்சிப் பொருந்திய நாளாகக் கொண்டாட நீங்களே முடிவு செய்தீர்கள் ! அதன்படி நடந்துவந்த நிகழ்ச்சியில் ஒரு புதிய திருப்பம் ஏற்படக்கூடிய வகையில், இப்போது எதிர்பாராத விதமாக துரதிருஷ்டமான நிலை ஏற்பட்டுள்ளது. இது இன்றைக்குத் தேவையற்றது. நமது விருந்தினர்களாக வந்துள்ள அரபு நாட்டைச் சேர்ந்தவர்களை ஒற்றர்களாக இருக்கக் கூடுமென மகா சிறப்புக்குரிய நமது ராஜ குருநாதர் அவர்கள் சந்தேகித்துள்ளதன் பேரில், நாம் விசாரணைச் செய்ய கடமைப்பட்டுள்ளோம், ஆனால் இந்த மகிழ்ச்சியான

PDF ISLAM

நாளில் எந்தவிதமான மாற்றுணர்வுகளுக்கும் நாம் ஆளாகத் தேவையில்லை. இவர்களை நமது அவையில் கண்ணியம் குறைவாக இன்று நடத்த வேண்டிய அவசியமில்லை. அவர்கள் உண்மையில் நல்லெண்ணத்தோடு வியாபாரத்துக்காக வந்தவர்களாயினும் சரி அல்லது மகாராஜ்குருநாதர் அவர்கள் சந்தேகப்பட்டபடி ஒற்றர்களாக வந்தவர்களாயினும் சரி, நமது அனுமதியின்றி நமது நாட்டைவிட்டுத் தப்பமுடியாது. அவர்களுக்கு இந் நாடே ஒரு சிறை போன்றதுதான்! ஆதலால், இன்றைய நிகழ்ச்சியின் மற்ற காரியங்கள் தொடர்ந்து நடக்கட்டும்! அவர்களும் விருந்தினர்களாகவே இருந்து பார்க்கட்டும்!'' என்று கூறி, மன்னர் தனது ஆசனத்தில் அமர்ந்தார்.

மன்னர் சேரமான் பெருமானின் இந்த அமைதியான பேச்சைக் கேட்ட மாத்திரத்திலேயே மக்கள் பூரண திருப்தியடைந்தவர்களாக அவரவர் ஆசனத்தில் அமர்ந்தனர். முஸ்லிம் பின் அத்ஹமும் மன்னருக்குக் குனிந்து நன்றி செலுத்திவிட்டுத் தனது ஆசனத்தில் போய் அமர்ந்திருந்தார். அரபு வர்த்தகர்களைச் சுற்றி நின்ற காவலர்களும், மன்னருக்கு மரியாதைச் செய்துவிட்டு, தங்கள் இடங்களுக்குத் திரும்பினர்.

அவையில் மீண்டும் மகிழ்ச்சிச் சூழ்நிலை திரும்பியது. ஆனால் ராஜகுரு ராமநம்பி முகத்தில் மட்டும் எள்ளும் கொள்ளும் வெடித்ததுபோல சூடு பரந்துகொண்டிருந்தது.

அரசவை அரங்கில் கலைஞர்கள் பலர் அடுத்தடுத்துத் தோன்றி தங்கள் கலைத்திறன்களை வெளிப்படுத்திக் காட்டிப் பரிசுகளைப் பெற்றுச் செல்லத் தொடங்கினர்.

நிகழ்ச்சிகள் முடியுந்தருவாயில் மன்னர் அமைச்சர் மார்த்தாண்ட பூபதியை அழைத்து, ''அரபு விருந்தினர்களை அரசாங்க விருந்தினர் மாளிகையிலேயே தங்க

PDF ISLAM

வைத்து. அவர்களுக்குத் தேவையான சகல வசதிகளையும் செய்து கொடுங்கள்! அவர்கள் உயிருக்கோ உடைமை களுக்கோ எந்தவிதமான ஆபத்தும் நேர்ந்துவிடாமலிருக்கப் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யுங்கள். நாளை நான் அவர்களைச் சந்திக்கும்வரையில் அரசு பொறுப்பிலுள் ளவர்கள் வேறு யாரும் அவர்களைச் சந்தித்துப் பேச அனு மதியளிக்காதீர்கள்!'' என்று கூறிவிட்டு, ''இவைகள் எல்லாவற்றையும்விட அவர்களுடைய கண்ணியமும் மரியா தையும் பாதுகாக்கப்படவேண்டியது மிகவும் முக்கியம்'' என்று கூறிமுடித்தார்.

அரசர் தன்னுடைய உத்திரவுகள் அனைத்தும் ராஜகுரு ராம நம்பியாரின் காதுகளில் தெளிவாகக் கேட்கும்படி உரத்த குரலிலேயே கூறினார்,

அரண்மனை விழா நிகழ்ச்சிகளெல்லாம் முடியும்போது அநேகமாக இருட்டிவிட்டது. மன்னர் சேரமான் பெருமான் அரச மரியாதையுடன் மக்களிடம் விடைபெற்ற காட்சி மிகவும் உருக்கமாக இருந்தது. ''எங்கள் உயிரான மன்னர் வாழ்க!'' என்று கோஷங்களை மக்கள் எழுப்பி, அரண் மனையையே கிடுகிடுக்கச் செய்தனர், இந்த மாதிரியான சில நிகழ்ச்சிகளில், மக்கள் கோஷங்களிடும்போது, மன்ன ரோடு சேர்த்து ''ராஜகுரு மகான் வாழ்க!'' என்றும் தான் கோஷிப்பது வழக்கம் இம்முறை அப்படி யொருவர் இருந்ததை மறந்துவிட்ட மக்கள் போல மக்கள் நடந்து கொண்டது ஆச்சரியமாக இருந்தது.

மன்னர் அந்தப்புர பகுதிக்குள் சென்றவுடன், மக்க ளெல்லாம் எழுந்து கலைந்து செல்ல ஆரம்பித்தனர். சிலர் ராஜகுருவை நோக்கிக் கும்பிட்டு விட்டுச் சென்றனர். ஏதோ அதிர்ச்சியால் தாக்கப்பட்டவரைப்போல ராஜகுரு ராமநம்பி சிறிது நேரம் தனது ஆசனத்திலேயே அமர்ந்தி ருந்தார். பொதுவாக அரசர் சார்பாகக் கட்டளைகள்

PDF ISLAM

இடுவதும், பேசுவதும் அவராகவே இருந்து வந்தார். இந்த முறை மன்னர் மக்களிடையே நேரடியாகப் பேசி தனது ஆணைகளையும் பிறப்பித்தது அவருக்கும் பெரிய அதிர்ச்சியாக இருந்திருக்கலாம் என்று தோன்றிற்று மேலும், விருந்தினர்களை நாளை நான் சந்திக்கும் வரையில் அரசு பொறுப்பிலுள்ளவர்கள் வேறு யாரும் சந்தித்துப் பேச அனுமதியளிக்காதீர்கள்'' என்று மார்த்தாண்ட பூபதியிடம் நேரடியாகக் கூறியது அவருக்கு மேலும் வியப்பை அளித்திருக்கலாம் எனத் தெரிந்தது.

ஏனெனில், ராஜகுருவுக்கு அடுத்த ஸ்தானத்தில் உள்ள மூத்த அமைச்சர் சேது பத்திர வர்மா ஆவார். நிர்வாக காரியங்கள் அனைத்தையும் அவரே பார்க்கக் கூடியவர் மன்னர் ராஜ குருவைத் தவிர்த்து வேறு யாரிடமும் அரசியல் பிரச்னைகளில் எதைத் தெரிவிக்க விரும்பினாலும் சேது பத்திரர் மூலமாகவே தான் சொல்லுவார். மார்த்தாண்ட பூபதி படைக் கலன்களைப் பரிபாலிக்கும் அமைச்சராவார். பொதுவாக அவரிடம் மன்னர் தன் ஆணைகளைப் பிறப்பிக்கும் பழக்கமில்லை. இம்முறை முற்றிலும் நேர்மாறாகக் காரியங்கள் நடந்துள்ளது ராஜகுருவை மிகவும் வேதனைக்கும் ஆளாக்கி இருக்கலாம் என்று தெரிந்தது.

மன்னருடைய ஆணைப்படி மார்த்தாண்ட பூபதியே முன்னின்று தக்க பாதுகாப்போடு அராபிய விருந்திலர்களை விருந்தினர் மாளிகைக்கு அழைத்துச் சென்றூர் அவரும்கூட வழக்கம்போல ராஜகுருவின் ஆசீர்வாதத்தைக் கூடப் பெறவில்லை. எல்லோரும் தங்கள் ஆசனங்களைவிட்டு எழுந்து சென்றுவிட்டபோதும், அந்த மாபெரும் மாளிகையில் ராஜ குரு மட்டும் சிறிது நேரம் தனது ஆசனத்திலேயே அமர்ந்திருந்து ஏதோ யோசித்துக்கொண்டிருந்தார்.

PDF ISLAM

ஆழ்ந்த சிந்தனையிலிருந்து அவரை விடுவிப்பது போல, ''குரு மகான் அவர்களே ! எல்லோரும் போய்விட்டார்கள் !'' என்ற மென்மையான குரல் அவர் காதில் விழவே சிறிது திடுக்கிட்டவராகத் தலையைத் திருப்பிப் பார்த்தார், அவர் பின்புறம் மூத்த அமைச்சர் சேதுபத்திர வர்மா நின்று கொண்டிருப்பதை கண்டவுடன், ராஜகுரு தன்னை சமாளித்துக்கொண்டு முகபாவத்தையும் மாற்றிக் கொண்டவராய், 'ஓ ! சேதுபத்திரரா?... இன்றைய விழா மிகவும் அபூர்வம் நிகழ்ச்சிகள் என்னை மெய்மறக்கச் செய்துவிட்டது ! அப்படியே உட்கார்ந்துவிட்டேன் ! நமது மன்னர் மகா பாக்கிய சாலி ! திறமைசாலியும் கூட !'' என்று கூறிக்கொண்டே எழுந்து நடக்கத் தொடங்கினார்.

ராஜகுருவின் பேச்சுக்கு சேதுபத்திரர் எந்த பதிலும் சொல்லவில்லை. மதிநுட்பமும் அனுபவசாலியுமான அவரால் ராஜகுருவின் வார்த்தைகள் மன மகிழ்வோடு சொல்லப்பட்டவை அல்ல என்பதையும், இரண்டு அர்த்தங்களோடு கூறப்பட்டவை என்பதையும் புரிந்துகொள்ள முடியாமல் போகமுடியவில்லை. ஆதலால் அவர் மவுனமாகவே பின் தொடர்ந்தார், சிறிது தூரத்தில் ராஜகுருவின் மெய்க் காவலர்கள் இருவரும் பின் தொடர்ந்து வந்துகொண்டிருந்தார்கள்.

ராஜகுருவின் ஆஸ்ரமம் கோட்டையின் கடைசி பகுதியில், ஒரு கோயிலோடு அமைந்திருந்தது. அவர் தனித்து வாழ அனைத்து வசதிகளோடு கூடிய அறைகளும், பூஜை புனஸ்காரங்களுக்குரிய இடங்களும் தனித்திருந்தன. அரண்மனைப் பகுதிக்கு வராமலேயே, நேரடியாக மக்கள் வந்து ராஜகுருவை தரிசித்துச் செல்ல தனி வழிகளும் இருந்தன. அரண்மனையின் அச்சாணி மண்டபத்திலிருந்து செல்லவதானால், அரண்மனையைத் தாண்டி நீண்ட மணல் வெளிப்பகுதியைக் கடந்துதான் அங்கு செல்லவேண்டும். அது மிகச்

PDF ISLAM

சிறிது தூரமாகவே இருந்தாலும், ராஜகுருநாதர் அரண்மனைக்கு வரும்போதும், திரும்பும்போதும் இருவர் சுமக்கும் பல்லாக்கில்தான் வந்துபோவார். ஆண்டில் ஒன்றிரண்டு முறை சில விழாக்களை யொட்டி ராஜகுருவின் பட்டணப் பிரவேசங்கள் நடைபெறும் அப்போதெல்லாம் நான்கு பேர் சுமக்கும் பெரிய பல்லக்கில்தான் செல்வார்,

அத்தகைய சிறப்புக்குரிய ராஜ குருநாதர் அரண்மனைக் கட்டிடத்தை கடந்து பல்லாக்கு இருக்கும் இடத்தை அடைந்தவுடன் சிறிது நின்று, ,'என்ன ! சேதுபத்திரரே! என் பேச்சு எதற்கும் பதில் சொல்லவில்லையே?'' என்று கேட்டார்.

மூத்த அமைச்சரான சேதுபத்திர வர்மா மிகவும் எச்சரிக்கையுடன், ''மகிமை பொருந்திய ராஜகுரு நாதர் அவர்கள் உண்மையையே சொல்கிறீர்கள் ! நானும் தங்களுடன் மகிழ்ச்சியடைகிறேன்'' என்றார்.

ராஜகுருநாதர் சேதுபத்திரரை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, முகத்தில் ஒரு போலியான புன்சிரிப்பை வெளிப்படுத்தியவாறு, ''உம்மிடம் நான் தனியாகக் கொஞ்சம் பேச வேண்டும் ! ஆதலால் நாளை இரவு இருட்டிய சிறிது நேரத்துக்குப் பிறகு நீர் இங்கு வந்தால் நான் பூஜைகளை முடித்துக்கொண்டு தயாராக இருப்பேன் !'' என்றார்.

ராஜகுரு மகானின் ஆணையை நான் எப்போதும் மீறியதில்லை'' என்று அடக்கமாக பதில் கூறிய சேதுபத்திரர், அவர் பல்லக்கில் ஏறிச் சென்று மறையும் கடைசி தூரம் வரை அதைப் பார்த்துக்கொண்டிருந்தார், அவருடைய சிந்தனையில் ஏதேதோ எண்ணங்கள் சுழன்றுகொண்டிருந்தன.

அரசினர் விருந்தினர் மாளிகை என்பது, கோட்டைக்குள்ளேயே ஒரு அழகிய கட்டிடம். அது அரண்மனைக்குக்

PDF ISLAM

நேர் பின்புறத்தில் கோட்டை சுவரை ஒட்டினாற்போல மரங்கள் நிரம்பிய அழகிய தோட்டத்தின் மத்தியில், நீர்த் தேக்கங்களோடு இயற்கை சூழ்நிலையில் அமைந்திருந்தது. அங்கு மிகவும் அரிதான விருந்தினர்கள் மாத்திரமே தங்க அனுமதிப்பர். அதற்குத்தனி அறைகள் இருந்தன. மற்ற காலங்களில் அது அபூர்வ கலைப் பொருள் கண் காட்சிக் கூடமாகப் பயன் படுத்தப்பட்டு வந்தது. அங்கு சேரமான் வம்சத்து மன்னர்களின் சத்திரங்களும். அவர்கள் உபயோகித்த மதிப்பு மிக்க பொருட்களும், அவர்கள் ஆட்சிக் காலத்தில் பரிசாகக் கிடைத்த அயல்நாட்டின் அரிதான சாமான்களும், அவை ஒவ்வொன்றையும் பற்றிய குறிப்புகளும், பழைய வரலாற்று ஏட்டுச்சுவடிகளும் அழகுபட வைக்கப் பட்டிருந்தன, அந்த மாளிகைக்கு நிரந்தர காவலாளிகளும் நியமிக்கப்பட்டிருந்தனர்,

மன்னர் ஆணைப்படி அரபு நாட்டு விருந்தினரை தாமே நேரில் அழைத்துச் சென்ற படை அமைச்சர் திரு. மார்த்தாண்ட பூபதி, விருந்தினர் தங்கக் கூடிய அறைகளையும், வசதிகளையும் காட்டி விட்டு, ''உங்கள் சவுகரியத்துக்கு நான் மேற்கொண்டும், பணியாட்களையும் பணிப்பெண்களையும் அனுப்பி வைக்கிறேன். அவர்கள் உங்களுக்குத் தேவையான சமையல், துணி துவைத்தல் முதலான சகல வேலைகளையும் செய்வார்கள்'' என்று பண்போடு கூறினார்.

அவர் கூறியதன் பொருளை மற்ற அரபிகள் முஸ்லிம் பின் அத்ஹமிடம் கேட்டனர். அதன் பின் அவர்களிடையே அரபி மொழியில் ஏதோ பேசிக் கொண்டனர். இறுதியாக, முஸ்லிம் பின் அத்ஹம் சேது பத்திரரை நோக்கி, மேன்மைக்குரிய தங்கள் அரசருடையவும், மரியாதைக்குரிய தங்களுடையவும் அன்புக்கு மிகவும் நன்றி செலுத்துகிறோம். எங்களுக்குத் தனியாக எந்த ஆண்-பெண் சிப்பந்திகளும் தேவைப்படவில்லை. எங்கள் கப்பலில்

உள்ள தொழிலாளர்கள் நிலை என்ன என்பது தெரிய வில்லை. அது தெரிந்தால்...''என்று சொல்லி முடிப்பதற் குள், அவர்கள் கப்பலை விட்டு இறங்க அனுமதிக்கப் பட்டு, கடலோரத்திலுள்ள பயணிகளின் சத்திரத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்குத் தேவையான சகல உணவுப் பொருட்களும் வழங்கப்பட்டுள்ளன. அவர் களின் பாதுகாப்புக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது'' என்று கூறினர்.

''நன்றி! நன்றி! மன்னர் பெருமானின் தாராளமே தாராளம்! அவர்களில் சமையற்காரர்களில் இருவரையும் சிப்பந்திகளில் இருவரையும் எங்களுடன் இருக்க, மேன் மைக்குரிய தாங்கள் அனுமதித்தால், எங்களுக்குப் பெரிய உதவியாக இருக்கும்'' என்றுர் அத்ஹம்.

மார்த்தாண்டபூபதி, சிறிது யோசித்து விட்டு ''மூத்த அமைச்சர் சேதுபத்திரர் அவர்களின் அனுமதியைப்பெற் றுத்தான் நான் அதைச் செய்ய வேண்டும்! மன்னர்பிரான் எனக்கு ஆணையிட்டது, உங்கள் ஐவருக்கு மட்டும் இங்கு தங்க ஏற்பாடு செய்வதேயாகும்! ஆயினும் நானும் திரும்பி வர சிறிது நேரமாகும், நீங்கள் இங்கேயே பத்திரமாக இருக்கலாம், நான் போதிய பாதுகாவலுக்கு ஏற்பாடு செய்து விட்டுப் போகிறேன்'' என்று கூறிவிட்டு அவர் களின் பதிலை எதிர்பாராமல், மார்த்தாண்ட பூபதி அவசர மாக வெளியேறினர்.

மூத்த அமைச்சர் சேதுபத்திரரின் இருப்பிடத்தை மார்த்தாண்டபூபதி அடையும் போது அவர் தன்கைகளைப் பின்புறம் இணைத்துக் கொண்டு, கவலை தோய்ந்த முகத் துடன், ஏதோ சிந்தித்தவராய் குறுக்கும் நெடுக்குமாக உலவிக் கொண்டிருந்தார். மார்த்தாண்டபூபதி அவருக்கு மரியாதை செய்து விட்டு எதிரே நின்ற போது, அவர் எந்த வொரு பரபரப்பும் காட்டாமல், மிகவும் அமைதியாக,

PDF ISLAM

''வாருங்கள் மார்த்தாண்டரே! உள்ளே வந்து அமருங்கள்!'' என்று கூறினர்.

'' மிகவும் நன்றி! எங்கள் தலைவரே! நான் அவசரமாக உங்களிடம் ஒரு அனுமதி பெறவந்தேன்! விருந்தினர்கள் காத்திருக்கிருர்கள்!'' என்ருர் மார்த்தாண்ட பூபதி.

''ஏன்? விருந்தினர்களுக்கு என்ன ஆயிற்று? மன்னர் ஆணைப்படி அவர்களுக்கு மாளிகையில் போதிய வசதிகள் செய்து கொடுத்து விட்டீர்களல்லவா?'' என்று கேட்டார் சேது பத்திரர்.

''அவர்களை மாளிகையில் சேர்த்துவிட்டேன்! நமது பணியாட்கள் அவசியமில்லை என்று கூறி, அவர்களுடைய ஆட்கள் நால்வரை அழைத்துக் கொள்ள விரும்புகிருர்கள் இதுபற்றி ராஜகுரு நாதரின் அனுமதியை நான் பெற வேண்டுமா என்று தெரியவில்லை!'' என்ருர் மார்த்தாண்டர்.

அதற்கு சேதுபத்திரர்உடனே பதில் சொல்லவில்லை சிறிது நேரம் மீண்டும் நடந்தார். பிறகு அமைதியாக மார்த்தாண்ட பூபதியை நோக்கி, ''அராபிய விருந்தினர் பற்றிய முழு பொறுப்பையும் மன்னர் பிரான் உங்களிடம் ஒப்புவிக்கவில்லையா? அதுவும் உங்களையே நேரடியாக அழைத்து ஆணையிடவில்லையா?'' என்று கேட்க, அவர், ''ஆமாம்! ஆமாம்!'' என்று ஒப்புக்கொள்ளும் விதத்தில் தலையை அசைத்தார்.

''அப்படியானல் அவர்களுடைய சவுகரியத்துக்கும் பாதுகாப்புக்கும் என்னென்ன செய்யவேண்டுமோ அவற்றை எங்கள் விருப்பத்துக்கு செய்ய அனுமதிக்கப்பட்டதாக அதற்குப் பொருளில்லையா?'' என்று சேதுபத்திரர் கேட்க, ''ஆமாம்! ஆமாம்!'' என்று மீண்டும் தலையை அசைத்தார் மார்த்தாண்டர்.

''இவ்விதம் தெளிவாக நீங்கள் புரிந்திருந்தும், என்னிடம் வந்து கூட நீங்கள் ஆலோசனை கேட்கத் தேவை

PDF ISLAM

யில்லையே!'' என்று சிரித்துக் கொண்டே சேதுபத்திரர் கூற அதன் பொருளைப் புரிந்து கொண்ட மார்த்தாண்டபூபதி, ''மிக்க நன்றி! மிக்க நன்றி!'' என்று கூறிக் கொண்டே புவகமாகத் திரும்பப் போனார்.

சேதுபத்திரர் மிகவும் சிந்தனை நிரம்பிய முகத்துடன் ''மார்த்தாண்டரே! மிகப்பெரிய பொறுப்பை ஏற்றுள்ளீர்'' அராபிய வியாபாரிகள் நம் நாட்டை விட்டு வெளியேறும் நாள்வரை, நீங்கள் மிகவும் எச்சரிக்கையாக நடந்து கொள் ளக் கடமைப்பட்டிருக்கிறீர்கள்! அவர்கள் பாதுகாக்கப் பட வேண்டியது மட்டுமல்ல, அவர்களுடைய கண்ணியமும் மரியாதையும் மிகவும் பாதுகாக்கப்பட வேண்டியதாகும்! உங்களிடம் பொறுப்பில் விடப்பட்ட ஐந்து பேருடையது மட்டுமல்ல, கப்பலில் வந்துள்ள அனைவரையும் சேர்த்தே சொல்கிறேன்!'' என்றார்.

''கடலோர பயணிகள் சத்திரத்தில் தங்கியுள்ள அவர் களுக்கும் போதிய பாதுகாப்புகள் ஏற்பாடுசெய்துள்ளேன்'' என்றார் மார்த்தாண்டர்.

''ராஜரீக முறையில் உள்ள பாதுகாப்பை மட்டும் நான் இங்கு உங்களுக்கு நினைவூட்டவில்லை, அதைவிட இன்னும் அதிகமாகச் சொல்கிறேன்! உங்கள் படையின் ஒரு பகுதி யாகிய ஒற்றர் பிரிவையும் இதில் முழுவதும் ஈடுபடுத்துங்கள்! ராஜ சந்நிதானத்துக்கு வந்த அந்த ஐவர் மட்டுமல்ல, அவர் களின் கப்பலைச் செலுத்தி வந்துள்ள அனைவர் மீதும் ஒற்றர் களின் கண்காணிப்பை வையுங்கள்! அவர்களின் வியாபா ரமாகட்டும், அல்லது தனி நடமாட்டமாகட்டும், அனைத் தும் ஒற்றர்களின் கண்களை விட்டுத் தப்பக் கூடாது என் பதை நீங்கள் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்ப தற்காகவே இவ்வளவு அதிகமாக நான் உங்களிடம் சொல் கிறேன்! மேலும் ஏதாவது ஒரு சிறு வித்தியாசமான நிகழ்ச்சி நடந்தாலும், தாங்கள் விரும்பினால் முதலில் என்னைச் சந்தியுங்கள்?'' என்றார் சேதுபத்திரர்.

PDF ISLAM

''முதலமைச்சரின் ஆணையை சிரமேற்கொள்கிறேன்'' என்றார் மார்த்தாண்டர்.

''இல்லை! இல்லை! மார்த்தாண்டரே! முதலமைச்சர் என்ற அந்தஸ்தில் உங்களுக்கு ஆணையிடவில்லை. மன்னர் பிரான் மீதும், இந்த நாட்டின்மீதும் உண்மையான விஸ்வாசம்கொண்ட எனது மதிப்பிக்குரிய நண்பர்களில் ஒருவர் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே ஒரு ஆலோசனையாகக் கூறுகிறேன்!'' என்று சேதுபத்திரர் சொல்லும் போது, அவர் முகபாவம் மிகவும் ஆழ்ந்த சிந்தனையில் நிறைந்திருப்பதை வெளிப்படுத்தியது,

மார்த்தாண்ட பூபதி அவருக்கு மரியாதை செய்துவிட்டுத் திரும்பியவுடன், மீண்டும் அவர் முன்போல், தன் கைகளைப் பின்னால் கட்டிக்கொண்டு குறுக்கும் நெடுக்குமாக நடந்தார்.

அவரிடமிருந்து விடை பெற்றுச் சென்ற மார்த்தாண்ட பூபதி தன்னுடைய காவலர்கள் இருவருடன் நேரே கடலோர பயணிகள் சத்திரத்துக்குச் சென்றார். தூரத்திலிருந்து சத்திரத்தை நோக்குகையில் அவருக்குச் ''சொலேர்'' என்றது. ஏனெனில், அச்சத்திரத்துக்கு முன்னால், தீப்பந்தங்களோடு ஒரு பெரிய கூட்டமே கூடி நின்றது. அதை யொட்டி ஏதோ கூச்சல்களும் எழுந்துகொண்டிருந்தன.

ஏதோ விபரீதம் நடந்துவிட்டதோ என்று பயந்தவாறு அவசர அவசரமாக அவர் அந்த இடத்தை நெருங்கிய போதுதான், அவர் மனம் நிம்மதியடைந்தது.

அன்றைய மன்னர் விழாவில் கலந்துகொள்ள வந்த கலைஞர்கள் பலர், தங்களின் கலைத் திறன்கள் பலவற்றை, அரேபிய கப்பலில் வந்தவர்களுக்குக் காட்டிக்கொண்டிருந்தனர். அவர்களைப்போன்ற கப்பலோட்டிகளாக வந்த அரேபியர் சிலரும், அவர்களுடன் சேர்ந்து தங்கள் நாட்டுக் கலைகளை

PDF ISLAM

வெளிப்படுத்தி அவர்களை மகிழ்வித்துக் கொண்டிருந்தார் கள். இருசாராரும் ஒருவரையொருவர் உற்சாகப்படுத்தி மகிழ்ந்துகொண்டனர், காவலர்களும் இதில் ரசிகர்களாகக் கலந்துகொண்டிருந்தனர்.

படை அமைச்சரும் தளபதியுமான மார்த்தாண்ட பூபதியையும் அவருடன் வந்த காவலர்களையும் சிலர் அடை யாளம் கண்டுகொண்டவுடன், ''தளபதி மார்த்தாண்டர் வாழ்க !'' என்ற கோஷத்தை எழுப்பவே, எல்லா நிகழ்ச்சி களும் திடீரென நின்று நிசப்தமாகியது. மக்களோடு சேர்ந்து கலை விளையாட்டுகளில் ஈடுபட்டிருந்த சில அரபியரும், ஏதோ தவறு செய்துவிட்டவர்களைப் போல வெட்கப்பட்டு ஒதுங்கி நின்றனர்,

அந்த மகிழ்வான சூழ்நிலையைக் கலைக்க விரும்பாது, மார்த்தாண்டர், தன் முகத்தில் மகிழ்ச்சியை வரவழைத் துக்கொண்டு, தன் கைகளை உயர்த்திக்காட்டி, ''உங்கள் விளையாட்டுகள் தொடர்ந்து நடக்கட்டும் !'' என்று சைகை செய்தவாறு, பயணிகள் சத்திரத்தில் நுழைந்தார்.

இந்த ஆட்ட பாட்டங்களில் கலந்துகொள்ளாத பலர் சத்திரத்துக்குள் தங்கள் படுக்கைகளைச் சரி செய்துகொண்டி ருந்தனர்; சிலர் சமையல் வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டி ருந்தனர், சிலர் வட்டமாக அமர்ந்து ஏதோ பேசிக்கொண் டிருந்தனர்.

படைத் தளபதியையும் அவருடன் சில வீரர்களையும் கண்டவுடன் அவர்கள் அனைவரும் எழுந்து நின்றனர், வெளியே விளையாட்டுகளில் ஈடுபட்டிருந்த அரபியர்களும் உள்ளே வந்து மரியாதை செய்து ஒதுங்கி நின்றனர்., மார்த் தாண்டரின் முகத்தில் வெளிப்பட்டுக்கொண்டிருந்த மகிழ்ச்சியைக் கண்ட அவர்கள் ''ஒன்றும் விபரீதமான செய்தியல்ல'' என்று புரிந்துகொண்டு திருப்தியடைந்தவர் களாகக் காணப்பட்டனர்,

PDF ISLAM

[illegible]

இதைச் செவியுற்ற அரபியர்கள் அனைவரும்கூடி அரபி மொழியில் [illegible] பேசிக்கொண்டார்கள். பிறகு [illegible] அவர்களில் நால்வரைத் தேர்ந்தெடுத்து, மார்த்தாண்டர் முன்னால் கொண்டுவந்து நிறுத்தினர்.

மார்த்தாண்டர் சிரித்துக்கொண்டே... "தமிழ் தெரியும் என்று [illegible] தாக்கினீர்கள், ஒருவரும் தமிழ் பேசவில்லையே!" என்றார். அதற்கு, கைத் தாக்கிய அரபியர்களில் ஒருவர், "கொஞ்சம் கொஞ்சம் பேசும்! நீங்கள் பேசினால் புரியும்" என்றார். அனைவரும் சிரித்துக் கொண்டனர்.

படை அமைக்கும் தலைமையான மார்த்தாண்டப் புலி, அன்றிரவு மிகவும் கவனத்துடன் செயல்பட்டார். விருந்தினர் மாளிகைக்கு அந்த நான்கு அரபியர்களையும் பாதுகாப்புடன் அனுப்பி வைத்துவிட்டு, அங்கு மேற்கொண்டும் காவல் பலப்படுத்தினார். அது போன்று, பயணிகள் சத்திரத்துக்கும் ஒரு படையினரை அனுப்பி, முறையான காவலுக்கு ஏற்பாடு செய்தார். அதோடு அன்றிரவே ஒற்றர் படைத் தலைவரான நம்பிவர்மரை அழைத்து, செழியன் தன்னிடம் கூறிய விபரப்படி எல்லா அரபியர்களின் நடவடிக்கைகளையும் கூர்ந்து கவனித்துவர உத்தரவிட்டார்.

PDF ISLAM

கலந்திருந்த முழுமையுடைய பல அமைச்சரும் தளபதிப் படை மகாநதர்களை புரிந்தும் சிவான நூக்கமின்றி: மன்னவே புது நம்பிக்கைகளுடைய அராபிய வர்த்தகர்கள் மீது அவ்வளவு தூரம் எச்சரிக்கையின் மேற்கொள்ள வேறு பத்திரா உறிவதும், அதற்கு முன்னும், "நான் சந்திப்பதற்கு முன்னும் அதிகாரத்திலுள்ளவர்கள் யாரும் அந்த வர்த்தகத் தலைவர்களைச் சந்திக்க அனுமதிக்கக் கூடாது" என்று தன்னிடம் மன்னர் நேரடியாக உத்தரவிட்டதும், அவருடைய சிந்தனையைக் கிளறிக்கொண்டிருந்தன, அவர் எப்போது சிறிது அயர்ந்து தூங்கினாரோ, அவருக்கே தெரியாது. பொழுது விடிவதற்கு முன்பு அவர் வீட்டுக் கதவு படபடவெனத் தட்டப்படும் சப்தம் கேட்டு திடுக்கிட்டு எழுந்தார்.

வாசலில் காவலர்கள் சிலர் பரபரப்புடன் நின்றுகொண்டிருந்தனர். ஏதோ விபரீதம் நடந்துவிட்டதைப் புரிந்துகொண்ட மார்த்தாண்டர், "என்ன நடந்தது?" என்று கேட்டார்.

அரசாங்க விருந்தினர் மாளிகையின் காவலுக்கு நின்றவர்களின் தலைவரான காவல்காரர்-"ஐயா! நடக்கக்கூடாதது நடந்துவிட்டது. விருந்தினர் மாளிகையில் வைக்கப்பட்டிருந்த முதலாம் சேரமான் பெருமாளின் கிரீடம் திருட்டுப் போய்விட்டது" என்று பதறியவாறு கூறினார்.

முதலாம் சேரமான் பெருமாளின் கிரீடம் முத்திலும் தங்கத்திலும் விலையுயர்ந்த வைரக் கற்களினாலும் ஆனது. அரச கண்காட்சி சாலை அரங்கில், அதுவே பிரதானப் பொக்கிஷமாகப் பாதுகாக்கப்பட்டு வந்தது. ஏனெனில் இரண்டாம் சேரமான் பெருமாள் மன்னர் கடலோரத்திலமர்ந்து தவம் செய்து, அங்கிருந்தே கைலாயபதி சென்றுவிட்டார் என்பதால் அவருடைய கிரீடம் யாரிடமும் கிடைக்கப் பெறவில்லை. ஆதலால் இதுவே முதல் மரியாதைக்குரிய

PDF ISLAM

சின்னமாக பாதுகாக்கப்பட்டு வந்தது. இது திருட்டுப் போய்விட்டது என்ற செய்தியை படை அமைச்சரும், பாதுகாப்புத் தளபதியுமான மார்த்தாண்ட பூபதியால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவர் சில நிமிடங்கள்வரை அதிர்ச்சியால் பிரமித்து நின்றுவிட்டார்.

பிறகு ஒருவாறுகத் தன்னைச் சமாளித்துக்கொண்டு உள்ளே சென்று சில நிமிடங்களில் தனது உத்தியோக உடைகளை அணிந்துக்கொண்டு, கண்காட்சிசாலையும். அரசாங்க விருந்தினர் மாளிகையும், அரபு விருந்தினர் தங்கியிருந்ததுமான அக் கட்டிடத்தை நோக்கி தகவல் சொல்ல வந்த காவலனுடன் அவசரமாக விரைந்தார்.

அக் கட்டிடம் எந்தவித பரபரப்புமின்றி அமைதியாக இருந்தது, ஒற்றர்படைத் தலைவர் நம்பீஸ்வரர், தன்னுடன் மேலும் சில ஒற்றர்களுடன் நின்றுகொண்டிருந்தார். உடையணிந்த காவலர்கள் அவரவர் இடத்தில் நின்றுகொண்டிருந்தனர்.

மார்த்தாண்ட பூபதியைக் கண்டவுடன் நம்பீஸ்வரர் மரியாதை செய்து அவர் முன் நின்று ''கிரீடம் திருட்டுப் போனது முற்றிலும் ரகசியமாக வைக்கப்பட்டுள்ளது உங்களிடம் வந்து தகவல் கூறியவருக்கும் இங்குள்ளோருக்கும் மட்டுமே இவ்விஷயம் தெரியும்! மேற்கொண்டு தங்கள் ஆணைப்படி நடக்க சித்தமாகவுள்ளேன்'' என்றார்.

''திருட்டு சம்பந்தமான முழு விபரத்தையும் முதலில் சொல்லுங்கள்'' என்றார் மார்த்தாண்ட பூபதி.

''தங்களுடைய மேலான ஆணைப்படி அரபு விருந்தினர்கள் மீது, நம் ஒற்றர்களின் கண்காணிப்பு, மாளிகைக்கு உள்ளும் வெளியும், சரியாகவே இருந்து வந்தது. நானும் பிந்திய ஜாமம்வரை இங்குதான் இருந்தேன். முந்திய ஜாமத்தில், அரபு விருந்தாளிகளில் சமையல் வேலைகளுக்

PDF ISLAM

காக வந்தவர்களில் ஒருவர் வெளியே வந்து. நம்முடைய காவலர்களில் ஒருவரிடம், அரை குறையான தமிழில், தன் எஜமானர்கள் மீனும் மாமிசமும் சாப்பிட விரும்புகிறார்கள் என்றும், அவை கடலோர சத்திரத்தில் தங்கள் சகாக்களிடம் உள்ளனவென்றும், அங்கு தன்னை அழைத்துச் செல்ல முடியுமா என்று கேட்டார். நான் சைக்கினையின் மூலம் அதற்கு அனுமதி கொடுத்தேன். அவருடன் ஒரு காவலாளியையும் அனுப்பி வைத்தேன். அதே போல அவர் போய், சிறிது நேரத்தில், ஒரு மூடிய பாத்திரத்தோடு திரும்பி வந்தார். மறுபடியும் அவர்கள் யாரும் வெளியே வரவில்லை. ஆனால் அவர்கள் இருந்த அறையில் வெகு நேரம் வெளிச்சம் இருந்துகொண்டிருந்தது என்றார் நம்பீஸ்வரர்.

மார்த்தாண்ட பூபதி குறுக்கிட்டு, ''அரபு வேலைக்காரருடன் ஒரு காவலாளியை அனுப்பி வைத்தீர்களே ! அப்போது அந்த அரபு நபர் கையில் ஏதாவது கொண்டு போனாரா?''

''அப்படி எதுவும் கொண்டுபோனதாகத் தெரியவில்லை !''

சந்தேகமாகச்சொல்கிறீர்களா? உறுதியா சொல்கிறீர்களா ?

''உண்மையில் நான் அதைக் கூர்ந்து கவனிக்கவில்லை ! வெறுங்கையோடு போனது போல்தான் எனக்கு நினைவிருக்கிறது!''

''அவர்களைப் பின் தொடர்ந்து ஒற்றர்கள் யாரையாவது அனுப்பினீர்களா ?''

''வேணு என்ற பெயருடைய ஒரு ஒற்றரை அனுப்பினேன் !''

இதை முதலில் நீங்கள் சொல்லவில்லையே ! எங்கே அந்த நபர்?

PDF ISLAM

''அவர் இன்னும் திரும்பிவரவில்லை !''

''அந்த அரபு வேலைக்காரனுடன் சென்ற காவலாளி எங்கே ?''

''அவர் வேலை முதல் ஜாமத்தோடு முடிந்துவிட்டதால் இரண்டாம் ஜாமத் தொடக்கத்தோடு அவர் வீட்டுக்குப் போய்விட்டார் என்று காவலாளிகளின் தலைவர் கூறினார்!''

''அதற்குப் பிறகு அரபுகளில் யாராவது வெளியே போனார்களா ?''

''யாரும் போனதாகத் தெரியவில்லை !''

மறுபடியும் சந்தேகத்தோடுதான் பதில் சொல்கிறீர்கள். போனார்களா இல்லையா என்று நிச்சயமாகத் தெரிய வேண்டுமல்லவா?''

''நான் இரண்டாம் ஜாமக் காவலாளிகளை விசாரித்த போதும், நமது ஒற்றர்களை விசாரித்தபோதும் அவ்விதம் யாரும் வெளியே போகவில்லை என்றே சொன்னார்கள் !''

''இப்போது இரீடம் திருட்டுப்போன விபரத்தைப் பற்றிச் சொல்லுங்கள், அது திருட்டுப்போனது எப்போது கண்டுபிடிக்கப்பட்டது ? யாரால் முதலில் பார்க்கப்பட்டது;

''நான் முதல் ஜாமம் (நடுநிசி) வரை இங்கேதான் இருந்தேன் என்பதையும், கண்காட்சி சாலையின் வாயில்கள் அனைத்திலும் தாங்கள் நியமனம், செய்த காவலர்கள் முறைப்படி [illegible] எச்சரிக்கையுடன் இருந்தனர் என்பதையும் நான் கவனித்து வந்ததோடு நமது ஒற்றர்களில் நான்கைந்து பேரை இருக்கச் செய்து விருந்தினர் மாளிகை [illegible] மறைவாக இருந்து கவனித்து வர உத்தரவிட்டேன். அதன்படி அவர்கள் சரிவரத் தங்கள் கடமைகளைச்

செய்து வந்தனர். இரண்டாம் ஜாமத்தில். காவல்மாறும் போதும், நமது ஒற்றர்களையும் மாற்றிவிட்டு, மேற்கொண்டும் சிறிது நேரம் நான் இருந்து, எல்லாம் சரியாக நடைபெறுகிறதா என்று கவனித்து விட்டு என் இருப்பிடம் திரும்பினேன். அதுவரை எல்லாம் சரியாகவே இருந்தது. விடிவதற்கு நான்கு நாழிகைக்கு முன்புதான் உள்ளே காவல் இருந்த நமது ஒற்றர்களில் ஒருவர்; கிரீடம் வைக்கப்பட்டிருந்த சீனத்துக் கண்ணாடிப் பெட்டி திறந்து கிடப்பதாகவும், அது காலியாக இருப்பதாகவும் கூறினார். நான், எந்தப் பரபரப்பையும் ஏற்படுத்தாமல், காவலாளர் தலைவரை உங்களிடம் அனுப்பி விட்டு. ஒற்றர்களில் ஒருவரை ராஜகுரு மகான் அவர்களிடம் ரகசியமாகச் சொல்லுமாறு அனுப்பினேன்'' என்றார்.

''என்ன? குருமகானுக்கு செய்தி எட்டி விட்டதா?'' எனக் கேட்டு, மார்த்தாண்ட பூபதி திடுக்கிட்டார்.

''பொறுப்புடைய நாம் உண்மையை ஆராய்ந்தறிவதற்கிடையில், இவ்வளவு அவசரப்பட்டு குருமகானுக்கு நீங்கள் செய்தியை எட்டச் செய்யாமல் இருந்திருக்கலாம்! நிலைமை எதுவாக இருந்தாலும், இந்த மாளிகையை விட்டோ, அல்லது இதைச் சுற்றியுள்ள தோட்டத்தை விட்டோ, அந்த கிரீடம் வெளியே போய்விட வாய்ப்பில்லை என்றே கருதுகிறேன்'' என்று மேலும் கவலையோடு கூறினார் மார்த்தாண்ட பூபதி.

''தளபதியார் அவர்களே! எங்களுடைய நிலை உங்களுக்குத் தெரியாததல்ல! ஒற்றர்படை பிரிவு உங்கள் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும் என்று விதி இருந்தாலும், அது ராஜ குருநாதரின் நேரடியான முழு அதிகாரத்தின் கீழ் காலங்காலமாக இருந்து வருகிறது என்பதை

PDF ISLAM

அறிவீர்கள் ! நாட்டின் பிரதான பொக்கிஷமாகிய கிரீடம் திருட்டுப்போன விஷயத்தை உடனடியாக நான் தெரிவிக்காத குற்றத்துக்காக அவர்கள் என் தலையைச் சீவ உத்தர விட்டால் அதை யாராலும் தடுக்க முடியாது. அதை நீங்களே நிறைவேற்றும் நிலை நேரிடும் என்பதைச் சொல்லத் தேவையில்லை...ஆதலால்...!'' என்று நம்பீஸ்வரர் அச்சம் தொனிக்கக் கூறியபோது, மார்த்தாண்டர் குறுக்கிட்டு, ''நம்பீஸ்வரரே ! நான் குருநாதருக்கு உண்மையை மறைக்கச் சொல்ல வில்லை ! நாமே சிறிது முயற்சி எடுத்து, அதைக் கண்டுபிடித்துவிட்டோமானால், நம் இருவருடைய தலையும் தப்பிக்கும் என்பதுதான் என் கருத்தாகும்'' என்று கூறிவிட்டு கவலை தோய்ந்தவராய் இப்போதே நானும், முத்த அமைச்சர் சேது பத்திரருக்குச் செய்தியை எட்டச் செய்யவேண்டிய நிர்ப்பந்தத்துக்கும் ஆளாகிவிட்டேன். ஆதலால் நான் போய் திரும்பும்வரை விருந்தினர் மாளிகையை மட்டுமல்லாமல், இதைச் சுற்றியுள்ள தோட்டத்தை விட்டும் யாரும் எக்காரணத்தைக்கொண்டும் வெளியே செல்ல அனுமதிக்காதீர்கள் ! அதுபோன்றே யாரும் உள்ளே வரவும் அனுமதிக்கவும் வேண்டாம் !'' என்று கூறிவிட்டு அவசர அவசரமாகப் புறப்பட்டார் மார்த்தாண்டர். சிறிது தூரம் சென்றவுடன், அங்கு நின்ற, தலைமைக் காவலாளியைத் தனியே அழைத்து, அவர் காதில் ஏதோ ரகசியமாகக் கூறிவிட்டு அங்கிருந்து வேகமாய் விரைந்தார்,

அப்போதுதான் பொழுது புலர்ந்து, இலேசாகப் புலம் தெரியத் தொடங்கியது. அரபியர்கள் தங்கியிருந்த அறையிலிருந்து ஏதோ இலேசாக ஒரு சப்தம் தொடர்ந்து வந்து கொண்டிருப்பதை, உள்ளே ரகசியமாக மறைந்திருந்த ஒரு ஒற்றர் ஓடிவந்து நம்பீஸ்வரரிடம் கூற, அவர் பூனையைப் போல் பதுங்கிச் சென்று, விருந்தினர் மாளிகையின் அறைக் கதவை ஒட்டி நின்று காது கொடுத்து அச் சத்தத்தைக் கேட்டார். அது, அவர்களில் ஒரு நபர் மெல்லிய இராகத்

PDF ISLAM

இல் பாட்டுப்பாடுவதுபோல் தெரிந்தது. நம்பீஸ்வரர் தனது எழுத்தாணியை எடுத்து, அந்த சப்தத்தில் தனக்குச் சரியாகப் புரிந்ததை மட்டும் சுவடி ஏட்டில் பதிவு செய்து கொண்டார். அந்தச் சப்தம் முடிந்து சிறிது நேரம் வேறு எந்தப் பேச்சும் கேட்கவில்லை. சிறிது நேரம் கழித்து, ஒரு நபர் அரபி மொழியில் ஏதோ சொற்பொழிவு செய்தார். அது சரியாகப் புரியவில்லையாதலால் அதைப் பதிவு செய்து கொள்ளவில்லை. பிறகு ஏதேதோ சலனங்கள் கேட்கவே, நம்பீஸ்வரர் தூரமாக நகர்ந்து வந்து ஒரு தூண் மறைவில் ஒளிந்துகொண்டார்.

விருந்தினர் மாளிகையின் அறைக் கதவு திறக்கப்பட்டது. அரபிகளில் வேலைக்காரர்கள் தவிர மற்றவர்கள் ஒவ்வொருவராக வெளிவந்தனர். அவர்களில் மூன்றுபேர் குளிர்ந்த தோட்டத்தின் காற்றை அனுபவிப்பவர்கள் போல், வெளிவாயிலில் வந்து நின்றனர். மற்ற இருவர் கண்காட்சி அரங்கத்தைச் சுற்றிப் பார்க்கும் நோக்குடன் உள் வரந்தாவில் நடக்கத் தலைப்பட்டனர்.

நம்பீஸ்வரர் திடீரென அவர்கள் எதிரே ஆஜராகி முஸ்லிம் பின் அத்ஹமை நோக்கி, ''மன்னிக்கவும்! நீங்கள் நேற்று ராஜ தர்பாரில் நன்றாகத் தமிழ் பேசினீர்கள்! ஆதலால் நான் இப்போது சொல்வது உங்களுக்குப் புரியும் என்று நினைக்கிறேன்! இன்று இரவு இங்கு ஒரு துரதிருஷ்டமான சம்பவம் நடந்துவிட்டது. அது நடக்கக்கூடாதது! என்றும் நடந்திராதது!'' என்றார்.

முஸ்லிம் பின் அத்ஹம் ஆச்சரியத்தோடு, ''இங்கா? இந்தக் கட்டிடத்திலா? அப்படி என்ன சம்பவம்?'' என்று கேட்டார்.

''கண்காட்சி மண்டபத்தில் சீனக் கண்ணாடிப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்த முதலாம் சேரமான் பெருமாள்

பா: 4.

PDF ISLAM

அவர்களின் பொற்கிரீடம் திருட்டுப் போய்விட்டது!'' என்றார் நம்பீஸ்வரர்.

முஸ்லிம் பின் அத்ஹும் எந்தவித பதட்டமும் கொள்ளாமல், ''அப்படியா? அதைத் திருடியவர்கள் சிக்கிக் கொண்டார்களா?'' என்று கேட்டார்.

இந்தப் பேச்சு வார்த்தையைப் புரியாத மற்ற நால்வரும் முஸ்லிம் பின் அத்ஹுமிடம் அரபி மொழியில் விபரம் கேட்க, அவர் தம் சகாக்களிடம் அதைக் கூறினார். அவர்கள் அதைக் கேட்டு திடுக்கிட்டவர்களாய் மாறியதை நம்பீஸ்வரர் கவனித்துக்கொண்டார்.

முஸ்லிம் பின் அத்ஹும் பொறுமையாகவே, ''அந்தக் கிரீடம் எங்கே இருந்தது என்று நாங்கள் தெரிந்துக் கொள்ளலாமா?'' என்று கேட்டார்.

''மன்னிக்கவேண்டும்! நான் அது சம்பந்தமாக முழு விபரத்தையும் பேச உங்களைத் தடுத்து நிறுத்தவில்லை. செய்தி ராஜகுரு நாதருக்கும், மூத்த அமைச்சருக்கும் எட்டச் செய்யப்பட்டிருக்கிறது. அவர்களிடமிருந்து மேற்கொண்டு தகவல் வரும்வரை நீங்கள் விருந்தினர் மாளிகையிலேயே இருக்கவேண்டும் என்பது என் தாழ்வான வேண்டுகோளாகும்'' என்றார் நம்பீஸ்வரர்.

அதைக் கேட்டும் முஸ்லிம் பின் அத்ஹுமின் முகத்தில் எந்த மாறுதலும் ஏற்படவில்லை. நம்பீஸ்வரர் சொன்னதை அப்படியே ஏற்றுக்கொள்ளும் விதத்தில் அவர் தலையை அசைத்துக்கொண்டார், மற்ற அரபியர்கள் அதன் மொழிபெயர்ப்பைக் கேட்கவே, முகம் சிவக்க, அரபி மொழியில் ஏதோ கோபமாக முணங்கிக்கொண்டவாறு தங்கள் அறைக்குத் திரும்பினர். அவர்களுடன் கடைசியாக அத்ஹுமும் சென்றார்.

PDF ISLAM

அடுத்து நம்பீஸ்வரர் உத்திரவுபடி ஆயுதந்தாங்கிய நான்கு காவலர்களை, காவலர் தலைவர் அந்த அறையின் வாசலில் நிறுத்தினார்.

அப்போது பொழுது நன்றாக விடிந்து விட்டதால், பிந்திய ஜாமத்திலிருந்து காவலில் இருந்தவர்களை தங்கள் வீடுகளுக்குத் திரும்பச் செய்ய, புதிய காவலர்கள் சிலர் வழக்கம்போல வந்தனர். இரவு காவலில் இருந்தவர்களும் வீடு திரும்ப தயாராயினர்.

அந்த சமயத்தில் காவல் படைத் தலைவர் மாளிகை வாசலில் நின்றவாறு தனது கையை உயர்த்திக்காட்டி, ''எல்லோரும் அணி திரளுங்கள்'' என்றார். அவர் உத்தரவுப்படி அனைவரும் ஓடி வந்து வரிசையாக நின்றனர். அவர் காவலாளிகளை நோக்கி, ''நாம் யாரும், இந்த மாளிகையையும், இதைச் சுற்றிய தோட்டத்தையும்விட்டு, வெளியே செல்லக்கூடாது, நமது தளபதியும் படை அமைச்சருமான மார்த்தாண்டர் வந்து அனுமதியளித்த பின்தான், மற்ற காரியங்கள் முடிவு செய்யப்படும்'' என்று உரத்தக் குரலில் கூறினார். அவர்கள் அனைவரும் சைக்கினை செய்து அந்த உத்தரவை ஏற்றுக்கொண்டதாக அறிவித்தனர்.

இந்த அணிவகுப்போடு சேராது நின்ற ஒற்றர் படைத் தலைவர் நம்பீஸ்வரர். ''நல்ல ஆணையிட்டீர்கள்! ஆனால் நாங்கள் போக வேண்டும் என்னுடைய ஆட்கள் முந்திய இரவிலிருந்தே இங்கு கண்காணிப்பில் உள்ளார்கள், அவர்கள் யாரும் காவல் மாறவில்லை. ஆதலால் மிகவும் களைத்துப் போயிருக்கிறார்கள்! நானும் ராஜகுரு மகான் அவர்களைச் சந்தித்து முழு விபரமும் கூறியாகவேண்டும்!'' என்றார்.

''மன்னியுங்கள்! நம்பீஸ்வரரே! நான் கேட்டுக்கொண்டது எனக்கும் உங்களுக்கும். என்னுடைய காவலர்களுக்கும் உங்களுடைய ஒற்றர்களுக்கும் சேர்த்துத்தான்!'' என்றார் காவலர் தலைவர்.

PDF ISLAM

அதற்கு நம்பீஸ்வரர் கேலியாகச் சிரித்து, ''நானும் என் படையினரும் உங்களுக்குக் கட்டுப்பட்டவர்களல்லவே! நீங்களிடும் உத்திரவுக்கு நாங்கள் கட்டுப்பட வேண்டிய அவசியமில்லையே !'' என்றார்.

''அன்பு கூர்ந்து மன்னியுங்கள் எங்கள் தலைவரே ! இது என்னுடைய சொந்த உத்தரவல்ல; உங்களுக்கும் எனக்கும் தலைவரான, படைத் தளபதியும் அமைச்சருமான மார்த்தாண்ட பூபதி அவர்களின் கண்டிப்பான ஆணை யாகும் !'' என்றார் காவல் தலைவர்.

''என்னையும் என் ஒற்றர் படையினரையும் குறிப்பிட்டு, அவர்கள் உத்திரவிட்டார்களா ?''

''மன்னிக்கவேண்டும் ! அவர்கள் ''யாரும்'' என்று சொன்னதில் விதிவிலக்காகத் தங்களையும், தங்களைச் சேர்ந்த மற்றவர்களையும் குறிப்பிடவில்லை''

''நான் யார் என்பது தெரிந்தும், ராஜகுருநாதரை அவசரமாகச் சந்திக்கப் போகிறேன் என்று சொல்லியும் நீர் தடுக்கிறீரா ? இதன் விளைவு என்னவாகும் என்பதைப் புரிந்துதான் நீர் இவ்வாறு என்னிடம் பேசுகிறீரா ?''

''மகாப் பிரபு ! அடியேனை அன்பு கூர்ந்து மன்னியுங்கள் உங்களுடைய தலைமையின் கீழ் நான் சேவகம் புரிந்து, நீங் கள் இப்படியொரு ஆணையைப் பிறப்பித்த பிறகு நான் அதை மீறி நடந்தால்...''...என்று சொல்லிக்கொண்டு வரும்போது நம்பீஸ்வரர் குறுக்கிட்டு, ''வீண் பேச்சு வேண்டாம்! இங்கு நடந்துள்ள விபரீதத்தின் பயங்கரம் உமக்குப் புரியவில்லை என்றே நினைக்கிறேன். அதில் எங் களுடைய கடமை எந்த அளவுக்கு உள்ளது என்பதும் உமக்கு விளங்க அறிவுப் போதாது ! நீர் செய்யும் ஒவ் வொரு நிமிடத் தாமதமும் உமக்கே நீர் அழிவைத் தேடி கொள்கிறீர்! நாட்டின் கவுரவத்துக்காக, நமது மாமன்ன

PDF ISLAM

ரின் கவுரவத்துக்காக உப்புடைய உத்திரவை நானும் என் சகாக்களும் மீறினால் என்ன செய்வீர்!'' என்று கோபத்தோடு இரைந்தார் நம்பீஸ்வரர்.

''மகாப் பிரபு! மகாப் பிரபு! உங்களைத் தெண்டனிட்டுக் கேட்டுக்கொள்கிறேன். தயவு செய்து தாங்கள் சொல்லியபடி முயற்சி செய்துவிடாதீர்கள்! நான் என் தலைவரின் உத்திரவை நிறைவேற்றும் வகையில் சாவதைப் பெருமையாகக் கொள்ளக் கூடியவன்! என் கீழுள்ளவர்களும் அப்படிப்பட்டவர்கள்தான்!'' என்று ஒரே சமயத்தில் கெஞ்சுவது போலும் அதே சமயம் தனது உறுதியை வெளிப்படுத்தும் விதத்திலும் கூறினார் காவற் படைத் தலைவர்.

ஒற்றர் படைத் தலைவர் நம்பீஸ்வரருக்கும் காவற் படைத் தலைவருக்கும், இங்கு விருந்தினர் மாளிகையில் தர்க்கம் நடந்துகொண்டிருந்த அதே சமயம், ராஜகுரு ராம நம்பியார், மூத்த அமைச்சர் சேதுபத்திரரைத் தன்னுடைய இடத்துக்கு அழைத்து மிகவும் கடுமையாகப் பேசிக் கொண்டிருந்தார்.

சேது பத்திரரைச் சந்திக்க தளபதி மார்த்தாண்ட பூபதி அவர் இல்லத்தைச் சென்றடைய சிறிது நேரத்துக்கு முன்புதான், ராஜகுருவால் அழைக்கப்பட்டு அவர் அங்கு சென்றுள்ளதாக தகவல் அறிந்து மார்த்தாண்டர் தானும் அங்கு விரைந்து சென்றார்.

மடாலயத்தில் ராஜகுரு ராம நம்பி, தனது கைகளைப் பின்புறம் கட்டிக்கொண்டு குறுக்கும் நெடுக்குமாக உலவிக் கொண்டிருந்தார், ஏதோ குற்றம் செய்துவிட்டவரைப் போல சேது பத்திரர் ஒரு ஓரத்தில் நின்று கொண்டிருந்தார். மார்த்தாண்ட பூபதியும் ராஜகுருவுக்கும், சேது பத்திரருக்கும் மரியாதை செய்துவிட்டு ஒரு ஓரத்தில் நின்றார்.

''நான் அப்போதே சொன்னேன் கேட்டீர்களா? அந்த மிலேச்சர்களை ராஜ தர்பாருக்குள் அனுமதிப்

PDF ISLAM

பதே பாபமான காரியம் என்றேன். அவர்களை அழைத்து வந்து அரச மேடையிலேயே ஆசனங்கள் அளித்து கவுரவித்தீர்கள்! அதுவும் போதாதென்று, விலை மதிப்பற்ற பொக்கிஷமுள்ள விருந்தினர் மாளிகையில் கொண்டுபோய் அவர்களைத் தங்க வைத்தீர்கள்! இப்போது என்ன நடந்தது? இந்த நாட்டின் கவுரவமே பறிபோய்விட்டது! மூத்த சேரமான் பெருமாளின் பொற் கிரீடமே களவு போய்விட்டது என்று மக்களுக்குத் தெரிந்தால் அவர்கள் நம்மை எல்லாம் காரி உமிழ்வார்கள்! அல்லவா? எனக்கு ராஜகுரு என்ற பதவி எதற்கு? உமக்கு அமைச்சர் என்ற பதவி எதற்கு? இதோ! நாட்டையே காக்கும் தளபதியாம்! ஒரு கிரீடத்தைக் காக்க முடியவில்லை!'' என்று கோபத்தோடு கர்ஜித்தார் ராஜகுரு.

சேது பத்திரர் மிகவும் அடக்கமாக, ''குருமகானே! தாங்கள் அன்பு கூர்ந்து கோபத்தைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்'' இன்னும் நாம் பூரண விசாரணையை மேற்கொள்ளவில்லை! மேலும் நமது பெருமைக்குரிய அந்தச் சின்னம் நமது கோட்டையைவிட்டு வெளியே போயிருக்க முடியாது! அதை நாம், நமது மன்னர் பெருமான் காதுக்கு எட்டுவதற்குள் எப்படியும் கண்டுபிடித்துவிடலாம்'' என்று கவலையுடன் கூறினார்.

ராஜகுரு மேலும் கோபம் கொப்பளித்தவராக 'ஹஹ்ஹா' என்று எக்காளமிட்டுச் சிரித்தார் ''என்ன அந்தக் தங்க கிரீடம் கோட்டையை விட்டு வெளியே பேயிருக்காதா? அது நாட்டைவிட்டே வெளியே போயிருக்கவேண்டுமய்யா! மேலும் மன்னர் பிரானுக்கு செய்தி மறைக்கப்படவேண்டுமா? என்ன சேதுபத்திரரே! உமக்கு மூளைக் குழம்பிவிட்டதா! மன்னருக்கு செய்தியும் தெரியவேண்டும். அந்தத் திருட்டு அரபியர்களைக் கையும் களவுமாகப் பிடித்து அவர் சமூகத்தில் நிறுத்தவும் வேண்டும்!'' என்று ஆத்திரத்தோடு கூறிவிட்டு, தளபதியை நோக்கி

PDF ISLAM

ஓய் ! மார்த்தாண்டரே ! விருந்தினர் மாளிகைக்குள் நாம் அனுமதித்த அந்த ஐந்து பேரும் இதுவரை தப்பித்து ஓடியிருக்கமாட்டார்களல்லவா !'' என்று கேட்டார் !

''திருட்டுச் செய்தி எட்டிய பிறகு, அந்த மாளிகையிலிருந்து யாரும் வெளியேற அனுமதிக்கவில்லை பிரபு ! நேற்றிரவிலிருந்து முதல் ஜாமக் காவலாளிகள் எட்டுபேர் வெளியே போயிருக்கிறார்கள். இரண்டாம் ஜாமக் காவலாளிகள் எட்டுபேர் உள்ளே வந்துள்ளார்கள். இவர்கள் அனைவரும், மாளிகைக்கு வெளியே காவல் இருந்தவர்கள். மாளிகைக்கு உள்ளே நம்பீஸ்வரர் தலைமையில் ஆறு ஒற்றர்கள் இருந்து, விருந்தினர் மாளிகையைக் கண்காணித்துள்ளார்கள்...'' என்று சொல்லிக்கொண்டுவரும்போது ராஜகுரு குறுக்கிட்டு ''நம்பீஸ்வரர் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை நான் முதலில் விசாரித்துக்கொள்கிறேன்! நீர் முதலில் போய் அந்த ஐந்து அராபியரையும் கைகளைக் கட்டி, தக்க பாதுகாப்புடன் என் முன் கொண்டு வாரும் !'' என கர்ஜித்தார்.

மார்த்தாண்ட பூபதி மேற்கொண்டும் ஒன்றும் சொல்ல முடியாமல், மூத்த அமைச்சர் சேதுபத்திரரை நோக்கினார். அவர் பொறுமையாக, ''மகா குரு அவர்களே ! நாம் சிறிதும் ஆத்திர உணர்வுக்கு ஆளாகாமல் இந்தப் பிரச்னையை அணுகுவது நலம் என்று நினைக்கிறேன் ! மேலும் அவர்கள் நமது மன்னர் பிரானால் பெரிதும் மதிக்கப்பட்டவர்களாக உள்ளனர். அவர்கள் குற்றம் புரியாதவர்களாக இருந்து விட்டால், நாம் அவர்களுக்குச் செய்கின்ற அவமரியாதையை மன்னர் பிரான் மன்னிக்கமாட்டார்கள். மேலும் தாங்கள் சிறிது பொழுது அவகாசம் தந்தீர்களானால், உண்மை நிலையை ஆராய்ந்து முடிவாகத் தங்களிடம் விபரம் தருகிறேன்'' என்றார்.

''எவ்வளவு பொழுது'' என்று அதே கோபத்துடன் கேட்டார் ராஜகுரு.

PDF ISLAM

''மன்னர் பிரான் தர்பாருக்கு வருவதற்கு முன்பு!'' என்றார் மூத்த அமைச்சர்.

''ஓ! அது அதிசக் காலக் கட்டமாகும்! அதற்கிடையில் அந்த 'மிலேச்சர்'களை நான் விசாரித்தாக வேண்டும்! அவர்களை நீங்கள் இங்கு கொண்டுவர சம்மதிக்காவிட்டால்' நான் விருந்தினர் மாளிகைக்குச் சென்று அவர்களை சந்தித்தாக வேண்டும்'' என்றார் ராஜகுரு.

''மன்னிக்க வேண்டும்குருமகானே! தனித்து தான் அவர்களைச் சந்திக்குமுன் வேறு யாரும் அவர்களைச் சந்திக்கக் கூடாது என்று தங்கள் சமூகத்தின் முன்னால்தானே, தளபதி யாருக்கு மன்னர் பிரான் ஆணையிட்டார்கள்!'' என்றார் சேதுபத்திரர்.

இதைக் கேட்டதும், ராஜ குரு தனது குறுக்கு-நெடுக்கு உலவுதலை திடீரென நிறுத்திவிட்டு, சிறிது யோசித்தவாறு, சேது பத்திரரே ,'ஓ! அதை மறந்துவிட்டேன்! கிரீடம் திருட்டுப்போன கவலையே என் நெஞ்சை ஆழ்த்திக்கொண்டிருக்கிறது! போய் அதைக் கண்டு பிடிக்க தீவிர முயற்சியைச் செய்யும்! தர்பார் கூடுவதற்கிடையில் நல்ல செய்தியை நாம் மன்னரிடம் சொல்ல வேண்டும்!'' என்றார்.

மூத்த அமைச்சர் சேதுபத்திரவர்மாவும், படைத் தளபதியும் பாதுகாப்பு அமைச்சருமான மார்த்தாண்ட பூபதியும் ராஜகுரு ராமநம்பியாரின் மடாலயத்திலிருந்து திரும்புகையில், சிறிது நேரம் ஒன்றும் பேசாமலேயே நடந்தனர். அந்த அமைதி நிலையை மாற்றும் வகையில், மார்த்தாண்டரே! ராஜ கிரீடம் திருட்டுப் போனதற்குப் பிறகு, அங்கிருந்து யாரையும் வெளியே அனுமதிக்கவில்லை என்று கூறினீரே! ராஜகுருவுக்கு முதலில் செய்தி எப்படி எட்டியது?'' என்று கேட்டார்.

PDF ISLAM

''அது முதலில் எனக்கே தெரியாது ! நம்பீஸ்வரர் தன்னுடைய ஆட்களில் ஒருவரை ரகசியமாக அனுப்பியிருக்கிறார். நான் விசாரணையை முடித்துக்கொண்டு தங்களிடம் வருவதற்கு முன் இது நடந்திருக்கிறது''

''காவல் ஏற்பாடுகளை எப்படிச் செய்தீர்கள் !''

''தங்களுடைய ஆணைப்படி முழு அளவில் செய்திருந்தேன். விருந்தினர் மாளிகையைச் சுற்றி ஒவ்வொரு வாசலிலும் காவலர்கள் நிறுத்தப்பட்டிருந்தனர். கண்காட்சி சாலைக்குள், நம்பீஸ்வரர் மேற்பார்வையில் ஒற்றர்களை நியமனம் செய்து, அரபுகளின் நடவடிக்கைகளை கவனிக்கச் செய்திருந்தேன்'' எல்லா ஏற்பாடுகளையும் முறையாகச் செய்துவிட்டே நான் என் இல்லத்துக்குச் சென்றேன்.''

''கிரீடம் திருட்டுப்போன தகவல் உங்களுக்கு எப்போது கிடைத்தது ?''

''பிந்திய ஜாமக் கடைசியில் ஒரு காவலர் வந்து என்னை எழுப்பிச் சொன்னார்!''

''மேற்கொண்டு நடந்ததை ஒரு சிறு விஷயம் கூட விடாமல் சொல்லுங்கள் !'' என்றார் மூத்த அமைச்சர் சேது பத்திரவர்மா. அதன்படி, தான் மாளிகைக்கு விரைந்து சென்றதையும், நம்பீஸ்வரரிடம் விசாரணைகள் மேற்கொண்டதையும் விபரமாகச் சொன்னார் மார்த்தாண்டபூபதி.

''நீங்கள் இதுவரை கூறியதிலிருந்து, நீங்கள் எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டு, முதல் ஜாமத்தின் மத்தியிலேயே வீடு திரும்பிவிட்டீர்கள் ! அதன் பிறகு நம்பீஸ்வரர் தொடர்ந்து இருந்து மற்ற ஏற்பாடுகளைச் செய்துவிட்டு பிந்திய ஜாமம்வரை இருந்துவிட்டு அவர் வீடு திரும்பி இருக்கிறார். இதற்கிடையில், முதல் ஜாமக் காவலர்கள் மாறி இரண்டாம் ஜாமக் காவலர்கள் வந்து உத்தியோகத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

PDF ISLAM

இந்த மாற்றம் நேரும்போது நீங்கள் அங்கு இல்லை. நம்பீஸ்வரர்தான் இருந்திருக்கிறார் கிரீடம் திருட்டுப்போனச் செய்தியை அவருடைய ஒற்றர்களுக்குத்தான் முதலில் தெரிந்திருக்கிறது ! அவர்களில் ஒருவர் அவரிடம்தான் முதலில் போய்ச் சொல்லியிருக்கிறார். அவர் மாளிகைக்குத் திரும்ப வந்து உங்களுக்கு ஆளனுப்பிய பிறகுதான் நீங்கள் அங்கு சென்றுள்ளீர்கள் ! அப்படித்தானே என்றார் மூத்த அமைச்சர்.

அவர் மேலும் தொடர்ந்து, ''முதல் ஜாமத்தில் நீங்கள் வீடு திரும்புவதற்குள் அரபு விருந்தாளிகளின் வேண்டுகோளுக்கிணங்க வேலைக்காக இரு அரபியரை, கடலோர சத்திரத்திலிருந்து அழைத்து வந்துவிட்டீர்கள்! நீங்கள் வீடு திரும்பிய பிறகு, அவர்களில் ஒருவர் வெளியே வந்து தங்கள் எஜமானர்களுக்கு மாமிசம் தேவை என்றும் அதை, கடலோர சத்திரத்துக்குப் போய் எடுத்து வர வேண்டும் என்றும் அனுமதி கேட்டிருக்கிறார். அவருடன் நம் காவலாளி ஒருவரும், ஒற்றர் பிரிவைச் சேர்ந்த ஒருவரும் கூடச் சென்றிருக்கிறார்கள், அரபு வேலைக்காரர் அவர்களுடன் சென்று சிறிது நேரத்தில் ஒரு பாத்திரத்துடன் திரும்பி வந்தார். அதன் பிறகு அரபுகள் யாரும் வெளியே வரவில்லை ! அப்படித்தானே ?'' என்று கேட்டார் மூத்த அமைச்சர்.

''நான் வீடு திரும்பிவிட்டதால் இந்த விஷயம் எதுவும் எனக்குத் தெரியாது ! நம்பீஸ்வரர்தான் கூறினார். அவருடைய மேற்பார்வையில்தான் இது நடந்துள்ளது ! அவர் சொன்னதைத்தான் நான் உங்களிடம் சொன்னேன் !'' என்றார் மார்த்தாண்டர்.

''ஓ ! நான் அதை நினைவில் வைத்திருக்கிறேன் ! நீங்கள் நம்பீஸ்வரரிடம், அந்த அரபு வேலைக்காரர்களுடன் பாது காப்புக்காகச் சென்ற, உங்கள் காவலர் ஒருவரையும் அவருடைய ஒற்றர் ஒருவரையும் விசாரிப்பதற்காக, அவர்

PDF ISLAM

கள் எங்கே?'' என்றும் கேட்டீர்கள்! உங்கள் காவலர் முதல் ஜாம வேலையை முடித்துவிட்டு வீடு திரும்பிவிட்ட தாகவும், அவருடைய ஒற்றர் ''போனவர் இன்னும் திரும்பவில்லை'' என்றும்கூறப்பட்டது ! அப்படித்தானே?'' என்று கேட்டார் சேதுபத்திரர் !

''ஆமாம் ! அமைச்சர் பெருமானே ! என்றார் மார்த் தாண்டர்.

''காவலர்கள் மாற்றப்பட்டது போல இரண்டாம் ஜாமத்தில் ஒற்றர்களும் மாற்றப்பட்டுள்ளார்கள் அல்லவா ?'' என்று சேதுபத்திரர் கேட்க, ''ஆமாம் ! அப்படித் தான் நம்பீஸ்வரர் சொன்னார் '' என்று பதிலளித்தார் மார்த்தாண்டர்.

''சரி ! நாம் மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுக்கு முன் முதலில், முதல் ஜாமத்தில் அந்த அரபி வேலைக்காரருடன் சென்ற உங்கள் காவலரை அவசரமாக இங்கே என் முன் கொண்டு வரச் சொல்லுங்கள்'' என்று சேதுபத்திரர் கூறவும்,அதே சமயம் ஒரு காவலர், அவசரமாக ஓடிவந்து நிற்கவும் சரியாக இருந்தது.

அந்தக் காவலர், மார்த்தாண்டர் காதில் ஏதோ ரகசியமாகக் கூறவே, அவர் திடுக்கிட்டு ''மகாப் பிரபு ! அந்தக் காவலரை யாரோ சிறிது நேரத்துக்கு முன்பு கொலை செய்துள்ளார்கள்'' என்று பதறியவாறு கூறினார்,

இந்தச் செய்தியைக் கேட்டு மூத்த அமைச்சர் சேது பத்திரர் கொஞ்சமும் பதற்றம் அடையவில்லை, மிகச் சர்வ சாதாரணமாக, ''யார்? எப்போது? எப்படிக் கொன்றார் களாம்?'' என்று தகவல் சொல்லவந்த காவலரை நோக்கிக் கேட்டார்.

''அவர் முதல் ஜாமக்காவலை முடித்துவிட்டு வீட்டுக்கு வந்து தாமதமாகச் சாப்பிட்டு விட்டு உலாவுவதற்காகச்

PDF ISLAM

இறிது வெளியே வந்துள்ளார். அந்த நேரத்தை எதிர் பார்த்துப் பதுங்கியிருந்த யாரோ, அவரைப் பிடித்து வாயில் துணியைத்திணித்து சப்தம் வராமல் செய்து வயிற்றில் கத்தியால் குத்திக் கொன்றுள்ளார்கள். வீட்டில் உள்ளவர்கள் சிறிதளவு கூட சப்தம் கேட்கவில்லை என்று கூறுகிறார்கள். வெளியே சென்றவர் வெகு நேரமாகக் காணோமே என்று அவர்கள் வெளியில் வந்து பார்த்த போதுதான், வீட்டுக்குப் பக்கத்திலேயே அவர் ரத்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருப்பதைக் கண்டனர். அவர் மனைவி போய் தூக்கும்போது அவரால் முழுவதும் பேச முடியவில்லை. ''கிரீடம்... கிரீடம்... வேணு ... வேணு ...'' என்று மட்டும் நான்கு சொற்களைச் சொல்லி விட்டு உயிர் துறந்துள்ளார். அவர்களுக்கு ஒரு விபரமும் விளங்கவில்லை'' என்று அந்தக் காவலர் கூறினர்.

சேது பத்திரர் நீண்ட ஆலோசனையில் இருந்தார்.

மார்த்தாண்ட பூபதி அந்தக் காவலரை நோக்கி, ''நீ போ! நான் சிறிது நேரத்தில் அங்கு வருகிறேன்'' என்று கூறிவிட்டு, சேதுபத்திரரின் அடுத்தக் கட்டளைக் காக காத்திருந்தார்.

சேதுபத்திரர் அமைதியாக, ''வேணு என்பவன் யார்?'' என்று கேட்டார்,

''அவன் ஒற்றர் படையில், அதன் தலைவர் நம்பீஸ வரருக்கு வலது கையாக விளங்குபவன். மாளிகையிலிருந்த அரபுக்காரர்கள் தங்களுக்கு வேலைக்கு இரு ஆட்கள் வேண்டும் என்று கூறிய போது நம்பீஸ்வரர், அந்த வேணுவையும், இப்போது இறந்து போன காவலரையும் தான் அனுப்பி வைத்ததாகக் கூறினர். கிரீடம் மறைந்த தைப் பற்றி நான் விசாரணை மேற்கொண்ட போது, அந்த வேணுவைப் பற்றித்தான் விசாரித்தேன். அவன் இன்னும் திரும்பவில்லை என்று சாதாரணமாக நம்பீஸ்வரர்

PDF ISLAM

கூறினர். வேலைக்காக வந்த அரபுகளுடன் இப்போது இறந்து கிடக்கும் அந்தக் காவலாளிமட்டும்தான் திரும்பினர்'' என்ருர் மார்த்தாண்டர்.

''அரபு விருந்தினர்களின் நிலை என்ன?''

''அவர்கள் இரவு முழுவதும் மாளிகையிலிருந்து வெளியே வரவில்லை'' என்றும் பொழுது விடியும் நேரத்தில் தான் அவர்களின் அறையில் ஏதோ சலசலப்புகள் கேட்டன என்றும் நம்பீஸ்வரர் கூறினர்.''

''நம்பீஸ்வரர் எங்கே?''

''இப்போது மாளிகையில்தான் இருப்பார்; நான் தங்களைச் சந்தித்து விட்டுத் திரும்பும் வரை யாரையும் மாளிகையை விட்டு வெளியே செல்ல அனுமதிக்கக் கூடாது என்று நான் தலைமைக்காவலருக்கு உத்திரவிட்டு விட்டு வந்துள்ளதால், அவரையும் வெளியே செல்ல அனுமதித்திருக்க மாட்டார்.''

''உங்களுடைய அந்த உத்திரவு நம்பீஸ்வரர் விஷயத்திலும் கண்டிப்பாக அமல் நடத்தப்பட்டிருக்குமா?''

''நிச்சயமாக நம்பலாம் என் தலைவரே!''

''அது மட்டும் உறுதியாக நடந்து விட்டிருந்தால், நமது வேலை மிகவும் எளிதாக முடிந்து விடும்! இல்லா விட்டால் மேலும் சில சங்கடங்களுக்கு நாம் ஆளாக நேரிட்டு விடும்'' என்று கூறிய சேதுபத்திரர், ''நீங்கள் நேரே சென்று நம்பீஸ்வரரை மாத்திரம் இங்கே அழைத்து வாருங்கள்: நாம் மூவரும் கூடிப்பேசி ஒரு முடிவுக்கு வருவோம்'' என்று கூறினர் சேது பத்திரர்.

''உத்திரவு! எங்கள் தலைவரே!'' என்று கூறி விட்டு, மார்த்தாண்டபூபதி, விருந்தினர் மாளிகையை நோக்கி வேகமாக விரைந்தார்.

PDF ISLAM

அவர் சென்ற சிறிது நேரத்தில், நம்பீஸ்வரருக்கு பதிலாக காவலர் தலைவரோடு திரும்பி வந்தார். சேது பத்திரருக்கு ஒன்றும் புரியவில்லை. 'என்ன?' என்று கேட்பது போல வியப்புடன் அவரை நோக்கினார். அதற்கு பதில் சொல்லும் விதத்தில் காவலர் தலைவன், மூத்த அமைச்சருக்கு மரியாதை செய்து விட்டு, ஆரம்பத்தில் நம்பீஸ்வரரும் அவருடைய ஒற்றர்களும் வெளியே செல்ல முயற்சித்ததிலிருந்து, தனக்கும் அவருக்கும் நடந்த வாக்கு வாதத்தை விளக்கி, அவரைத் தடுத்து நிறுத்தி வைத்திருந்ததாகவும், திடீரென ராஜகுரு தனது சீடர்களில் ஒருவரை அனுப்பி, நம்பீஸ்வரரை அழைத்து வர நேரடியாக உத்திர விட்டதனால், ராஜகுருவின் ஆணையை மீற தைரியம் இல்லாமல் அவரை மட்டும் அனுப்ப முயற்சித்த போது, அவர் என்னைக் கடுமையாக எதிர்த்துப் பேசிவிட்டு, தன்னுடைய இதர ஒற்றர்களையும் அழைத்துச் சென்று விட்டார்'' என்று பயந்தவாறு கூறினார்.

''சரி! உம்மீது குற்றமில்லை! இது எவ்வளவு நேரத்துக்கு முன்பு நடந்தது?'' என்று கேட்டார் சேதுபத்திரர்.

எங்கள் தலைவர் மார்த்தாண்டர் தங்களைச் சந்திக்க வந்த சிறிது நேரத்துக்கெல்லாம் இது அடுக்கடுக்காக நடந்து விட்டது பிரபு!'' என்று பதிலளித்தார் தலைமைக் காவலர்.

''சரி! அரபு விருந்தினர்களின் நிலை என்ன?'' என்று கேட்டார் சேதுபத்திரர்,

''அவர்கள் பொழுது விடிவதற்கு சிறிது நேரத்திற்குமுன் தான் தங்கள் அறைக் கதவைத் திறந்தனர் வேலையாள் ஒருவர் வந்து அவர்கள் தங்கள் சாமியை வணங்குவதற்கு முன் கை, கால்களைச் சுத்தம் செய்ய வேண்டுமாம்! அதற்குத் தண்ணீர்வேண்டும்'' என்றார்கள், ''போதிய தண்ணீர்

PDF ISLAM

மாளிகைக்கு உள்ளேயே இருக்கிறதே !'' என்றேன். ''அந்தத் தண்ணீர் போதாது என்றும், மிக அதிகமான தண்ணீர் வேண்டும் என்றும் மேலும் காலைக் கட்ன்களை முடிக்க வேண்டும்'' என்றும் கூறினார்கள். ஆதலால், நான்கு காவலர்களுடன், நமது தோட்டத்தில் ஓடும் கால்வாய்ப் பக்கம் அனுப்பினேன். அவர்கள் சிறிது நேரத்தில் முகம், கை கால்களைக் கழுவிவிட்டு, மீண்டும் மாளிகைக்கு வந்துவிட்டார்கள்'' என்றார் தலைமைக் காவலர்.

''அவர்கள் ஐந்துபேரும் இரண்டு வேலைக்காரனுமாக ஏழுபேராயிற்றே ! அந்த ஏழு பேரும் மாளிகைக்குத் திரும்பி விட்டதை நீர் கவனமாகப் பார்த்தீரா ?'' என்று கேட்டார் சேதுபத்திரர்.

''மிக கவனமாகப் பார்த்தேன் பிரபு ! அந்த ஏழு பேருமே திரும்பிவிட்டார்கள்'' என்றார் தலைமைக் காவலர்.

''அவர்களுடைய பேச்சு நடவடிக்கைகள் ஆகியவற்றி லிருந்து, ஏதாவது சந்தேகம் உம் மனதில் தோன்றியதா?'' என்று சேதுபத்திரர் கேட்க, ''அப்படி யெல்லாம் எதுவும் தோன்றவில்லை பிரபு'' என்று பதில் கூறினார்,

''சரி ! நீர் போய், அந்த அரபு விருந்தினர்கள் எப்படி யெல்லாம் சுதந்திரமாக நடக்க விரும்புகிறார்களோ அப்படி யெல்லாம் அனுமதியும் ! கிரீடம் திருட்டுப்போன விஷயத்தில் நாம் அவர்களையும் சந்தேகப்படுகிறோம் என்று கொஞ்சம்கூட அவர்கள் மனதில் இலேசம் ஏற்பட்டுவிடாதவண்ணம் நீர் மிக மிக ஜாக்கிரதையாக நடந்துக்கொள்ளும் ! அவர்களின் நடவடிக்கை எதுவொன்றிலும் நீர் குறுக்கிட்டு விடாதீர்'' என்று சேதுபத்திரர் தலைமைக் காவலரிடம் கூறி அவரைப் போகச் சொல்லிவிட்டு, மார்த்தாண்ட பூபதியை நோக்கி, ''நாம் இப்போது மிக அபாயகரமான சூழ்நிலையில் சிக்கிக்கொண்டிருக்கிறோம் ! நீங்கள் முதலில்

PDF ISLAM

கொல்லப்பட்ட அந்தக் காவலருடைய வீட்டுக்குப் போய், கொலை செய்யப்பட்ட இடத்தை நன்றாக ஆராயுங்கள்! ஒரு நபர்தான் கொலை செய்துள்ளாரா அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் வந்து கொலை செய்துள்ளார்களா என்பதை மிக முக்கியமாக ஆராய வேண்டும். ஏனெனில், வீரரான அந்தக் காவலரை சப்தம் வெளியே வராமல் ஒரு நபரால் கொன்றிருக்க முடியாது; மேலும் ஈமக் கடன்களுக்கு ஆணையிட்டுவிட்டு, உங்களுக்கு மன்னர் பிரான் நேரடியாக உத்திரவிட்டது போல, மன்னரவர்கள் அந்த அரபு விருந்தினர்களைச் சந்திக்குமுன் எந்தக் காரணத்தாலும் யாரையும் சந்திக்க விடாதீர்கள்! மறந்துவிடாதீர்கள்! நானோ அல்லது ராஜகுரு அவர்களோ சந்திக்க முற்பட்டாலும்கூட அதற்கு அனுமதிக்க உங்களுக்கு உத்திரவில்லை'' என்றார்.

கொல்லப்பட்ட காவலர் இல்லத்துக்கு படைத் தலைவர் மார்த்தாண்ட பூபதி சென்றடைந்தபோது, பொழுது நன்றாகப் புலர்ந்து, கீழ்த்திசை சூரிய ஒளியும் பூமியில் பாய ஆரம்பித்துவிட்டது. அவர் இறந்தவர் குடும்பத்துக்கு ஆறுதல் கூறி ஈமக் கடன்களைச் செய்ய உத்திரவளிக்குமுன், பிணமாக வைக்கப்பட்டிருந்த காவலரின் உடம்பை மிகவும் கூர்ந்து கவனித்தார். அவர் இறந்து கிடந்தபோது வாயில் அடைக்கப்பட்டிருந்த துணி, அவர் பிணத்தின் சமீபத்திலேயே கிடந்ததைக் கண்டுபிடித்து அதை வேறொரு துணியில் சுற்றி எடுத்துக்கொண்டார். பிணத்தின் கழுத்தை அவர் கவனித்தபோது, அதில் ஒரு கயிறு படிந்திருந்த ஆழமான அடையாளம் இருப்பதையும், அடி வயிற்றில் கத்தியால் குத்தப்பட்ட பாகம் நீங்க, உடம்பில் பல இடங்களில் காயங்கள் ஏற்பட்டிருப்பதையும் கண்டார்.

அதன் மூலம், கொலை செய்த ஒரு நபரோ அல்லது இரு நபர்களோ முதலில் அவர் கழுத்தில் ஒரு கயிற்றைச் சுற்றி இறுக்க முனைந்து, காவலர் அதைக் கழட்டிக்கொள்ள போராடியுள்ளார் என்பதையும், அதன் பிறகே அவர்

PDF ISLAM

வாயில் துணியைத் திணித்து அவரைக் கொல்ல முயலப் பட்டுள்ளது என்பதையும், இந்தக்கொலையை ஒருவர் செய்திருக்க முடியாது என்பதையும் புரிந்துகொண்டார். பிணத்தை எரிப்பதற்கான ஆணைகளைப் பிறப்பித்துவிட்டு அவர் வெளியே வந்து, கொலை செய்யப்பட்ட இடத்தைப் பரிசோதித்தார். அவருக்குக் கிடைத்த நல்ல வாய்ப்பு. மாலையில் சிறிது நேரம் பெய்த மழையாக அமைந்துவிட்டது. கொலை செய்யப்பட்ட இடத்தில், ஏழெட்டுக் காலடிச் சுவடுகள் நன்றாகப் பதிந்திருந்தன. அங்கு போராட்டம் நடந்துள்ளதற்கு அடையாளமாக மண் கிளறப்பட்டிருந்தது. இறுதியில் மூன்று ஜதை காலடிகள், அங்கிருந்து ஓடியுள்ள கால் பதிவுகள் தெளிவாக இருந்தன.

அந்தக் காலடிகளைத் தொடர்ந்து மார்த்தாண்ட பூபதி மெதுவாக நடந்துகொண்டே சென்றார். அவை சிறிது தூரம் சென்றபின், கடலோரத்தை நோக்கித் திரும்பிச் சென்றிருந்தன. கடற்பகுதியை அடைந்தவுடன் அங்கு பூமியில் சரியான ஈரப்பசை இல்லாத காரணத்தாலும், மேலும் பல காலடிகளின் ஆழமான பதிவுகள் நிறைந்திருந்ததாலும், பதிவு அடையாளங்களைத் தொடர முடியாமல் போய்விட்டது. அதற்கு சிறிது தூரத்தில் தான் கடலோரப் பயணிகளின் விடுதி இருந்தது. அங்கு தான் அரபுகளுடன். கப்பல் செலுத்திவந்த மற்ற நபர்கள் தங்கியிருந்தனர்.

சிறிது தூரத்தில் நின்றபடி அந்த விடுதியை நோக்கினார். அந்த வெளியே, அப்பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் சிலர் கூடி நின்று, கைகளை உயர்த்தி ஏதோ கூச்சல்கள் போட்டுக்கொண்டிருந்தனர் அங்கு ஏதோ விபரீதம் நடந்துள்ளது என நினைத்த மார்த்தாண்ட பூபதி வேகமாக அங்கு விரைந்தார்.

பா: 5.

PDF ISLAM

அவர்வருவதைக் கண்டவுடன் அங்கு திடீரென அமைதி நிலவத் தொடங்கியது. ஆச்சரியத்தோடு, அவர் நெருங்கிப் பார்த்தபோதுதான், அங்கு எந்தக் குழப்ப மும் இல்லை என்பதும் மீனவர்கள் பலர் தங்கள் அன்பளிப் பாக, அரபுக் கப்பலோட்டிகளுக்கு மீன்களைக் கொண்டு வந்திருந்தனர் என்பதும் அவர்களின் மீன்களைப் பெற்றுக் கொண்ட அரபியர்கள் அவர்களுக்குக் கோதுமை ரொட்டி களைச் சுட்டுக் கொடுத்துக் கொண்டிருந்தனர் என்பதும் இந்த ரொட்டிகளை ஏற்கனவே தின்று பார்த்திராத மீன வர்கள் தங்கள் வீடுகளுக்குக் கொண்டுபோக, மேலும் சில ரொட்டிகளைக் கேட்டுக் கொண்டிருந்தனர் என்பதும் புரிந்தது. அவையெல்லாம்வற்றையும்விட ஆச்சரியமாக, ரொட்டிக்கான மாவு பிசைவதில் மீனவர்கள் சிலரையும் சேர்த்துக் கொண்டு, சம அந்தஸ்துடன் சமையலில் ஈடுபட்டிருந்த காட்சி அவரைத் திகைக்க வைத்தது.

தளபதியும் படை அமைச்சருமான மார்த்தாண்ட பூபதியைக் கண்டவுடன் மீனவர்கள் தலைகுனிந்து மரியாதை செய்துவிட்டு, ஆனால் ஒதுங்கிக்கொள்ளாமல் சமமாக நின்று, உள்ளே அழைத்து ஆசனமொன்றில் அமரக் கேட்டுக் கொண்டனர், அவரும் அங்கு ஏதாவது துப்பு கிடைக்குமா என்ற நோக்கத்தில் அவர்களின் மரியாதையை ஏற்று அங்குள்ள ஆசனமொன்றில் அமர்ந்தார். உடனே இரு அரபியர், சுடச்சுட ஒரு ரொட்டியை தட்டில் கொண்டு வந்து அவர் முன் நீட்டினர். அந்த ரொட்டியின் மணம் அவர் மூக்கைத் துளைத்தது பசியாலும், கவலையாலும் கலைத்திருந்த அவர் அதை வாங்கிச்சாப்பிடலாம் என்று நினைத்தாலும், கீழ் ஜாதியினரான மீனவர்களும் சேர்ந்து மாவு பிசைந்ததைக் கண்ட அவரால், அதைப் பெற்று உண்ண மனம் வர வில்லை. ஆதலால் மறுத்து விட்டார். அரபுகள் மீண்டும் உள்ளே சென்று, ஒரு தட்டில் சில பேரீச்சம் பழங்களையும்,

PDF ISLAM

சில வாழைப் பழங்களையும் கொண்டுவந்து மரியாதையாக முன் வைத்தனர். இப்போது அதை மறுக்க முடியாத மார்த்தாண்டர், அவற்றை எடுத்துச் சாப்பிடத் தொடங்கினர். அதைக் கண்டு அரபுகள் மகிழ்ச்சியடைந்தது போலவே, ஒரு பக்கம் ஒதுங்கி அமர்ந்திருந்த மீனவர்களும் தங்கள் ஆனந்தத்தை முகத்தால் வெளிப்படுத்தினர். அரபுகள் ஒரு வெள்ளி கோப்பையில் கொடுத்த பாலையும் அவர் ஆட்சேபிக்காமல் வாங்கி உட்கொண்டார்.

எனினும், அவருடைய கண்கள் அங்குள்ள சுற்றுச் சூழ்நிலையைத் துருவி ஆராய்ந்துகொண்டிருந்தன. சந்தேகத்துக்கிடமான ஏதாவது தடயங்கள் கிடைக்குமா என்று அவர் சிந்தனை தீவிரமாக இயங்கிக்கொண்டிருந்தது. ஆயினும், அவர்களிடையே எந்தவொரு புதிய நிகழ்ச்சியும் நிகழ்ந்த உணர்வை அவரால் காணமுடியவில்லை.

சிறிது நேரம் அங்கு அமர்ந்திருந்த அவர் மீனவர்களுக்குச் சைக்கினைக் காட்டி அவர்களை யெல்லாம் அங்கிருந்து போகும்படி கூறினர். அதோடு, ''விருந்தினர்களுக்கு நாம் தொல்லைகள் கொடுக்கக்கூடாது'' என்று உரத்தக் குரலில் உத்திரவும் இட்டார். அவர்கள் எந்த வார்த்தையும் கூறாமல் அங்கிருந்து கலையத் தொடங்கினர்.

ஆனால் அரபுகளில் அங்கு தலைவர்போல் இருந்த ஒருவர் ''மகாப் பிரபு! எங்களை மன்னிக்க வேண்டும்! அவர்கள் எங்களுக்கு எந்தத் தொல்லையும் கொடுக்கவில்லை அதற்கு மாருக அவர்கள் எங்களோடு அன்புடன் பழகியதுடன். உதவி செய்பவர்களாகவும் இருந்தனர்'' என்று தமிழில் கூறினர். அப்படிக் கூறியவர் மிகச் சிவந்த மேனியுடையவராகவும், அழகாகவும், வெள்ளை முழு ஆடை அணிந்தவராகவும் காணப்பட்டார்.

அவர் தெளிவாகத் தமிழ் பேசியதைக் கண்டு வியப்புற்ற மார்த்தாண்டர் ''நீங்கள் இவ்வளவு அழகாகத் தமிழ் பேசுகிறீர்களே! அது எப்படி?'' என்று கேட்டார்.

PDF ISLAM

''எங்களில் இன்னும் ஐந்துதாறுபேர் தமிழ் பேசக்கூடியவர்களாவர், மேலும் ஐந்தாறு நபர்கள் பேசினால் விளங்கிக்கொள்ளக்கூடியவர்களாகவும் இருப்பதற்குக் காரணம் ஏற்கனவே இரண்டு மூன்று தடவைகளுக்கு மேலாக இந்நாட்டுக்கு வந்து தங்கியிருந்து போயிருப்பதுதான் என்றார் அவர்''

''ஒகோ ! அப்படியா? மிக்க மகிழ்ச்சி ! அவ்விதம் தமிழ் பேசத் தெரிந்தவர்கள் புரிய முடிந்தவர்கள் அனைவரையும் அழையுங்கள் ! நான் அவர்களைத் தெரிந்துகொள்ள வேண்டும்'' என்றார் மார்த்தாண்டர்.

அதைக் கேட்ட அவர் அரபி மொழியில் ஏதோ உரத்துக்கூற, சுமார் ஏழெட்டு நபர்கள் அங்கு வந்து கூடினர். தலைவர்போல் காணப்பட்ட அந்த அரபி, ''அர்க்கம் இப்னு மாலிக்'' என்று தன்னை அறிமுகம் செய்துகொண்டு, மற்ற ஒவ்வொருவர் பெயரையும் மார்த்தாண்டருக்குக் கூறினார். ஆனால் அவரால் எந்தப் பெயரையும் புரிந்துக்கொள்ள முடியவில்லை. அவர்களில் சிலர் கறுப்பாக இருந்தனர். சிலர் சிவப்பாக இருந்தனர்.

''நீங்கள் சிலர் கறுப்பாகவும் சிலர் சிவப்பாகவும் இருக்கிறீர்களே ! நீங்கள் அனைவரும் ஒரே ஜாதிக்காரர்களா ? அல்லது வெவ்வேறு ஜாதியினரா ?

''எங்களிடையே ஜாதியில்லை ! நாங்கள் அனைவரும் முஸ்லிம்கள் !''

''அரண்மனை மாளிகையில் தங்கி இருப்போருக்கு நீங்கள் அனைவரும் கீழ்ப்பட்ட ஜாதியினரா ?''

''இல்லை ! அவர்களும் எங்களைப்போன்று முஸ்லிம்களே !''

''அப்படியானால் அவர்களின் அடிமைகளா ? வேலைக்காரர்களா ?''

PDF ISLAM

''எங்களில் அடிமைகளுமில்லை! வேலைக்காரர்களும் இல்லை அனைவருமே வியாபாரத்தில் பங்காளிகளேயா வோம்! ஆனால் அவர்கள் பெரிய பங்குதாரர்கள்! நாங்கள் தகுதிக்கு தக்கவாறு பங்காளிகள்! எங்களில் சொற்ப முதல் போட்டவர்களும் இருக்கிறார்கள். வெறும் உழைப்பை முத லாகக்கொண்டவர்களும் இருக்கிறார்கள். இந்த ஒப்பந்தத் தின் அடிப்படையில்தான் நாங்கள் கடல் வாணிபம் செய்கி றோம். இது சமீப காலமாக நாங்கள் கைக்கொள்ளும் தொழில் முறையாகும். ஆனால் இதற்கு முந்திய நிலை அப் படியில்லை. ''இந்த முறை, எங்கள் நபி முஹம்மது ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மக்கா வெற் றிக்குப் பிறகு சமீப காலத்தில் ஏற்பட்டது''

''உங்களில் கறுப்பாக இருப்பவர்களுக்கும் சிவப்பாக இருப்பவர்களுக்கும் என்ன வித்தியாசம் என்று மார்த்தாண் டர் கேட்டபோது, இரு வண்ணத்தாரும் ஒருவரைப் பார்த்து மற்றொருவர் சிரித்துக்கொண்டனர். அரை குறை யாகத் தமிழ்ப் பேசத் தெரிந்த ஒரு கறுப்பர் முன் வந்து, ''எங்கள் நபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், சிகப்பர்களுக்கு அடிமைகளாக இருந்த கறுப்பு இனத்தவரை உயர்த்தி, சமமாக்கிவிட்டார்கள். ஆதலால் எங்களிடம் நிறம் காரணமாக எந்த வித்தியாசமுமில்லை; மேலும் தொழில் காரணமாக உயர்வு தாழ்வில்லை'' என்று தட்டுத் தடுமாறி சிரித்துக்கொண்டே கூறினார்.

''மிக்க மகிழ்ச்சி!'' என்று முகத்தில் புன்சிரிப்புத் தவழ்ந்தவாறு கூறிய மார்த்தாண்டர், திடீரென்று, ''இன்று இரவு நீங்கள் நிம்மதியாக ஓய்வெடுத்தீர்கள் அல்லவா?'' என்று கேட்டார்,

''இயற்கையிலேயே இன்பம் தரும் இந்த பூமியில், கருணைமிக்க அரசரும், அன்புமிக்க படைத் தளபதியாகியத்

PDF ISLAM

தாங்களும் இருக்கும்போது எங்கள் நிம்மதியான ஓய்வுக்கு என்ன இடையூறு இருக்கப் போகிறது !'' என்றார் மாலிக்.

அதையும் கேட்டு சிரித்தவாறு, ''இரவு நேரத்தில் எந்தவிதமான சந்தேகத்துக்கும் இடமுள்ள சப்தங்கள் எதுவும் கேட்கவில்லையே ?'' என்றார் மார்த்தாண்டர்,

அரபுகள் அனைவரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள். அந்தக் கேள்வியை ஒருவர் அரபு மொழியில் கூறினார். எல்லோருடைய தலைகளும் இல்லை என்பதற்கு அடையாளமாக அசைந்தன.

''முந்திய நேரத்தில். உங்களில் ஒருவரை மாளிகைக்கு அழைத்துச் செல்ல இருவர் வந்தார்களல்லவா ? அதன் பிறகு உங்களில் யாரேனும், வெளியே சுற்றிப்பார்க்கச் செல்லவில்லையா ?'' என்று மிகச் சாதாரணமாக விசாரிப்பதைப்போல் கேட்டார் மார்த்தாண்டர்.

அதற்கும் அரபுகள் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர். இந்தக் கேள்வியையும் மாலிக் அரபு மொழியில் மற்றவர்களைப் பார்த்துக் கேட்டார். அதற்கும் அனைவரும் தலையை அசைத்து, ''இல்லை'' என்று சைக்கினைக் காட்டினர்.

அதோடு மாலிக் மார்த்தாண்டரை நோக்கி, ''இரவு எங்களில் இருவரை அழைத்துச் செல்ல வந்தவர் ஒரு காவலர்தானே ! நாங்கள் இருவர் என்று குறிப்பிட்டீர்களே ! என்று திருத்தம் சொன்னபோது, 'மற்றொருவர் சாதாரண உடையில் வரவில்லையா ?' என்று தளபதி வியப்புடன் கேட்க, அவர்கள் ''இல்லையே; ஒரேயொரு காவலர் மட்டும் தான் வந்தார் !'' என்று உறுதியாகக் கூறினர்.

''அப்படியானால் வேறு?'' என்று தனக்குள் கேட்டுக் கொண்ட மார்த்தாண்டர், அவர்களிடம் விடை

PDF ISLAM

பெற்றுக்கொண்டு விருந்தினர் மாளிகையை நோக்கி வேகமாக விரைந்தார்.

விருந்தினர் மாளிகை மிகவும் அமைதியாக இருந்தது. காவலர்கள் ஆங்காங்கே உரிய இடங்களில் நின்று கொண்டிருந்தனர். அரபு விருந்தினர்கள், மாளிகைத் தோட்டத்தின் ஒரு பக்கத்தில் நடந்தவாறு, ஒவ்வொரு செடியையும் பார்ப்பதும் அதன் இலைகளில் ஒன்றிரண்டைப் பிய்ப்பதும். அவற்றை முகர்ந்து பார்ப்பதுமாக, ஏதோ அரபியில் பேசிக் கொண்டு, மெதுவாக நடந்து கொண்டிருந்தனர்.

தூரத்தில் இருந்தவாறே அவர்களைச் சிறிது நேரம் கவனித்த மார்த்தாண்டருக்கு அவர்களின் கள்ளங்கபடமற்ற தோற்றம், இவர்கள் கிரீடத்திருட்டில் சம்பந்தப் பட்டிருப்பார்கள் என்று நினைப்பதுகூட சங்கடமாக இருந்தது. அவர்கள் ஒரு பலா மரத்தினடியில் நின்று, அதன் வளர்ச்சியை ஆச்சரியத்தோடு உற்று நோக்கியவர்களாகவும், மரத்தின் கைக்கெட்டிய தூரத்தில் காய்த்துத் தொங்கிய சில பலாக்காய்களை ஒருவர் மாறி ஒருவர் தொட்டுப் பார்த்து ஏதோ அதிசயமாகப் பேசிக் கொள்வதும் மார்த்தாண்டருக்கே வேடிக்கையாக இருந்தது. ஒரு பெரிய திருட்டு நடந்துள்ளதற்கான எந்த வித பரபரப்போ சந்தேக சூழ்நிலையோ அங்கு நிலவவில்லை.

மார்த்தாண்டரைக் கண்டவுடன், காவலர் தலைவன் ஓடி மரியாதை செய்து நின்றான். அவனிடம் ஏதாவது புதிய தகவல் உண்டா?'' என்று அவர் கேட்டபோது, ''ஒன்றும் அசம்பாவிதம் இல்லை! அரபியர்கள் தங்கள் அறையிலிருந்து வெளியில் வந்து, கடலோர மாளிகைக்குச் சென்று தங்கள் சகாக்களை சந்திக்க வேண்டுமென்றனர். அதற்கு நான், தாங்கள் வந்து கொண்டிருக்கிறீர்கள்

PDF ISLAM

என்றும், வந்து அழைத்துச் செல்வீர்கள் என்றும் கூறினேன். அவர்கள் அதை மகிழ்வோடு ஏற்றுக் கொண்டார்கள். இதற்கிடையில், அரண்மனையிலிருந்து, ஆறு சேவகர்கள், என்னென்னவோ பலகாரங்களைச் சுமந்து கொண்டு வந்து, மன்னர் பிரான் விருந்தினர்களுக்காக காலை உணவுப் பதார்த்தங்களாக அனுப்பியுள்ளார்கள் என்று கூறினார்கள். நானே கூட சென்று அவற்றைக் கொடுக்கச் செய்தேன். அவர்கள் அதைப் பெற்றுக் கொண்டு, மன்னர் பிரானுக்குத் தங்கள் நன்றியைத் தெரிவிக்கச் சொன்னார்கள். அவற்றை அவர்கள் சாப்பிட்டிருப்பார்கள் எனத் தெரிகிறது. சிறிது நேரம் கழித்து ஒவ்வொருவராக வெளியே வந்தார்கள். ஏழு பேர்களில் இரவு வேலையாட்களாக வந்த இருவர் மட்டும் உள்ளே இருக்கிறார்கள்'' என்றார்.

அத் தகவலைக் கேட்டுத் தலையை அசைத்துக் கொண்ட மார்த்தாண்டர், தன் முகத்தில் உள்ள கவலைகளையெல்லாம் மாற்றிக் கொண்டு, புன்சிரிப்பைத் தவழ விட்டவராய் அவர்களை நோக்கி நடந்தார். படைத் தளபதி தங்களை நோக்கி வருவதைக்கண்ட அரபுகள், தங்கள் பலாப்பழ ஆராய்ச்சியை விடுத்து விட்டு, அவரை நோக்கி வேகமாக வந்தார்கள், நடுவழியில் சந்தித்துக் கொண்ட போது ஐவரும் குனிந்து அராபிய முறையில் தங்கள் மரியாதையைச் செய்தார். தளபதியும் தங்கள் முறையில் மரியாதை செய்துவிட்டு நன்றாக தமிழ் பேசத் தெரிந்த முஸ்லிம் பின் அத்ஹம் அவர்களை நோக்கி, ''உங்கள் இரவு நிம்மதியாக அமைந்திருந்ததா?'' என்று கேட்டார்.

''அல்லாஹ் மிகக் கிருபையாளன்! மிகவும் நிம்மதியான தங்கும் இடத்தை எங்களுக்குக் கிடைக்கச் செய்தான். அதன் மூலம் உங்களுடைய மன்னர் பிரானின். மற்றும் உங்கள் மக்களின் மகத்தான அன்பையும் எங்

PDF ISLAM

களுக்கு பாக்கிய மாக்கினுன்! சிறிது முன் மன்னர் பிரான் அனுப்பிய உங்கள் நாட்டுப் பலகாரங்கள் மிகவும் ருசிகர மானவை! நாங்கள் எங்கள் ஆயுளிலும் அதுபோன்ற பலகாரங்களை சாப்பிட்டதில்லை. மேலும் அவற்றில் ஏராள மானவை மீதி இருக்கின்றன. எங்களின் நண்பர்களுக்கு அளித்தால் மிகவும் ஆனந்தப்படுவார்கள்; உங்களுடைய இந்தத் தோட்டம் உண்மையில் சொர்க்கலோகம் ஆகும்! என்று மூச்சு விடாமல் பேசத் தொடங்கிய அவரைக் குறிக்கிடும் முறையில், தோட்டம் இருக்கட்டும்! நீங்கள் தங்கியிருந்த மாளிகையில் அமைக்கப்பட்டுள்ள கலைக் கண்காட்சி அபூர்வப் பொருள்களைச் சுற்றிப் பார்த்தீர் களா?'' என்று திடீரென்று கேட்டு அவர்கள் முகங்களில் யாரிடமிருந்தாவது மாறுதல் வெளிப்படுகிறதா?'' எனக் கூர்ந்து கவனித்தார் மார்த்தாண்டர்.

யாருடைய முகத்திலும் எவ்வித மாறுதலும் தென் படவில்லை முஸ்லிம் பின் அத்ஹம் சிரித்த முகத்துடன் ''நாங்களிருந்த மாளிகையின் பகுதி அபூர்வப் பொருள் களின் கலைக்கண்காட்சி சாலையா? அது எங்களுக்குத் தெரியாதே! என்னைத் தளபதியவர்கள் மன்னிக்க வேண் டும்! அங்கு ஏதோ கெட்டுப்போன உபயோகமற்ற பொருள்களை போட்டு வைத்திருக்கின்றீர்கள் என்றல்லவா நினைத்தேன்'' என்றார்.

மார்த்தாண்டர் போலியாக முகத்தில் சிரிப்பைத் தவழ விட்டுக் கொண்டு ''நீங்கள் பல நாடுகளுக்குச் செல்கிறீர்களே அங்கெல்லாம், கலைப்பொருட்கள் பாது காப்புகளைப் பார்த்ததில்லையா?'' என்று கேட்டார்.

இந்தப் பேச்சை விளங்கிக் கொண்டவர்கள் போல், இவரும் ஒரே சமயத்தில் தலையை அசைத்து, ''இல்லை'' என்றனர்.

PDF ISLAM

''அப்படியானல் என்னுடன் வாருங்கள், முதலில் அதைப் போய்ப் பார்ப்போம்'' என்று கூறியவாறு மார்த்தாண்டர் முன்னே நடக்க ஐவரும் பின் தொடர்ந்தனர்.

அவர்களில் ஒரு அரபி, முஸ்லிம் பின் அத்ஹமை நோக்கி, ஏதோ கேட்க, அவர் அதை மொழி பெயர்த்துச் சொல்வது போல், ''கலைப்பொருட்கள் என்றால் என்ன?'' என்று தளபதியிடம் அத்ஹம் கேட்டார்.

''ஓ! அது கூட உங்களுக்குத் தெரியாதா? அவைகள் இந்நாட்டுப் பூர்வீக நாகரீகத்தையும், சரித்திரத்தையும் உணர்த்தும் எங்கள் முன்னோர்களின் பொருட்கள்! அவற்றில் இதற்குமுன் இந்நாட்டை ஆட்சிப்புரிந்த இரண்டாவது சேரமான் பெருமாள் அவர்கள் உபயோகித்த சாமான்கள் வரை சேகரிக்கப்பட்டுள்ளது'' என்றார் மார்த்தாண்டர்.

அதைப் புரிந்துக் கொண்டவர்களைப் போல் அனைவரும் தலையை அசைத்துக் கொண்டனர்.

கலைப் பொருள் கண்காட்சி சாலையின் நுழைவு வாயிலையொட்டி, வலது புறத்தில் இருந்த முதல் அறை தான் விருந்தினர் மாளிகையாகும், இடது புறத்திலிருந்து தான் காட்சிப் பொருட்கள் ஆரம்பமாகின்றன. அங்கிருந்து உள்ளே பல பிரிவுகள் உள்ளன. ஒவ்வொருரகச் சாமான்களின் சேகரிப்பு வரிசையாக அடுக்கப் பட்டிருந்தன.

நுழைவு வாயிலை யொட்டிய தொடக்கப் பிரிவில், பூர்வீக விக்ரகங்கள் பல வைக்கப்பட்டிருந்தன. அவை பெரும்பாலும் கற்களிலும் மரங்களிலும் செதுக்கப் பட்டவையாகும், அவற்றைத்தாண்டி உலோகங்களால் செய்யப்பட்டவை அடுக்கி வைக்கப்பட்டிருந்தன,

PDF ISLAM

அவைகளைப் பார்த்த முஸ்லிம் பின் அத்ஹம், ''இவை கள் உங்கள் கடவுள்களல்லவா ? கோயில்களில் வைக்கா மல் இங்கே ஏன் வைத்திருக்கிறீர்கள் ?'' என்று கேட்டார்.

அதற்கு பதில் சொல்வதற்கு மார்த்தாண்டருக்குச் சிறிது கஷ்டமாக இருந்தது. ஒருவாறு சமாளித்து, ''கோயில்களில் வேறு விக்ரகங்கள் உள்ளன. அவைகளே பூஜை செய்யப்படுகின்றன. இவை பழங்கால சிலைகள்! இவைகளை இங்கு மக்கள் பார்வைக்கு வைத்துள்ளோம் !'' என்றார்.

''அப்படியானால் காலத்துக்குக் காலம் கடவுள்களை நீங் கள் மாற்றி வைத்துக்கொள்வீர்களா ? என்று கேட்டார் அத்ஹம்.

'' கடவுள் வேறு! விக்ரகங்கள் வேறு! அதைப்பற்றிப் பிறகு உங்களுக்கு விரிவாகச் சொல்கிறேன்'' என்று மார்த்தாண்டர் கூறி விட்டு அவர்களைச் சிறிது வேகமாக அழைத்துச் சென்று காணாமற் போன கிரீடம் இருந்த இடத்தில் கொண்டுபோய் நிறுத்தினார்.

அரபியர்களில் யாருடைய முகங்களிலிருந்தாவது ஏதா வது மாறுதல்கள் தென்படுகின்றனவா என்று மார்த்தாண் டர் கூர்ந்து கவனித்தார். எந்தவொரு முகத்திலும் எவ்வித சிறு மாறுதலும் தென்படாதது மட்டுமல்ல, அவர்களில் ஒருவர் சர்வ சாதாரணமாக, கிரீடம் இருந்த கண்ணாடிப் பெட்டியைத் தொட்டுப் பார்த்துவிட்டு ''சீன தேசத்துக் காரர்கள் செய்த இதைவிட வேலைப்பாடுகள் உள்ள கண் ணாடிப் பொருட்களை நாங்கள் ஏற்கனவே முஹல்லத் தீவு மன்னர் அரண்மனையில் பார்த்து இருக்கிறோம்'' என்று அரை குறைத் தமிழில் உளறிக் கொட்டினார்.

''இந்தக் கண்ணாடிப் பெட்டியை நாங்கள் பார்வைக் காக வைத்ததில்லை. இதனுள்ளே முதலாம் சேரமான் பெரு

PDF ISLAM

மாள் மன்னரின் கிரீடம் இருந்தது. அது வைர வைடூரியங்களால் இழைக்கப்பட்டது; மிகவும் அற்புதமானது! விலை மதிக்க முடியாதது!'' என்றார் மார்த்தாண்டர்.

''அப்படியானால் அதை நாங்கள் பார்க்க விரும்புகிறோம்! தயவு செய்து அதை எங்களுக்கு காட்ட முடியுமா?'' என்று கேட்டார் முஸ்லிம் பின் அத்ஹம்.

''அது இரவு திருட்டுப் போய்விட்டது!'' என்று கூறிய மார்த்தாண்டர், மீண்டும் கூர்ந்து ஒவ்வொருவர் முகங்களையும் கவனித்தார்,

''அவர்கள் யாரும் அதை ஒரு பெரிய விஷயம்போல் கருதவில்லை என்பது அவர்கள் முகத்திலிருந்து வெளிப்பட்டது. முஸ்லிம் பின் அத்ஹம் மட்டும், ''இரவு என்றால் நாங்கள் இப்போது தங்கியிருந்த இரவா?'' என்று வியப்புடன் கேட்டார்.

''ஆமாம்!'' என்று பல்லைக் கடித்துக்கொண்டு அழுத்தந் திருத்தமாகக் கூறிய மார்த்தாண்டர், ''திருடனை கண்டு பிடிக்க பெரும் முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம். இன்று பொது அரசவை இல்லை. உங்களோடு உரையாட மட்டும், மன்னர் பிரானும், ராஜ குரு மகானும், மற்றும் சில முக்கிய அமைச்சர்களும், அரசவையில் கூடு கிறோம். அதற்கிடையில், கிரீடத்தையும் திருடர்களையும் நாங்கள் கண்டுபிடித்தாகவேண்டும்'' என்றார் அவர்.

''நாங்கள் தங்கியிருந்த இந்த இரவில் அந்த மகா கிரீடம் திருட்டுப்போனதற்காக நாங்கள் மிகவும் கவலை கொள்கிறோம். ஆயினும் இது தங்கள் நாட்டு விஷயம்; திருட்டு என்ற பேச்சே எங்கள் நாட்டில் மகா அருவெறுப்பானது. பயங்கரமானது அது எங்கள் நாட்டில் தலைவர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் அறவே ஒழுக்கப்பட்டுவிட்டது. திருட்டு என்று பேச்சே

PDF ISLAM

எங்கள் நாட்டில் காதில் விழாது !'' என்றார் முஸ்லிம் பின் அத்ஹம்.

மார்த்தாண்டர் அந்த இடத்தை விட்டு மெதுவாக நகர்ந்து, அவர்கள் பின்தொடர விருந்தினர் தங்கியிருந்த மாளிகையை நோக்கி நடந்துகொண்டே, ''நீங்கள் சொல்வது ஆச்சரியமாக இருக்கிறதே ! அது எப்படி ஏற்பட்டது'' என்று கேட்டார்.

''திருடினால், அதற்கு தண்டனை கையைவெட்டிவிடுவோம்,'' என்றார் அத்ஹம்.

இதைச் சொன்னவுடன் மார்த்தாண்டர் திடீரென நின்று அவர்களைத் திரும்பிபார்த்து ஆச்சரியம் தொனிக்க ''இது உண்மையா? யார் திருடினாலும் இதே தண்டனை தானா?'' என்று கேட்டு விட்டு, அவர்கள் அனைவரும் ஆமாம் என்று கூறுவதைக் கேட்டுக்கொண்டே, விருந்தினர் மாளிகையின் வாயலில் வந்து நின்று ''இரவு நீங்கள் அழைத்து வந்தவர்கள் உள்ளே இருக்கிறார்களா?'' என்று கேட்க மற்றவர்கள் 'ஆம்' என்று ஒப்புக் கொண்டனர்.

''அவர்கள் வேலைக்காரர்களா!'' என்று மார்த்தாண்டர் கேட்க, ''இல்லை! எங்கள் வியாபாரத்தின் மிகச்சிறு பங்காளிகள் அவர்கள் வேலை செய்வதற்கு ஒரு தனிப் பங்கு சேர்ந்துக்கொள்ளும்! நாங்கள் வேலை செய்தாலும் எங்களுக்கும் உழைப்புப் பங்கு தனியாகக் கிடைக்கும்'' என்றார் அத்ஹம்.

''அவர்களை நான் சந்திக்கவே இல்லையே!'' என்று மார்த்தாண்டர் கூற, பெருமைக்குரிய தாங்கள் உள்ளே வர சம்மதித்தால் அவர்களைச் சந்திக்கலாம்! அல்லது அவர்களை வெளியே அழைக்க விரும்பினாலும் அழைக்

PDF ISLAM

இரேும்'' என்று பதில் கூறப்பட ''இல்லை! இல்லை! நானே உள்ளே வருகிறேன்'' என்று மார்த்தாண்டர் கூறினர்.

அரபியர்களில் ஒருவர், மாளிகையின் அகண்ட கதவைத்தள்ளித் திறந்து, குனிந்து சைக்கினைச் செய்து உள்ளே வருமாறு அழைத்தார். மார்த்தாண்டர் உள்ளே நுழைந்தபோது அங்கு பாத்திரங்களைச் சுத்தம் செய்து கொண்டிருந்த இரு அரபியர்கள், உடனே எழுந்து நின்று மரியாதை செய்தார்கள்.

மார்த்தாண்டரும் அவர்களின், மரியாதையை போலி யான புன் சிரிப்புடன் ஏற்றுக்கொண்டு தன் கண்களை அந்த அறையைச் சுற்றி நோட்டமிட்டார். பார்வைப் படாத இடங்களில் சிறிது நடந்து கவனித்தார். அந்த விருந்தினர் மாளிகை என்பது நடுவில் ஒரு முற்றமும் நாற்புறமும் தாழ்வாரங்களும், நுழைவு வாயல் தவிர மற்ற மூன்று புறங்களில் கூடங்களும் உடையதாக இருந் தது. உள்ளே நுழைந்தவுடன் எதிரேயுள்ள தடுப்புப் பலகை அடைப்பைத்தாண்டி விட்டால், மாளிகையின் உள்பாகம் அனைத்தின் மீதும் பார்வை செலுத்தலாம்.

தனது வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளும் வகை யிலும் விருந்தினர்களுக்கான படுக்கை சவுகரியங்கள் சரி யாகச் செய்து கொடுக்கப்பட்டுள்ளதா என்பதை கவனிக் கின்ற பாணியிலும், மார்த்தாண்டர் உட்பக்கம் சிறிது நடந்து ஒவ்வொரு பகுதியிலும் தனது பார்வையைக் கூர்மையாகச் செலுத்தினர். தான் சந்தேகம்படும்படி எதுவும் தடயம் இல்லை என்று ஊர்ஜிதப் படுத்திக் கொண்ட பின், நீங்கள் உங்களுடைய மற்ற தோழர் களைச் சந்தித்து வர விருப்பம் தெரிவித்தீர்களே!'' என்று பேச்சைத் தொடங்கினர்.

''ஆமாம்! நாங்கள் கடந்த இரவு அரசாங்க மாளி கையில் விருந்தினராகத் தங்கியது, மன்னர் பிரான் அவர்களுடைய ஆணைக்கு மாறாக எதுவும் சொல்லக்

PDF ISLAM

கூடாது என்ற நோக்கம்தான்! நாங்கள் இவ்விதம் தங்குவதால், நாங்கள் மற்றவர்களை விட உயர்ந்தவர்கள் போலும் என்ற எண்ணம் தோன்றிவிடக் கூடும் என்று அஞ்சுகிறோம்! தமிழ் மொழி ஓரளவு பேசவும், மனசிலாக்கிக் கொள்ளவும் முடிந்தவர்கள் என்ற அடிப்படையில்தான் நாங்கள் ஐவர் தேர்ந்தெடுக்கப்பட்டு அரச அவைக்கு அனுப்பப்பட்டோமேயல்லது, நாங்கள் எங்கள் கூட்டத்துக்கு தலைவர்களோ அல்லது எஜமானர்களோ அல்ல! ஆதலால், நாங்கள் இனி பிரத்தியேக மரியாதையுடன் தனித்திருப்பது எங்கள் மத்தியில் மட்டுமல்ல, இங்குள்ள மக்கள் மத்தியிலும் தவறான எண்ணங்கள் ஏற்பட்டுவிட வாய்ப்பு ஏற்பட்டுவிடலாம், ஆதலால் நாங்கள் கடந்த ஒரு இரவு இங்கு தங்கியிருந்தது போக, இனிதொடர்ந்து கடலோரக் கட்டிடத்திலேயே நாங்கள் அனைவரும் ஒன்றாக இருக்க தாங்கள்தான் கிருபை செய்யவேண்டும்! மன்னர் பிரான் அவர்கள் தவறாக நினைத்துவிடாமல் இருக்க, தாங்கள்தான் அவர்களுக்கு விளக்கிச் சொல்லி, அவர்களைச் சமாதானப்படுத்த வேண்டும்'' என்று மிகவும் நயமாகக் கூறினார் முஸ்லிம் பின் அத்ஹாம்.

இதைக்கேட்டு, சிறிதுநேரம் யோசித்த மார்த்தாண்ட பூபதி, ''மன்னர் பிரான் இன்று முற்பகலில் உங்களைச் சந்திக்க நாடியுள்ளார். அதுவரை உங்களை மற்றவர்கள் யாரும் சந்திக்கக் கூடாது என எனக்கு உத்திரவிட்டுள்ளார் இந்நிலையில்...'' என்று கூறிக்கொண்டு வரும்போது, முஸ்லிம் பின் அத்ஹாம் குறுக்கிட்டு, ''அதன் பொருள் உங்களைச் சேர்ந்தவர்களின் சந்திப்பாக இருக்கலாம் என்று நினைக்கிறேன்! நாங்கள் எங்களுக்குள் சந்திப்பதற்கு மன்னர் பிரானின் தடையில்லை என்று நான் நினைப்பதற்கு அன்பு கூர்ந்து மன்னிக்க வேண்டும்'' என்றார்.

அப்படியானால் நீங்கள் தயவு செய்து இன்னும் கொஞ்ச நாழிகை பொறுத்துக்கொண்டு இங்கையே இருங்கள்! நான்

PDF ISLAM

எங்கள் மூத்த அமைச்சருடன் கலந்துக் கொண்டு வந்து தானே உங்களை அழைத்துச் செல்கிறேன்'' என்று மார்த்தாண்டர் கூற, அரபுகள் ஐவரும் அதற்கு சிறு ஆட்சேபனையும் சொல்லாமல், சிரித்த முகத்துடன் ஒப்புதல் அளித்தார்கள்.

அதோடு ''இந்த மரங்களின் பெயர்களைச் சொல்லவும் அவைபற்றிய விபரங்கள் கூறவும் எங்களுக்கு ஒருகாவலரை அனுமதித்து விட்டுச் சென்றீர்களானால் எங்களுக்கு நல்ல பொழுது போக்காகவும் இருக்கும்'' என்று முஸ்லிம் பின் அத்ஹம் கூற மற்றவர்களும் சிரித்துக்கொண்டு 'ஆம்' என்பது போல தலையை அசைத்தனர்.

அதைக் கேட்ட மார்த்தாண்டர் சிரித்துக் கொண்டு, நீங்கள் கேட்கும் விபரங்களை இந்நாட்டிலுள்ள ஒரு சிறு குழந்தையும் சொல்லும்!'' என்று கூறிவிட்டு. அங்கு தூரத்தில் நின்ற ஒரு காவலாளிக்கு சமிக்ஞை செய்ய அவர் சமீபத்தில் வந்தவுடன், அரபுகளுடைய விருப்பத்தை அவரிடம் கூறி, ஒத்துழைக்கும்படி கூறிவிட்டு, மூத்த அமைச்சர் சேதுபத்திரவர்மாவைச் சந்திக்க அங்கிருந்து விரைந்தார்.

அரபுகள் அனைவரும் தோட்டத்தை சுற்றிப் பார்ப்பதில் பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தபோது படைத்தளபதி மார்த்தாண்டர் மூத்த அமைச்சர் சேதுபத்திரவர்மாவின் இல்லத்தை அடைந்தார். அங்கு, ராஜகுரு ராமநம்பியைத் தவிர, மற்ற அனைத்து அமைச்சர்களும் கூடியிருந்தவர்.

மார்த்தாண்டரைக் கண்டதும் அவர்கள் அனைவரும் ஆர்வத்தோடு அவர் முகத்தை நோக்கினர். ஆதியிலிருந்து கிரீடம் திருட்டுப் போன விஷயம் அங்கு அனைவருக்கும் விளக்கப்பட்டுள்ளது என்றும், அதன் விபரத்தை அறிந்துக் கொள்ள எல்லோரும் ஆர்வத்தோடு உள்ளனர் என்பது

தெரிந்தது. அதை ஊர்ஜிதப்படுத்தும் விதத்தில், சேது பத்திரர் மார்த்தாண்டரை நோக்கி, ''அமருங்கள்! அமைதியாக விஷயத்தைச் சொல்லுங்கள்'' என்றார்.

''பாதுகாப்பு அமைச்சரும் படைத்தளபதியுமான மார்த்தாண்ட பூபதி, மிகவும் சோர்வடைந்த நிலையில், ''இந்தத் திருட்டில் அரபுகள் யாவரும் சம்பந்தப்பட்டில்லை என்று தெரிகிறது நம்மவர்களில் யாரோ தான் இதைச் சாமர்த்தியமாகச் செய்திருக்கிறார்கள் என்று நம்ப இடமேற்படுகிறது'' என்றார்.

''இவ்வளவு நாட்களாக இல்லாமல், அதுவும் போதிய காவல் கூட இல்லாத நிலையில் அதைத் திருடாமல், இப்போது உங்களுடைய காவலர்களும், ராஜகுரு நாதரின் ஒற்றர் படையினரும் கடுமையாகக் கண்காணித்துக் கொண்டிருந்த இரவில் கிரீடம் திருட்டு போயிருப்பது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறதே!'' என்றார் ஒரு அமைச்சர்.

''ராஜகுரு மகான் மகா திட்சண்ய புத்தியுடையவர்! அவர் அரபுகளைச் சந்தேகிக்கிறார். என்றால், அதில் ஓரளவாவது உண்மை இல்லாமல் இருக்காது. அவர்களுடைய இடங்களை யெல்லாம் சோதனைப் போட்டு விட்டீர்களா?'' என்று இன்னொரு அமைச்சர் கேட்டார்.

''மன்னர் பிரான் முகத்தில் நாம் எவ்விதம் விழிப்பது?' என்று கவலை தெரிவித்தார் பிறிதொரு அமைச்சர்.

மூத்த அமைச்சர் சேதுபத்திரர் வாய்திறக்கவில்லை மார்த்தாண்டரையே கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தார். மிகவும் களைத்துப் போனவராகக் காட்சி அளித்த அவர், தன் நெற்றியை இடது கைவிரல்களினால் அழுத்திக் கொண்டவாறு, ''இந்த கிரீடத் திருட்டில் ஒற்றர் படைத் தலைவர் நம்பீஸ்வரர் எந்தக் கவலையும் எடுத்துக் கொள்ளா

பா! 6.

PDF ISLAM

தது எனக்கு மிகுந்த கவலையாக இருக்கிறது. சேர்ந்து வேலை செய்யலாம் என்றுதான், நான் அவரை விருந்தினர் மாளிகையிலே சிறிது நேரம் இருக்கும்படி கேட்டுக் கொண்டேன், அவர் தான் வெளியேறிவிட்டதுமன்றி, தன்னுடைய ஆறு ஒற்றர்களில் மீதி இருந்த ஐவரையும் அழைத்துக் கொண்டு போய் விட்டார்!'' என்றார் மார்த்தாண்டர்.

''ஆறு பேரில் ஐவரை அழைத்துக் கொண்டு போய் விட்டால் மீதி ஒருவர்?'' என்று ஒரு அமைச்சர் கேட்டார்.

''அந்த ஒருவர்பெயர் வேணு! நம்பீஸ்வரருக்கு வலது கை போன்றவர்! ராஜ குரு மகானுல், நம்பீஸ்வரருக்கு அடுத்தபடியாக நம்பிக்கையுடையவர். அவர் காணமற்போய் விட்டார் எப்படி அவர் மறைந்தார் என்ற விபரத்தை ஓரளவேனும் சொல்லக்கூடியவர் என நான் நம்பிய என்னுடைய காவலாளியும், இன்று பொழுது விடிவதற்கு முன் படுகொலை செய்யப்பட்டு விட்டார். மூன்றுபேர்கள் சேர்ந்து அவரைக் கொலை செய்துள்ளனர் என்று தடயங்கள் காட்டுகின்றன. வேணுவின் நிலையும் அப்படி ஏதாவது ஆகியிருக்குமோ எனக் கவலையாக இருக்கிறது. அரபுகளில் இரு வேலையாட்களை அழைத்து வரச்சென்றவர்கள் இவர்கள் இருவரும்தான்!'' என்றார் மார்த்தாண்டர். மேலும் சிறிது நேரம் அவகாசம் எடுத்துக் கொண்டு, ''கடலோரத் தங்குமிடத்துக்கு என் காவலாளி அதாவது கொல்லப்பட்டவர் மட்டும் தான் சென்று அந்த இருவரையும் அழைத்து வந்துள்ளார். வேணு அங்கு போகவேயில்லை என்பதும் ஆச்சரியமாக இருக்கிறது'' என்றார்.

''நம்பீஸ்வரர் இதுபற்றி என்ன சொல்கிறார்?'' என்று கேட்டார் ஒரு அமைச்சர்.

''அவர் என்னோடு ஒத்துழைக்கவில்லை. அவருடைய சகாக்களும் ராஜகுருநாதரின் நேரடி அதிகாரத்துக்கு உட்பட்டவர்களாக இருப்பதால், பொதுவாகவே பல விஷய

PDF ISLAM

களில் என்னை மதிப்பதில்லை, அவர் விரும்பினால் என் வேண்டு கோளை ஏற்பார். விரும்பாவிட்டால் புறக்கணித்துவிடுவார். ஒருசமயம் ராஜகுரு நாதர் அவர்களே என் முன் நம்பீஸ் வரரை வைத்துக்கொண்டு, ''உமது ஆணைக்கும், படைக்கும் இவர் கட்டுப்பட்டவரல்ல! இவரும் இவருக்குக் கீழ் பணி யாற்றும் ஒற்றர்களும் என்னுடைய நேரடியான அதிகாரத் துக்கு உட்பட்டவர்கள் என்பதை மனதில் வைத்துக் கொண்டு நடந்துக் கொள்ளும்!'' என்று எச்சரித்துள்ளதால் அவர் விஷயத்தில் அநேகமாக நான் தலையிடாமலேயே நடந்து கொண்டு வருகிறேன்'' என்றார் மார்த்தாண்டர்.

''இதுபுதிய விஷயமல்ல! முதலாம் சேரமான்பெருமான் மன்னர் காலத்திலிருந்து ராஜகுருக்களுக்கு அளிக்கப்பட்ட தனி உரிமையாகும். ராஜாங்கத்துக்கு எதிராகவோ, ஆதர வாகவோ நடைபெறும் விஷயங்களை, அரசாங்க உடையில் லாத இந்த ஒற்றர்கள்தான் ரகசியமாக ஆராய்ந்தறிந்து ராஜகுருவிடம் தெரிவிப்பார்கள். அவர் அதை மன்னரிடம் தெரிவித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும், அந்த நிலையே இப்போதும் தொடர்ந்து நீடித்து வருகிறது'' என்று விளக்கம் கொடுத்தார் மூத்த அமைச்சர் சேதுபத்திரர்.

''அப்படியானால் வேணுவின் விஷயம்?'' என்று கேட் டார் தளபதி.

மூத்த அமைச்சர் இலேசாக சிரித்துக் கொண்டே, ''திருட்டுப்போன கிரீடத்தைவிட காணமற்போன வேணுவே அவர்களுக்கு முக்கியமான விஷயம்! அவரை உன் உதவியின்றி அவர்களே கண்டு பிடித்து விடுவார்கள்!'' என்றார்.

சில நிமிடங்கள் அனைவரும் அமைதியாக இருந்தனர். அந்த சமயம், மார்த்தாண்டர், மாளிகையிலுள்ள ''அரபு விருந்தினர்கள் தங்கள் சகாக்களுடன் போய்ச் சேர்ந்து

PDF ISLAM

கொள்ள விரும்புகிறீர்கள், உங்கள் ஆலோசனையைக் கேட்கத்தான் நான் இங்கு வந்தேன்'' என்றார்.

''தாராளமாக அனுமதியுங்கள்! அவர்கள் சுதந்திரத்தில் நீங்கள் தலையிட வேண்டாம்! அவர்கள் அனைவரும் இந்த அரசாங்கத்தின் விருந்தினர் என்பதையும், மன்னர்பிரான் அவர்கள் மீது மிகவும் அன்புகொண்டுள்ளார் என்பதையும் ஒருகணமேனும் மறந்துவிடாதீர்கள்! அவர்களுக்கு என்னென்ன உதவிகள் தேவைப்படுகின்றனவோ அத்தனையும் செய்யுங்கள். மக்களாலோ மற்றயாராலோ அவர்களுக்கு எந்த தீங்கும் தொல்லைகளும் நேராவண்ணம் பார்த்துக்கொள்ளுங்கள். அவர்கள் மீது நம் கண் எப்போதும் இருக்கவேண்டும் என்று நான் ஆரம்பத்தில் உங்களிடம் கூறியதன் பொருள் அதுதான்!'' என்றுகூறிய சேதுபத்திரர் ''நீங்கள் மிகவும் களைத்துப்போய் இருக்கிறீர்கள்! போய்ச்சிறிது ஓய்வு எடுங்கள்! காவலர்கள் இரண்டொருவரை விருந்தினர் மாளிகைக்கு அனுப்பி, அவர்களை அழைத்துச் சென்று அவர்களின் சகாக்களோடு சேர்ந்துகொள்ளச் செய்யுங்கள்'' என்றார்.

மார்த்தாண்டர் சிறிது தயங்கியவராக ''கிரீடம்......'' என்று இழுத்தார்.

அதைப்பற்றி நீங்கள் இதற்கு மேலும் உங்களைச் சிரமப்படுத்திக் கொள்ள வேண்டாம்! கிரீடம் மட்டு திருட்டுப் போகவில்லை! ஒருநபர் கொலையுண்டிருக்கிறார், இன்னொரு நபர் காணாமல் போயிருக்கிறார், இதில் ஏதோ மர்மங்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் மிகக்குறுகிய காலத்தில் அவிழ்த்துவிட முடியாது! இதற்குக் கால அவகாசம் ஏராளமாகத் தேவையுள்ளது!'' என்று மிகவும் பொறுமையாகக் கூறினார் சேதுபத்திரர்.

''மன்னர் அவை கூடும்போது...'' என்று மார்த்தாண்டர் கவலையோடு கேட்கவே, ''நீங்கள் அதைபற்றிக் கவலைப்

PDF ISLAM

படவேண்டாம்! நான் ராஜகுருநாதரிடமும் மன்னரிடமும் இது பற்றிப் பேசி, அவர்களுடைய யோசனைகளையும் கேட்டுக்கொள்கிறேன். இனி மன்னர் பிரானிடம் உண்மையை மறைப்பதில் பிரயோஜனமில்லை'' என்றார் சேதுபத்திரர்.

மார்த்தாண்டருக்கு பெரிய பாரம் இறக்கப்பட்டதைப் போல் இருந்தது. ஓரளவு திருப்தியுற்றவராய், தன்னுடைய இரு காவலர்களிடம், நீங்கள் விருந்தினர் மாளிகைக்குப் போய் அங்குள்ள அரபிகளை அழைத்துச் சென்று அவர்கள் குழுவில் விட்டுவிடுங்கள்'' என்று பணிந்தார். அவர்களும் உடனடியாக அங்கு விரைந்தனர்.

அமைச்சர்கள் அனைவரும் அங்கிருந்து எழுந்து விடை பெறத் தொடங்கினர். தானும் விடைபெற்று ஓய்வெடுக்க தன் இல்லத்துக்குப் புறப்படத் தயாரானார்.

அப்போது திடீரென இரண்டு காவலர்கள், மேல் மூச்சு வாங்க ஓடிவந்தனர். ''ஐயா! கடலோர கட்டிடத்தில் தங்கியுள்ள அரபுகளுக்கும் நமது ஒற்றர் படையைச் சேர்ந்த சிலருக்கும் கைகலப்பு நேர்ந்துள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது. ஒற்றர் படைத் தலைவர் நம்பீஸ்வரர் காயப்பட்டுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது'' என்று கூறினர்,

ஒற்றர் படைத் தலைவருக்கும், அவர் சகாக்களுக்கும் கடலோர மாளிகையில் அரபுகளுடன் மோதல் ஏற்பட்டுள்ளது என்ற செய்தியைக் கேட்ட அமைச்சர்கள் அனைவரும் திடுக்கிட்டுவிட்டனர் ''அது என்ன புதுக் குழப்பம்?'' என்று ஒருவருக்கொருவர் ஆச்சரியத்துடன் கேட்டுக்கொண்டனர்.

மூத்த அமைச்சர் சேதுபத்திரர், கொஞ்சமும் பதற்றமின்றி, மார்த்தாண்டரைக் கூர்ந்து நோக்கினார். ஓய்வு எடுக்கச் செல்லப் புறப்பட தயாராக இருந்த அவர்: தன்

PDF ISLAM

னுடைய களைப்பையும் பொருட்படுத்தாமல், ''மேற்கொண்டு...'' என்று வார்த்தையை நீட்டி, ''நான் என்ன செய்யவேண்டும்?'' என்ற சொல்லை கேட்காமலேயே கேட்டார்.

தகவல் சொல்ல வந்த காவலாளியை சேது பத்திரர் நோக்கி. ''கலவரம் நடந்த இடத்திலிருந்து நேராக வருகிருயா?'' என்று கேட்க, அவன் ''இல்லை! ஒற்றர்களில் ஒரு நபர், என்னிடம் கூறி உடனடியாக உங்களுக்குத் தகவலை எட்ட வைக்கச் சொன்னார்'' என்றான்.

அமைச்சர்களில் ஒருவர் ஆத்திரப்பட்டு, ''என்ன இருந்தாலும் நம் நாட்டுக்கு வியாபாரத்துக்காக வந்த அவர்களுக்கு நம்முடைய நபர்களைத் தாக்க தைரியம் ஏற்பட்டது சாதாரண விஷயமல்ல! இதற்கு மிகவும் கடுமையான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும்'' என்று ஆத்திரத்துடன் கூறினார்.

''ராஜகுருநாதரின் காதுக்கு இச் செய்தி எட்டினால், அத்தனை அரபுகளையும் கழுவிலேற்றிவிட ஆணையிட்டு விடுவார்'' என்றார் இன்னொரு அமைச்சர்.

தயவுசெய்து இதில் நீங்கள் யாரும் பதட்டமடைய வேண்டாம்! குற்றம் புரிந்தவர்கள் யாரும் நம்மிடமிருந்து தண்டனை பெறாமல் தப்ப முடியாது. நான் அதற்கான முழு ஏற்பாடுகளையும். இன்னும் சில நாழிகையில், மன்னரின் அவை கூடுவதால். அதற்கிடையில் முழு தகவலையும் அறிந்துகொண்டு நான் அங்கு வந்துவிடுகிறேன். நீங்கள் விடைபெறலாம்'' என்று அமைச்சர்களிடம் கூறி அவர்களை வழியனுப்பி வைத்தார் சேதுபத்திரர். ஆனால், மார்த்தாண்டர் மட்டும் அங்கு நின்றுகொண்டிருந்தார்.

மற்றவர்கள் அனைவரும் போனவுடன் ''அந்த அரபுகளை பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'' என்று கேட்க

PDF ISLAM

மார்த்தாண்டர் தான் சிறிது நேரத்துக்கு முன்பு அவர்களைச் சந்தித்த விபரங்களைக் கூறி, ''அவர்கள் இங்கு வியாபாரத்துக்கு வந்துள்ளவர்களே தவிர வம்பை விலைக்கு வாங்கிக் கொண்டு போக வந்தவர்களல்ல! சாதாரண ஏழை மக்களிடம்கூட மிகவும் கனிவாக அவர்கள் நடந்துகொள்ளக் கூடியவர்களாகவே காணப்பட்டனர். என்னோடு சேர்ந்து ஒத்துழைக்காத நம்பீஸ்வரர் ஏன் தன்னுடைய ஆட்களுடன் அங்கு சென்றார் என்பதுதான் எனக்குத் தெரியவில்லை'' என்றார்.

சேதுபத்திரர் சிறிது யோசித்துவிட்டு, ''ஒரு விஷயத்தை நன்றாக நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்! ராஜகுருவின் அனுமதியின்றி அவர் எதுவும் செய்யமாட்டார். ஆதலால் இந்தப் பிரச்னையில் ராஜகுருவின் ஈடுபாடு ஒவ்வொன்றிலும் உள்ளது என்பதை மனதில் கொண்டு நீங்கள் மிகவும் எச்சரிக்கையாகச் செயல்பட வேண்டும். ஒரு சிறு விஷயத்தில் தவறு செய்துவிட்டீர்களானால், அது உங்கள் தலைக்கே ஆபத்தாக வந்துமுடியும்!'' என்றார்.

''தங்களுடைய ஆணையின்படியும் வழிகாட்டலின் படியுமே நான் இயங்குகிறேன். உங்களைவிட உயர்ந்தவர்கள், மேலானவர்கள் எனக்கு யாருமில்லை'' என்று உணர்ச்சி பொங்கக் கூறினார் மார்த்தாண்டர்.

''இப்படி பகிரங்கமாக இன்னொரு சமயத்தில் எங்கும் கூறிவிடாதீர்கள்! நம் அனைவருக்கும் உயர்ந்தவர், மேலானவர் நமது மன்னர் பிரானே ஆவார். அவருடைய செங்கோல் இந்த நாட்டில் நிலைத்து நிற்க நாமெல்லாம் எந்த தியாகத்தையும் செய்ய தயாராக இருக்க வேண்டும். இந்தச் சேர நாட்டு மன்னர் பரம்பரையினருக்கு ஏற்பட்ட ஆபத்துக்கள் எதுவும் சோழ நாட்டிலிருந்தோ, பாண்டிய நாட்டிலிருந்தோ வேறு எந்த பிற நாட்டிலிருந்தோ வந்ததில்லை. உள் நாட்டிலிருந்தேதான் தோன்றியுள்ளது. ஆதலால்

PDF ISLAM

நாம் மிக மிக எச்சரிக்கையுடன் செயல்படவேண்டும்'' என்றார் சேது பத்திரர்,

''இப்போதுள்ள நிலையில் நான் மேற்கொண்டு என்ன செய்யவேண்டும்'' என்று கேட்டார் மார்த்தாண்டர்,

'':நீங்கள் மிகவும் களைத்துப்போய் இருக்கிறீர்கள் ! நான் சொன்னதுபோல வீட்டுக்குப் போய் சிறிது ஓய் வெடுத்துவிட்டு அரசவைக்கு வந்து சேருங்கள் ! காவல் படைத் தலைவரை மட்டும் என்னை வந்து சந்திக்கச் செய்யுங் கள் ! மற்ற காரியங்களை யெல்லாம் நான் கவனித்துக் கொள்கிறேன்'' என்று மிகவும் சாதாரணமாக கூறியது மார்த்தாண்டருக்கே ஆச்சரியமாக இருந்தது.

பொதுவாக, அரசவை கூடுவதற்கு முன்னால், மன்ன ருடைய இல்லத்தில் ராஜகுரு உட்பட, அமைச்சர்கள் அனைவரின் ஒரு சந்திப்பு நடைபெறுவது வழக்கம். அதில் அன்று அவையில் எடுத்துக்கொள்ளவேண்டிய முக்கிய பிரச்னைகள் குறித்து கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வது வாடிக்கையாகவுள்ளது. இந்தச் சந்திப்புக்கான ஏற் பாட்டை அரசரே செய்வார். தனது மெய்க் காவலர்களை அனுப்பி. அந்த ஆலோசனைக் கூட்டத்துக்கான நேரத்தை அவர் அறிவிப்பார். அதன்படி அனைவரும் வந்துகூடி விவா திப்பர்.

அன்றைய அரசவைக் கூடுவதற்குரிய நேரம் நெருங்கிக் கொண்டிருந்ததும், ஆலோசனைக் கூட்டத்துக்கான அழைப்பு மன்னரிடமிருந்து யாருக்கும் கிடைக்காமலிருந்தது அனைவருக் கும் ஆச்சரியமாக இருந்தது, அதோடு அரசருடைய மெய்க் காவலர்களில் ஒருவர் வந்து, ''முதல் நாள் நிகழ்ச்சி யினால் மன்னர் மிகவும் களைத்துப்போய் இருப்பதாகவும் ஆலோசனைக் கூட்டம் நடைபெறவில்லை என்றும் அரசவையில்

PDF ISLAM

யும் உச்சிப் பொழுதுக்குச் சிறிது முன்பாக வைத்துள்ள தாகவும் தெரிவித்துச் சென்றதும் வியப்பாக இருந்தது.

இந்தத் தகவல் கிடைத்ததும்கூட ராஜகுரு ராமநம்பி தான் அவசரமாக மன்னரைச் சந்திக்க சிறிது நேரம் அவகாசம் கேட்டுத் தூது அனுப்பியும் மன்னருடைய செயலாளர், ''மன்னர் அயர்ந்து தூங்கிக்கொண்டிருப்பதாகவும், அவரே எழுந்திருக்கும்வரை அவரை எழுப்ப அனுமதியில்லை'' என்று மறுத்துச் சொல்லியனுப்பியது ராஜகுருவுக்கே அதிர்ச்சியும், அவமானமும் ஆத்திரமாகவும் இருந்தது. ஏனெனில் இதற்கு முன்னால் ஆட்சி செய்த எந்த மன்னரும், ராஜகுருவின் வருகைக்கு எந்த நேரத்திலும் ஆட்சேபனைகள் செய்ததில்லை அது மட்டுமல்ல, இரண்டாம் சேரமான் பெருமாளும் இடையில் நான்காண்டு காலம் ஆட்சி புரிந்தமார்த்தாண்ட வர்மாவும், ''ராஜகுரு சந்திக்க விரும்புகிறார்'' என்று சொன்னால் அவருடைய மடாலயத்துக்கு அவர்களே வருகைத் தரக்கூடிய மரியாதையை அவர் பெற்றிருந்தார். இம்முறை அவர் பெற்றது முற்றிலும் புதிய அனுபவமேயாகும்.

ஆனால் இதில் முத்த அமைச்சர் சேதுபத்திரர் தப்பித்துக்கொண்டார். அவர் மன்னரின் ஆலோசனைக் கூட்டத்துக்கு முன்னே, மன்னரைச் சந்தித்து கிரீடம் திருட்டுப் போன விஷயத்தையும் அது சம்பந்தமாக நடந்துள்ள விஷயத்தையும் விளக்கிக் கூற நினைத்திருந்தார், ஆனால் மன்னருடைய மெய்க் காவலர்களில் ஒருவர் வந்து தகவல் சொன்னவுடன். அதற்கு முற்றிலும் தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டு அமைதியாக இருந்துவிட்டார்.

மார்த்தாண்ட பூபதியின் ஆணைப்படி தலைமைக் காவலர் வந்து அவரைச் சந்தித்தபோது, நீங்கள் சில வீரர்களுடன் சென்று, கடலோரக் கட்டிடத்தில் நடந்துள்ள விஷயத்தை கவனியுங்கள்! நம்பீஸ்வரரும் அவருடைய

PDF ISLAM

சகாக்களும் ஏதாவது ஆபத்தான நிலையில் இருந்தால் அவர்களை மீட்டு விடுங்கள்! ஆனால் ஜாக்கிரதை! எந்தக்காரணத்தாலும் நீங்கள் அரபு விருந்தாளிகளிடம், முரட்டுத்தனமாக நடந்து கொண்டு விடாதீர்கள்! அவர்கள் எண்ணிக்கையில் அதிகம் மட்டுமல்ல மன்னர்பிரானால் அங்கீகரிக்கப்பட்டவர்கள். பேச்சு வார்த்தைகளிலேயே நீங்கள் காரியத்தை வெற்றிகரமாக முடித்து விட்டு வரவேண்டும். என்று விளக்கிக்கூறி அனுப்பி வைத்தார்.

தலைமைக்காவலருடன், கடலோரக் கட்டிடத்துக்குச் சென்ற சிறிய படையினருக்கு எந்தச்சிரமமும் ஏற்படவில்லை, அவர்கள் எதிர்பார்த்ததைவிட காரியங்கள் வெகு சுலபமாக முடிந்து விட்டன.

அரசாங்க உடையுடன் வந்த அவர்களை கண்டவுடன், அரபிகள் அனைவரும் அமைதியுடன் எழுந்து நின்று, தங்கள் வழக்கப்படி மரியாதை செய்து, தலைமைக்காவலரை வரவேற்று அவர் அமரும்படி வெளியிலேயே ஆசனமளித்தனர். அங்கு அமைதியான சூழ்நிலையைக் கண்டதும் அவருக்கே ஆச்சரியமாக இருந்தது. அங்கு ஏதோ குழப்பம் நடந்தது போல் எந்த வித அடையாளமும் இல்லை.

தலைமைக்காவலர் அரபிகளைநோக்கி, ''சிறிது நேரத்துக்கு முன்பு இங்கு ஏதோ குழப்பம் நடந்ததாகவும், எங்கள் மக்களில் சில நபர்களை நீங்கள் தாக்கியதாகவும் எங்கள் மூத்த அமைச்சருக்குச் செய்தி கிடைத்ததை யொட்டி அது பற்றி விசாரித்து வரச்சொன்னார்'' என்று அவர் சொல்லிக் கொண்டிருந்தபோது, அரசாங்க விருந்தினர் மாளிகையில் இருந்த அரபிகள் ஐவரும், சில காவலர்களுடன் அங்கு வந்து சேர்ந்து தலைமைக் காவலருக்கு மரியாதைசெய்தனர். அவர்களைக் கண்டவுடன் தலைமைக்காவலர் தனது ஆசனத்திலிருந்து எழுந்துகொண்டார். அவர்கள் எவ்வளவோ வற்புறுத்தியும் இப்போது அவர் ஆசனத்தில் அமரவில்லை.

PDF ISLAM

முஸ்லிம் பின் அத்ஹம் தன் சகாக்கள் அனைவரையும், தரையிலேயே அமரச் செய்துவிட்டு தனக்கு ஒரு ஆசனத்தைக் கொண்டுவரச் சொல்லி, தலைமைக்காவலர் ஆசனத்துக்கு எதிரே போடச் சொல்லி, தானும் அமர்ந்துக் கொண்டு, ''நாங்கள் உங்களுக்கு என்ன பணி செய்ய வேண்டும்?'' என்று அமைதியாகக் கேட்டார்.

தலைமைக்காவலர், தான் ஆரம்பத்தில் கூறியதைத் திருப்பிக் கூறினார். முஸ்லிம்பின் அத்ஹமும் அவருடன் வந்த மற்ற நால்வரும் ஆச்சரியப்பட்டு, கடலோரக் கட்டிடத்தில் இருந்த ஒருவரை அழைத்து, ''இங்கு என்ன நடந்தது?'' என்று கேட்டார்.

அவர் முஸ்லிம் பின் அத்ஹமை நோக்கி, அரபி மொழியில், ''எந்த ரகசியமும் வேண்டாம்! நடந்த உண்மைகளை தலைமைக்காவலர் மற்றும் காவலர்கள் முன் பகிரங்கமாகவே சொல்லி விடுங்கள்! ரகசியப்பேச்சு வீணான சந்தேகத்தை உண்டாக்கி விடும்!'' என்று கண்டிப்பான குரலில் கூறினார்,

அங்கிருந்த அரபிகளில் ஏற்கனவே படைத்தளபதி மார்த்தாண்ட பூபதியுடன் தமிழில் பேசியவரே முன் வந்து, ''கொஞ்ச நேரத்துக்கு முன்னால் படைத்தலைவர்கள் இங்கு வந்து எங்களுடன் உரையாடி, எங்கள் சவுகரியத்தை விசாரித்துச் சென்றார், அவருடைய பெருந்தன்மையையும், எளிமையான குணத்தையும் கண்டு நாங்கள் பெருமைப் பட்டுக் கொண்டிருந்த சிறிது நேரத்தில் எங்கியிருந்தோ திடீரென ஆறு முரடர்கள் கையில் ஆயுதங்களுடன் நுழைந்து, நாங்கள் அரசாங்க ஒற்றர்படையைச்சேர்ந்தவர்கள்! நீங்கள் அனைவரும் எங்களுக்குக் கட்டுப்பட்டு நடந்து கொள்ள வேண்டும்! இங்கு நாங்கள் சோதனைபோட வந்திருக்கிறோம் என்றனர். எங்களுக்கு அவர்கள்மீது சந்தேகம் ஏற்பட்டு விட்டது! அவர்கள் கொள்ளைக்காரர்கள் என்பதைப்புரிந்துக் கொண்டோம்! நம்முடைய வர்த்தகப் பொருட்களைக் கொள்ளையடித்துச் செல்லவே அவர்கள்

PDF ISLAM

தந்திரம் செய்ளுர்கள் என்பதை அறிந்து, நாங்கள் மிகவும் தந்திரமாக அவர்களைச் சுற்றிவளைத்துப்பிடித்து விட்டோம். அவர்களில் தலைவனுக காணப்பட்ட ஒரு நபர்தான் கொஞ் சம் முரட்டுதனம் செய்தான்! அவனையும் அடக்கிவிட் டோம்'' என்ருர்.

காவலர் தலைவர் உடனே, ''எங்கே அவர்கள்?'' என்று கேட்க, அவர்களை உள்ளே கட்டிப்போட்டு அடைத்து வைத் திருக்கிறேம்'' என்ருர் அவர்.

இந்தச்செய்தி முஸ்லிம் பின் அத்ஹமுக்கும் அவருடன் வந்த மற்ற நால்வருக்கும் கூட புதியதாக இருந்தது, ஆத லால் அவர் குறுக்கிட்டு, ''எங்களுக்கு உடனடியாகத்தகவல் ஏன் அனுப்பவில்லை?'' என்று கேட்டார்.

''இது நடந்ததே சிறிது நேரத்துக்கு முன்புதானே! இனி மேல்தான் உங்களுக்கு ஆள் அனுப்ப வேண்டும் என்று இருந் தோம்'' என்று கூறினுர் அவர்.

காவலர் தலைவர் உடனே. தன்னுடன் வந்த காவலர் களை ஏவி ''அவர்களை இங்கே இழுத்து வாருங்கள்!'' என்று உத்திரவிட்டார் அவர்களுடன் அரபிகள் சிலரும் உள்ளே சென்றனர்.

சிறிது நேரத்தில், ஆறுபேர்கள் வாயில் துணியடைச்கப் பட்டு பின்கைகள் கட்டப்பட்டவர்களாக வெளியே கொண்டு வரப்பட்டனர் அவர்களில் ஒருவர் தலையில் மட்டும் இலேசான இரத்தம் கசிந்துக்கொண்டிருந்தது.

அந்த நபரைக்கண்டவுடன் காவலர் தலைவர் திடீரென எழுந்துநின்று மரியாதை செய்ததோடு உடனடியாக எல் லோருடைய வாயிலும் உள்ள துணிகளை அகற்றும்படியும், கட்டுகளை அவிழ்க்கும்படியும் உத்திரவிட, உடனடியாக அவ் விதம் செய்தனர்.

PDF ISLAM

காயப்பட்ட நபரைக்கண்ட முஸ்லிம் பின் அக்ஹமும் அவருடனிருந்த மற்ற நான்கு பேரும் அவருக்கு மரியாதை செய்தனர். காவலர் தலைவர் தனது ஆசனத்தை அவருக்கு அளித்து அமரும்படி கேட்டுக் கொண்டு, அவர் எழுந்து நின்று கொண்டார். இதைக்கண்ட மற்ற அரபிகளுக்கெல்லாம் ஆச்சரியமாக இருந்தது. ஏதோ தவறு செய்துவிட்டோம் என்று புரிந்து கொண்டவர்களாக, முகம்மாறி ஒதுங்கி நிற்கத் தொடங்கினர்.

முஸ்லிம் பின் அத்ஹத்துக்கு கூட அவரை யார் என்று சரியாகத் தெரியவில்லை காவலர் தலைவர் மரியாதை செய்ததையொட்டி அவரும் மரியாதைக் காட்டினர். அதோடு ''மன்னிக்க வேண்டும்! தங்கள் தலையில் ஏற்பட்டுள்ள காயத்துக்கு எங்களிடம் அபூர்வ மருந்து உள்ளது. அதைக் கொண்டு ஒரு தடவைத் துடைத்தால், தங்களுக்கு எந்தக் கஷ்டமும் இருக்காது, புண்ணும் ஆறி விடும்!'' என்று மரியாதையோடு சொன்னர்.

''உங்கள் மருந்தும் வேண்டாம்! நீங்களும் வேண்டாம்! நீங்கள் காட்டுமிராண்டிதனமான ஓநாய்கள்! அதோடு சரியான நரித்தனமும் உள்ளவர்கள்; உங்களை இந்த பூமியில் கால் வைக்க அனுமதித்ததே பெரியதப்பாகி விட்டது! எங்கள் ராஜகுரு உங்களை புரிந்து கொண்டதைப்போல் எங்கள் மன்னர் புரிந்துக் கொள்ளவில்லையே என்பதுதான் எங்கள் கவலையெல்லாம்! உங்கள் அனைவரையும் பழிக்குப்பழி வாங்காமல் விடமாட்டேன்!'' என்று ஆத்திரத்துடன் இரைந்து காவலர் தலைவரை நோக்கி, ''முதலில் இவர்களிள் தலைவர்களான ஐந்துபேரையும் பிடித்துக் கட்டி ராஜகுருவின் சந்நிதானத்துக்குக் கொண்டு வாருங்கள்?'' என்று, அப்போது தான் விருந்தினர் மாளிகையிலிருந்து வந்த முஸ்லிம் பின் அத்ஹத்தையும் மற்ற நால்வரையும் சுட்டிக் காட்டினர். ''அதோடு என்னைத் தலையில் அடித்த அந்தக் கறுப்பு

PDF ISLAM

காட்டுமிராண்டி பயலையும் கட்டி இழுத்து வாருங்கள்!'' என்று ஆத்திரத்தோடு அலறினர்.

முஸ்லிம் பின் அத்ஹமும், மற்ற நால்வரும் அமைதியாகவே நின்றனர். இதர அரபு கப்பலோட்டிகளில் தமிழ் தெரிந்தவர்கள் மற்றவர்களிடம் அரபு மொழியில் அதன் பொருளைச் சொன்னபோது அனைவருடைய முகங்களும் கோபத்தால் சிவந்தன.

இந்த சூழ்நிலையினை நன்கு புரிந்துகொண்ட காவலர் தலைவர் மிகவும் மரியாதையாக ''நம்பீஸ்வரர் அவர்களே! உண்மையில் நீங்கள் யாரென தெரியாமல் இந்த பெரிய தவறு நடந்துள்ளது என்பது தெரிகிறது. நீங்கள் அரசாங்க அடையாளம் எதுவுமில்லாமல் திடீரென நுழைந்து ''சோதனை'' செய்யப் போகிறோம் என்று சொன்னதால் வியாபாரிகளான அவர்கள் உங்களைச் கொள்ளைக்காரர்கள் என்று நினைத்துவிட்டார்கள் என்று சொன்னது ஏற்றுக் கொள்ளக்கூடியதே! அதற்காக அவர்கள் தங்களிடம் மன்னிப்புக் கேட்கவும் தயாராக இருக்கிறார்கள்...'' என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே முஸ்லிம் பின் அத்ஹம் தனது கையை நெஞ்சில் வைத்துக் குனிந்து, ''அனைவருடைய சார்பாகவும் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்'' என்று நம்பீஸ்வரரிடம் கூறினர்.

நம்பீஸ்வரர் சாந்தமடைவதற்கு பதிலாக மேலும் அதிகம் கோபம் கொண்டவராய் தலைமைக் காவலரை நோக்கி, ''நான் உம்மிடம் சமாதானமோ, புத்திமதியோ எதுவும் கோரவில்லை. நீரும் உமது காவலர்களும் என் உத்திரவுக்கு கட்டுப்பட வேண்டியவர்களேயன்றி எனக்கு யோசனைக் கூற உமக்கு அந்தஸ்து இல்லை'' என்று கூச்சலிட்டார்.

PDF ISLAM

''மன்னிக்கவும் பிரபு ! மன்னர் பிரானின் விருந்தின ராக கவுரவிக்கப்பட்டுள்ள இந்த ஐவரும், இந்த இடத்துக்கு நாங்கள் வந்ததற்குப் பிறகுதான் வந்தனர். அவர்களைக் கைது செய்ய வேண்டுமானால், எங்கள் தலைவர் மார்த்தாண்டரின் ஆணை தேவை ! மேலும் தாங்கள் அன்பு கூர்ந்து கோபத்தைத் தணித்துக்கொள்ளவேண்டும் !'' என்று மிகவும் தன்னடக்கத்துடன் கூறினார்.

''இப்போது என் ஆணைக்கு நீர் கீழ்ப்படிய மறுக்கிறீர்! அல்லவா ? என் ஆணைப்படி அவர்களைக் கட்டி ராஜகுரு தாதரின் முன் கொண்டுவர ஒப்புக்கொள்ளப் போகிறீரா ? இல்லையா ?'' என்று கோபத்தோடு தன் ஆசனத்திலிருந்து எழுந்தார் நம்பீஸ்வரர்.

''மகாப் பிரபு ! மன்னிக்கவேண்டும் ! நாங்கள் எதிர்த்துத் தாக்கப்படாதவரை; இங்குள்ள விருந்தினர்களுக்கு எந்தத் தொல்லையும் அளிக்காமல் உங்களுக்கும் எந்தவிதமான அசம்பாவிதமும் நேர்ந்துவிடாமல் சமாதானமாக காரியங்களை கவனித்து வருமாறு மூத்த அமைச்சர் சேதுபத்திர வர்மா அவர்களின் நேரடி ஆணையாகும்'' என்றார் தலைவர்.

நம்பீஸ்வரர் அதைக் கேட்டு மிகவும் ஆத்திரமடைந்தவராய் ''இனி உம்மிடம் பேசிப் பிரயோசனமில்லை. பேசவேண்டிய இடத்தில் பேசிக்கொள்கிறேன்'' என்று இரைந்து கூச்சலிட்டவராய், தன்னுடைய சகாக்கள் அனைவரையும் நோக்கி, ''வாருங்கள் ! போகலாம் !'' எனக் கையை உயர்த்தி சைக்கினைச் செய்ய அவர்களும் பின் தொடர நம்பீஸ்வரர் வேகமாக நடந்துச்செல்லலானார்.

முஸ்லிம் பின் அத்ஹம் காவலர் தலைவரை நோக்கி' ''மிகவும் உங்களுக்கு நன்றி செலுத்துகிறோம். நம்பீஸ்வரர் யாரென்று எங்களுக்கு யாரும் அறிமுகப்படுத்தி வைக்

PDF ISLAM

வில்லை ! இப்போதும்கூடத் தெரியாது ; தயவு செய்து விளக்கிச் சொன்னீர்களானால், இதுபோன்ற தவறு இனி நடக்காமல் பார்த்துக்கொள்ளலாம் !'' என்றார்.

''அவர் ஒற்றர் படையின் தலைவர். ராஜகுரு ராமநம்பி யாரின் நேரடி பொறுப்பில் இருப்பவர். நாட்டின் அவ்வப் போதைய நிலையை ரகசியமாக அறிந்து குருநாதருக்கு தகவல் கொடுக்க அவர் தலைமையில் சிலபேர் இயங்கி வருகிறார்கள், அவர்களுக்கு நேரடியாக எந்தக் காரியங்களி லும் ஈடுபட அதிகாரமில்லை. துப்புகள் அறிவதைத் தவிர்த்து, எந்த நடவடிக்கையை நேரடியாக அவர்கள் மேற்கொள்வதாயினும், எங்களுடைய துணைகொண்டே செய்யவேண்டும், உதாரணமாக இங்கு சோதனையை மேற் கொள்ள வேண்டும் என்ற அவசியம் இருந்தால், எங்கள் தளபதி அவர்களிடம் கூறி, எங்களில் சிலரையும் பாதுகாப் புக்கு அழைத்து வந்து. முறைப்படி காரியங்களை கவனித்தி ருக்கவேண்டும். அப்படிச் செய்திருந்தால், இந்த விபரீதங் களுக்கெல்லாம் இடமேற்பட்டிருக்காது. நீங்கள் ஒன்றும் கவலைப்படத் தேவையில்லை ! அவர் யாரென்று தெரியா மலேயே நீங்கள் மன்னிப்புக் கேட்டுக்கொண்டது உங்கள் பெருந்தன்மையைக் காட்டுகிறது ! நான் எங்கள் தலைவரி டமும் மூத்த அமைச்சர் அவர்களிடமும் நடந்த உண்மை யைச் சொல்கிறேன். நீங்கள் உங்கள் காரியத்தை கவனி யுங்கள் ! மேலும் உங்களுக்கு எந்தத் தொல்லைகளும் நேரா மலிருக்க. இங்கு சில காவலர்களை நிறுத்திவிட்டுப் போகி றேன்'' என்று கூறி, சிலரை மட்டும் அங்கு இருக்கச்செய்து விட்டு மற்றவர்களை அழைத்துக்கொண்டு போய்விட் டார்.

அன்று சேரமான் பெருமாள் மன்னர் பிரானுடைய அரசவை மிகவும் தாமதமாகவே கூட்டப்பட்டது. அதோடு வழக்கம்போல உள்ள பொதுவான அரசவை

PDF ISLAM

அல்லவென்றும், நாட்டுக்கு வியாபாரத்துக்காக வந்துள்ள அரபுகளைப் பற்றிய உண்மைகளை ஆராய்ந்து அவர்களுக்கு அனுமதி கொடுப்பதா அல்லது மறுப்பதா என்பதை மட்டும் விவாதிப்பது பற்றிக் கூட்டப்படும் அரசவை என்ற மன்னரின் நேரடியான குறிப்புடன் கூட்டப்பட்டது. இதில் கலந்து கொள்ள சில குறிப்பிட்டவர்கள் மாத்திரம்தான் அழைக்கப் பட்டிருந்தனர், குறிப்பாக அமைச்சர்கள். வியாபாரிகள், மத ஞானப்பண்டிதர்கள் போன்றவர்களே மன்னர் பிரான் அழைப்பின்பேரில் வந்திருந்தனர். ராஜகுரு இல்லாமல் எந்த அரசவை நிகழ்ச்சியும் நடைபெறுவதில்லையாதலால், அவர் வழக்கம்போல் ஆஜராகியிருந்தார்.

அந்நாட்டின் வழக்கப்படி, எந்தவொரு அரசவைக்கூட் டப்பட்டாலும், அதற்குச் சில நாழிகைக்கு முன்பு, ராஜ குரு ராம நம்பி அவர்களையும் மூத்த அமைச்சர் சேதுபத்திர வர்மா அவர்களையும் மன்னர் தனியே அழைத்து, அரசவை யில் பேசக்கூடிய பேச்சுக்களையும், நடைபெறக்கூடிய நிகழ்ச்சிகளையும் பற்றிக் கலந்துரையாடிவிட்டுத்தான் அவை கூட்டப்படும். அரசர் அதிகம் பேசமாட்டார். அர சர் சார்பான கருத்துக்களை அநேகமாக ராஜகுருநாதரே வெளிப்படுத்துவார். சில கேள்விகளுக்கான பதில்களையும் அரசு சார்பாக அவரே பதில்கள் சொல்லுவார். மூத்த அமைச்சர் ஏதாவது ஒன்றிரண்டு விஷயங்களைச் சொல் வார். மன்னரைப் பொறுத்தவரை பெரும்பாலும் மவுனியா கவே இருப்பார், அவர் எதைச் சொல்ல விரும்பினாலும், ராஜகுரு அல்லது மூத்த அமைச்சர் ஆகியோரிடம் மெது வாகச் சொல்லி, அவர்களையே பேசச் செய்வார் இதுவே அவையடக்கமாகப் பழக்கத்தில் இருந்து வந்தது.

இம்முறை மன்னர் பிரானின் நடவடிக்கையில் எல் லாமே புதுமையாக இருந்தது. இந்த அவையை தன்னு

PDF ISLAM

டைய சொந்தப் பாதுகாவலரை அனுப்பி, ஒவ்வொருவருக்கும் அழைப்புக் கொடுத்துக் கூட்டியிருந்தார். யார் யாரை மன்னர் அழைத்திருக்கிறார் என்பதை ராஜகுரு உட்பட அனை வரும் அவையில் வந்துதான் தெரிந்துக்கொள்ள முடிந்தது. அதோடு அவையரங்கில் சுமார் 20 நாற்காலிகள் காலியாகவும் வைக்கப்பட்டிருந்தன. அவைக்கு வழக்கமாக அழைக்கப்படுபவர்கள் பலர் இல்லாமல், முதல் நாள் விழாவில் நாட்டின் பல பாகங்களிலிருந்து வந்து கலந்துகொண்ட பிரமுகர்களில் முக்கியமானவர்கள் சிலரும் ஆஜராகி இருந்தனர்.

அரசவையின் தொடக்கமாக முதலில் ராஜகுருவால் அவர்களின் சிஷ்யர்களின் துணைகொண்டு. ''திருஷ்டி கழிப்பு'' மற்றும் ஒரு பூஜை நடத்தப்படும். அதைத் தொடர்ந்து இசை நிகழ்ச்சியும், ஒரு நடன நிகழ்ச்சியும் நடைபெறும் இதுதான் வழக்கம்.

இம்முறை ராஜகுருவின் திருஷ்டி கழிப்பு பூஜை நிகழ்ச்சிகள் முறைப்படி நடந்தன. ஆனால் இசை, நடன நிகழ்ச்சிகள் எதுவும் இல்லாமல்லாக்கப்பட்டிருந்தது. அதோடு ராஜகுருவின் சடங்குக்குப் பிறகு அரசரின் மெய்க் காவலர் மரியாதையாக ராஜகுருவின் காதில் ஏதோ மெதுவாகச் சொல்ல. அவர்வியப்புடன் மன்னரை நோக்க, மன்னர் தலையசைத்து அதை ஒப்புக்கொள்ள, வழக்கமாக பூஜைக்குப் பிறகு ராஜகுருவின் பக்கத்திலேயே நிற்கும் மூன்று சிடர்களையும் போகுமாறு ராஜகுரு உத்திரவிட, அவ்விதமே நடந்தது. இதுவும் ஒரு வியப்பான சம்பவமாக அமைந்தது.

வழக்கமாக அவை நிகழ்ச்சியை ராஜகுருதான் தொடங்கி வைப்பார். இப்போது மன்னருடைய நேரடி ஈடுபாடுகளையும், மாறுதலான போக்கையும் கண்ட ராஜகுரு, அவையைத் தொடங்கி வைக்கலாமா, வேண்டாமா என்று யோசிப்பது போல, மன்னரின் முகத்தை நோக்க, அவர்

PDF ISLAM

புன்சிரிப்புடன் தலையை அசைத்து, அவரையே தொடங்கி வைக்கச் சைக்கினைச் காட்டினார்.

ராஜகுரு ராமநம்பி ஒருவாறு தன்னைச் சமாளித்துக் கொண்டு, ''நமது மாட்சிமை தங்கிய மன்னர் மூன்றாவது சேரமான் பெருமாள் அவர்களின் திருச் சந்நிதானத்தில், அவர்களின் நேரடி அழைப்பின் பேரில் ஆஜராகியிருக்கும் மகா ஜனங்களே! நம்முடைய ஆசீர்வாதத்தை உங்கள் மீது பொழிகிறோம். இந்த அவை, வழக்கமாக நடைபெறு வதைப் போன்றதல்ல என்பதுமட்டுமல்ல. வழக்கமான சம்பிரதாயங்களின்படியுமல்லாமல் நமது மாட்சிமை பொருந்திய மன்னர் பிரான் அவர்களால் நேரடியாகக் கூட்டப்பட்டிருப்பது நான் எந்தக் காலத்திலும் கேள்விப் பட்டிராத அதிசயமாகும். இந்த மன்னர் தலைமுறையில் மூத்த தலைமுறைக்கு என் ஆசான் ராஜகுருவாக இருந்தார். அதன் பிறகுள்ள இரண்டு தலைமுறைகளுக்கும் நாம் இருந்து வந்து, இப்போது மூன்றாவது தலைமுறைக்கும் குரு மகா பீடத்தை அலங்கரித்து வருகிறோம். மன்னர் பிரானின் நன்மை. அவர்கள் குடும்பத்தினர்கள் நன்மை, நாட்டின் நன்மை, நாட்டு மக்களின் நன்மை ஆகியவையே குருபீடத் தின் குறிக்கோளாகும்; நமக்கென்று ஒன்றுமில்லை! ஏனெனில் நாம் முற்றிலும் துறந்த துறவிகள்! இந்த உண்மைகளை யெல்லாம் அறிந்திருந்தும், மன்னர் பிரான் அவர்கள், நமது ஆலோசனைகளைப் பெறாமல் இந்த அவையைக் கூட்டியிருக்கி றார்கள் என்றால், அதில் ஏதோ பெரிய நன்மைகள் உள்ள டங்கியே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மேலும். இந்த அவை கூட்டப்படுவதன் நோக்கத்தை யும் மன்னர்பிரான் அவர்கள் அனைவருக்கும் அறிவித்து சந்தேகத்துக்கு இடமில்லாமல் ஆக்கிவிட்டார்கள். அதாவது நம்நாட்டுக்கு வியாபாரம் என்ற பெயரால் வந்து முகா மிட்டுள்ள அரேபியா நாட்டு கடற்கொள்ளைக்காரர்களைப் பற்றி ஒரு தீர்க்கமான முடிவு எடுப்பதற்கே இந்த அவை

PDF ISLAM

கூட்டப்பட்டுள்ளது என்பது நமக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. நேற்றையை பொது அவையில் அவர்களை கண்ணியப்படுத்துவது போல, மன்னர்பிரான் மிகவும் ராஜதந்திரமாக நடந்து அவர்களை விருந்தினர்கள் போல் நடத்தி அவர்கள் தப்பிப்போக முடியாதபடி சரியான காவலையும் வைத்துள்ளார்கள்.

எனினும் இப்போது மாட்சிமை தங்கிய மன்னர் பிரான் அவர்களுக்கு முன்னால் உங்களுக்கு ஒரு திடுக்கிடத்தக்க செய்தியையும் சொல்லப் போகிறேன். மன்னர்பிரான் அவர்களை இன்று காலையிலிருந்து யாரும் நான் கூட சந்திக்கும் வாய்ப்பு பெறமுடியாததால், அவர்களுக்குச்செய்தி எட்டியிருக்க சந்தர்ப்பம் இருந்திருக்காது என்று நினைக்கிறேன். அது, ''அரேபியநாட்டுக்கொள்ளைக்காரர்கள்சம்பந்தப்பட்ட விஷயமாதலால், மன்னர்பிரான் அனுமதியை வேண்டுகிறேன்'' என்று கூறி மன்னருடைய அனுமதியை எதிர் பார்ப்பது போல் திரும்பிப் பார்த்தார்.

சபையினர் அனைவரும், மிகுந்த ஆர்வத்துடன் மன்னர் சேரமான் பெருமாளின் முகத்தை நோக்கினர். களங்கமில்லாத அந்த அழகிய முகம், அன்று மலர்ந்த மலரைப் போல அழகுடன் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அதற்கு மேலும் அழகூட்டும் வண்ணம் முகத்தில் புன்சிரிப்புத்தவழ, தலையை அசைத்து அனுமதி கொடுத்தார்.

இந்த சமயத்தில் மூத்த அமைச்சர் சேதுபத்திரர் பாய்ந்தெழுந்து வந்து, மன்னர் காதில் ஏதோ கூறினார். மன்னர் அதைக்கேட்டு, ஏதோ ஒருவார்த்தையில் பதில் சொல்ல, அவரும் மரியாதையாகத் தன் வாயை மூடிக்கொண்டு தனது ஆசனத்தில் போய் அமர்ந்துகொண்டார். அவர்முகம் மட்டும் பீதி நிறைந்ததாகக் காணப்பட்டது.

ராஜகுருநாதர் மிகவும் பெருமை நிறைந்தமுகத்துடன், யாரும் அதிர்ச்சியுடைந்து விடாதீர்கள்! நம்முடைய நாட்

PDF ISLAM

டுக்கே சிறப்பைத் அளித்துக்கொண்டிருந்த, சேரமான் பெருமாள் வம்சத்தின் சின்னமான தங்கத்தாலும், வைர வைடூரியங்களாலும் செய்யப்பட்ட மகா கிரீடம் கடந்த இரவு நம்முடைய கலைப்பொருள் பாதுகாப்பு இல்லத்தி லிருந்து திருடப்பட்டுள்ளது. அந்த இல்லத்தின் ஒருபகுதியில் தான், மிலேச்சர்களான அந்த அரபு நாட்டுக்காரர்களில் சிலர் இரவு தங்கியிருந்துள்ளனர்'' என்றார்.

சபையிலிருந்து சிறிது ஆரவாரம் எழுந்தது. ஒருவருக் கொருவர் மெதுவாக ஏதோ பேசிக்கொண்டனர். அதோடு அனைவரும் மீண்டும் மன்னர் முகத்தை நோக்கினர். அதில் கொஞ்சம் கூட மாற்றமில்லாமல், புன்சிரிப்பு மாறாமல் அப் படியே இருந்தது. இது மூத்த அமைச்சர் சேதுபத்திரருக்கும் பாதுகாப்புத்தளபதி மார்த்தாண்டருக்கும் மிகவும் வியப் பாக இருந்தது. அவர்கள் ஒருவரையொருவர் ஆச்சரியந் தொனிக்க நோக்கிக்கொண்டனர்.

திடுக்கிடத்தக்க ஒரு மகா பெரிய விஷயத்தை வெளிப் படுத்தியும்கூட மன்னர் ஒரு சிறிதும் பதட்டமடையாமல் இருப்பதைக் கண்ட ராஜகுருநாதர்கூட மனம் குழம்பிப் போய்விட்டார். அவர் அடுத்துத்தொடர்ந்து பேசும்போது, பழைய பெருமையின் அடையாளம் வெளிப்படவில்லை.

ராஜகுரு மேலும் பேசலானார்;-

''இந்தத் திருட்டை நடத்தியவர்கள் அரேபிய கொள்ளைக்காரர்களே ஆவர். அவர்களை நமது காவலர் களில் ஒருவரும். ஒற்றர்படையின் பிரதான வீரர்களில் ஒரு வருமாகிய வேணுகோபாலனும் கையுங் களவுமாகப்பிடித்து விட்டனர். ஆதலால் அவர்கள் இருவரையும், அந்தப்படு பாவிகள் கொலை செய்து விட்டனர்.

இதைச்சொன்னபோது கூட்டம் முழுவதும் பரபரப்பு ஏற்பட்டது, சிலர் ஆத்திர உணர்வுக்கு ஆளாயினர் என தெரிந்தது. இதற்கு பதில் சொல்ல அனுமதி கேட்கும்

PDF ISLAM

விதத்தில், மன்னரை நோக்கி சேதுபத்திரர் எழுந்தார். ஆனால் அரசர் தன் கையைக்காட்டி அவரை அமரச்சொல்லி விட்டார்.

சபையினரின் இந்த ஆவேச உணர்ச்சியைப் பயன் படுத்திக்கொள்ளும் விதத்தில், ராஜகுரு தன் குரலை உயர்த்தி, ''கடலில் திரியும் இந்தக் கொள்ளைக்கார மிலேச்சர்களுக்கு நமது மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் அவர்கள் சமஅந்தஸ்து கொடுத்து கவுரவித்தார்கள். அந்த நன்றியைக்கூட அவர்கள் ஒரு பொழுதுக்குள் மறந்து விட்டார்கள்! நமது ஒற்றர்படைத்தலைவர் நம்பீஸ்வரரும் ஒற்றர்படையை சேர்ந்த சில வீரர்களும் அவர்களுடைய இடத்தை சோதனையிடச் சென்றபோது அவர்களைக் கடுமையாகத்தாக்கி கைகளைக்கட்டி தலைகளை சீவ முயன் றுள்ளார்கள், நல்லவேளையாக நமது மூத்த அமைச்சரவர் கள் செய்தி கேள்விப்பட்டு, ஒரு பெரும் படையை அனுப்பி நம்மவர்களை மீட்டு வந்திருக்கிறார்கள். இல்லாவிட்டால் அவர்களும் கொலை செய்யப்பட்டிருப்பார்கள்'' என்றார்.

அவையினர் அனைவரும் ஆத்திரத்துக்கு ஆளானாலும் அரசரின் முகத்தை நோக்கினர், அது மிகவும் அமைதியாக வும் சாந்தமாகவும் காணப்படவே, அவர்கள் குழம்பியவர் களாக ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

ராஜகுரு மேலும் தொடர்ந்து ''இந்த அரேபியக் கொள்ளைக்கார மிலேச்சர்களில் யாரையும் தப்பிக்க விடக் கூடாது. அவர்களுடைய கப்பலைப்பறிமுதல் செய்யவேண் டும்! அவர்கள் அனைவரையும் கழுவில் ஏற்ற வேண்டும்என்று மன்னர் பிரான் அவர்கள் உத்திரவிடுவார்கள் என்று நான் நம்புகிறேன்'' என்று கூறி வெற்றிப்பெருமிதத்துடன் தனது ஆசனத்தில் அமர்ந்தார் ராஜகுரு. அவர் உடம்பு வியர்த்து முகமெல்லாம் எண்ணைச்சத்து வழிவதுபோல் இருந்தது.

PDF ISLAM

மன்னர் சேரமான் பெருமாள், மூத்த அமைச்சர் சேது பத்திரரை நோக்கி, ''இதுபற்றி நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?'' என்று மிகவும் அமைதியாகக் கேட்டார்.

''மாட்சிமையும் அறிவாற்றலுமுள்ள அரசே! பெருமைக்குரிய குரு மகான் அவர்களே! சிறப்புமிக்க அவையோரே! இந்தப்பிரச்னையில் நாம் எந்தவொரு அவசரமான முடிவுக்கும் வந்துவிடக் கூடாது எனத்தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறேன்.

''நம்நாட்டின் பெருமைக்குரிய கிரீடம் நேற்றிரவு காணமற் போய்விட்டது என்று குருமகான் கூறியது உண்மை தான்!'' என்று சேதுபத்திரர் கூறியபோது, ராஜகுரு அவையினரைப் பார்த்துப் பெருமிதத்துடன், வெற்றிப்புன்னகை தவழத்தலையை ஆட்டினார்.

''ஆனால் அதை அரபுநாட்டு விருந்தினர்தான் திருடினர் என்பதற்கு, நம்மிடம் எந்த விதமான பிடிப்பும் இல்லை...'' எனமறுத்த போது, ராஜகுரு முகத்தில் கோபம் கொப்பளிக்க, ''அப்படியானால், இவ்வளவு நாட்களும் இல்லாமல் இப்போது. நம் நாட்டின் கண்ணியமான பிரஜைகளில் ஒருவர் தான் திருடினார் என்று கூறுகிறீரா!...'' என்று ஆத்திரத்தோடு குறுக்கிட்டார்,

இந்தக் குறுக்கீட்டைக்கண்ட மன்னர் சேரமான் பெருமாள், தன் மெய்க்காவலரை அழைத்து அவரிடம் ஏதோ மெதுவாகச் சொல்ல, அவர் அதைக்கேட்டு, ராஜகுருவிடம் சென்று, அவர்காதில் மெதுவாக கூறினார். அதைக் கேட்ட ராஜகுருவின் முகத்தில் கடுகடுப்பு ஏற்பட்டதெனினும் அவர் அதை ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாக மன்னரை நோக்கித் தலையை அசைத்தார்.

தன்னைத் திரும்பிப்பார்த்த சேதுபத்திரருக்கு மன்னர் சமிக்ஞைச்செய்து, அவரைத்தொடர்ந்து பேசச்சொன்னார்.

PDF ISLAM

''திருட்டைக்கண்டுபிடிக்க நாம் தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். இன்று அவை கூடுவதற்கு முன்பே, அதைக் கண்டு பிடித்துவிட முயன்றோம். ஆனால் துரதிருஷ்டவசமாக முடியாமல் போய்விட்டதற்கு அனைவரிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம், இன்று மாலைக்குள் எப்படியும் கிரீடமும் அதைத் திருடியவர்களும் கண்டு பிடிக்கப்பட்டு விடுவார்கள்.

மேலும் நமது காவலர் ஒருவர் கொல்லப்பட்டதற்கும், அரபு நாட்டிலிருந்து வந்துள்ளவர்களுக்கும் எவ்வித சம்பந்தமுமிருப்பதாகத் தெரியவில்லை...'' என்றபோது ராஜகுரு திடீரெனக்குறுக்கிட்டு, ''அதை எப்படி நீங்கள் ஊர்ஜிதமாகச்சொல்லலாம்?'' என்று கேட்க, மூத்த அமைச்சர் சிறிது கெட்டியான குரலில், ''அரபுகள் தான் கொலை செய்தார்கள் என்று தாங்கள் எப்படி உறுதியாகச் சொன்னீர்களோ அப்படித்தான்'' என்று பதிலளித்தார்.

ராஜகுரு மீண்டும் குறுக்கிட்டதை விரும்பாத மன்னர், சிறிது கடுமையாக அவரை நோக்க, அவர் தான் தவறு செய்து விட்டதை உணர்ந்தவர்போல் தலையைக் குனிந்து கொண்டார்.

மேலும் சேதுபத்திரர் தொடர்ந்து விளக்கம் அளிக்கும் வகையில், ஒற்றர்படைத்தலைவர் வேணு கொல்லப்பட்டார் என்பதற்கு எவ்வித அத்தாட்சியும் கிடைக்கவில்லை. ஆனால் அவர் கழிந்த இரவிலிருந்து காணப்படவில்லை என்பது உண்மை! இந்த நிகழ்ச்சிகளுக்கு ஏதோ பின்னணியுள்ளது போல் தோன்றுகிறது. அது புரிந்து விட்டால் எல்லாம் வெளிப்பட்டுவிடும்! அதோடு நமது ஒற்றர்படைத்தலைவர் நம்பீஸ்வரரும் அவருடைய சகாக்களும் அரபுகளால் பிடித்துக் கட்டிப்போடப்பட்டனர் என்பதும் உண்மையே! அது போன்றே, அரசாங்க உடையில்லாத அவர்கள் தான்

PDF ISLAM

கள் இருந்தகடற்கரை கட்டிடத்துக்குள் திடீரென நுழைந்ததைக்கண்ட அரபுகள், கொள்ளைக்காரர்கள் என நினைத்துப்பிடித்துக்கட்டிப் போட்டதாகக் கூறுவதையும் உண்மையென நம்பலாம்'' என்றார்.

இப்போது, கூட்டத்தில் ஆத்திர உணர்வு நீங்கி, அமைதி நிலவியது!

மன்னர் சேரமான் பெருமாள், ராஜகுருவை நோக்கி, குரு மகான் அவர்களே ! இப்போதுதாங்கள் விசாரணையை மேற்கொள்ளலாம்!'' என்று அனுமதியளித்தார்!

பொதுவாக, சேர நாட்டின் அரசவை முறை அதுதான்! மன்னருக்கு அடுத்து மூத்த அமைச்சர், மற்றும் பல்வேறு துறை அமைச்சர்கள் என மொத்தம் ஒன்பது அமைச்சர்கள் இருப்பர். அவர்களில் மூத்த அமைச்சருக்கு அடுத்த இடத்தில், பாதுகாப்பு அமைச்சர் மற்றும் படைத்தளபதியாகவும் எல்லாக்காவல் பொறுப்புகளுக்கும் உரியவராக ஒரு அமைச்சர் இருப்பார்! மற்ற அமைச்சர்கள் எனப்படுவோர் பொதுவாக ஆலோசகர்கள் போன்றவர்களே ஆவார்கள் அவசியப்படும்போது, மூத்தஅமைச்சர் அவர்களைக் கூட்டி ஆலோசனைகள் பெற்று அரசருக்குத் தெரிவிப்பார்.

ராஜகுரு என்பவர், தெய்வீக சம்பந்தப்பட்ட அத்தனை காரியங்களுக்கும் மட்டுமல்லாமல், அரசின் எல்லா நன்மைகளுக்கும் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளவராவார். அவரே அரசரின் முதல் மரியாதைக்குரியவர்! எந்தவொரு பிரச்னையாயினும், யார் ஆலோசனைகள் கூறினாலும், ராஜகுருவைக் கலந்துக் கொள்ளாமல் அரசர் எந்தக்காரியத்தையும் செய்யமாட்டார். அரசர் அரண்மனையிலிருந்து வெளிப்படும் ஒவ்வொரு நேரத்திம், ராஜகுரு பூஜை நடத்தி ஆசீர்வாதம் பெற்றே செல்வது வழக்கம். ராஜ வம்சத்தின் நன்மைக்காகவும், மக்களின் நன்மைக்காகவும், ஆண்டுக்கொரு

PDF ISLAM

முறை நாடுமுழுவதும் குரு பூஜை நடத்துவார். அப்போது நாட்டிலுள்ள எல்லா பிராமணர்களுக்கும், அறுசுவை உண்டி, தான்ய வெகுமதி, பசுக்கள் தானம் அனைத்தும் வழங்கப்படும்.

முதலாவது சேரமான் பெருமாள் காலத்தில், அவரைக் கொல்ல ஒரு அரசியல் சதி நடந்தது. அந்தச்சதிக்கூட்டத்தை ஒற்றர்களை வைத்துக் கண்டு பிடிக்க ராஜகுருவுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. அவ்விதமே அவர் கண்டு பிடித்து மன்னரின் உயிரைக் காப்பாற்றினாராம்! அதைத் தொடர்ந்து அடுத்து வந்த ராஜகுருவாகிய ராமநம்பி, தன் கீழ் ஒரு ஒற்றர்படையை வைத்துக்கொள்ள ராஜாங்க முறையில் அங்கீகாரம் பெற்றவரானார். நாட்டிலுள்ள அனைத்து ஊர்களிலும், அவருடைய ஒற்றர்கள் இருந்தனர். அவர்கள் அவ்வப்போது, நாட்டின் நிலை, சிலருடைய குற்றங்கள், தவறானவர்களைப்பற்றிய தகவல்கள் ஆகியவற்றை ராஜகுருவுக்குத் தெரிவிப்பார். அவர் மன்னரோடு ஆலோசனை செய்து, தக்க நடவடிக்கைகளை எடுக்கச் செய்வார்,

மேலும் அரசவையில், பொதுவாக மன்னர் நேரடியாக மக்களிடம் பேசுவதில்லை. எதைத்தெரிவிக்க வேண்டுமானாலும் ராஜகுருவின் மூலமாகத்தான் அவர் அறிவிப்பார். ஆதலால் ராஜகுரு என்ன பேசினாலும் அதை மன்னரின் கருத்தாகவே மக்கள் மதிப்பர். எந்தவொரு வழக்காயினும் அதை விசாரிப்பது ராஜகுருவாகத்தான் இருக்கும். இறுதியாக '''இது மன்னர் பிரானின் தீர்ப்பு'' என்று அவரே கூறி முடிப்பார்.

இதன் காரணமாக மிக அதிகமான மதிப்பும் செல்வாக்கும் ராஜகுருவுக்கே அளிக்கப்பட்டிருந்தது. குரு பூஜைதினத்தைத் தவிர மற்ற நாட்களில் அவரை அரச அவையைச் சேர்ந்தவர்களைத் தவிர, பாமர மக்கள் பார்க்க அனுமதிக்கப்படமாட்டார்கள் அவர் தன் பல்லக்கில் நாற்புறமும்

PDF ISLAM

திரையிடப்பட்டவராகவே போக்கு வரத்துகளைச் செய்வார்.

மற்ற அமைச்சர்கள், அரசவையிலுள்ளவர்கள், உத்தியோகப்பொறுப்பிலுள்ளவர்கள், சாதாரணப் பொதுமக்கள் அனைவருக்கும் ராஜகுரு என்றால் ஒருவித அச்சத்தோடு கூடிய மரியாதையே இருந்து வந்தது.

அவர் பேச்சுக்கு எதிர் பேச்சு இல்லை என்ற நிலைமைக்கு மாறாக, இம்முறை இந்த மூன்றாம் சேரமான், அவர் பேச்சை மறுக்கும் வண்ணம் மூத்த அமைச்சரைப் பேசச்சொன்னதும், அதில் குறுக்கிடாமல் தடுத்தும், பேசி முடிந்த பின், ''நீங்கள் விசாரணையை மேற் கொள்ளலாம்'' என்று கூறியதும் ஒரு புதிய திருப்பமாகவே காணப்பட்டது.

''மேற்கொண்டு நான் விசாரிப்பதற்கு என்ன இருக்கிறது? மகா கிரீடம் திருட்டுப்போயுள்ளது உண்மை! நமது திறமைமிக்க ஒற்றர்களில் ஒருவரான வேணு கொல்லப்பட்டது அல்லது காணமற் போனது உண்மை! நம் முக்கிய காவலர்களில் ஒருவர் படுகொலை செய்யப்பட்டது உண்மை! இவைகளெல்லாம் அந்த அரபு நாட்டு மிலேச்சர்கள் நம் அமைதியான பூமியில் காலடி எடுத்து வைத்தபிறகுதான் நடந்துள்ளதும் உண்மை! அதோடு நமது நாட்டு அரசியல் பாரம்பரியத்துக்கு விரோதமாக ராஜகுரு மகா சன்னிதானத்தின் பேச்சுக்கு எதிராக மூத்தஅமைச்சரைப் பேசச் செய்திருப்பதும் புதுமை! அவர் தவறான விஷயங்களைக் கூறும்போது, ராஜகுரு மகா சன்னிதானம், விளக்கம் கேட்க முற்பட்டபோது, என்றைக்குமில்லாத விதத்தில், மன்னர் பிரான் குறுக்கிட்டு, அவர் பேச்சின் நடுவே பேச வேண்டாம் என்று ஆணையிட்டதும் மகா புதுமை! இதற்கு பிறகும் குருமகா சந்நிதானத்தின் பாரம்பர்யத்துக்கே கண்ணியக் குறைவு ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் நமக்கு ஏற்பட்டிருப்பதும் உண்மை! ஆதலால் மாட்சிமைத்தங்கிய

PDF ISLAM

மன்னர் பிரான் அவர்களே, நேரடியாக விசாரணையை மேற்கொண்டு, நிலைமையை விளங்கிக்கொள்வதே நல்லது என்பது நமது அபிப்பிராயமாகும். மேலும் நமது உடல்நிலை சரியில்லாததால் ஆஸ்ரமத்துக்குச் சென்று நாம் ஓய்வெடுக்க மன்னர் பிரான் அனுமதி தரவேண்டும்!'' என்று கூறி முடித்தார். அதைத் தொடர்ந்து எழுந்து போகவும் முற்பட்டார்

மன்னர் சேரமான் அவர்கள் உடனே தன் ஆசனத்திலிருந்து எழுந்து, ராஜகுருவை நோக்கி, கைகளைக் கூப்பி. ''குரு மகாசந்நிதானம் அவர்கள் பொறுத்தருள வேண்டும்! ராஜரீகத்தின் மரபைப் பாரம்பர்யமாகக் காப்பாற்றி வரும் குரு மகா சந்நிதானம் அவர்கள் எந்தவொரு சமயத்திலும் அரசவை நிறைவு பெறுமுன் வெளியேறியதில்லை என்பதை அறியாதவர்களல்ல !'' என்றார்.

மன்னர் எழுந்து நின்றால் அவையோரெல்லாம் எழுந்து நிற்பது வழக்கமாதலால், அனைவரும் எழுந்துவிட்டனர். இதனால் மன்னர் மாத்திரமல்ல அவையோர் அனைவரும் ராஜகுருவுக்கு மரியாதைச் செய்வது போன்ற நிலை ஏற்பட்டது.

இந்தக் காட்சியைச் சுற்று முற்றும் பெருமிதத்தோடு பார்த்த ராஜகுரு, எல்லோரையும் கையைத் தூக்கி ஆசிர்வதித்தவராய் தமது ஆசனத்தில் அமர்ந்தார். அதைத் தொடர்ந்து மன்னரும் அமர, மக்கள் அனைவரும் அமர்ந்தனர்.

பிறகு மன்னர் தாமே தொடர்ந்து பேசும் முறையில், ''குருமகா சந்நிதானம் அவர்களின் விருப்பப்படி இந்த விவகாரம் அனைத்தையும் நாமே நேரடியாக விசாரிக்கப் போகிறோம். விருந்தினர் என்ற பெயரில் நம் நாட்டுக்கு வந்துள்ள அரபு நாட்டினர் குற்றவாளிகள் எனத் தெரிந்தால், குருநாதர் ஆணைப்படி அவர்களின் கப்பலை பறிமுதல்

செய்து! அவர்கள் அனைவருக்கும் மரண தண்டனை அளிக் கலாமல்லவா?'' என்று கேட்டார்.

அவையிலுள்ளோர் அனைவரும், ''ஆம்! மன்னவா! அதுவே முறை!'' என்று குரல் கொடுத்தனர்.

மன்னர் முக மலர்ச்சியோடு, ''உங்கள் அனைவருக்கும் மிக்க நன்றி! ஆனால், ஒருசமயம் அவர்கள் குற்றவாளிகள் அல்ல என்று நிரூபணமானால், அவர்கள் மேலும்சிலகாலம்இந் நாட்டில் தங்கியிருக்கவும். அவர்கள் தாங்கள் விரும்பியவர்த் துகப் பொருட்களை வாங்கிச் செல்லவும், நமக்குத் தேவை யான பொருட்களை வெளி நாடுகளிலிருந்து வாங்கிவந்து கொடுக்கவும் அனுமதிக்கலாமல்லவா?'' என்று கேட்டார்.

அவை முழுவதும் சில நிமிடங்கள் ஒரே நிசப்தமாக இருந்தது. எல்லோரும் ராஜகுருவின் முகத்தைப் பார்த்த னர். அது கோபத்தால் படபடத்துக் கொண்டிருந்தது. மன்னருடைய முகமோ சாந்தமே வடிவாக இருந்தது. மூத்த அமைச்சரோ, வியப்புடன் மன்னரை நோக்கினர்,

அவையிலிருந்த ஒரு பிரமுகர், ''ஆம்! மன்னர் பெரு மானே அதுவே நியாயம்!'' என்றார், அதைத் தொடர்ந்து பலரும் அதே குரல் கொடுக்க ஆரம்பித்தனர்.

''மிக்க மகிழ்ச்சி! இப்போது நம் முன்னுள்ள விஷயம் ஒன்று: நமது பாரம்பர்ய பெருமைக்குரிய கிரீடம் திருட்டுப் போனது! இரண்டாது: நமது காவலர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டது: மூன்றாவது; நமது ஒற்றர் படை வீரர் களில் ஒருவரான வேணுவின் மறைவு: நான்காவது: நமது ஒற்றர் படைத் தலைவரான நம்பீஸ்வரரையும், அவருடைய சகாக்களையும், அந்த அரபுகள் தாக்கி, படுகாயப்படுத்தி யது ஆகிய நான்கு குற்றங்களே யாகும் அல்லவா?'' என்று மன்னர் கேட்டார்.

அனைவரும், ''ஆம்! ஆம்!'' என்றனர்.

PDF ISLAM

''இந்த அரபு விருந்தினர் சம்பந்தமாக நான் நேற்று முழு பொறுப்பையும் ஒப்படைத்தது நமது படைத் தளபதியும், பாதுகாப்பு அமைச்சருமான மார்த்தாண்ட பூபதி அவர்களிடம்தான்! அவர் முதலில் தன் விளக்கத்தைக் கூறட்டும் என்றார் அரசர்.

மார்த்தாண்ட பூபதி எழுந்து வந்து, மன்னருக்கும் ராஜகுருவுக்கும். மற்ற அமைச்சர்களுக்கும், மக்களுக்கும் மரியாதை செய்துவிட்டு, தான் சம்பந்தப்பட்டு நடந்தது அனைத்தையும் விரிவாகக் கூறினார்.

மன்னர் அவரை விசாரணை செய்யும் வகையில், ''நமது கலைக்கூடம் அமைந்துள்ள விருந்தினர் மாளிகைக்கு, அந்த ஐந்து அரபுகளும் போனதற்குப் பிறகு அவர்களில் யாரும் நள்ளிரவில் வெளியே செல்லவில்லை என்பதற்கு எப்படி உறுதி கூறுகின்றீர்?''

''முதல் இரண்டு ஜாமங்கள்வரை காவலர்களுடன் நானே வெளியில் இருந்தேன். மாளிகை உள்ளே நமது ஒற்றர் படைத் தலைவர் நம்பீஸ்வரரும், அவருடைய சகாக்களும் இருந்தனர். விருந்தினர் மாளிகைக்குள் நுழைந்த அரபுகள் முதல் ஜாமத் தொடக்கத்தில் ஒரே முறைதான் கதவைத் திறந்து கடலோரக் கட்டிடத்தில் உள்ள அவர்களுடைய சகாக்களில், இருவரை, அங்கு தயாரிக்கப்பட்டுள்ள உணவுடன் அழைத்துவருமாறு கேட்டுக்கொண்டனர். அவ்விதமே நமது காவலர் ஒருவரை அனுப்பி வைத்தேன். அவருடன் ஒற்றர் பிரிவைச் சேர்ந்த வேணு என்ற வீரரும் துணைச் சென்றார்''

அரபுகளின் பாதுகாவலுக்கு ''ஒற்றர் படையின் உதவியை நீர் கேட்டீரோ?'' என்று மன்னர் கேட்ட போது, ராஜகுரு குறுக்கிட்டு, ''இல்லை மன்னவா! அந்த மிலேச்சர்கள் மீது எனக்கு நம்பிக்கை இல்லை! ஆதலால் அவர்களுடைய நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்துவரு

PDF ISLAM

மாறு ஒற்றர் படைக்கு நான்தான் உத்திரவிட்டேன். இந்த மாட்சிமை தங்கிய அரசின் கவுரவத்துக்கும் பாதுகாப்புக்கும் எதிராக எதுவும் நடந்துவிடாமல் முன்கூட்டியே எச்சரிக்கையாக இருக்க வேண்டியது எனது கடமையல்லவா ?'' என்ருர்.

''மிக்க மகிழ்ச்சி ராஜகுரு மகான் அவர்களே ! நல்ல காரியத்தையே செய்தீர்கள் !'' என்று மன்னர் கூறிவிட்டு, மார்த்தாண்டரை நோக்கி, ''சென்றவர்கள் அங்கு போய் இருவரை அழைத்து வந்தார்கள். அவர்களும் மாளிகைக்குள் அனுப்பப்பட்டனர். அவர்களில் யாரும் பொழுது விடிவதற்குள், அதாவது கிரீடம் திருட்டுப் போனதை நாம் தெரிந்துகொள்வதற்கிடையில் வெளியே வந்தார்களா ?'' என்று கேட்டார்.

''நிச்சயமாக இல்லை மன்னர் பெருமானே !''

''அதெப்படி நிச்சயமாக இல்லை என்கிறீர் ?''

''என்னுடைய காவற் படையினரையும் விசாரித்தேன் நான் சென்றதற்குப் பின்னும் மாளிகைக்குள்ளும் வெளியிலும் கவனித்துக் கொண்டிருந்த ஒற்றர் படையினரையும் கேட்டேன்; நம்பீஸ்வரர் அவர்களும் விசாரணை நடத்தினுர்கள் ! பொழுது விடியும்வரையில் உள்ளே இருந்தவர்கள் வெளியே வரவில்லை; வெளியிலிருந்தும் யாரும் உள்ளே போகவில்லை என்பது நிச்சயமாகத் தெரிந்தது. ஆனுல், நமது காவலருடன் சென்ற ஒற்றர் படையைச் சேர்ந்த வேணுமட்டும் திரும்பி வரவில்லை !''

''அதைப் பற்றி அவருடன் சென்ற நமது காவலரை விசாரித்தீரா?''

''அவரை விசாரிக்க செல்லும்போதுதான் அவர் அவருடைய இல்லத்துக்கு அருகிலேயே மூன்றுபேர்களால் படுகொலை செய்யப்பட்டிருந்தது தெரிந்தது!''

PDF ISLAM

''மூன்றுபேர்களால் என்று எப்படிச் சொல்கிறீர்கள் ?''

''அங்கு காணப்பட்ட காலடிகள் மூலம் தெரிந்து கொள்ள முடிந்தது ! மேலும் அவர் கொல்லப்பட்ட விதத்திலிருந்து ஒருவர் அவரை திடீரெனப் பிடித்துக்கொண்டு அவருடைய தொண்டையை அடைத்துக்கொள்ள, ஒருவர் மாறி மாறி கூரிய கத்தியால் குத்திக்கொன்றிருக்கிறார்கள்''

இதைக் கேட்ட மன்னர், ''அப்படியானால் கடற்கரை கட்டிடத்திலிருந்து அவரைப் பின் தொடர்ந்து வந்து இந்தக் கொலையைச் செய்திருக்கலாமல்லவா ?''

''அதற்கான வாய்ப்பு அறவே இல்லை'' என்று மார்த்தாண்டர் கூறியபோது, ராஜகுரு ஆத்திரத்துடன் குறுக்கிட்டு ''ஏன் இல்லை? எப்படிச் சொல்கிறீர்?'' என்றார்.

மார்த்தாண்ட பூபதி மிகவும் அமைதியாக, கடற்கரைகட்டிடத்தில் உள்ள அரபுகளுக்கும் நான் காவல் போட்டிருந்தேன். அவர்களில் யாரும் தங்கள் கட்டிடத்திலிருந்து வெளியே வரவில்லை. மேலும் கொலை செய்யப்பட்ட காவலர் அவர்களில் இருவரை அழைத்து வந்த பிறகு வெகு நேரம் விருந்தினர் மாளிகையில் காவலில் இருந்து விட்டு பிந்திய ஜாமத்தில் தான் வீடு திரும்பியிருக்கிறார். அதோடு அரபுகள் தங்கள் ஆயுதமாக வாட்களைத்தான் வைத்துள்ளார்கள். நம்நாட்டுச் ''சுளுக்கிக்கட்டாரி'' அவர்களிடம் இல்லை என்பதையும் அவர்கள் இடத்தை மெதுவாக கவனித்துத் தெரிந்து கொண்டேன்''

மன்னர் குறுக்கிட்டு, ''அப்படியானால் படுகொலை செய்யப்பட்ட காவலர் நம் நாட்டுக் கட்டாரியால் குத்தப்பட்டு இருக்கிறார். என்று கூறுகிறீர்களா?''

PDF ISLAM

''ஆமாம் மன்னர் பிரானே ! அதில் சந்தேகமில்லை ! மேலும் பாதரட்சை அடையாளம் அங்கு எந்தப் பகுதியிலும் காணப்படவில்லை !''

''பாதரட்சை அடையாளமா ?''

''ஆமாம் எங்கள் அரசே ! அரபுகள் யாரும் காலில் பாதரட்சை இல்லாமல் நடமாடுவதில்லை ! பூமியில் அவர்கள் காலை வைத்தால் பாதரட்சை இல்லாமல் வைக்கமாட்டார்கள். கொலை செய்யப்பட்ட இடத்தில் வெறுங் கால் அடையாளங்கள் தான் உள்ளன''

இதைக் கேட்ட ராஜகுரு, ஒருவித கேலிச் சிரிப்புடன் ''தமது படை அமைச்சரின் புத்திசாலித்தனம் மிகவும் அதிகமாகிவிட்டதுபோல் தெரிகிறது. கொலை செய்ய வருகிறவர்கள் தங்களுடைய பழக்கத்தை மாற்றிக்கொண்டு வரக் கூடாதா?'' என்றார்.

''மகா குரு அவர்களே! என்னை மன்னிக்கவேண்டும் ! என் அற்ப அறிவில்பட்ட உண்மையைத்தான் சொன்னேன் !'' என்று மரியாதையுடன் கூறினர்.

''சரி ! வேறு விஷயத்தைப் பற்றி என்ன கூறுகிறீர்கள்'' என்றார் மன்னர்.

''மன்னர் பிரானே ! அந்த ஒரு மர்மம் பற்றி எனக்கும் ஒன்றும் விளங்கவில்லை ! கடற்கரை கட்டிடத்திலுள்ள இருவரை அழைக்க, காவலருடன் வேலுவும் போனர் என்று சொல்லப்பட்டது. ஆனல் காவலர் ஒருவர்தான் அந்த இருவரைப்போய் அழைத்துவந்தார் என்று தெரிகிறது. அது பற்றி நம்பீஸ்வரருக்குத்தான் மேற்கொண்டு விபரம் தெரிந்திருக்கவேண்டும்'' என்றார்.

பா: 8.

PDF ISLAM

''நம்பீஸ்வரர் எங்கே?'' என்று மன்னர் கேட்டார்.

அதற்கு மார்த்தாண்டர் பதில் சொல்வதற்கு முன் ராஜகுரு எழுந்து, ''மன்னவா! அந்த அநியாயத்தைத் திர விசாரியுங்கள்! நமது நாட்டுப் புராதன பொக்கிஷமாகிய மகா கிரீடம் திருட்டுப்போனதைக் கண்டு மிகவும் மனம் துடித்துப்போன நமது ஒற்றர்படைத்தலைவர் நம்பீஸ்வரர், அது கடற்கரை கட்டிடத்திக்குள்தான் மறைத்து வைத் திருக்கப்பட வேண்டுமென்பதை உணர்ந்து தனது துணைவர் கள் ஐவருடன் அங்கு சோதனைக்காகச் சென்றிருக்கிறார், அந்த மிலேச்சர்கள் அவரையும் அவர்சகாக்களையும் தாக்கிக் கட்டிப்போட்டிருக்கிறார்கள். நமது படைத்தளபதி போய் அவர்களை மீட்டு வந்திருக்கிறார். இந்த மகா பெரிய அக்ரமச் செயல் ஒன்றுக்கே அந்த மிலேச்சர்களைக் கழுவில் ஏற்றி யிருக்க வேண்டும்! அதற்கு பதிலாக, நமது மூத்தஅமைச்சர் அவர்களே, அந்நியர்களுக்குப் பரிந்து கொண்டு சமாதானம் கூறக் கூடிய நிலை நேரிட்டுள்ளது மிகப்பெரும் அவமானம்!'' என்றார்.

மன்னர் பிரான் மிகப் பொறுமையாக ''நான் கேட்டது நம்பீஸ்வரர் எங்கே என்பதுதான்!'' என்றார்.

''அவர் மருத்துவ மனையில் படுத்துள்ளதாக அறி கிறேன்'' என்றார் ராஜகுரு.

மன்னர், மார்த்தாண்டரை நோக்கி, ''என்ன மருத்துவ மனையில் படுக்குமளவுக்கு காயங்கள் ஏற்பட்டுள்ளனவா?'' என்று கேட்க, ''இல்லை மன்னர் பிரானே மிகச் சாதாரண காயம்தான்!'' என்றார் மார்த்தாண்டர்.

''அப்படியானால் அவரை இங்கே வரச் செய்யுங்கள்!'' என்றார் மன்னர்.

உடனே ராஜகுரு குறுக்கிட்டு, ''மன்னவா! நம்பீஸ்வரர் எனது ஆணைக்குக் கீழ்ப்பட்ட ஒரு சாதாரண நபர்! அவரை

PDF ISLAM

நேரடியாக மன்னர் பிரான் அழைப்பதும், விசாரணைகள் செய்வதும் ராஜ மரபல்ல! தாங்கள் என்ன ஆணையை இடு கின்றீர்களோ அவற்றை என் மூலம் பெற்று அவர் நிறை வேற்றுவார், ஆணையிடுங்கள்'' என்றார்.

''ராஜகுருமகா சந்நிதானம் அவர்களே ! அரபுகள் சம் பந்தப்பட்ட இந்த விவகாரங்களை நேரடியாக விசாரணைச் செய்யத் தாங்கள்தானே அனுமதி கொடுத்தீர்கள் ! அதன் படி இந்த ஒரு சமயம் மட்டும் குழு விசாரணையை நானே மேற்கொண்டுவிடுகிறேன் ! ஏனெனில், ஓரிரவுக்குள் வரிசை யாக நேர்ந்துவிட்ட பல வேதனைக்குரிய நிகழ்ச்சிகளை இன்று மறு இரவு வருவதற்குள் சுத்தமாகத் தீர்த்துவிடவேண்டும் என்று எண்ணுகிறேன். ஏனெனில் இது மீண்டும் தொட ரும் பட்சத்தில் ராஜ்யத்திலேயே பல விரும்பத்தகாத விளைவுகள் தொடர இடமேற்படலாம் ! ஆதலால் நமது பாரம்பர்ய ராஜரீக முறைக்குச் சிறிது முரண்பட்டாலும், அதனால் பரவாயில்லை ! என்று கூறி நம்பீஸ்வரைக் கொண்டு வாருங்கள் !'' என்று மார்த்தாண்டரை நோக்கி மீண்டும் உத்திரவிட்டார் மன்னர்.

அந்த ஆணையை ஏற்ற மார்த்தாண்டர். தனக்கு அடுத்த இடத்தில் உள்ள தளபதி ஒருவரை நோக்கி சைக் கினை செய்தார். அவர் அவசரமாக அங்கிருந்து வெளி யேறினார்.

அரசவைக்குச் சிறிது தூரத்தில்தான் மருத்துவமனை இருந்தது. நம்பீஸ்வரரை அழைக்க ஆள் போனபின். மன்னர் அவையினரை நோக்கி, ''நம்முடைய ராஜ்ய பரி பாலனத்தின் கீழ் இவ்விதம் சில அசம்பாவிதமான நிகழ்ச்சிகள் நடந்துள்ளது இதுவே முதல் தடவையாகும். இந்த விபரீதங்கள் அனைத்தும் நம் நாட்டுக்குப் புதிய விருந்தினர்களாக வந்துள்ள அரபுகளை ஒட்டியே நிகழ்ந் துள்ளது. அவர்கள் விருந்தினர்களா ? அல்லது நமது

PDF ISLAM

விரோதிகளா? என்பதை நாம் சரியாக ஆராயாமல் போனால், நாட்டுக்கே பெரிய தவறு இழைத்தவர்களாவோம்! ஆதலால், அவர்களை நேற்று நண்பர்களாக அழைத்து மரியாதை கொடுத்தது போலவே, இப்போதும் அவர்களின் முக்கிய தலைவர்கள் 20 பேர்களை அழைத்து மரியாதை கொடுத்து அமரச்செய்து, நமது விசாரணைகளை மேற்கொள்வோம்! அவர்கள் குற்றவாளிகள் எனத் தெரிந்தால் இங்கேயே அவர்களை மடக்கிவிடுவோம்!'' என்று மன்னர் கூறி, ராஜகுருவின் ஒப்புதலைக் கேட்பது போல் அவர் முகத்தை நோக்கினார்.

வேதனையும், விரக்தியும் தோன்றியமுகத்துடன் காணப்பட்ட ராஜகுரு, கம்பீரமாக எழுந்து, ''மன்னர் பிரானே! தங்களுடைய எந்த விருப்பத்துக்கும் ராஜகுரு பாரம்பர்யம் மாறாக இராது! இந்த ராஜ்யத்தின் நன்மை மட்டுமல்ல, மன்னர் பரம்பரையின் பெருமையையும், கண்ணியத்தையும் நாம் பாதுகாக்க கடமைப்பட்டுள்ளோம்! அதற்கு ஆதமான உதவிகளைச் செய்யவும் பொறுப்பேற்றுள்ளோம்! இதுவரை அவ்விதமே நடந்தும் வருகிறோம்! நமது நாடு தெய்வீகமானது! நமது அரசு பரிசுத்தமானது! இங்கு அரசு தோன்றிய காலத்திலிருந்து, தெய்வீகத் தன்மையும் பரிசுத்தமும் பாதுகாக்கப்பட்டு வருகிறது! அது நேற்று முதன் முதலாகச் சோதனைக்கு ஆளாகியிருக்கிறது! நமது அருட் பெற்ற அவைக்குள் மிலேச்சர்கள் ஒருபோதும் அடியெடுத்து வைக்க அனுமதிக்கப்பட்டதில்லை. ஆனால் நேற்று அது நடந்துவிட்டது! மிலேச்சர்களுக்கு சம அந்தஸ்து கொடுக்கப்பட்டுவிட்டது. இதற்காகநாடு முழுவதும் ''தோஷம் கழிக்கும் பூஜை''களை நடத்த ராஜகுரு சந்நிதானம் முடிவு செய்துள்ளது! இந் நிலையில் மீண்டும் அவர்களை அவைக்குள் அனுமதிப்பது மிகவும் பயங்கரமான செயலாகும் என்பது தம்முடைய உறுதிமிக்க எண்ணமாகும்! நேற்று அவர்கள் உள்ளே நுழைந்த

PDF ISLAM

''தோஷம்'' தான் இத்தனை விவகாரங்களுக்கும் காரணம் என்பது நமக்குப் புரிகிறது. மீண்டும் அவர்களை அனுமதித்தோமானால் மிகப் பெரும் தோஷம் விளையக்கூடும் என்று அஞ்சுகிறோம். மன்னர் பிரானவர்கள் இப் பொறுப்பை நம்மிடமும். மூத்த அமைச்சர் சேதுபத்திரர் இடமும் விட்டால் வெகு சரதாரணமாக, இன்று மாலைக்குள் எல்லா பிரச்னைகளையும் தீர்த்துவிடுவோம்''' என்று உணர்ச்சி மிக்க ஒரு குட்டிப் பிரசங்கமே செய்தார்.

இதற்கிடையில், நம்பீஸ்வரரை அழைத்துவரச் சென்ற துணைத் தளபதி திரும்பி வந்து, மார்த்தாண்டர் காதில் ஏதோ சொன்னார், அவர் மூத்த அமைச்சரிடம் சொல்லப் போனார்.

இந்த சமயத்தில் மன்னர் சிறிது குரலை உயர்த்தி, ''மார்த்தாண்ட பூபதி அவர்களே ! ரகசியம் வேண்டாம்! பகிரங்கமாகக் கூறுங்கள் !'' என்று உத்திரவிட்டார்.

''மன்னர் பிரானே! நம்பீஸ்வரர் மருத்துவமனையிலும், இல்லை. அவர் இல்லத்திலும் இல்லை ? மற்ற இடங்களிலும் காணப்படவில்லை'' என்றார்.

மன்னர் சேரமான் பெருமாள் சில வினாடிகள் யோசித்து விட்டு, ''ராஜகுரு மகா சந்நிதானம் அவர்களே ! தங்களின் மேலான கருத்துக்களுக்கு நான் மிகவும் மதிப்பளிக்கிறேன் ! ஆனால் எனக்கு ஒன்றுமட்டும் விளங்கவில்லை ! அதாவது, பறையர்கள், புலையர்கள், நாயாடிகள் முதலான மிலேச்சர்கள் நமது நாட்டில்தானே உள்ளனர் ? நம் நாட்டுக்கு வந்துள்ள அரபு நாட்டைச் சேர்ந்த வியாபாரிகளை நாம் எப்படி மிலேச்சர்கள் என்று முடிவு செய்யலாம் ? அவர்களை நிறத்தைக்கொண்டு பார்த்தால் நம் நாட்டிலுள்ள அந்தணர்களைவிட அழகிய நிறமுடையவர்களாகவும் உள்ளனர் ! நாயாடிகளைவிட கறுத்தவர்களாகவும் உள்ளனர், ஆனால் அவர்கள் தங்கள்நிறத்தைக்

PDF ISLAM

கொண்டு உயர்வு தாழ்வு கற்பித்துக்கொள்பவர்களாய் காணப்படவில்லை. அதற்கு மாறாக, கறுப்பர்களில் சிலரிடம் சிவந்தவர்கள் மரியாதைக் காட்டுவதையும், நம்மால் காணமுடிகிறது. அதையும்விட மேலாக, நமக்குக் கிடைத்த தகவலின், கறுப்பரைத் தலைவராக முன் வைத்து, சிவந்தவர்களும் கறுப்பர்களும் தோளோடு தோள் சேர்ந்து நின்று கடவுள் வழிபாடு செய்கிறார்கள் என்று அறிய முடிகிறது. அவர்களிடையே உயர்வு-தாழ்வு இல்லாத மட்டுமல்ல, நம் நாட்டு மக்களிடமும் அவர்கள் உயர்வு-தாழ்வு காட்டாமல் நடந்துகொண்டுள்ளார்கள் என்ற செய்தியும் நமக்கு எட்டியுள்ளது. அத்தகையோரை நாமே மிலேச்சர்கள் என்று ஒதுக்கி, அவர்களின் வருகையால் ஏற்பட்ட தோஷம் நீங்க, நாடு முழுவதும், ''தோஷம் கழிக்கும் பூஜை'' நடத்தத் தாங்கள் முடிவெடுத்திருப்பது மிகவும் அவசரப்பட்ட விஷயம்போல் என் மனதில் படுகிறது, குருமகா சந்நிதானம் அவர்கள் இவ்விஷயத்தில் சிறிது பொறுமையைக் கடைபிடிக்க வேண்டும் என்பது இந் நாட்டின் மன்னராகிய நமது விருப்பமாகவுள்ளது'' என்றார்,

ராஜகுருநாதருக்கும் மன்னர் பிரானுக்கும் இம்விதம் நேரடியான ஒரு விவாத முறை தோன்றியது அரசவை வரலாற்றிலேயே ஒரு புதுமையான நிகழ்ச்சியாக இருந்ததால். அவையில் இருந்த மந்திரிப் பிரதானிகளும், பிரமுகர்களும் மிகவும் ஆச்சரியத்தோடு கவனித்தனர். மன்னர், இவ்விதம் பகிரங்கமாக அவையில் பேசி இதுவரை யாரும் கேட்டதில்லை. குறிப்பாக மூத்த அமைச்சர் சேதுபத்திர வர்மா, படைத் தளபதியும் அமைச்சருமான மார்த்தாண்ட பூபதி ஆகியோர் வியப்புக் கடலில் ஓரேயடியாமூழ்கிவிட்டனர். மேலும் அன்றைய அவை பொதுவாக நடைபெறும் சபையாக இல்லாமல், குறிப்பிட்ட சில முக்கியமானவர்கள் மட்டுமே கலந்துகொண்டிருந்ததால், முந்

PDF ISLAM

திய மன்னர்களைப் போல இந்த மூன்றும் சேரமான் பெருமாள் ராஜகுருவுக்கோ மற்ற யாருக்குமோ அடிமைப்பட்டவர் அல்லவென்பதையும், சுதந்திரமாகச் சிந்தித்துச் செயல்படக்கூடியவர் என்பதையும் இப்போது தெளிவாகப் புரிந்துகொள்ள வாய்ப்புக் கிடைத்தது.

ராஜகுருநாதர்கூட ஆச்சரியப்பட்டுப் போனார். தன் பேச்சுக்கு இவ்விதம் பட்டவர்த்தனமான மறுப்பு மன்னரால் சொல்லப்படும் என்பதை அவர் அறவே எதிர் பார்க்கவில்லை. அவரை அறியாமல் அவர் முகத்தில் ஒருவித அச்சமும் வெளிப்பட ஆரம்பித்தது. அறிவாளியான அவர் அங்குள்ள சூழ்நிலையைப் புரிந்துகொண்டார். வந்திருப்பவர்களில் மிகப் பெரும்பாலோர் மன்னருடைய கருத்தை ஏற்றுக்கொண்டவராகவே காணப்பட்டதால், அந்தச் சூழ்நிலையில். தன்னைப் பற்றி வேறு எண்ணங்களுக்கு இடங்கொடுத்துவிடக்கூடாது என்று புரிந்துகொண்டு முகத்தில் புன் சிரிப்பை வரவழைத்துக்கொண்டு, ''மன்னர் பிரானின் விருப்பமே மகாகுருவின் விருப்பமுமாகும். மகாப் பிரபுவின் எண்ணங்களுக்கு மாறாக இந்த மகா சந்நிதானம் ஒரு போதும் இருக்காது'' என்றார்.

இந்த வார்த்தைகளின் மூலம் அவையில் கூடியிருந்தோர் முகங்களிலும் மகிழ்ச்சி வெளிப்பட்டது. மன்னர் பிரானுக்கும் மகா குருவுக்கும் ஏதோ பெரிய அளவில் கருத்து வேறுபாடு ஏற்படுவது போன்று காணப்பட்ட சூழ்நிலை, ராஜகுருநாதரின் பேச்சால் திடீரென மறைந்துவிட்டது கண்டு அவர்கள் ஆனந்தங்கொண்டனர்.

ஆனால், மன்னர் பிரானுடைய முகத்தில் எந்தவிதமான மாற்றமும் வெளிப்படவில்லை. அவர் ஏதோ கண்டிப்பான உள்ளத்துடன் இருக்கிறார் என்றே அவர் முகம் காணப்பட்டது.

PDF ISLAM

ராஜகுருநாதரின் பேச்சுக்குப் பிறகு, அவர் மூத்த அமைச்சர் சேதுபத்திரரை நோக்கி சமிக்ஞைச் செய்ய, அவர் மன்னர் சமீபம் வந்து நின்று தம் வாயில் கையை வைத்துக்கொண்டு, காதைமட்டும் வாய்க்குச் சமீபம் வைத்துக் கேட்டார். மன்னர் ஏதோ சொல்ல, அதைக் கேட்டு, அவர் மார்த்தாண்ட பூபதியை அழைத்து அவர் காதுகளில் மட்டும் விழும்படியாக ஏதோ சொன்னார். அவர் அவசரமாக அவையிலிருந்து வெளியேறினார்,

அடுத்து, மன்னர் அவையினரை நோக்கி, ''என் அன்புக்கும் மரியாதைக்கும் உரியவர்களே! நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் நேற்று என் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ள வந்த பிரதானமான உங்களை, இன்று கூடும் தனி அவையில் பங்கு கொண்டு செல்ல, நான் என் மெய்க் காவலர்கள் மூலம் தனிப்பட்ட முறையில் அழைப்பு விடுத்ததை ஏற்று இங்கு வருகை தந்துள்ளதற்கு எனது நன்றியை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்குக் காரணம் நாட்டின் எதிர்காலத்தைப் பற்றியதொரு மிக முக்கியமான விஷயத்தில் உங்கள் அனைவருடைய ஆலோசனைகளையும் வேண்டும் என்பதேயாகும். இந்த விஷயத்தில், ஆட்சி அதிகாரத்திலுள்ள நாங்களே ஒரு முடிவு எடுத்துவிட முடியும் என்றாலும், அதில் தவறுகள் நேர்ந்துவிடுமோ என்ற அச்சம் எனக்கு ஏற்பட்டுள்ளது.

இது நமது உள்நாட்டினுடைய விவகாரம் மட்டுமல்ல. அந்நியர்களும் சம்பந்தப்படுவதாகும். அவர்களை நேற்று இந்த அவையில் நீங்கள் சந்தித்தீர்கள். நம் நாட்டுடன் வியாபாரத் தொடர்புகள் வைத்துக்கொள்ள வந்துள்ளதாகக் கூறுகின்றனர். உண்மையில், அவர்கள் நல்லவர்வர்களாக இருந்து, பல நாட்டுப் பொருட்களை நம் நாட்டுக்குக் கொண்டுவந்து கொடுப்போராகவும், நம் நாட்டுப் பொருட்களை அவர்கள் வாங்கிச் செல்லக்கூடியவராகவும்

PDF ISLAM

இருந்தால், இந்தப் புதிய தொடர்பை இந்த பூமியில் ஆரம்பித்து வைக்கும் சேர நாட்டவராகிய நாம் பெரிய பெருமைக்குரியவர்கள் என்பதிலும், நம் நாட்டில் செல்வப் பெருக்குக்கு வழி திறந்துவிட்டவர்களாகவும் ஆவோம் என்பதிலும் ஐயமில்லை.

ஆனால், சில துரதிருஷ்டவசமான சம்பவங்கள் நேற்று இரவு நேர்ந்துள்ளது என்பதை, •ஆரம்பத்தில் ராஜகுரு மகான் அவர்கள் குறிப்பிட்டதிலிருந்து நீங்கள் அறிந்து கொண்டிருப்பீர்கள். ஆதலால், எல்லா உண்மைகளும் வெளிப்பட அவர்களை நேரில் விசாரணை செய்வதென்று முடிவு கட்டியுள்ளோம். இதில் நீங்கள் அனைவரும் கலந்து கொள்ளவேண்டும் என்பது எனது விருப்பமாகும், உங்கள் ஒவ்வொருடைய மனதில் என்னென்ன ஐயங்கள் தோன்றுகின்றனவோ அவற்றை நேரடியாக வெளிப்படுத்தி, அவர்களை எவ்விதமெல்லாம் மடக்க முடியுமோ அவ்விதம் மடக்க வேண்டும். இந்த உரிமை இங்குள்ளோர் அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளது'' என்று கூறிமுடிக்கவும் அதே சமயம் ராஜசபையின் பெரிய கதவுகள் திறக்கப்பட, அனைவரும் ஒரேவிதமான வெண்ணிற ஆடையுடுத்தியவர்களாக; நான்கு நான்கு பேராக ஐந்து வரிசையினர் அரபிகள் உள்ளே நுழைந்து. ஒரேவிதமாகத் தலையைத் தாழ்த்தி, நெஞ்சில் கை வைத்து அவர்கள் முறைப்படி மரியாதை செய்தனர்.

அவர்களுடைய மரியாதைக்கு எப்படி பதில் மரியாதை செய்வதென்று அவையிலுள்ளோருக்குப் புரியவில்லை. மன்னர் மட்டும் தம் இரு கைகளை உயரத் தூக்கி ஆசீர்வதிப்பதுபோல காட்டினர்.

அவர்களுக்காகவே ஏற்கனவே போடப்பட்டிருந்த ஆசனங்களில் அவர்கள் அமரவைக்கப்பட்டனர். அவையிலுள்ளோரெல்லாம் கூர்ந்து அவர்கள் ஒவ்வொருவரை

PDF ISLAM

யும் நோட்டமிட்டுக்கொண்டிருந்தனர். அந்த அமைதியைக் கலைக்கும் விதத்தில், மன்னர் அவர்களை நோக்கி, ''நான் உங்களுக்கு அறிவித்தபடி, தமிழ் பேசத் தெரிந்தவர்கள், பேசத் தெரியாவிட்டாலும் பேசினால், புரிந்துகொள்ளக் கூடியவர்கள் மட்டும்தானே இங்கே வந்துள்ளீர்கள்?'' எனக் கேட்டார்.

அவர்களில் மிகவும் சரளமாகத் தமிழ் பேசத் தெரிந்த முஸ்லிம் பின் அத்ஹம் எழுந்து. ''ஆமாம்! மகாப் பிரபு! தங்கள் ஆணைப்படியே நடந்துள்ளோம்'' என்று கூறினார்.

''மிக்க மகிழ்ச்சி! இப்போது நாமும் இந்த அவையில் உள்ளோரும் கேட்கப் போகும் கேள்விகளுக்கு, நீங்கள் கொஞ்சமும் உண்மையை மறைக்காமல் கூற வேண்டும்! இந்த அவையில் ஏதோ காரணத்தாலோ சிறிதளவு பொய்ப் பேசினாலும், இந்த அவை உங்களைச் சிறிதும் மன்னிக்காது என்பதை முதலில் நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்'' என்றார் மன்னர்.

''நாங்கள் எந்தக் காரணத்தாலும் பொய்ப் பேசுவதில்லை மகாப் பிரபு! மேன்மைக்குரிய இந்த அவையோரும் இதை உறுதியாக நம்பலாம் என்பதை மிகவும் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறோம்!'' என்றனர் அரபிகள்,

மன்னர் சேரமான் பெருமாள், மூத்த அமைச்சர் சேதுபத்திரரை நோக்கி, ''நீங்கள் விசாரணையை ஆரம்பியுங்கள்!'' என்றார்.

மன்னர் கடைபிடித்த இந்த முறை முற்றிலும் வழக்கத்துக்கு மாறாக இருந்தது. பொதுவாக, அரசவை கூடுவதற்கு முன்னால் ராஜகுருதான் மன்னரைத் தனித்துச் சந்திப்பார். அவர்கள் பேசி முடிவெடுத்தக் கருத்துக்களை, அவர்தான் அவை [illegible] அறிவிப்பார். அதுபோன்றே எந்த

PDF ISLAM

வழக்குகள் அவையில் வந்தாலும் ராஜகுருவே விசாரணை களை மேற்கொண்டு, மன்னரிடம் ரகசியமாகப் பேசி, மன்னர் சார்பாகத் தீர்ப்புகளை வழங்குவார். மூத்த அமைச்சருக்கும் மற்ற அமைச்சர்களுக்கும் ராஜகுருவே ஆணைகளையும் பிறப்பிப்பார். அவர்களெல்லாம் அவையில் பொம்மைகள் போலிருந்து, செயலில் இயந்திரங்களைப் போல இயங்குவர். சுருங்கச் சொன்னால் ராஜகுருதான் ஆட்சியை நடத்துகிறார் என மக்கள் நம்பக்கூடிய விதத்தில் இருக்கும். மேலும் ராஜகுருவின் ஆதிக்கத்தில் ஒற்றர் படையும் இருந்ததால், ராஜகுரு மீது மக்களுக்கு ஒருவித அச்சப்பாடும் இருந்தது.

அன்றைய அவையில், ராஜ குருவுக்கும் அரசருக்கும் கருத்து வேறுபாடு வந்ததுபோன்ற ஒரு நிலையும், அதன் பிறகு ராஜகுருவின் பணியினால் சமாதானம் ஏற்பட்டதும், அதே சமயம் அவையிலிருந்த அனைவருக்கும் விசாரணைக்கான அதிகாரத்தை மன்னர் வழங்கி, மூத்த அமைச்சரைக் கொண்டு விசாரணையை தொடங்கச் செய்ததும் முற்றிலும் புதுமையாக இருந்தது. இதன் மூலம், இந்த மூன்றும், சேரமான் பெருமாள் மன்னர், எற்கனவே இருந்த மன்னர் களைப்போன்றவரல்ல என்றும், முற்றிலும் சுதந்திரமான கருத்தும் நடவடிக்கையும் உடையவர் என்பதும் பகிரங்கமாக வெளிப்பட்டது. இது அமைச்சர்கள் மத்தியிலும், மற்ற முக்கிய பிரமுகர்கள் மத்தியிலும் ஒரு புதிய தன்னம்பிக்கையையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தியது. சிலருக்கு ராஜகுருவை நினைத்தபோதும், அவருடைய முகத்தைப் பார்த்தபோதும் ஒருவித அச்சப்பாடும் தோன்றியது.

இந்நிலையில் மன்னருடைய ஆணைப்படி மூத்த அமைச்சர் சேதுபத்திரர் விசாரணையை ஆரம்பஞ்செய்தார். அவருக்கும் மற்றவர்களுக்கும் பதிலளிக்கக்கூடியவராக முஸ்லிம் பின் அத்ஹமே பிரதானமாக விளங்கினார்.

''உங்களில் யார் தலைவர்?''

PDF ISLAM

''தலைவர், தொண்டர்கள் அல்லது வேலைக்காரர்கள் என்று எங்களிடம் தனி அந்தஸ்துடையவர்கள் யாரும் இல்லை. நாங்கள் அனைவருமே வியாபாரத்தில் பங்குதாரர்கள், மூலதனத்தின் அடிப்படையிலும், உழைப்பின் தன்மையிலும் எங்கள் பங்குகளைப் பகிர்ந்துகொள்கிறோம். ஆயினும் ஒவ்வொருவரும் தலைவராகப் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளோம். உதாரணமாகக் கப்பலைச் செலுத்துவது, உணவு தயாரிப்பது, வியாபாரப் பொருட்களைச் சேகரிப்பது, விற்பது, தற்காப்புகள் செய்துகொள்வது முதலானவற்றைச் சொல்லலாம்''

''நீங்கள் இந்த நாட்டில் கரை இறங்கவேண்டிய நிலை எப்படி ஏற்பட்டது? ஏற்கனவே திட்டமிட்டு நீங்கள் இங்கு வந்து இறங்கியுள்ளீர்களா?''

''எங்களுடைய போக்கு வரத்துக்கள், வியாபாரங்கள் ஆகியவற்றின் எல்லை சீனு தேசம் வரையிலுள்ளது. முஹல்ல தீவுகள், ஜாவா. சுமாத்ரா. கூச்சிங், சரவாக், புருனே வழியாக நாங்கள் வட சீனுவின் கடல் எல்லைவரைச் சென்று; தாயகம் திரும்புவோம். சில சமங்களில், எங்கள் வியாபாரத்தையும் உடல் நிலையையும், மன நிலையையும் பொறுத்து, சில நாடுகளோடு திரும்பிவிடுவோம். இந்த முறை முஹல்ல தீவுகள்வரை வந்தபோதுதான், இங்கு புதிய ஆட்சி அமைந்துள்ள செய்தியைக் கேள்விப்பட்டோம். மன்னர் பிரானின் ஆசியையும், இந் நாட்டு மக்களின் நல்லெண்ணத்தையும் பெற்றுச் செல்ல நாங்கள் எங்கள் பாய்மரத்தைத் திருப்பினோம்.

''நேற்று இந்த அரசவைக்கு நீங்கள் வந்த பிறகு உங்களில் ஐந்துபேர் விருந்தினர் மாளிகையில் தங்க வைக்கப்பட்டீர்கள்! மற்றவர்கள் கடற்கரை கட்டிடத்தில் தங்கினர் அல்லவா? விருந்தினர் மாளிகையில் இருந்தவர்கள், மேற்கொண்டு இரண்டுபேரை. கடலோரக் கட்டிடத்திலிருந்து

PDF ISLAM

உதவிக்கு அழைத்துக்கொண்டீர்கள் ! அதன் பிறகு உங்களில், இரவில் யார் யார் கடலோரக் கட்டிடத்துக்குப் போய்த் திரும்பி வந்தீர்கள் ? அல்லது கடலோரக் கட்டிடத்திலிருந்து யார் யார் விருந்தினர் மாளிகைக்கு வந்துவிட்டுப் போனார்கள் ?''

இந்தக் கேள்வியை சேதுபத்திரர் கேட்டவுடன் அரபுகள் சில நிமிடங்கள் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு அரபு மொழியில் பேசிக்கொண்டபின், முஸ்லிம் பின் அத்ஹம், மன்னரை நோக்கி. ''மகா பிரபு! அப்படியொரு சம்பவம் ஏதும் நடக்கவில்லை!'' என்றார்.

விருந்தினர் மாளிகைக்கு உங்களில் இருவரை அழைக்க வந்தவர்கள் எத்தனைபேர்?''

இந்தக் கேள்விக்கு முஸ்லிம் பின் அத்ஹம் பதில் சொல்லவில்லை. அவருக்குப் பதிலாகக் கடலோரக் கட்டிடத்திலிருந்த ஒரு கறுப்பு நிறத்தவர் எழுந்து ''ஒருவர்தான் பிரபு!'' என்றார்.

''அவருடன் காவலர் உடை அணிந்த ஒருவர் வரவில்லையா?''

''இல்லை பிரபு !''

உடனே, மன்னர் குறுக்கிட்டு, ''நீங்கள், சிலர் அரசு விருந்தினர் மாளிகையிலும், சிலர் கடலோரக் கட்டிடத்தில் மட்டும்தான் இருந்தீர்களா ? உங்களில் சிலர் வேறு இடத்தில் இருந்தீர்களா?'' என்று கேட்க எல்லோரும் வியப்புடன் மன்னரின் இந்தப் புதிய கேள்வியை ஆச்சரியத்துடன் கவனித்தனர்.

அதற்கு, அரபுகளில் வெறொருவர் எழுந்து ''கப்பலில் சிலர் காவல் இருந்தோம்''

''கப்பலில் காவலில் இருந்தோர்களில் நீர் ஒருவரா ? என்று கேட்க. ''ஆமாம் பிரபு'' என்றார் அவர்.

PDF ISLAM

''இரவு என்ன நடந்தது ? என்று மன்னர் கேட்டார்.

நள்ளிரவில் கப்பலின் மேல் தளத்தில் நான் காவல் நின்றபோது, ஒரு நபர் கையில் ஏதோ பையுடன் எங்கள் கப்பலை நோக்கி வந்தார். அவரை பின் தொடர்ந்து மூன்று பேர் மறைந்து மறைந்து சிறிது தூரத்தில் வந்து கொண்டிருந்தனர். தென்னந் தோப்பை தாண்டி, திறந்த வெளிக்கு வந்தவுடன், அவர் அந்த மூன்று பேரையும் பார்த்து விட்டார். உடனே மிகவும் வேகமாக எங்கள் கப்பலை நோக்கி ஓடி வந்தார். கப்பல், கடலில் சிறிது தூரத்தில் நங்கூரம் பாய்ச்சப்பட்டிருந்ததால், எங்களால் கரைக்கு வந்து அவரைக் காப்பாற்ற முடியவில்லை. பின் தொடர்ந்து வந்த மூவரும், கடலோரத்திலேயே அவரை வளைத்துப் பிடித்துக் கட்டி இழுத்து சென்றனர். அவர் கையிலிருந்த பையையும் அவர்கள் பறித்து சென்றனர்'' என்றார்.

''அவர்களை அடையாளம் சொல்ல முடியுமா''! என்று மன்னர் கேட்க, ''போதிய நிலவு வெளிச்சம் இருந்தாலும் அவர்களுடைய முகங்களை என்னால் சரியாகப்பார்க்க முடியவில்லை'' என்றார்.

ராஜகுரு உடனே குறுக்கிட்டு, ''இது நல்ல கதையாகவுள்ளது! தளபதி மார்த்தாண்டர் இது பற்றி என்ன சொல்கிறார்?'' என்று கேட்டார்.

ராஜகுரு 'ஹ ஹ் ஹா வென்று கேலிச் சிரிப்பை வெளியிட்டு, ஒற்றர்படையை சேர்ந்தவர்களும் அவ்விதம் யாரையும் விரட்டவும் இல்லை, இழுத்து பிடித்துக் கொண்டும் வரவுமில்லை என்பது எனக்கு நிச்சயம்தெரியும்! இருந்தால் நம்பீஸ்வரர் என்னிடம் சொல்லியிருப்பார் இதுசரியான கட்டுக் கதையாகவுள்ளது!'' என்றார்.

ஆனால், கப்பல் காவலில் இருந்த அரேபியோ, ''மகா குருநாதர் அவர்களே நான் சொல்வது முற்றிலும்

PDF ISLAM

உண்மை! அந்தக்காட்சியை நான்மட்டுமல்ல, மேலும் சிலரை எழுப்பி, நாங்கள் அனைவரும் பார்த்தோம்!'' என்றார் அவர்.

ராஜகுரு மேலும், ஹ ஹ்ஹ ஹா என்று சிரித்தார்.

மன்னர், முஸ்லிம் பின் அத்ஹமை நோக்கி, நேற்றிரவு நீங்கள் தங்கியிருந்த, விருந்தினர் மாளிகையிலிருந்து, சேரமான் வம்சத்து விலைமதிப்பற்ற நவரத்தின கிரீடம் திருட்டுப் போயுள்ளதுபற்றி உங்களுக்கு என்ன தெரியும்?'' என்று கேட்டார்.

''இன்று காலையில்தான் எங்களுக்கு கலைப்பொருட்கள் காட்சியகம் சுற்றிக்காட்டப்பட்டது. அப்போதுதான், காலியாக இருந்த ஒரு சிறைக்கண்ணாடிப்பெட்டி எங்களுக்குக் காட்டப்பட்டு, அதிலிருந்த ஒரு அரச கிரீடம் திருட்டுப் போய்விட்ட தாகச் சொல்லப்பட்டது.''

''இந்தத் திருட்டு சம்பந்தமாக உங்களுக்கோ உங்களுடனிருந்த நண்பர்களுக்கோ ஏதாவது தெரியுமா?'' என்று மன்னர் கேட்க, முஸ்லிம் பின் அத்ஹம், தன் நண்பர்களிடம் அரபி மொழியில் விளக்கமாகக் கேட்க, அவர்கள் அனைவரும் ஒரே முகமாகத் தலையை அசைத்து, ''தங்களுக்குத் தெரியாது'' என்பதாகச் சைக்கினைச் செய்தனர்,

மன்னர் மீண்டும், ''கடலோர மாளிகையில் இருந்த உங்கள் சகாக்களுக்கு இதுபற்றி ஏதாவது தெரியுமா?'' என்று கேட்க, அவர்களில் ஒருவர் எழுந்து, ''மன்னர்பிரான் அவர்கள் சொல்லிய போது தான் கிரீடம் திருட்டுப்போன விஷயமே எங்களுக்குத் தெரியும்!'' என்றார்.

ராஜகுரு உடனே குறுக்கிட்டு, உங்களை நாங்கள் எப்படி நம்புவது? எங்கள் மக்களில் சிலர் நீங்கள் கடற் கொள்ளைக்காரர்கள் என்று சந்தேகிக்கிறார்கள்!'' என்று சூடாகச்

PDF ISLAM

சொன்னார். இதைக் கேட்ட அவையிலுள்ளோரிடம் ஒரு பரபரப்பு ஏற்பட்டது.

முஸ்லிம் பின் அத்ஹம் கொஞ்சமும் பொறுமைக்குறையாமல், ''மகாப்பிரபு! இப்போது தரையில் நடந்துள்ள கொள்ளையைப் பற்றியல்லவா மன்னர் பிரான் விசாரணையை மேற் கொண்டிருக்கிறார்கள்? மேலும் மக்கள் எங்களைப்பற்றி எப்படியாவது சந்தேகப்படட்டும்! மேன்மைக்குரிய தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

ராஜகுரு முகத்தில் கோபம் தொனிக்க, ''எனக்கு புத்தி சொல்லவோ, என்னைக் கேள்வி கேட்கவோ உங்களுக்கு இங்கு அனுமதியில்லை! நாங்கள் கேட்பதற்குத்தான் நீங்கள் மரியாதையாக பதில் சொல்ல வேண்டும்!'' என்று கர்ஜித்தார்.

''மன்னிக்க வேண்டும் மகாப்பிரபு! நாங்கள் கடற்கொள்ளைக்காரர்களோ, அல்லது தரைத்திருடர்களோ அல்ல! நாங்கள்வியாபாரிகள்! எங்களை யாராவது சந்தேகப்பட்டால், அதன் காரணம் சொல்லப்பட்டால் நாங்கள் பதிலளிக்கக் காத்திருக்கிறோம்!'' என்று மரியாதையாகக் கூறினார்.

ராஜகுரு ஒருவாறுகனைத்துக் கொண்டு, ''நமக்கே உங்கள் மீது சந்தேகம் இருக்கிறது! நீங்கள் நேற்று சபையில் அளித்த அவ்வளவு தங்க மொகராக்களும், நன் முத்துக்களும், வாசனைத் திரவியங்களும் உங்களுக்கு எப்படிக் கிடைத்தன? உங்களிடமிருந்து இந்த சபை எதுவும் எதிர் பாராத நிலையில் அவற்றை வாரிக் கொடுக்க ஏன் முன் வந்தீர்கள்? இவைகள் உங்களால் முறையாக சம்பாதித்ததாக இருக்கமுடியாது! அவை உங்கள் வியாபாரப்பொருட்களாக இருந்தால், நீங்கள் அவ்விதம் வாரிக் கொடுத்திருக்க முடியாது! மேலும் நீங்கள் உயர்ந்த வர்க்கத்தினராக இருந்தால் உங்களவர் கடலோரத்தில் வாழும் புலையர்களோடு

PDF ISLAM

சமமாகப் பழகி இருக்க முடியாது! அதோடு நீங்கள் ஒவ் வொருவரும் எந்த நேரத்திலும் ஆயுதங்களோடு இருக்கிறீர் கள்''! என்றார்.

''குருமகான் அவர்கள் நேரடியாகவே தங்கள் சந்தேகங் களை வெளிப்படுத்தியதுகண்டு மிகவும் நன்றி தெரிவிக் கிறோம். நேற்று நாங்கள் வழங்கியுள்ள தங்க மொகராக் களும், முத்துக்களும், வாசனைத் திரவியங்களும் எங்களைப் பொறுத்து மிக சாதாரண பொருட்களே ஆகும். எங்கள் நாட்டுக்கு எதிர்க்கரையில் உள்ளது ஆப்பிரிக்கா என்ற கண்டம். என்னுடையவும் என்னைப் போன்று கறுநிறத்தை யுடையவர்களாகவும் உள்ள மக்களின் பூர்வீகமும் அந்த நாடுத்தான்! அந்த நாட்டு மக்கள், தங்க மண்களைச்சேகரிப் பதிலும் வைரக் கற்களைத் திரட்டுவதிலும் திறமையுடைய வர்கள். ஆனால், தங்கத்தை மண்ணிலிருந்து பிரித்தெடுக் கவோ, வைரங்களை பட்டைத் தீட்டி உருவகப்படுத்தவோ அவர்களுக்குத் தெரியாது, நாங்கள் மிகக் குறைந்த விலைக்கு அந்த மண்ணையும் கற்களையும் வாங்கி, அவற்றை உருவகப் படுத்துவது எங்கள் பயணகாலத்தில் நாங்கள் செய்யும் தொழில். மேலும் ஜிபுத்தி என்ற தீவு முத்துக்களின் பிறப் பீடமாகும். அங்கு, ஒரு சிறுவன் கூட கடலில் மூழ்கி முத்துச் சிப்பிக்களை எடுத்துக் கொண்டு வந்து விடுவான். நாங்கள் அவற்றை வாங்கிச்சுத்தப்படுத்தி முத்துக்களைச் சேகரிக்கிறோம். இதெல்லாம் எங்களுக்கு மிகச்சாதாரண வேலைகள்.

உங்களுக்கு மேலும் தேவையானல், நாங்கள் விற்பனை செய்ய முடியும்! அதுபோன்றே வாசனைத்திரவியங்களை மலர்களைக் கொண்டு நாங்கள் தயாரிக்கிறோம். எங்கள் கப்பலை நீங்கள் வந்து பார்த்தீர்களானல் அது கடலில் மிதக்கும் ஒரு தொழிற்சாலையாகவே இருக்கும். மேலும்

PDF ISLAM

நேற்று மன்னர் பிரான் சமுகத்தில் நாங்கள் அன்பளிப்புகள் வழங்கிய காரணம், எங்கள் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள். ''நீங்கள் உங்களுக்கிடையில் அன்பளிப்புகளை வழங்கிக் கொள்ளுங்கள்! அது உங்களுக் கிடையில் அன்பைப் பெருக்கும்'' என அருளிச் செய்துள் ளதேயாகும். மேலும், ''மனிதர்களிடையே பிறப்பால் உயர்வு தாழ்வில்லை! அவர்களுடைய குணங்களையும், நடத் தைகளையும் கொண்டுதான் உயர்வு தாழ்வு காணவேண்டும் என்பது எங்கள் நபியின் வழிகாட்டலாகும்'' என்று முஸ்லிம் பின் அத்ஹம் மிகவும் அடக்கமாக ஒரு நீண்ட பிரசங்கமே செய்தார்.

சபையினர் அனைவரும் இந்த விளக்கத்தை வியப்புடன் கேட்டவாறு இருந்தனர்.

ராஜகுரு ராமநம்பி ஏளனமாகச் சிரித்துவிட்டு, ''உங் கள் நபியைப்பற்றியும் உங்கள் பெருந்தன்மையைப்பற்றியும் நீங்கள் செய்த உபதேசம் எங்களுக்கு போதும்! காணாமற் போன, இந்த ராஜ்யதின் விலைமதிக்க வொண்ணாத எங்கள் ராஜப்பரம்பரையின் பெருமைக்குரிய சின்னமான, நவரத்ன கிரீடத்தைக் கண்டுபிடிக்க, உங்கள் இருப்பிடத்தைச் சோதனைப் போட நீங்கள் அனுமதிக்காததேன்?'' என்றார்.

''மகாப்பிரபு! அதற்கு நாங்கள் ஒருபோதும் தடை யாக இருக்கவில்லை! கிரீடம் காணாமற்போன விஷயம் எங் களிடம் மிகச் சாதாரணமாகச் சொல்லப்பட்டது. உண் மையாக நாங்கள் அதை ஏதோ உங்கள் உள்நாட்டு விஷயம் என்றும், நமக்குச்சம்பந்தமில்லாப் பிரச்னை என்றும் இருந்து விட்டோம்! நாங்கள் தங்கியிருந்த விருந்தினர் மாளிகைக் கும், மற்றவர்கள் தங்கியிருந்த கடற்கரை மாளிகைக்கும். தளபதி மார்த்தாண்ட பூபதி அவர்கள் வந்திருந்தார்கள், அவர்கள் சோதனைப் போட வேண்டும் என்ற விருப்பத்தைத் தெரிவித்திருந்தார்களானால் நாங்கள் ஒருபோதும் மறுத்

PDF ISLAM

இருக்கமாட்டோம்! நாங்கள் எங்களுக்கிடையில் விசாரணை செய்து கொண்டதில், துப்பறியும் பிரிவுத்தலைவர் நம்பீஸ்வரர் அவர்களும், அவர்களுடைய சகாக்களும் தங்களை யாரென்று அறிமுகம் செய்துக் கொண்டு, கிரீடம்காணமற் போன விஷயத்தைச் சொல்லி இருந்தார்களானால், அதற்கும் எந்தவிதமான ஆட்சேபணையும் செய்திருக்க மாட்டோம். அவர்கள் சாதாரண உடையில் ஆயுதங்களோடு கடற்கரை மாளிகையில் திடீரென நுழைய முற்பட்டபோது அவர்கள் கொள்ளைக்காரர்களோ என்ற சந்தேகத்தினால், நாங்கள் எங்களைத் தற்காப்புச் செய்துகொள்ள முற்பட்டோம்! இதுவே உண்மை!'' என்றார் முஸ்லிம் பின் அத்ஹம்.

இந்த விளக்கத்தின் இறுதிக் கட்டத்தின் போது, காவலர் தலைவர் வேகமாக உள்ளே நுழைந்து, ஓரப்பக்கமாகச் சென்று, தளபதி காதில் ஏதோ சொன்னார். அவர் திடுக்கிட்டவராய், அந்தச் செய்தியை மூத்த அமைச்சர் சேதுபத்திரரின் காதில் மெதுவாகக் கூறினார். அவர் மன்னர் பிரானை நெருங்கி, தன் கையால் வாயை மறைத்துக் கொண்டவராக மெதுவாகக் கூறினார். மன்னரோ அந்தச் செய்தியைக்கேட்டு எந்த வித பரபரப்பும் அடையாமல் மெதுவாகத் தலையை அசைத்துக் கொண்டார்.

தலைமைக் காவலர் உள்ளே நுழைந்த போதும், அவர் தளபதியிடம் ரகசியமாக ஏதோ சொன்னபோதும், அவர் மூத்த அமைச்சரிடம் கூறிய போதும். அவர் மன்னர் காதுக்குச் செய்தியை எட்டச் செய்தபோதும், ராஜகுரு தனது கூரிய பார்வையைச் செலுத்தி அவற்றையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்தார். அந்த ரகசியத்தை மன்னர் தன்னிடம் கூறுவார் என்று எதிர் பார்த்ததற்கு மாறாக, அரசரோ அது முக்கியமான விஷயம் அல்ல என்று மற்றவர்கள் நினைக்கத்தக்க விதத்தில், ''மற்றும் சந்தேகங்கள் உள்ளவர்கள்; அரபுகளிடம் தங்கள் கேள்விகளைக் கேட்கலாம்''

PDF ISLAM

என்று அறிவிப்புச்செய்து விட்டு, ''நான் ஆரம்பத்தில் சொன்னது போல இந்த அவையில் பேச ஒவ்வொருவருக்கும் சுதந்திரம் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை நினைவூட்டு கிறேன்'' என்று கூறி முடித்தார்.

அனைவரும் ராஜகுருவையே நோக்கினார்கள். அவர் முகம் ஏதோ கவலையால் சோர்வடைந்தது போல் இருந்தது பழைய உற்சாகம் எதுவும் அவரிடம் காணப்படவில்லை.

கூட்டத்தில் ஒரு பிரமுகர் எழுந்து, நீங்கள் என்ன மதத் தைச் சேர்ந்தவர்கள்? எந்த ஜாதியை சேர்ந்தவர்கள்? சைவப் பிரிவை சேர்ந்தவர்களா? சமணக் கூட்டத்தைத் தழுவியவர்களா? என்று கேட்டார்.

முஸ்லிம் பின் அத்ஹம் முகத்தில் புன் சிரிப்புத் தவழ ''இந்தக் கேள்வி பலமுறை கேட்கப்பட்டு நாங்கள் பதில் சொன்னதானாலும் இந்தப்பூமிக்குப்புதியவர்களாகக் காணப் படும் எங்களைப்பற்றி நீங்கள் ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள ஆர்வப்படுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். நாங்கள் இந்த நாட்டிலுள்ள எந்த மதத்தையோ அதன் பிரிவையோ சேர்ந்தவர்களல்ல! நாங்கள் ''இஸ்லாம்'' என்ற மார்க்கத்தைத் தழுவியவர்கள்; எங்களுக்கு ''முஸ் லிம்கள் என்று பெயர். எங்களுக்கிடையில். பிறப்பினாலோ, நிறத்தாலோ, பூமியாலோ, மொழியினாலோ; மனிதர்களிடத் தில் உயர்வு தாழ்வு இல்லை. ''குர்ஆன்'' என்பது எங்களு டைய வேதம்.

''முஹம்மது (ஸல்-அம்) என்பவர்கள் எங்கள் தலைவர் அவர்களின் போதனைகளை ஏற்று நடந்து வருகிறோம். எங் களுக்கு அவை அவ்வப்போது கிடைத்து வருகின்றன'' என்றார்.

மற்றொருவர் எழுந்து, ''உங்கள் முகம்மது இப்போது எங்கே இருக்கிறார்?'' என்று கேட்க, ''யதுரிப் என்னும்

PDF ISLAM

நகரில் இருக்கிறார்கள். அந்நகருக்கு ''மதீனா'' என்றும் இப்போது சிறப்புப் பெயர் விளங்குகிறது'' என்றார் அத்ஹம்.

''அவர்களுடைய போதனைகளை ஏற்று நடந்து வருவதாக நீங்கள் கூறினீர்களே, நீங்கள் கடலில் நீண்டகால பயணங்களில் இருக்கும்போது அவர்களுடைய போதனைகளை எவ்விதம் தெரிந்து கொள்வீர்கள்?'' என்று ஒருவர் கேட்டார்.

''நாங்கள் இந்த ஒரு கப்பலில் மட்டும் வர்த்தகப் பயணம் செய்யவில்லை. எங்களைப்போன்று பலரும் பயணம் செய்து கொண்டிருக்கிறார்கள். எங்களுக்குப்பின்னால் புறப்பட்டவர்கள், சிலர் துறைமுகங்களிலோ, அல்லது நடுக்கடலிலோ எங்களைச் சந்திப்பார்கள். அதுபோல எங்களுக்கு முன்னால் புறப்பட்டவர்களை நாங்களும் சந்திக்கும் வாய்ப்புகள் கிடைக்கும் அவ்வப்போது எங்களிடம் கிடைக்கும் குர்ஆன் வேத வசனங்களையும், முஹம்மத் (ஸல்-அம்) அவர்களின் போதனைகளையும் ஒருவருக்கொருவர்சொல்லித் தெரிந்து அதைப்பின்பற்றி நடந்துக் கொள்வோம்'' என்றார் அத்ஹம்.

''அவ்விதம் நீங்கள் நடந்து வருவதற்கு ஏதாவது ஒரு ஆதாரம் சொல்லமுடியுமா? என்று முதலில் வினவியவரே கேட்டார்.

''பல நூறு ஆதாரங்கள் உள்ளன! உதாரணத்துக்காக ஒன்றை மட்டும் சொல்கிறேன். நாங்கள் எங்கள் காலங்களைப் பெரும்பாலும் கடலில் கழிப்பவர்கள், கடலின் குளிர்ச்சியான நிலைமைக்கும், கப்பலை ஓயாமல் செலுத்திக் கொண்டிருக்கும் கடினமான உழைப்புக்கும், எங்களுக்குச் சாந்தியையும் உற்சாகத்தையும் அளித்து வருவது மது அருந்தலேதே யாகும்! ஆதலால் நாங்கள் எங்கள் கப்பல்களில் பல நாட்டு மதுபானங்களையும் பீப்பாய் பீப்பாய்களாகச் சேகரித்துக் கொண்டேதான் பயணம் செய்து கொண்டிருக்

போம்! மேலும் எங்கள் நாட்டிலிருந்து புறப்படும்போது கூட, எங்கள் உலாவுவகைகளையும், வர்த்தக பொருட்களை யும் கப்பலில் ஏற்றுவதற்கு முன்னால், மதுபீப்பாய்களைத் தான் முதலாவது ஏற்றிக் கொள்வோம். மதுவருந்தாமல் எங்களால் ஒன்றும் செய்ய முடியாது என்ற நிலை இருந்தது. தாங்கள் முஹம்மது (ஸல்-அம்) அவர்களின் மார்க்கத்தை முதலில் ஏற்றுக் கொண்ட சமயம் மது அருந்துவது முற்றி லும் தடை செய்யப்படவில்லை, ஆதலால் சில ஆண்டுகளுக்கு முன்பு நாங்கள் கடல் வாணிபப்பயணம் தொடங்கிய போது வழக்கம் போல் மது பீப்பாய்களுடன்தான் புறப்பட்டோம்; பயணப்பட்ட பத்து தினங்களில், எங்கள் நாட்டு துறைமுகப் பட்டினமான ''ஜாபித்'' என்ற நகரை வந்தடைந்து. ஒரு நாள் கரையிறங்கினோம். அப்போது, எங்களுக்கு, மதுவருந் துவது 'ஹராம்' தடுக்கப்பட்டது'' என்ற திருக்குர் ஆன் வசனமும், முஹம்மது (ஸல்-அம்) விளக்கம் சம்பந்தப்பட்ட செய்தியும் கிடைத்தன. உடனே நாங்கள், அல்லாஹ்வை வணங்கி நன்றிசெலுத்திவிட்டு, மதுபீப்பாய்களை உடைத்துக் கடலில் வீசினோம். இந்தச் செய்தியை நாங்கள் எதிரே சந் தித்த ஒரு கப்பலுக்கும், அறிவிப்புச் செய்தோம் அவர் ளும் அவ்விதமே எங்கள் கண்ணெதிரேயே தங்களிடமிருந்த மதுக்குடங்களையும், ஜாடிகளையும், பீப்பாய்களையும் உடைத் தெறிந்தனர். அவர்களும் பல கப்பல்களுக்கும் தகவல் எட்டச்செய்திருப்பார்கள்! இவ்விதமாகத்தான், கடல் வாணிபர்களாகிய நாங்களும் கரை வழி வர்த்தகக் ''கார வான்'' ஒட்டகக்கூட்டத்தினரும், குர்ஆன் வசனங்களையும், எங்கள் வழிக்காட்டி முஹம்மத் (ஸல்-அம்) அவர்களின் போதனைகளையும் வழி நெடுகப் பரிமாறிக் கொள்வோம்'' என்றார் முஸ்லிம் பின் அத்ஹம்.

இந்த நீண்ட பேச்சுக்கு இடையே ராஜகுரு வாயைத் திறக்கவில்லை. அவர் சிந்தனை யெல்லாம் அரசர் காதில் சொல்லப்பட்ட ரகசியத்தைப்பற்றியே இருந்தது.

PDF ISLAM

மக்கள் பிரதிநிதிகள் கேட்கும் கேள்விகளையும், முஸ்லிம் பின் அத்ஹம் சொல்லும் பதில்களையும் மன்னர் சேரமான்பெருமாள் அவர்களும் மற்ற அமைச்சர் பெருமக்களும் அமைதியாக கேட்டுக்கொண்டே இருந்தனர்.

அவையிலிருந்து ஒருவர், ''நீங்கள் ஒவ்வொருவரும் எல்லா நேரங்களிலும், ஆயுதபாணிகளாகவே இருக்கிறீர்களே ஏன்?'' என்று கேட்டார்.

''நாங்கள் கடலில் அலைகின்ற வியாபாரிகள்! எங்களைக் கொள்ளையடிக்க ஒரு கூட்டமும் கடலில் அலைந்துக்கொண்டிருக்கிறது. சில சமயங்களில் நாங்கள் எங்கேயாவது கரையிறங்கும்போதும் திடீர் தாக்குதலுக்கு உள்ளாவோம். அவற்றிலிருந்து தற்காத்துக்கொள்ளவே நாங்கள் எந்த நேரமும் ஆயுதபாணிகளாக இருக்கின்றோம். ஆனால் பொதுவாக எங்கள் வாட்களை உபயோகப்படுத்துவதில்லை. எங்கள் உயிருக்கு அபாயம் நேர்கின்றது என்பது நிச்சயமாகிவிட்டபோதே நாங்கள் வாட்களை உருவுகிறோம். ''மேலும் நிராயுதபாணிகள்மீது ஆயுதங்களைப் பிரயோகப் படுத்த எங்கள் நாயகம் (ஸல்-அம்) அவர்கள் கண்டிப்பாகத் தடுத்துள்ளார்கள்'' என்றார்.

'இப்போது அவர்களைத் திரும்பிப் பார்த்த இராஜகுரு, ''நீங்கள் திருடினால், கொலைசெய்தால் எங்கள் பெண்களிடம் தவறாக நடந்துகொண்டால் உங்களை என்ன செய்வது?'' என்று கேட்டார்.

''உங்கள் நாட்டுச் சட்டப்படியோ அல்லது எங்கள் மார்க்கச் சட்டப்படியோ நீங்கள் எங்களைத் தண்டிக்கலாம்!'' என்று பளிச்சென்று பதிலளித்தார் அத்ஹம்.

''உங்கள் மார்க்கச் சட்டம் என்ன?'' என்று கர்ஜிக்கும் குரலில் ராஜகுரு கேட்க. ''மகா பிரபு! திருடினால் எங்கள் கையை வெட்டிவிடலாம்'' என்று அத்ஹம் கூறிய

PDF ISLAM

போது, அவையிலிருந்த சிலர் ஒரே சமயத்தில் 'ஆ!' கையை வெட்டுவதா?'' எனத் தங்களை அறியாமல் குரல் கொடுத்தனர்.

அத்ஹம், தொடர்ந்து ''கொலை செய்தால், பாதிக்கப் பட்டவரின் குடும்பத்தினர் என்ன விரும்புகிறரோ அதைச் செய்யலாம். பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்று விரும்பினல், கொலை செய்தவரின் தலையைத் துண் டித்து விடலாம். அல்லது கொலை செய்தவர் போதிய நஷ்ட யீடு கொடுக்கத் தகுதியுடையவராக இருந்தால், அந்தத் தொகையை அவர் செலுத்தச் சொல்லலாம்! அல்லது பாதிக்கப்பட்டவர்கள் வாரிசுகள் விரும்பினல், அவரை மன்னிக்கவும் செய்யலாம்! இது எங்கள் சட்டம்! இந்த பூமியில் உங்கள் சட்டம் எதுவோ அதையும் கடைபிடிக்க லாம்! மேலும் பெண்களிடம் தவருக நடந்துகொண்டால் அவர்களைக் கல்லெறிந்துக் கொல்லலாம்! பகிரங்கமான இடங்களில் அவர்களைக் கட்டி வைத்து, சவுக்கால் அடிக் கவும் செய்யலாம்! உயிர்போகும்வரைகூட சவுக்கடி தண் டனை வழங்கலாம்! இதுவும் எங்கள் சட்டமே! ஆயினும் உங்கள் நாட்டுச் சட்டம் எதுவோ அதற்கும் நாங்கள் முற்றிலும் கட்டுப்பட்டவர்களே!'' என்ருர் முஸ்லிம் பின் அத்ஹம்.

''மிகவும் திறமையாகப் பேசுகிறீர்! எங்களுடைய நாட்டின் அபூர்வப் பொருளான ரத்தின கிரீடத்தை திருடிய தற்காவும் எங்கள் காவலர் ஒருவரையும், ஒற்றர் படையின் துணை தலைவர் வேணுவையும் கொலை செய்ததற்காவும், உங்களில் எத்தனைப்பேர்களின் கைகளை வெட்டுவது எத்தனை பேர்களின் தலைகளைச்சீவுவது'' என்று ராஜகுரு கர்ஜித்தார்.

மன்னர் பிரான் மிகவும் அமைதியாக ராஜகுருவை நோக்கி, அதோடு ஒற்றர் படைத் தலைவர் நம்பீஸ்வர

PDF ISLAM

ரைக் கொலை செய்ததையும் சேர்த்துக்கொள்ளுங்கள் !'' என்றார்.

இதைச் சொன்னவுடன் ராஜகுரு அதிர்ச்சியடைந்த வரைப் போல, ''என்ன? நம்பீஸ்வரரை கொலை செய்து விட்டார்களா?'' என்று கேட்க. சபையில் இருந்த அனை வரும் திடுக்கிட்டு, வியப்போடு நோக்கினர்.

ராஜகுரு ராம நம்பி ஆத்திரம் கொப்பளிக்க, ''அப்படி யானால் இவர்கள் ஒருவரையும் நாம் விட்டு வைக்கக்கூடாது. அவர்களின் கப்பலை பறிமுதல் செய்வதோடு, அனைவரையும் கழுவிலேற்ற வேண்டும்'' என்று கர்ஜித்தார்.

மன்னர் சேரமான் பெருமாள் மிகவும் அமைதியாக, ''குருமகான் அவர்கள் சொன்னதை நான் முற்றிலும் ஏற் றுக்கொள்கிறேன்...'' என்று ஆரம்பித்தபோது, அரபுகள் அனைவரும் பதற்றமடைந்து. தங்கள் ஆசனங்களிலிருந்து எழுந்தனர். மன்னர் பிரான் தன் கைச்சைக்கினையின் மூலம் அவர்களை அமரச் சொல்லிவிட்டு, மேலும் தொடர்ந்து, ''அவர்களின் குற்றங்கள் நிருபிக்கப்பட வேண்டுமல்லவா? சேரமான் பெருமாள் மன்னர் வம்சத்தின் ஆட்சியில், குற் றம் புரிந்தவர்கள் சிலர் தப்பித்துக்கொண்டிருக்கலாம். ஆனால் நிரபராதிகள் தண்டிக்கப்பட்டார்கள் என்ற ஒரு சம்பவமும் இல்லை'' என்று கம்பீரமாகக் கூறினார்.

உடனே, முஸ்லிம் பின் அத்ஹம் கவலைத் தேய்ந்த முகத்தோடு எழுந்து, ''மாட்சிமைத் தங்கிய மன்னர் பிரான் அவர்களே! நாங்கள் அனைவரும் நிரபராதிகள்! தலரத்தின கிரீடம் திருட்டுப்போனதற்கோ, நாங்கள் யாரென்று தெரியாத வேணு என்பவர் கொல்லப்பட்ட தற்கோ, காவலர் கொலை செய்யப்பட்டதற்கோ ஒற்றர் படைத் தலைவர் கொலையுண்டதற்கோ, எங்களுக்கு எந்த சம்பந்தமும் இல்லை. தயவு செய்து தாங்கள் இதை நம்பவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்!'' என்று

PDF ISLAM

கூற, அவையிலிருந்த மற்ற அரபியர்களும், ''ஆம்'' என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தனர்.

எல்லோரும் மன்னர் சேரமான் பெருமாள் அவர்களையும் ராஜகுரு ராம நம்பி அவர்களையும் மாறி மாறிப் பார்த்தனர், ராஜகுருவின் முகத்தில் ஏதோ பதட்டமும் தென்பட்டது. மன்னர் பிரான் முகமோ வழக்கம்போல் சாந்தமாகவே காணப்பட்டது.

அவையில் சில நிமிடங்கள்வரை ஒரே மயான அமைதி நிலவியது. யாராவது ஏதாவது சொல்கிறார்களா என்று மன்னர் பிரான் அவை முழுவதையும் நோட்டமிட்டார். அந்த வரிசையில் ராஜகுரு மகான் மீதும் அவர் பார்வை விழுந்தது. அவரும் வாய் திறக்காமல் இருக்கவே: தன் மெய்க்காப்பாளர்களின் தலைவராக இருப்பவரை நோக்கி, சமிக்ஞையினைச் செய்தார். அவர் அந்தப்புரத்தை நோக்கி, விரைந்து சென்று, சில நிமிடங்களில் கையில் ஒரு மூட்டையோடு, ஒரு ஆளைக்கொண்டுவந்து அவையின் முன் நிறுத்தினர்.

அந்த ஆளைக் கண்வுடன் ராஜகுரு பதறிப்போய், ''ஆ' வேணு ! நீயா ?'' என்று கத்திவிட்டார். அந்த நபர் அவரைத் திரும்பிக்கூட பார்க்கவில்லை.

ராஜகுரு ''வேணு'' என்ற பெயரைக் கூறியதும். அவையினர் முழுவதும், ஆச்சரியத்தோடு அவனை நோக்கினர். அவன் கையிலிருந்த சிறு மூட்டையை அவனைக்கொண்டே அவிழ்க்கும்படி மெய்க் காவலர் தலைவர் ''ஹூம்'' என்று மிரட்டல் குரலில் உத்திரவிட்டார்.

வேணு அந்த மூட்டையை அவிழ்த்தான். அதில், முதலாம் சேரமான் பெருமாளின், காணமற்போன, அந்த நவரத்தின கிரீடம் பளபளத்தது!

PDF ISLAM

மன்னர் மார்த்தாண்ட பூபதியை அழைத்து, ''இந்த கிரீடத்தைப் பெற்று உரிய இடத்தில் கொண்டுபோய்ப் பாதுகாருங்கள். அவ்விதமே வேணுவையும் உங்கள் நேரடி கண்காணிப்பில் வையுங்கள். நீங்கள் சிறிது ஜாக்கிரதைக் குறைவாக இருந்தீர்களானால், ஒற்றர் படைத் தலைவர் தம்பீஸ்வரர் கொல்லப்பட்டதுபோல, பாவம், இவன் உயிரும் பறிபோய்விடும்'' என்றார். உடனே மார்த்தாண்டர் முன் வந்து கிரீடத்தையும் பெற்றுக்கொண்டு வேணுவையும் தன் முரட்டுக் கரத்தால் பிடித்துதனது காவலர் இருவர்வசம் ஒப்புவித்தார்.

இந்த நிகழ்ச்சிகளை யெல்லாம் அவையிலிருந்த மக்கள் ஆச்சரியத்துடனும் பரபரப்புடனும் பார்த்து, ஒருவருக்கொருவர் ஏதேதோ மெதுவாகக் கருத்துக்களைப் பறிமாறிக் கொண்டனர். ஆனால், ரரஜகுருவோ எந்தவிதமான துடிப்போ, முகத்தில் மாறுதலோ இல்லாமல் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருந்தார்.

அவர் திடீரென எழுந்து, ''மக்களில் மேன்மையானவர்களே! நமது நாட்டின் பெருமைக்குரிய கலைப் பொக்கிஷமும், வரலாற்றுச் சின்னமுமான முதலாம் சேரமான் பெருமாளின் நவரத்தின கிரீடம் மீண்டும் நம் கைக்கு வந்து சேர்ந்துவிட்டதைக் காணும்போது, என் மகிழ்வை எவ்விதம் கூறுவேன்! அதைத் திருடியவர்களிடமிருந்து ஒற்றர் படையின் துணைத் தலைவனாக இருந்த வேணு மிகவும் சாமார்த்தியமாகக் கைப்பற்றியிருக்கிறான் என்று தெரிகிறது. மேலும்...''என்று அவர் ஏதோ பேசத் தொடரும்போது, மன்னர் பிரான் குறுக்கிட்டு, ''பெருமதிப்புக்குரிய மகாசந்நிதானம் அவர்களே! தங்களின் மேலான பேச்சில் நான் குறுக்கிடுவது குறித்து அன்புகூர்ந்து என்னை ஆசீர்வதியுங்கள்! ராஜ கிரீடத்தை திருடியவர்களிடமிருந்து

PDF ISLAM

வேலுவை அதைக்கைப்பற்றவில்லை, திருடியவரே அதை வேலு வின் கையில் கொடுத்து, அதை நமது நாட்டு விருந்தினர் களாக வந்துள்ள அரபுகளின் கப்பலில் எங்கேயோவது மறைத்து வைக்கும்படி உத்திரவிட்டிருக்கிறார். அதன்படி வேலு அதை எடுத்துக் கொண்டு கப்பலை நெருங்கும் சமயத் தில் தான், அவனைப் பின் தொடர்ந்து வந்த மூவர், அவனை விரட்டிச் சென்று, வேலுவைப்பிடித்து, கிரீடத்தைக் கைப் பற்றிஇருக்கிறார்கள்! இந்தக்காட்சியைத்தான் நேரில்பார்த் ததாக கப்பலில் காவல் இருந்தவர் சிறிது நேரத்துக்கு முன் கூறினார்'' என்று அமைதியாக மன்னர் கூறினார்,

அங்கு ஓரத்தில் காவலர் இருவர் மத்தியில் நிறுத்தப் பட்டிருந்த வேலுவை ராஜகுரு நோக்கினார். அவன் கண் களிலிருந்து நீர் வடிந்துக் கொண்டிருந்தது. அவன், மன்னர் சொல்வதை ஒப்புக்கொள்வது போல மெதுவாகத் தலையை ஆட்டினான்.

ராஜகுரு வெகுண்டெழுந்தவர்போல, ''மன்னர்பிரான் அவர்களின் சொற்களைச் சிரமேற் கமந்து கொள்கிறேன், ஆயினும் இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கின்றது! மன்னர் பிரான் சமூகத்துக்கு அது மிகவும் சாமர்த்தியமாக மறைக் கப்பட்டுள்ளது என்று தெரிகிறது. அதற்கு முன் ஜாக்கி ரதையாகவே நமது ஒற்றர்படைத்தலைவர் நம்பீஸ்வரரை யும் கொன்றிருப்பதாகத் தெரிகிறது. நான் காலையில் இங்கு வரும்போதுதான் நம்பீஸ்வரரிடம் பேசிக் கொண்டிருந்து விட்டு வந்தேன். அவர் தான் கண்டு பிடித்த ரகசியங்களை இந்த அவையில் பகிரங்கமாக வெளிப்படுத்த வாய்ப்பில்லா மல், நான் இங்கு வந்ததற்குப்பிறகு. அவரையும் கொன்று விட்டிருக்கிறார்கள்! இந்த நாட்டின் ஒற்றர்படைத்தலைவரே கொல்லப்படுகிறார் என்றால், நமது எதிரிகள் எவ்வளவு சாமர்த்தியசாலிகளாக இருக்கிறார்கள் என்பதையும் புரிந்து கொள்ளவேண்டும்! அமைதியாகவும், மங்களகரமா

PDF ISLAM

கவும் இயங்கிக் கொண்டிருந்த நமது நாட்டில். நமது பெரு மதிப்புக்குரிய அரபு விருந்தாளிகள் வந்து நுழைந்ததி லிருந்துதான் இந்தப்புதிய புதிய விபரீதங்களும் அதிசயங் களும் நடக்கத் தொடங்கியிருக்கின்றன!'' என்று கூறும் போது, ''மதிப்புக்குரிய அரபு விருந்தாளிகள்'' என்ற சொற்களை மிகவும் ஏளனமாகக் குறிப்பிட்டார்.

மேலும் ராஜகுரு தொடர்ந்து பேசுகையில், நமது திறமை மிக்க ஒற்றர்படைத்தலைவர் நம்பீஸ்வரரைக் கொன்றவர்கள் யார்? வேணுவை யாரோ மூவர்வழிமறித்து அவன் கையிலிருந்து கிரீடத்தைக் கைப்பற்றியதாக இங்கு கூறப்பட்டதே அந்த மர்மமான மூவர் யார்? அதற்கு முன்பு வேணுவோடு சென்ற காவலரை அவர் வீட்டுக்குப் போய் பதுங்கியிருந்து கொலை செய்த கொலைகாரர்கள் யார் இவை களெல்லாம் ஆதாரப்பூர்வமாக நமக்குத் தெரிந்தால்தான் இந்த ''மதிப்புக்குரிய அரசு விருந்தாளிகள்'' இந்த நாட்டில் நடமாடத் தகுதியுடையவர்களா? அல்லது விரட்டப்பட வேண்டியவர்களா? அல்லது அவர்களுடைய பொருள்களைப் பறிமுதல் செய்து கழுவில் ஏற்றத்தக்கவர்களா என்பதை நாம் முடிவு செய்ய முடியும்!'' என்று ஆணித்தரமாக கூறி னார்.

ராஜகுரு சொல்வதை ஆமோதிப்பது போல், அவை யிலுள்ளோர் சிலர் அங்கீகரித்தும் சிலர் தங்களுக்கிடையே சந்தேகங்கள் கொண்டு ஒருவருக்கொருவர் மெதுவாக கேள்விகள் கேட்டுக்கொண்டும் பதில்கள் சொல்லிக் கொண் டும் அவையில் சலசலப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தனர்.

இந்தக் காட்சிகளை நோட்டமிட்ட ராஜகுருதான்ஏதோ பெரிய வெற்றியை அடைந்து விட்டதைபோல தனது வலது புறமும் இடதுபுறமும் தலையைத்திருப்பிப் பெருமையோடு பார்த்துக் கொண்டார். அவர் பார்வை வேணுவின் மீது பாய்ந்த நேரத்தில் அவன் மௌனமாக தலையை இரு

PDF ISLAM

புறமும் அசைத்து. ''வேண்டாம்'' என்று கூறுவது போல சைக்கினைச்செய்தான். இதை மன்னரும் தனது கடைக்கண் ணுல் கவனித்துக் கொண்டார்.

அரபுகளோ தங்களுக்கு ஒன்றும் புரியாமல், ஒருவருக் கொருவர் அரபு மொழியில் ஏதேதோ கூறிக் கொண்டனர்.

ராஜகுருவின் ஆவேசப் பேச்சையும் மற்ற காட்சிகளை யெல்லாம் பொறுமையாக கேட்டும், பார்த்துக் கொண்டு மிருந்த மன்னர்பிரான், ''மரியாதைக்குரிய ராஜகுருமகான் அவர்கள் கூறியது முற்றிலும் சரியானதே! முழுஉண்மையும் தெளிவாக வெளிப்படுமுன் நாம் எந்தவொரு முடிவுக்கும் வந்து விடக்கூடாது! அவர்கள் கூறியது போல அரபு விருந் தாளிகள் நம் நாட்டுக்கு வந்திராவிட்டால், இது போன்ற குழப்பங்கள் ஏற்படும் சூழ்நிலை விளைந்திராது என்பதும் கூட முற்றிலும் ஏற்றுக் கொள்ளப்படக்கூடியதே! ஆதலால் தான் நாம் அறிஞர் பெருமக்கள் நிறைந்த இந்தத் தனிமை யான அவையை நம்விருப்பத்துக்குமிக அவசரமான அழைப் பின் பேரில் கூட்டினேம். ஏனெனில், உங்கள் அன்புக்குரிய எம்பாட்டனர் முதலாம் சேரமான் பெருமாள் அவர்களின் ஆட்சிக்காலத்தில் இதே போன்றே ஒரு சம்பவம் நிகழ்ந் துள்ளது. அப்போது ரோமாபுரி நாட்டைச் சேர்ந்த ஒரு வியாபாரக் கப்பல் நமது துறைமுகத்தை வந்தடைந்தது. அந்த சமயம் நமது மதிப்புக்குரிய ராஜகுரு நாதரின் குரு மகான் அவர்கள் தான் ராஜகுருவாக இருந்து, அரசியலுக் கும், ஆன்மீகத்துக்கும் வழிக்காட்டியாக இருந்துள்ளார்கள் என்பதை சுவடிகள் மூலமாக அறிந்துள்ளோம். அந்தக் கப்ப லில் வந்தவர்கள் மிகவும் முறை தவறி நடந்துள்ளார்கள் என்றும், அதனல் அவர்கள் அனைவரும் பிடிக்கப்பட்டு கழுவிலேற்றப்பட்டார்கள் என்றும், அவர்களுடைய கப்ப லும் பறிமுதல் செய்யப்பட்டது என்பதும் அறியமுடிந்துள் ளது. அந்தப்பழைய ரோமானியக்கப்பல் உடைந்து

PDF ISLAM

நொறுங்கி இன்னும் நமது கடலோரத்தில் சிதறல்களாகக் கிடக்கின்றன. இதில் ஒரு துரதிருஷ்டம் என்னவென்றால், இது நடந்து சில நாட்களுக்குள் எனது பாட்டனாரும் படுகொலைக்கு ஆளாகி விட்டார்கள்'' என்று மன்னர் கூறும் போது ராஜகுரு குறுக்கிட்டு. ''இல்லை! இல்லை! அவர்கள் உயிருடன் கைலாயம் சென்று விட்டார்கள்'' என்று உரத்த குரலில் திருத்தம் சொன்னார்.

அதைக் கேட்ட மன்னர் பிரான் அமைதியாகத் தலையை ஆட்டிக் கொண்டார்.

''மகா ராஜகுரு அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய ''உயிருடன் கைலாயம் போவது'' என்ற தத்துவத்தை நான் நம்பாததற்கு அன்பு கூர்ந்து மன்னிக்க வேண்டுகிறேன்! அவ்விதமே இரண்டாவது சேரமான் பெருமாளும் ''வெள்ளைப் பரியேறி நேரடியாகக் கைலாயம் போய்விட்டார்'' என்ற கதை, இந்த நாட்டு மக்களையெல்லாம் நம்ப வைக்கப்பட்டுள்ளது! நாமும் அப்படி உயிரோடு கைலாயம் போய்விடக்கூடாது என்று தான் இந்த அரசியலிலிருந்து நீண்டகாலமாக ஒதுங்கி நமக்கென நிர்ணயித்துக்கொண்ட ஞானவழியில் நாம் இருந்து கொண்டிருந்தோம்! நாம் பல சமயங்களில் பசியோடு இருக்க நேர்ந்தபோதுங்கூட இந்த அரசுக்கே சொந்தக் காரனென நாம், இந்நிலையில் இருக்கிறோமே, எனச் சிந்தித்ததில்லை! இந்த அரசியலைப்பற்றி யோசித்ததுமில்லை.

''ஏனெனில் நம்முடைய அறிவுக்கெட்டியவரையில் அரசியலைப்பற்றி ஆராய்ந்ததில் அதன் உச்ச ஆதிக்கங்களில் குப்போர் பெரும்பாலோர், வெளித்தோற்றத்துக்கும் உள் மன நிலைக்கும் வேறுபட்டவர்களாகவே இருந்து வந்துள்ளனர். அவர்கள் வாயால் பேசுவதற்கும், செயலால் நடந்து கொள்வதற்கும் சம்பந்தமில்லாமலேயே [illegible]

PDF ISLAM

ளர். தத்தம் ஆதிக்கத்தை, அதிகாரங்களை, ஆசைகளை நிறைவேற்றிக்கொள்ளவதற்காக எதையும் செய்ய ஒவ்வொருவரும் துணிகின்றனர். இதில் விதிவிலக்கானவர்கள் சிலர் இருக்கலாம். அவர்கள் மிகவும் குறைந்த எண்ணிக்கையினரே ஆவர். இவர்களால் ஒன்றும் செய்ய முடியாத நிலையே நீடித்துவந்துள்ளது. நயவஞ்சகங்கள். பழிவாங்குதல்கள், படுகொலைகள் போன்ற தீய தன்மைகளே அரசியலில் நிரந்தர ஆதிக்கம்கொண்டு வருகின்றன. இதில் பொதுவாக ஏமாற்றப்படுபவர்களும் பாதிக்கப்படுபவோரும் பாமர மக்களேயாவர். ஆதலால்தான் நாம் அரசியலைப் புறக்கணித்துவிட்டு, நேரடியாக மக்களுக்கு நம்மால் இயன்ற பணிகளைச் செய்வதில் ஈடுபட்டு வந்தோம்''

''எமக்கு முன்னால் இந் நாட்டை ஆட்சி புரிந்த மார்த்தாண்டவர்மன் என்னென்ன குற்றங்களைச் செய்தார் என நாம் ஆராய முற்படவில்லை. சேரமான் பெருமாள் வம்சத்தில் நேரடி சந்ததியைச் சேராத அவர் எப்படி ஆட்சிபீடமேறினார் என்பதும் நமக்குத் தெரியாது. அவருக்கு எதிரான புரட்சியை மக்களிடம் யார் கிளப்பிவிட்டார்கள் என்பதும் எமக்குத் தெரியாது. அவரை அரியாசனத்துக்கு கொண்டு வந்தவர், நமது மதிப்புக்குரிய ராஜகுரு அவர்களே ஆவார்கள். அவருக்குப் பிறகு எம்மைக் கண்டுபிடித்து, உங்கள் மன்னன் ஆக்கியவரும் மகா ராஜகுரு அவர்களே ஆவார்கள்!

நம்மைப் பொறுத்து நாம் உயிருடன் கைலாயம் போகவோ, ஆட்சியிலிருந்து விரட்டப்படவோ விரும்பவில்லை. நாம் மிகவும் யோசித்ததற்குப் பின்னர்தான் இந்த அரசப் பதவியை ஏற்றோம்! நம்மால் முடிந்தவரை நேர்மையான ஆட்சியை நடத்த விரும்புகிறோம்! அதற்கான முழு உழைப்பையும் நல்கி வருகிறோம்! முழு எச்சரிக்கையும் கடைப்பிடித்து வருகிறோம்! நம்மால் முடியாவிட்டால் தாமே இந்த ஆட்சியைத் துறந்துவிடுவோம்...என்று கூறிய போது கூட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

PDF ISLAM

உணர்ச்சிவசப்பட்ட ஒருவர் எழுந்து, ''எங்கள் உயி ருக்கு உயிரான மன்னரே! தயவுசெய்து ஒருபோதும் அப் படிச் செய்துவிடாதீர்கள். நீங்கள் ஆணையிட்டால் நாங் கள் அனைவரும் உங்களுக்காக உயிரை அர்ப்பணிக்கத் தயா ராக இருக்கிறோம்!'' என்று கூறினர். கூட்டத்தினர் அனை வரும் ''ஆம்! ஆம்'' என்று குரல் கொடுத்தனர்.

அரசர் பிரான் அமைதியாக அவர்களைக் கையமர்த்தி விட்டு, மிகவும் கனிந்த குரலில், ''நாமும் நமது நாடும் சிறந்து வாழவே நாம் முயற்சிகளை மேற்கொண்டு வரு கிறோம். யாரும் யாருக்காகவும் சாவதற்காக அல்ல! சூது களும், சூழ்ச்சிகளும் ஆதிக்கம் கொள்ளும்போதுதான், கொலைகளும் சாவுகளும் தங்கள் கொடியை உயர்த்துகின் றன. தெளிவான உள்ளங்களுடன், நேர்மையாக எதையும் கவனிக்கும்போது, அங்கு விபரீதங்கள் விளைய வாய்ப் பில்லை. அதற்கு முதலில் உங்கள் முழு நம்பிக்கை நம்மீது இருக்க வேண்டும்...'' என்று மன்னர் கூறியபோது, ''நம்பு கிறோம்! நம்புகிறோம்!'' என்ற குரல் அலை முழுவதி லிருந்தும் எதிரொலித்தன.

மன்னருடைய பேச்சையும் மக்களின் எழுச்சியையும், ராஜகுரு விரும்பவில்லை என்பதற்கு அடையாளமாக அவ ருடைய கண்கள் சுருங்கியும், புருவங்கள் தாழ்ந்தும், ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருப்பதுபோலக் காணப்பட்டன. அவர் ஒன்றும் பேசவில்லை. மன்னருடைய பார்வை அவ் வப்போது அவர்மீது விழுந்தாலும், அதைக் கொஞ்சமும் பொருட்படுத்தவில்லை. மன்னர் மேலும் தன் பேச்சைத் தொடர்ந்தார்.

''சேர நாட்டின் ஆட்சிபீட வரலாறு கடந்த மூன்று தலைமுறையாகவே பல மர்மங்களும் விபரீதங்களும்

பா: 10

PDF ISLAM

கொண்டதாகவே ஆகியிருக்கிறது, மன்னர் பிடங்களி லிருந்த எம் மூத்தவர்களை நாம் குறைத்துச் சொல்ல விரும்பவில்லை. திறமையும், நேர்மையுமிக்க அவர்கள் தங் கள் விருப்பப்படி செயல்படவிடாமல் எப்படியோ ஆக்கப் பட்டிருக்கிறார்கள், மன்னருக்கும் மக்களுக்கும் எந்த நேர டித் தொடர்பும் இல்லாமல். ஆண்டுக்கொருமுறை ''ராஜ தரிசன''த்தோடு அவர்கள் திரையிடப்பட்டுள்ளார்கள். பெரும்பாலும், மதுவுக்கும், மங்கையர்களுக்கும் அவர்கள் அடிமையாக்கப்பட்டுள்ளார்கள். நாம் இவை இரண்டுக் கும் அப்பாற்பட்டவர், முதலாவதாகவுள்ள, ஆண்டுக் கொருமுறை 'ராஜ தரிசன'த்துக்கும் நாம் அப்பாற்பட்ட வராக இருக்க விரும்புகிறோம். என் குடி மக்கள் யாராக இருப்பினும் அவர்களின் குறைகள் அமைச்சர்களாலோ அல்லது அதிகாரிகளாலோ, புறக்கணிக்கப்படுமாயின், நேரில் நம்மைச் சந்தித்து முறையிட அனைவருக்கும் உரிமை யளிக்கிறோம்......என்று மன்னர் கூறியபோது, அவையிலி ருந்தோர் அனைவரும் ''மன்னர் பிரான் வாழ்க! எங்கள் பாது காவலர் வாழ்க!'' என்று உணர்ச்சிவசத்தோடு கோஷமிட்டனர்.

மன்னர் சேரமான் பெருமாள் மக்களை நோக்கி கைய மர்த்திவிட்டு, ''தம்மைப்பொறுத்து வாழ்வும் மரணமும் சமமே நமது நாடு வாழவேண்டும்! அதற்கு, நம்மைச் சுற்றி நாமே கட்டிக்கொண்டுள்ள சுவர்களிலிருந்து வெளியே வரவேண்டும்! வெளி நாடுகளிலிருந்து நம்மை நாடி வருபவர்களை கண்ணியப்படுத்த வேண்டும், நாமும் வெளிநாடுகளுக்குச் சென்று நமது பெருமையை வெளிப் படுத்தவேண்டும். நமது வியாபாரங்களை விரிவுபடுத்த வேண்டும். நமது நாட்டை வளப்படுத்த வேண்டும் என்று சொல்லிக்கொண்டு வரும்போது ராஜகுரு எழுந்து, ''மன் னர் பிரானின் புதுமையான கருத்துக்களில் நாம் குறுக்கிடு வதாக தயவுசெய்து நினைக்கக்கூடாது! உண்மையிலே

PDF ISLAM

சரியான ராஜரீக முறையையே அவர்கள் பிரகடனப்படுத்து கிறார்கள் ! நாமும் அதைக்கேட்டுப் பெருமையடைகிறோம்! அதே சமயத்தில் நமது மதம், வேத சாஸ்திரங்கள், சம்பிர தாயங்கள் பற்றியும் அவர்களின் கருத்துக்களை விளக்கினால் நமக்கும் அது பயனுடைதாக இருக்கும் !'' என்று ஒருவிதமான கேலி தொனிக்க, அதே சமயம் மரியாதை போலவும் கூறினார்.

மன்னர் அதைப் புரிந்துகொண்டவராக, ''நம்முடைய வேத சாஸ்திரங்கள், சம்பிரதாயங்கள் ஆகியவைகளைப் பற்றி நமது ராஜகுரு மகானவர்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. எனினும் அவர்கள் நமது கருத்தை வெளி யிடக் கேட்டுக் கொண்டதால், நாம் அதை விளக்குவதும் நமது கடமையாகிவிட்டது'' என்று சொல்லியபோது ராஜ குரு திடுக்கிட்டார். ஏனெனில் அதற்கு அவர் எதிர்பார்த்த பதில், ''அனைத்தும் ராஜகுரு மகானின் விருப்பப்படி நடை பெறும்'' என்று ஒரே வார்த்தையில் மன்னர் சொல்லிவிடு வார் என்று எதிர்பார்த்தார்.

''நமது வேத சாஸ்திங்களைப் பற்றி நாம் முழுவதுமாக அறியமாட்டோம் அது நமக்கு முற்றிலும் புரியாத 'தேவ பாஷை'' என்று சொல்லப்படும் சமஸ்கிருதத்தில் உள்ளது. அந்த வேதத்தை சூத்திரர்களாகிய நாம் கற்றுக்கொள் வதற்கும் அனுமதியில்லை. மேலும் நமது நம்பிக்கைக்குரிய கடவுள்களுக்கும் அந்த பாஷைத்தான் தெரியுமாதலால். ராஜகுருமகான் அவர்களுக்கும், அவர்களைச் சார்ந்த வேதி யர்களுக்கும், அரசராகிய நாமும் இந்நாட்டு மக்களாகிய நீங்களும் கீழானவர்கள் என்பது சம்பிரதாயங்கள் ! அவர் கள்தான் தெய்வங்களின் அருளைப் பெற்றுத்தரக்கூடியவர் கள் என்பது நமது பொது நம்பிக்கையாகவுள்ளது. இதில் புதிய கருத்துக்கள் எதற்கும் இடமில்லை ! ஆனால் நமது ஆட்சிபீட பரம்பரையைப் பொறுத்தவரையில், சைவ சமய சித்தாந்தம் நமது வழி முறையாகவுள்ளது. நமது சித்தாந்த

PDF ISLAM

படி நமக்குக் கடவுள்ஒருவரே! அவரே ஆதி! அவரே அந்தம்! அவரே பரமன்! அவரே சிவம்! அவரே சர்வசக்தியும் உள்ள வர். அவருக்கு எந்த உருவமும் இல்லை. ஆதலால் எந்த ரூபத்திலும் அவரை வணங்கலாம் என்ற நியதி உள்ளது. உருவமில்லாமலும் வணங்கலாம் என்றும் உள்ளது. நமது சித்தாந்தப்படி, நமக்கும் கடவுளுக்கும் இடையில் தொடர் பேற்படுத்திக்கொடுக்கவோ, அருளைப்பெற்றுக்கொடுக்கவோ இடையில் யாரும் தேவையில்லை! தனி பாஷையுமில்லை! நாமே நமது தாய் மொழியில் நேரடியாக வணங்கி நேரடி யாகக் கேட்டுக் கொள்ளலாம்! ஆதலால் வேத மதம் வேறு, சைவ சித்தாந்தம் வேறு! இவையல்லாத பல நம் பிக்கைகள் நம் நாட்டில் உள்ளன. கீழினத்தவர் என்ற பல பிரிவுகளும் உள்ளன. நம்மைப்பொறுத்து, நாம் அனைவருக் கும் பொதுவானவர் அனைவரும் நமது மக்களே என்ற நம் பிக்கைக் கொண்டுள்ளோம். வேதியரானாலும், புலையரானா லும் நமக்குச் சமம்தான்! ஆதலால் நமது அரசாட்சியில், தனியொரு பிரிவினருக்குத் தனி அந்தஸ்து கொடுப்பதை ரத்து செய்வது என்ற முடிவுக்கு வந்துள்ளோம்'' என்று உறுதியான குரலில் கூறினார்.

இதைக்கேட்ட ராஜகுரு திடுக்கிட்டுப் போனார்.

மன்னர் சேரமான் பெருமாள் தொடர்ந்து விளக்கம் அளிக்கும் விதத்தில், ''என்னுடைய அன்புக்குரிய, இந் நாட்டின் முக்கிய பிரமுகர்களே! நேற்றைய விழாவுக்காக வந்த உங்களையெல்லாம் தங்கச் செய்து, இன்று நாம் உங் களைச் சந்தித்ததின் முக்கிய நோக்கம் என்மனநிலையை உங் களைப் புரிந்துக்கொள்ளச் செய்து, உங்களுடைய ஆதரவை நேரடியாகப் பெறுவதற்கேயாகும். அதற்கு உதவி செய்வது போல், ஆண்டவன் அருளால், அரபு நாட்டிலிருந்து விருந்

PDF ISLAM

தாரிகள் வந்ததும், நமது கலைப் பொக்கிஷமான ரத்தின கிரீடம் திருட்டுப்போனதுமாகும்.

''அரபு விருந்தினர்களைப்பற்றி நமது மதிப்புக்குரிய ராஜகுரு மகான் அவர்கள் நேற்றைய விழாவில் சில சந்தேகங்களைத் தெரிவித்தார்கள். ஆதலால், அவர்களைப்பற்றிய உண்மையை நாமே நேரில் ஆராய்ந்துதெரிந்துக்கொள்ளவேண்டுமென்று விரும்பினேம். முறைப்படியுள்ள கண்காணிப்புக்கு நாம், நமது படைத்தளபதியும் அமைச்சருமான மார்த்தாண்ட பூபதி மூலமும் நமது ராஜகுருமகான் அவர்களின் பொறுப்பில் இயங்கி வரும் ஒற்றர் படையன் மூலமும் ஏற்பாடு செய்தோம். இவர்களின் பாதுகாப்பு நடவடிக்கைகள் எப்படி இருக்கின்றன வென்பதையும், அரபுகள் எப்படியெல்லாம் நடந்து கொள்கிறார்கள் என்பதையும் நேரில் கண்டறிய, நமது மெய்க்காப்பாளர் இருவருடன் மாறுவேடமணிந்து, முதலில் அரபுகள் தங்கியிருந்த விருந்தினர்கள் மாளிகையை மறைந்திருந்து கவனித்தோம்.

விருந்தினர் மாளிகையின் வெளியே நமது காவற்படைகள் நின்றிருந்தன. மாளிகையின் உள்ளே நமது கலைப்பொக்கிஷங்கள் வைத்திருந்த இடங்களில் நமது ஒற்றர்படையின் தலைவரான நம்பீஸ்வரரும் வேணுவும் மறைவாக இருந்தனர்.

சிறிது நேரம் கழித்து அரபுகள் இருவர் வெளியே வந்து நமது காவல் படைத் தலைவரிடம் ஏதோ கூறினார்கள். அவர்தன் தலைவர் மார்த்தாண்டபூபதியைச் சந்தித்து அனுமதி வாங்கச் சிறிது தூரம் சென்றார். அந்த சமயத்தில், கையில் ஒரு சிறுமூட்டையுடன் வேணுவும், நம்பீஸ்வரரும் வெளியே வந்தார்கள். வேணு இருட்டுப் பக்கம் சென்று ஒரு மறைவான இடத்தில் தன் கையிலிருந்த மூட்டையை வைத்துவிட்டுத் திரும்பி வந்து நம்பீஸ்வரருடன் சேர்ந்துக்கொண்டான்.

PDF ISLAM

காவல் படைத்தலைவர் தன்னுடைய இடத்தில் வேறு ஒரு காவலரை நிறுத்தி விட்டு, அவர் கடலோர மாளிகையை நோக்கிப் புறப்பட முற்பட்ட சமயத்தில், நம்பீஸ்வரர் அவரை அழைத்துத் துணைக்கு வேணுவையும் கூட்டிச் செல்ல உத்திரவிட்டார். அதோடு வேணுவை அழைத்து ''நமது பரிசுப் பொருளை, நமது விருந்தினர்களில் கப்பலில் இருப்பவர்களிடம் சேர்த்து விடு!'' என்று கூறியதை நாம் கேட்டபோது, நமக்கு ஆச்சரியமாக இருந்தது. கடற்கரை மாளிகைக்கு சிறிது தூரத்தில் கப்பல் நின்று கொண்டிருந்தது. அதில் ஆட்கள் இருக்கிறார்களா இல்லையா என்பது சந்தேகமே! ஏனெனில் அனைத்து விருந்தினர்களுக்கும் நாம் கடற்கரைக் கட்டிடத்தில் தங்குவதற்கு வசதி செய்துள்ளோம். அனைவரும் கரை இறங்கி விட்டார்கள் என்பதே நமது நம்பிக்கை! அப்படியொரு சிலர் கப்பலில் காவலுக்கு இருந்தாலும், அவர்களுடைய தேவைகளை கவனித்துக் கொள்ள வேண்டியவர்கள், கடற்கரை கட்டிடத்தில் இருப்பவர்களே ஆவார்கள். அவர்களுக்கு நம்பீஸ்வரர் தனிப் பரிசுப் பொருளை அனுப்ப வேண்டிய அவசியமென்ன? அது என்ன பொருள்? என்று தெரிந்துக் கொள்ள ஆர்வப்பட்டோம்.

''வேணு பணிச்சென்று, ஒரு மரத்தடிக்குச் சென்று, முற்கனவே விருந்தினர்மாளிகையிலிருந்து வெளிக்கொணரப் பட்ட அந்தச் சிறிய மூட்டையைக் கக்கத்தில் இடுக்கிக் கொண்டு, தலைமைக்காவலருடன் சென்றான். நாங்கள் அவரைப் பின் தொடர்ந்தோம். அவர்கள் ஏதோ பேசிக் கொண்டு சென்றார்கள், அவர்களின் பேச்சு முழுவதும் காதில் விழாவிட்டாலும் தலைமைக்காவலர். அந்தப்பரிசுப் பொருளை பார்க்க விரும்பினார் என்று தெரிந்தது. அதற்கு வேணு வாய்ப்புக் கொடுக்காமல் நகர்ந்தே நடந்தான். தோப்புப்பகுதியை தாண்டியவுடன், தலைமைக்காவலர்

கடற்கரை கட்டிடத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தார். ஆனால் வேனு தோப்புக்குள்ளேயே சிறிது தூரம் சென்று, கப்பல் நங்கூரமிட்டிருந்த இடத்துக்கு நேராக வந்து சிறிது நேரம் அமைதியாக அமர்ந்திருந்தான். நாங்களும் மறைவில் பதுங்கி இருந்தோம்.

''தலைமைக் காவலர், கடற்கரை மாளிகையிலிருந்து, இரு அரபியரைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு போவதை அவன் கவனித்துக் கொண்டிருந்ததுபோல, நாங்களும் கவனித்தோம் அவர்கள் போன சிறிது நேரத்தில், வேனு தன் மூட்டையுடன் மெதுவாக கப்பலை நோக்கி நடந்தான். நாங்கள் அவனைப் பின் தொடர்ந்தோம். சிறிது தூரம் சென்றவுடன் நாங்கள் பின் தொடர்வதை தெரிந்து கொண்டு வேகமாக ஓடினான். நாங்கள் அவனை விரட்டிப் பிடித்தோம். அவன் பிடிப்பட்டதை யாரும் தெரிந்துக் கொள்ளாமல், நம்முடைய அந்தப்புற அறையிலேயே அடைத்து வைத்தோம். அவன் கையிலிருந்த மூட்டையைத் தான் நீங்கள் சிறிது முன் பார்த்தீர்கள்'' என்றார் மன்னர்.

இந்த விளக்கத்தைக் கேட்ட, அவையிலிருந்த பிரமுகர்கள் அனைவருமே ஆச்சரியத்தில் ஆழ்ந்து போயினர். மன்னர் பிரானே மாறு வேடத்தில் நேரில் போய், குற்றவாளியைக் கையும் களவுமாகப் பிடித்ததைக் கேட்ட யாருக்கும் எதுவொன்றும் சொல்லத் தெரியவில்லை. ஆனால், வேனு எதற்காக அந்த கிரீடத்தை எடுத்துக்கொண்டு, அரபுகளின் கப்பலை நோக்கிச் சென்றான் என்ற விபரம் அவர்களின் பெரும்பாலோருக்குப் புரியவில்லை. ஒருவருக்கொருவர் அதுபற்றி மெதுவாகப் பேசிக் கொண்டனர்.

அதற்கு ஒரு குறிப்பான சிறு விளக்கத்தை அளிப்பது போல் முஸ்லிம் பின் அத்தாம் எழுந்து, ''மாட்சிமை பொருந்திய மன்னர் பிரானே! தாங்கள் அந்த கிரீடத்தை மட்டும் காப்பாற்றவில்லை, எங்கள் மீது உண்டாக்கப்பட்ட

PDF ISLAM

எங்களைச் சந்தேகிக்கச் செய்கின்ற, அல்லது எங்களைக் குற்ற வாளியாக்குகின்ற மாபெரும் களங்கத்தையும் காப்பாற்றி விட்டீர்கள் ! மன்னர் பிரான் அவர்கள் இவ்விதம் நேரடி யாக நடவடிக்கை எடுக்காமல், அந்த கிரீடம், துரதிருஷ்ட வசமாக எங்கள் கப்பலில் வைக்கப்பட்டு, அது பிடிக்கப் பட்டிருந்தால், இதுவரை நாங்கள் அனைவரும் குற்றவாளி களாக்கப்பட்டுக் கழுவில் ஏற்றப்பட்டிருப்போம்! அல்லாஹ் தான் எங்களை இந்த பூமியில் பாதுகாத்தான் ! உங்களுக்கு நாங்கள் ஒரு கோடி நன்றியைத் தெரிவித்துக்கொள் கிறோம்'' என்று, ''வாழ்க மன்னர் பிரான் !'' என்றார் அவை முழுவதும், அவ்விதமே வாழ்த்துரை முழங்கினர். அதைத் தொடர்ந்து, ''வாழ்கவளர்க சேரமான் பெருமாள் வம்சம்!'' என்றார். மக்களும் அவ்விதமே திருப்பி முழங் கினர்.

ராஜகுரு முகத்தில் மட்டும் எந்தவித மகிழ்ச்சியும் ஏற் படவில்லை. எப்போதும் சிந்தனையின் பிரகாசம் மிளிர்கின்ற அவர் முகத்தில், என்றுமில்லாதவிதத்தில் ஒருவித அச்சத் தின் ரேகைபடர்ந்திருந்தது. மேற்கொண்டும் மன்னர் ஏதேனும் விளக்கம் சொல்லி விடுவாரோ என பயப்படுவது போல் காணப்பட்டது. மேலும் தன்னைக் கூர்ந்து அடிக்கடி நோக்கும் மூத்த அமைச்சர் சேதுபத்திரர், பாதுகாப்பு அமைச்சர் மார்த்தாண்ட பூபதி ஆகியோரின் பார்வைகள் இவரை ஏளனமாக நோக்குவதுபோல் தோன்றியது.

ஆதலால் அவர் 'விசு'க் கென்று எழுந்து, ''மன்னவா! என்னை அன்பு கூர்ந்து மன்னிக்கவேண்டும் ! என் உடல் நிலை சரியில்லை! நான் சிறிது ஓய்வு எடுத்துக்கொண்டால் நலம் என்று நினைக்கிறேன். மடாலயம்செல்ல அன்பு கூர்ந்து அனுமதியளிக்க வேண்டுகிறேன்'' என்றார்.

உண்மையில், அந்த அவை என்றும் பார்த்திராத அளவுக்கு அவர் உடல்நலம் கெட்டவர்போலவே சோர்ந் திருந்தார்.

PDF ISLAM

மன்னர் சேரமான் பெருமாளோ, மிகச் சாதாரண மாக ''குருமகான் அவர்களே ! இன்னும் சிறிது நேரத்தில் இந்த அவை முடியப்போகிறது ! ஆதலால், தங்களுக்கு சிறிது சிரமம் இருந்தாலும் அன்புகூர்ந்து சகித்துக் கொண்டு, கடைசிவரையில் தாங்கள் இந்த அவையிலி ருந்து எங்களுக்கு வழி காட்டிச் செல்லவேண்டுமாய் மிகவும் தயவாய்க் கேட்டுக்கொள்கிறேன்'' என்றார்.

அதற்குமேலும் ஒன்றும் பேச முடியாத ராஜகுரு, 'பொத்'தெனத் தனது ஆசனத்தில் அமர்ந்தார்.

மன்னர் பிரான் அவையினரை நோக்கி, என் அன்புக் குரியவர்களே ! நேற்று, இந்த நாட்டில் நாம் முடி சூடிய நாளாகவும், பிறந்த நாளாகவும், நீங்களும் இந்நாட்டு மக்கள் அனைவரும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கியிருந்தபோது, உண்மையில் எமக்குக் கவலையின் தொடக்க நாளாகவே அது இருந்தது. அது இங்குள்ள அராபிய நாட்டு விருந்தினர்களிலிருந்தே தொடங்கியது என்று நாம் குறிப்பிடும்போது அன்புகூர்ந்து அவர்களைப் பற்றித் தவ றுக எண்ணிவிடாதீர்கள்.

அவர்கள் முதல்நாள் அதிகாலை நமது துறைமுகத்தை வந்தடைந்த செய்தி கிடைத்த போது, அவர்கள் கரை யிறங்க மூத்த அமைச்சர் சேதுபத்திரர் மூலம் நாம்தான் அனுமதி கொடுத்தோம். முதலில் அவர்களைத் துறைமுகச் சாமான்கள் பாதுகாப்புக்கிடங்கில் தங்கும்படி ஆணையிட் டோம். அவர்கள் வருகையை அறிந்த சுற்றுப்புற மீனவமக்கள் ஒன்று இரண்டு சிறிது அச்சத்தோடு, தூரநின்று அவர்களை நோக்கினர். நாமும் நமது மெய்க்காப்பாளர்களும் மீனவர் களைப்போல மாறு வேடமணிந்து, அந்தக் கூட்டத்தில் சேர்ந்துக் கொண்டு அவர்களுடைய நடவடிக்கைகளை கவ னித்தோம்!

அவர்களில் சிலர் தமிழ் பேசியது நமக்கு வியப்பூட்டுவ தாக இருந்தது! அவர்கள் நமது மீனவர்களை அன்புடன்

PDF ISLAM

அழைத்து தாங்கள் இந்நாட்டுக்கு எதிரிகளல்ல வென்றும், நண்பர்களாக வந்துள்ளதாகவும், நம்முடைய பிறந்தநாள் விழாவன்று, காணிக்கைகள் செலுத்தி, நமது அன்பைப் பெற்றுச் செல்ல வந்திருப்பதாகவும் கூறி, தங்களை நெருங்க அச்சப்பட வேண்டாமென்றும் விளக்கி, தாங்கள் கொண்டு வந்திருந்த பேரீத்தம் பழமூட்டை ஒன்றை அவிழ்த்து அவர் களுக்குக் கொடுக்க அழைத்தார்கள்.

நமது மக்கள் அவர்கள் மீது நம்பிக்கைக் கொண்டு அவற்றைப்பெற்றுக்கொள்ள முன்வரவில்லை. அதைக்கண்ட அவர்கள், ''நாங்கள் இந்த இனிப்பை உங்களுக்கு வழங்கு வது எங்கள் தலைவர் நபிகள் நாயகம் (ஸல்-அம்) அவர்களு டைய வழிமுறையைக் கடைப் பிடித்தே செய்கிறோம். இதில் நீங்கள் சந்தேகம் கொள்ளவேண்டாம்! மேலும் நாங்கள் பிரியமாக மீன் சாப்பிடக்கூடியவர்கள்! உங்களிட மிருந்து எங்கள் தேவைக்கு அவற்றை வாங்கிக்கொள்ள விரும்புகிறோம்'' என்றுகூறி, தங்கள் கை நிறைய வைத் திருந்த பேரீச்சம் பழங்களில் சிலவற்றை அவர்களே தின்று காட்டி, மக்களின் சந்தேகத்தை நீக்க முயன்றார்கள்.

அவர்களுடைய பேச்சிலும் அணுகுமுறையிலும் நமக்கு நம்பிக்கை ஏற்பட்டது. அவர்கள் கடற்கொள்ளைக்காரர் களோ, வேறுநோக்கத்தோடு வந்தவர்களோ அல்ல என் பதை நாம் புரிந்து கொண்டு முதன் முதலாக நாங்கள் முன் சென்று அவர்களிடமிருந்து பழங்களைப் பெற்று அனைவர் முன்னும் அவற்றைத்தின்று காட்டினோம். இதைக்கண்ட மக்கள், தைரியம் கொண்டு முன்வேறி, அவர்கள் கொடுத்த பழங்களை வாங்கித் தின்னத் தொடங்கினார்கள். அதோடு, அவர்களின் அவநம்பிக்கை நீங்கி மகிழ்ச்சி ஆரவாரம் ஏற் பட்டது.

இந்த சமயத்தில் நம்பீஸ்வரர் தனது ஒற்றர்படையி னர் சிலருடனும், காவற்படையினர் சிலருடனும் அங்கு விரைந்து வந்து, மக்களையெல்லாம் அடித்து விரட்டி, அரபு

PDF ISLAM

களை நோக்கி, ''நீங்கள் எங்கள் கைதிகள்! எங்கள் மேலிடத்திலிருந்து அனுமதி கிடைக்கும் வரை நீங்கள் வெளியே நடமாடவோ, எங்கள் மக்களுடன் உறவாடவோ கூடாது'' என்று உத்தரவிட்டார்கள்: அவர்களும் அதை ஏற்றுக் கொண்டார்கள்.

இந்த சம்பவத்தை நேரடியாகப் பார்த்த நாம், அங்கிருந்து மெதுவாக நழுவி விட்டோம். மேற்கொண்டு நடந்துள்ளதை மூத்தஅமைச்சர்சேதுபத்திரர் அவர்கள் உங்களுக்குக்கூறுவார்கள்'' என்று சொல்லி முடித்து மன்னர் சேதுபத்திரரை நோக்கினுர்.

இப்போது மூத்த அமைச்சர் சேதுபத்திரர் மன்னர் பிரானையும் ராஜகுருவையும் கும்பிட்டு வணங்கிவிட்டுப் பேசலுற்ருர்.

''பெருமைக்குரிய அவையோரே! காலை அவை நிகழ்ச்சியின் இறுதியில் வேணுவின் உண்மையை மன்னர் பிரானின் நேரடி வாக்குமூலத்தின்மூலம் அறிந்தீர்கள்; அதன் மூலம் கிரீடம் திருடப்பட்டதன் உண்மைகளைத் தெரிந்துகொண்டீர்கள். அதே சமயம், அதையொட்டி இரண்டு கொலைகள் நடந்துள்ளன. ஒன்று அரபு சமையற்காரரை அழைக்கச் சென்ற காவலர் தலைவன் கொல்லப்பட்டது; மற்ருென்று நமது ஒற்றர் படைத் தலைவர் நம்பீஸ்வரர் படுகொலை செய்யப்பட்டது. இந்த இரண்டு படுகொலைகளைப் பற்றிய உண்மைகளை இப்போது நீங்கள் தெரிந்துகொள்ளப் போகிறீர்கள். இந்த விசாரணையின் போது, யாருக்கேனும் புதிய தகவல்கள் தெரிந்திருந்தால் அவர்கள் இந்த அவையில் தைரியமாகக் கூறலாம்'' என்று சொல்லி முடித்துவிட்டு, ''கொல்லப்பட்ட காவல் தலைவனின் மனைவியை அழைத்து வாருங்கள்!'' என்று மார்த்தாண்டரைப் பார்த்து உத்திரவிட்டார்.

சிறிது நேரத்தில், நடுத்தர வயதுடைய ஒரு பெண்மணி அவையோர் முன் அழைத்துவரப்பட்டாள் அவள்

PDF ISLAM

முற்றிலும் வெண்ணிற ஆடை அணிந்து, விதவைக் கோல மாய்க் காட்சி தந்தாள், அவளைப் பார்த்து முகம் சுளித்த வராய், ராஜகுரு தன் தலையைத் திருப்பிக்கொண்டார்.

''சகோதரி! உன் கணவர் நள்ளிரவில் வீட்டுக்கு வந்ததிலிருந்து, அவர் கொல்லப்பட்டதுவரையிலும், அதன் பிறகு நீ கண்டவற்றையும் விபரமாக, தைரியமாக இங்கே கூறு!'' என்று உத்திரவிட்டார் சேதுபத்திரர்.

அந்தப் பெண் அழுதுகொண்டே, ''என் கணவர் நள்ளிரவுக்குப் பின் வீட்டுக்குத் திரும்பினர். இப்படி அவர் வருவது அடிக்கடி நிகழுமாதலால் நான் அரைத் தூக்கத்தி லிருந்து, அவர் காலடி சப்தம் கேட்டதும் எழுந்து, அவர் ஆடைகளை கழட்டிவிட்டு, கை கால்களைக்கழுவிய பின் உணவு பரிமாறுவது வழக்கம்! அப்படியே நான் எழுந்து உணவு பரிமாறத் தொடங்கியபோது, அவர் ஏதோ கவலை யால் பீடிக்கப்பட்டிருப்பதைக்கண்டு காரணம் கேட்டேன். முதலில் அவர் மறுத்தாலும் பிறகு, மெதுவாக என்னிடம் ''இந்தநாட்டின் விலைமதிக்கவொண்ணுத, அரசு கிரீடத்தை வேணு திருடிக்கொண்டு விட்டான். முதலில் என்னிடம் மறைத்த அவனிடமிருந்து பலாத்காரமாக நான் பிடுங்கித் தெரிந்து கொண்டு விட்டேன். அவன் அதைத்திருடியக் காரணத்தை கேட்டபோது, அது ராஜரகசியம் வெளியே தெரிந்தால் இரண்டுபேருடைய தலையும் போய்விடும் என் ருன். இதில் எனக்கு என்னவோ பயமாக இருக்கிறது! எங் கள் தலைவர் மார்த்தாண்ட பூபதியிடம் இதைப்பற்றிச் சொல்லிவிடவேண்டும் என்று மனம் துடிக்கிறது. இப்போதே போய்ச் சொல்லிவிட்டால் மன நிம்மதி ஏற்படும்போல் இருக்கிறது என்ருர்.

''நான் தான் அவரைத் தடுத்து, பொழுது விடிந்து முதற்காரியமாக அதைப்போய்ச் சொல்லுங்கள்'' என்றேன் அவர் அரைகுறையாக சாப்பிட்டு விட்டு, தோட்டத்து

PDF ISLAM

பக்கம் சென்று சிறிது உலாவப்போனார். நான் அவர் சாப்பிட்ட பாத்திரங்களையும் இடத்தையும் சுத்தப்படுத்திவிட்டு வெளியே போனவர் வெகுநேரமாகி விட்டதே எனத்தோட்டத்து பக்கம் போனேன்'' என்று கூறி விட்டு 'ஓ' வென அழுது கொண்டே ''அவரை யாரோ ஈட்டியால் பலஇடங்களில் குத்திக்கீழே சாய்த்துவிட்டிருந்தார்கள். அங்குரத்தம் வெள்ளமாக ஓடிக் கொண்டிருந்தது. அவர் உயிர் பிரியும் தருவாயில் ''சொல்லிவிடு! மார்த்தாண்டர்'' என்று மட்டுமே பேச முடிந்தது. அதே சமயம், மூன்று பேர் தோட்டத்தைத் தாண்டி ஓடக் கண்டு, அடப்பாவிகளே! என் கணவரைக் கொன்று விட்டீர்களே! என அலறினேன். அக்கம் பக்கத்தார் அங்கு வருமுன் ஒரு உருவம் கொல்லைக் கடைசியிலிருந்தமரத்தின் பின்புறத்திலிருந்து மெதுவாகநழுவுவதைக் கண்டேன், அது யாரென்று எனக்குத் தெரியும்! அவன் தான் ஒற்றர்படைத் தலைவன் நம்பீஸ்வரன்!

''அவனைக்கண்டபோது எனக்கு பயமாகி விட்டது அவன் மேற்பார்வையில் தான் என் கணவர் கொல்லப்பட்டிருக்கிறார் என்பதைப் புரிந்துகொண்டேன். இரவோடிரவாக ராஜகுருமகான் அவர்களின் மடாலயத்துக்கு ஓடினேன் முதலில் அவரை எழுப்ப சீடர்கள் மறுத்தார்கள். நான் கதறிய கோலத்தைக்கண்டு எழுப்பினார்கள். நம்பீஸ்வரன் என் கணவரைக் கொலை செய்து விட்டான் என்று கூறி அவரிடம் அழுதேன்! அதற்கு அவர் உன் கணவன் உன்னிடம் வேறு ஏதாவதுசொன்னாரா?'' என்றுகேட்டார்கள் ''நான்இல்லை'' என்று சொல்லிவிட்டேன். ''உன் கணவனை நம்பீஸ்வரன் கொலை செய்ததை நீ நேரில் பார்த்தாயா?'' என்று கேட்டார்கள். நான் நடந்ததைச் சொன்னேன். அதற்குஅவர்கள் உன் கணவனை நம்பீஸ்வரன் ஏன் கொலை செய்யவேண்டும்? அப்படியெல்லாம் இருக்காது! நீ போ யார்கொலைசெய்தார்கள் எனக்கண்டுபிடித்து அவர்களுக்குத் தக்க தண்டனை வாங்கிக் கொடுக்கிறேன்! என்று சொல்லி அனுப்பினார்கள். நான் உடனே தளபதி மார்த்தாண்டர் இல்லத்துக்கு

PDF ISLAM

விரைந்து சென்றேன் அப்போது அவர்கள் வீட்டில் இல்லை அவர்கள் பிணத்தை பார்க்க வந்தபோது நான் துக்கத்தில் மூழ்கிக்கிடந்தேன். அவர்களிடம் ஒன்றும் சொல்ல முடிய வில்லை. அதன் பிறகு மூத்த அமைச்சர் பெருமான் அவர்கள் அழைத்து விசாரித்தபோது தான் என்னால் முழுவிபரமும் சொல்ல முடிந்தது'' என்றாள் அப்பெண்மணி.

''சரி இவளை அவள் வீட்டில் கொண்டு போய் விட்டு வாருங்கள்!'' என்று சேதுபத்திரர் கூறிவிட்டு, ''மார்த் தாண்ட பூபதி அவர்களே! நம்பீஸ்வரர் கொல்லப்பட்டது பற்றி உங்களுக்குக் கிடைத்த தகவல்கள் என்ன?'' என்று கேட்டார்.

''அதே மூன்றுபேர்தான், அதே போன்ற சுட்டியால், அதிகாலையில் நம்பீஸ்வரரை குத்திக் கொன்றிருக்கிறார்கள் அதுப்பற்றிப் புலனாய்வு நடந்து வருகிறது! முழுவிபரம் இப்போது சொல்லமுடியவில்லை' என்றார்.

மன்னர் சேரமான் பெருமாள் ராஜகுருவைப் பார்த்து ''குருநாதர் அவர்கள் இவ்விஷயத்தில் தாங்கள் மேலான கருத்தைத் தெரிவித்தால் மிகவும் உதவியாக இருக்கும்'' என்றார்

''மன்னவா! நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது! என் தலைமையின் கீழ் இருந்த நம்பீஸ்வரரும், வேணுவும் ஏதோ சதித்திட்டம் தீட்டி தங்களுடைய கவுரவத்துக்கும், இந் நாட்டின் கவுரவத்துக்கும் பெரிய களங்கத்தை உண் டாக்க முயற்சித்துள்ளார்கள் எனக் காலையிலே தெரிந்ததி லிருந்து, எனக்கு மிகவும் வெட்கமாகவும், அவமானமாகவும் ஆகிவிட்டது. ஆதலால்தான் என் உடல்நிலையும் பாதிக்கப் பட்டது, மேன்மைக்குரிய தாங்கள் மாறுவேடமணிந்து, வேணுவைப் பிடித்திராவிட்டால் என்னென்னவோ விபரீ தங்கள் நேர்ந்திருக்கலாம்! ஆனால் தாங்கள் அவனைப் பிடித்து பாதுகாப்பில் வைத்திருந்த விஷயம் எனக்கும்

மறைக்கப்பட்டதால், அரேபிய விருந்தினர்களைப் பற்றிய சந்தேகம் எனக்கு மேலும் அதிகரித்தது. அரேபிய விருந்தினர்களைப் பற்றி நான் ஆரம்பத்திலிருந்தே தங்களிடமும், நேற்றைய அவையிலும், இன்று காலை அவையிலும் பல ஆட்சேபணைகளைச் செய்து வந்துள்ளதன் காரணம், அவர்கள் நம் நாட்டின் ஒரு பிரச்னையாகிவிடக்கூடாது என்பதற்காகத்தானேயன்றி, வேறு எதற்கும் அல்ல! இந்த என் நல்ல எண்ணத்தை வேறுவிதமாக நினைத்துக் கொண்டு, நம்பீஸ்வரன் அரபுகள்மீது குற்றங்களை உண்டாக்கி, அவர்களின் பொருட்களைக் கொள்ளையிடத் தீர்மானித்துள்ளான் என நினைக்கிறேன்! அவன் உயிரோடிருந்தால் அவன் பகிரங்கமாக குற்றத்தை ஒப்புக்கொண்டிருப்பான்! துரதிருஷ்டவசமாக யாரோ அவனைக் கொன்றுவிட்டார்கள்'' என்று முடித்தார்.

''அவனைக் கொன்றவர்கள் யாராக இருக்கலாம் என்பது பற்றியும், அரபு விருந்தினர்களைப் பற்றித் தாங்கள் தொடர்ந்து மாறுபட்ட கருத்துக்களை வெளிப்படுத்த எது ''பிரச்னை''யாக இருந்தது என்பதையும் தாங்கள் விளக்கினால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்'' என்று மன்னர் ராஜகுருவிடம் கேட்டுக்கொண்டார்.

''மன்னவா! நம்பீஸ்வரனின் கொலைக்கு அவன் சொந்த விஷயம் காரணமாக இருக்கலாம் என நினைக்கிறேன். மிகவும் திறமைசாலியான அவனிடத்தில் பெண்கள் விஷயத்தில் அதிக பலவீனங்கள் இருப்பதாக சில சமயங்களில் எனக்குச் செய்திகள் கிடைத்துள்ளன. அதன் காரணமாக யாராவது அவனைப் பழி வாங்கியிருக்கக் கூடும்.

''அரபு விருந்தினர்களின் பிரச்னை என்பது நம் நாட்டின் சாத்விகமான வாழ்க்கை முறையில் சிக்கல்கள்

PDF ISLAM

தோன்றிவிடுமோ என்ற அச்சம்தான் ! நாம் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற வர்ணரை தர்மப் படி, அமைதியாக வாழ்ந்துவருகிறோம், அவரவர் வர்ண முறைப்படி, கல்யாணம், திதி, நியோகார் அனைத்தையும் கடைபிடித்து வருகிறோம். இந் நிலையில் இந்த அரபியர்களை நாம் எந்த வர்ணத்தில் சேர்ப்பது என்பதுதான் என் பிரச்னை ! அவர்களோ வர்ணாஸ்ரம தர்மத்துக்கு நேர் விரோதமானவர்களாகத் தெரிகிறது. இவர்களை நாட்டில் நடமாடவிட்டால், நமது வேத வாழ்வுக்கு ஆபத்து வந்து விடக்கூடும் என்ற அச்சப்பாடே, எனது ஆட்சேபணையாக இன்றளவும் இருந்து வருகிறது. இந்த நமது எண்ணத்தை வேறுவிதமாகப் புரிந்துகொண்டு நம்பீஸ்வரன் தன் இச்சைக் குச் செயல்பட்டிருக்கிறுன் எனக் கருதுகிறேன்'' என்று கூறினர் ராஜகுரு !

ராஜகுரு பேசும்போது மன்னர் சேரமான் பெருமாள் அவரையே கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தார். அவரு டைய பேச்சிலிருந்து அவர் உள்ளொன்று வைத்துப் புற மொன்று பேசுகிறுர் என்பதை அவர் நன்கு புரிந்துகொண் டவராக இருந்தார். அந்த அவையில் ராஜகுருவின் மீது நேரடியாகப் பல குற்றங்களைக் கூறி அதை நிருபிக்கும் பல ஆதாரங்களையும் மன்னர் வைத்திருந்தார். ஆனால் எது வொன்றையும் வெளியே காட்டிக்கொள்ளவில்லை.

முற்பகல் நிகழ்ச்சியில் உடல்நிலை சரியில்லை என்று போன ராஜகுரு, திரும்பவும் அழைக்காத நிலையில் ஏன் பிற் பகலில் வந்தார் என்பதுகூட அவருக்குத் தெரியும். வேனு தன்னை நேரடியாகக் காட்டிக் கொடுத்துவிட்டால், பெரிய அவமானம் வந்துவிடுமென்றே அவர் அஞ்சி ஓடினர் என் பதை மன்னர் அறிவார். அப்படியொரு நிலை நேரிட்டுவிடக் கூடாது என்றுதான், வேனுவிடம் 'உண்டு அல்லது இல்லை' என்று மட்டும் பதில் சொல்ல அவனுக்குக் கட்டளை

PDF ISLAM

யிட்டு, ராஜகுரு இல்லாத சமயத்தில்கூட அவையில் அவருக்கு அவமானம் நேர்ந்துவிடக்கூடாது என்ற நோக்கத்துடன் அவர் கேள்விகளைக் கேட்டார். அந்த விசாரணையில் தன்பேருக்கு எந்தக் களங்கமும் கற்பிக்கப்படவில்லை என்பதைத் தனது பக்தர்கள் சிலரிடமிருந்து தெரிந்துகொண்ட பின்னரே ராஜகுரு மீண்டும் அவைக்கு வந்தார்.

ஏனெனில், அந்த ராஜ்ய அமைப்பு அவ்விதம் இருந்தது. ராஜகுரு இழிவுக்குள்ளாக்கப்பட்டார் என்றால், உச்ச ஜாதிக்காரர்களால் அதைப் பொறுத்துக்கொள்ள முடியாது. அவர்களிடம் தான் எல்லா கோயில்களுடையவும் மடாலயங்களுடையவும் ஆதிக்கங்கள் இருந்தன, அவற்றினுடைய வருமானங்களையும் அவர்களே அனுபவித்து வந்தனர். மக்களுடைய அன்றாட மத வழிபாடுகளிலும் அவர்கள்தான் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். அவர்களுடைய தலைவரான ராஜகுருவின் கவுரவம் சிறிதளவு பாதிக்கப்பட்டாலும். அவர்கள் ஒன்றுகூடிக்கொள்வார்கள், ராஜ்யத்தில் ஆட்சிமீது தவறான எண்ணங்களைப் பரப்பிவிடுவார்கள். அது உள் நாட்டுக் குழப்பத்தில் வந்துவிடியும் என்பதையும், ராஜ்யத்தில் அமைதி சீர்குலைந்துவிடும் என்பதையும் மன்னர் பெருமான் தீர்க்கமாகச் சிந்தித்திருந்தார்.

ராஜகுரு என்ற அந்தஸ்து சேர நாட்டில் பாரம்பர்யமானது. அது மன்னரால் நீக்கப்படக் கூடியதோ, புதிதாக மாற்றியமைக்கப்படக் கூடியதோ அல்ல, கருங்கச் சொல்லப்போனால் அது ஒரு தனி அரசாங்கம். அந்த இரண்டாவது அரசாங்கத்தின் சக்தியைப் படிப்படியாகக் குறைக்க வேண்டுமென்று மன்னர் தன் எண்ணத்தில் கொண்டிருந்தாரே தவிர, அதை இடிக்க வேண்டும் என்று விரும்பவில்லை. ஆதலால் மக்கள் முன் ராஜகுருவிடத்தில் தாம் எப்போதும்போல மரியாதையுடையவர் போலும், அவர்

பா: 11

PDF ISLAM

ஆலோசனையைக் கேட்பவர் போலவும், அவர்மீது சந்தேகப்படாதவர் போலும் மிகவும் ஜாக்கிரதையாக மன்னர் நடந்துகொண்டார். அதே சமயம் அவன் தன்மீது செலுத்தும் ஆதிக்கத்தைப் படிப்படியாக அவரே குறைத்துக்கொள்ளும்படி செயல்பட்டார்.

அந்த அடிப்படையில், அரபு விருந்தினர் பிரச்னையில் ராஜகுரு அடியோடு மாறுபட்ட கருத்துள்ளவராக இருக்கிறார் என்பதை ஆரம்பத்திலிருந்து தெரிந்துகொண்ட மன்னர் சேரமான் பெருமாள், அவ்விஷயத்தில் அவரைப் பணியச் செய்வதன் மூலம், அவருடைய ஆதிக்கத்தை முதல்கட்டமாகக் குறைக்க முடிவுசெய்துகொண்டு, தன்னைத் தானே அப்பிரச்னையில் ஈடுபடுத்திக்கொண்டார்.

ஆரம்பத்திலிருந்து அரபுகள் விஷயத்தில், ஒற்றர் படைத்தலைவர் நம்பீஸ்வரரும், வேணுவும், செயல்பட்டதற்கு காரணம், ராஜகுருவின் ஆணையே என்பதும், வேணு காணமற் போய்விட்டான் என்ற செய்தியால் அவர் துடித்த துடிப்பும், கிரீடம் காணமற் போனதைக் காரணமாக வைத்து. அரபுகளைக் கழுவிலேற்றும் அளவுக்கு அவர் தீவிரப் பட்டதையும், பிறகு படிப்படியாக அவர் கீழிறங்கி வந்து கொண்டிருப்பதையும் மிகவும் உன்னிப்பாக, மன்னர்தன் கவனத்தில் வைத்துக் கொண்டு அப்பிரச்னையில் மிகவும் துல்லியமாகச் செயல்பட்டார்.

கடைசியில், ராஜகுருநாதர் வர்ணாஸ்ரம தர்மத்தில் வந்து நின்றதையும் அவர் சாதாரணமாக நினைக்கவில்லை. வர்ணாஸ்ரம தர்மத்தை மன்னர் மீறிவிட்டார் என்ற தவறான பிரச்சாரம் எழுப்பவும் அவர் இடங் கொடுக்க விரும்பவில்லை ஆதலால், அவர்எழுப்பிய பிரச்னையை அவரைக்கொண்டே தீர்க்கச்செய்ய வேண்டும் என்ற முடிவில் மன்னர் மிகவும் எச்சரிக்கையுடன் பேசலுற்றார்:-

PDF ISLAM

''அன்புக்குரிய பிரமுகர்களே! நமது மகாகுருவின் நான்கு வர்ண வேதக் கொள்கையை நாம் மீறக்கூடாது என்பதில் சந்தேகமில்லை. அரபுக்காரர்களோ அந்தக்கொள் கைக்கு அப்பாற்பட்டவர்கள் என்று ஏற்கனவே ஒத்துக் கொண்டுவிட்டார்கள் ஆதலால் அவர்களின் கொள்கை களைப்பற்றி நாம் பொருட்படுத்தத் தேவையில்லை: அவர்கள் நம்நாட்டுக்கு வியாபாரிகளாக வந்துள்ளவர்கள் என்றும் கொள்ளைக்காரர்களாகவோ. விரோதிகளாகவோ வந்த தில்லை என்றும் தெளிவாகத் தெரிந்து கொண்டுள்ளோம். அவர்கள் நம்மிடம் வாங்க வந்துள்ள பொருட்களோ, நம் நாட்டில் மிகச்சாதாரணமாக விளையக்கூடிய கிராம்பு, ஏலம், எண்ணைக்கான உலர்ந்த தேங்காய், கயிறு, மற்றும் பழங்கள் போன்றவையாகும். இவற்றுக்குப் பகரமாக, தங்கம், வைரங்கள், முத்துக்கள், பவழங்கள், வாட்கள். குதிரைகள் முதலான பொருட்களை நமக்குக் கொண்டுவந்து கொடுப் பார்கள், நம்முடைய தெய்வங்களுக்குத் தங்கம், வைரம், முத்து போன்ற ஆபரணங்கள் மிகவும் குறைந்த அளவே இருக்கின்றன. நம்முடைய நாட்டின் பாதுகாப்புக்கு வாட் கள், குதிரைகள் போன்றவை மிகவும் பயன்படக்கூடியவை. இந்தக்கண்ணோட்டத்தில் நாம் நம்முடைய ஆச்சார விதி முறைகளை வைத்து அவர்களை எவ்விதம் நடத்துவது என் பதை குருமகான் அவர்களே முடிவாக எடுத்துக்காட்ட வேண்டும்!'' என்று கூறியதுடன் '' பிரமுகர்களாகிய நீங் கள், இவ்விதம் ஒரு வியாபாரந் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளலாமா வேண்டாமா என்பதையும் பற்றி உங்கள் அபிப்ராயங்களையும் சுதந்திரமாகச் சொல்லலாம்'' என்றும் கூறிமுடித்தார்.

பிரமுகர்களுக்கிடையே ஏதோ சிறிது நேரம் கிசுகிசுப்புப் பேச்சு நடந்தது. அவர்களில் ஒருபெரியவர் எழுந்து, ''எங் கள் உயிருக்குயிரான மன்னர் பிரான் அவர்களே! சகல அறிவு ஞானமும் பெற்ற நீங்கள் இது விஷயத்தில் எங்களி

PDF ISLAM

டமா கருத்துக்களைக் கேட்க வேண்டும்? வியாபாரத்தில் வர்ணாஸ்ரமதர்மம் இல்லை என்பதை குருமகான் அவர்களே சொல்வார்களே! சூத்திரர்கள் வீட்டுப் பசு கறக்கும் பாலையும் சூத்திரர்கள் விளைவிக்கும் காய்கறிகளையும், தானியங்களையும் பிராமணர்கள் வாங்குவதில்லையா! சூத்திரர்கள் பிடிக்கும் மீன்களை க்ஷத்ரியர்கள் சமைத்துத் தின்பதில்லையா? வைசியர்களின் வர்த்தகப் பொருட்களை மேலினத்தவர் வாங்கிப் பயன்படுத்துவதில்லையா? ஆதலால் வியாபார விஷயத்தில் நமது வர்ணாஸ்ரமம் எவ்விதம் குறுக்கிடும்? மேலும் நமது நாட்டுச் சாதாரணப் பொருட்களுக்கு நல்ல மதிப்புள்ள பொருட்கள் பகரமாகக் கிடைக்கின்றன என்றால் அந்த வாய்ப்பை நாம் ஏன் புறக்கணிக்க வேண்டும்?' என்றார்.

மற்றொரு பிரமுகர் எழுந்து, ''பாண்டிய நாட்டிலும், சோழ நாட்டிலும் நம்நாட்டின் விளைபொருட்களுக்கு அதிக மதிப்பில்லை, ஆனால் அந்த நாடுகளின் அரிசி நமக்கு மிகவும் அத்தியாவசியமாகவுள்ளது. ஆதலால் அதிகமான மாற்றுப் பொருட்களை நாம் கொடுக்க வேண்டியுள்ளது. அரபுவர்த்தகர்கள் நம்மிடம் விற்கும் பொருட்களை வைத்துப்பேரம் பேசினோமானால், நாம் அதிகமான இலாபம் பெறலாம்'' என்றார்.

இவ்விதம் மேலும் பலர், அரபு வர்த்தகர்களுக்குச் சாதகமாகவே பேசினர் ஒருவர் மாத்திரம் 'அவர்கள் நம் வர்ணாஸ்ரம தர்மங்களில் குறுக்கிடாமல், வரையறைகளை ஏற்படுத்த வேண்டும்! அவர்கள் வியாபாரம் செய்துவிட்டு போவதை நாம் தடுக்கத் தேவையில்லை'' என்றார்.

கடைசியாக மன்னர் ராஜகுரு அவர்களைப் பார்க்க, அவர் எழுந்து. ''எனக்கு முன்னால்தான் நீங்களெல்லாம் உங்கள் கருத்துக்களைச் சொல்லிவிட்டீர்களே! இதற்குப் பிறகு நான் சொல்வதற்கு என்ன இருக்கிறது? நமது வர்ணாஸ்ரம தர்மத்துக்கு அப்பாற்பட்டவர்கள், சூத்திரர்களை

PDF ISLAM

விடக் கீழானவர்களாகவே நாம் கருதவேண்டும்..'' என்று ராஜகுரு ஆரம்பித்தவுடன், ''மன்னர் குறுக்கிட்டு, ''அதெப்படி மகா குரு அவர்களே! சாஸ்திரத்தில் நான்கு வர்ணம்தானே உள்ளது நான்காவது வர்ணத்துக்குக் கீழான வர்கள் என்றால் எனக்கு விளங்கவில்லையே! தயவுசெய்து அதை விளக்கி வழி காட்டுங்கள்'' என்றார்.

ராகுகுரு சில விநாடிகள் தயங்கிவிட்டு, ''சாஸ்திரத் தில் ஐந்தாவது வர்ணம் என்று ஒன்றிருந்தால் அவர்களிடத் தில் எப்படி நடந்துகொள்ள வேண்டுமோ அப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் அப்படிக் குறிப்பிட்டேன்'' என்றார்.

மன்னர்விடவில்லை! ''நாம் புதிய சாஸ்திரம் எதையும் உண்டாக்க முடியாதே குருமகான் அவர்களே! சூத்திரர் களைத்தான் நாம் அனைத்துவகைகளிலும், சம்பூர்ணமாகக் கட்டுப்படுத்திவிட்டோமே! 'அதற்கு மேலும்' என்றால் எம்மால் புரிந்துக்கொள்ள முடியவில்லையே! அதைத் தெளிவாகச் சொன்னால் நாம் அதற்கான வழிமுறைகளைக் கடைப்பிடிக்க உதவியாக இருக்கும்!'' என்றார் மன்னர்.

''இது தெளிவாகச் சொல்லக்கூடிய விஷயமல்ல. சூசக மாகப் புரிந்துகொள்ள வேண்டிய விஷயம் மன்னவா! அவர்கள் சகலவிதமான கட்டுப்பாட்டுக்குள்ளும் வைக்கப்பட வேண்டும்! அவர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில், தங்கள் சொந்தப் பொறுப்பில் முகாம் போட்டுக்கொண்டு தங்க வேண்டுமே. தவிர, நாட்டுக்குள் சுதந்திரமாக நடமாடி வியாபாரம் செய்ய அனுமதிக்கக்கூடாது அவர்களுடைய பொருள்களைத் தேவைப்படுவோர் அந்த இடத்துக்கு வந்து வாங்கிக்கொண்டு செல்லட்டும்! அவர்களைக் கடற்கரை கட்டிடங்களில் தங்கவிடுவதோ, இவ்விதம் அவர்களை சம மாக வந்து அமர அனுமதிப்பதோ கூடாது! இதுவே கடைசி தடவையாக அவர்களுக்கு இருக்கட்டும்! விருந்தி

PDF ISLAM

வர் மாளிகையில் நாம் இடமளித்ததும் தவறாகும் என்பது எமது கருத்து! தப்பித் தவறி நமது ஆலயங்கள், ஆஸ்ரமங்கள், அன்னச் சத்திரங்கள் பக்கமே இவர்கள் நடமாடிய தாகத் தெரிந்தால் கடுமையான தண்டனை அளிக்கவேண்டும்!'' என்றார் ராஜகுரு. அவருடைய பேச்சு மிகவும் கடுமையாக இருந்தது.

ராஜகுருவின் இந்தக் கடுமையான பேச்சுக்கள் அரபு வர்த்தகர்களை எந்த அளவுக்குப் பாதிக்கிறது என்று பலர் அவர்களைப் பார்த்தனர். அவர்களோ மிகவும் சர்வசாதாரணமாக, முகங்களில் புன் சிரிப்புத் தவழ, அந்தப் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்!

மன்னர் சேரமான் பெருமாள் அப் பிரச்னையை அதிகமாக வளர்த்த விரும்பவில்லை. அவர் தன் முகத்தில் புன் சிரிப்புத் தவழ, ''கண்ணியத்துக்குரிய ராஜகுரு மகானவர்கள் பல அறிவுரைகளை அவர்களுக்கே உரிய கடுமையான பாணியில் தெரிவித்தாலும், இறுதியில் நம் நாட்டில் அரபு வர்த்தகர்கள் வந்துபோய் வர்த்தகம் செய்ய அங்கீகாரமளித்துள்ளது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். அவர்களுடைய மேலான ஆலோசனைகளை அரசு பரிசீலித்து, அவர்களை எப்படியெல்லாம் நடத்த வேண்டுமோ அப்படி அவர்களுடைய நடத்தைகளையும் நம் மக்களின் நடத்தைகளையும் பார்த்து, உரிய ஏற்பாடுகளைச் செய்வோம்!'' என்றவுடன் மக்களெல்லாம் உற்சாக மிகுதியால், ''எங்கள் மன்னர் செல்வம் வாழ்க! எங்களின் பாக்கியமான சேரமான் சந்ததி வாழ்க! என வாழ்த்தொலி முழங்கினர்.

மன்னர், அவர்களைக் கையமர்த்தி அமைதியாக இருக்கச் சொல்லிவிட்டு. ''இன்னொரு முக்கியமான அரசியல் பிரச்னைக்கு ராஜகுரு மகானின் ஆலோசனையை நாம் பகிரங்கமாகப் பெற வேண்டியுள்ளது. ராஜகுருநாதர் பரம்பரையினர் நமக்கு வேதிய முறையில் மட்டுமல்லாமல்,

PDF ISLAM

அரசியல் முறையிலும் தங்கள் பொறுப்பில் ஒற்றர்படை அமைப்பு ஒன்றைவைத்து, காவல் துறையினரின் உதவியோடு பல நன்மையான காரியங்களைச் செய்து வந்துள்ளனர். இதனால், மன்னர் பொறுப்பில் இருந்தவர்கள் தங்களை எவ்வித சிரமத்துக்கும் ஆளாக்கிகொள்ளாமல், ஒற்றர் பிரிவின் உதவியினால், ராஜகுரு சேகரித்துத் தரும் தகவல்களைக்கொண்டு மேற்கொண்டு காரியங்கள் செய்து வந்துள்ளனர். ஆயினும் பல சமயங்களில் ராஜகுருமார்களுக்கும் இது ஒரு பெரிய பாரமாகவே இருந்துள்ளது. வேதிய காரியங்களை முழு கவனத்துடன் செய்ய வேண்டியவர்கள், இதனால் மிகவும் சங்கடப்பட வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. இப்போதும் அத்தகைய சங்கடங்களை நமது ராஜகுரு மகான் அவர்களுக்கு அளித்துள்ளனர் என்பதை அவர்கள் வாயினாலே நாம் கேட்டோம்! ஒற்றர் படைத் தலைவனாக இருந்த நம்பீஸ்வரன், பெண்களின் விஷயத்தில் ஒழுங்கீனனாக நடந்துள்ளான் எனவும், அதனால்தான் அவன் கொல்லப்பட்டிருக்க வேண்டும் எனவும் குருநாதர் அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள், மேலும், அரசாங்க கிரீடத்தைத் திருடி அவனே வேணுவிடம் அளித்துள்ளான் என்பதையும், வேணுவும் அவனுக்கு உடந்தையாக இருந்துள்ளான் என்பதையும், நீங்களே நேரில் கேட்டறிந்துள்ளீர்கள்!

''மகா ஞானியும் விவேகியுமான நமது ராஜகுருமகான் அவர்கள் பொறுப்பில் இருந்த ஒற்றர் படையின் பெருந்தலைவனும். அடுத்த ஸ்தானத்திலிருந்த துணைத் தலைவனும், குருமகான் அவர்களின் கண்ணியத்தையே குலைக்கும்வகையில் சதிகளைச் செய்திருக்கிறார்கள். நல்ல வேளையாகத் தலைவனும் கைதியாகவுள்ளான். இவனுக்கு என்ன தண்டனை வழங்குவது என்பது பற்றி குரு மகானிடம் கலந்துகொண்டு நாம் முடிவு செய்வோம். இதுஒருபுறமிருக்க, இனி ஒற்றர் படை தனிப் பிரிவின் சுமையை வேத சாஸ்திரப் பாதுகாவ

PDF ISLAM

வராக இருக்கும் குருமகான் அவர்கள் தலையில் சுமற்றாமல், நாமே நம்முடைய அமைச்சர்கள் மூலம் நேரடியாகப் பொறுப்பெற்றுக்கொள்ளலாம் என்று முடிவு செய்துள் ளோம்'' என்றார் மன்னர்,

இதை சொன்னவுடனேயே பிரமுகர்கள் பலர் அதை ஆமோதிக்கும் வண்ணம், ''மன்னர் பிரான் வாழ்க! திறமை மிக்க எங்கள் அரசர் வாழ்க'' எனக் குரல் கொடுத்தனர். அதைத் தொடர்ந்து அனைவரும் குரல் எழுப்பினர் ''அதுவே சரியான முடிவு'' என்பதுபோல் ஒவ்வொருவரும் தலையை அசைத்துக் காட்டிப் பேசிக்கொண்டனர்.

மன்னர் இப்படியொரு முடிவை திடீரென்று எடுப்பார் என்று கொஞ்சமும் நினைக்காத ராஜகுரு சில நிமிடங்கள் அதிர்ச்சி அடைந்து போனார், அவர் பொது வாக, ''மன்னவா! இந்த விஷயத்தைப் பற்றிப் பிறகு நாம் பேசி முடிவெடுத்தால் என்ன?'' என்று கேட்டார். அவர் முகம் வெளிறிப் போய் இருந்தது. அமைச்சர் அனை வருடைய முகங்களிலும் மகிழ்ச்சிப் பொங்கி வழிந்துக் கொண்டிருந்தது.

மன்னரோ, அதற்கு பதில் சொல்லாமல், தலையை மேலும் கீழும் அசைத்துக்கொண்டார். ''சரி பார்க்கலாம்'' என்பதுபோல் அந்த அசைவு மிகச் சாதாரணமாக இருந் தது. ராஜகுரு சர்வ சக்தியையும் இழைந்தவரைப்போல, அப்படியே தம் ஆசனத்தில் சாய்ந்துவிட்டார்;

மன்னர் சேதுபத்திரரை அழைத்து அவர் காதில் ஏதோ கூறினார். மூத்த அமைச்சரான அவர் மிகவும் கண்ணிய மான முறையில் அனைவருக்கும் நன்றி கூறி அவையைக் கலைத்தார். அதே சமயம் அரபியர்களை நோக்கி, விருந்தி னர் மாளிகையில் தங்கியிருக்கும் இவர் மட்டும் சிறிது தங்கியிருந்துவிட்டுப் போகுமாறு கேட்டுக்கொண்டார்,

PDF ISLAM

அதன்படியே அவர்கள் ஐவர்மட்டும் தங்கள் ஆசனத்தி லேயே அமர்ந்திருந்தனர். மற்றும் அமைச்சர்கள் அனைவரும் அமர்ந்திருந்தனர்.

மன்னர் சேரமான் பெருமாள் அவர்களை நோக்கி, ''மகா குருநாதர் அவர்கள் உங்களைப் பற்றிக் கூறிய ஒழுங்கு முறைபற்றி நீங்கள் கொண்டுள்ள கருத்தென்ன?'' என்று கேட்டார்.

முஸ்லிம் பின் அத்ஹம் எழுந்து நின்று, மாட்சிமை தங்கிய மன்னர் பெருமானே! நாங்கள் ஒரு நாட்டுக்கு வியாபாரத்துக்குச் சென்றால், அந்த நாட்டின் சட்ட திட் டங்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பதே எங்கள் கடமை யாகும். குருமகான் அவர்கள் விருப்பப்படி, நாங்கள், கோயில்கள், மடாலயங்கள். அன்ன சத்திரங்கள் ஆகிய இடங்களில் சுதந்திரமாக நடமாடமாட்டோம் என்பதற்கு உறுதிகூறுகிறோம். இங்கு நடைபெறும் மத சம்பந்தமான விழாக்கள், மற்றும் நிகழ்ச்சிகளிலும் நாங்கள் யாரும் பார் வையாளர்களாகக்கூடக் கலந்துகொள்ளாததற்கு உறுதி யளிக்கிறோம். மேலும் குறிப்பிட்ட இடத்தில் கூடாரங்கள் அமைத்துக்கொண்டுதான் நாங்கள் தங்கவேண்டும் என்பது அரசின் சட்டமேயாயின் அதன்படியே தங்கிக்கொள்ளவும் ஏற்றுக்கொள்கிறோம். அதே சமயம் எங்களை வந்து சந்திக் கும் மக்களிடம் நாங்கள் அன்பாகப் பழகுவதிலும், வியா பாரங்கள் செய்வதிலும், எவ்வித ஆட்சேபணையுமில்லையே?'' என்று மிகவும் அமைதியாகக் கேட்டார்.

மன்னர் இதற்கு பதில் கூறுமல், ராஜகுருவைப் பார்த் தார். அவர் முகத்தைச் சுளித்துக்கொண்டு, ''அதை எப்படியாவது செய்து தொலைக்கட்டும்!'' என்று ராஜகுரு கூறவே, மன்னர் முகத்தில் புன்கிரிப்புத் தவழ அதை ஆமோதித்துக்கொண்டார்,

PDF ISLAM

அரசர் தனது சைக்கினையின் மூலம், மேற்கொண்டு விசாரணைகளை மேற்கொள்ள மூத்த அமைச்சருக்கு உத்தர விட்டார். அவர்கள் முஸ்லிம் பின் அத்ஹமை நோக்கி, "மேற்கொண்டு உங்கள் வியாபாரத் திட்டமென்ன?" என்று கேட்டார்.

"நாங்கள் இந்த நாட்டில் வர்த்தகம் செய்ய இன்று தானே அங்கீகரிக்கப்பட்டிருக்கிறோம்! ஆதலால், எங்களுக்கு மேற்கொண்டும் ஒருவாரம் அவகாசம் அளித்தால், அதற்கிடையில் வியாபாரத்தை முடித்துக்கொண்டு விடை பெற்றுக்கொள்கிறோம்" என்றார் அத்ஹம்.

மன்னர் ராஜகுருவைப் பார்த்தார். அவர் அதற்கு பதில் சொல்லவில்லை. அரபுகளைத் திரும்பிக்கூட பார்க்கவில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்ட மன்னர், "உங்கள் வேண்டுகோள் அங்கீகரிக்கப்பட்டது. ஒரு வாரம் உங்களுக்கு அனுமதி தரப்படுகிறது! அதோடு உங்களுக்கு இந்த முறை மட்டும், நீங்கள் தங்கிய இடங்களிலேயே இருந்து வியாபாரம் செய்ய அனுமதியளிக்கப் படுகிறது. ஏனெனில் நாம் ஆரம்பத்தில் அந்தச் சலுகையை அளித்துவிட்டோம்! இப்போது அதை ரத்து செய்வது நமது ராஜ பரம்பரைக்குக் களங்கக் குறைவாகும்! ஆனால், அடுத்து நீங்கள் இந்த பூமிக்கு வருவதானால், அரசு குறிப்பிடும் இடங்களில்தான் நீங்கள் உங்கள் கூடாரங்களைக்கொண்டு முகாமிட்டுக்கொள்ள வேண்டும்" என்று ஆணையிட்டார்.

முஸ்லிம் பின் அத்ஹம் அதற்கு மிகவும் மரியாதையாக, "மன்னர் பிரானே! தங்கள் மேலான அன்புக்கு மிகவும் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். ஆனால் எங்களில் சிலருக்கு அரசாங்க விருந்தினர் மாளிகையில் தங்குவதற்கு

தாங்கள் அளித்தச் சலுகையை தயவுசெய்து ரத்து செய்து விடக் கேட்டுக்கொள்கிறோம். நாங்களும் கடற்கரை கட்டிடத்திலேயே தங்கிக்கொள்ள அனுமதிக்க வேண்டுகிறோம்'' எனக் கேட்க, ''அது உங்கள் விருப்பத்தைப் பொறுத்தது!'' என்று அரசர் ஏற்றுக்கொண்டார்.

இந்த உரையாடலுக்குப் பின் அரேபியர் தங்கள் இருப்பிடத்துக்குச் செல்ல மன்னர் அனுமதிக்கவே, அவர்கள் அங்கிருந்து வெளியாயினர்.

ராஜகுருவும், ''மன்னவா! இன்றைய நிகழ்ச்சியால் நான் மிகவும் களைத்துப் போயிருக்கிறேன், நான் நாளை தங்களைத் தனியே சந்தித்துப் பேச விரும்புகிறேன்!'' என்று கூறிவிட்டு எழுந்து வெளியே தன் பல்லக்கை நோக்கிச் சென்றார். பல்லக்குப் புறப்பட்டது. காலையைப் போலவே மறைவாக இருந்த நபர், பல்லக்கைப் பின் தொடர்ந்து சென்றார்.

ராஜகுருவும் சென்றவுடன் அவையில் மன்னரும், மூத்த அமைச்சர் சேதுபத்திரரும், பாதுகாப்பு அமைச்சர் தளபதி மார்த்தாண்ட பூபதியும், மற்றும் மூன்று அமைச்சர்களும் அரசரின் மெய்ப் பாதுகாப்பாளர்கள் இருவர், இவர்கள் மட்டுமே இருந்தனர்.

மன்னர் சேரமான் சேதுபத்திரரையும் மற்ற அமைச்சர்களையும் நோக்கி, ''நம்பீஸ்வரன் கொலையைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

சேதுபத்திரர், ''மன்னவா! அவன் ஸ்திரிலோலன் என்ற காரணத்தால் யாரோ விரோதிகள் பழிவாங்கிவிட்டார்கள் என்ற கூற்றை நான் நம்பவில்லை. மேலும் தலைமைக் காவலரைக் கொன்ற அதே நபர்கள்தான் அவனையும் கொன்றிருக்கிறார்கள் என நம்பத் தகுந்த ஆதாரங்கள் கிடைத்துள்ளன. அவனிடம் ஏதோ ரகசியங்கள் அகப்பட்

டுக்கொண்டிருக்கின்றன! அவை வெளிவந்துவிடாமல் இருக்க, அவன் மிகவும் அவசரமாகக் கொல்லப்பட்டிருக் கிறான், அந்தக் கொலைகாரர்கள் மூவர் யார் என்று தெரிந்து விட்டால் பல உண்மைகள் வெளிப்படும்'' என்றார் அவர்.

''அந்தக் கொலைகாரர்களைப் பிடிக்க நான் தீவிர ஏற் பாடுகளைச் செய்துள்ளேன். தலைமைக் காவலரைக் கொன்ற இடத்தில் காணப்பட்ட அதே காலடிகள்தான் நம்பீஸ்வரர் கொல்லப்பட்ட இடத்திலும் காணப்பட்டன. தலைமைக் காவலர் எந்தெந்த இடத்தில் குத்தீட்டியால் குத்தப்பட் டாரோ அதே இடங்களில்தான் நம்பீஸ்வரரும் குத்தப் பட்டுள்ளார், ஆனால் ஒரு வித்தியாசம்! நம்பீஸ்வரர் தான் கொல்லப்படுவோம் எனத் தெரியாமல் திடீரெனத் தாக்கப்பட்டுள்ளார். அதாவது அவருடன் பேசிக்கொண்டு வந்த நண்பர்களே திடீரெனப் பிடித்துக்கொண்டு கொலை செய்துள்ளார்கள் என்று தெரிகிறது. அவர் தப்பிக்க எந்த விதப் போராட்டமும் நடத்தவில்லை என்பது அங்குள்ள அடையாளங்களிலிருந்து அறிய முடிகிறது!'' என்றார் மார்த்தாண்ட பூபதி.

மன்னர் சேரமான் பெருமாள் சிறிது நேரம் யோசித்து விட்டு ''சில விஷயங்களில் ஏற்படும் நஷ்டங்கள் வேறு விஷயங்களில் பெரிய லாபங்களைத் தந்துவிடுகின்றன, நம்பீஸ்வரனின் இந்த மரணமும் வேணுவின் இந்த திருட் டும், நமக்கு ஒருவிதத்தில் பெரிய லாபத்தையே தந்துள் ளது. இதைக் காரணமாகக் கொண்டு ராஜகுருவின் பொறுப்பிலிருந்து ஒற்றர்படையை நாம் பிரிக்க முடிந்துள் ளது. நாட்டின் பல பாகங்களிலுள்ள ஒற்றர் படை யினரை உடனடியாகக் கூட்டுங்கள், அவர்களிடம் ராஜ குருவின் தலைமை அதிகாரம் ரத்தாகிவிட்டதென்றும், ராணுவத் தளபதி மார்த்தாண்ட பூபதியின் தலைமை யிலேயே அது இனி இயங்கும் என்றும் அறிவித்துவிடுங்கள்.

PDF ISLAM

எல்லா தகவல்களும் அவரிடமே நேரடியாகத் தெரிவிக்கப் படவேண்டும் என்றும் தெளிவுபடுத்துங்கள். இந்த அதி கார மாற்றத்தை மிகவும் மென்மையாகவும் ஜாக்கிரதை யாகவும் கூறுங்கள்! ராஜகுருவுக்கு எதிராக ஏதும் சொல்லிவிடாதீர்கள்! அவருடைய சிரமத்தைக் குறைக் கவே இந்த வழியைக் கடைபிடிக்க, அவருடைய சம்மதத் தையும் பெற்றுள்ளது போலத் தெளிவுபடுத்துங்கள். மேலும் நீங்களும் ராஜகுருவிடத்தில் எப்போதும்போல் மிகவும் மரியாதையுடனும் பக்தியுடனும் நடந்துகொண்டு வாருங் கள். அதில் எந்த சிறு மாற்றமும் நேரிட்டுவிடக்கூடாது! மற்றவைகளை யெல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன்'' என்றார்.

நம்பீஸ்வரனைக் கொலை செய்தவர்கள் விஷயமாக, மார்த்தாண்ட பூபதி பேசியபோது, ''அந்தக் கொலைகாரர் களைக் கண்டுபிடிக்கப் பெருமுயற்சிகள் எடுத்துக்கொள்ளா தீர்கள்! அதில் நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டியது ஒரே ஒரு விஷயம்தான்! மிகவும் திறமைமிக்க மூன்று கொலை காரர்கள் யார் மூலமாகவோ இயக்கப்படுகிறார்கள்! கொலைகாரர்களைவிட அவர்களை இயக்கும் சூத்திரதாரியைக் கையும் களவுமாக பிடிக்கவேண்டும்! அந்த மூன்றுபேர் மட்டும்தானா மேலும் பல கொலையாளர்கள் அந்த நபரின் இயக்கத்தில் உள்ளனரா என்பதை நாம் முழுவதுமாக அறியவேண்டும்! இது கூண்டோடு முடிவுகட்டவேண்டிய விஷயம்! ஒரு சிறு இடுக்குக் கிடைத்தால்கூட, சூத்திர தாரி நழுவிவிடக்கூடும். இந்த விஷயத்தில் நீங்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்! ஒன்றுமட்டும் தெளி வாகத் தெரிந்துகொள்ளுங்கள்! இந்த நாட்டின் பாரம் பர்ய அரசியல் திருவிளையாடல்கள் இப்போதுதான் ஆரம் பமாகியிருக்கிறது! இது என் உயிரைக் குடிக்கும்வரை தொடர்ந்துகொண்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இந்தத் திருவிளையாடலில் என் உயிர் பலியாகப் போகி

PDF ISLAM

றதா? அல்லது திருவிளையாடல்காரர்கள் தங்களைப் பலி கொடுத்துக்கொள்ளப் போகிறார்களா என்பது என்னுடைய சொந்தப் பிரச்னை! அதோடு சர்வ வல்லமைமிக்க பரமனின் தீர்ப்பைப் பொறுத்த விஷயம்! நீங்கள் யாரும் இதுபற்றி அலட்டிக்கொள்ளவேண்டாம், நான் என் பிரச்னையை நானே கவனித்துக்கொள்கிறேன்'' என்றார் மன்னர் பிரான்.

அமைச்சர்கள் துடித்துப்போய்விட்டனர். மார்த்தாண்டர் பதறியவராய், ''மன்னவா நான் அரண்மனையைச் சுற்றி பலத்த பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்கிறேன். மேலும் தாங்கள் மாறுவேடம் போட்டு வெளிச் செல்லும் முன் தாங்கள் சிறிது முன்னறிவிப்புச் செய்தால், தங்களுக்குப் பாதுகாப்பாக, நாங்களும் சில ஏற்பாடுகளைச் செய்ய முடியும்!'' என்றார்.

மன்னர் மிகவும் அமைதியாகச் சிரித்தார். ''நீங்கள் உங்கள் உணர்ச்சியின் காரணமாகக் குட்டையைக் குழப்பி விடுவீர்கள் போலிருக்கிறதே! நான் முன்னால் சொன்னதையெல்லாம் மறந்துவிட்டுப் படபடப்புக்கொள்ள ஆரம்பித்து விட்டீர்களே! நீங்கள் செய்யும் நடவடிக்கைகளினால், சூத்திரதாரிகள் எச்சரிக்கை அடைந்துவிடுவார்கள்! மிகவும் எளிதாகத் தப்பித்துக்கொள்வார்கள். அல்லது தங்கள் திட்டங்களை மாற்றிக்கொண்டு வேறு வழியைக் கடைப் பிடிக்கத் தொடங்கிவிடுவார்கள்! ஆதலால் என்னை பாதுகாக்கவோ, அல்லது நாட்டின் நடைமுறையிலோ எந்த வித மாறுதலும் தெரியக்கூடாது. எப்போதும்போல் சாதாரணமாகக் காரியங்கள் இருக்கவேண்டும்! பேச்சு வார்த்தைகளில் கூட சிறு வித்தியாசங்கள் வெளிப்படக்கூடாது. எப்போதும்போல் சாதாரணமாகக் காணப்பட வேண்டும் என்பதை மீண்டும் உங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன் இது நமக்குள் உள்ள ரகசியப் பேச்சு வார்த்தை

PDF ISLAM

யாரும். நாம் வழக்கப்படி. பொது ராஜ சபையைக் கூட்டி விவாதங்களை நடத்திக்கொள்வோம்! ஆனால், தினமும் ரகசியமாக கூடுவோம்! நேரம் காலத்தை நான் அவ்வப் போது சொல்லி அனுப்புகிறேன்'' என்றார் அவர்.

அத்துடன் அமைச்சரவைக் கூட்டம் கலைக்கப்பட்டது. ஒவ்வொருவரும் மன்னரை வணங்கி விடை பெற்றுச் சென்றார்கள். மன்னரும் தன் மெய்ப் பாதுகாவலர்களுடன் அந்தப்புறத்துக்குச் சென்றார். அவர் அறைக்குள் நுழைந்த வுடன் உள்ளே நேரடிப் பார்வையில் இருவரும் வெளியே வாசலில் இருவரும் வழக்கம்போல் காவலில் ஈடு பட்டனர்.

மன்னர் உள்ளே சென்ற சில நிமிடங்களில், ஒரு நபர் வந்து வெளியில் நின்ற காவலர்களிடம் ஏதோ ஒரு சந்தேக வார்த்தையைச் சொன்னார். அதைக் கேட்ட மெய்ப் பாதுகாப்பாளர்களில் ஒருவன் கதவைத் திறந்துவிட்டான். உள்ளே சென்ற அந்த நபர், மன்னருக்குப் பணிந்து வணங்கிவிட்டு நின்றான்,

மன்னர் அவரை நோக்கி, ''என்ன சிம்மராயரே நடந்தது என்ன?'' என்று கேட்டார்.

''காலையில் ராஜகுரு நேரே தனது ஆஸ்ரமத்துக்குச் சென்றார், சிறிது நேரத்தில் அவருடைய சிஷ்யர்களில் இருவர், எங்கேயோ பூஜைக்குச் செல்வதுபோல், பூஜைக் குரிய சாமான்களை எடுத்துக்கொண்டு வெளியே கிளம் பினர். அவர்களைப் பின் தொடர, நம் ஆட்களில் ஒருவரை அனுப்பிவிட்டு, நான் மறைவான இடத்தில் பதுங்கி இருந் தேன். அரசவை பகலில் உணவுக்காகக் கலைக்கப்பட்டு, அரச விருந்து நடந்த பின், ஓய்வுக்காக அளிக்கப்பட்ட நேரத்தில் அவையில் கலந்துகொண்டவர்களில்

PDF ISLAM

நான்கைந்து பேர், ஆஸ்ரமத்துக்கு வந்து சில நாழிகைகள் ராஜகுருவிடம் பேசிக்கொண்டிருந்துவிட்டு மீண்டும் அவை மண்டபத்தை நோக்கித் திரும்பினர். அதற்குப் பிறகு சில நாழிகைக்குப் பின்னரே, ராஜகுரு அரச அவைக்குப் புறப்பட்டார்'' என்றார்.

''வெளியே போன சீடர்கள்?'' என்று கேட்டார்.

''அவர்கள் ஒற்றர்களின் ஒவ்வொரு வீட்டுக்கும் போய், இன்று இரவு முதல் ஜாமத்துக்கு முன்னால் ராஜ குரு அவர்களைச் சந்திக்க விரும்புவதாகக் கூறிச் சென்றுள்ளனர் என்ற தகவல் கிடைத்துள்ளது'' என்றார்.

''ஒற்றர் படையைச் சேர்ந்தவர்கள் நம் நகரில் மட்டும் மொத்தம் எத்தனைப்பேர் உள்ளனர்?'' என்று கேட்டார் மன்னர்.

''என்னையும் சேர்த்து மொத்தம் 60 பேர்கள்''

''உங்களுக்கும் அழைப்பு கொடுக்கப்பட்டுள்ளதா?''

''இல்லை! ராஜ விஸ்வாசிகள் என்று கருதப்படுகின்ற, எங்களில் 8 பேர்களுக்கு அழைப்புக் கொடுக்கப் படவில்லை''

''அப்படியானால் மீதியுள்ள 52 பேர்கள் ராஜவிஸ்வாசம் அற்றவர்கள் என்று பொருளா?''

''அது எனக்குத் தெரியாது மகாராஜா! ஒற்றர் படையில் மிகப் பெரும்பாலும் பிராமணர்களே சேர்க்கப் பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் தங்களைவிட ராஜ குருவையே தெய்வமாக நினைப்பவர்கள்! மற்றவர்கள் பிராமணரல்லாதவர்கள் இவர்கள் ராஜகுருநாதரைவிட தங்கள்மீதும் நாட்டின் மீதும் மிகவும் பற்றுடையவர்கள்! இத்தகையோர்தான்! அந்த 8 பேரும்! மற்றவர்கள் 52

PDF ISLAM

பேரும்! நம்பீஸ்வரர் பொதுவாக இந்த 8 பேர்கள்மீதும் நம்பிக்கைக் குறைவாகவே இருப்பார். முக்கியமான எந்தப் பொறுப்பையும் இந்த எட்டுப் பேர்களுக்கு அளிக்க மாட்டார், சாதாரண காரியங்களுக்கு மட்டுமே பயன் படுத்துவார். இந்த உண்மையை ஏற்கனவே உணர்ந்து விட்ட நாங்கள், எங்களுக்குள் புரிந்துகொண்டுள்ளோமே தவிர, வெளியே காட்டிக்கொள்வதில்லை.

''ஒற்றர் படையைச் சேர்ந்தவர்கள் நாடு முழுவதும் எத்தனைப்பேர் உள்ளனர்?''

''சுமார் முன்னூறு பேர் உள்ளனர்!''

''அவர்களில் பிராமணர்கள் எத்தனைப்பேர்?''

''எனக்குக் கணக்கு சரியாகத் தெரியாது மகாராஜா! ஆனால் மிகப் பெரும்பாலோர் பிராமணர்களே என்பதும் அவர்கள் ராஜகுருவின் நம்பிக்கைக்குரிய பக்தர்கள் என்பது மட்டும் எனக்குத் தெரியும்!''

''நீங்கள் ராஜகுருவை அடிக்கடி தனியாகச் சந்திப் பதுண்டா?''

''அந்த வாய்ப்பு அநேகமாக எங்களுக்குக் கிடைப்ப தில்லை. நம்பீஸ்வரர்தான் எங்கள் தலைவர்; வேணு கோபால் அடுத்தத் தலைவர். அவர்களின் உத்திரவுபடி தான் நாங்கள் அன்றாடம் செயல்படுவோம்'' என்றார் சிங்கராயர்.

''சரி உங்கள் ஒத்துழைப்பைப் பாராட்டுகிறோம்! அவர்களுடைய சந்திப்பு, உரையாடல் பற்றிய விபரங்கள் ஆகியவற்றை நாம் அறிந்துகொள்ள வேண்டுமே!'' என்று மன்னர் தெரிவிக்க, அது ஒன்றும் சிரமமான வேலை

பா: 12

PDF ISLAM

இல்லை மகராஜா ! எப்படியும் முழு தகவல்களை அறிந்து தங்கள் சமூகத்தில் சமர்ப்பிக்கிறேன்'' என்றார் சிங்கராயர்.

மன்னர் அவருக்கு விடை கொடுத்து அனுப்பியபின், மெய்ப் பாதுகாப்பாளர்களில் ஒருவரை அழைத்து, ''உட னடியாக மார்த்தாண்ட பூபதியை என்னை ரகசியமாக வந்து சந்திக்கச் சொல்! பத்திரம்! அவர் யாருக்கும் தெரியாமல், மாறு வேடத்துடன் இங்கு வரவேண்டும்!'' என்று உத்திரவிட்டார்.

அதைக் கேட்டுக்கொண்டு அந்த மெய்க்காப்பாளன் வெளியேறினான்.

மன்னர் சேரமான் பெருமாள் அமைதியாகத் தனது அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்தார். அவர் ஏதே னும் தீர்க்கமாகச் சிந்திக்கிறார் என்றால் அவ்விதம் மெது வாக நடப்பது வழக்கமாகும். அந்த சமயம், அவருக்கு வழக்கம்போல் சிற்றுண்டி கொண்டுவரப்பட்டது. தன் கை, கால்களைச் சுத்தம் செய்துகொண்டு, சாப்பிடாமல் மீண்டும் சிறிது உலவினார்,

வெளியே அனுப்பப்பட்ட அந்த மெய்க்காப்பாளனும் சிறிது நேரத்தில், திரும்பி வந்து, ''மன்னர் ஆணைப்படி மார்த்தாண்டர் அவர்களிடம் தகவல் கூறப்பட்டுவிட்டது'' என்று அறிவித்துவிட்டு, சிற்றுண்டி தயாராக இருப்பதைக் கண்டவுடன், அவனும் தன் சகாவுடன் கை, கால்களைச் சுத்தம் செய்துகொண்டு, அதை மூன்று இலைகளில் பகிர்ந்து வைத்தான். முதலில், முதலாவதாகவுள்ள இலை யில் வைத்ததை அவன் சாப்பிட்டான். அவன் உண்டு முடித்து எழுந்து சிறிது அங்குமிங்கும் நடந்தவுடன், இரண் டாவது நபர் சாப்பிடத் தொடங்கி, அவனும் உண்டு முடித்து சில அடிகள் எழுந்து நடந்தான். பிறகு இரு

PDF ISLAM

வரும் சேர்ந்து மூன்றும் பாகத்தை மன்னருக்குப் பரி மாறினர். அவரும் அமைதியாகச் சாப்பிட்டு முடித்தார்.

அங்கு நடந்த நிகழ்ச்சி புதிதாக ஒன்றுமில்லாமல், வழக்கம்போல நடைபெறுவதாகவே காணப்பட்டது. முதலில் உணவுண்ட மெய்க்காப்பாளன் மன்னரைக் கும் பிட்டுவிட்டு, அந்த அறையிலே ஒரு பக்க மூலையில் அவ னுக்கென உள்ள இடம்போல காணப்பட்ட ஒரு மறை வில் போய்ப் படுத்துக்கொண்டான். இரண்டாவது நபர் மட்டும் அவனுக்கென சித்தப்பட்ட ஒரு ஆசனத்தில் அமர்ந்துகொண்டான். மன்னர் சாய்வானதொரு சப்ர மஞ்ச கட்டிலில் சாய்ந்துகொண்டார்.

அப்போது, வெளிநபர் ஒருவர் வருகிருர் என்பதற்கு அடையாளமாக, வெளியில் நின்ற காவலர்கள் சைக்கினை செய்தபின் கதவைத் திறக்க, தளபதியும் அமைச்சருமான மார்த்தாண்ட பூபதி, சாதாரண தோட்டக்காரன் வேடத் தில் உள்ளே வந்து. மன்னருக்கு மரியாதை செய்துவிட்டு நின்ருர். மெய்க்காப்பாளர் மன்னருடைய கட்டிலின் கால் மாட்டில் சிறிது தூரத்தில் ஆசனம் ஒன்றுபோட மன்னர் அவரை அதில் அமரும்படி. கேட்டுக்கொண்டார்.

''உங்களை நாம் அவசரமாக வரச் சொன்னதன் கார ணம், இந்த நிமிடத்திலிருந்து இன்னும் சில தினங்களுக்கு நீங்கள் மிகவும் எச்சரிக்கையோடும், சுறுசுறுப்போடும் இயங்கவேண்டும் என்பதை விளக்குவதற்கேயாகும் கவன மாகக் கேட்டுக்கொள்ளுங்கள்! கடந்த ஒரு நூற்ருண் டுக்கு மேலாகவே சேர ராஜ்யம், இரண்டு நபர்களால் ஆட்சி செய்யப்பட்டு வந்துள்ளது. ஒருவர் மன்னர் இவர் பெயரளவுக்குத்தான் உண்மையான ஆட்சியாளர் மன்னர் பெயரை வைத்துக்கொண்டு, ராஜகுருக்கள்தான் முழு அதி காரங்களை வைத்துக்கொண்டு இருந்துள்ளனர். அவர்கள் மன்னருக்கு என்ன சொல்கிருர்களோ அதற்கு

கட்டுப்பட்ட பொம்மைகளாகத்தான் அவர்கள் இருந்து வந்தார்கள். அவர்களுக்குச் சில சமயம் மன்னர்கள் முரண்பட்டுப் போனாலோ, அல்லது அந்த மன்னர் தேவையில்லை என்று முடிவு கட்டிவிட்டாலோ, அவர்கள் ஆட்சியிலோ அல்லது உயிருடனோ இருக்கமாட்டார்கள். முதலாம் சேரமான் பெருமாள் வெள்ளைப் பரிமீதேறி வைகுண்டத்துக்கு நேராகப் போய்விட்ட கதையும் இரண்டாம் சேரமான் கடலோர தவத்திலிருந்து நேரடியாகக் கைலாயம் போய்விட்ட கதையும், மார்த்தாண்டவர்மன் கொடுங்கோலனாகி நாட்டைவிட்டோடிவிட்ட மர்மமும், அரசியலையே விரும்பாமல் துறவியாக வாழ்ந்து வந்த எம்மைக் கண்டுபிடித்து மன்னனாக்கிய காரணமும் இத்த அடிப்படையிலேதான் நடந்துள்ளது. இப்போது, அரபு வர்த்தகர்கள் பிரச்சினையை ஒரு காரணமாகக் கொண்டு, நாம் ராஜகுருவுக்கு விரோதியாகிவிட்டோம்! ஆதலால் வெகு விரைவில் நம்முடைய முடிவும், முன்னோர்களின் முடிவு போன்றதாகவே அமைந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை. இது சம்பந்தமாகச் சிறிது நாழிகைக்கு முன்பு அமைச்சர்கள் கூட்டத்தில் பொதுவாகவே குறிப்பிட்டேன்'' என்றார் சேரமான்.

''எங்கள் உயிருக்குயிரான மன்னரே! எனக்கு அரசியல் பற்றி அதிகம் தெரியாது. நான் தங்களிடும் கட்டளைகளை நிறைவேற்றக் கூடியவனே! அறிவாற்றல் மிக்கத் தாங்கள் ஆணையிட்டால் எதை வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருக்கிறேன்! உத்திரவுமாத்திரம் இடுங்கள் போதும்!'' என்றார் மார்த்தாண்ட பூபதி.

''மார்த்தாண்டரே! உங்களுக்கு உத்திரவுகள்மாத்திரமிட நான் உங்களை இங்கே அழைக்கவில்லை! நீங்கள் அடிப்படை உண்மை நிலையை உணர்ந்து பல சமயங்களில் எம் உத்திரவுகளை எதிர்பாராமலேயே நீங்கள் செயல்படவேண்

PDF ISLAM

டும் என்பதும். ஒரு இயந்திரத்தைப்போல இயக்கினால் இயங்கக்கூடிய நிலையில் நீங்கள் இருக்கக்கூடாது என்பதற்காகவே, நாம் உங்களைத் தனியாக அழைத்துவரச்செய்து பேசுகிறோம்! வெளிநாட்டு அபாயங்களைவிட உள்நாட்டு அபாயம் மிகவும் பயங்கரமானது! மூத்த அமைச்சர் சேதுபத்திரர் மிகவும் நல்லவரும் நம்பிக்கைக்குரியவரும், அறிவு ஞானம் உடையவராயினும், அவர் ஒரு அடிமையைப் போல் நடத்தப்பட்டு, இயற்கையிலேயே ஒரு அடிமையாகிவிட்டார். அவருக்கு வயதும் அதிகமாகிவிட்டது! துணிந்து எந்தக் காரியத்தையும் செய்யத் துணிவில்லாதவர்ராக ஆகிவிட்டார். ஏறக்குறைய மற்ற அமைச்சர்களும் அவ்விதமே! ஆதலால், திடகாத்திரமும், வீரமும் சரியான வயதும் உடைய நீங்கள்தான் இப்போது ஒவ்வொரு காரியத்தையும், சிந்தித்துச் செயல்படவேண்டியவர்களாக உள்ளீர்கள்! அதற்கான முழு அதிகாரத்தையும் நாம் இப்போது உங்களுக்குத் தந்துவிட்டோம்! சுருங்கச் சொல்லப்போனால், எம் உயிரைவிட இந்த நாட்டைக் கொலைகாரர்களிடமிருந்து காப்பாற்ற வேண்டிய பொறுப்பு உங்களிடம் உள்ளது!'' என மன்னர் மிகவும் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் கூறினார்.

''என்னுடையவும் என் குடும்பத்தினருடையவும் உயிர்களுக்கு மேம்பட்ட எங்கள் அரசே! நான் பெரும்பாலும் அரசியல் நுட்பங்களில் கவனம் செலுத்தாமல் நாட்டின் பாதுகாப்புத் துறையிலேயே கவனம் செலுத்தி வந்தவன்! தாங்கள் இப்போது கூறியவற்றிலிருந்துதான் நிலைமையை ஓரளவு புரிந்துகொண்டுள்ளேன் எனக்குத் தாங்கள் முழு அதிகாரத்தை அளித்தாலும், நான் நடந்துகொள்ளவேண்டிய வழிமுறைகளை எனக்கு கூறினால், அவற்றைச் சரியாகச் செயல் படுத்த முயல்கின்றேன்! இவ்விஷயத்தில் ஆரம்பத்தில் தங்கள் வழிகாட்டலை அன்புகூர்ந்து எனக்கு

PDF ISLAM

அளிக்கவேண்டுகிறேன்'' என்றார் தளபதி மார்த்தாண்ட பூபதி.

''தளபதியாரே ! முதலாவது உங்களை நீங்கள் பாது காத்துக்கொள்ளுங்கள் ! யாரையும் நம்பாதீர்கள் ! எந்த நேரமும் பூரண தற்காப்புடன் இருங்கள் ! நாம் உங்களை சந்திக்க விரும்பினால் நமது மெய்க்காப்பாளரைக்கொண்டே அழைப்போம் வேறு யார் வந்து அழைத்தாலும், அது நமது விரோதிகளின் அழைப்பு என்பதைப் புரிந்துகொண்டு அவர்களை வளைத்துப் பிடித்துவிடுங்கள்; அல்லது நீங்கள் எச்சரிக்கையாக நடந்து அவர்களுடைய திட்டங்களைக் கண்டு பிடியுங்கள் ! அவையில் முறைப்படி சந்திப்பது அல்லாமல், ஒவ்வொரு நாள் முன் இரவிலும் மாறு வேடங் களில் வந்து நம்மைச் சந்தியுங்கள் !'' என்றார் மன்னர் பிரான்.

தளபதியார் அதையேற்று ''தங்கள் ஆணை என் பாக்கி யம், மன்னர் பிரானே !'' என்றார்.

மன்னர் சேரமான் பெருமாள் மேலும் தொடர்ந்து ஒற்றர் படை நிர்வாகம் குறித்து ராஜகுருவிடமுள்ள அதி காரங்கள் அகற்றப்பட்டதை நீங்கள் அறிவீர்கள் ! ஒற்றர் படையின் புதிய அமைப்பு தோற்றுவிக்கப்படும்வரை நீங்களே அதற்கும் பொறுப்பை ஏற்கிறீர்கள் ! சிங்கராயர் நமது முழு நம்பிக்கைக்கு உரியவர். அவரிடம் விவாதித்து, ஒற்றர் படையினர் அனைவரையும் தலைநகர் வரச்சொல்லி அவர்களுக்கு நிலைமையை விளக்குகிறீர்கள் ! உங்கள் அழைப்பை ஏற்று யார் யார் வரவில்லையோ அவர்கள் என்ன காரணம் சொல்லியபோதும் அதை ஏற்காமல் அவர்களை உடனே வேலை நீக்கம் செய்கிறீர்கள் ! ஒற்றர் படையின் கூட்டத்தில் நீங்கள் உங்கள் அதிகாரத்தை உறுதியுடன் விளக்கி உங்களுடைய ஆணைக்குக் கட்டுப் பட்டே இனி அது இயங்கவேண்டும் என்றும் உத்திரவிடு

PDF ISLAM

கிறீர்கள் ! சிங்கராயரை உங்களுக்கு அடுத்த அதிகாரி யாகப் பிரகடனப்படுத்துகிறீர்கள் ! அவர் இடும் ஆணைகள் உங்களுடைய ஆணைகளே என உறுதிப்படுத்துகிறீர்கள் !'' என்றார் மன்னர்.

தளபதியார் தலையை அசைத்து அதையும் ஏற்றுக் கொண்டார்.

மன்னர் மேலும் தொடர்ந்து ஒற்றர் படைக் கூட் டத்தை பலமான காவலர்களின் பாதுகாப்பைக்கொண்டு நடத்துகிறீர்கள் ! உங்கள் ஆணைகளை எதிர்த்தோ அல்லது வேறுவிதமாகவோ யாராவது குழப்பத்தை தோற்றுவிக்க முயற்சித்தால் உடனடியாக அவர்களைக் கைதுசெய்து கூட்டத்தைவிட்டு அகற்றுகிறீர்கள் ? அவர்களில் யார்மீதா வது சந்தேகம் ஏற்பட்டால் அவர்களின் இடது கை விரலை கவனியுங்கள் ! அதில் ஒரு ஓலை மோதிரம் காணப் பட்டால், அவர்கள் உங்களுக்குச் சாதகமானவர்கள் என் பதைப் புரிந்துகொள்கிறீர்கள் ! சுருங்கச் சொல்லப் போனால் நீங்கள் ஒரு சர்வாதிகாரியைப் போல் நடந்து கொள்கிறீர்கள் !''

தளபதியார் ஆழ்ந்த சிந்தனையோடு தலையை அசைத்து ஒப்புக்கொண்டார்.

மன்னர் மேலும் தொடர்ந்து ''அக்கூட்டத்தில் வேணுவை பகிரங்கமாகக் கொண்டுவந்து நிறுத்தி விசாரணை மேற்கொள்கிறீர்கள் எல்லோரும் அதிர்ச்சி யடையும்படியாக வேணு வாக்குமூலம் அளிப்பான். பிறகு அவன் தன் உயிரைக் காப்பாற்றும்படி கொஞ்சுவான் ! நீங்கள் அவனை. ஆயுள்வரை பாதாள சிறையில் அடைக்க உத்திரவிடுகிறீர்கள் ! அன்று ஒற்றர் படையினர் அனை வருக்கும் அரசாங்க விருந்தளித்து, விருந்தினர் மாளிகை

PDF ISLAM

யில் தங்க வைக்கிறீர்கள் ! அவர்களில் யார் யார் ரகசிய மாக ராஜகுருவுடன் தொடர்பு கொள்கிறார்கள் என்பதை கவனிக்கிறீர்கள் ! அன்றிரவே வேணு தப்பிவிட்டதாக வும், அவனை உயிருடனோ பிணமாகவோ கொண்டுவந்து ஒப்புவித்தால் தக்க சன்மானம் அளிக்கப்படுமெனவும் அறி விக்கிறீர்கள் !'' என்றார் அரசர்.

''அதெப்படி மன்னர்பிரானே ! அவன்தான் பாதா ளச் சிறையில் அடைக்கப்பட்டுவிடுகிறானே ?'' என்று வியப் போடு கேட்டார் தளபதி மார்த்தாண்ட பூபதி.

''அவன் சிறைக்குக் கொண்டுபோகுமுன் தப்பித்து விடுகிறான்: அவ்வளவுதான் ! அதன் பிறகு அவனைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம் ! அது நம்முடைய விவகா ரம் !'' என்றார் அரசர்.

தளபதி அதைப் புரிந்துகொண்டதுபோல் தலையை அசைத்து ஒப்புக்கொண்டார். அவர் மன்னரிடமிருந்து விடைபெறுமுன் ''நீங்கள் இந்தக் காரியங்களை வெற்றி யுடன் செய்து முடிக்கும் மூன்று நாட்கள்வரை அரசவை கூட்டம் நடைபெறாது. உங்கள் விருப்பத்துக்குச் சுதந்திர மாகச் செயல்படலாம்'' என்று கூறி அனுப்பினார்.

தளபதி மார்த்தாண்ட பூபதி விடைபெற்றுச் சென்ற சிறிது நேரத்தில், அரபு வர்த்தகர்களில் ஒருவரான முஸ் லிம் பின் அத்ஹம் வந்துள்ள செய்தி மன்னருக்கு அறிவிக் கப்பட்டது. மன்னர் தனது வரவேற்பு அறையில் அவரை வரவேற்றார். அவர் செய்த மரியாதையை ஏற்றுக் கொண்டு, அவரைத் தன் எதிரே ஆசனத்தில் அமரச்செய் தார். பிறகு மன்னரே அவரிடம் பேசலானார்:-

''நாம் உங்களை திடீரென தனிப்பட்ட முறையில் சந் திக்க அழைத்தது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கலாம். இப்போது நாம் உங்களிடம் சொல்லப்போகும் விஷயங்கள்

PDF ISLAM

மேலும் உங்களுக்கு வியப்பை அளிக்கக்கூடும்! ஆயினும் அவற்றையெல்லாம் பொறுமையுடன் கேட்கிறீர்கள்; நமது பேச்சில் உங்களுக்கு ஏதேனும் ஐயங்கள் அல்லது ஆட்சேபனைகள் இருந்தால் கடைசியாக அதற்கு விளக்கம் கேட்கிறீர்கள்! என்று கூறி மன்னர் தன் பேச்சை ஆரம்பித்தார்:

உங்களுக்கு இந்த நாட்டில் வியாபாரம் செய்ய ஒருவார காலத்துக்கு அவகாசமளிக்கப்பட்டுள்ளது. அதற்காகப் பூரண சுதந்திரத்துடன் நாடெங்கும நடமாட அனுமதிக்கப்பட்டுள்ளது. நீங்கள் எங்கள் மக்களுடன் எவ்வளவு அன்புடனும் பாசத்துடனும், மரியாதையுடனும் நடந்துகொள்ள முற்படுகிறீர்களோ அது உங்கள் வியாபாரத்தைவிட அதிக லாபம் அளிக்கக்கூடியதாகும் என்பதை நாம் விளக்கிச் சொல்லத் தேவையில்லை. அதே சமயம் எங்கள் மக்கள் உங்களிடம் ஏதேனும் தவறுதலாக நடந்துக் கொண்டால், அதை மிகவும் பொறுமையுடனும், பெருந்தன்மையுடனும் சகித்துக்கொள்ள வேண்டியது உங்கள் கடமை என நினைவூட்டவேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். மேலும், இன்னும் மூன்று தினங்கள் கழித்து அரச அவை கூடும். அப்போது நீங்கள் ஒரு வேண்டுகோள் சமர்ப்பிக்கிறீர்கள்! அதில் வர்த்தகப் பொருட்களைக் கொள்முதல் செய்வதற்கு ஒரு வார அவகாசம் போதாது என்றும், ஒரு மாதமாவது அவகாசம் அளிக்கவேண்டும் என்றும் கேட்கிறீர்கள்! அந்த அவகாசம் உங்களுக்கு அளிக்கப்படும்?'' என்றார்மன்னர்.

இதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்த முஸ்லிம் பின் அத்ஹம் ''மன்னர் பிரானே! உங்கள் கருணையே கருணை! மிகவும் சந்தோஷமான செய்தியை எங்களுக்குச் சொல்லியுள்ளீர்கள்! இதற்காக நாங்கள் ஆயிரமாயிரம் நன்றிகளை உங்களுக்குச் சமர்ப்பித்துக்கொள்கிறோம்'' என்றார்

PDF ISLAM

இந்த நன்றியுரையைக் கொஞ்சமும் பொருட்படுத் தாத மன்னர், ''வாயளவில் நீங்கள் கூறும் ஆயிரமாயிரம் நன்றிகளைப் பெற்றுக்கொள்ள நாம் இங்கு உங்களை அழைக்கவில்லை ! செயலளவில் ஒரு சில நன்றிகளை இப் போது உங்களிடம் எதிர்பார்க்கிறோம்'' என்று கூறி சில விநாடிகள் பேச்சை நிறுத்திவிட்டு, சிறிது யோசித்து, ''இப்போது உங்களிடம் எத்தனை வீரர்கள் இருக்கிறார்கள்?'' என்று கேட்டார்.

''நாங்கள் மொத்தம் 48 பேர்கள் கரையிலும் ஐந்து பேர் கப்பலிலும் இருக்கிறோம். அனைவரும் பயிற்சிபெற்ற வீரர்களேயாவோம் ! எங்கள் தொழிலுக்கு நாங்கள் அவ்விதம் இருக்கவேண்டியுள்ளது மன்னர் பிரானே !''

''உங்கள் தொழிலைப் பற்றி நான் விசாரிக்கவில்லை ! கேள்விகளுக்கு மட்டும் பதில் சொன்னால் போதுமானது ! உங்களிடம் எவ்வளவு ஆயுதங்கள் இருக்கின்றன ?''

''எங்களைத் தற்காத்துக்கொள்ளப் போதிய ஆயுதங்கள் இருக்கின்றன பிரபு ! ஆனால் நிராயுதபாணிகள் மீது நாங்கள் எங்கள் ஆயுதங்களைப் பிரயோகிப்பதில்லை ! மேலும் தற் காப்புக்கன்றி எங்கள் ஆயுதங்களை நாங்கள் தொடுவ தில்லை !''

''நீங்கள் எப்படி, ஏன் ஆயுதங்களை உபயோகிப்பீர்கள் என்பது நமது கேள்வியல்ல ! நீங்கள் கேட்டுக்கொள்ளப் பட்டால் இந்த நாட்டின் மன்னருக்காகவும், நாட்டுக்காக வும் சில தியாகங்களைச் செய்ய முன் வருவீர்களா என்பது தான் !'' என்று மன்னர் கேட்க. முஸ்லிம் பின் அத்ஹம் உணர்ச்சிப்பெருக்கெடுத்தவராய் துள்ளி எழுந்து தன்இடுப் பிலிருந்த வாளை உருவி அதை மன்னர் காலடியில்வைத்து. தானும் முழங்காலிட்டு, ''மன்னர்பிரானின் ஆணை கிடைக்கு மாயின் நாங்கள் அனைவரும் இந்த பூமியில் எங்கள் உயிர்களைத் தத்தம் செய்வோம்! இது சத்தியம் !'' என்றார்.

PDF ISLAM

''உங்களுடைய உணர்வைக் கண்டு நாம் மகிழ்வும் நம்பிக்கையும் அடைகின்றோம். நாம் இப்போது உங்களிடம் கூறப்போவது ராஜ ரகசியம் என்பதை மனதில் வைத்து நீங்கள் உங்கள் சகாக்களிடம் எந்த அளவுக்குச் சொல்ல முடியுமோ அந்த அளவுக்கு மட்டும் சொல்லி மற்ற காரியங்களை மிகவும் நம்பிக்கையுடையவர்களைக் கொண்டு கவனிக்க வேண்டியது உம்முடையபொறுப்பாகும்'' என்றார் மன்னர்.

''அரச பிரானே! தங்கள் உத்திரவு எதுவாயினும் அது பூரண நம்பிக்கையுடனும், சிறிதளவும் தயக்கத்துக்கு இடமின்றியும் நிறைவேற்றப்படும் என்பதைத் தாங்கள் முற்றிலும் நம்பலாம்! தாங்கள் எங்களுக்குக் காட்டியுள்ள கருணைக்கு நாங்கள் செயலளவில் செய்துகாட்டும் நன்றிக் கடனாக அவை இருக்கும்! அந்தக் காரியங்களை அன்பு கூர்ந்து கூறி ஆணையிடுங்கள் பெருமானே!'' என்றார் முஸ்லிம் பின் அத்ஹும்.

மன்னர் சேரமான் பெருமாள் சிறிது நேரம் யோசித்துவிட்டு, ''நீங்கள் உங்கள் வியாபாரத்தைச் சிறிது ஒத்தி வைத்து விட்டு சில தினங்கள் இந்த நாட்டின் அரசியலில் ஈடுபடப் போகிறீர்கள்! நாம் அரண்மனைக்குள் இருக்கும் வரை, உங்களில் சிலர் சாதாரணமாக அரண்மனையைச் சுற்றிச் சுற்றி வருவது போல் கண்காணிக்கிறீர்கள்! யாரேனும் தவறான முறையில் அரண்மனைக்குள் நுழைய முற்பட்டால் அவர்களைச் சாத்தியமானவரைப் பிடிக்க முற்படுகிறீர்கள்! அவர்கள் உங்களைத்தாக்க முற்பட்டால் அவர்களைப் படுகாயப்படுத்திப்பிடிக்கிறீர்கள்! அதுபோன்று நாம் மாறுவேடத்தில் அரண்மனையைவிட்டுப்புறப்பட்டால் உங்களில் சிலர், யாரும் புரிந்துக் கொள்ளா வண்ணம் எங்களைப் பின் தொடர்கிறீர்கள்! எங்களைத் தாக்க யாரேனும் முற்பட்டால், அவர்களை நீங்கள் தாக்கிப் படுகாயப்படுத்துகிறீர்கள்! நினைவிருக்கட்டும், சாத்தியமானவரை யாரையும்

PDF ISLAM

கொல்ல முற்பட வேண்டாம்! பிடிக்கவே முயற்சிக்க வேண்டும்! உங்கள் நடவடிக்கைகளில் நீங்கள் யாரையும் நம்பவேண்டாம்! தளபதி மார்த்தாண்டபூபதி, சிங்கராயர் நமது மெய்க்காப்பாளர்களான வேலப்பன், வீரப்பன், நமது மூத்த அமைச்சர் சேதுபத்திரர் ஆகியோரைத் தவிர!'' என்றார்.

முஸ்லிம் பின் அத்ஹம் தன் தலையை அசைத்து, மன்னர் கூறியதைப் புரிந்து கொண்டதாகக் காட்டினார்.

மன்னர் தொடர்ந்து, ''நகரின் பல பாகங்களில் உங்களில் சிலர் நடமாடி, நமக்கு எதிரான பேச்சுக்கள் பரப்பப் படுகின்றனவா என்பதை கவனிக்க வேண்டும்! அப்படிப் பேசுவோரை அடையாளம் தெரிந்துக் கொள்ள வேண்டும்! வேறு அசாதாரணமான காரியங்கள் நடைபெறுகின்றனவா என்பதையும் கூர்ந்து கவனிக்க வேண்டும்! இது சம்பந்தமாக நம்மிடம் ஏதேனும் தொடர்பு கொள்ள நீங்கள் விரும்பினால், அதிகாலை, சூரிய உதயத்துக்கு முன்பு நீங்கள் தனியாக வந்து நம்மைச் சந்திக்கிறீர்கள்!'' என்றார்.

''தங்கள் ஆணை, எங்கள் பாக்கியம் மன்னர் பிரானே! என்று அத்ஹம் கூற, அவரை விடை கொடுத்து அனுப்பும் விதத்தில் மன்னர் தம் ஆசனத்திலிருந்து எழுந்தார், முஸ்லிம் பின் அத்ஹமும் அவ்விதமே எழுந்து, குனிந்து தம் நெஞ்சில் கை வைத்து மரியாதை செய்த போது, ''நினைவிருக்கட்டும்! உங்கள் காரியங்களை இப்போதிருந்தே நீங்கள் கவனிக்கத் தொடங்குகிறீர்கள்!'' என்று நினைவூட்டினார். அதையேற்று முஸ்லிம் பின் அத்ஹம் வெளியேறினார்.

மன்னர் சேரமான் பெருமாளின் நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் மிகவும் சுறுசுறுப்பு வாய்ந்ததாக இருந்தது; அன்றைய பொழுதில் வேறு எந்த விதமான அசம்பாவிதமும் நடைபெறவில்லை, பகலை விட இருட்டியவுடன் மன்னர்

மிகவும் செயல்பட ஆரம்பித்தார். எப்போதும் பிந்திய ஜாமங்களில் மாறுவேடமிட்டு வெளியே செல்லக்கூடியவர், அன்று சூரிய அஸ்தமனத்துக்குப் பின் சிறிது இருட்டியவுடனேயே, மிகச்சாதாரணக்குடிமகனைப் போல் வேடமிட்டுக் கொண்டு, கையில் ஒரு நீண்ட கம்பும், அதில் ஒரு முனையில் சோற்று மூட்டையுமாக தயாரானார். வேலப்பனும், வீரப்பனும் பல்லாக்குத் தூக்குவோர் போன்ற வேடத்தில் தங்களைத்தயார்படுத்திக் கொண்டனர், அவர்கள் அறைக்குள் இருந்தே கம்பிச் சாளரங்கள் வழியாக சிறிது நேரம் வெளியே நோட்டமிட்டனர். அரண்மனையைச் சுற்றியிருந்த தோட்டம் வழக்கம்போல அமைதியாக இருந்தது. தீப்பந்தங்கள் கொளுத்தி வைக்கக் கூடியவன் ஆங்காங்கே பந்தங்களைப் பற்ற வைத்துக் கொண்டிருந்தான்.

சிறிது நாழிகைக்குப் பிறகு இம் மூவரும் அரண்மனைக்கு வெளியே காணப்பட்டனர். சோற்று மூட்டைக்காரன். புதிதாக கிராமத்திலிருந்து வந்தவன்போல் அரண்மனையின் சுவர்களைச் சுற்றிவர, பல்லக்குத் தூக்குவோர் அவரைச் சிறிது பின் தொடர்ந்தனர். கிராமவாசி அரண்மனை வாயிலை வந்தடைந்து எதிரே நின்று தோட்டத்துக் கடைசியில் காணப்பட்ட அரண்மனையின் விளக்கொளியை வாயைத் திறந்தபடி ஆச்சரியத்துடன் பார்ப்பதுபோல் காணப்பட்டார். அரண்மனைத் தோட்டத்து நுழைவு வாயலில் காவல் நின்றவர்கள் அவரை விரட்டியடித்தனர். அவர் அங்கேயே நின்றுகொண்டு எதிர் திசையல் சிறிது தூரத்தில் தன் பார்வையைச் செலுத்தினர். அங்கு ஐந்து அரபியர் தங்கள் கைகளில் ஆளுக்கொரு கோழியைத் தலை கீழாகத் தொங்கவிட்டுக்கொண்டு ஏதோ தங்களுக்குள்ளே விவாதித்துக்கொண்டிருந்தனர். கிராமவாசி அதைப் பார்த்து மனதுக்குள் திருப்தி அடைந்தவராய் கடைத் தெருப்பக்கம் நடந்தார். அங்கு ஏதோ சில்லரைச் சாமான்களைப் பேரம் பேசி வாங்கி, தன்

PDF ISLAM

தோளின்மீதிருந்த மூட்டையில் வைத்துக் கட்டிக்கொண்டார். அவர் தன் வியாபாரத்தை முடித்துவிட்டு, அங்கிருந்து கோயில் பக்கம் புறப்படமுற்பட்டபோது, கோழிகளின் முனகல் சத்தம் கேட்கவே திகைப்புடன் திரும்பிப் பார்க்க, ஐந்து அரபியர் அங்கும் கோழிகளுடன் காணப்பட்டனர். இப்போது அவர்களை நன்ருக அடையாளம் தெரிந்துகொள்ள முடிந்தது; அவர்களில் ஒருவர் நெட்டையான கறுப்பு நிறத்தவர் மற்றவர் சிறிது குறைந்த உயரமுள்ள கறுப்பர், மீதி மூவரும் சிவப்பு நிறத்தவர்.

கிராமத்துக்காரர், அங்கிருந்த ஒரு சிறு கடைக்காரரிடம், ''ஏனுங்க! கோயிலுக்கு எந்தப் பக்கம் போகணுமுங்க ?'' என்று அரபிகள் காதில் விழும்படி கேட்டார்.

கடைக்காரர் வாயால் பதில் சொல்லாமல், தன் கையை நீட்டி ஒரு வழியைக் காட்டினுர். கிராமவாசி யாரையும் பொருட்படுத்தாமல் அவ்வழியே செல்லத் தொடங்கினுர். கோழிக்காரர்கள் அங்கேயே நின்றபடி வேறு பக்கம் பார்ப்பதுபோல, கிராமவாசி செல்வதையும், சில விநாடிகளுக்குப் பிறகு அவரைத் தொடர்ந்து இரு பல்லக்குத் தூக்கிகள் செல்வதையும் கவனித்துக்கொண்டு, அதன் பின் சாதாரணமாக நடந்து செல்வதைப் போல அவர்கள் சென்ற வழியைப் பின் தொடர்ந்தார்.

கோயிலுக்குச் செல்லும் பாதையில் அரபிகள் வந்து கொண்டிருந்தபோது, பூஜைக்குரிய சாமான்களுடன் அவ்வழி நடந்து கொண்டிருந்த பூணூலுடன் காணப்பட்ட இருவர் அவர்களை நோக்கி, ''ஏய் சூத்திரா! இது கோயிலுக்குச் செல்லும் வழி இங்கு நீவிர் நடமாடக் கூடாது! திரும்பிப்போம்!'' என்று கோபத்துடன் சப்தமிட்டார்.

PDF ISLAM

''மன்னிக்கவும்! எங்களுக்குத் தெரியாது!'' என்று முஸ்லிம் பின் அத்ஹம் கூறிவிட்டு, அங்கேயே ஒரு இருளான இடத்தில் மறைந்தார்.

அரபுகள் இருளில் மறைவான இடத்தில் இருந்தாலும் அவர்களின் பார்வை கோயிலுக்கு வெளியே அமர்ந்திருந்த கிராமவாசிமீதும், பல்லக்குத் தூக்கியின் மீதும் இருந்தன: அவர்கள் பேச்சு மூச்சின்றி இருந்தன அவர்களுக்கு ஒத்துழைப்பதுபோல் அவர்கள் கையிலிருந்த கோழிகளும் கூட அமைதியாக கத்தின,

அவர்களுக்கு முன்னுள் ஒரு மறைவிடத்திலிருந்து யாரோ சிலர் மெதுவாகப் பேசிக்கொள்ளும் சப்தம் அவர்கள் காதுகளில் விழுந்தன. முஸ்லிம் பின் அத்ஹம் மிகவும் கூர்மையாக அந்தப் பேச்சைக் கேட்டார்.

''வெளியில் மேடையில் தனித்தனியாக உட்கார்ந்திருப்பவர், மன்னரும் வேலப்பனும்தான்! வீரப்பன்மட்டும் மிகவும் சாமர்த்தியமாக உள்ளே நுழைந்துவிட்டான்!'' என்றது ஒரு குரல்.

''அதுவும் ஒரு விதத்தில் நமக்கு நல்லதுதான்! மூவரையும் ஒரே சமயத்தில் வேலையை முடிப்பதைவிட, முதலில் இந்த இரண்டு பேரையும் முடித்து விட்டால், வீரப்பன் தனியே வரும்போது அவனை நாம் வெகு சுலபமாகத்தீர்த்து விடலாம்!'' என்றது இன்னொரு குரல்.

''டேய் சும்மா இருங்கடா! தலைமைக்காவலனையும், நம்பீஸ்வரனையும் போல மன்னரும் வேலப்பனும் ஏமாளிகளல்ல! மன்னர் சகலகலாவல்லுநர். ஆயுதங்களைக்கொண்டு மட்டுமல்ல, வாய் மந்திரத்தாலும் அவர் எதிரிகளை மயங்கி விழச்செய்துவிடுவார். வேலப்பனோ பயங்கரமான ஒரு மிருகம். மேலும் குத்தீட்டி எறியும் கலையில் மிகவும் வல்ல

PDF ISLAM

வன்; சிறிது ஏமாந்தோமானால், நம்மூவரின் உயிரும் போவது உறுதி! என்றது மூன்றாவது குரல்.

''நாம் ஏன் அவர்கள் எதிரில் போகிறோம்? நாம் என்ன முட்டாள்களா? நாம் யாரோ போலச் சென்று அவர்களுக்குப் பின்புறமாகச் சிறிது அமர்வோம் சரியான நேரம் பார்த்து திடீரென நம் வேலையை முடிப்போம்'' என்றது முதல்குரல்.

'' அது புத்திசாலித்தனமாகத் தெரியவில்லை. ஒருசமயம் அவர்கள் நம்மை சந்தேகித்து விட்டால் நம் காரியமெல்லாம் கெட்டுப்போய் விடும். கோயிலில் பூஜை முடிந்து விட்டால் எல்லோருடனும் அவரும் திரும்புவார்கள். பின் தொடர்ந்து சென்று கூட்டத்திலேயே காரியத்தை முடித்து விட்டால்...? என்ற கேள்வியோடு நிறுத்தியது இரண்டாவது குரல்.

''முட்டாள்களா! வாயைப் பொத்திக் கொண்டு இருங்கடா! அதோ அங்கே பாருங்கடா!'' என்று, மூன்றாவது குரல் துடிப்போடு கூறியது. மண்டபமேடைகாலியாக இருந்தது!

இருவர் ஒரேசமயத்தில், ''என்ன! மாயமாய் மறைந்து விட்டார்களா?'' என ஆச்சரியத்துடன் கேட்டனர்.

மூன்றாவது நபர், 'மன்னருக்கு மாயமாய் மறையும் கலை தெரியுமென்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன்! ஆனால் இந்த வேலப்பன் பயலையும் தூக்கிக் கொண்டு மறைந்து விட்டார் என்பதை என்னால் நம்ப முடியவில்லை கொஞ்சம் பொறுத்துப் பார்க்கலாம் என்றான்!''

அவர்களின் பேச்சுக்களையும் கேட்டுக் கொண்டே, தன் பார்வையை மண்டப மேடை மீது வைத்துக்கொண்டிருந்த

PDF ISLAM

முஸ்லிம் பின் அத்ஹமும், மன்னரும் வேலப்பனும் மெதுவாக எழுந்து மண்டபத்தின் மறு பக்கம் சென்றதைக் கவனித்தார். அது முற்றிலும் இருளாக இருந்ததால் தொடர்ந்து அவர்களைப்பார்க்கமுடியவில்லை. அவர்களை தன் பார்வையின் கீழ் வைத்துக்கொள்ள அத்ஹம் விரும்பினாலும், தங்களுக்கு முன்னால் இருளில் பதுங்கி பேசிக்கொண்டிருக்கும் மூன்று கொலைக்காரர்களைக் கடந்துதான் செல்ல வேண்டியிருந்ததால், அவர் தயங்கிக்கொண்டிருந்தார். மன்னரும் வேலப்பனும் இருளில் மறைந்துவிட்ட காட்சியைக் கொலைக்காரர்கள் பார்க்கவில்லை என்பதை அறிந்து மேற்கொண்டு அவர்களின் நடவடிக்கையைத் தொடர்ந்து தாமும் செயல்படலாம் என்ற முடிவு கட்டிக்கொண்டார்.

மூன்றாவது குரல் திடீரென்று ''எலே காளி! நீ மட்டும் மெதுவாகச் சென்று மண்டபத்தை ஒரு சுற்றுப் போட்டு விட்டு வருகிறாயா?'' என்று கேட்டது.

''என்னை அடையாளம் தெரிந்து கொண்டு விட்டால்...?'' என்று தயக்கத்தோடு கேட்டது முதல் குரல்.

''முட்டாள்! இந்த நகரத்தில் ராஜகுருவைத் தவிர நம்மை யாருக்கடா அடையாளம் தெரியும்? தைரியமாகப் போடா! நாங்கள் இருக்கிறோம்! உனக்கு ஏதாவது ஆபத்து வந்தால், அடுத்த விநாடியில் நாங்கள் பாய்ந்து வந்து விடுகிறோம்!'' என்று கூறியது மூன்றாவது குரல்.

சிறிது நேர அமைதிக்குப்பிறகு, அரசாங்க சிப்பந்தி போல் உடையணிந்து காணப்பட்ட ஒருவன் வெளிச்சத்துக்கு வந்தான். அவன் முகத்தைப்பார்க்க முஸ்லிம் பின் அத்ஹம் எவ்வளவோ முயன்றும் முடியவில்லை; முதுகுப் புறத்தைத்தான் பார்க்க முடிந்தது.

PDF ISLAM

முஸ்லிம் பின் அத்ஹம் மண்டபத்தின் பக்கம் பார்வையைச் செலுத்தினர். அங்கு இருண்ட பகுதியிலிருந்து சில பிராமணர்கள் கோயிலை நோக்கிச் செல்வதைத்தான் காண முடிந்தது, அப்படிச் சென்றவர்களில் இருவருடைய உயரம், எடைபாவனை ஆகியவற்றிலிருந்து, அவர்கள் மன்னனும், வேலப்பனும் தான் என்பதை அவருடைய கூரிய கண்கள் அடையாளம் கண்டு கொண்டு விட்டன. அவர்கள் மிகச் சாதாரணமாகக் கோயிலுக்குள் நுழைவதையும் அவர் கண்டு கொண்டார். அவர் மனம் நிம்மதியடைந்தது.

இதற்கிடையில், மண்டப மேடையை நோக்கி வெகு விரைவாகச் சென்ற காளி, அதை ஒரு முறைச் சுற்றிவிட்டு யாரும் காணாததைத் தன் கையை உயர்த்தி 'இல்லை' என்று அடையாளம் செய்தான். அதைக்கண்ட இருவரும், வேகமாக வெளியேற முற்பட்ட சமயத்தில், அரபுகள் கீழே போட்டிருந்த கோழிகளில் சில கால் மிதிபட்டதனாலோ அல்லது வேறுகாரணத்தாலோ திடீரென ஒன்று மாறி ஒன்று குரல் கொடுக்க ஆரம்பித்தன. இந்த சப்தத்தைக் கேட்ட மூன்றாவது நபர், ''டேய்! இங்கே என்ன கோழி? வாடா பார்ப்போம்!'' என்று பாய்ந்து வந்தார்கள். அதே சமயம் முஸ்லிம் பின் அத்ஹம், அரபியில் ''அவர்களை அப்படியே பிடியுங்கள்'' என உத்திரவிட்டார்.

கொலைக்காரர்கள் தங்கள் ஆயுதங்களை வெளியே எடுப்பதற்குள், அவர்கள் தலைகளில் ஓங்கி அடிகள் விழுந்தன. அடுத்த நிமிடத்தில் அவர்கள் கீழே தள்ளப்பட்டு, கைகள் பின்புறம் கட்டப்பட்டன. அவர்கள் வாய்களில் துணிகள் திணிக்கப்பட்டன. இவைகளெல்லாம் சில விநாடிகளில் நடந்து முடிந்து விட்டன. மறுபடியும் அந்த இடம் அமைதிக்குள்ளாகியது.

மண்டப மேடைப்பக்கம் நின்ற காளி பலமுறை சைக்கினைச் செய்தான். எந்தவித பதிலும் கிடைக்காததால்

PDF ISLAM

அவன் மீண்டும் 'தன் சகாக்கள் தங்கியிருந்த இடத்தை நோக்கி வர ஆரம்பித்தான். அந்த நேரத்தில் அப்பக்கமாகவந்த உண்மையான அரசுகாவலாளி ஒருவன் அவனிடம் ஏதோ பேச்சுக் கொடுக்க முற்பட்டான். காளி திடீரெனத் தன் குத்துவாளை உருவி, அந்தக் காவலாளியைத் தாக்கியவுடன், அவன் 'ஐயோ' என்று அலறிக்கீழே விழுந்தான். அந்த சப்தத்தைக் கேட்டுபலர் ஓடிவருவதற்குள் காளி வேறு திசையை நோக்கி வேகமாக மறைந்து விட்டான்.

காவலன் குத்தப்பட்டு விழுந்தஇடத்தை நோக்கி சிறிது நேரத்தில் பெரிய கூட்டம் கூடிவிட்டது. அக்கம் பக்கத்தில் இருந்த காவலர்கள் சிலரும் அங்கு வந்து சேர்ந்தனர். அவர்களில் ஒருவர், குத்துப்பட்ட நபரின் சட்டையை உடனடியாக அகற்றி விட்டு, ரத்தம் வந்துகொண்டிருந்த இடத்தை ஒரு துணியைக் கொண்டு அடைத்தும் கட்டுப்போட்டும் ஏதோ தற்காலிக வைத்தியம் செய்தார். சில காவலர்கள் கூட்டத்தினரை விலகிப் போகும்படிச் செய்து கொண்டிருந்தனர்.

மறைவிலிருந்த அரபிகளில் ஒருவர் முஸ்லிம் பின் அத்ஹமை நோக்கி, ''நாம் இங்கே இருந்துகொண்டிருப்பது ஒரு சமயம் விபரீதம் ஆகிவிடலாம்! பாமர மக்கள் தவருகப் புரிந்து கொண்டு விடலாம்! மேற்கொண்டு..'' என்று அரபியில் கூறத் தொடங்கியபோது, முஸ்லிம் பின் அத்ஹம் குறுக்கிட்டு, ''ஷ்...ஷ் ... நம்மிடம் கைதிகள் இருக்கிருர்கள். அவர்களை உரிய இடத்தில் சேர்க்க வேண்டியது நம்முடைய பெரிய வேலை! அது எப்படி என்று தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்'' என்ருர்.

கைதிகளைப்பற்றி அரபுகள் அதிகம் யோசிக்கத் தேவையில்லாமலாகி விட்டது. ஏனெனில் அடுத்த சில நிமிடங்களில் ஒரு சிறுபடையோடு, ராணுவ அமைச்சர் மார்த்தாண்ட பூபதி அந்த கூட்டத்துக்குள் நுழைந்தார். அவரைக் கண்டவுடன் முஸ்லிம் பின் அத்ஹம் தன் சகாக்களிடம்,

PDF ISLAM

''நீங்கள் இங்கேயே இருங்கள் நான் தளபதியைச்சந்தித்துப் பேசிவிட்டு வருகிறேன்'' என்று கூறிவிட்டு கூட்டத்தை நோக்கி வேகமாக விரைந்தார்.

காவலர் கொல்லப்பட்டது எப்படி என்பது பற்றி அந்தக் கூட்டத்தில் தளபதி மார்த்தாண்ட பூபதி விசாரணைகள் செய்துகொண்டிருந்தார். கூட்டத்தின் கடைசிப் பகுதியில் வேடிக்கை பார்ப்பது போல நின்றுகொண்டிருந்த ஆறடி உயரமுள்ள முஸ்லிம் பின் அத்ஹமை அவர் அடையாளம் தெரிந்து கொள்ள அதிக நேரமாகவில்லை ஆச்சரியத்துடன் அவரை நோக்கி ''நீங்களா ? இந்த நேரத்தில் ! இந்த இடத்தில் !'' என்று கேட்டார்.

''ஆமாம் ! இன்று சந்தை நாள் எனவும், கோழிகள் மலிவாகக் கிடைக்கும் என்றார்கள் ! நாங்கள் கோழி வாங்க வந்தோம் !'' என்றார் அத்ஹம்.

இவர்கள் பேசத் தொடங்கியவுடன் ஒரு கூட்டம் சூழ்ந்து கொண்டது. தளபதி மார்த்தாண்டர் தன்னுடன் வந்த காவலர்களை ஏவி, கூட்டத்தை அப்புறப்படுத்தவும், காயப்பட்டவரை உடனடியாக மருத்துவரிடம் கொண்டு செல்லவும் உத்தரவிட்டார். அதன்படி அவர்கள் துரிதமாகச் செயல்படத் தொடங்கினர்.

தளபதி மார்த்தாண்டரும் அத்ஹமும் தனித்து நிற்கும் சூழ்நிலை அமைந்தவுடன், உங்களுக்குக் கோழிகள் கிடைத்தனவா ? நீங்கள் கேட்டிருந்தால் உங்களிடத்துக்கே தேவையான கோழிகளைக் கொண்டுவர ஏற்பாடு செய்திருப்பேன்!'' என்றார் தளபதி.

முஸ்லிம் பின் அத்ஹம் சிரித்துக்கொண்டே ''நாங்கள் கோழி வாங்கவந்த இடத்தில், உங்களுக்குப் பிடித்தமான இரண்டு கொழுத்த கிடாய்கள் கிடைத்தன. என்றார்!''

PDF ISLAM

''எனக்குப் பிரியமான கிடாய்களா ?'' நாங்கள் பூபதி வம்சத்தினர்; ஃசவர்கள் மாமிசம் சாப்பிடுவதில்லை! என்றார் தளபதி.

அத்ஹம் சிரித்துக்கொண்டே ''இந்தஇரண்டுகால் கிடாய்கள் உங்களுக்கும் மன்னர் பிரானுக்கும் ரொம்பப் பிடிக்கும்! மொத்தம் மூன்று கிடாய்களில் ஒன்று இப்போது நீங்கள் அப்புறப்படுத்திக்கொண்டிருக்கும் காவலரைத் தாக்கிவிட்டு மறைந்துவிட்டது. மற்ற இரண்டு கிடாய்கள் எங்கயிடம் வசமாகச் சிக்கிக்கொண்டன. இவை ஏற்கனவே உங்கள் காவலர் தலைவரைவும், ஒற்றர் படைத் தலைவரையும் கொன்றவை !'' என்றார்,

மார்த்தாண்டர் ஆச்சரியப்பட்டு, ''என்ன! நீங்கள் சொல்வது உண்மையா ? எங்கே அவர்கள் ?'' என்று கேட்டு சுற்று முற்றும் பார்த்தார்.

முஸ்லிம் பின் அத்ஹம் அமைதியாக, தயவுசெய்து பதட்டப்படாதீர்கள்! அவர்கள் இருட்டில் கட்டிப் போடப்பட்டிருக்கிறார்கள், எங்களவர் 4பேர் அவர்களுக்குக் காவல் இருக்கிறார்கள். காளிமட்டும் தப்பித்துக்கொண்டான். இம்மூவரும் மன்னர் பிரானைக் கொல்லத் திட்டமிட்டு இங்கு அனுப்பப்பட்டுள்ளனர். மன்னர் பிரான் பிராமணரைப்போல வேடமிட்டு, தனது மெய்ப்பாதுகாப்பாளர்களுடன் கோயிலுக்குள் சென்றுள்ளார்கள். காளி திரும்பிவந்து அடையாளம் கண்டுகொண்டானானால் ஒரு சமயம் அரசபிரானைத் தாக்கக்கூடும். அல்லது கோயிலுக்குள்ளேயே அரசருக்கு ஏதாவது ஆபத்து வரக்கூடும்'' என்றார்.

மார்த்தாண்டர் சிறிது யோசித்துவிட்டு, மன்னர் பிரான் மாறு வேடத்தோடு வெளியே செல்கிறார் என்றால், அவர் தன்னைத் தற்காத்துக்கொள்ள முழு ஏற்பாட்டுடன்

PDF ISLAM

தான் செல்வார். நாம் அதுபற்றி அதிகம் கவலை எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. அவருடைய மெய்க்காப்பாளர் கள் இருவரும் மகா திறமை வாய்ந்தவர்கள்! நிலைமை எதுவாயினும் சமாளித்துவிடுவார்கள். இப்போது இந்த இரண்டு கொலைக்காரர்களையும் நான் பாதாள சுரங்கச் சிறைக்குக் கொண்டுபோகவேண்டும். அதற்கு நீங்களும் உங்கள் ஆட்களும் ஒத்துழைக்க வேண்டுமே!'' என்ருர்.

அத்லறம், அதே சிரித்த முகத்துடன், ''தளபதி அவர் களே! உங்களுக்குத் தெரியாத ராஜதந்திரம் இல்லை! நான் உங்கள் ஆலோசனைக்கு மாருக கருத்துக் கூறுவதற்கு அன்பு கூர்ந்து மன்னிக்க வேண்டுகிறேன்! நாங்கள் அன்னிய நாட்டவர்கள். உங்கள் நாட்டு அரசியல் நட வடிக்கைகளில் தலையிடுவதைப் பொதுவாக மக்கள் விரும்ப மாட்டார்கள். முதலாவதாக, இந்தக் குற்றவாளிகளை நாங்கள்தான் பிடித்தோம் என்ற தகவல்கூட மக்களுக்குத் தெரியக்கூடாது என நினைக்கிருேம். இந்த நிலையில் நாங் கள் உங்களுக்குத் துணை வருவது சரியாகப்படவில்லை! குற்ற வாளிகள் கூட எங்களை அடையாளம் தெரிந்துகொள்ளக் கூடாது என்பதற்காக அவர்களின் கண்களையும் கட்டிவிட் டோம்!'' என்ருர்.

இதைக் கேட்ட மார்த்தாண்ட பூபதி, அதுவும் சரிதான் என்று ஒப்புக்கொண்டு அக்கொலைகாரர்கள் இடத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்டு, அங்கு சிறிது தூரத்தில் நின்ற கூட்டத்தினரை விரட்டிக்கொண்டிருந்த ஒரு காவலரை அழைத்து, அவரிடம் ஏதோ ரகசியமாகக் கூறிஞர். அவர் உடனடியாக எங்கேயோ விரைந்தார். மாா த்தாண்டர் அத்லறமை நோக்கி, ''அவர்கள் சரியாகக் கட்டப்பட்டிருக் கிருர்களல்லவா?'' என்று கேட்க' ''அவர்கள் எழுந்து நிற்கவோ, பேசவோ, பார்க்கவோ எதுவும் முடியாது?'' என்ருர் அத்லறம்,

PDF ISLAM

''அப்படியானால் மிக்க சரி! நீங்கள் உங்கள் ஆட்களை அழைத்துக்கொண்டுபோய் கோழி சமையலை கவனியுங்கள்! கிடாய்களை நான் கவனித்துக்கொள்கிறேன்'' என்று மார்த் தாண்டர் புன் சிரிப்புடன் கூறினார்.

''என்னுடன் வந்தவர்கள் போய்விடுவார்கள். ஆனால் நான் இங்கு கொஞ்சம் தாமதித்து கோயிலில் பூஜைகள் முடிந்து மக்கள் திரும்பியவுடன் என் இடத்துக்குப் போக அனுமதி கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்'' என்றார் அத்ஹம்.

''தாராளமாக! தாராளமாக!'' என்று கூறிய மார்த் தாண்டர், ''தப்பித் தவறி குளத்துப் பக்கம் போய்த் தண் ணீரைத் தொட்டு விடாதீர்கள்! தீட்டாகப் போய்விட் டது என்று கூறி உங்களைத் தாக்க ஒரு படையே திரண்டு விடும்! நாங்கள்கூட உங்களைக் காப்பாற்ற முடியாது ஜாக்கிரதை'' என்றார் தளபதி.

அதைக் கேட்டு தலையை அசைத்துக்கொண்டார் அந்த நெடிய கறுப்பு மனிதர்.

இவர்கள் தங்கள் பேச்சை முடித்துக்கொள்ளும்தருவா யில், பல்லக்கு போன்று மூடப்பட்ட ஒரு பெட்டியுடன், இரண்டு பெரிய மாடுகள் பூட்டப்பட்ட ஒரு வண்டி சிறிது தூரத்தில் தெரிந்தது. அதனுடன் நான்கு காவலர்களும் வந்துகொண்டிருந்தனர். அதைப் பார்த்துவிட்ட தளபதி ''அதோ! வாகனம் வந்துவிட்டது நீங்கள் விரும்பியபடி முன்னதாகச் சென்று, உங்கள் ஆட்களை எங்கள் ஆட்கள் பார்க்காதவண்ணம் போகச் சொல்லுங்கள்'' என்றுகூற, அவ்விதமே, முஸ்லிம் பின் அத்ஹம் முன்னால் சென்று அந்த மறைவுக்குள் நுழைந்தார். தளபதி அவரைப் பின் தொடர்ந்து வந்து கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் அந்த இருட்டில் சிறிது தூரத்தில் ஐந்து அரபிகள் கையில்

PDF ISLAM

கோழியோடு போய்க்கொண்டிருப்பதை மார்த்தாண்டரால் பார்க்க முடிந்தது. அவர் முஸ்லிம் பின் அத்ஹும் முதலில் புகுந்த இருட்டுப் பகுதிக்குள் நுழைந்தார். அங்கு கை, கால்கள், கண்கள் கட்டப்பட்டு இருவர் குப்புறக் கிடந்தனர். காவலர்களை விட்டு அவர்களைத் திருப்பச்செய்து முகங்களை நோக்கிய மார்த்தாண்டணருக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது.

அவர்கள் இருவரும் ஏற்கனவே அவருக்குத் தெரிந்த பயங்கரக் கொலைக் குற்றவாளிகள். அவர்களைக் கழுவிலேற்ற, ஏற்கனவே தண்டனை அளிக்கப்பட்டது ஆனால், அவர்களை மன்னித்து, ஆயுள் சிறைக் கைதியாக இருக்கக் கருணை செய்யுமாறு ராஜகுரு கேட்டுக்கொண்டதற்கிணங்க. அவர்களைப் பாதாள சிறையில் அடைக்க ஆணையிடப்பட்டது.

யாரும் தானாக வெளியே வரமுடியாத அந்தப் பாதாளச் சிறையிலிருந்து அவர்கள் எப்படி வெளியே வந்தார்கள் என்பதுதான் தளபதியால் புரிந்துக்கொள்ள முடியாததாக இருந்தது. அவர்களைச் சேர்ந்த 'காளி' என்ற பெயருடைய நபரும் பாதாளச் சிறைக் கைதிதான் என்பதும் அவருக்கு நினைவு வந்தது.

அரபுகளைப்போகச் சொல்லி தளபதி மார்த்தாண்டர் கூறினாலும், அவ்விதமே, அவர்கள் போவதுபோல் காட்டிக் கொண்டாலும் உண்மையில் அவர்கள் போய்விடவில்லை. சிறிது தூரம் சென்று மீண்டும் ஒரு இருண்ட இடத்தில் மறைந்துக் கொண்டனர். தளபதியார் கைதிகளைக்கொண்டு சென்றதைப் பார்த்தவுடன், மறுபடியும் பழைய இடத்துக்கே வந்து, கோயில் நுழைவு வாயில் பார்வையில் படும்படியாகத் தங்கிக் கொண்டனர்.

அநேகமாக கோயில்வாயில் அமைதியாகவே இருந்தது. சாதாரண பக்தர்கள் போல் கோயில் வாயிலில் நின்று

PDF ISLAM

கொண்டு உள்ளே நுழைவோரைக் கண்காணித்துக் கொண்டிருந்த நால்வர் மட்டும் அதே இடத்தில் நின்று கொண்டிருந்தனர். கோயிலில் ஏதோ பூஜை நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருப்பதற்கு அறிகுறியாக அவ்வப்போதுமணிகளின் ஓசைகள் கேட்பது அரபிகளின் காதுகளில் இலேசாக விழுந்து கொண்டிருந்தது. உள்ளே நுழைந்தவர்கள் யாரும் வெளியே வராததால், பூஜை காரியங்கள் தொடர்ந்து நடந்துக் கொண்டிருப்பதாக அரபுகள் ஊகித்துக் கொண்டனர். நேரம் அதிகமாகிவிட்டதைக் காட்டுவது போல வெளியில் ஆங்காங்கும் எரிந்துக் கொணடிருந்த தீப்பந்தங்கள் ஒளி மங்கிக் கொண்டிருந்தன. எனினும் இனி பந்த ஒளியின் தேவையில்லை என்று சொல்வது போல சந்திரனின் இயற்கை வொளி தெளிவாகப் பிரகாசிக்கத் தொடங்கியது அதன் மூலம், அரபுகளால், நபர்களின் முக அமைப்புகளைத் தெரிந்து கொள்ள முடியாவிட்டாலும், நடமாடுவோரின் தோற்றங்களை அறிந்து கொள்ள முடிந்தது.

சிறிது நேரத்துக்குப்பின், ஒரு நபர், கோயில் குளத்து மறைவிலிருந்து மெதுவாக வெளிப்பட்டு, வாயிலை நோக்கிச் செல்வதையும், அங்கு காவல் நின்ற நால்வரிடம் ஏதோ பேசுவதையும் அரபுகள் கண்டனர். அவர்களிடம் பேசிவிட்டு அந்த நபர் தங்களை நோக்கி வருவதையும் அவர்கள் கண்டனர். அந்த நபர் தங்களை நெருங்கியபோதுதான் அந்நபரின் நடை உடை பாணியில் இருந்து அவன் தான் காளி என்று புரிந்து கொண்டனர். அரபுகள் அடுத்து மேற்கொள்ள வேண்டிய காரியங்களைத் தங்களுக்குள் மிக சுருக்கமாக மெதுவான குரலில் பேசிக் கொண்டனர்.

காளி அந்த இருட்டுப்பக்கம் வந்து, மாரி அண்ணே! மாரி அண்ணே! என்று குரல் கொடுத்தான். மூஸ்லிம் பின் அத்ஹம், மெதுவாக தனது அடித்தொண்டையில், ''காளி! இங்கே வா!'' என்றார், காளி உள்ளே நுழைந்தான். அவ்வ

PDF ISLAM

ளவுதான்! அடுத்த சில விநாடிகளில் தலையில் பலத்த அடியோடு சுருண்டு விழுந்த அவன் கண்கள் கட்டப்பட்டும் வாயில் துணி அடைக்கப்பட்டும் கீழே உருட்டி விடப்பட்டான்.

அரபுகள் அனைவரும் அங்கேயே சிறிது நேரம் காத்திருந்தனர். கோயிலில் பூஜை முடிந்து மக்கள் கூட்டங் கூட்டமாக வெளிவரத் தொடங்கினர். அவர்களில் மன்னரையும் அவருடைய மெய்ப்பாதுகாப்பாளர்களான வேலப்பன் வீரப்பன் ஆகியோரையும் முஸ்லிம்பின் அத்ஹமுடைய கண்கள் மிகக் கூர்மையாகத் தேடிக் கொண்டிருந்தன. கூட்டம் வரவரக் குறைய ஆரம்பித்தது. ஆனால் அம்மூவர் மட்டும் காணப்படாதது, அரபுகளுக்கு ஆச்சரியத்தைத் தந்தது. கடைசி நபரும் கோயிலை விட்டு வெளியே வந்து விட்டார் என்பதற்கு அடையாளமாக, கோயில்கதவுகளையும் சாத்தத் தொடங்கினர். அதோடு கோயில் வாசலில் நின்ற நால்வரும் கூட்டத்தோடு கலந்து மறைந்தனர். அதன் பிறகும் சிறிது நேரம் காத்திருந்த அரபுகள், முழு நடமாட்டமும் ஓய்ந்தவுடன் மேற் கொண்டு என்ன செய்வது என்று திகைத்துக் கொண்டிருந்த சமயம், அரசாங்க உடையணிந்த மூன்று காவலர்கள் எங்கிருந்தோ வெளிப்பட்டு ஏதோ பேசிக்கொண்டே மிகச்சாதாரணமாக அவ்வழியே வந்து கொண்டிருந்தனர். ஒருவர் கையில் மட்டும் நீண்ட வேல் இருந்தது.

முஸ்லிம் பின் அத்ஹம் மட்டும் இருளிலிருந்து மெதுவாக வெளிப்பட்டு, அவர்களை நோக்கிச் சென்றார். அவரைப்பார்த்த அக்காவலர்கள் மேற்கொண்டும் நடந்து வராமல் அங்கேயே நின்று விட்டனர். அவர்களில் கையில் வேல் வைத்திருந்த நபர், வேலை நேர் வாக்கில் திருப்பியபடி ஓ! அரபி! அங்கேயே நில்! மேற்கொண்டு நடந்தாயானால் உன் மீது ஈட்டி பாய்ந்து விடும்'' என்றார்.

PDF ISLAM

முஸ்லிம் பின் அத்ஹம் அங்கேயே நின்று கொண்டு, முகத்தில் புன் சிரிப்புத்தவழ, "நான் என் மீது ஈட்டி பாய்ந்து விடும் என்று பயந்து நிற்கவில்லை! எனது மரியாதைக்குரியவரின் நேரடி உத்திரவுக்குக் கட்டுப்பட்டவனாக இங்கே நிற்கிறேன்" என்றார்.

அதைக்கேட்டவுடன், வேல் வைத்திருந்தவர், தனது வேலை வாளை நோக்கி உயர்த்திக் கொண்டு, சுற்று முற்றும் பார்த்தவராய், "ஓ! முஸ்லிம்! மேற்கொண்டு உரக்க எதுவும் பேசாதீர்! சமீபமாக வாரும்" என்று கூற, அவர்களின் சமீபத்தில் நெருங்கிய முஸ்லிம் பின் அத்ஹம், "மன்னர் பிரானே! அந்த இருளில் உங்கள் கைதி ஒருவன் கட்டிப் போடப்பட்டிருக்கிறான். இவன் மூன்றாவது நபர் முதல் இரண்டு நபர்களை சிறிது நாழிகைக்கு முன்பு தளபதியாரிடம் ஒப்புவித்து விட்டோம்!" என்று சொல்லி, காளி கட்டிப்போடப்பட்டிருக்கும் இடத்தைச்சுட்டிக்காட்டினார்

மன்னர் வியப்புடன், "அப்படியா? நாங்கள் அவனை கவனித்துக் கொள்கிறோம்; நீங்கள் யாரும் சந்தேகப்படா வண்ணம் உங்கள் இடத்துக்குப்போய்ச்சேருங்கள்!" என்று உத்தர விட்டார்.

முஸ்லிம் பின் அத்ஹம் திரும்பி வேகமாக நடந்து, தன் சகாக்கள் இருக்குமிடம் சென்று, அரபிமொழியில் ஏதோ கூறி விட்டு நடந்தார். அந்த இருளிலிருந்து புற்றீசல்கள் வெளிப்படுவது போல ஒருவர் பின் ஒருவராக நான்கு அரபியரும் தங்கள் கையில் கோழிகளுடன் வெளிப்பட்டு முஸ்லிமைப் பின் தொடர்ந்தனர்.

மறுநாள் மதிய நேரத்தில் அரபுவர்த்தகர்கள். வாங்கி கொண்டு வந்திருந்த வியாபாரச் சாமான்களுடனும், மாதிரிப் பொருள்களுடனும், அண்டை ஊர்களான பொன்னானி, திருரங்காடி, தலைச்சேரி, திரூர், கிரங்கானூர், முத

PDF ISLAM

லான இடங்களுக்கு ஐந்தைந்து பேர்கள் கொண்ட குழுவாக பிரிந்து பயணப்பட்டனர். முஸ்லிம் பின் அத்ஹம் தலைமையில் முந்திய இரவு செயல்பட்ட ஐவர் மட்டும் தலைநகரிலேயே தங்கிவிட்டனர். இந்தக் குழுவினர் மக்களைச் சந்திக்கவும் வியாபாரம் செய்யவும், அரசாங்க சத்திரங்களில் தங்கவும் அதிகாரப் பூர்வமான சான்றிதழ்கள் மன்னரின் முத்திரையுடன் மூத்த அமைச்சர் சேதுபத்திரரால் வழங்கப்பட்டன. அரபுகள் சிறு சிறு படகுகளில் ஏறி, அந்தந்த துறைமுக ஊர்களில் இறங்கப் பயணப்பட்டனர். கடற்கரை மாளிகையில் ஏராளமான மக்கள் கூடி அவர்களை வழியனுப்பி வைத்தனர்.

இந்த நிகழ்ச்சிகள் கடலோரத்தில் நடந்து கொண்டிருக்கும் அதே நேரத்தில் மன்னர் சேரமான் பெருமாள் அவர்களின் சந்திப்பு அறையில், மூத்த அமைச்சர் சேதுபத்திரர் படைத்தளபதி மார்த்தாண்டர் ஒற்றர் படைத்தலைவர் சிங்கராயர் ஆகியோர் மன்னருடன் கலந்துரையாடிக் கொண்டிருந்தனர்.

தளபதி மார்த்தாண்டர், முதல் நாளிரவு கோயிலுக்கு சமீபத்தில் நடந்த சம்பவங்களைக் கூறி, அரபுகளின் சாதனைகளைப் பாராட்டிக் கூறினர். அதோடு பாதாளச்சிறையில் அடைக்கப் பட்டுள்ள மாரி, காளி மற்றும் அவர்களின் சகா ஆகிய மூவரும் ஒப்புதல் வாக்கு மூலம் அளித்து உயிர்ப் பிச்சைக் கோருவதாகவும் சொன்னார்.

முந்திய இரவு கோயிலுக்குள் பூஜை நடந்துக் கொண்டிருந்த போது, ரகசிய அறையில் ஒற்றர்களின் தனிக்கூட்டம் ஒன்று நடந்ததாகவும், அதில் மன்னருக்கு எதிரான விஷயங்கள் பல பேசப்பட்டதாகவும் நாட்டின் பலபகுதிகளிலிருந்து சுமார் 150 பேர்வரை அதில் கலந்து கொண்டதாகவும், ராஜகுருவின் ஆசிர்வாதத்துடன் விஷ்ணுபட்டர்

PDF ISLAM

என்பவர் ஒற்றர் படைத் தலைவனாக அதில் அறிவிக்கப்பட்டதாகவும் கூறினார்.

மூத்த அமைச்சர் சேதுபத்திரருக்கு அவற்றையெல்லாம் கேட்க ஆச்சரியமாக இருந்தது. அவர் கண்கள் கலங்க, ''எங்களுடைய இளம் மன்னவா? சேரமான்வம்சத்து சீர் மிகு செல்வரே! உங்களை இழக்க ஒரு போதும் சம்மதிக்க மாட்டோம்! இந்த சதியை எப்படியேனும் முறியடிக்க வேண்டும்! நயவஞ்சக ராஜகுருவுக்கு சரியான பாடம் புகட்ட வேண்டும்'' என்று உணர்ச்சி ததும்பக் கூறினார் மன்னர் சேரமான் பெருமாள் யாதொன்றும் கூறாமல் அவர்கள் மூவரும் கூறிய விஷயங்களை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.

மன்னரின் வரவேற்பறை சிறிது நாழிகை மவுனக் கூடமாகத் திகழ்ந்தது. ஆலோசனையில் தன்னை ஆழ்த்திக்கொண்டிருந்த மன்னர், தளபதி-மார்த்தாண்டரைநோக்கி, 'இரவு பிடிப்பட்ட மூன்று கொலைக்காரர்களும் தங்கள் ஒப்புதல் வாக்கு மூலம் என்னென்ன உண்மைகளை வெளிப்படுத்தினார்கள்?'' என்று கேட்டார்.

''அவர்கள் கொலை புரிதலையே தொழிலாகக் கொண்டவர்கள்; மார்த்தாண்டவர்மாவின் ஆட்சிக் காலத்தில், அவர்கள் பிடிப்பட்டு, கழுவில் ஏற்றும்படி தீர்க்கப்பளிக்கப் பட்டிருந்தஅவர்களுக்காக, ஏனோ ராஜகுரு அவர்கள் பரிந்து பேசி ஆயுள்வரை சிறைக் கைதியாக மாற்றப்பட்டார்கள். மார்த்தாண்டவர்மா நாட்டை விட்டு வெளியேறியதற்கும் தங்களிடம் ஆட்சி பொறுப்பு ஒப்படைக்கப்படுவதற்கும் உள்ள இடைக்காலத்தில், அவர்கள் மூவரும் ராஜகுருவால் விடுவிக்கப்பட்டு அவருடைய ஆதரவின் கீழ் இருந்து வருகிறார்கள். மடாலயத்தில் சாதாரண

PDF ISLAM

துப்புறவு வேலைக்காரர்கள்போல் அமர்த்தப்பட்டுள்ள இவர்கள் ராஜகுருவின் நேரடி ஆணைப்படி எதையும் செய்யக் கூடியவர்கள். பல கொலைகளைச் செய்திருப்பதாகக் கூறுகிறார்கள். தலைமைக் காவலரையும் நம்பீஸ்வரரையும் ராஜகுருவின் ஆணைப்படியே கொலை செய்ததாக ஒப்புக்கொண்டுள்ளார்கள். வேறு பல தீயச்செயல்களுக்கும் அவர்கள் உடந்தையாக இருந்து வந்ததாக வெளிப்படுத்தியுள்ளார்கள் அந்தச்செயல்களை.... '' என்று இழுத்தார் தளபதி

''ஒன்றையும் மறைக்க வேண்டாம், சொல்லுங்கள் தளபதியாரே!'' என்றார் மன்னர்.

தளபதியார் தயங்கியவாறு, 'ராஜகுருநாதரின் கண்ணியம் பெருமையெல்லாம் பாதிக்கக் கூடிய வகையில் அவர்கள் சொல்வது அநேகமாகப் பொய்யாக இருக்க வேண்டும் என்றே நினைக்கிறேன். இழிந்த மக்கள் தாங்கள் மற்றவர்களின் அனுதாபங்களைப் பெற எந்தப்பொய்யையும் கூறத் தயங்கமாட்டார்கள்!'' என்றார்.

''அவர்கள் சொன்னது பொய்யா அல்லது உண்மையா, என்பதை நாம் பிறகு ஆராய்ந்துத் தெரிந்து கொள்ளலாம். அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதை ஒன்றையும் மறைக்காது என்னிடம் கூறுங்கள் தளபதியாரே!'' என்றார் அரசர்.

தளபதி மார்த்தாண்டர் மீண்டும் சிறிது தயங்கி, 'துறவியான ராஜகுரு மகா பெரிய ஸ்த்ரீ லோலனாம் தினமும் அவருக்கு ஒரு இளம் பெண் தேவையாம்! சமாதானமாக ஒப்புக்கொள்ளும் பெண்களுக்கு நிறைய சன்மானம் கொடுத்து அனுப்பிவிடுவாராம்! எதிர்த்து போராடும் பெண்களையும், தன் ரகசியம்வெளிப்பட்டு அவளால் ஆபத்து நேரும் என்று அவர் அறிந்துக் கொண்ட பெண்களைக்

PDF ISLAM

கொன்று புதைத்து விடும்படி கூறுவாராம்! அவ்விதம் பல பெண்களை இவர்கள் படுகொலை செய்துள்ளார்களாம்! ராஜ குரு விரும்பிய பெண்களிடம் நம்பீஸ்வரர் தொடர்பு கொண்டு அவர்களைச் சரி செய்யப் பார்ப்பாராம்! முரண்டு செய்பவர்களை பலாத்காரமாகக் கொண்டு வரச்செய்து: அவர்களை அனுபவித்துவிட்டுக் கொல்லும்படி ஆணையிடு வாராம்! பெண்களை பலாத்காரமாகக்கொண்டு வருவதும் இவர்கள் வேலைதானும்! இந்தக் கதையை என்னால் நம்ப முடியவில்லை!'' என்றார்.

மன்னர் சேரமான் பெருமாள் தன் காதுகளில் இரு கைகளையும் வைத்துக்கொண்டு, ''இறைவா! இது என்ன கொடுமை! இந்தச் செய்தி முற்றிலும் பொய்யாகிவிடக் கூடாதா?'' என்றார்.

மூத்த அமைச்சர் சேதுபத்திரர் மெதுவான குரலில், ''மன்னவா! இது பொய்யாகிவிட முடியாது! இது சம்பந்தமான பல செய்திகள் ஏற்கனவே எனக்கு எட்டி யுள்ளன! நகரில் பல அழகான பெண்கள் திடீர் திடீரென மறைந்துள்ளார்கள்! நம் அமைச்சர் குழுவிலும் இருவர் தங்கள் அழகிய மகள்களை இழந்துள்ளனர். அவர்கள் யாருடனோ ஓடிப்போய்விட்டார்கள் என்று பொதுவாக சமாதானம் செய்யப்பட்டனர். சாதாரண நபர்கள் பலரும் தங்கள் குமரிகள் மறைவு குறித்து நமக்கு விண்ணப்பங்கள் செய்துள்ளனர். எனினும் இதன் மர்மத்தை இதுவரை நம் மால் கண்டுபிடிக்க முடியவில்லை. இப்போது தளபதியார் கூறியதிலிருந்து ராஜகுருவின் சம்பந்தம் இதில் இருப்பதாக என்னால் சந்தேகிக்க முடிகிறது'' என்றார்.

இடையில் சிங்கராயர் குறுக்கிட்டு. என்னை மன்னிக்க வேண்டும் மகராஜா! தற்கொலை செய்துகொண்டதாகக் கூறப்படும் சில இளம் பெண்களின் பிணங்கள் கடலோரங் களில் ஒதுங்கிக்கிடந்துள்ளன! இவர்களில் பெற்றோர்களிடம்

நம்பீஸ்வரனும், நானும் விசாரணைகள் மேற்கொண்டதில், அவர்கள் தங்கள் மகள்கள் தற்கொலை செய்துகொள்ள நியாயமில்லை என்றே மறுத்துள்ளனர். சில மாதங்களுக்கு முன்பு ஒருநாள் அதிகாலை தென்னந்தோப்பில் மூன்று நபர்கள் ஒரு பெண்ணின் பிணத்தைப் புதைக்க முயற்சி செய்துள்ளனர். மீனவர்கள் சிலர் சந்தேகப்பட்டு அந்த இடத்துக்கு விரைந்துள்ளனர். கொலைக்காரர்கள் பிணத்தைப் போட்டுவிட்டு ஓடிவிட்டனர். தென்னை ஓலையால் மூட்டையாகக் கட்டப்பட்டிருந்த அந்தப் பிணம் நமது நகரின் முக்கியமான வர்த்தகப் பிரமுகரின் மகளுடைய தாகும்! இது நகரில் பெரிய பரபரப்பை உண்டாக்கியது! ராஜகுரு அப்பிரமுகரை அழைத்து, அந்த நிகழ்ச்சியைப் பெரிதாக்கவேண்டாமென்றும், அது அரசராகிய தங்களுக்கு அவப் பெயரை உண்டாக்கிவிடும் என்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து உரிய நடவடிக்கையை மேற்கொள்வதாக சமாதானம் செய்தனுப்பினர்'' என்றார். இதைக் கேட்டு வேதனையுற்ற மன்னர் பிரான் பெருமூச்சை வெளிப்படுத்தியவராய், ''மேற்கொண்டும் அவர்களிடமிருந்து என்ன தகவல்களைப் பெற முடிந்தது?'' என்று தளபதியை நோக்கிக் கேட்டார்.

''கடைசியாக அவர்களுக்கு இடப்பட்டுள்ள ஆணை, மன்னராகிய தங்களை எப்படியாது கொன்று தங்கள் உடலை மறைத்துவிடவேண்டும் என்பதாகவும் அவர்கள் கூறினர். நேற்று பூஜை சமயத்தில் நீங்கள் நிச்சயமாகக் கோயில் பக்கம் நடமாடுவீர்கள் என்றும் எப்படியும் கோயிலுக்குள் நுழைவீர்கள் என்றும் அப்படி நுழைந்துவிட்டால் கோயிலுக்குள் எந்த விபரீதமும் நடந்துவிடாமல், உள்ளே நுழைவதற்கு முன்போ அல்லது பூஜை முடிந்து வெளியே வந்துகொண்டிருக்கும்போதோ பின் தொடர்ந்து சென்று காரியத்தை முடித்துவிடுமாறு கட்டளை இட்டிருப்பதாக அவர்கள் கூறினர்.'' என்றார் மார்த்தாண்டர்.

PDF ISLAM

மன்னர் வியப்புற்று. ''இது மிகவும் ஆச்சரியமான தகவல்! நேற்று மாறுவேடத்தில் நகர்வலம் போகும் முடிவு கடைசி சமயத்தில் நான் எடுத்ததாகும். இதை எப்படிப் புரிந்துக்கொண்டார்கள் என்பது பிரமிக்கத்தக்க தாக இருக்கிறது.''

மேலும் நீங்கள் என்ன வேடத்தில் வெளியே புறப்பட்டுள்ளீர்கள் என்று விபரம் கூட அவர்களுக்குச் சொல்லப் பட்டிருக்கிறது. அரபுகளின் குறுக்கீடு மட்டும் இல்லா விட்டால் நேற்றிரவே இந் நாட்டின் தலைவிதி வேறுவித மாகத் திரும்பியிருக்கும் என்பது அவர்களின் வாக்குமூலத் திலிருந்து வெளிப்படுகிறது'' என்றார் தளபதி.

''எல்லாம் இறைவன் நாட்டப்படியே நடக்கும்! அதிருக்கட்டும்! ராஜகுருவின் கட்டுப்பாட்டிலுள்ள கொலை காரர்கள் இந்த மூவர் மட்டும்தானா? மேலும் சிலர் உள்ளனரா?'' என்று கேட்டார் மன்னர்.

இவர்களின் வாக்கு மூலத்திலிருந்து எல்லாம் இவர் களைக்கொண்டே நடந்து வந்திருக்கிறது என்றுதான் புரிகிறது!

''அவர்கள் இவ்வளவு ரகசியங்களையும் உடனே வெளிப் படுத்த என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்?''

''இப்போது அவர்கள் உண்மையாகவே பயந்துவிட் டார்கள்! அரபுகள் அவர்களைப் பிடித்த முறையிலிருந்து தங்களைவிட பலசாலிகளும் திறமையானவர்களும் நம்மிட முள்ளனர் என்று புரிந்துகொண்டுவிட்டனர். மேலும் கழுவிலேற்றத்திலிருந்து தப்பிக்க முடியாது என்பதையும் உணர்ந்துக்கொண்டார்கள்.

PDF ISLAM

''தங்களைப் பிடித்தவர்கள் அரபுகள்தான் என்று தெரிந்துக்கொண்டு விட்டார்களா?''

''இல்லை அரசே! அவ்விஷயத்தில் அரபுகள் மிக சாமார்த்தியமாக நடந்துள்ளனர்!'' என்றார் தளபதி.

மன்னர் சேரமான் மூவரையும் நோக்கி, ''உங்கள் மூவருக்கும் பொதுவாகச் சொல்கிறேன்: கொலைக்காரர்கள் பிடிப்பட்டு நம்வசம் உள்ள செய்தியை நானே வெளிப்படுத்தும் வரை முற்றிலும் ரகசியமாக இருக்க வேண்டும்! அவர்களைச் சந்திக்க, பேச யாருக்கும் இடமளித்துவிடக் கூடாது. அவர்களைக் காவல் காக்கும் காவலர்கள் முற்றிலும் நம்பிக்கைக்குரியவர்களாக இருக்க வேண்டும்! அவர்கள் வாயையும் மூடச் செய்துவிட வேண்டும்! மேலும் இன்று மாலை சூரிய அஸ்தமனத்துக்குச் சிறிது முன்பு ராஜகுரு என்னைச் சந்திக்க வருகிறார், அவர் மடாலயத்திலிருந்து வெளிப்படுமுன் யார் யார் அங்கிருந்து வெளிப்படுகிறார்கள்? அவர்களில் பழையவர்கள் யார்? புதியவர் யார்? அவர்கள் எங்கெங்கு செல்கிறார்கள்? என்பதையெல்லாம் கவனித்து நமக்குத் தகவலறிவிக்க சிங்கராயர் சரியான ஏற்பாடுகள் செய்யவேண்டும்! திறமைமிக்கக் காவலர்களில் சிலரை சாதாரண உடையுடன் நமது அரண்மனையைச் சுற்றி மறைவிடங்களில் நிறுத்தி. அரண்மனைக்குள் அனுமதியின்றி நுழைய முயற்சிக்கும் ஒவ்வொருவரையும், சாமார்த்தியமாகப் பிடிக்க வேண்டும்: அவர்களில் யாரேனும் வன்முறையில் ஈடுபட்டால், அதே வன்முறையைக் கையாண்டு அவர்களை காயப்படுத்தி பிடிக்க வேண்டும். இது மார்த்தாண்டர் நேரடியாகப் பொறுப்பேற்க வேண்டிய விஷயமாகும்! ராஜகுரு வருவதற்குச் சிறிது பொழுதுக்கு முன்னால் சேதுபத்திரர் இங்கே வந்து விடுகிறார்; அவர் எங்கள் உரையாடலில் கலந்துகொள்கிறார்; ராஜகுருவின் பேச்சின்போது

அவர் அடிக்கடி குறுக்கிட்டுப் பல சந்தேகங்களைக் கேட்கிறார். அதாவது ராஜகுரு மிகக் கடினமாகக் கோபித்துக்கொள்ளும்படி அவர் நடந்துகொள்கிறார்! இது சேதுபத்திரரின் வேலையாகும்! மற்ற காரியங்களை நாம் கவனித்துக் கொள்கிறோம்!'' என்று விளக்கிக் கூறினார்,

மூவரும் அதைப் புரிந்துகொண்டதாகத் தலையை அசைத்து சைக்கினைச் செய்தனர். மன்னர் அவர்களுக்கு விடை கொடுத்து அனுப்பினார்,

பகலுணவை உடனடியாக முடித்துக்கொண்ட மன்னர் தனது கட்டிலில் நீண்டு படுத்து சிறிது ஓய்வெடுத்தார். எனினும் வழக்கம்போல் அவர் உறங்கவில்லை. பல்வேறு சிந்தனைகளில் மூழ்கியவராக, கண்களை மூடுவதும் திறப்பதுமாகப் புரண்டு கொண்டிருந்தார், வீரப்பனும் வேலப்பனும் வழக்கம்போலக் காவல் இருந்தனர். அதோடு மன்னர் சிந்தனையிலிருக்கிறார் என்பதை அவர்கள் புரிந்து கொண்டு அவர் திடீரென்று ஏதாவது உத்திரவிடக் கூடும் என்று எதிர்பார்த்தவாறு இருந்தனர்.

அவர்கள் எண்ணியபடியே மன்னர் திடீரென எழுந்து அமர்ந்து மெய்ப் பாதுகாவலர்கள் இருவரையும் நோக்கி ஏதோ சில சைக்கினைகளைச் செய்தார்! அவர்களும் அதைப் புரிந்துக்கொண்டதுபோல் பதில் சைக்கினைகள் செய்தனர். அத்துடன் வேலப்பன் கதவைத் திறந்து வாசல் காப்போனிடம் ''மன்னர் பிரான்'' சூரிய அஸ்தமனத்துக்குப் பின் கறுப்பு அரபியை வந்துச்சந்திக்கச் சொன்னார்'' என்றார்.

சூரிய அஸ்தமனத்துக்குச் சிறிது நாழிகைக்கு முன்பு மன்னரின் வரவேற்பு அறையில் சேதுபத்திரர் வந்து அமர்ந்திருப்பதாக மன்னருக்கு அறிவிக்கப்பட்டது. அதன்பின்

PDF ISLAM

சிறிதுநேரத்தில் ராஜகுரு வந்திருப்பதாக கூறப்பட்டது. அரசர் தனது ஆடையாபாரணங்களை அணிந்து கொண்டு, அங்கு வந்தார், சேதுபத்திரர் எழுந்து நின்று மன்னரை வரவேற்றார். ஆனால் ராஜகுருவோ தன் ஆசனத்தில் அமர்ந்தவாறே கையை உயர்த்தி மன்னரை ஆசீர்வதித்த வாறு வரவேற்றார். மன்னரும் வழக்கம்போல கும்பிட்டுவிட்டுத் தன் ஆசனத்தில் அமர்ந்தார். வேலப்பனும் வீரப்பனும் எப்போதும் போல் மன்னரின் இரு பக்கங்களிலும் சிறிது நகர்ந்து நின்றனர். அது போன்றே ராஜகுருவின் இரு சீடர்களும் அவரின் இரு பக்கங்களிலும் நின்றனர்.

ராஜகுரு வழக்கம்போல் தனது அதிகாரக் குரலில்'' ''மன்னா! நாம் உம்மிடம், தனித்துப் பேச வந்தோம்'' என்றார்.

மன்னர் அமைதியாக, ''தாங்கள் வருகிறீர்கள் என்பது தெரிந்தவுடன் நாம்தான் சேதுபத்திரரை இங்கு வருமாறு அழைத்தோம். சமீப சில தினங்களாகத் தலை நகரில் நடைபெறும் சில விஷயங்களைப் பொறுத்து அவர் குழம்பிப் போயிருக்கிறார். அவற்றில் சில விஷயங்கள் கண்ணியத் துக்குரிய தங்களைப் பற்றியும் தவறாக அவருக்கு கிடைத்திருக்கின்றன, ஆதலால் நாம் அவரைத் தங்களிடம் நேரில் பேசித் தெளிவு பெறுமாறு சொன்னோம்'' என்றார்.

ராஜகுரு கேலியாகத் தன் சிரிப்பை வெளிப்படுத்திய வாறு, ''இதென்ன புதிய சம்பிரதாயமாக உள்ளதே! சேதுபத்திரருக்கு அவ்விதம் ஏதாவது நம்மிடம் தெரிந்துக்கொள்ள வேண்டியிருந்தால் நமது சந்நிதானத்துக்கு அவர் வருவது தானே வழக்கம்! மன்னர் பிரானை முன் வைத்துக் கொண்டு அவர் பேசுவதில்லையே?'' என்றார்.

PDF ISLAM

''அவருடைய தகவல்களைப் பற்றித் தாங்கள் கூறும் விளக்கங்களை நாமும் அறிந்துக்கொள்ள ஆர்வப்பட்டதால், நாம்தான் நமது முன்னிலையில் அவரைப் பேசும்படி பணித்தோம்!'' என்றார் மன்னர்.

''ஓகோ அப்படியா? பேசட்டும் பேசட்டும்! ஆனால் அதற்கு இப்போது அவகாசமில்லை! நாம் அஸ்தமன பூஜைக்குச் செல்ல வேண்டும்! ஆதலால் அவருடைய பேச்சை நாளை வைத்துக்கொள்ளலாம்! இப்போது நாம் தனித்துப் பேச வேண்டும்'' என்று கண்டிப்பான குரலில் கூறினார் ராஜகுரு.

''மன்னிக்க வேண்டும் குரு மகான் அவர்களே! தாங்கள் பேசப்போவது என்ன விஷயமாக இருந்தாலும் ராஜ்யத்தின் மூத்த அமைச்சர் தெரிந்துக்கொள்வதில் தவறில்லை எனநினைக்கிறோம். ஆதலால் தாங்கள் தாராளமாகப் பேசலாம்'' என்று மன்னர் சாதாரணமாகக் கூறினார்.

ராஜகுரு தன் முகத்தை கடுமையாக்கிக்கொண்டு, ''மன்னவா! உமக்கு எதிராக இங்கு நடைபெறும் மாபெரும் சதிகளைத் தெரித்துக்கொள்ளாமல் நீங்கள் இருக்கிறீர்கள் என்பது உம் பேச்சிலிருந்து வெளிப்படுகிறது! நீங்கள் யார் யார் மீது அதிக நம்பிக்கை வைத்திருக்கிறீர்களோ அவர்கள் உங்களைக் கொல்வதற்குக் கூட திட்டம் வகுத்துள்ளார்கள் என்பது நமக்கு ஆதாரப் பூர்வமாக எட்டியிருக்கிறது! அது பற்றி நாம் தனித்து பேசுவதே நலம்!'' என்றார்,

குருமகான் அவர்களே! தாங்கள் கூறுவது நமக்குக் குழப்பத்தை ஏற்படுத்துகிறது! ஏனெனில், நாம் அதிக நம்பிக்கை வைத்திருப்பவர்களில் தாங்களே முதன்மையானவராக இருக்கிறீர்கள்!'' என்று மன்னர் கூறிவிட்டு ராஜ

PDF ISLAM

குருவின் முகத்தைக் கூர்ந்து கவனித்தார், அதில் ஏற்பட்ட திடுக்கிடுதலையும் சமாளிப்பையும் மன்னரால் புரிந்துக் கொள்ள முடிந்தது''

ராஜகுரு வெகு திறமையாக 'ஹஹ்ஹஹா' என்று சிரித்துவிட்டு, ',மன்னர் பிரானுக்கு நகைச் சுவையாகவும் பேசத் தெரியும் என்பதை இப்போதுதான் நாம் அறிகிறோம்! ஆனால் இது நகைச் சுவைக்கு உரிய நேரமல்ல! நாம், சேரமான் பெருமாள் பரம்பரையைத் தேடிக் கண்டு பிடித்து, அரசபீடத்தில் அமரச் செய்தோம்! அந்தப் பரம்பரை தொடர்ந்து நீடிக்க, மற்றவர்களை யெல்லாம் விட நமக்கு அக்கரையும் கவலையும் அதிகமிருக்கிறது! அதே சமயம் மார்த்தாண்டவர்மனை நாம் நாட்டை விட்டு வெளியேறச் செய்தோம்! அவனுடன் தொடர்பு கொண்டு, சேரமான் வம்சத்தை ஒழிக்கச் செய்யப்படும் சதித் திட்டங்களை அறிந்தபின் நம்மால் வாளா இருக்க முடியாது!'' என்று கம்பீரமாகக் கூறினார்.

''மிக்க மகிழ்ச்சி ரராஜகுருநாதர் அவர்களே! தாங்கள் சொல்வது முற்றிலும் உண்மை! எனது பாட்டனார் ஆட்சியை மீட்டுத் தந்த தங்களைவிட என் நன்றிக்குரியவர் யாரிருக்க முடியும்? ஆனால் எம்மைக் கொல்ல ஏன் சதி செய்கிறார்கள் என்பதுதான் நமக்குப் புரியவில்லை! நானே ஒரு துறவி! மக்கள் எம்மை விரும்பவில்லை என்று தெரிந்தால் நாமே பதவி துறக்கக் காத்திருக்கிறோம்! மேலும் அந்தச் சதிகாரர்கள் யாரென்று தெரிந்தால் நாமே அவர்களுடன் நேரடியாகப் பேசி, நமது பதவியை விட்டு விடத் தயாராக இருக்கிறோம்'' என்று அமைதியோடு கூறினார் மன்னர்.

''அப்படியானால் இதோ இருக்கும் சேதுபத்தரரிடமும்! உங்கள் தளபதி மார்த்தாண்டனிடமும் பேசுங்கள்! நான்

PDF ISLAM

வருகிறேன்!'' என்று கூறிவிட்டு வேகமாக எழுந்தார் ராஜகுரு.

பொறுமையின் கடலெனக் கருதப்பட்டவர் மூத்த அமைச்சரான சேதுபத்திரர்! அவர் யாரோடும் கடுமையாக மட்டுமல்ல உரத்த குரலிலும் கூட பேசியதாக யாரும் பார்த்ததில்லை. அவருடைய முதிர்ச்சிமிக்க முகத்தில் கோபக்குறியை கண்டதாகச் சொன்னவரும் யாருமில்லை. மிகவும் அமைதியுடையவர் என அனைவராலும் அறியப்பட்ட சேதுபத்திரர் முகத்தில் அப்போது தான் முதன் முதலாகக் கோபம் கொப்பளிக்கத் தொடங்கியதை மன்னரும் மற்றவர்களும் காண நேர்ந்தது.

மன்னர் சேரமான் பெருமாளைக் கொலை செய்யும் சதித்திட்டத்தில் தான் சம்பந்தப்பட்டிருப்பதாக ராஜகுரு மறைமுகமாகக் கூறியவுடன் அவர் சிம்மம் போல் சீறி எழுந்தார். அவர்கண்கள் நெருப்புப்பிழம்பு போல் மாறின. அதுவரை ராஜகுருவுக்கு மரியாதை செலுத்தக்கூடியவராகவும், மரியாதையாக அழைக்கக் கூடியவராகவும் இருந்த அவர்' திடீரென, ''என்ன சொன்னீர்? மன்னர் பிரானைக் கொல்ல நாம் சதி செய்கிறோமா? நீர் செய்து வரக் கூடிய சதிச்செயலைத் திசைத்திருப்ப எங்களையா தேர்ந்தெடுத்தீர்? இதுவரை நீர் செய்த கொலைகள் போதாதா? நீர் கொல்லச் செய்த குமரிகளின் எண்ணிக்கை தான் போதாதா? நீர் கடைசியாக மன்னர் பிரானைக் கொல்ல அனுப்பிவைத்த...'' என்று தொடர முற்பட்ட போது, சேரமான் பெருமாள் குறுக்கிட்டு, சேதுபத்திரரே! நிறுத்துங்கள்,மேலும் ஒரு வார்த்தைக்கூட நீங்கள் பேசக் கூடாது, இது என் ஆணை!'' என்று கண்டிப்பான குரலில் கூற, தம் பற்களைக் கடித்துக் கொண்டவராக, படபடத்த நிலையில் சேதுபத்திரர், தன் ஆசனத்தில் அமர்ந்தார்.

சேதுபத்திரரின் இந்த திடீர் மாற்றத்தையும் சீற்றத்தையும் ராஜகுரு எதிர்பார்க்கவில்லை. அவர் ஒரு கணம்

PDF ISLAM

திடுக்கிட்டார். அடுத்து தன்னை சமாளித்துக் கொண்டு, போலியான ஒரு சிரிப்பை வெளிப்படுத்தியவாறு, ''என்ன! கடல் கொதிக்க ஆரம்பித்துவிட்டதே! குடத்துத் தண்ணீர் கொதித்தால் வேறொரு குடத் தண்ணீரைக் கொண்டு அதை வளாவி விடலாம்! கடலே கொதித்தால் என்ன செய்வது? பாவம்! அவர் என்ன செய்வார்? உண்மை வெளிப்பட்டு விட்டதால் அவரால் தாங்க முடியவில்லை! மேலும் வயது முதிர்ந்து விட்டதால் அவர் வாய்க்கு வந்த வாறு நம்மைப்பற்றி உளர ஆரம்பித்துவிட்டார்! ஆயினும் நாம் அவரை மன்னிக்கிறோம், மன்னவா மூளைக்கோளாறு ஏற்பட்டவிட்ட இவர் இனி நமது மூத்த அமைச்சராக இருக்க தகுதியற்றவராகி விட்டார். உடனே இவரைக் கைது செய்து பாதாள சிறைக்கு அனுப்பும்! '' என்றார்.

''ச்சீ! ச்சீ! நிறுத்து உன் நய வஞ்சகப் பேச்சை! படு கொலைக்காரனான உன்னுடைய மன்னிப்பு எனக்கு எதுவும் தேவையில்லை! நான் சிறைக்குப் போகக் கூடியவன் என்றால் நீ கண்டந்துண்டமாக வெட்டிக் கொல்லப்படக் கூடியவன்! கருணை வாய்ந்த மன்னர் இங்கில்லாவிட்டால் நானே என் வாளால் முதன் முறையாக அந்தக் காரியத்தைச் செய்திருப்பேன்! இனி உன்னுடைய வஞ்சகத் தந்திரங்கள் எதுவும் பலிக்காது! மரியாதையாக உன் சதிக் குற்றங்கள் அனைத்தையும் ஒப்புக் கொண்டு, மன்னர் பிரானின் கால்களில் விழுந்து மன்னிப்புக் கேள்! காருண்ய மூர்த்தியான மன்னர் பிரான் உன்னை மன்னிக்கக் கூடும்! என்றார்.

ராஜகுரு முகத்தில் கோபத்தை வரவழைத்துக் கொண்டு, உரத்த குரலில், ''மன்னா! இது என்ன நாடகம்? ஒரு பைத்தியக்காரனை மகா ராஜகுருவாகிய எம்மீது ஏவி விட்டு, எம்மை இழிவு படுத்த நீரும் உடந்தையா? உம்முடைய சந்நிதானத்தில், உம்மெதிரிலேயே நாம் அவமானம் செய்யப்பட்ட பிறகு, இனி உமது சந்நிதானத்தில்

PDF ISLAM

நமக்கு வேலையில்லை! நாம் போகிறோம்! இந்த அவமரியாதைக்கு நீர் சரியான பரிகாரம் செய்த பிறகு தான் நாம் மீண்டும் இங்கு எழுந்தருளுவோம்! இந்தப்பைத்தியக்காரனின் பேச்சிலிருந்து உமது ஆட்சிக்குக் கேடு பிறந்து விட்டது என்று நமக்குத் தெளிவாக தெரிகிறது. இதிலிருந்து நீர்தான் உம்மைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்! இல்லாவிட்டால் ஆண்டவனுலும் உம்மைக்காப்பாற்ற முடியாது!'' என்று கூறிவிட்டு, ராஜகுரு அங்கிருந்து வெளியேறுவதற்கு முற்பட்டார்.

மன்னர் குறுக்கிட்டு, ''குருமகான் அவர்களே! தயவு செய்து பொறுமையை கடைப் பிடித்துச் சிறிது அமருங்கள்! தங்கள் ஆசீர்வாதத்தால் தொடங்கப்பட்ட இந்த ஆட்சியைத் தங்கள் திருவாயினுலேயே சபிக்கலாமா? என் உயிருக்கு எதிராக நடைபெறும் சதிகளிலிருந்து நிச்சயமாக நான் என்னைக் காப்பாற்றிக்கொள்ள விரும்பவில்லை. இந்த நாட்டைத்தான் காப்பாற்ற விரும்புகிறேன். சேரமான் பெருமாள் வம்சத்துக்குத் தொடர்ந்து நடைபெற்று வரும் துர்பாக்கியமான நிலை எனக்குப் ஏற்பட்டு, நாடு குழப்ப நிலையிலேயே சென்று கொண்டிருப்பதைத் தடுக்கவே விரும்புகிறேன் ஆதலால் நாம் மேலும் சிறிது விரிவாக பேச வேண்டியுள்ளது. தயவு செய்து அமருங்கள்! இது என் பணிவான வேண்டுக்கோள்!'' என்று மிகச்சாதாரணமாக, வழக்கம்போல் பேசுவதைப் போன்று கூறினுர்.

''நாமும் உம்மிடம் விரிவாகப் பேசத்தான் வந்தோம்! ஆனுல் இந்தப் பைத்தியக்காரக்கிழவன் குறுக்கிட்டு நிலைமையை விபரீதமாக்கிவிட்டான்! முதலில் அவனை இங்கிருந்து போகச் சொல்லும்! ஆனுல் தப்பிக்க விட்டு விடாதீர். உண்மை நிரூபிக்கப்படும்வரை பாதுகாப்பில் வைக்க உத்திரவிடும்!'' என்று கூறிக்கொண்டே ராஜகுரு தமது ஆசனத்தில் அமர்ந்தார்.

PDF ISLAM

''குருமகானவர்கள் அன்பு கூர்ந்துபொறுத்தருள வேண்டும். அதோடு உண்மையான குற்றவாளிகள் நம்மிட மிருந்து தப்பிக்க முடியாது என்ற நம்பிக்கையையும் குரு மகானவர்கள் வைக்க வேண்டும் நாம் பேச வேண்டிய சில முக்கிய பேச்சுக்கள், சேதுபத்திரரை வைத்துக் கொண்டு தான் பேசவேண்டியுள்ளது. ஆதலால் அவரை இங்கிருந்து போகச் சொல்ல முடியாதநிலையில் இருப்பதற்கு வருந்து கிறேன்'' என்றார் மன்னர்.

''அப்படியானால் நாம் இப்போது உம்மிடம் பேசத் தயாராக இல்லை ! வேறொரு சமயம் பேசிக்கொள்வோம்!'' என்று மீண்டும் எழுந்தார் ராஜகுரு.

''ராஜகுருநாதர் அவர்கள் கோபத்தைத் தணித்துக் கொள்ள வேண்டும் ! தங்களை இங்கே அமரச் சொல்வது மன்னரின் ஆணையாகும்! '' என்றார் சேரமான் பெருமாள்'

''ஓகோ ! அப்படியா! ராஜகுரு மகா சந்நிதானத்தின் மீது ஆணைகளைப் பிறப்பிக்கும் அளவுக்கு மன்னர் உயர்ந்து விட்டாரா! இதுவும் ஒரு புதிய திருப்பம் ஆகும்! மன்னரின் ஆணையை நாம் ஏற்க மறுத்தால்...?'' என்று கெம்பீரமாகக் கேட்டார் ராஜகுரு.

சகலமும் அறிந்த ஞானவானாகிய தங்களுக்குத் தெரி யாதது ஒன்றுமில்லை. எந்தவொரு மன்னனும் தன் ஆணையை மீறும் ஒருவரையோ, ஒரு கூட்டத்தையோ தன் ஆட்சியில் அனுமதித்தால் அந்த மன்னனால் உண்மையான ஆட்சி செலுத்த முடியுமா! மேலும் அந்த மன்னன் ஆணையிட்ட பிறகு, அதை அவர் கண்ணெதிரேயே ஒருவர் மீறி நடக்க முற்படுவதை அவரால் சகித்துக் கொள்ள முடியுமா?'' என்றார் மன்னர்.

ராஜகுரு ஏளனமாக ஒரு சிரிப்பை வெளிப்படுத்திய வாறு' ''மன்னா! நீர் வயதிலும், அறிவிலும், அரசியலிலும்

PDF ISLAM

நம்மை விடச் சிறியவர்! இந்தச் சேர ராஜ்யத்தில் மன்னரின் ஆட்சிவேறு, மடாலயத்தின் ஆட்சிவேறு, மத தர்ம ஆட்சியில் குறுக்கிட மன்னருக்கு எந்த அதிகாரமும் கிடையாது, மக்கள் அதை ஒரு போதும் அனுமதிக்க மாட்டார்கள்! அதை இந்தக் கிழவர் சேதுபத்திரர் உம்மிடம் விளக்கிச் சொல்லவில்லை போல் தெரிகிறது! நீர் நம்முடைய விவகாரங்களில் குறுக்கிட்டால் உமக்கு முன்னால் இருந்தவர்களின் கதியே உமக்கும் நேரிடும் என்பதை எச்சரிக்க விரும்புகிறோம்! ஆதலால் நாம் இப்போது போகிறோம்'' என்றார்.

சேரமான் பெருமாள் மிகவும் அமைதியாக, ''தாங்கள் கால் நடையாகவா தெருவில் நடந்து செல்லப் போகிறீர்கள்? பல்லக்கிலல்லவா செல்வீர்கள்! இப்போது பல்லக்குத்தூக்கிகள் யாரும் வெளியில் இல்லை! பல்லக்கும் இல்லையே!'' என்றார்.

''மன்னா! நீர் சொல்வது எமக்குப் புரியவில்லை; எம் பல்லக்கும் அதைத்தூக்கி வருவோரும் போய் விட்டார்கள் என்றால் என்ன பொருள்?'' என்று கடுமையாகக் கேட்டார் ராஜகுரு.

''சகலமும் அறிந்த தங்களுக்கு புரியாத பொருளா? தாங்கள் இருட்டும் வரை இங்கு நமது விருந்தினராக இருக்கப் போகிறீர்கள்! இருட்டிய பின் வேறொரு இடத்துக்குப் போய் அங்கு சிறிது காலம் பாதுகாப்பாக இருக்கப் போகிறீர்கள்! அரசியல் சம்பந்தமான சில காரியங்களை ஒழுங்குப்படுத்த சிறிது அவகாசம் வேண்டியுள்ளது. அவையெல்லாம் முடிந்தவுடன், தங்கள் சம்பந்தமாக ஒரு முடிவு செய்யலாம் எனத் தீர்மானித்துள்ளோம்! அன்பு கூர்ந்து தாங்கள் இந்த நிலைமைக்குப் பொறுத்துக் கொள்ள வேண்டும்! என்றார் சேரமான் பெருமாள்.

PDF ISLAM

''மன்னு! உமக்கு அழிவு காலம் பிறந்து விட்டது! நீர் நெருப்புடன் விளையாடத் தொடங்கி விட்டீர்! ராஜகுருவை நீர் கைது செய்துள்ளீர் என்ற செய்தி வெளிப்பட்டால் இந்த நாடே கொந்தளித்து எழும்! நீரும் உமது சகாக்களும் நிர்மூலமாவீர்கள்' உமது ஆட்சி அடியோடு பெயர்த்துத் தள்ளப்படும்! சிறுபிள்ளைத்தனமான காரியங்களில் ஈடுபட்டு நாசமாகாதீர் என எச்சரிக்கிறேன்! மரியாதையாக எம்மை போக விடும்!'' என்று கோபத்தோடு இரைந்தார் ராஜகுரு.

''ராஜகுரு நாதர் அவர்களே தங்களுடைய மேலான எச்சரிக்கையை முன் கூட்டியே உணர்ந்து, நீங்கள் தனித்திருக்க செய்யப்பட்டுள்ள விஷயம் உரிய காலம் வரை வெளியே தெரியாமல் இருக்க போதிய ஏற்பாடுகளை செய்துள்ளோம். தாங்கள் அதுபற்றிக் கவலைப்பட வேண்டாம்! உங்களுக்குப்பின் மடாதிபதியாக வரக்கூடிய உங்கள் சிஷ்யர் பரமேஸ்வரர் அந்தப் பொறுப்பை ஏற்று இப்போது நடத்தி வருவது போல தொடர்ந்து நடத்தி வருவார். நீங்களும் உங்கள் இருபது காப்பு சீடர்களும் இந்த ராஜ்யத்தின் நலனுக்காக, யாருக்கும் தெரியாத இடத்தில் சில நாட்கள் தனித்துத் தங்கியிருந்து விசேஷ பூஜைகள் நடத்தப் போகிறீர்கள்!'' என்று மிகவும் சாவதானமாக் கூறினர் அரசர்.

''விநாச காலம் விபரீத புத்தி ! சேரமானே! வேண்டாம் இந்த விளையாட்டு ! எப்படியும் செய்தி வெளிப்பட்டு விடும்! மக்கள் அக்ரமங்களைச் சகித்து கொள்ள மாட்டார்கள் !'' என்று சிறிது அச்சம் கலந்த குரலில் கூறினர். ராஜகுரு.

''ராஜகுரு மகானே ! எல்லா செய்தியும் வெளிப்பட வேண்டும் என்றுதான் நாம் விரும்புகிறோம். ராஜ கிரீடம்

PDF ISLAM

திருடப்பட்டதிலிருந்து நம்பீஸ்வரர் உட்பட, இந்த நகரின் பல நங்கைகள் கற்பழித்துக் கொல்லப்பட்டது உண்மைகள், புதைக்கப்பட்ட, ஆழ்கடலில் வீசப்பட்ட அவர்களின் ஜடலங்களின் எலும்புக்கூடுகள், கோயில் அர்ச்சகர்கள் பலரை நீங்கள் மடாலயத்தில் திரட்டி, மன்னருக்கு எதிராகப் பிரச்சாரங்களை மேற்கொள்ள இட்ட ஆணைகள், நேற்றிரவு கோயிலில் மார்த்தாண்டவர்மனை வரவழைத்து அவரை மீண்டும் மன்னராக்கக் கொண்டுவர அளித்த உறுதிமொழி, உடனடியாக ஆட்சிப் பொறுப்பை ஏற்க, நீங்கள் தேர்ந்தெடுத்துள்ள அமைச்சர்கள், நம்மைக் கொல்ல நீங்கள் ஏவிவிட்ட காளி, மாரி சகாக்கள் ஆகிய அனைத்துச் செய்திகளும் எப்படியும் வெளிப்படத்தானே செய்யும்! மக்கள் இந்த அக்ரமங்களைச் சகித்துக்கொள்ள மாட்டார்கள் என்ற உண்மையை நீங்களே குறிப்பிட்டு விட்ட பிறகு, அதற்கான தீர்ப்பை வழங்கும் பொறுப்பை அவர்களிடமே விட்டு விடலாமல்லவா?'' என்று கேட்டார் அரசர்.

ராஜகுரு மிகவும் பதட்டமடைந்து, ''பொய்! பொய்! இதெல்லாம் சுத்தப் பொய்! இவற்றுக்கெல்லாம் எந்த ஆதாரமும் கிடையாது! அக்ரமமாக என்னைப் பழிவாங்கப் பார்க்கிறீர்கள்!'' என்று கத்தினார்!

மன்னர் சேரமான் பெருமாள் அதற்கு எந்தவித பதிலும் சொல்லாமல், ராஜகுருவின் பக்கத்தில் நின்ற அவருடைய உதவியாளர்களான இரு சீடர்களையும் தமது கூறிய கண்களால் நோக்கினார். அந்தப் பார்வையே ஒரு சக்திமிக்கதாக வெளிப்பட்டது. அதிலிருந்து ஒருவித சுவாலை வெளிப்படுவதுபோல் இருந்தது. அதைக் கண்ட அந்த இரு சீடர்களும் நடுங்கத் தொடங்கினார்கள். அதே சமயம், இடி முழக்கம் போல் ''உங்களுடைய தலைவிதி என்ன?'' என்று கர்ஜித்தார்.

PDF ISLAM

இருவரும் ராஜகுருவை விட்டு ஓடிவந்து, மன்னர் பிரானின் கால்களில் விழுந்து ஆளுக்கொரு காலைக் கட்டிப் பிடித்தவர்களாக, ''மகாராஜா! எங்களை மன்னித்து விடுங்கள்! நாங்கள் ஒரு பாவமும் செய்யவில்லை! நீங்கள் சொன்ன விஷயங்களில் பல அக்ரமங்களுக்கு நாங்கள் சாட்சிகளாக இருந்திருக்கிறோம்! ராஜகுரு மிகவும் ஒழுக்கங் கெட்டவர், நேர்மை தவறியவர் என்பதை நாங்கள் அறிந்து வந்திருக்கிறோம்! அவரிடமிருந்து தப்பித்து ஓடி விட வேண்டும் என்று நாங்கள் பல தடவை பேசியிருக்கிறோம், ஆனால், அடுத்த சில நாழிகைக்குள் நாங்கள் கொல்லப்பட்டு விடுவோம் என்பதை உணர்ந்து பயந்தவர்களாக உள்ளோம் மகாராஜா! தயவு செய்து எங்களை மன்னித்து விடுதலை கொடுங்கள்! நீங்கள் எந்த உண்மையைக் கேட்டாலும் நாங்கள் பகிரங்கமாகச் சொல்லத் தயாராக இருக்கிறோம்'' என்று அழுது புலம்பியவாறு கூறினர்.

மன்னர் சேரமான் பெருமாள் தன்னுடைய அதே பார்வையைத் திருப்பி ராஜகுருவை நோக்கினர். ராஜகுருவால் அந்தப் பார்வையைச் சகிக்க முடியவில்லை. மன்னரின் கண்களிலிருந்து அப்படியொரு பிரகாசமான பார்வையை சேதுபத்திரர் கூடப் பார்த்ததில்லை. வெகுண்டெழுந்த ஒரு சிங்கத்தின் தோற்றத்தையும் அதன் கொழுந்து விட்டெரியும் கண்களையும் அவரால் பார்க்க முடிந்தது. மீண்டும் 'உம்முடைய தலைவிதி என்ன?'' என்று கர்ஜனை வெளிப்பட்டது.

ராஜகுருவால் ஒன்றும் பேச முடியவில்லை அவர் மிரண்டவாறு மன்னரைப் பார்த்துவிட்டு தனது கர்வம் நிறைந்த தலையைக் கீழே தொங்கப் போட்டுக் கொண்டார்.

அதைக்கண்ட சில விநாடிகளில் மன்னருடைய அந்த கம்பீரமான தோற்றமும் ஒளி வீசும் கண்களும் மறைந்து

PDF ISLAM

விட்டன எப்போதும் போல் சாதாரணமான நிலைக்கு மாறிவிட்டார். அவர்பேச்சும் சாதாரணமாகமாறிவிட்டது, இதைக்கண்ட சேதுபத்திரருக்கு, அந்த நிலை ஒரு தெய்வீக சக்தி நிறைந்தது போல் மனதில் பட்டது.

''குருமகான் அவர்களே! நாம் சொல்வதை நன்றாக கவனியுங்கள், நாம் காமுகனோ, நயவஞ்சகமுடைய சதிகாரனோ, கோழையோ, கொலைகாரனோ அல்ல அவ்விதமிருந்தால்] உங்களோடு இவ்விதம் விவாதித்திருக்க மாட்டோம். உங்களுடைய வழியிலேயே, உங்களுடைய நம்பிக்கையாளர்களாகிய வேணுவையோ அல்லது காளி மாரியையோ அல்லது வேறு நபர்களையோ ஏவி உங்களைக் கொல்லச் செய்திருப்போம்! உங்களுடைய சாவுக்கு, நீங்கள் உயிரோடு மோட்சலோகத்துக்குப் போய் விட்டதாக ஒரு கதையைப் பரவச் செய்து மக்களை ஏமாற்ற முற்பட்டிருப்போம்! தனி அரசாங்கம் நடத்தும் மடாலய நடை முறைகளை நம் விருப்பத்துக்கு மாற்றி அமைத்திருப்போம்! நாம் அவ்விதமெல்லாம் ஈடுபாடு கொள்வதற்கு முக்கியக் காரணம், நமக்கு இந்த ஆட்சி அதிகாரங்களின் மீது ஆசையில்லாததே ஆகும். நிலையற்ற ஆட்சிகளினால் சீரழிந்து நிற்கும் சேர நாட்டு மக்களுக்கு ஒரு நிலையான ஆட்சியை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்பதே நமது குறிக்கோளாகும். நாம் பதவி ஏற்ற விநாடியிலிருந்து அதற்குரிய காரியங்களைத்தான் நாம் படிப்படியாகச் செய்து கொண்டு வருகிறோம். அந்த வழியில் இப்போதும் உங்களுடைய ஒத்துழைப்பை நாடுகிறோம்!'' என்று கூறிமுடித்த மன்னர் ராஜகுருவை உற்று நோக்கினார்.

ராஜகுரு கொஞ்சம் தைரியம் வந்தவர் போல் மரியாதைச் சொற்களை யெல்லாம் விட்டு விட்டு ''என்ன செய்ய வேண்டும்?'' என்று தலையை நிமிர்த்தி கேட்டார்.

PDF ISLAM

''நாம் என்ன சொல்லுகிறேமோ அதையெல்லாம் செய்ய வேண்டும்'' என்று பளிச்சென்று பதில் கூறினர் அரசர்.

''என்ன சொல்கிறீர்?'' என்று ராஜகுரு அதே தொனியில் கேட்க, ''நாம் சொல்வதுபோல அறிவிப்புச் செய்து நீர் பதவி விலகப் போகிறீர்! அதுவரை நீர் நமது ரகசியப் பாதுகாப்பில் இருக்கப்போகிறீர்!'' என்று அதே பாணியில் பதிலளித்து விட்டு, மன்னர் தனது இரு கைகளையும் தட்டினர். வேலப்பனும் வீரப்பனும் உடனே முன் வந்து ராஜகுரு ராமநம்பியின் முன் நின்று அவரின் இரு தோள் புஜங்களையும் பற்றிப் பிடித்தனர்.

தனக்கு இந்த நிலை நேருமென்று கொஞ்சமும் எதிர் பாராத ராஜகுரு திடுக்கிட்டார். மீண்டும் அவர் அச்சத் துக்கு ஆளானர். அவரையும் மீறி அவருடைய கை, கால்கள் நடுங்கத் தொடங்கின. நா தழுதழுத்த நிலையில் ''மன்னவா! தங்கள் விருப்பப்படி நாம் எல்லா அறிவிப்பு களையும் செய்கிறேம். நாம் பதவி விலகிவிடுகிறேம். இந்த ராஜ்யத்தை விட்டே வெளியேறச் சொன்னாலும் நாம் வெளியேறி விடுகிறேம்; ஆனல் நம்மைப் பாதா ளச் சிறைக்கு அனுப்ப வேண்டாம்: சூத்திரர்களைக் கொண்டு நம்மைப் பிடிக்கச் செய்ய வேண்டாம்; அன்பு கூர்ந்து கருணை காட்டுங்கள்!'' என்று கொஞ்சும் பாவனை யில் கூறினர்,

மன்னர் சேரமான் பெருமாள் தனது மெய்ப் பாது காவலர்களை நோக்கி சிறிது தலையை அசைக்க அவர்கள் ராஜகுருவை விட்டு இரண்டடி நகர்ந்து நின்றனர். அடுத்து, ராஜகுருவை நோக்கி, ''ராம நம்பி! இனி நீர் எமது ராஜகுரு அல்ல! எமது எண்ணத்தில் நீர் ஒரு கொடிய குற்றவாளி. நாம் சொல்வதுபடி முற்றி லும் கட்டுப்பட்டு நடந்தால், நீர் கேட்ட கருணையை

PDF ISLAM

உமக்கு எப்படி வழங்குவது என்று நாம் முடிவு செய்ய அவகாசம் ஏற்படும்! அதற்கு மாருக நீர் ஏதாவது துணிவுப் பெற்று வேறுவிதமான. ஒரு சிறு முயற்சியைக் கூடச் செய்தீரானுல் உம்முடைய ரகசியச் செயல்களெல்லாம் மக்கள் முன் வைத்து விசாரிக்கப்பட்டு அவர்களின் முடிவுப்படி நீர் கழுவிலேற்றப் படுவதானுலும் நாம் தலையிடமாட்டோம். ஆதலால், இப்போது முதற்கட்டமாக உம்மைப் பாதாளச் சிறைக்கு அனுப்பும் நமது எண்ணத்தை மாற்றிக் கொண்டு, உமது மடாலயத்துக்கே அனுப்பி வைக்கிறேம். நீர் அங்கு சென்றவுடன், அங்குள்ள உமது சீடர்களையெல்லாம் அழைத்து, சில தினங்கள்வரை தவத்தில் அமர்ந்து மவுன விரதம் அனுஷ்டிக்கப் போவதாகவும், யாரும் சந்திக்கக் கூடாது என்றும் எதுவொன்றைச் சொல்வதானுலும், பூட்டப்பட்டிருக்கும் தவச்சாலை வாசலில் காவலிருக்கும் உமது சீடர்களிடம் சொல்லி பதில் பெற்றுக்கொள்ளும்படியும் கூறிவிட்டு உள்ளே செல்கிறீர்! மற்ற காரியங்களெல்லாம் முறையாக நடக்கும்!'' என்று கூறிவிட்டு, மெய்ப் பாதுகாவலர்களிடம் மீண்டும் சைக்கினைச் செய்தார்.

வேலப்பன் ராம நம்பியை நோக்கித் தனது தலையை அசைத்து, ''வாரும் எங்களுடன்!'' என்று கூறவே மன்னரைப் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டே, வேலப்பன் முன்னும் வீரப்பன் பின்னுமாகச் செல்ல, அவர்கள் காட்டிய வழியில் நடந்தார்.

ராஜகுருவின் இரு சீடர்களையும் மன்னர் நோக்கி ''நம்முடைய ஆணைக்கு ஒரு சிறிதும் மீருமல் நீங்கள் நடந்தீர்களானுல் உங்களுடைய குற்றங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டு பூரண விடுதலைப் பெறுவீர்கள். இல்லாவிடில் கழுமேடைத்தான் உங்களுக்கும் விதியாக அமை

PDF ISLAM

யும்! நீங்கள் இன்னும் சிறிது நேரத்தில், ராம நம்பி யுடன் வழக்கம்போல மடாலயம் திரும்புகிறீர்கள்! அவர் நமது ஆக்ஞைப்படி மவுன விரதத்தை அறிவித்துவிட்டு, அவருக்கெனச் சித்தப்பட்டுள்ள அறைக்குள் சென்று விடுகிறார். அந்த அறை பூட்டப்பட்டு, அதன் திறவு கோல் அங்குள்ள நமது காவலர்களிடம் இருக்கும், உணவு நேரத்தில் மட்டும் அவர் திறந்து விடுவார்; நீங்கள் உணவைக் கொடுத்துவிட்டு சிறிது நேரம் தங்கி, அவர் சாப்பிட்டவுடன் பாத்திரங்களை எடுத்துக்கொண்டு திரும்பிவிடுகிறீர்கள்! அவர் என்ன பேசினாலும் பதில் பேசாத ஊமையாகிவிடுகிறீர்கள் மூத்த அமைச்சரின் மறு உத்தரவு கிடைக்கும்வரை உங்கள் நிலை இதுதான்! இதில் ஒரு சிறு தவறு நடந்தாலும் அது உங்களுக்கே கேடாக முடியும்!'' என்று எச்சரித்தார்,

மன்னர் சைக்கினைச் செய்ய இரு காவலர்கள் சீடர் களைத் தனியே அழைத்துச் சென்று மறைவான ஓரிடத் தில் அமரச் செய்து பாதுகாத்தனர்.

மன்னர் சேதுபத்திரரை நோக்கி. ''தாங்கள் மடால யம் சென்று நமது திட்டப்படி ஏற்பாடு செய்துவிட்டு. பல் லக்குத் தூக்கிகளையும் வரச் சொல்லி விடுங்கள்'' என்றார்.

சேதுபத்திரர் புறப்பட்டவுடன் அங்கிருந்து பாது காப்பு அமைச்சரும் ராணுவத் தளபதியுமான, மார்த் தாண்ட பூபதியும், ஒற்றர்படைத் தலைவரான சிங்கராய ரும் வெளிப்பட்டு மன்னருக்கு மரியாதை செய்து நின்றனர்.

மன்னர் சேரமான் பெருமாள் அவர்களை நோக்கி, ''அனைத்து விஷயங்களையும் நேரில் பார்த்தும், கேட்டும் புரிந்து கொண்டீர்களல்லவா? இதற்குத் தக்கவாறு கவனத் துடன் செயல்படுங்கள். மேலும், ஒற்றர் படையின் முழு

PDF ISLAM

சந்திப்பை எப்போது வைத்துள்ளீர்கள் என்பதை சொல்ல வில்லையே !'' என்ருர்.

''நாளை மறுநாள் மன்னர் பிரானே !'' என்று தளபதி யார் பதில் கூற, ''அதுவரை. ராஜகுரு மிகவும் எச்சரிக்கை யாக வைத்திருக்கப்பட வேண்டும். அவரைத் தனியாக சந்திக்க வருகின்ற ஒவ்வொரு ஒற்றரின் நடவடிக்கைகளும் கண்காணிக்கப்பட வேண்டும்'' என்று மன்னர் கூறியதை இருவரும் அங்கீகரித்தனர். அவர்களுக்கு விடையளித்து அனுப்பிவிட்டுத் திரும்பிப் பார்த்தபோது, அவர் எதிரே முஸ்லிம் பின் அத்ஹம் புன்னகைத் தவழ மரியாதை செய்து நின்ருர்.

''விருந்தினரே ! நீங்கள் மறைவிடத்தில் நின்று ராஜ குருவுக்கும் நமக்கும் நடந்த பேச்சுக்களையும், காட்சிகளை யும் கூர்மையாக கவனித்திருப்பீர்கள் என்று நம்பிக்கை வைக்கிறேன். நமது வேண்டுகோளின்படி நீங்கள் இங்கு வந்து வெகு நேரம் மறைவாக இருந்து கவனித்ததற்கு நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிரேம். மவுன விரதம் என்ற பெயரில் ராஜகுருவைச் சிறை செய்ய ஏற் பாடு செய்துள்ள அறை, ரகசிய வழியை உடையது. அது நகருக்கு வெளிப்புறத்திலுள்ள பாழடைந்த கோயிலோடு தொடர்புடையது, அந்த வழி நமக்குத் தெரியாது என்று ராஜகுரு நினைத்திருந்தாரானுல் ஆச்சரியமில்லை. ஆதலால் அவ் வழியாக அவர் தப்பிக்கவோ அல்லது தனது முக்கிய சகாக்களுடன் தொடர்புகொள்ளவோ முயலக்கூடும். ஆத லால் நீங்களும், உங்கள் நண்பர்களும், அந்தக் கோயில் பகுதியில் உங்கள் காவலை மேற்கொள்ள வேண்டும். நமது அதிர்ஷ்டவசமாக ராஜகுரு அவ்வழியில் வெளிப்பட்டாரா னுல், யாருக்கும் தெரியாமல் அவரை அப்படியே மூட் டைக் கட்டிப் பாதுகாத்து வைத்துக்கொண்டு நமக்குத்

PDF ISLAM

தகவல் கொடுங்கள் இந்த உங்கள் உதவி மிகப் பெரிய நமது நன்றிக்கு உரித்தானதாக இருக்கும்'' என்றார் மன்னர்.

''எங்கள் பரிபூரண அன்புக்குப் பாத்திரமான மன்னர் பிரான் அவர்களே! தங்கள் ஆணையை பெருமையுடன் ஏற்றுக்கொள்கிறோம். தாங்கள் சொன்ன அந்தப் பாழடைந்த கோயிலை நாங்கள் ஏற்கனவே கவனித்துள்ளோம். ஆதலால் எங்களுக்கிட்ட கடமையில் தவறில்லாது நடந்துகொள்கிறோம்'' என்று கூறி மரியாதை செய்துவிட்டு வெளியேறினர்.

இவர்களெல்லாம் சென்ற சிறிது நேரத்துக்குப் பிறகு மூத்த அமைச்சர் சேதுபத்திரர் மன்னர் முன் ஆஜரானார். மன்னவர் குறிப்பிட்ட மடாலயத்திலுள்ள அந்த அறை பூஜைக்குரிய சகல வசதிகளுடன் ஏற்பாடு செய்யப்பட்டு விட்டதாகவும், பல்லக்கையும் கொண்டுவரச் சொல்லி இருப்பதாகவும் கூறினர்.

மன்னர் சேதுபத்திரரிடம், ''நீங்களே ராஜகுருவையும், அவர் சிஷ்யர்களேவும் அழைத்துச் செல்லுங்கள். அவருடைய மவுன விரதத்தையும் அறிவிப்பையும் உங்கள் எதிரிலேயே பிரகடனப்படுத்தச் செய்யுங்கள். அறையின் பூட்டை உங்கள் கைகளினலேயே பூட்டுங்கள்! பூட்டிய பின் எல்லோர் முன்னும், மவுன விரதத்தின் மகிமையையும் வலிமையையும் மிகவும் புகழ்ந்தும் பாராட்டியும் ஒரு சொற்பொழிவை நடத்திவிட்டுத் திரும்புங்கள்'' என்று கூறிவிட்டு, ''சொற்பொழிவு மிகவும் முக்கியம்!'' என்று நினைவூட்டினர்,

மன்னர் சேரமான் பெருமாளின் ஆணைப்படி, ராஜகுரு தனித்து வைக்கப்பட்டிருந்த இடத்துக்கு சேதுபத்திரர் சென்று, மரியாதையாக, ''ராஜகுரு அவர்களே! பல்லக்கு தயாராக இருக்கிறது தாங்கள் புறப்படலாம்!'' என்றார்.

PDF ISLAM

ராஜகுரு கோபத்தோடு மூத்த அமைச்சரை முறைத்துப் பார்த்து ''என்னைப் பலபேர் முன் அவமானம்படுத்தும் விதத்தில் பாதுகாவலுடன் கொண்டு செல்லப் போகிறீரா?'' என்று கேட்டார்.

''உங்களுடைய கண்ணியத்துக்குப் பங்கம் ஏற்படுமாறு எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ள மன்னர் பிரான் எனக்கு உத்திரவிடவில்லை. நீங்கள் வழக்கம்போலவே சுதந்திரமாக மடாலயத்துக்குப் போகலாம். யாரும் சந்தேகப்படாவண்ணம் காவலர்கள் பின் தொடர்ந்து வருவார்கள். நாம் முன்னதாக மடாலயம் சென்று உங்கள் வருகைக்காகக் காத்திருப்போம்! மன்னரின் ஆணைப்படி நீங்கள் நடந்து கொள்ளும்வரை உங்கள் மரியாதைக்கு எந்தவிதமான குறைவும் நேராது!'' என்றார் சேதுபத்திரர்.

ராஜகுரு சிறிது யோசித்துவிட்டு, ''சரி! சரி! நீர் போகும். நாம் வருகிறோம்!'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டார். முன்னதான ஏற்பாட்டின்படி, இரு சீடர்களும் வழக்கம்போலப் பின் தொடர்ந்தனர். விசேஷ காவலர்கள் பல்லக்கை கவனித்தவாறு சிறிது தூரத்தில் முன்னும் பின்னுமாக வழி நடந்தனர்.

தன்னுடைய பேச்சு காவலர்களுக்கு எட்டாது என்று தெரிந்து கொண்ட ராஜகுரு, பல்லக்குத் தூக்குவோரை மெதுவாக நடந்து செல்லுமாறு பணித்துவிட்டு, தன் இரு சீடர்களையும் ஒரே பக்கமாக நெருங்கி வரச் சொன்னார். அதன்படி வரவே, ''நாய்களே! நீங்கள் நன்றி மறந்து நடந்து கொண்டதை மன்னித்து விடுகிறேன்! மேலும் இந்தச் சோதனையான சமயத்தில் என் பேச்சைக்கேட்டு நடந்தீர்களானால் ஆளுக்கு ஆயிரம் தங்க நாணயங்கள் தருகிறேன். நீங்கள் தப்பிப் பிழைத்து ஓடி எங்கேயாவது சவுக்கியமாக வாழலாம்! என்ன சொல்கிறீர்கள்?'' என்று கேட்டார்,

PDF ISLAM

சீடர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். அவர்களில் ஒருவன் ''நீர் முதல்தரமான ஆஷாட பூதி! வேடதாரி! உம்முடைய நெறிகெட்ட செயல்களுக்கெல்லாம் நாங்கள் உடந்தையாக இருக்கும்போதும்! உம்முடைய தங்கக் காசுகளைவிட மன்னருடைய மன்னிப்பே எங்களுக்குப் போதும்!'' என்று ஆத்திரத்துடன் கூறினன்.

மற்ருெருவன் அவனைத் தோளைப் பிடித்து இழுத்து ''விஸ்வாசம் கெட்டவனே குருநாதரிடம் இவ்வளவு காலம் நாம் அடைந்துவந்த இலாபங்களை மறந்துவிட்டாயா? மன்னருடைய மன்னிப்பு நமக்கு ஆயிரம் தங்கக் காசுகளைக் கொடுக்குமா? இவ்வளவு காலம் குருநாதர் வழியிலிருந்து விட்டோம். கடைசி சந்தர்ப்பமாக நம் அவர் பேச்சைக் கேட்டுவிட்டு, தங்க மூட்டையுடன் தப்பித்துக்கொள்வோம்!'' என்றான்.

முதலாமவன் ''எனக்கு பயமாக இருக்கிறது;'' என்றான்,

அவர்களின் பேச்சுக்களை கவனித்து வந்த ராஜகுரு, முதலாமவன் தன்னை இழிவுபடுத்தியதைக்கூடப் பொருட்படுத்தாமல், ''முட்டாள்! என்னடா பயம்? நானிருக்க உனக்கென்னடா வந்துவிடும்? நான் அந்தச் சின்னப் பயனிடம் பயந்தது போல் பேசியதைக் கண்டு, நான் உயிர் பிச்சைக்கு மன்றாடினேன் என்று நினைத்துவிட்டாயா எல்லாம் ஒரு நாடகம்தான்! அவனுக்கு தைரியமிருந்தால் அவன் பேசிய பேச்சுக்கு என்னையும் உங்களையும் பாதாள சிறைக்கு அனுப்பிவிட மாட்டானா; மறுபடியும் மடாலயத்துக்கு அனுப்புவதிலிருந்து அவன் நம்மைக் கண்டு அச்சப்படுகிறான் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வில்லையா? நீங்கள் மாத்திரம் நான் சொல்கிற மாதிரி புத்திசாலித்தனமாக நடந்துகொள்ளுங்கள்! நான் அவன் தலைவிதியையே மாற்றி விடுகிறேன்'' என்று கம்பீரத்தோடு கூறினர்.

PDF ISLAM

ராஜகுரு பேசிக் கொண்டிருக்கும்போதே இரண்டாவது சீடன் முதல் சீடனின் விலாவில் தன் விரல்களால் குத்தி மேலும் பேசாதே என்று கூறுவதுபோல் சைக்கினை செய்ததால் அவன் பேசவில்லை. இரண்டாவது சீடன், ''குருமகானவர்களே இவன் கிடக்கிறான் கோழை! ஆயிரம் பொற்காசுகளுக்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சொல்லுங்கள்! இவனையும் வைத்துக்கொண்டே நான் செய்து முடிக்கிறேன்'' என்றான்.

ராஜகுரு உடனடியாக, ''நீங்கள் பெரிய காரியம் ஒன்றும் செய்யவேண்டியதில்லை. நான் கொடுக்கும் ஓலையை விஷ்ணுபட்டரிடம் கொடுத்துவிட்டால் போதுமானது. மேலும் நம்மை அழைத்துப் போகும் கிழவன் சேதுபத்திரன் எப்படி நமமைப் பாதுகாப்பில் வைக்கிறான் என்பது தெரியவில்லை. அந்தச் சின்னப் பயல் உளறியதிலிருந்து பூஜை அறையிலேயே என்னையும் உங்களையும் வைத்துப் பூட்டி காவல் போடுவான் என்று தெரிகிறது. அதுவே அவனுடைய முட்டாள் தனத்தை வெளிப்படுத்திவிட்டது. அந்த வேடிக்கையை நீங்களே பார்க்கப் போகிறீர்கள்! ஒரு சமயம் என்னை மட்டும் உள்ளே வைத்து, உங்களை வெளியில் நிறுத்திவிட்டார்களானால், எப்படியாவது ஒருவர் நழுவி விஷ்ணுபட்டரிடம் என் ஓலையைச் சேர்த்துவிடுங்கள்; அவரே உங்களுடைய தங்கக் காசுகளைக் கொடுப்பார்!'' என்று கூறி, முதலாவது சீடனைப் பார்த்தார். அவனும் அதை ஒப்புக்கொள்வது போலத் தலையை ஆட்டியதைக் கண்டு ராஜகுரு திருப்தியடைந்தார்.

ராஜகுரு பல்லக்கு சுமப்பவர்களை நோக்கி, முடிந்தவரை மெதுவாக நடந்து செல்ல உத்தரவிட அதன்படியே அவர்கள் அடிமேல் அடி வைத்துச் செல்லத் தொடங்கினர். ராம நம்பி தமது எழுத்தாணியை எடுத்து அதில் வேகமாக எழுதத் தொடங்கினார். எழுதி முடித்தவுடன்,

PDF ISLAM

அதை இரண்டாம் சிஷ்யன் கையில் கொடுத்து, ''இது மிக வும் ரகசியம் ! வெளியே தெரிந்துவிட்டால் உங்களிருவரை யும் மன்னன் கழுவிலேற்றிவிடுவான் மறைத்துக்கொள் !'', என்றார். சீடனும் அதை மறைத்துக் கொண்டான்,

பல்லக்கு மடாலயம் போய்ச் சேர்ந்தவுடன் அங்கு ஒரு பெருங்கூட்டமே கூடியிருந்தது. அவர்கள், ''மவுன விரதமும் உண்ணா விரதமும் இருக்கப் போகும் ராஜகுரு மகான் வாழ்க! '' என்று கோஷமிட்டு வரவேற்றனர். மூத்த அமைச்சர் சேதுபதி முன்னின்று ராஜகுருவை வரவேற்றார். அக் கூட்டத்தில் விஷ்ணு பட்டரும் கலந்து கொண்டிருந் தார்.

ராஜகுரு அனைவரையும் ஆசீர்வதித்தவாறு கீழே இறங் கியதும், வழக்கம்போல் தரிசன ஆசனத்தில் அமர்ந்தார். மற்றவர்கள் கீழே அமர்ந்தனர்.

சேதுபத்திரர் மக்களை நோக்கி. ''மகா ஜனங்களே ! நமது ராஜகுரு மகானவர்கள், இன்று மன்னர் எழுந்தருளி, நாட்டின் விவசாயம் பெருகவும், வியாபார செழிப்படைய மவுன விரதமும் உண்ணா, விரதமும் அனுஷ்டித்து விசேஷ பூஜை தொடங்கப் போகிறார். அவருடைய விரதங்கள் முடியும்வரை, தன்னை யாரும் சந்திக்கக் கூடாது என்றும், காவலர்களின் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்றும் மன் னர் பிரானிடம் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் மடால யம் மற்றும் கோயில் காரியங்களை கவனிக்கும் பொறுப்பை மன்னருக்கே அளித்து அவசியப்பட்டால். புதியவர்களை நியமிக்கவும் கேட்டுக்கொண்டுள்ளார், ஏனெனில் குரு மகான் அவர்கள் கடைப்பிடிக்கப்போகும் தவம் மிகவும் கடுமையானது. அத்தகைய தவத்திலிருந்து ஞானிகள் மீள்வது என்பது மிகவும் அபூர்வமாகும், நமது குருமகான் வெற்றியோடு தமது தவத்தை முடித்து மீண்டு வந்து நமக் கெல்லாம் வழிகாட்ட வேண்டுமென்று ஒவ்வொருவரும்

PDF ISLAM

பிரார்த்திப்போமாக !'' என்று கூறி முடித்தார். மக்கள் கோஷங்களை முழங்கி, ராஜகுருவைப் புகழ்ந்தனர்.

சேதுபத்திரர் பேசிக்கொண்டிருக்கும்போது ராஜகுரு தன் கண்களை உருட்டி யுருட்டி, நகர்ந்து நின்ற விஷ்ணு பட்டரை முறைத்துப் பார்த்தார், தன் சீடனையும் திருப்பிப் பார்த்தார். சேதுபத்திரரின் அனுபவமிக்கக் கண்கள் அதை இடையிடையில் கவனித்துக்கொள்ள தவறவில்லை.

பக்திப் பரவசத்தால் பூரித்த மக்கள் தாங்கள்கொண்டு வந்த மாலைகளை ராஜகுரு கழுத்தில் அணிவதில் போட்டி போட்டுக்கொண்டு முன்வந்தனர். அதனால் கூட்டத்தில் பெரியதொரு அலம்பல் ஏற்பட்டது. ராஜகுருவால் எழுந்து பேச முடியவில்லை.

ராஜகுருவின் பார்வை சுழன்றபோது, அக் கூட்டத்தில் பல்லக்குத் தூக்கிகள் இருவரும் வந்து நின்றதைக் கண்ட அவர் வியப்புற்றார். பல்லக்குத் தூக்கிகள் எப்போதும் மடாலயத்தின் வெளிப் பிரகாரத்திலேயே நின்று விடுவது தான் வழக்கம். கீழ் ஜாதியினரான அவர்கள் ஒருபோதும் உள்ளே வரமாட்டார்கள், இந்தச் சம்பிரதாயத்துக்கு மாற்றமாக உள்ளே வந்ததுமன்றியில் அவர்கள் விஷ்ணு பட்டரின் இரு மருங்கிலும் நின்றது அவருக்கு ஆச்சரியமாக இருந்தது. பல்லக்குத் தூக்கிகளை அவர் கூர்ந்து கவனித்த போது அவர் திடுக்கிட்டார், உடலெல்லாம் ஒருமுறை சிலிர்த்தது. காரணம் அவர்கள் வழக்கமாக இவரைச் சுமந்து வருவோராக இருக்கவில்லை. அவர்களை ராஜகுரு கூர்ந்து கவனித்தபோது, அவர்களும் ராஜகுருவின் சந்தேகம் நீங்கும் விதத்தில் தங்கள் முண்டாசுகளை அவிழ்த்துத் தங்களை அடையாளம் காட்டிக்கொண்டு மீண்டும் தலையில் சுற்றிக்கொண்டனர்.

அவர்களில் ஒருவர் படைத் தளபதி மார்த்தாண்ட பூபதி என்பதையும் மற்றொருவர் ஒற்றர் படையின் புதிய

PDF ISLAM

தலைவரான சிங்கராயர் என்பதையும் அவர் அறிந்தபோது அவர் தலையே சுழன்றது.

"இவர்கள்தானா நம்மைச் சுமந்து வந்தார்கள்? அப்படியானால் நாம் சீடனிடம் பேசிய பேச்சுக்களையும் ஒலை எழுதிக் கொடுத்ததையும் அறிந்துகொண்டிருப்பார்களே!" என்று நினைத்தபோது அவர் உடம்பெல்லாம் வியர்த்தது. தன்னுடைய கடைசி நம்பிக்கையும் தவிடுபொடியாகிவிட்டது என்று அவர் புரிந்துகொண்டபோது அவரையும் அறியாமல் அவர் தலை சுழன்றது.

ராஜகுருவின் பரிதாபகரமான நிலையை பக்த கோடிகள் யாரும் புரிந்துகொள்ளவில்லை யாதலால் அவர்கள் வாழ்த்துக் கோஷங்களை ஒலித்துக்கொண்டும், மாலைகளை அணிவித்துக்கொண்டும் கால்களில் விழுந்து வணங்கிக் கொண்டும் தங்கள் பக்தியை வெளிப்படுத்திக் கொண்டும் இருந்தனர். அவர்களை வழக்கப்படி ஆசீர்வதிக்கக்கூட ராஜகுருவினால் முடியவில்லை. அவர் சிந்தனை எங்கெங்கோ ஓடிக்கொண்டிருந்தது.

ராஜகுருவின் முக மாறுதல்களையும், அவர் தன்னிடம் ஏதோ சொல்ல விரும்புகிறார் என்பதையும் தன்னுடைய நுட்பமான அறிவால் புரிந்துகொண்ட விஷ்ணுபட்டர் அவரைக் காலில் விழுந்து கும்பிட வருவதுபோல் முன்னேறினார். அவரைத் தொடர்ந்து பல்லக்குத் தூக்கிகள் வேடத்திலிருந்த மார்த்தாண்ட பூபதியும், சிங்கராயரும் சேர்ந்தே வந்தார்கள். விஷ்ணுபட்டர் ராஜகுருவின் காலில் விழுந்து எழுந்தவாறு, "சுவாமி! இது என்ன மாறுதல்?" என்று கேட்டார்.

இரு பக்கங்களிலும் கும்பிட்டவாறு நின்ற மார்த்தாண்ட பூபதியையும் சிங்கராயரையும் கவனித்துக்

கொண்டே ''ஸ்ரீ கணேசர் உமக்குள் புரிவார்'' என்று இரண்டுதடவைக் கூறினார். விஷ்ணுபட்டர் ஏதோ புரிந்துக் கொண்டதுபோல எழுந்து நகரவே அவரைத் தொடர்ந்து மார்த்தாண்டரும் சிங்கராயரும் சென்றனர்.

ஆசீர்வாத சம்பிரதாயங்கள் முடியவே. அலங்கரிக்கப் பட்ட பூஜை அறைக்கு ராஜகுரு அழைத்துச் செல்லப்பட் டார். மந்திரங்கள் முழங்க அவர் உள்ளே சென்று அங்கு போடப்பட்ட ஆசனத்தில், பத்மாசனமிட்டு, தவக் காலத்தில் அமர்ந்தார். சம்பிரதாயப்படி அவருக்கு அளிக்க கும் கடைசி உணவாக, பூஜை செய்யப்பட்ட பாலும், பழங் களும், இரண்டு மடாலய சீடர்களால் கொண்டு வரப்பட்டு அவர் முன் வைக்கப்பட்டவுடன், வெளியிலிருந்த சீடர் களால் மந்திரங்கள் ஒலிக்கப்பட்டன, அதே சமயம் கதவு கள் சாத்தப்பட்டு, சேதுபத்திரர் கரங்களால் ஒரு பெரிய பூட்டு போடப்பட்டது. வாசலுக்கு வெளியே காவலர்கள் இருவர் நிறுத்தப்பட்டனர்.

ராஜகுருவுடன் எந்நேரமும் கூட இருக்கும் இரண்டு சீடர்களையும் சேதுபத்திரர் தம்முடன் அழைத்துவருமாறு உத்திரவிடவே இரு காவலர்கள் அவர்களை நெருங்கி, 'எங் களுடன் வாருங்கள்' என்று கூறி அழைத்துச் சென்றனர்.

மடாலயத்தின் கடைசிப் பகுதியில் ஒரு தனி அறை இருந்தது. அது அரசரும் பிரமுகர்களுமான முக்கி யஸ்தர்கள் மடத்துக்கு வந்து பூஜை காலம்வரை தங்கி யிருப்பதற்காக பயன்படுத்தப்பட்டு வருகின்ற அறையா கும் அங்கு அதற்கான அனைத்து வசதிகளும் செய்யப்பட்டி ருந்தன, அங்கு சேதுபத்திரர் போய்ச் சேரும்போது, அவ ருக்கு முன்னதாக, பல்லக்குத்தூக்கி வேடத்திலேயே மார்த் தாண்டரும் சிங்கராயரும் விஷ்ணுபட்டருடன் காத்திருந் தனர். சில விநாடிகளில் காவலர்கள் இரண்டு சீடர்களு

டனும் அங்கு வந்து சேர்ந்தனர். அவர்கள் பல்லக்குப் தூக்கிகளைப் பார்த்ததும் மிரள மிரள விழித்தனர், மார்த் தாண்டரும், சிங்கராயரும் அவர்களை முறைத்துப் பார்க் கவே, ஓலையை மறைத்து வைத்துக் கொண்டிருந்த சீடனின் கை கால்கள் நடுங்க ஆரம்பித்தன. அவன் தானாக அந்த ஓலையை எடுத்து சேதுபத்திரரிடம் அளித்து, "நான் சந்திய மாக ராஜத் துரோகம் செய்யவில்லை. ராஜகுருவின் ரகசி யத்தை மன்னர் பிரானிடம் அளிக்கவே இதை வாங்கி னேன்! மன்னர் பிரானின் கருணையே எங்களுக்குத் தேவை!" என்று கூறினான்.

சேதுபத்திரர், அதை வாங்கிக்கொண்டே மார்த்தாண் டரை நோக்கி, "இது என்ன?" என்று கேட்டார்.

"ராஜகுரு விஷ்ணுபட்டருக்குக் கொடுத்த கடைசி ஓலை!" என்றார் மார்த்தாண்டர்.

விஷ்ணுபட்டர் உடனே பதட்ட மடைந்து, "என்ன! எனக்கா? குரு மகான் ஓலை கொடுக்க வேண்டிய அவசியம் என்ன வந்தது!" என்று கேட்க "அவசியம் வந்ததனால் தான் கொடுத்துள்ளார்" எனப்பளிச்சென பதில் கூறினார் மார்த்தாண்டர்.

விஷ்ணுபட்டர்ஒன்றும் புரியாதவராக மூத்த அமைச்சர் சேதுபத்திரரை நோக்கி, "மகா பிரபு! எனக்கு ஒன்றுமே புரியவில்லை! தளபதியவர்கள் என்னை ஏதோ குற்றவாளி யாக்க முயற்சிப்பது போல் தெரிகிறது. நான் ஒரு பாபமும் அறியேன், குருமானவர்கள் ஏதோ விசேஷ விரதம் அனுஷ் டிக்கப் போவதாகவும்,நான் வந்து பங்குகொள்ள வேண்டும் என்றும், காவலர் ஒருவர் அழைத்ததன் பேரில்தான் நான் இங்கு வந்தேன்" என்றார்.

சேதுபத்திரர் மிகவும் அமைதியாக, "நீர் இப்போது சொல்வது முற்றிலும் உண்மை என்பதை நாம் அறிவோம்!

PDF ISLAM

நாம்தாம் அந்தக் காவலரை அனுப்பிவைத்தோம். ஆனால் இனி நாம் கேட்கும் கேள்விகளுக்கு நீர் பதில் சொல்வதிலிருந்துதான்' நீர் ராஜ விசுவாசியாக இருக்கப் போகிறீரா அல்லது ராஜகுரு பக்தராக மாத்திரமே இருக்கப் போகிறீரா என்பது புரியப் போகிறது ! விஷ்ணுபட்டரே ! உம்முடைய குருமகான் இப்போது விரதம் எதையும் அனுசரிக்க பூஜை அறைக்கு அனுப்பப்படவில்லை. அங்கு அவர் சிறை வைக்கப்பட்டுள்ளார். அவருக்கு ஒரு வாரத்துக்குத்தேவையான பலகாரங்களும், குடி நீர், புழக்க நீர் ஆகிய சகல வசதிகளும் அங்கு செய்யப்பட்டுள்ளன ! அவர் திடீரென சிறைப்படுத்தப்படுவதற்கு என்ன காரணம் என்பதை நீர் அறிவீர் என நினைக்கிறோம் ! ஏனெனில் அவர் புரிந்துவந்த பல குற்றங்களுக்கு நீரும் உடந்தையாக இருந்து வந்துள்ளீர் ! ஆதலால் இப்போது உமக்குத் தெரிந்த உண்மைகளை நீராகவே முன் வந்து சொல்லிவிட்டீரானால். கருணையே உருவான மன்னர் பிரானிடம் உமக்கு மன்னிப்புப் பெற்றுத் தர நாம் முயற்சிக்கலாம் ! இல்லையெனில் உமது தலை எழுத்தை நீரே எழுதிக் கொண்டவராவீர்!'' என்று கண்டிப்பான குரலில் கூறினர்.

விஷ்ணுபட்டர் தனது வலப் பக்கமும் இடப் பக்கமும் திரும்பி மார்த்தாண்டரையும், சிங்கராயரையும் ஒரு முறை பார்த்தார், பிறகு இரண்டு சிடர்களையும் நோக்கினர்; அடுத்து மெதுவான குரலில் ',மகா பிரபு ! எனக்கு குருமகான் கொடுத்த ஓலையை நான் முதலில் பார்க்கலாமா?,' என்று கேட்டார்.

சேதுபத்திரரின் கண்கள் சுருங்கின. முகத்தில் ஒருவித கடுகடுப்புப் பறந்தது. ''நீர் அந்த ஓலையைப் படிக்கத்தான் போகிறீர் ! ஆனால் அதற்கு முன்னால் நம்முடைய சந்தேகங்களுக்கு விளக்கம் சொல்ல வேண்டும் !'' என்று கடுமையாகக் கூறினர்.

PDF ISLAM

''மகாப் பிரபு அவர்கள் எந்தவொரு சந்தேகத்தையும் குறிப்பிட்டுக் கூறவில்லையே?'' என்று மிகவும் நயமாகக் கூறினர் விஷ்ணுபட்டர்.

''அப்படியானல் உம்முடைய குருமகான் பற்றியும், உம்மைப் பற்றியும் எங்களுக்கு என்னென்ன விஷயங்கள் தெரியும் என ஆழம் பார்க்க விரும்புகிறீர் அல்லவா ? நீர் உம்மை மகா புத்திசாலியாக நினைத்துக் கொண்டிருக்கிறீர் என்பது உம்முடைய பேச்சிலிருந்து புரிகிறது ! உமக்கும் பொதுவாக மன்னிப்பும் பெற்றுத்தரவே உம்முடைய வாயினுலேயே உண்மைகளை யெல்லாம் வலிய சொல்லச் சொன்னேம். நீர் நம்மை கேள்வி கேட்கச் சொல்கிறீர் அல்லவா ?'' என்ருர் !கடுமையாக.

''மகாப் பிரபு அவர்களே ! தாங்கள் தயவு செய்து என்னை மன்னிக்க வேண்டும் ! சம்பவங்கள் அனைத்தும் நான் எதிர்பாராமல் நடைபெற்றுள்ளதால் மிகவும் அதிர்ச்சியடைந்துள்ளேன். எனக்கு அன்பு கூர்ந்து ஒரு நாள் அவகாசம் கொடுக்க வேண்டுகிறேன்'' என்ருர் விஷ்ணுபட்டர்,

சேதுபத்திரர் அவரைக் கூர்ந்து நோக்கியவாறு ''ஒரு நாள் போதுமா !'' என்று கம்பீரமாகக் கேட்டார்.

விஷ்ணுபட்டர் தன்னுடைய கோரிக்கை ஏற்றுங்கொள் ளப்பட்டதைக் கண்டு நிம்மதியடைந்தவராய், ''மகாப் பிரபு கிருபை செய்து இரண்டு நாட்களாக அளித்தால் மிக வும் நன்றியுடையவனுவேன்'' என்ருர்.

சேதுபத்திரர் தம் தலையைச் சில தடவைகள் அசைத்து விட்டு ''நாம் மூன்று தினங்கள் உமக்கு அவகாசம் தரு கிருேம். அமைதியாக இருந்து யோசித்து, நீரே முழு ஒப்புதல் வாக்குமூலம் அளியும்!'' என்று கூறிவிட்டு, மார்

PDF ISLAM

தாண்டவரையும், சிங்கராயரையும் நோக்கி, ''இவரை அழைத்துச் செல்லுங்கள்'' என்று உத்திரவிட்டார்.

விஷ்ணுபட்டர் பதறியவராக, ''எங்கே மகாப் பிரபு?'' என்று கேட்டார்.

''பாதாளச் சிறைக்கு!.' என்று பளிச்சென பதில் கூறி விட்டு சீடர்களைச் சுட்டிக்காட்டி ''இவர்களைத் தனியாக ஒரு இடத்தில் இருக்கச் செய்யுங்கள்'' எனக் கூறியவாறு எழுந்துவிட்டார்.

'பாதாளச் சிறை' என்ற சொல்லைக் கேட்டதும் ''ஐயோ வேண்டாம்! வேண்டாம்!'' நான் எல்லா உண்மைகளையும் சொல்லிவிடுகிறேன் என்று அலறினார் விஷ்ணுபட்டர், ஆனால் அதைக் கொஞ்சமும் காதில். வாங்காமல் சேதுபத்திரர் வெளியேறியவுடன், மார்த் தாண்ட பூபதி, ''விஷ்ணுபட்டா! உனக்கு நயவஞ்சக குணந்தான் இருக்கிறதே தவிர நல்ல புத்தி கொஞ்சமும் இல்லையே அநியாயமாக நீயே பாதாள சிறை வாழ்க்கை யைத் தேடிக்கொண்டாயே! சேதுபத்திரரை நீயாரென்று நினைத்துக்கொண்டாய்? உன் குருநாதனுக்கு அவர் மரியா தைச் செய்வதைப் பார்த்து அவருக்கு அடிமை என்று நினைத் துக்கொண்டாயா? நீ அவரிடம் பேசிய விதத்தைப் பார்த்த போது நானே உன்னை என் காலில் போட்டு மிதித்துவிட விரும்பினேன்! அப்படி ஒரு சைக்கினை எனக்குக் காட்டி யிருந்தாரானல் உன் கதி இப்போது வேறுவிதமாக இருந்தி ருக்கும்! நல்ல வேலையாக ஒரு கண்டத்திலிருந்து தப் பித்து. அதைவிடக் கடுமையான மற்றொரு கண்டத்துக்கு நீயே இப்போது போகிறாய்! ஊம் நட!'' என்று தோளைப் பிடித்துத் தள்ளினர்.

விஷ்ணுபட்டர் கைது செய்யப்பட்டு, அழைத்துக் கொண்டு போவதைப் பற்றி மக்கள் யாரும் பரபரப்படைய வில்லை. ஏனெனில் அவர் அந்த அளவுக்கு மக்களால் அறி

PDF ISLAM

கப்பட்டவராக இருக்கவில்லை. சீடர்கள் இருவரும் மடாலயத்தில் ஒரு காலி அறையிலேயே காவலில் வைக்கப்பட்டனர். சிங்கராயர் தனது ஒற்றர்கள் நால்வரை மடாலயத்தில் நிறுத்தி கண்காணிக்கும்படி உத்தரவிட்டபின் அரண்மனையை நோக்கிப் புறப்பட்டார்.

அன்று இரவு மன்னர் சேரமான் பெருமாளின் வரவேற்பு அறையில், மன்னர் முன் மூத்த அமைச்சர் சேது பத்திரர், தளபதி மார்த்தாண்ட வர்மா, ஒற்றர் படைத் தலைவர் சிங்கராயர் உட்பட மற்றுமுள்ள அமைச்சர்களின் கூட்டம் கூட்டப்பட்டிருந்தது. இந்தக் கூட்டத்தில் சேது பத்திரர், நடந்த விஷயங்கள் அனைத்தையும், விளக்கிக் கூறினார். மாரி, காளி ஆகியோரை அரபுகள் சாமார்த்தியமாகப் பிடித்ததையும், அவர்கள் பிடிபடாவிட்டால் பல உண்மைகள் வெளியாகி இருக்க முடியாது என்று கூறி, நாம் அரபுகளுக்கு நன்றிசெலுத்தவேண்டு மென்றும் குறிப்பிட்டார், மேலும், மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் ஆலோசனைகளைக் கேட்டார்.

ராஜகுரு ராமநம்பியின் லீலா விநோதங்களைக் கேட்ட மற்ற அமைச்சர்களும் வியப்புற்றனர், ஏனினும் அவருக்கு ஆதரவாக யாரும் கருத்துத் தெரிவிக்கவில்லை. ஒவ்வொருவரும் அவருடைய அகம்பாவ பேச்சையும், தங்களை யெல்லாம் அவர் எவ்விதம் துச்சமாக நடத்தி வந்தார் என்பதையும் பல நிகழ்ச்சிகளைச் சுட்டிக் காட்டிக் குறிப்பிட்டனர். ஆனால் மடாலய முறைகளை எப்படிக் கொண்டு செல்வது என்பது பற்றி முடிவெடுக்க முடியாமல் பல்வேறு கருத்துக்களைக் கூறிக் குழம்பினர் கடைசியாக மன்னர் பெருமானுடைய முடிவுக்குத் தாங்கள் கட்டுப்பட்டு நடக்கச் சித்தமாயுள்ளதாகக் கூறினர்.

மன்னர் சேரமான் பெருமாள் மிகவும் அமைதியாகப் பேசலுற்றார்:-

PDF ISLAM

''எம் அன்புக்கும் நம்பிக்கைக்கும் உரியவர்களே ! நாம் இப்போது நமது மனம் திறந்து கூறுவதை நீங்கள் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறோம். நாமே இந்த ராஜ்யத்தை நிரந்தரமாக ஆட்சி புரிந்து கொண்டிருக்க வேண்டும் என்று சிறிதளவும் எண்ணங் கொண்டிருக்கவில்லை. நமக்குப் பிறகும் யார் ஆட்சி புரிந்தாலும், சேர நாடு செழுமையாகவும், சிறப்பாகவும் திகழ வேண்டும் என்பதே நமது இலட்சியம். இடையிடையே இந்த நாட்டில் ஏற்படும் அரசியல் குழப்பங்களுக்கு அடிப்படைக் காரணம், நம்மிடையே இரட்டை ஆட்சி முறை தொடர்ந்து வந்து கொண்டிருப்பதே யாகும் என்பது தெளிவாகப் புலனாகிறது. அதாவது, அரச ஆட்சியும். ஆலய ஆட்சியும் தனித் தனியாக இருந்து வருவதேயாகும். ஆலய ஆட்சியின் தலைவர்களாக வரும் ராஜகுருக்கள் என்போர் அரசு தங்களுக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும் என்றே விரும்புகின்றனர். இல்லாவிட்டால், அவர்களால் எதுவும் செய்ய முடியும் என்ற நிலை இருந்து வருகிறது. கோயில்களில் மன்னர்களுக்கு எதிராக மக்களிடம் சொல்லவோ, அல்லது மன்னர்களின் மரணம் குறித்துப் பொய்யான தகவல்களைக் கூறி மக்களை நம்பச் செய்விக்கவோ முடிகிறது.

''இதற்கு ஆதாரமாக, சேரமான் வம்சத்து எம் மூதாதையர்களையே உங்களுக்கு நினைவூட்டுகிறோம், முதலாம் சேரமான் பெருமாள். கடலோரக் கோயிலில் தவமிருந்து நேரடியாக மோட்சத்துக்குச் சென்றுவிட்டாரென்றும், இரண்டாவது சேரமான் வெள்ளைப் பரிஏறி வைகுண்டம் அடைந்துவிட்டதாகவும் மக்கள் நம்ப வைக்கப் பட்டிருக்கிறார்கள். உண்மையில், அவர்கள் ராஜகுருக்களின் கருத்துக்களுக்கு முரண்பட்ட காரணத்தால் படுகொலை செய்யப்பட்டவர்களே ஆவார்கள். அவர்களின் உடல்களும் கூட மறைக்கப்பட்டு விட்டன, அவர்கள் கொல்லப் பா; 16.

PDF ISLAM

பட்ட பின்னர் கவிஞர்களைக் கொண்டு அவர்களைப் புகழ்ந்து பாடச் செய்து, அதே சமயம் அவர்கள் உயிருடனும் பூத உடலுடனும் மோட்சத்தை எட்டிவிட்டதாக நம்பும்படி ஆக்கப்பட்டு விட்டது.

''அரபு வர்த்தகர்களின் வருகையால், நம் நாம் நாட்டில் வியாபாரப் பெருக்கமும், பொது அறிவும் மக்களிடம் பெருக வாய்ப்புண்டு என்று நாம் கருதுகிறோம். அது கூடாது என்று ஆலயம் விரும்புகிறது, காரணம், அரபுகள் ஏற்கனவே நம்மைப்போல் பல குலத்தவராக இருந்தவர்கள். பல வர்ணங்களாக இருந்தவர்கள், அவர்களிடையே முஹம்மது என்ற மகான் தோன்றி, இன, நிற, ஜாதி வேறுபாடுகளை யெல்லாம் ஒழித்து மனித ஜீவன்கள் அனைத்தையும் ஒரே இனமாக ஆக்கிவிட்டார். மேலும் அம்மக்களிடத்தில் இருந்த மதுவருந்துதல், சூதாடுதல், விபச்சாரம் புரிதல் போன்ற அனைத்துத் தீயச் செயல்களையும் அற்புதமாக அகற்றி விட்டார். அவ்விதம் தங்களைப் பரிசுத்தமாக்கிக் கொண்ட மக்களே இப்போது நம் நாட்டுக்கும் வந்துள்ளனர், இதுவும் நம் நாட்டுக்கு நன்மை பயக்கக் கூடிய தொன்றேயாகும்.

''ஆலயம் அவர்கள் வருகையை விரும்பாத காரணம், தாங்கள் ஆதிக்கம் செலுத்தும் நான்கு வர்ணப் பிடிப்பு அரபுகளால் அறுப்பட்டுப் போய்விடும் என்ற அச்சமே யாகும். இந்த பிடிப்பு அறுபட்டுவிட்டால் புலையர்களும் பிராமணர்களும் சம நிலைக்கு ஆளாகிவிடுவர். இடையில் உள்ள ஜாதி வேறுபாடுகளும் நொறுங்கிப் போய்விடும். அப்படிப்பட்ட சம அந்தஸ்துடைய மனித சமுதாயம்தான் நம் நாட்டில் எதிர்காலப் பிரஜைகளாக இருக்க வேண்டும் என்று நாம் ஆசிக்கிறோம் அரச பீடத்துக்கு வரும் உரிமை அனைவருக்கும் இருக்க வேண்டும் அதுபோன்றே ஆலயப் பீடத்துக்கும் வரும் உரிமை அனைவருக்கும் பொதுவான

PDF ISLAM

தாக இருக்க வேண்டும் என்பதே எமது பேராவ, நாம் அனைவரும் ஒரே சமயத்தவர் என்ருல், ஆண்டவனின் தொடர்புக்காக தனிப் பிரிவினர் ஏன்? ஆதலால் இனி நாமே எல்லாம் வல்ல எம்பெருமானின் பணிகளைச் செய்யும் பொறுப்புகளை ஏற்கவேண்டும். நமது அண்டை நாடான பாண்டிய, சோழநாடுகளில் திருஞான சம்பந்தர் என்ற மகான் வர்ண அடிப்படையில்லாத ஒரு சமயத்தை தோற்று வித்து, இறைவழிபாடுகளையும் ஆலயங்களையும் யாரும் நடத்தும் வகையில் பொதுச் சித்தாந்தத்தை உண்டாக்கி யுள்ளார்கள். அந்த வழியை நாமும் ஆராய வேண்டும். மேலும் அரபு நாட்டுக்குச் சென்று, மகான் முஹம்மத் அவர்களையும் அவர்களுடைய முக்கிய நண்பர்களையும் நேரில் சந்தித்து அவர்கள் எப்படி தங்கள் நாட்டு மக்களின் மன நிலையில், இவ்வளவு பெரிய மாறுதல்களை இத்தனை குறுகிய காலத்தில் உண்டாக்கிஞர்கள் என்ற உண்மைகளை யும் வழி முறைகளையும் தெரிந்து வரும் எண்ணமும் நமக்குள்ளது,

''அதன் முதற் கட்டமாகவே அரபுவர்த்தகர்களை நாட்டின் பல பாகங்களில் நாம் நடமாட அனுமதித்திருக்கி ரேும், மகான் முஹம்மதுடைய வழிமுறைகள் உண்மை யானதாக இருந்தால், அம் மகானைப் பின்பற்றுவோர் என்று கூறிக்கொள்ளும். இவர்கள், தங்கள் நடத்தையின் மூலம் எந்த அளவுக்கு நம் நாட்டு மக்களின் நல்லெண்ணத் தைப் பெறுகிருர்கள் என்பதையும் நாம் கூர்ந்து கவனித்து வர நாடியுள்ளோம். அதன் பிறகுதான் நாம் அரபு நாட்டுப் பயணத்தைப் பற்றி முடிவு செய்ய வேண்டியுள்ளது.''

''மேலும் நாளை மறு நாள் நாம் நமது ஒற்றர் படை யினர் அனைவரையும் சந்திக்க ஏற்பாடு செய்துள்ளோம் அந்த அவையில் நமது ராஜகுருவைப்பற்றிய உண்மைகள் அனைத்தையும் பகிரங்கமாக வெளிப்படுத்த வேண்டும் என் பது நாட்டமாகும் இந்த விஷயங்கள் சம்பந்தமாக உங்கள்

PDF ISLAM

மனதில்பட்ட யோசனைகளை நீங்கள் கூறினீர்களானால் எமக்கு உதவிகள் செய்தவராவீர்கள். நாம் அரசரென்றும் நீங்கள் எமது யோசனைகளுக்கு எதிராக எதுவும் கூறக் கூடாது என்றும் நினைக்காமல் மனம் திறந்து பேசுமாறு உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேம்'' என்று நீண்டதொரு சொற்பொழிவையே நடத்தி முடித்தார் மன்னர் சேரமான் பெருமாள்.

அந்த அவையில் சிறிது நேரம் அமைதி நிலவியது அமைச்சர்கள் அவரவர்களுக்கிடையே ஏதேதோ மெதுவாகப் பேசிக் கொண்டார்கள். ''எங்கள் உயிரினும் இனிய மன்னவரே ! ஆலயங்களின் பிரச்சனையில் இப்போது நீங்கள் தலையிடுவது சரியெனப் படவில்லை. வேண்டுமானல்' அரசாங்க உதவியுடன் சிலரைக் கொண்டு தனி ஆதீனங்களை ஆங்காங்கே உண்டாகச் செய்து அவற்றின் மூலம் மக்களின் நம்பிக்கையைப் பெற்று தங்கள் இலட்சியத்தைப் படிப்படியாக நடைமுறைக்குக் கொண்டுவரலாம். இருக்கும் ஆலயங்கள் அனைத்தும் ராஜகுருவின் ஆதிக்கத்திலுள்ளன. ராஜகுருவுக்கு நேர்ந்துள்ள நிலைமைபற்றி ஒரு சிறிது ரகசியம் வெளிப்பட்டாலும், அர்ச்சகர்களெல்லாம் ஆர்த்தெழுந்து விடுவார்கள். இந்த நிலையில், ஆலயங்களை அரசோடு இணைக்கும் உங்கள் நோக்கம் வெளிப்பட்டாலும் அதுவும் சேர்ந்து பெரிய கொந்தளிப்பை உண்டாக்கிவிடும். ராஜகுருவின் விஷயம் ஒரு முடிவுக்கு வந்து சிலகாலம் சென்றபின் அது பற்றி யோசிக்கலாம் என்று கருதுகிறேன்!' என்றார். இதை மற்றவர்களும் ஆமோதித்தனர்.

அடுத்து மற்ருெரு அமைச்சர் எழுந்து, ''ராஜகுருவை விரதம் என்ற பெயரில் சிறையில் வைத்துள்ள நிலையில், அவர்மீதுள்ள குற்றங்களை ஒற்ற படையினரின் மத்தியில் வெளியிடுவதும் சரியானதாகப்படவில்லை. ஏனெனில், அது முற்றிலும் ராஜகுருவின் கையாட்களைக் கொண்டது?

PDF ISLAM

அவர்கள் அனைவரும் ஆட்சியின் எதிரிகளாக மாறிவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆதலால் ராஜகுருபற்றிய ஒரு முடிவு ஏற்பட்டபின் அவர் ரகசியங்களை வெளியிடலாமென்பது என் தாழ்மையான யோசனை'' என்றார். இந்த யோசனையும் சரியானதுதான் என்று மற்றவர்கள் அங்கீகரித்தனர்.

மன்னரும் அவற்றை ஏற்றுக்கொள்வதுபோல் தலையை அசைத்தார், இந்த அமைச்சரவைக் கூட்டம் பின்னிரவு வரை தொடர்ந்து நடந்தது.

இறுதியாக ''அரபு நாட்டு வர்த்தகர்களின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்து, அவர்களின் ஒவ்வொரு குணாதிசயங்களையும் பற்றி தமக்குத் தகவல் கொடுப்பதில் ஒத்துழையுங்கள்'' என மன்னர் கேட்டுக் கொண்டதுடன் அனைவரும் பிரிந்தனர்.

அன்று அமைச்சர்கள் ஆலோசனை முடிந்து விடை பெற்ற பிறகு, மன்னருடன் மூத்த அமைச்சர் சேதுபத்திரரும், மார்த்தாண்ட பூபதியும் மட்டும் தனித்திருந்தனர்,

மார்த்தாண்டர், ராஜகுருவின் பல்லக்கைச் சுமந்து சென்றதையும், ராஜகுரு தன் சீடர்களுடன் பேசி. ஓலை எழுதிக் கொடுத்து விஷ்ணுபட்டரிடம் கொடுக்கச் சொன்னதையும், பிறகு அந்த ஓலை கைப்பற்றபட்டதையும் விளக்கிக் கூறினார்.

சேதுபத்திரர் தனக்கும் விஷ்ணுபட்டருக்கும் நடந்த சம்பாஷணைகளையும் அவனைப் பாதாளச் சிறைக்கு அனுப்பி வைத்ததையும், ராஜகுரு விரத அறைக்குள் சென்ற விவரங்களோடு விளக்கினார். அதோடு இரண்டு சீடர்களையும் தனி அறையில் பாதுகாப்பாக வைத்துள்ளதையும் குறிப்பிட்டு ஓலையை மன்னரிடம் நீட்டினார்.

PDF ISLAM

மன்னர் பிரான் அதை வாங்காமல், ''அதை நீங்களே படியுங்கள்'' என்று உத்திரவிட, சேதுபத்திரர் அதைக் பார்த்துவிட்டு, ''இது சமஸ்கிருதத்தில் சங்கேத பாஷை யில் எழுதியுள்ளதுபோல் தெரிகிறது என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை மன்னர் பிரானே!'' என்று கூறி மீண்டும் மன்னரிடமே அளிக்க அரசர் அதை வாங்கி ஆழ்ந்து உற்று நோக்கினார்,

அதில் ''இரண்டு சீடர்கள் என்று எழுதி ஏதோ ஒரு குறி போடப்பட்டிருந்தது. அதே போன்று ''காளி-மாரி'' என்ற இரண்டு பெயர்களும் அதன் பக்கத்தில் மூன்று குறி களும் காணப்பட்டன, 'சொர்க்க வாசல்' என்று வார்த் தையும் காணப்பட்டது; அதை யொட்டி சில குறிகளும் போடப்பட்டிருந்தன. தாமரைப்பூ போன்ற ஒரு வடிவம் போடப்பட்டு, 'ராஜபீடம்' என்ற சொல் எழுதப்பட்டிருந் தது. மேலும் தொடர்ந்து சில குறிகள் காணப்பட்டன.

மன்னர் அந்த ஓலையை மிகவும் கூர்ந்து கவனித்தார். சிலவற்றைப்புரிந்து கொண்டதுபோல் தலையை ஆட்டினார். சிலவற்றைப் புரிந்து கொள்ளவில்லை என அவர் முகபாவம் காட்டியது.

ராஜகுரு பரிபாஷையில் எழுதியுள்ளார். இந்த பாஷை விஷ்ணுபட்டருக்கு மட்டும்தான் தெரிந்ததா அல்லது ஒற் றர் படையின் முக்கியத் தலைவர்கள் அனைவருக்கும் புரிந் ததா என்பது நமக்குத் தெரியவில்லை, இதில் சில குறிகள் நமக்கு விளங்குகின்றன. ''இரண்டு சீடர்கள்'' என்ற வாக் கியத்துக்குப் பக்கத்தில் உள்ள குறியின் பொருள், ''அவர் களைக் கொன்றுவிடு'' என்பதாகும். ''காளி-மாரி'' என்ற சொற்களுக்குப் பக்கத்திலுள்ள மூன்று குறிகளில் ஒன்றுக்கு ''அவர்களோடு தொடர்பு கொள்'' என்பது பொருளாகும் மற்ற இரண்டு குறிகளும் விளங்கவில்லை' ''சொர்க்க வாசல்'' என்பது எதுவெனப் புரியவில்லை. அதை யொட்டிய

PDF ISLAM

சில குறிகளின் பொருள்களும் விளங்கிக்கொள்ள முடிய வில்லை. 'தாமரைப்பூ' போன்ற வடிவத்துக்கு 'லட்சுமி' என்று பொருள் கொள்ளலாம், ''அது ராஜபீடத்தின் அடியில் இருக்கிறது'' என்று குறிக்கப்பட்டுள்ளது. எந்த ''ராஜ பீடம்'' என்பது தெரியவில்லை. தொடர்ந்துள்ள குறிகளில், ''எதையோ அழித்துவிடு'' என்று உத்திரவிடப் பட்டுள்ளது. மற்றொன்று ''கடல் பயணத்தைக் குறிக் கிறது'' என்று விளக்கினார் மன்னர்.

''இதன் முழு பொருளும் விஷ்ணுபட்டருக்குத் தெரியும் என்பதில் ஐயமில்லை. நாம் அவனிடம் கொடுத்து இதன் அர்த்தத்தை கேட்டால் அவனுக் குப் பெருமை வந்துவிடும்! மேலும் முற்றிலும் ராஜகுருவின் அடிமையாகவுள்ள அவன் பொருளை மாற்றிச் சொல்லி நம்மை ஏமாற்ற முற்படுவான். ஆதலால் அவன் உதவியின்றியே நாம் பொருளறிந்து தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்'' என்றார் சேதுபத்திரர்.

மன்னர் அந்த ஓலையையே கூர்ந்து கவனித்துக்கொண்டி ருந்த நிலையில், ''இந்த ஓலையில் ராஜகுரு தன் சீடர்களைக் கொன்றுவிட உத்திரவிடபட்டிருப்பதிலிருந்து. அவர்களுக்கு ஏதோ சில முக்கிய ரகசியங்கள் தெரிந்துள்ளன எனப் புரிந்துகொள்ள முடிகிறது. காளி-மாரி ஆகியோர் பிடிப் பட்டிருப்பது அவருக்குத் தெரியவில்லை என்பதை அவர் களோடு தொடர்பு கொள்ளச் சொல்வதிலிருந்து விளங் கிக்கொள்ள முடிகிறது. அவர்களின்பெயர்களை யொட்டி யுள்ள மற்ற இரண்டு குறிகளும், ''அவர்களுக்கு ஏற்கனவே இட்ட கட்டளைகளைத் துரிதமாக முடிக்க உதவி புரி!'' என ஆணையிடுவதாக யூகிக்க முடிகிறது? அந்தக் கட்டளை கள் என்ன என்பதை அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ள வேண்டும்! ''சொர்க்க வாசல்'' என்ற சொல், ஏதோ ரகசியமான வழி என்பது போல் மனதில் படுகிறது. ஏற் கனவே ராஜகுரு, பெண்களின் விஷயத்தில் தவறாக நடந்து

PDF ISLAM

கொண்டிருக்கிறார் என்பதை அறிந்துள்ளோம். சில பெண்களை பலாத்காரமாக மடாலயத்துக்குள் கொண்டு சென்றுள்ளார்கள் என்பதையும் தெரிந்துள்ளோம்- அப்படியானால் அந்தக் காரியங்கள் ஒரு ரகசியமான வழியாகத்தான் நடந்திருக்க முடியும். அந்த வழியைத்தான் ''சொர்க்க வாசல்'' என்று குறிப்பிடப்பட்டிருப்பதாக நினைக்கிறோம். அதுபோன்றே ராஜபீடம் இருக்குமிடத்தையும் நாம் தெரிந்து கொண்டால், 'தாமரைப்பூ' பற்றிய உண்மைகள் வெளிப்பட்டுவிடும்! எதையோ அழித்து விடவும் கடல் பயணத்தைச் சுட்டிக் காட்டிருப்பதும், அநேகமாக, நம்மைப் பற்றியதாக இருக்கலாம் என யூகிக்கிறோம் நம்மைக் கொன்று கடலில் வீசி விட வேண்டும் என்று கட்டளையாகவோ, அல்லது எதையோ அழித்துவிட்டு கடல் வழியாகத் தப்பிக்கொள்ளச் சொல்வதாகவோ இருக்கலாம் அல்லது அரபுகளைத் தாக்கச் சொல்வதாக இருக்கலாம்!'' என்று மன்னர் கூறி முடித்தார்.

சிறிது நேர மவுனத்துக்குப் பிறகு, ''நம்முடைய யூகம் அநேகமாக சரியாகவே இருக்க வேண்டும் என நினைக்கிறோம்! நாளை அதிகாலையில் அந்த இரண்டு சீடர்களையும் வேணுவையும் நமது முன்னால் ரகசியமாக அழைத்து வாருங்கள்! தளபதியார் தனியாகச் சென்று காளி-மாரியிடம் பேச்சுக்கொடுத்து. அவர்களிடமிருந்து ஏதாவது உண்மைகள் வெளிப்படுகின்றனவா என்று முயற்சிக்க வேண்டும்! நாளை பிற்பகலில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளபடி ஒற்றர்களின் கூட்டம் முறைப்படி நடக்கட்டும். நாமே அவர்களிடம் பேசி அவர்களின் மன நிலைகளைப் புரிந்து, அதற்கான வழிமுறைகளை அறிவிக்கிறோம்'' என மன்னர் கூறி, அவர்களுக்கு விடை கொடுப்பதற்கு அடையாளமாகத் தம் ஆசனத்திலிருந்து எழுந்தார். அது போன்றே சேதுபத்திரரும் மார்த்தாண்டரும் எழவே, மன்னர் அவர்களுக்கு விடை கொடுத்து அனுப்பினார்.

PDF ISLAM

அன்றிரவு வெகு நேரம்வரை மன்னர் தூக்கம் வராமல் புரண்டதை அவரின் மெய்ப் பாதுகாப்பாளர்கள் கவனித்து. அவர்களும் அநேகமாகத் தூங்காமலேயே மன்னரைக் கவனித்து வந்தனர். நடு இரவில் இரண்டுமுறை மன்னர் எழுந்து, விளக்கைத் தூண்டி, அதன்வெளிச்சத்தில் ஓலையைக் கூர்ந்து பார்ப்பதும், படுப்பதுமாகக் காணப்பட்டார். பிந்திய இரவு கழித்து பொழுது விடுவதற்கு சிறிது நேரத்துக்கு முன்புதான் அவர் சிறிது கண்ணயர்ந்தார். ஆதலால் அவர் மறுநாள் அதிகாலை வழக்கமான பூஜைக்குக்கூட எழவில்லை. மெய்ப்பாதுகாப்பாளர்களும் வழக்கத்துக்கு மாறாகத் தங்களையும் அறியாமல் தூங்கி. விட்டனர்.

அவர்கள் எவ்வளவு நேரம் தூங்கினர்களோ தெரியாது அவர்களில் ஒருவனுன வேலு, உணர்வு பெற்று கண் விழித்த போது மன்னர் தன் படுக்கையில் காணப்படாதது கண்டு பதறி எழுந்தான். மற்றவனையும் அவசர அவசரமாக எழுப்பினுன்.

மெய்ப் பாதுகாவலர்கள் இருவரும் அரண்மனையின் கட்டிடப் பகுதிகள் அனைத்திலும் தேடிவிட்டு வேகமாகத் தோட்டப் பகுதிக்கு விரைந்தனர். அங்கும் பல இடங்களில் தேடியபின் கடைசியாக ஒரு மூலையில் செடி மறைவில் ஏதோ பேச்சு சப்தம் கேட்க? மறைந்து மறைந்து மெதுவாக சென்று அங்கு எட்டிப் பார்த்தனர். நல்ல வேலையாக அங்கு அவர்கள் நினைத்ததுபோல யாதொரு விபரீதமும் இல்லை. மன்னர் கீழே அமர்ந்திருந்தார். அவர் எதிரே முஸ்லிம் பின் அத்லுமும் மற்றும் நான்கு அரேபியரும் சீடர்கள் போல் முழங்காலிட்டு உட்கார்ந்து மன்னர் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

தன் மெய்ப் பாதுகாப்பாளர்களின் வருகையை செடிகளின் சப்தங்கள் மூலம் அறிந்துகொண்ட மன்னர் அவ

PDF ISLAM

களைத் திரும்பிப் பார்க்காமலேயே, ''நான் நல்ல பாதுகாப்புடன் இருக்கிறேன்! நீங்கள் போய் உங்கள் காலைக் கடன்களை நிறைவேற்றிக் கொண்டு தயாராகுங்கள்!'' என்று உத்திரவிட்டார். மன்னர் தனித்துப்பேச விரும்புகிறார் என்பதைப் புரிந்து கொண்ட அவர்கள், வணக்கம் செய்துவிட்டு அங்கிருந்து நகர்ந்தனர்.

மன்னர் சேரமான் பெருமாள் அரபுகளிடம் என்ன பேசினாரோ தெரியாது. பாதுகாவலர்கள் வந்ததற்குப் பின்னரும் சிறிது நேரம் பேசியபின் அவர் மட்டும் தனித்து நடந்து அரண்மனைக்கு வந்து சேர்ந்தார். அதன் பின்னரே அவர் தன் காலைக் கடன்களை முடித்தார்: பூஜை காரியங்களை நிறைவேற்றினார்.

மன்னர் அன்றாட காரியங்களை கவனிக்கதயாராகி விட்ட அந்த சந்தர்ப்பத்தில், தளபதி மார்த்தாண்ட பூபதி அவர் முன் வந்து நின்று வணக்கம் செய்த பின், ''இரண்டு சீடர்களும் வேணுவும் இங்கு கொண்டு வரப்பட்டு, தனித் தனியே வைக்கப்பட்டுள்ளார்கள்'' என்றார். அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போதே மூத்த அமைச்சர் சேது பத்திரரும் ஒற்றர் படைத் தலைவர் சிங்கராயரும் அங்கு வந்து சேர்ந்தனர்.

நால்வருமாக அமர்ந்து, முதலில் வேணுவை விசாரணைக்குக் கொண்டு வரச் செய்தனர் வேணு உருக்குலைந்தவன்போல் முகமெல்லாம் வெளிறிப்போய் பரிதாபமாகக் காட்சியளித்தான். அவன் உடம்பெல்லாம் நடுங்கிக் கொண்டிருந்தன கூனிக் குறுகிய நிலையில் மன்னருக்கும் மற்றவர்களுக்கும் வணக்கம் செய்து நின்றான்.

மன்னர் சேரமான் பெருமாள் அவனை இரக்கத்தோடு நோக்கி, ''வேணு! உன்னைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது. நம்முடைய ஆட்சியில் யார் ஒருவருக்கும்

PDF ISLAM

அவர்கள் புரிந்துள்ள குற்றங்களுக்கு மேல் ஒரு அணுவள வேனும் அதிகமான தண்டனை அளிக்கப்பட மாட்டாது. மேலும் குற்றம் புரிந்தவர்கள் தங்கள் தவறுகளை உணர்ந்து திருத்திக்கொண்டு, மீண்டும் நேர்மையான வாழ்வை மேற் கொள்ளக் கூடியவர்கள் என்று நமக்கு நம்பிக்கை ஏற்பட் டால் அவர்களை மன்னித்து வாழச் செய்வதே நமது கடமை யாயுள்ளது. ஆதலால் நீர் திருந்தி உயிர் வாழ உண்மை யிலேயே விருப்பமுடையவராக இருப்பின் நீர் யார்? எங்கி ருந்து எவ்விதம் ஒற்றர் படையில் இரண்டாவது தலைமைப் பதவிக்கு வந்தீர்? நம்பீஸ்வரன் கொல்லப்பட்டதற்கு உண்மையான காரணம் என்ன? ராஜகுருவோடு சேர்ந்து நீர் செய்த குற்றங்கள் யாவை? ராஜகுருவின் மற்ற நட வடிக்கைகள் என்ன? ஆகிய விபரங்களையெல்லாம் ஒன்றும் மறைக்காமல் கூறி விட்டீராயின் நமது கருணையை நீர் எதிர்பார்க்கலாம்! இன்றேல் நீர் ஆயுள்வரை சிறையில் கிடந்தே உயிர் நீக்க நேரிடும்! பேசும்!'' என்றார்.

வேணு, சிறு குழந்தையைப் போலத் தேம்பித் தேம்பி சிறிது நேரம் அழுதான். பிறகு தன் கண்களைத் துடைத் துக்கொண்டே, ''நான் இதுவரை சிறைக்குள்ளிருந்து தண்டனை அனுபவித்தது போதும்! எனக்கு என் பெற் றோர்களும், இரு சகோதரிகளும், ஒரு மனைவியும் மூன்று குழந்தைகளும் உள்ளனர். அவர்கள் வர்க்கலாவில் இருக் கின்றனர். என் தந்தை அர்ச்சகராக இருந்து காலமெல் லாம் உழைத்து உடல் நலம் பாதிக்கப்பட்ட நிலையில் உள் ளார். என் தாயும் வியாதிக்கு ஆட்பட்டவர், என் சகோ தரிகளும் திருமண வயதைத் தாண்டியுள்ளவர்கள். என்னு டைய வருமானத்தைக் கொண்டுதான் அவர்கள் அனை வரும் வாழ வேண்டும். போதிய வருமானம் இல்லாத காரணத்தால், எந்தத் தவறும் செய்து பொருள் தேடும் இழி நிலைக்கு ஆளாகிவிட்டேன். நான் நாட்டை விட்டு விரட்டப்பட்ட மார்த்தாண்ட வர்மனின் துணையாளாக

PDF ISLAM

இருந்தேன், ராஜகுரு அவரிடம் பேசி என்னை இருவருக்கும் தூதுவனுக அமர்த்திக்கொண்டார். என்னை யாரும் சந்தேகிக்காமலிருக்கவும் நான் எல்லா இடங்களுக்கும் சுதந்திரமாக நடமாடவும் ஒற்றர் படையில் எனக்கு உயர்ந்த பதவியளித்தார். இதனுல் எனக்கு இரு தரப்பிலும் வருமானம் கிடைத்து வந்தது'' என்று கூறி நிறுத்தினுன் வேணு.

''உன்னுடைய வேலைகளை விபரமாகச் சொல்!'' என்று உத்திரவிட்டார் மன்னர்.

வேணு தன் கண்களைத் துடைத்துக்கொண்டே ''நாட்டில் ஒற்றர் படையினர் இரு பிரிவாகவுள்ளனர். ஒரு பிரிவினர் ராஜகுரு விசுவாசிகள். ராஜகுரு விசுவாசிகளோடு நான் அவ்வப்போது தொடர்பு கொண்டு, அவர் கொடுக்கும் ஓலைகளை அளிப்பதும், அவர் சொல்லும் செய்திகளை எட்டச் செய்வது, மார்த்தாண்டவர்மனுக்கு ராஜகுருவின் நடவடிக்கைகளை விளக்குவதுமே என் பிரதான வேலை!'' என்றுன்.

''என்ன ஓலைகளைக் கொடுத்தாய்? என்ன செய்திகளைச் சொன்னுய்?'' என்று அதே கண்டிப்பான குரலில் கேட்டார் மன்னர்.

''ஓலைகள் ஒரு சிலருக்குத்தான் கொடுக்கப்பட்டன. அதிலுள்ள பரிபாஷைகள் எனக்குத் தெரியாது. செய்தி அனைத்தும் அநேகமாகத் தன்னை வந்து ரகசியமாக இன்ன இடத்தில், இன்ன நேரத்தில் சந்திக்கும்படியாகவே இருக்கும். சில குறிப்பிட்ட நபர்களைக் கூடவே அழைத்து வரும்படியாகச் சொல்வதாக இருக்கும்!'' என்றுன்.

''அப்படிப்பட்ட ரகசிய சந்திப்புகளின் பேச்சுக்களை ஏதாவது கேட்டிருக்கிறுயா?''

PDF ISLAM

''இல்லை ! மன்னர் பிரானே அதற்கு எனக்குச் சந்தர்ப்பம் அளிப்பதில்லை ஆனால் நம்பீஸ்வரருக்கு அனைத்தும் தெரியும் !

''மார்த்தாண்டவர்மனுக்கு நீ போய்ச் சொன்ன தகவல்கள் என்ன ?''

''எந்த நேரமும் மன்னர் சேரமான் பெருமாள் மாயமாய் மறைந்து விடுவார் ! நீங்கள் வந்து முடிசூட்டிக் கொள்ள தயாராக இருக்கவேண்டும் ! மேலும் அவசியப்பட்டால் திடீரென ஒரு படையோடு வந்து அரண்மனையைக் கைப்பற்ற வேண்டும், அதற்குச் சாதகமான சூழ்நிலை இங்கு சரி செய்து வைக்கப்படும் என்பதாகும்''

''அப்படி மார்த்தாண்டவர்மன் ஏதாவது படை திரட்டுகிறானா?'' என்று மன்னர் கேட்க வேணு சிறிது தயங்கி ஆமாம் மன்னர் பிரனே ! ஒரு சிறு படை தயார் செய்யப் பட்டுள்ளது!'' என்றான்.

''அந்தப் படைகள் எங்குள்ளன ?'' என்று மன்னர் கேட்க ''பட்டாம்பியில்'' என்று வேணு கூறினான்.

''நாம் எந்த நேரமும் மாயமாய் மறைந்து விடுவோம் என்று செய்தி கூறியதாகத் தெரிவித்தாயே அது பற்றி உனக்கு என்ன விபரம் தெரியும் ?''

''மன்னர் பிரானே ! இந்தப் பாவியைக் கிருபைக் கூர்ந்து மன்னியுங்கள் ! உங்கள் பிறந்த நாள் மற்றும் மூடி சூட்டு விழாவுக்கு முன்பே உங்களை கொன்றுவிட சதி செய்யப்பட்டது. காளி. மாரி அவன் சகாக்களைக் கொண்டு உங்களை உயிருடன் பிடித்து மறைக்கவோ அல்லது கொன்று விடவோ ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால் அந்த முயற்சிகள் எப்படியோ வெற்றி பெறவில்லை ; சத்தியமாக இதில் நான் சம்பந்தமில்லை ! அதன் பின் அரபுகள் இந்த

PDF ISLAM

நாட்டுக்கு வந்தவுடன் அந்தத் திட்டங்களில் வேறு மாறுதல்கள் செய்ய வேண்டி வந்து விட்டது!''

''அரபுகளுக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?''

''அரபுகள் கப்பலில் வந்து நங்கூரம் பாய்ச்சி கரையிறங்கிய அன்றுதான் நீங்கள் அரண்மனையில் கொல்லப்பட அல்லது பிடிக்கப்பட வேண்டிய நாளாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது! அன்றிரவு நீங்களும் உங்கள் மெய்ப் பாதுகாவலர்களும் மாறு வேடத்தில் மீனவர்கள்போல் வெளிப்பட்டு, அக்கூட்டத்தில் கலந்துகொண்டு விட்டீர்கள்! நீங்கள் எப்படி எப்போது அரண்மனைக்குத் திரும்பி வந்தீர்கள் என்பதை யாராலும் அறிந்துகொள்ள முடியவில்லை. அதன் பிறகு ஒரு நாள் விடுத்து மறுநாள் விழா நாளன்று, அரபுகளை அவைக்கு அழைத்து நீங்கள் மிகவும் கவுரவப்படுத்தி விட்டீர்கள். அவர்கள் உங்கள்மீது விசுவாசம் கொண்டவர்களாய் மாறிவிட்டார்கள்! ஆதலால் அவர்கள் மீது மக்களுக்கு வெறுப்பேற்படச் செய்ய கிரீடத்தைத் திருடி அவர்களின் கப்பலில் மறைக்கத் திட்டமிடப்பட்டது. அதிலும் தோல்வி ஏற்பட்டுவிட்டது, நான் அதில் சிக்கிக்கொண்டு விட்டேன்.'' என்றான் வேணு.

மன்னர் சிறிது யோசித்துவிட்டு, நம்பீஸ்வரனின் நிலை என்ன? என்று கேட்டார்.

''ராஜகுருவின் அனைத்து சதித் திட்டங்களையும் அறிந்தவர் அவர் ஒருவர்தான்! இயக்கியவரும் அவர்தான்! ஆனால் கடைசி சமயத்தில் அவர் ராஜகுருவை மிரட்டிப் பெருந்தொகைகளை அவ்வப்போது பறிக்க ஆரம்பித்து விட்டார். எந்த சமயத்திலும் தங்களிடம் காட்டிக் கொடுத்துவிடக்கூடும் என்று ராஜகுரு, அவருக்குப் பயப்பட ஆரம்பித்து விட்டார். ராஜகுருவை மிரட்டிப் பெறும் தொகைகளில், எனக்கும் அவர் தாராளமாக கொடுத்தார்!'' என்றான் வேணு.

PDF ISLAM

மன்னர் சேரமான் பெருமாள் சிறிது நேரம் அமைதியாக இருந்துவிட்டு, ''சரி! உன்னை மன்னிப்பது அல்லது உனக்கு சிறிய தண்டனை கொடுப்பது பற்றி யோசிக்கிறோம்! அது நீ இப்போது கடைசியாகச் செய்யும் காரியத்தைப் பொறுத்திருக்கிறது. அதாவது, இன்று பிற்பகலில் ஒற்றர்களின் கூட்டம் இங்கே நடைபெறவிருக்கிறது. நீ மறைவான ஒரு இடத்தில் வைக்கப்படுகிறாய்! அங்கிருந்து கொண்டு, நீ யார் யாரிடத்தில் ராஜகுருவின் ஓலைகளைக் கொடுத்துக் கொண்டிருந்தாயோ அவர்களை அடையாளம் காட்டுகிறாய்! இதில் ஒரு சிறு தவறும் நேர்ந்துவிடக் கூடாது! தெரியுமா?'' என்று கடுமையானக் குரலில் கேட்டார்.

வேணு அழுதவாறு, ''மன்னர் மகாபதியே! என் தாய் தந்தையர் மீது ஆணையாக இனி நான் ராஜ விசுவாசியாக இருந்து உழைப்பேன்'' என்றான்.

மன்னர் அதை அங்கீகரிப்பது போல் தலையை அசைத்துவிட்டு, 'வேணுவின் கடினங்களைக் குறையுங்கள்! அவனுக்கு முழு உணவு அளியுங்கள்!'' என்று கூறிய பின், ''மற்ற இருவரையும் கொண்டு வாருங்கள்!'' என்றார்.

ராஜகுருவின் சீடர்கள் இருவரும் மன்னர் முன் கொண்டு வந்து நிறுத்தப்பட்டபோது அவர்கள் நெடுஞ் சாஷ்டாங்கமாக மன்னரின் கால்களில் விழுந்து எழுந்து கை கால்கள் வெட வெடக்க நின்றனர்.

மன்னர் அவர்களை நோக்கி, ''நீங்கள் ராஜகுருவின் ஒழுக்கக் கேடுகளைப் பற்றி, ஏற்கனவே சொல்லிவிட்டீர்கள்! இப்போது நான் கேட்கும் மற்ற விஷயங்களைப் பற்றியும் ஒளிக்காமல் உண்மையைச் சொல்லப் போகிறீர்கள்! நீங்கள் நம்மிடம் ஏதாவது சிறிய விஷயத்தை மறைத்தார்

PDF ISLAM

தாலும், அதன் மூலம் நமக்கு ஒரு சிறிய துரோகத்தைச் செய்தாலும், ராஜகுரு உங்களுக்கு அளித்துள்ள தண்டனையை நாம் நிறைவேற்றச் செய்து விடுவோம்!'' என்று கூறி, ராஜகுரு அவர்களிடம் கொடுத்து விஷ்ணுபட்டரிடம் அளிக்கச் சொன்ன ஓலையைக் கொடுக்கச் செய்து. இதை உங்களால் புரிந்துகொள்ள முடிகிறதா என்று பாருங்கள் எனக் கூறினார்:

அந்த ஓலையை சேதுபத்திரர் மூலம் அவர்கள் பெற்று, இருவரும் மாறி மாறிப் பார்த்துவிட்டு, ''மகாராஜா உங்களுக்குத் துரோகம் செய்யும் நோக்குடன் நான் இதை அவரிடம் வாங்கவில்லை. சமூகத்தில் சேர்த்துவிட வேண்டும் என்ற எண்ணத்தில்தான் நான் அதைப் பெற்றேன் என்று சத்தியம் செய்கிறேன்'' என்றான் ஓலையை ராஜகுருவிடமிருந்து பெற்ற சீடன்.

''நாம் இப்போது அதைப்பற்றி உங்களிடம் கேட்கவில்லை. அந்த ஓலையில் உள்ள வாசகங்களை உங்களால் புரிந்துகொள்ள முடிகிறதா என்பதுதான் நமது கேள்வி!'' என்றார் மன்னர்.

''இரண்டொரு சொற்களைத் தவிர எங்களால் எதுவும் புரிந்துகொள்ள முடியவில்லை!'' என்றனர் இருவரும்.

மன்னர் பிரான் தம் தலையை அசைத்து அதை ஒப்புக்கொண்டது போல் காட்டிவிட்டு, ''அதன் முதல் வரிக்கு நாம் பொருள் சொல்கிறோம், மற்றவைகளை நீங்கள் புரிய முயற்சி செய்யுங்கள்!'' என்று கூறிவிட்டு, ''இந்த ஓலையைக் கொண்டு வரும் இரண்டு சீடர்களையும் உடனடியாக கொன்று விடு!'' என்பது முதல் உத்திரவு என்றார் மன்னர்.

PDF ISLAM

அதைக் கேட்டவுடன் சீடர்களில் ஒருவன் ''ஐயோ!'' என்று அலறிவிட்டான்; இரண்டாமவன், ''மகா ராஜா அந்தக் குறியின் பொருள் அதுதான் என்பதை நான் அறிவேன். ராஜகுரு சில சமயங்களில் தன் இரு கை விரல்களினால் அந்தக் குறியை நம்பீஸ்வரரிடத்திலும், காளி மாரி ஆகியோரிடத்திலும் காட்டுவார். பிறகு கொலைச் செய்திகள்தான் வெளிவரும்! உங்களைக் கொல்லவும் இந்தக் குறியைத்தான் காட்டினார்'' என்றான்,

புத்திசாலிகள்! மேற்கொண்டு அதில் உங்களுக்கு என்ன புரிகிறது? என்று கேட்டார் மன்னர்.

சீடர்கள் இருவரும் மீண்டும் கவனமாகப் பார்த்து விட்டு. ''பல அடையாளங்கள் விளங்கவில்லை. ஆனால் ராஜ பீடம் என்பது ஒரு பழைய அறையில், பழைய பூஜை சாமான்களுடன் தூசிபடைத்து கிடக்கிறது. இந்த அறை எப்போதும் பூட்டப்பட்டே இருக்கும். இதன் சாவி ராஜ குருவின் திருநீறு பெட்டியில் இருக்கும். அதை எப்போதும் தன்னுடன் வைத்திருப்பார். இந்த அறைக்கு எப்போதா வது ஒரு தடவை ராஜகுரு மட்டும் செல்வார்.

எங்களை வெளியில் நிறுத்தி விட்டு கதவை அடைத்துக் கொள்வார். சிறிது நேரம் கழித்து வெளியில் வருவார்; ராஜபீடம் என்ற சொல்லுக்குப் பக்கத்தில் போடப்பட்டி ருக்கும் குறிகளின் பொருள் எங்களுக்குத் தெரியவில்லை; சொர்க்கவாசல் என்ற சொல்லை ராஜகுரு அடிக்கடி கூறக் கேட்டிருக்கிறோம், அது எது என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை, அவர் கூறி வந்த சந்தர்ப்பங்களை யோசித் துப் பார்க்கும்போது பல சொர்க்கவாசல் ஆஸ்ரமத்தில் உள்ளன என்றே மனதில் படுகிறது: ஒரு சமயம் அது ரகசிய வழிகளைக் குறிப்பதாக இருக்கலாம் என்றே நினைக் கிறோம்.'' என்றான் சீடர்களில் ஒருவரான மூத்தவன்: ராஜகுருவிடம் ஓலையைப் பெற்றவன்.

பா; 17.

PDF ISLAM

அடுத்தவன் மிகவும் அமைதியாக ஆஸ்ரமத்தின் எல்லா அறைகளுக்கும் ரகசிய வழிகள் இருப்பது போல் என் மன தில் படுகிறது, ஒரு சமயம், ராஜகுரு ஒரு அறைக்குள் நுழைந்ததைப் பார்த்தேன். பிறகு சிறிது நேரம் கழித்து வேறொரு அறையிலிருந்து ரகசியமாக வெளிப்பட்டதைக் கண்டேன். ஒருநாள் எங்களுடைய அறையில் நாங்கள் தாளிட்டுக் கொண்டுப் படுத்தோம். நள்ளிரவில் ஏதோ ஆள் அரவம் கேட்டுப் பயந்து கண்களை மூடிக்கொண்டேன் எனினும் அந்த உருவம் ராஜகுருவேதான் என்று என்னால் புரிந்துக்கொள்ள முடிந்தது, அவர் வழக்கமாகப் பூசிக் கொள்ளும் சந்தன எண்ணை கமகமத்தது. மறுநாள் நான் இவனிடம் சொன்னபோது, கனவு கண்டிருப்பேன் என சமாதானம் சொன்னான். நிச்சயமாக அது கனவல்ல என்பது எனக்குத் தெரியும்!'' என்றான்.

''எனக்கும் அது கனவல்ல என்பது தெரியும்; ஒரு சமயம் பூஜை அறையில் சுவாமி தனித்திருந்தார். நாங்கள் வெளியில் காவல் இருந்தோம்! சிறிது நேரத்துக்குப் பின் உள்ளே சாமியும் வேறு யாரோ ஒருவரும் தனித்துப் பேசிக் கொண்டிருக்கும் சப்தம் எங்களுக்குக் கேட்டது. பிறகு அவர் வெளியே வரும்போது தனியாகத்தான் வந்தார்; ஆனால் அறையில் யாரும் இல்லை!'' என்றான் மூத்த சீடன்.

சேதுபத்திரர் பதட்டத்தோடு, ''எந்த பூஜை அறையில்?'' என்று கேட்க, ''ராஜகுரு மவுன விரதம் அனுஷ்டிக்கப் போகிறார் என்று அடைக்கப்பட்டிருக்கிறரே, அந்த பூஜை அறையில்!'' என்றான் மூத்த சீடன்.

''ஐயகோ! குடி முழுகிவிட்டதே!'' என்று தன்னையும் அறியாமல் கூச்சலிட்ட பாதுகாப்பு அமைச்சர் மார்த் தாண்ட பூபதி. ''மகாராஜா! என்னை மன்னியுங்கள்!'' என்று கூறியவாறு வெளியே நின்ற தன் குதிரையை நோக்கி ஓடினார்.

PDF ISLAM

மன்னர் சேரமான் பெருமாள் எவ்வித பதட்டமும் அடையவில்லை. மிகவும் பொறுமையாக, சேது பத்திரரே ஆஸ்ரமத்தின் முழு அமைப்பையும் நமக்கு விளக்கிக் கூற முடியுமா?'' எனக் கேட்க, மூத்த அமைச்சர், தம் பக்கத்தில் இருந்த ஒரு ஓலையையும் எழுத்தாணியையும் எடுத்து, வரை படம் போல கோடுகளையும், புள்ளிகளையும் வைக்கத் தொடங்கினார்.

இரு சீடர்களையும் அங்கேயே உட்காரச் சொல்லிவிட்டு, வரைபட ஓலையையும், அதில் வரையப்பட்ட கோடுகள், புள்ளிகள் ஆகியவை எந்தெந்த இடங்களைக் குறிக்கின்றன என்பதையும் சேதுபத்திரர் சொல்வதை மன்னர் கவனமாகக் கேட்டார். அவர் கூறி முடித்தவுடன், சீடர்களைச் சுட்டிக் காட்டி, ''எந்தெந்த அறைகளிலிருந்து எந்த அறைகளுக்கு ரகசிய வழிகள் இருப்பதாக அவர்கள் சந்தேகிக்கிறார்கள் என்பதைக் கேட்டு அவற்றில் அடையாளமிடுங்கள்!'' என்று உத்திரவிட்டார்;

மன்னர் இட்ட கட்டளையை சேதுபத்திரர் சில விநாடிகளில் நிறைவேற்றிய பின், ''இவர்களையும் போதிய சவுகரியங்களுடன் பாதுகாப்பில் வையுங்கள்'' என்று கூறிவிட்டு சீடர்களை நோக்கி, ''நீங்கள் பயப்பட தேவையில்லை, தைரியமாக இருங்கள்!'' என்று சொல்லியவாறு மன்னர் எழுந்து, தன் இரு கைகளையும் பின்னால் இணைத்துக் கொண்டவாறு மெதுவாக உலாவலானார்.

சீடர்கள் இருவரையும் அப்புறப்படுத்திய பின், ''ஓலையில் உள்ள ரகசியங்கள் பெரும்பாலும் வெளிப்பட்டுவிட்டன! மேற்கொண்டு ஒன்றிரண்டே நமக்குப் புரியாமல் இருக்கின்றன. அவைகளும் விரைவில் புரிந்து விடும்! தாங்கள் முதலில் ராஜபீடத்தைச் சோதனைப் போடுங்கள்; வெளிக் கதவின் பூட்டை வேறு சாவி போட்டுத் திறக்க முடியாவிட்டால், பூட்டை உடைப்பதைப் பற்றி யோசிக்க

PDF ISLAM

வேண்டாம்! அதுபோன்றே ராஜபீடத்தின் உண்மை வெளிப்படாவிட்டால் அதை அக்கக்காகப் பிரிக்கவோ அல்லது உடைக்கவோ தயங்க வேண்டாம்! அதில் அநேக மாக தங்கமோ, அல்லது வேறு விலையுயர்ந்த பொருட் களோ மறைத்து வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது எம் நம்பிக்கை! அப்படி இருந்தால் அவற்றைக் கைப்பற்றி அரசுக் கருவூலகத்தில் தனியாகப் பாதுகாத்து வைக்கச் செய்யுங்கள்! மார்த்தாண்டபூபதியாரிடம் உடனடியாக அவசரப் படையைத் திரட்டி தயார் நிலையில் வைக்கச் செய்யுங்கள். அதில் ஒரு பகுதியினரை, ஒற்றர்படைக் கூட்டத்துக்கு வரும் ஒரு சிலரைக் கைது செய்யும் விதத்தில் தயாராக இருக்கச் செய்துவிட்டு, மற்ற பகுதியினரை எந்த விநாடியும் போருக்கு தயாராக இருக்க உத்திரவிடுங்கள்! பிற்பகல் நடைபெறும் ஒற்றர் படைக் கூட்டத்தை நீங் களே தலைமை வகித்து நடத்துகிறீர்கள்! நாட்டின் நிலை மையை நாசூக்காகத் தெரிவித்து விட்டு படிப்படியாக ராஜகுரு மீது சந்தேகம் எழும்படிச் செய்யுங்கள்! அங்கு வெளிப்படும் உணர்ச்சிகளை கவனித்து, ஒவ்வொரு சாட்சி யாக முன்னால் கொண்டுவந்து நிறுத்தி உண்மையை உறுதி படுத்துங்கள்! இதற்குப் பிறகு. ஒற்றர் கூட்டம் முடிகிற வரையில் நாம் . உங்களையோ மார்த்தா ண்டரையோ சந் திக்க மாட்டோம். பேசமாட்டோம்! நீங்களே அனைத்துக் காரியங்களையும் நமது ஆணைப்படி சுதந்திரமாகச் செயல் படுத்துகிறீர்கள். ஆனால் நாம் அவற்றையெல்லாம் மறை வாக இருந்து கவனித்துக் கொண்டிருக்கிறோம்!'' என்றார் மன்னர் சேரமான் பெருமாள்,

சேதுபத்திரர் மன்னர் கூறிய அனைத்தையும் புரிந்து கொண்டதாகக் கூறி மன்னரை வணங்கி விடைபெற்று வெளியேறினார். அடுத்த நிமிடத்தில் அரசர் சேரமா னுக்கு அவ்வளவு சுறுசுறுப்பு எங்கிருந்து வந்ததோ தெரிய வில்லை. தன் மெய்க் காவலர்கள் பின் தொடர, தனது

PDF ISLAM

தனி அறைக்குள் வேகமாக நுழைந்தார், அரசரின் நோக்கத்தை தெரிந்துகொண்டவர்கள் போல், மெய்க் காவலர்களும் வாசலில் காவலாளியிடம் ஒருவித சைக்கினைச் செய்துவிட்டு, உட் கதவைத் தாளிட்டுக் கொண்டனர். அதன் பொருள் மன்னரும், மெய்ப் பாதுகாவலர்களும் மாறு வேடங்களில் வெளியே செல்கிறுர்கள் என்பதும் யார் வந்து கேட்டாலும் மன்னர் ஓய்வெடுக்கிறுர் என்று சொல்ல வேண்டும் என்பதும் அந்தக் காவலர்களுக்குத் தெரியும்.

திட்டமிட்டப்படி, அன்று பிற்பகல், அரண்மனையிலுள்ள அரசு விவாத மன்றத்தில் ஒற்றர்களின் சந்திப்புக் கூட்டம் நடைபெற்றது. நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் ஒற்றர் படை பிரிவைச் சேர்ந்தவர்கள் வந்திருந்தனர். அப் பிரிவு பாதுகாப்புத் துறை சம்பந்தப்பட்டதால், வழக்கப்படி படைத் தளபதி மார்த்தாண்ட பூபதி அக் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். ஒற்றர் படைக்கு அவர் அதிகாரப்பூர்வமானத் தலைவராக இருந்தாலும், அதை இயக்குவதற்குள்ள அதிகாரம் பாரம்பர்யமாக ராஜகுருமார்களிடையே இருந்து வந்ததால் இத்தகைய நாடு தழுவிய சந்திப்புகளில் ராஜகுருக்கள் தவறுமல் கலந்துகொள்வது வழக்கமாகும். ராஜகுருவின் நேரடியான உத்திரவுகளை அவருக்குக் கீழ் இருக்கும் ஒற்றர் படைத் தலைவர் பெற்று மற்றவர்களுக்கு ஆணையிடுவார். ஆண்டுக்கு ஒருமுறையோ அல்லது இரு முறையோ, அவசியத்தைப் பொறுத்து, ஒற்றர்களின் நாடு தழுவிய சந்திப்புகள் நடைபெறும்.

மன்னர் சேரமான் பெருமாள் பதவி ஏற்றபிறகு இப்போது நடைபெறுவது இரண்டாவது சந்திப்பாகும். மன்னர் பதவி ஏற்ற ஆரம்பத்தில் முதல் சந்திப்பு நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் புதிய மன்னராகச் சேரமான்

PDF ISLAM

பெருமாள் பதவி ஏற்றுள்ளது சொல்லப்பட்டு, அனைவரும் ராஜ விஸ்வாசத்துடன் நடந்துகொள்ள ராஜகுரு ராம நம்பியால் கேட்டுக்கொள்ளப்பட்டது. முக்கிய ஒற்றர் படைத் தலைவர்கள் மட்டும், மன்னருக்கு அறிமுகப் படுத்தப் பட்டனர். அந்த கூட்டமும் தளபதி மார்த்தாண்ட பூபதி தலைமையில்தான் சம்பிரதாயப்படி நடைபெற்றது. மூத்த அமைச்சர் சேதுபத்திரர் மரியாதைக்காக அக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் வழக்கப்படி அன்றும் கலந்து கொண் டார். இப்போதும் கலந்து கொண்டிருந்தார்.

இந்தக் கூட்டத்தில் ராஜகுரு கலந்துகொள்ளாதற்கு காரணம் அவர் மவுன விரதத்தில் ஈடுபட்டுள்ளார் என்று சொல்லப்பட்டிருப்பதாலும், அவர் ஆணையைப் பெற்று தங்களை வழி நடத்தும் நம்பிஆவரர் கொல்லப்பட்டதும், அடுத்துப் பதவி வகித்த வேணுகோபாலன் காணமற்போய் விட்டதும், அதற்குப் பின் பதவி ஏற்ற விஷ்ணுபட்டர் என்ன ஆனார் என்று தெரியாததும் ஒற்றர் படையனருக் குள் பலவிதமான சந்தேகங்களையும், குழப்பங்களையும் உண்டாக்கி இருந்தது, மேலும் அவர்களில் சிலர் முந்திய இரு தினங்களுக்கு முன்பு கோயிலில் நடந்த அர்ச்சகர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களாதலால், ராஜகுருவுக் கும் மன்னருக்கும் ஏதோ கருத்து வேறுபாடுகள் ஏற்பட் டுள்ளன என்பதைப் புரிந்துகொண்டிருந்தனர். அதற்குக் காரணம், அரபு நாட்டிலிருந்து வந்துள்ள வர்த்தகர்களே என்பதையும் முடிவுக்கட்டிக் கொண்டவர்களாகவே இருந் தனர். ஆதலால், வெளிநாட்டிலிருந்து வந்த அரபுகள் ஏதோ சூழ்ச்சிகள் செய்து, மன்னருக்கும், ராஜகுருவுக்கும் கருத்து வேறுபாடுகளை உண்டாக்கியுள்ளதாகச் சிலர் நம் பிக்கைவைத்திருந்தனர்.

கூட்டத்தின் தொடக்கத்தில் பேசிய மார்த்தாண்ட பூபதி, ''நாட்டின் முன்னேற்றத்துக்காக நிர்வாகத்தில் சில

PDF ISLAM

மாற்றங்கள் செய்ய மன்னர்பிரான் செயல்பட்டுவருவதாக வும், அது சம்பந்தமாக மூத்த அமைச்சர் சேது பத்திரர் அவர்கள் விளக்குவார்கள் என்றும் அதற்குட்பட்டு ஒற்றர் படை ராஜவிசுவாசத்தோடு இயங்க வேண்டும் என்றும்'' கேட்டுக்கொண்டார்.

சேதுபத்திரர் தமக்கே உரிய பொறுமையுடன், ஒற்றர் படைப்பிரிவினர், நாட்டின் பாதுகாப்புத் துறையுடன் சம் பந்தப்பட்டதாயினும், ராஜகுருக்களின் ஆணைக்குங் கீழ் இயங்கி வந்ததனால் பல குறைபாடுகளுக்கு இடமளிக்கக் கூடியதாக ஆகிவிட்டது. ஆதலால் அந்த நடைமுறைரத்து செய்யப்பட்டு, இப்போது நேரடியாக அரசாங்க அதிகாரத் தின் கீழ் கொண்டுவரப்படுகிறது'' என்று முன் பேச்சைத் தொடங்கிய போது, கூட்டத்தில் பெரிய சலசலப்பு ஏற்ப் பட்டது. சேதுபத்திரர் மேற் கொண்டு பேச முடியாத வாறு ஒரே இரைச்சல் ஆரம்பமாகியது.

தென் பகுதியைச் சேர்ந்த ஒற்றர் ஒருவர் எழுந்து ஆக் ரோஷத்துடன், ''இதில் ஏதோ சூது இருக்கிறது! ராஜகுரு நாதர் மவுன விரதம் அனுஷ்டிக்கிறார் என்பதை நம்பமுடிய வில்லை. எங்களுக்கு ஆணைகள் பிறப்பிக்கும் எந்தத் தலைவர் களையும் இங்கு காணவில்லை! மன்னர்பிரானும் இங்கு காணப்படவில்லை!'' என்று உரக்கக் கூவினார். அவர் ஒப்புக்கொள்வது போல திடீர் கூச்சல் போட்டார்.

இதைக்கண்டு, தளபதி மார்த்தாண்ட பூபதி எழுந்து ஏதோ சொல்ல முற்பட்டார். ஆனால் மூத்த அமைச்சர் சேதுபத்திரர் அவரைக் கையடக்கி சில நிமிடங்கள் பொறுத்துக் கொள்ளச் சொன்னார்.

சிறிது நேரம் அவர்களைக் கூச்சல் போட விட்டு விட்டு மூத்த அமைச்சர் சேது பத்திரர் அமைதியாக நின்று

PDF ISLAM

கொண்டிருந்தார். கூச்சல் ஓரளவு அடங்கியதும், அவர் சிறிது உரத்த குரலில், "நாட்டின் முதுகெலும்புகளாகத் திகழக்கூடிய ஒற்றர்படையினராகிய நீங்கள் அதாவது உங்களில் சிலர் பொறுப்புடைய அரசாங்கச் சிப்பந்திகளாக நடந்து கொள்ளாததைக் கண்டு வேதனைப் படுகிறேன்: உங்களுக்கு அரசின் எல்லா ரகசியங்களையும் கூறி, உங்களின் அனுமதியை நாங்கள் பெற வேண்டும் என்ற எந்த அவசிய மும் இல்லை. மதிப்புமிக்க நமது மன்னர் பிரான் அவர்கள், ஆட்சி முறை மக்களோடு சேர்ந்து நடைபெற வேண்டும் என்ற பெரு நோக்கத்துடன் தான் உங்களையெல்லாம் இங்கு அழைத்து பேசும்படி ஆணையிட்டார்கள். உங்களில் சிலர் இந்த சந்தர்ப்பத்தைத் தவறாக உபயோகப் படுத்திக் கொள்ள முற்படுகிறீர்கள். உங்களில் உங்கள் கடமைகள் சம்பந்தமாக ஏதாவது விளக்கங்கள் பெற விரும்புவோர் ஒவ்வொருவராக எழுந்து பேசினீர்களானால் முறையாக அவற்றுக்கு விளக்கம் தரப்படும். கூச்சல் போட்டுக் குழப்பம் செய்தீர்களானால் உங்கள் நடவடிக்கை வேறு விதமாக இருக் கும்" என்று கம்பீரமாகக் கூறினார். இவ்விதம் சேதுபத்திரர் பேசியதை அதுவரை யாரும் கேட்டதில்லை,

கூட்டத்தில் உடனே அமைதி நிலவியது முதலில் பேசிய தென் மண்டலத்து ஒற்றர் தலைவர் மட்டும் எழுந்து, "மன் னிக்க வேண்டும் மகாப் பிரபு சேதுபத்திரர் அவர்களே: இதுவரை நீங்கள் எங்களை அழைத்து, இவ்விதம் கூட்டம் கூட்டிப் பேசியதில்லை. ராஜகுருமகான் அவர்கள் மூலமா கவே எங்கள் பணிகள் தொடர்ந்து நடை பெற்று வந்துள் ளன. ஆதலால் தான் குழம்பிப்போய் உள்ளோம். தயவு செய்து எங்கள் தலைவர் ராஜகுருநாதர் அவர்களின் நிலைமை பற்றியும். ஒற்றர் படைத்தலைவரான நம்பீஸ்வரரின் படு கொலைப் பற்றியும், காணமற் போன வேணுகோபாலன்

PDF ISLAM

அவருக்குப் பின் வந்து மாயமாய் மறைந்த விஷ்ணுபட்டர் எங்கும் காணப்படாத இரு சீடர்கள் ஆகியோரைப்பற்றித் தெரிந்துக் கொள்ள விரும்புகிறோம்!'' என்று சிறிது கேலி கலந்த குரலில் கேட்டார். அவர் பேசிக்கொண்டு இருந்த போது, ஒருகாவலர் வந்து சேதுபத்திரர் காதில் ஏதோ ரகசியமாகச் சொல்லிவிட்டு நகர்ந்தார்.

சேதுபத்திரர் மிகவும் அமைதியாக, ''உங்கள் கேள்விகளுக்கு நான் பதில் சொல்லுமுன் உங்களைப்பற்றி நானும் இங்கு கூடியுள்ள மற்ற ஒற்றர்களும் விபரம் தெரிந்து கொள்ள வேண்டும்!'' என்று கூறி, ''உங்கள் பெயர் என்ன, என்று கேட்டார்.

அந்த ஒற்றர் தலைவர் திடீரெனத் தாக்கப்பட்டவர் போல தன்னைச்சுற்றி ஒரு முறை பார்த்துக்கொண்டவராக, மிகவும் தணிந்த குரலில், 'விஸ்வு என்று சொல்லப்படும் விஸ்வநாதன்'' என்றார்.

எவ்வளவு காலமாக தென் மண்டல ஒற்றர் தலைவராக இருக்கிறீர்?''

''ஓராண்டு காலமாக!''

''அதற்கு முன் என்ன செய்து கொண்டிருந்தீர்?''

',ராஜகுருமகான் அவர்களின் காரியஸ்தனாக இருந்தேன்!''

''உமது அதிகாரத்துக்கு உட்பட்ட எல்லையில் உமது கடமையைச் சரியாக செய்து வந்துள்ளீரா?''

''அப்படித்தான் நினைக்கிறேன்! ''

''ராஜகுருவால் ஏற்கனவே இந்நாட்டுக்கு மன்னராக

PDF ISLAM

நியமிக்கப்பட்டு பிறகு மக்களால் விரட்டப்பட்ட மார்த்தாண்டவர்மாவை நீர் அறிவீர் அல்லவா?"

"அறிவேன்"

"அவர் உமது அதிகாரத்துக்குட்பட்ட மண்டலத்தில் இருக்கிறார் அல்லவா?

"ஆமாம்"

"அவர் திடீரென இந்த அரண்மனையைத்தாக்கி, மன்னர் சேரமான் பெருமான் அவர்களைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்ற பலவான்களைக் கொண்ட ஒரு படையைத் தயார் செய்து தாக்குதலுக்கு தயாராக இருக்கிறார் அல்லவா?"

இந்தக் கேள்வியைக் கேட்டவுடன், விஸ்வு பேயறைந்தது போல் ஆகிவிட்டான். அவன் நாக்குழற" எனக்குத் தெரியாது. .!" என்று தட்டுத் தடுமாறிக் கூறினான்.

சேதுபத்திரர் முகத்தைக் கோபமாக வைத்துக் ண்டு, "அப்படியொரு படையைத் திரட்டி தயார் யில் வைக்குமாறு உம்மூலமாக ராஜுக்கு சொல்லி. நீர் மார்த்தாண்ட வர்மனைச் சந்தித்து ஏற்பாடு செய்துள்ளீர் அல்லவா? உங்களுக்கிடையில் செய்திகளைப்பரிமாறிக் கொள்ள வேணுகோபாலன் நியமனம் செய்யப்பட்டானல்லவா?" என்று கேட்ட போது விஸ்வு தன்னைச்சுற்றித் திரு திரு வென்ப்பார்த்துக் கொண்டு, உளறிய வண்ணம், "பொய்! பொய்!" என்றான்.

சேது பத்திரர் அதைப் பொருட் படுத்தாமல், "அரபு வர்த்தகர்கள் இந்த நாட்டுக்கு வந்து அரசமரியாதைப் பெற்றதைக்காரணமாக வைத்து, உன்நாட்டுக் கலவ

ரத்தைத் தொடங்க, ராஜ கிரீடத்தை, நம்பீஸ்வரரும் வேணு கோபாலனும் திருடி அரபுகளின் கப்பலில் வைப்ப தென்றும், அரபுகளைப் பொது மக்கள் எதிர்க்க முனைவது போல், மார்த்தாண்டவர்மன் தன் படையோடு உள்ளே நுழைந்து, மன்னரையும் அரபுகளையும் கொன்று ஆட்சியைத் திடீரெனக் கைப்பற்றுவதென்றும், நாட்டில் இதற்கு எதிர்ப்பு ஏற்படாவண்ணம் ராஜகுரு கவனித்துக் கொள்வ தாகவும் அனுப்பப்பட்ட ரகசிய ஓலையை நீர் அறிவீரல் லவா?'

''எனக்கு... எனக்கு... ஒன்றும் தெரியாது!''

''கிரீடத் திருட்டு தோல்வியுற்றவுடன், மேற் கொண்டு என்ன செய்வது என்று ஆலோசிக்க பெரியகோயிலில் அர்ச்ச கர்கள் கூட்டம் என்ற பெயரில் ரகசியமாகக் கூட்டப் பட்ட கூட்டத்தில் ராஜகுரு சுரங்க வழியாக வந்து கலந்துகொள்ள நீரும் அதில் பங்கு கொண்டீரல்லவா?''

விஸ்வு மிகவும் தடுமாறிய நிலையில், ''அர்ச்சகன் என்ற முறையில் அதில் கலந்து கொண்டேன்'' என்று கூற, ஒற்றர் களில் சிலர் கோபத்தோடு எழுந்து ''துரோகி! துரோகி! இவனைக் கழுவிலேற்ற வேண்டும்!'' என்று கூக்குரலிட்ட னர்.

சேதுபத்திரர் அவர்களை நோக்கிக் கையமர்த்திவிட்டு, ''இவன் மட்டுமல்ல! ராஜகுருவின் சதித்திட்டத்தில் சம்பந் தப்பட்ட வேறு சில ஒற்றர்களும் இந்தக் கூட்டத்தில் உள் ளனர். அவர்கள் தாமாகவே முன் வந்து தங்கள் சம்பந்தப் பட்ட விஷயங்களைச் சொல்லி, ராஜ விஸ்வாசத்தை வெளிப படுத்தினார்களானால், கருணைமிக்க நமது மன்னர்பிரானவர் கள் அவர்களை மன்னிக்க நான் ஏற்பாடு செய்கிறேன் நம்முடைய ரகசியம் இவர்களுக்கு எப்படித் தெரியும் என்று நினைத்து குருட்டு நம்பிக்கையோடு யாரேனும் தப்பித்துக்

PDF ISLAM

கொள்ள நினைத்தார்களானால் நிச்சயமாக அவர்கள் மன்னிக்கப்படமாட்டார்கள்!'' என்று கண்டிப்பான குரலில் கூறினர்.

அந்த அவையில் சிறிது நேரம் மவுனம் நிலை பெற்றது ஒற்றர்கள் தங்களுக்கிடையே யார் யார் இந்தச் சதி த்திட்டத்தில் சம்பந்தப்பட்டவர்கள் என்று தெரிந்துக் கொள்ள ஆர்வமுடையவர்கள் போல் ஒருவரையொருவர் பார்த்த வண்ணம் தலைகளைத்திருப்பித் திருப்பி நோக்கிக் கொண்டிருந்தனர்.

தென்மண்டலத்தைச் சேர்ந்த ஒற்றர்களில் ஒருவர் எழுந்து, ''மகாப்பிரபு சேதுபத்திரர் அவர்கள் சொன்னது முற்றிலும் உண்மை! அந்தச்சதித்திட்டம் விஸ்வனால் எனக்கும் சொல்லப்பட்டது. நான் அதில் சம்பந்தப்படுத்திக் கொள்ள விரும்பவில்லையாயினும் விஸ்வனுக்குக் கீழ்ப்பட்ட என்னால் எதிர்த்துப்பேச தைரியம் இல்லை, கோயில் ரகசியக் கூட்டத்துக்கு நானும் சென்றிருந்தேன். அங்கு நமது அரசர் திடீரெனக் கொல்லப்படுவார், அல்லது யாருக்கும் தெரியா மறைந்து விடுவார் என்று ராஜகுருவால் சொல்லப்பட்டதும் நான் எப்போதும் ராஜவிஸ்வாசியே]'' என்றான்.

இதே வாசகத்தைக் கூறி மேலும் 15 பேர்கள் ஊர்ஜிதப் படுத்தினர். சேதுபத்திரர் அமைதியாக ஒவ்வொருவரையும் பார்த்துக் கொண்டிருந்து அவர்கள் கூறி முடித்தவுடன், ''உங்களில் இவ்விஷயத்தில் இன்னும் சிலருக்குத் தொடர்பு உள்ளது என்பதும் இந்தச்சதித்திட்டமே தெரியாதவர்களும் உள்ளனர் என்பதும் நமக்குத் தெரியும்'' தெரிந்தும் ஒப்புக் கொள்ளாதவர்கள் அனைவரும் இப்போது கைது செய்யப்படுகிறார்கள்'' என்று கூறி, பின்புறமிருந்து தன் விடும் ஒவ்வொரு பெயரையும், அடையாளத்தையும் குறிப்பிட்டுக்கூறக்கூற உள்ளே இருந்த காவற்படையினர்,

PDF ISLAM

அவர்களைப் பிடித்து இழுத்து வெளியே கொண்டு சென்றனர். விஸ்வை மட்டும் பின்புறமாகக் கையைக் கட்டி அழைத்துச் சென்றனர்.

சிறிது நேரம் இந்தக் கைது காரியம் நடைபெற்ற பிறகு, சேதுபத்திரர் எஞ்சியிருந்தோரை நோக்கி, ''இந்த விநாடியிலிருந்து ராஜகுருவின் பொறுப்பை விட்டு ஒற்றர் படை அகற்றப்படுகிறது. மன்னர் பிரான் இந்தப்பிரிவின் அதிகாரம் அனைத்தையும் தளபதியும் பாதுகாப்பு அமைச்சருமான மார்த்தாண்ட பூபதியாரின் நேரடி அதிகாரத்துக்கு உட்படுத்தியிருக்கிறார். அவருடைய ஆணைகளை உங்களுக்கு அறிவிப்போராக சிங்கராயர் பொறுப்பேற்கிறார், மேலும், கோயில்களில் அர்ச்சகர்களாக இருந்து கொண்டு ஒற்றர்களாகச் செயல் பட்டோர் அனைவருடைய உத்தியோகங்களும் இந்த நிமிடத்தோடு ரத்து செய்யப் படுகின்றன'' என்று அறிவித்தார்.

இந்த அறிவிப்பையொட்டி, அர்ச்சகர்களாக இருந்த ஒற்றர்கள் வெளியேற்றப்பட்டு தனி இடத்தில் வைக்கப்பட்டனர் எஞ்சியிருந்த ஒற்றர்கள் அனைவரும் இதை மனப் பூர்வமாக வரவேற்றனர் என்பது அவர்களின் முகமலர்ச்சியிலிருந்து தெரிந்தது. அதோடு அவர்கள் உற்சாகத்தோடு ''வாழ்க? எங்கள் மன்னர்பிரான்! வாழ்க எங்கள் சேதுபத்திர பிரபு! வாழ்க எங்கள் தளபதி மார்த்தாண்டர்!'' என்று கோஷமிட்டனர்.

சேதுபத்திரர் அவர்களைக் கையமர்த்திவிட்டு, ''உங்களில் அரபுகளுடைய நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்து வந்தவர்கள் யார்? அவர்களுடைய நடத்தைகள் பற்றிச் சரியான தகவல்களை கூற முடிந்தவர்கள் சொல்லலாம்!'' என்றார்.

PDF ISLAM

நகரத்தின் பிரதான ஒற்றர் ஒருவர் எழுந்து, ''மகாப் பிரபு! அவர்களைப்பற்றி ராஜகுருவால் எங்களுக்கு சில விஷயங்கள் ஆரம்பத்திலேயே சொல்லப்பட்டன. அவர்கள் நீசஜாதியை சேர்ந்த மந்திரக்காரர்கள் என்றும், மாயமாய் மறைந்து போகக் கூடிய தங்கக் காசுகளையும், முத்துகளையும் நவரத்தினக் கற்களையும் காட்டி, மன்னர் பிரானையும். தங்களையும், தளபதியாரையும் மற்றும் அரசவையில் ஆஜராகியிருந்த பிரமுகர்களையும் வசியப் படுத்தியுள்ளனர் என்றும், அந்த மயக்கம் களைய அவர்களை எப்படியும் குற்றவாளிகளாக்கி, பகிரங்க தண்டனைகளை வழங்கச்செய்ய வேண்டும் என்று எங்களுக்குக் கூறப்பட்டது. மேலும், அவர்களோடு எந்தச் சிறு விவகாரங்கள் ஏற்பட்டாலும் அவர்களைக் கொல்வதில் முந்திக் கொள்ள வேண்டும் என்றும் ஆணையிடப் பட்டது!'' என்றார்,

மற்றொருவர் எழுந்து அவர்கள் நமது பெண்கள் சிலரைக் கற்பழித்து விட்டதாக மக்கள் நம்பும்படிச் செய்ய சம்பவங்களைச் சிருஷ்டிக்க வேண்டும் என்றும், மது அருந்தி விட்டு அவர்கள் நெறி முறைத் தவறி நடந்ததாகச் சில நிகழ்ச்சிகளையும், கோயில் வளாகத்துக்குள் வந்து நமது கடவுள் விக்ரகங்களை அசுத்தப்படுத்தி விட்டதாகச் செய்திகளைப் பரப்ப வேண்டும் என்று எங்களுக்கு யோசனைகள் கூறப்பட்டன என்று கூறினார்.

''முடிவாக என்ன சொல்லப்பட்டது?'' என்று சேதுபத்திரர் கேட்டபோது, ''அவர்கள் ஒருவர் கூட உயிருடன் திரும்பக் கூடாது'' என்று உத்திரவிடப்பட்டுள்ளதாக பிரிதொருவர் சொன்னார்.

''நீங்கள் அவர்களைப் பற்றி என்ன அறிந்துள்ளீர்கள்?'' என்று மார்த்தாண்ட பூபதி கேட்டபோது, முதலில் பேசியவர், ''அவர்களைப்பற்றி எங்களால் ஒரு குற்றமும் கண்டு பிடிக்க முடியவில்லை. அதற்குமாறாக நல்லபிப்ராயம்தான்

PDF ISLAM

ஏற்பட்டுள்ளது. அவர்கள் அதிகாலையில் எழுகிறார்கள். முகம், கை, கால்களைச் சுத்தம் செய்து கொள்கிறார்கள். அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரு தலைவர் பின்னால் அணி வகுக்கிறார்கள். கடல் மணற் பரப்பில் விரிக்கப்பட்ட கம்பளங்களின் மேல் நின்று, குனிந்து, உட்கார்ந்து, பூமியில் நெற்றியை வைத்து, நமது பூமியை முத்தமிடுவது போல், ஏதோ அவர்கள் மொழியில் கூறி உருவமற்ற கடவுளை வணங்குகிறார்கள். இப்படி ஒரு நாளைக்குப் பலமுறைச்செய்கிறார்கள். அவர்கள் பிரிந்து வெவ்வேறு இடங்களுக்குச் சென்றாலும், அந்தந்த இடங்களிலும் நான்கைந்து பேர் சேர்ந்து கொண்டு அவ்விதமே செய்கிறார்கள்! அவர்கள் எல்லோரிடமும் அன்புடனேயே பழகுகிறார்கள். ஜாதி பேதம் எதுவும் பாராட்டுவதில்லை!'' என்றார்.

இரண்டாவதாகப் பேசியவர் எழுந்து. ''அவர்கள் பெண்களைச் சாதாரணமாகக் கூட ஏறிட்டுப் பார்ப்பதில்லை; மது அருந்துவதில்லை! கோயில் வளாகம் பக்கம் நடமாடுவதில்லை; ஆதலால் அவர்களை எந்த வழியிலும் வம்புக்கு இழுக்க முடியவில்லை'' என்றார்.

''ஆயினும் அவர்களின் நடமாட்டத்தில் சந்தேகத்துக்கு இடமான சில செய்திகளும் இருக்கின்றன!'' என்று தொடங்கிய மூன்றாவது நபர், ''ஒற்றர்களின் அர்ச்சகர்களாக உள்ளவர்கள் மட்டும் கோயிலில் ரகசிய கூட்டம் நடத்திய அன்று, அவர்கள் கைகளில் கோழிகளைப் பிடித்துக் கொண்டு கோயில் பக்கம் நடமாடியிருக்கிறார்கள்; ஆனால் திடீரென எங்கேயோ இருளில் மறைந்து மாயமாய்ப் போய் விட்டார்கள். மேலும் குறிப்பிட்ட ஒரு சிலர் அடிக்கடி அரண்மனைப் பக்கம் நடமாடிக் கொண்டிருந்திருக்கிறார்கள்!'' என்றார்.

இதைத் தொடர்ந்து மேலும் சில விசாரணைகளை மேற்கொண்ட பிறகு, தளபதி மார்த்தாண்டர் அவர்களை நோக்கி

PDF ISLAM

''முன்னுல் உங்களுக்கிடப்பட்ட உத்திரவுகளையெல்லாம் மனதிலிருந்து அகற்றிவிட்டு அரபுகளின் நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவதை நீக்கிக் கொள்ளுங்கள்! அதோடு, அவசியப்பட்டால் அவர்களுக்கு உதவியும் செய்யுங்கள், இனி நீங்கள் செய்யவேண்டிய முக்கியமான காரியம், நமது மாட்சிமை தாங்கிய மன்னருக்கு விரோதமாக யார் யார் பேசுகிருர்களோ அவர்களை அடையாளம் தெரிந்து வைத்து கொள்ளுங்கள்! ராஜகுருவுக்கு ஆதரவாக யார் யார் கிளர்ச்சிகளைத் தோற்றுவிக்க முயல்கிருர்களோ அவர்களை உதனடியாக வளைத்துப் பிடித்து சிறைக்கு அனுப்ப காவலர்களைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். இதில் கொஞ்சமும் கால தாமதத்துக்கு இடங்கொடாதீர்கள்!!' என்று ஆணைப் பிறப்பித்தார்.

அதோடு ஒற்றர்களில் சிலரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு நாட்டின் தென் பகுதியில் சிற்சில இடங்களைக் கூறி, அங்கு மார்த்தாண்ட வர்மனின் நடவடிக்கைகளை ஆராய்ந்து உடனுக்குடன் தகவல் அனுப்ப உத்திரவிட்டார்.

இந்த ஒற்றர் கூட்டம் கலைக்கப்பட்டபின், தனிமையாக வேறு இடத்தில் பிரித்து வைக்கப்பட்டிருந்த அர்ச்சகர்களாக இருந்த ஒற்றர்கள் வரவழைக்கப்பட்டனர், அவர்கள் அனைவருடைய முகத்திலும் ஒருவித பீதி நிலவிக்கொண்டிருந்தது. சிலர் என்ன விபரீதம் நேரப் போகிறதோ என அஞ்சி நடுங்கிக்கொண்டிருந்தனர்.

மூத்த அமைச்சர் சேதுபத்திரர் அவர்களை நோக்கி, ''உங்களைக் குற்றவாளிகளாக நாம் பார்க்கவில்லை! உயர்ந்த ஜாதிக்காரர்களாகிய உங்களை ராஜகுரு தனது விசுவாசியாக்கிக் கொண்டாரே தவிர, ராஜ விசுவாசியாகப் பழக்கவில்லை. ஆதலால் உங்கள் அனைவரையும் ஒட்டு மொத்தமாக அரசு வேலையிலிருந்து இப்போது நீக்கப்பட்டுள்ளது. ஏனினும் உங்கள் அர்ச்சகர் வேலையைத் தொடர்ந்து

செய்து அதற்குரிய ஊதியத்தை நீங்கள் பெற்றுக்கொள்வதை நாம் தடுக்கவில்லை, ஆனல் உங்கள் ஒற்றர் வேலை அகற்றப்பட்டதைக் காரணமாகக் கொண்டு, ராஜகுருவுக்கு ஆதரவாக ஏதாவது செய்யப்பட்டாலும் அல்லது யாரிடமாவது, மன்னர் பிரானுக்கு எதிராக ஒரு சிறிய விஷயத்தைப் பேசியதாக அறிந்தாலும் நாம் மன்னிக்க மாட்டோம். கடுமையான தண்டனைகளை வழங்கவும் தயங்க மாட்டோம். உங்களுடைய நடவடிக்கைகள் கூர்ந்து கவனிக்கப்படும் என்பதை நிச்சயமாகத் தெரிந்து வைத்துக்கொள்ளுங்கள்!'' என்று கடுமையான குரலில் கூறினர். அவர்களெல்லாம் அதை ஒப்புக் கொள்வதாகத் தலையை ஆட்டி சம்மதம் தெரிவித்தனர்.

ஒற்றர்களின் இந்தக் கூட்ட நிகழ்ச்சி முடிந்தவுடன், அங்கு திரை மறைவில் இருந்த வேணுவும், ராஜகுருவின் இரு சீடர்களும், அவர்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த இடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு தயாராக நின்ற மன்னரின் காவலன், சேதுபத்திரரையும், மார்த்தாண்ட பூபதியையும் சந்திக்க மன்னர் தமது வரவேற்பறையில் காத்திருப்பதாகக் கூறினன். அதைக் கேட்ட அவர்கள் இருவரும் வேகமாக விரைந்தனர்.

தனது வரவேற்பரையில் காணப்பட்ட சேரமான் பெருமாள் மிகவும் களைப்படைந்தவராகத் தோன்றினர். அவர் மாறு வேடத்தோடு வெளிவர போய்விட்டு வந்திருக்கிறார் என்பதை எளிதில் கண்டு பிடித்துக் கொள்ளும் வண்ணம் அவர் முகத்தில் தடவப்பட்டிருந்த வண்ணங்கள் அரை குறையாகவே கலைக்கப்பட்டிருந்தன. அவருடைய மெய்க்காவலர்கள் இருவரும் கூட அநேகமாக அவ்விதமே

PDF ISLAM

காணப்பட்டனர். ஆயினும் அதைப் பொருட்படுத்தாமல் மன்னர் அமைதியாக தோற்றமளித்தார்.

அவர் மூத்த அமைச்சர் சேதுபத்திரரை நோக்கி ''ராஜ பீடம் விஷயம் என்னவாயிற்று?'' என்று கேட்டார்.

''மன்னவா! அன்புகூர்ந்து என்னை மன்னிக்க வேண்டும்! காரியங்கள் சிறிது தாமதமாகி விட்டன! நாங்கள் அந்தப் பழைய அறையைத் திறந்து உள்ளே செல்வதற்கு முன், யாரோ உள்ளே நுழைந்துருக்கிறுர்கள். மன்னர் பிரான் நினைத்திருந்தபடியே, அந்தப் பழைய ராஜபீடத்தில் ஏதோ பெருமளவு தங்கமும், விலையுயர்ந்த நவரத்னங்களும் இருக்கவே செய்திருக்கின்றன. அவற்றை உள்ளே நுழைந்த நபர் அவசர அவசரமாக அள்ளிச் சென்றிருக்கிறுர். சில தங்கக் காசுகளும் கீழே ரத்தினங்களும் சிதறி சிதறிவிட்டதைக் கூட அந்த நபரால் எடுக்க அவகாசம் போதவில்லை போலும் இதோ அவைகள்!'' என்று கூறி தன் மடியில் மடித்து வைத்திருந்த அவற்றை எடுத்துத் திறந்து மன்னர் முன் வைத்தார் சேது பத்திரர்.

மன்னர் சேரமான் பெருமாள் அதன் மீது எந்த ஆர்வமும் செலுத்தி கவனிக்காமல், ''பூட்டிக் கிடந்த அந்த அறையை யார் திறந்தார்கள் என்று விசாரித்தீர்களா? வேறு ஏதாவது துப்புக் கிடைத்ததா?'' என்று கேட்க ''யாரும் திறக்கவில்லை என்றும் அந்தப்பக்கமே யாரும்நடமாடவில்லை என்றும் காவலர்கள் கூறினுர்கள். ஆனுல் உள்ளே யாரோ நடமாடும் சப்தம் போலக் கேட்டதாகவும், பிறகு அது நின்று விட்டதாகவும், ஆதலால் எலிகளின் ஆட்ட ஓட்டமாக இருக்கும் என்று தாங்கள் நினைத்துக் கொண்டதாகவும் காவலர்கள் கூறினர்'' என்றுர் மூத்த அமைச்சர்.

அதைக் கேட்டும் மன்னர் முகத்தில் எந்தவித உணர்ச்சியும் வெளிப்படவுமில்லை. அவர் சாதாரணமாகத் தலையை

PDF ISLAM

அசைத்துக் கேட்டு விட்டு, மார்த்தாண்ட பூபதியை நோக்கி நீங்கள் திடீரென அவசரமாக ஓடினீர்களே! அது என்ன விஷயம்?'' என்று கேட்டார்.

மன்னர் பிரானே! கோயிலில் நடந்த அர்ச்சகர்களின் ரகசியக் கூட்டத்தில் திடீரென ராஜகுரு காணப்பட்டார் என்ற செய்தியைக் கேட்டவுடன் அவர் எப்படி அங்கு வந்தார் என்ற ஐயம் எனக்குத் தோன்றியது. ஏனெனில் அவர் வெளி நுழைவு வாயில் வழியாக வரவில்லை என்பது எனக்கு நிச்சயம் தெரியும், அவ்விதமே அவர் வெளி வாயில் வழியாகவும் வெளியேறவில்லை. ஆதலால் அவர் மடாலயத்துக்கும் கோயிலுக்குமிடையில் ஏதோ ரகசிய பாதை உள்ளது என்று என் மனதில் திடீரெனப் பட்டது. அது தான் ஒரு சமயம் சொர்க்க வாசலாக இருக்குமோ என சந்தேகித்தேன். ஆதலால் அவ்வழியாக ராஜகுரு தப்பித்து விடாமல் இருக்க அங்கு பலத்த காவலர்களை ஏற்பாடு செய்தேன். அதோடு அந்த ரகசிய வழியைக் கண்டு பிடிக்க சிலரை ஏற்பாடு செய்தேன். அதுபோன்றே ராஜகுருவின் பழைய பூஜை அறைக்கும், யாரும் செல்லாதவாறு காவல் போட்டுள்ளேன். ராஜகுரு தவம் இருக்கும் அறைக்கு வெளியே நின்றும் சிறிது கவனித்தேன். அவர் அங்கே உள்ளே இருப்பதற்கு அடையாளமாக சில சப்தங்களைக் கேட்க முடிந்தது'' என்றார் மார்த்தாண்ட பூபதி.

மன்னர் சேரமான் பெருமாள் அதையும் மிகச்சாதாரணமாகவே கேட்டார். முகத்தில் எந்தவித வியப்போ, பரபரப்போ காணப்படவில்லை. மிகச்சாதாரணமாக ஒற்றர் கூட்டத்தில் நடந்த விபரங்களைச் சொல்லச் சொல்லிக் கேட்டார். அதன் பின், ''துக்க மகிழ்ச்சி உங்களால் முடிந்த காரியங்களை நீங்கள் இயன்ற அளவுக்குச் சரியாக செய்துள்ளீர்கள்! இனி நாம் செய்யும் காரியங்கள் ஒவ்வொன்றும் மிகவும் சுறுசுறுப்போடும், தாமதமின்றியும்

PDF ISLAM

செய்ய வேண்டும். நாளை பொழுது விடிவதற்குள் அநேக மாக எல்லா காரியங்களும் ஒரு முடிவுக்குள் கொண்டு வந்துவிட வேண்டும்! மேலும் நீங்கள் இன்னும் பகலுணவு கூட்கொள்ளவில்லை என்பதை அறிகிறேன்; நாமும் அப் படியே! ஆதலால் நாம் மீண்டும் சூரிய அஸ்தமனத்துக்கு சிறிது முன்பு சந்திக்கிறோம். அதற்கிடையில், தென் பகுதி யில், மார்த்தாண்டவர்மன் திரட்டி வரும், ரகசியபட்டா ளத்தை அது கூடாரத்தை விட்டு வெளியேறு முன் தாக்கிச் சிதறடிக்க ஒரு படையை அனுப்பி விடுங்கள்! படை நடத்திச் செல்வோர் மிகவும் சிறந்த திறமை உடையவர் களாக இருக்கட்டும்! குறிப்பிட்ட இடங்களைக் காட்ட வேணுவை பயன்படுத்திக் கொள்ளச் செய்யுங்கள்! முடிந் தால் மார்த்தாண்டவர்மனைக் கைது செய்வது நமது சிரமத்தை மிகவும் குறைக்கும். அதோடு நமது அதிரடிப் படைகளுக்கு அரபு வீரர்களைப் பயிற்சிக் கொடுக்க நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அவர்களில் ஐவர் பயிற்சிக் கொடுத்துக் கொண்டே நமது படையுடன் செல்வது மிக பயனுள்ளதாக இருக்கும் என்று கருதுகிறேன்!'' என்று மன்னர் கூறி முடித்தார்.

''தங்கள் ஆணைக்கு அப்படியே கீழ்ப்படிகிறேன் மன்னவா! ஆனால் தென்பகுதிக்கு வேறு யாரையும் அனுப்பு வதை விட நானே நேரில் படை நடத்திச் சென்று காரி யத்தை முடித்து விட்டு வருவது மிகவும் பலன்தரத்தக்க தாக இருக்கும் என்று என் மனதில் படுகிறது. அதுவரை நான் இங்கு செய்யவேண்டிய காரியங்களை சிங்கராயர் மிகவும் திறமையுடன் செய்வார் என்று நம்புகிறேன்'' என்றார் தளபதி.

மன்னர் சிறிது யோசித்து விட்டு, நீங்கள் எல்லைநகரை விட்டு இப்போது நகர வேண்டாம்; நீங்கள் நம்பிக்கை வைத்தால் சிங்கராயரைத் தலைவராக்கி, அவர் தலைமையில்

PDF ISLAM

படையை அனுப்புங்கள் அந்தப் படைக்கு உதவவும் பயிற்சி தரவும், திறமை மிக்க ஐந்து அராபிய வீரர்களை ஏற்பாடு செய்துள்ளேன், நீங்கள் மீண்டும் நம்மை வந்து சந்திக்கும் முன் அவர்கள் உங்களை வந்து சந்திப்பார்கள்'' என்றார் மன்னர் பிரான்.

மன்னர் பிரானின் இந்த ஆணையை ஏற்று வணங்கி மரியாதைச் செய்து விட்டு சேதுபத்திரரும், மார்த்தாண்டரும் வெளியேறியவுடன், தன் மெய்ப்பாது காவலர்களில் ஒருவனாகிய வேலப்பனை நோக்கி, ''நீர் போய் வேணுவையும் காளியையும் அழைத்து வாரும்! அதற்கிடையில் வீரப்பன் எனக்கு உணவு பரிமாறட்டும் என்றார்.

மன்னர் உணவருந்திமுடித்த சிறிது நேரத்தில் காளியும் வேணுவும் அவர் முன் கொண்டு வந்து நிறுத்தப் பட்டார்கள்.

மன்னர்பிரான் அவர்களை நோக்கி, ''நீங்கள் இருவரும் செய்த நாட்டுத் துரோகத்துக்கு உடனடியாகக் கழுவில் ஏற்றப்படக் கூடியவர்களாவீர்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள்! ஆனால், நீங்கள் தவறாக வழி நடத்தப்பட்டுள்ளீர்கள் என்பதால், உங்கள் தண்டனை தாமதப்படுத்தி வைக்கப்பட்டு, நாட்டு விஸ்வாசத்தை வெளிப்படுத்தி, நீங்கள் மன்னிப்புப்பெற உங்களுக்கு இப்போது ஒரு சந்தர்ப்பம் கொடுக்கப்படுகிறது இதை நம்பிக்கையோடு நிறைவேற்றினீர்களானால் இந்த அரசிடமிருந்து நீங்கள் கண்ணியமும் பெறுவீர்கள். அந்த சந்தர்ப்பத்தை நீங்கள் பெற்று செயலாற்ற தயாராக இருக்கிறீர்களா? அல்லது...'' என்று மன்னர் கூறிக் கொண்டிருந்தபோது இருவரும் திடீரெனக் காலில் விழுந்து, ''எங்கள் எஜமானரே! நாங்கள் புரிந்துள்ள பாபங்களுக்குக் கழுவாய்த் தேடிக்கொள்ள வாய்ப்

PDF ISLAM

பணியுங்கள்! ஆண்டவன் மேல் ஆணையாக எங்கள் விஸ்வாசத்தை வெளிப்படுத்திக் காட்டுகிறோம்'' என்றனர்.

மன்னர் சில விநாடிகள் அவர்களையே உற்று நோக்கியவாறு இருந்து விட்டு, ''உங்களை நம்புகிறேன்! நீங்கள் இன்று மாலை, தளபதி மார்த்தாண்டபூபதியின் படையோடு தென்பகுதிக்குச் செல்கிறீர்கள். மார்த்தாண்டவர்மன் எங்கெங்கு தனது ரகசிய படையினரை உருவாக்கிக் கொண்டுள்ளான் என்பதை, வேணு இடம் காட்டுகிறான். அங்கெல்லாம் தளபதி காரியங்களைக் கவனித்துக் கொள்கிறார். மார்த்தாண்டவர்மன் தங்கியிருக்கும் ரகசிய இடத்தையும் காட்டுகிறான். அவனை உயிருடன் பிடிக்கவேண்டிய வேலை காளியுடையது! அதே சமயம் வேணுவின் நடவடிக்கையில் ஏதாவது சந்தேகம் தோன்றினால் அவனை அதே இடத்தில் கொன்று விடவும் காளிக்கு உரிமையளிக்கப் படுகிறது. மார்த்தாண்டனை உயிருடன் பிடிக்க முடியாவிட்டால், அவன் பிணமாவதைப்பற்றியும் கவலைப்படதேவையில்லை! நான் சொல்வது உங்களுக்குப் புரிகிறதா?' என்று மன்னர் கேட்க, இருவரும், ''மகா பிரபு! எங்களை முற்றிலுமாக நம்புங்கள்!'' என்று உணர்ச்சிப் பொங்கக் கூறினார்கள்.

மன்னர் தலையை அசைக்க வேலப்பன், அவர்களின் விலங்குகளை அகற்றி மீண்டும் அழைத்துச் சென்றான்.

திட்டமிட்டபடி மாலை இருட்டும் நேரத்துக்கு சில நாழிகைக்கு முன்பு. மன்னர் பிரானின் தனி அறையில்மூத்த அமைச்சர் சேதுபத்திரரும், தளபதி மார்த்தாண்ட பூபதியும் சந்தித்தனர், நடந்துள்ள காரியங்களை மார்த்தாண்டர் விளக்கினார்.

''மன்னர் பிரான் ஆணைப்படி, சிங்கராயர் தலைமையில் திறமைமிக்க ஒருபடையினர் மார்த்தாண்டவர்மனின்

PDF ISLAM

ரகசிய ராணுவ பயிற்சி முகாம்களை நோக்கி அனுப்பிவைக் கப்பட்டுள்ளனர். மன்னர்பிரான் கூறியபடி எங்கிருந்தோ ஐந்து அரேபிய வீரர்களும் வந்து சேர்ந்து கொண்டவர். அது போன்றே காளியும் வேணுவும் கொண்டு வந்து எங்களி டம்ஒப்படைக்கப்பட்டு, மன்னர் பிரானின் ஆணைப்படிசிங்க ராயருக்கு விளக்கம் சொல்லி அவர்களையும் கூட அனுப்பி யுள்ளோம்'' என்றார் மார்த்தாண்ட பூபதி.

''ஒற்றர் படையினரில் கைது செய்யப்பட்ட சந்தேகத் துக்குரியோரெல்லாம், சிறைக்கு அனுப்பப்பட்டு பாதுகாப் பாக வைக்கப்பட்டுள்ளனர். அர்ச்சகர்ளாக இருந்து விடு தலை செய்யப்பட்டவர்களின் நடவடிக்கைகளை கவனிக்க ஆங்காங்கும் ஆட்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளனர், அரபுகளின் நடவடிக்கைகள் தான் எனக்குப் புரியாமல் இருக்கிறது. அவர்கள் சிறு சிறு பிரிவினர்களாக வியாபாரத் துக்காக அக்கம் பக்கத்து ஊர்களுக்குச் சென்றுள்ளார்கள் என்று முதலில் அறிந்திருந்தேன். ஆனால் அவர்கள் பெரும் பாலும் இப்போது தலைநகரிலேயே காணப்படுகின்றனர். மீனவர்களில் வாலிபர்களாகவும், திடமானவர்களாகவும் உள்ளசிலர்க்கு அவர்கள் இரவு நேரங்களில் ரகசியமாகப் பலவிதமான பயிற்சிகளை அளிக்கின்றனராம்! ஆயுதங் களின்றி தங்கள் கைகளாலும், கால்களாலும் எதிரிகளை அடித்து வீழ்த்துவது, சில நரம்புகளில் தாக்கி மனிதர்களைச் செயலிலக்கச் செய்வது, ஆயுதத்தோடு வருபவர்களை மடக்கி அந்த ஆயுதங்களைக் கொண்டே அவர்களைப் படு காயப்படுத்திக் கொள்ளச் செய்வது பிறை போன்ற சிறிய வாளை வைத்துக் கொண்டு எதிரிகளை வெட்டி காயப்படுத்து வது போன்ற' நம் நாட்டில் இல்லாத பயிற்சி முறைகளை அளிக்கின்றனராம்! ஆனால் பகல் நேரங்களில் பரம சாதுக் கள் போல் நடந்துகொண்டு வருகிறார்களாம்! இது பற்றி மார்த்தாண்ட பூபதி எந்த அளவுக்குத் தெரிந்து வைத்திருக் கிறார் என்று எனக்குத் தெரியவில்லை. என்னைப் பொறுத்து,

PDF ISLAM

அவர்களைப் பற்றி ஏனோ சந்தேகம் ஏற்படுகிறது!'' என்றார் சேது பத்திரர்.

இதை சேது பத்திரர் சொல்லும்போது மார்த்தாண்ட பூபதி மன்னருடைய முகத்தையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார். அதில் எந்த வியப்போ. சந்தேக குறியோ தென்படவில்லை. அதற்கு மாறாக இலேசான புன் சிரிப்பு வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. மார்த்தாண்டர் சிறிது தயங்கியவராக, ''மூத்த அமைச்சரவர்கள் சொல் முற்றிலும் உண்மை! மேலும் சில உண்மைகளை மன்னர் சமுகத்திற்குக் கொண்டுவர எனக்கு மன சங்கடமாக இருக்கிறது!'' என்றார்.

''உங்கள் மன்னரிடம் நீங்கள் எதையும் மறைக்க வேண்டாம்!'' என்றார் அரசர்.

''மூத்த அமைச்சர் குறிப்பிட்ட அந்த ரகசியப் பயிற்சியில், மெய்ப் பாதுகாவலர்கள் இருவரும் கூட கலந்துக் கொண்டிருந்ததாக எனக்குத் தகவல் கிடைத்துள்ளது!'' என்றார் மார்த்தாண்டர்.

மன்னர் சேரமான் பெருமாள் அதையும் மிகச் சர்வ சாதாரணமாகக் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு, ''இதை விட அதிகமாக நீங்கள் இன்னொரு விஷயத்தைப் பற்றிக் கேள்விகள் படவில்லையா?'' என்றார்,

சேதுபத்திரரும், மார்த்தாண்டரும் ஒருவரையொரு வர் பார்த்துக் கொண்டனர். பிறகு சேதுபத்திரர், ''மன்னிக்கவேண்டும மன்னர் பிரானே!'' மீனவர்களில் ஒரு சாரார் தங்கள் பரம்பரை குல தெய்வங்களை வழிபடு

PDF ISLAM

வதை நிறுத்திவிட்டனர். கடலுக்குச் செல்வதற்குமுன்னர் தாங்கள் வழக்கமாகச் செய்யும், பூஜை அனுஷ்டானங்களை அவர்கள் செய்வதில்லை. சிலர் தங்கள் வீடுகளில் இருந்த தெய்வங்கள் பலவற்றைக் கடலில் கொண்டுபோய் விட்டதாகவும், சிலர் பூமிக்குள் புதைத்துவிட்டதாகவும், எனக்குத் தகவல்கள் கிட்டின ! இது சம்பந்தமாக அவர் களிடையே சர்ச்சைகள் பல நடந்து வருவதாகவும் தெரிய வந்துள்ளன'' என்ருர்.

''அப்படியானுல், அவர்களை அரபுகள் தங்கள் மதத் தில் சேர்த்து, தங்களைப் போல கடவுளை வணங்கக் கற் றுக் கொடுத்துள்ளார்களா?'' என கேட்டார்.

''இல்லை மன்னர் பிரானே ! நான் தீர விசாரித் தறிந்தவரையிலும், அரபுகள் யாரும், யாரையும் தங்கள் மதத்தில் சேரும்படியும், தங்கள் வணக்க முறைகளை கடை பிடிக்கவும் ஒரு வார்த்தைகூடச் சொல்லியதாகத் தெரிய வில்லை. மேலும் மீனவர்களில் யாரையும் தங்கள் தொழுகைகளில் சேர்ந்துக் கொண்டு தொழுவதாக ஒரு நிகழ்ச்சியும் நடந்ததில்லை. நான் மக்களின்மன மாறு தல்களைத்தான் சொல்ல வந்தேன். மேலும் அவர்களிடம் ஏற்பட்ட மற்றொரு பெரிய மாற்றம் அவர்களில் பெரும் பாலோர் மதுவருந்துவதை நிறுத்தி விட்டனர், அதனுல் அவர்கள் தங்களுக்கிடையில் அடிக்கடி சண்டை சச்சரவு கள் செய்து கொள்வதும் இல்லாமல் போய்விட்டது. இதனுல் பெண்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். தங்கள் சமூகத்தில் இந்த மாறுதல்கள் ஏற்பட அரபுகள் தான் காரணம் என நம்புகிருர்கள். அரபுகளை ஆண்டவன் அவதாரம்போல நினைக்கிருர்கள், இந்த நிலையும் அவர் களுக்கு யுத்த முறை பயிற்சியளிப்பது...'' என்று சேது பத்திரர் அச்சப்பாட்டுடன் சொன்னுர்,

PDF ISLAM

மன்னர் சேரமான் பெருமாள் எந்தவித மாறுபட்ட உணர்வும் தன் முகத்தில் காட்டாமல், மார்த்தாண்டரை, நோக்கி அந்தப் பயிற்சிகளை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?'' என்றார்.

''முழுவதுமாகப் பார்த்ததில்லை! ஒருமுறைதான் ரகசியமாகச் சென்றுகவனித்தேன். அப்போதுதான்... ''என்று சொல்லிக்கொண்டு வரும்போது நமது மெய்க் காவலர்களான வேலப்பனையும் வீரப்பனையும் போன்ற மீனவர்களைச் சந்தித்திருக்கிறீர்கள்! நல்ல வேளையாக உங்கள் அரசரைப் போன்ற ஒரு மீனவரை நீங்கள் சந்திக்காமல் போனீர்கள்! சரி அது பற்றி நாம் கவனித்துக் கொள்கிறோம்! அந்தப் பயிற்சித் தான் சிங்கராயருக்கும் அவர்கள் செல்லும் படையினருக்கும், அவர்களோடு போகும் அரபியர்கள் அளிக்கப் போகிறார்கள். அது நமது வீரர்களுக்கு நல்லது தானே!'' என்று கேட்டார் அரசர்.

''வெளிநாட்டு யுத்தப்பயிற்சி முறைகள் நம் நாட்டு வீரர்களுக்குக் கிடைப்பது நமது இலாபந்தான்! ஆனால் மீனவர்களுக்கு...'' என்று சேதுபத்திரர் கூற தயங்கிய போது'' ,அவர்களும் நமது விஸ்வாசமுள்ளவர்களே! இன்னும் சிறிது நேரத்தில் அவர்கள் ஒவ்வொரு அரபி தலைவர்களுடன் ஐந்து பெரும் படகுகளில், தென் பகுதியில், மார்த்தாண்டவர்மனின் பிடிப்பிலுள்ள கரையோரங்களில் இறங்கி ராஜதுரோகிகள் யாரும் கடல் வழியாகத் தப்பித்துச் செல்லாவண்ணம் நடவடிக்கைகளில் இறங்குகிறார்கள், அவர்கள் பல தினங்கள் நன்றாகப் பயிற்சி பெற்றவர்கள், அரபு விருந்தினர்கள் திருமபிய பிறகு நாம் நிலைநாட்டவிருக்கும் கடற்படைக்கு அவர்கள் ஒவ்வொருதரும் தளபதிகளாக அமைவார்கள்'' என்றார் சேரமான் பெருமாள்.

PDF ISLAM

அரசின் இந்தப் பேச்சிலிருந்து இவ்விஷயத்தில் தங்களை விட அதிகமாக மன்னர் தெரிந்துள்ளார் என்பதை மூத்த அமைச்சரும் தளபதியும் அறிந்து மிகவும் ஆச்சரியப் பட்டனர்.

''அவர்களின் சமய நம்பிக்கை..'' என்று சேதுபத்திரர் மெதுவாகப் பேச்சைத் தொடங்கியபோது ''அது அவரவர்களின் சுதந்திரத்தைப் பொறுத்தது! நமது ராஜகுருவின் சமயம் வேறு! தங்களுடையவும் என்னுடையவும் சமயம் வேறு! அது போன்று மீனவர்களின் சமயம் வேறு! விக்ரஹம் என்ற பொதுவான பெயவிரத் தவிர, நமது குல தெய்வங்களாக நாம் ஏற்றுக் கொண்டிருக்கும் நபர்களும் வேறு! யாருக்கு எந்தெந்த சமயங்கள் சரியாகத் தென்படுகின்றனவோ அவற்றைந் தேர்ந்தெடுத்துக் கொள்வதில் நமது ஆட்சியில் பொதுவாகவே சுதந்திரம் இருந்து வருகிறது! அதில் தலையிடுவதோ யாரையும் நிர்பந்தப் படுத்துவதோ மனிதாபிமானம் ஆகாது! ஆதலால் அதை ஏன் பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டும்?'' என்று கேட்டார் மன்னர்.

மன்னர்பிரானே! தங்களுக்கு ஆண்டவன் ஆட்சினையும் கொடுத்துள்ளான்! ஞாமத்தையுதி அறிவித்துள்ளான்! தங்களுடைய வாயிலிருந்து வெளிப்படும் ஒவ்வொரு சொல்லும் தெளிந்த ஞானமுடையவையாகும். நாங்கள் அதற்கு அடி பணிகிறோம்? ஆனால் அரபுகள் அன்னியர்களல்லவா? அவர்களுடையவழி முறைகளை நம் மக்கள் ஏற்க முனைவது காணும்போது, மக்கள் நம்மைத் தவறாக எண்ண இடமேற்பட்டு விடுமே என்றுதான் நாங்கள் கவலைப்படுகிறோமே ஒழிய வேறில்லை?', என்றார் சேதுபத்திரர்.

PDF ISLAM

''எந்த மக்கள் நம்மைத் தவறாக நினைப்பார்கள் என்று நினைக்கிறீர்கள்?'' என்று சேரமான் பெருமாள் கேட்க, சேதுபத்திரர் அந்தக் கேள்வியின் பொருளைப் புரிந்து கொண்டவரைப் போல்' ''மீனவர்களும் நமது மக்கள்தான் எனினும் அர்ச்சகர்கள் நமக்கு எதிராக மக்களை தூண்ட இதுவும் ஒரு வாய்ப்பாக அமைந்துவிடுமே என்பதுதான் என் அச்சமெல்லாம்!'' என்றார்.

''நாம் எந்தத் தவறும் செய்யவில்லை! யாரையும் தவறு செய்யத் தூண்டவோ அல்லது அனுமதிக்கவோ வில்லை. அரபுகளும் எந்தக் குற்றமும் புரிந்ததாகத் தெரிய வில்லை. ஆதலால் நாட்டிலும் நமது மக்களிலும் ஏற்படும் மாறுதல்கள் ஆண்டவன் சித்தப்படியே நடக்கின்றன என்று நாம் நம்புகிறோம். அரபுகள் நம் நாட்டுக்கு வருகை தந்ததும் அவன் நாட்டம்தான்! அவ்விதம் வந்திரா விட்டால், ராஜகுருவும் அவர் சகாக்களும் தான் 'இந்த நாட்டை ஆண்டு கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மை வெளிப்படாமலேயே போயிருக்கும். மேலும் அரபுகளின் உரிய நேர உதவிகள் கிடைத்திராவிட்டால் நாமும் எப் போதோ மாயமாய் மறைந்து விட்ட கதைக்கு ஆளாகி யிருப்போம்! இன்றைய சூழ்நிலையில் அரபுகளை எவ்வித மெல்லாம் பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என்பது நமது சிந்தனையாக இருக்க வேண்டுமே தவிர, அவர்களைப் பற்றி வேறுவிதமாகக் கற்பனை எதுவும் நாம் மேற் கொள்ள வேண்டியதில்லை நமது இன்றைய இரவின் முக்கியம் ''சொர்க்கவாசல்'' ரகசியம் தான்! அது கண்டு பிடிக்கப் பட வேண்டும் அல்லது சந்தேகத்துக் குரிய வாசல்களை யெல்லாம் மூடியாகவேண்டும்!'' என்றார் மன்னர்.

விஷ்ணு பட்டரை வற்புறுத்தி, விசாரணை மேற்கொண் டால்...'' என்று கேள்வியாகத் தன் பேச்சை வெளியிட் டார் மார்த்தாண்டர்.

PDF ISLAM

மன்னர் பிரான் தலையை அசைத்து அதை மறுத்து, ''அந்த நபர் ராஜகுருவின் முழு விசுவாசியாவார். நம்மை ஏமாற்றிவிடக் கூடும்! ஆதலால் இவ்விஷயத்தில் முஸ்லிம் பின் அத்ஹமுடைய யோசனை சரியானது போல் நம் மன தில் படுகிறது'' எனினும் உங்கள் கருத்துக்களும் நமக்கு அவசியமாகிறது என்றார் அரசர். இருவரும், மேற்கொண்டு மன்னர் சொல்லப் போவதைக் கேட்டனர்.

''அரபுகளின் நவீன யுத்தப் பயிற்சியை மீனவர் களுக்கு அளிக்க நாம் தான் ஏற்பாடு செய்தோம்! நமது படையினருக்கும் அதைப் படிப்படியாக விஸ்தரிக்கவும் திட்டமிட்டுள்ளோம்! நாமும் முறையான பயிற்சிகளைப் பெற்றுள்ளோம். அதோடு அரபுகள் அனைவரையும் வியா பார நோக்கத்தை ஒத்திப் போடச் செய்துவிட்டு. நமது காவலர்களாகப் பணியாற்றச் செய்துள்ளோம். அதன் காரணமாகவே, நம்மைக் கொல்லச் செய்யப்பட்ட மூன்று முயற்சிகளிலிருந்து நாம் தப்பிக்க வாய்ப்புக் கிடைத்தது. இந்தக் கொலை முயற்சிகளின் விபரத்தை நாம் ரகசியமாக மறைத்து விட்டோம். காரணம் புரியவில்லை எந்த பரபரப் பும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதே ஆகும். மேலும், கறுப்பு அரபியான அத்ஹமும், அவருடைய நான்கு சிகப்பு அரபி சகாக்களும் சிறந்த அறிவாளிகளாவர் அந்த அறிவை நாம் அவ்வப்போது பயன் படுத்திக் கொள்வதில் தவறில்லை. சொாக்க வாசலைக் கண்டு பிடிக்க ஏற்பட்டுள்ள சிரமத்தைப் பற்றி அவர்களிடம் விவாதித்த போது, அவர்கள் ஒரு தந்திரம் கூறினர்கள்'' என்று மன்னர் தன் பேச்சை நிறுத்தினர்.

அமைச்சர்கள் இருவரும் மேற்கொண்டு அரசர் கூறப் போவதை அறிய ஆவலுள்ளவர்களாய் காணப்பட்டனர்.

PDF ISLAM

''ரஜகுரு எந்த சீடரின் கையில் ரகசிய ஓலையைக் கொடுத்தாரோ அதே சீடனிடம் அந்த ஓலையைக் கொடுத்து விஷ்ணுபட்டரிடம் சேர்த்துவிட செய்வது அத்துடன் விஷ்ணுபட்டரை நமது பாதுகாவலிலிருந்து தப்பிக்கச் செய்வது: ஆகிய இரண்டு காரியங்களையும் செய்துவிட்டால் சொர்க்க வாசலைத் தாங்கள் கண்டுபிடித்துக் கூறுவதாக உறுதி கூறுவதாக உறுதியளிக்கின்றனர்'' என்றார் அரசர்.

''அரச பிரானே இந்தப் பேச்சே ஒரு பெரிய ஆபத்து போல என் மனதில் படுவதை மன்னிக்க வேண்டுகிறேன்'' என்றார் சேதுபத்திரர்.

விஷ்ணுபட்டர் அரபுகளை வெகு சாதாரணமாக ஏமாற்றிவிடக் கூடிய நபர். மேலும் தமது நகரின் பாதை கள்கூட அரபுகளுக்குச் சரியாகத் தெரியாதே!'' என்றார் மார்த்தாண்டர்.

''அரபுகள் தாங்கள் பயிற்சிக் கொடுத்துள்ள மீனவ வீரர்கள் இருவர் தங்களுக்குப் போதும் என்று கூறுகின்றனர். மேலும் விஷ்ணுபட்டரிடம் ஓலையைச் சேர்ப்பது, அவரைத் தப்பிக்க விடுவதும் நமது சம்பந்தமில்லாமல் நடைபெறுகின்றது என்பது அவர் முற்றிலும் நம்பும் படிச் செய்யவேண்டும் என்றும் மிகவும் வற்புறுத்துகின்றனர். நமக்கு அவர்கள் பேச்சில் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது'' என்றார் அரசர்.

மன்னர் விருப்பப்படியே செயலாற்றுவதாக உறுதி யளித்த இருவரும் விடை பெற்றனர். அதைத் தொடர்ந்து காரியங்கள் மிகவும் கச்சிதமாக நடந்தன.

ராஜகுருவின் இரு சீடர்களையும் தனது அறைக்கு அழைத்துவரச் செய்து. அவர்கள் எப்படி நடந்துக்கொள்ள வேண்டும். விஷ்ணுபட்டரிடம் என்னென்னகூற வேண்டும் என்று முறைப்படி போதனைகள் செய்து, அவர்கள் வெற்றி

PDF ISLAM

கரமாகச் செயல்பட்டால், விடுதலையோடு போதிய பரிசு களும், சாத்தியமானால் அரசாங்க உத்தியோகங்களும் அளிப்பதாக சேதுபத்திரர் தயார் செய்தார்.

சிறைக் காவல் தலைவனை மார்த்தாண்டர் அழைத்து, அந்த இரண்டு சீடர்களையும் விஷ்ணுபட்டரின் சிறைக்குள் அடைக்கும்படியும், சிறிது நாழிகைக்குப்பின் ஒரு காவலனை அனுப்பி, விஷ்ணுபட்டரை தப்பிக்கவிடப் பேரம் பேசி, எந்த நேரத்தில் அவர் தப்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள் ளது என்று தகவல் தெரிவித்துவிட்டு, அவ்விதமே தப்பிக்க விடும்படி ஆணைப் பிறப்பித்தார்.

திட்டமிட்டபடி இந்தக் காரியங்களெல்லாம் முன்னிர வுக்குள் நடந்தேறின. விஷ்ணுபட்டர் தப்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நேரமும் அரசருக்கு அறிவிக்கப்பட்டது. அவர் அதை அத்ஹமுக்கும் எட்டச் செய்துவிட்டார். மடா லயத்திருந்து கரங்கப் பாதையுள்ள கோயிலில் உள்ளும் புறமும் போதிய காவல் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மடாலயத்தைச் சுற்றியும் ரகசிய கண்காணிப்புகளுக்கு ஆவணச் செய்யப்பட்டது.

அன்றிரவு முழுவதும் மார்த்தாண்டர் சுறுசுறுப்போடு இயங்கிக்கொண்டிருந்தார். அவர் தலைமையிலுள்ள காவல் படைத் தலைவர்களும் கண்ணுங் கருத்துமாகக் காரியங்கள் ஆற்றிக்கொண்டிருந்தனர். நடைபெற்றுவரும் நிகழ்ச்சி களைச் சேதுபத்திரரும், மன்னருக்கு எட்டச் செய்து கொண் டிருந்தார்.

பொழுது புலர்வதற்குச் சிறிது நாழிகைக்கு முன்பு, மார்த்தாண்ட பூபதி பதை பதைப்போடு அரண்மனைக்கு ஓடிவந்து, மன்னரை அவசரமாகச் சந்திக்க வேண்டுமென் றார். இவ்விதம் அதிகாலைக்கு முன்பு அரசரைச் சந்திக்க அவர் ஒருபோதும் வந்ததில்லை. அன்றைய பரபரப்பு அவர் முகத்தில் என்றும் காணப்பட்டதில்லை.

PDF ISLAM

மன்னரைக்கண்டதும் அவர் மிகவும் பதறியவராய், ''அரசபிரானே! என்னைக்கொன்று விட உடனடியாக ஆணையிடுங்கள்! நான் இந்தப்பதவிக்கு முற்றிலும் தகுதியற்றவனாவேன்!'' என்று கதறியவாறுக் கீழேவிழுந்து மன்னரின் கால்களில் தலையைப் புதைத்துக் கொண்டு அழுதார்.

சேரமான் பெருமாள் ஒரு சிறிதும் பதற்றமடையாமல், அவரைத்தன் கைகளால் தூக்கிநிறுத்தி ''மார்த்தாண்டரே அமைதி கொள்ளும்! நடந்த விஷயங்களைக் கூறும்!'' என்றார்.

''நமது திட்டப்படி நான் காவலர்களை பலமாக அமைத்து, பிந்திய இரவு இறுதிவரை, அதாவது பொழுது விடிவதற்குச் சிறிது முன்பு வரை நானே கண் விழித்திருந்து...'' என்று மார்த்தாண்டர் துடிதுடிப்போடு சொல்லிக்கொண்டு வந்தபோது, மன்னர் தன் முகத்தில் புன்சிரிப்புத் தவழ, ''சிறிது நேரம் உங்களையும் அறியாமல் தேவாலயத்தின் வளாகத்திலேயே கண்ணயர்ந்து விட்டீர் இடுக்கிட்டு நீங்கள் விழித்தவுடன், ராஜகுரு தன்னுடைய அறையில்பத்திரமாக இருக்கிறாரா? என்று பார்க்க வேண்டுமென்று சந்தேகம் வந்தது. பூட்டி வைக்கப்பட்ட பூஜை அறையின் கதவு இடுக்குகளில் காதை வைத்து, ஏதாவது சப்தம் வருகிறதா? என்று வெகு நேரம் செவி உணர்வை ஆராய்ந்தீர்கள். எந்த சப்தமும் வெளிவரவில்லை என்ற உடன் உங்கள் சந்தேகம் வலுத்தது, காவலர்களை விசாரித்தீர்கள் அவர்கள், பிந்திய ஜாமத்தில் ஏதோ சிலநடமாட்ட சப்தங்கள் கேட்டதாகவும், அதன் பின் எந்த சிறு அசைவுச் சத்தமும் கேட்கவில்லை என்றும் சொன்னார்கள். நீங்கள் உங்களிடமுள்ள சாவியைக் கொண்டு, ராஜகுருவை அடைத்த பூஜை அறையைத் திறந்து பார்த்தீர்கள்! உங்கள் கைக்கால்களெல்லாம் அங்கேயே வெலவெலக்கத்

தொடங்கின, அறை காலியாக இருந்தது. ராஜகுரு அங் கிருந்த பூஜை சாமான்களுடன் மாயமாகி விட்டார்.'' என்றார். அரசர்.

இதைக் கேட்ட மார்த்தாண்டர் ஆச்சரியத்தால் பிரமித்து நின்றார். மன்னர் மேலும் தொடர்ந்து, ''அவர் சொர்க்கவாசல் வழியாக வெளியாகி விட்டார்கள், இனி அவர்களைப்பற்றி நீங்கள் கவலைப்படத் தேவையில்லை, போய் மேலும் சிறிது நேரம் நன்றாக ஓய்வெடுத்துக் கொண்டு விட்டு, காலை உணவு வேலைகளை முடித்து விட்டு சேதுபத்திரருடன் வந்து சேருங்கள் எந்தப் பரபரப்பையும் காட்டவேண்டாம்!'' என்று கூறி வழியனுப்பினர்.

மார்த்தாண்டரும் சேதுபத்திரரும் குறிப்பிட்ட நேரத் தில் வந்தபோது, மன்னரும் தம் காலைக்கடன்களை முடித்து விட்டு தயாராக இருந்தார். ராஜகுரு மறைந்துவிட்டது பற்றி சேதுபத்திரர் தனது கவலையை வெளியிட்டபோது, அரசர் மிகவும் சர்வசாதாரணமாக ''அதைப்பற்றி அலட் டிக்கொள்ள வேண்டாம்! அவர் நம்முடைய பிடிப்பிலிருந்து தப்பிவிடவில்லை. அவரை நாம் மரியாதையான இடத்தில் வைத்தோம்; அவர் தன்னை சாதாரணமான இடத்துக்கு மாற்றிக் கொண்டார். அவரை இரண்டொரு நாட்கள் மறந்து விட்டு மேற்கொண்டு நடக்க வேண்டிய காரியங்களை நாம் சுறுசுறுப்புடனும் தெளிவுடனும் செய்தாக வேண்டும்

அரசரின் உத்திரவுகளை இருவரும் எதிர்பார்த்த வண் ணம் அமைதியாக இருந்தனர். அவர் பேசலுற்றார்.

''மார்த்தாண்டபூபதி தனது நகர்ப்புற காவலர்களை யெல்லாம் அகற்றிவிட்டு, தனது படையில் தேர்ந்தவர்களில் சிலரைத்திரட்டிக்கொண்டு, சிங்கராயருக்கு உதவியாகச்

PDF ISLAM

செல்கிறார். அவர் தன் திறமைகளையெல்லாம் வெளிப்படுத்தி மார்த்தாண்டவர்மனை எவ்விதமேனும் உயிரோடு பிடித்து வருகிறார். மார்த்தாண்டவர்மனுக்குப் பலமாக உள்ள படையினரில் சாத்தியமானவரையில் உயிர் நட்டம் இல்லாமல் பார்த்துக் கொள்கிறார். அதுபோன்றே பொது மக்கள் யாருக்கும் எந்தவித தொல்லையும் நேர்ந்துவிடாமல் கவனித்துக் கொள்ள வேண்டியது அவருடைய பொறுப்பு! இதை வெற்றிகரமாக நிறைவேற்றி வருவார் என நம்புகிறேன். மீண்டும் அவருக்கு நான் நினைவூட்டுவது மார்த்தாண்டவர்மன் பிடிபட்டால், அவரை மிகவும் கண்ணியத்தோடு நடத்தி இங்கு நேரடியாக நம்மிடம் கொண்டு வந்து சேர்க்க வேண்டும்!''

''சேது பத்திரரைப் பொறுத்த வரையில், முடித்த வரை அதிசீக்கிரத்தில் மக்கள் மன்றத்தைக் கூட்டுறார். அக்கூட்டத்தில், ஆண்டவனுக்கு வழிபாடுகள் செய்வதற்கு ஒரு குறிப்பிட்ட ஜாதியினர்தான் இருக்கவேண்டும் என்ற நியதியை ரத்து செய்கிறார். வழிபாடு மந்திரங்கள் தாய் மொழியில் தான் இருக்க வேண்டும் என்றும் அதை பாராயணம் செய்து கொண்டுள்ள எந்த ஜாதியினரும் அர்ச்சகராக இருக்கலாமென்றும் அறிவிப்புச் செய்கிறார்; அறிஞர்களைத் திரட்டி, அந்தந்த தெய்வங்களுக்கும் தாய் மொழியிலேயே மந்திரங்கள் தயாரிக்க பரிசுகளை அறிவிக்கிறார். அதுவரை ஒவ்வொரு ஆலயத்திலும் துணை அர்ச்சகர்களாகவும், கோயில் மற்றும் மடாலய காரியங்களைக் கவனிப்பதற்காகவும், ஜாதி-பேதமில்லாது அனைத்து மக்களுக்கும் உரிமை வழங்குகிறார். மேலும் அந்தப்பகுதியில் வாழும் மக்களில் ஒரு குழு அமைக்கச் செய்து, தெய்வங்கள் அணிந்திருக்கும் ஆபரணங்களைக் கணக் கெடுத்து, பாதுகாக்கும் பொறுப்புகளை வழங்குகிறார். இந்த நிர்வாகக் காரியங்களைப் படிப்படியாகவும் அதே சமயம் தாமதமின்றியும் செய்து முடிக்கிறார்''! என்றார் அரசர்:

PDF ISLAM

இதைக் கேட்டுக் கொண்டிருந்த மார்த்தாண்ட பூபதி ''அரச பிரானே! அன்புகூர்ந்து என்னை மன்னியுங்கள்! ராஜகுரு தப்பி ஓடிய நிலையில்' தங்களுக்குப் போதிய பாதுகாப்பு..'' என்று கூறத் தொடங்கியபோது, ''ஆண்டவன் இருக்கிறான்! நீங்கள் வெற்றிகரமாகப் போய் காரியத்தை முடித்துவிட்டுத் திரும்பும்வரையில், நமக்கு எந்த ஆபத்தும் வராது! நீங்கள் கொஞ்சமும் கவலைப்படவேண்டாம்!'' என்று கூறிவிட்டு, ''இறைவன் கிருபையால் அனைத்தும் நல்லவிதமாகவே நடக்கும்'' என்று மன்னர் கூறியபோது அவர் முகத்தில் ஒரு வகையான அமைதியும் தெளிவும் பிரகாசித்தது.

அவர்கள் விடை பெற்றுப் போகும் போது, ''ராஜகுரு தவச் சாலையிலிருந்து மறைந்து விட்ட விஷயம் வெளியே தெரிய வேண்டாம்! அவர் விரதத்தில் இருப்பது போன்றே மக்களின் நம்பிக்கை இருக்க வேண்டும்! அங்குள்ள காவலில் எந்த மாற்றமும் செய்ய வேண்டாம்! காவலர்களிடமும் எச்சரித்து விடுங்கள்!'' என்றார்.

இந்த சந்திப்பு முடிந்து மூன்று நாட்கள் கடந்து விட்டன. நாட்டில் எந்த வித குழப்பமோ அமைதியின்மையோ இல்லாமல் வழக்கம் போல் இயங்கிக் கொண்டிருந்தது. சேதுபத்திரர் எப்போதும் போல நிர்வாக இயந்திரத்தை இயக்கிக் கொண்டிருந்தார். அரசருடைய அழைப்பு அவருக்குக் கிடைக்காததால், சந்திக்கும் வாய்ப்பையும் அவர் ஏற்படுத்திக் கொள்ளவில்லை.

சிங்கராயர் தலைமையிலும், மார்த்தாண்ட பூபதி தலைமையிலும் தெற்கு நோக்கிச் சென்றபடைகள் வெற்றிகரமாகத் திரும்பி வந்தன. மார்த்தாண்டவர்மனின் படைகள் அனைத்தும் சரணடைந்து விட்டதாகவும் அவருடைய

PDF ISLAM

முக்கிய ஆலோசகர்கள் மூவருடன் அவர் தப்பிச் சென்று விட்டதாகவும், அவர் குடும்பம் காவலில் வைக்கப் பட்டுள்ளதாதவும் அரசருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

மார்த்தாண்டவர்மன் தப்பித்துக் கொண்ட செய்தியைக் கேட்டுக்கூட சேரமான் பெருமான் எந்தவிதமான பதட்டமோ, பரபரப்போ அடையவில்லை. படையெடுப்பினால் பெரிய அளவில் உயிர்ச் சேதம் எதுவும் ஏற்படவில்லை என்பதை மட்டும் அறிந்து அவர் மிகவும் திருப்தி அடைந்தார். மேலும் இருவரையும் ஓய்வெடுத்துக் கொள்ளச் சொல்லி, மறுநாள் அதிகாலை மற்ற எல்லா அமைச்சர்களையும் அழைத்துக் கொண்டு தன்னை வந்து சந்திக்குமாறு கூறி அனுப்பினார்.

அவ்விதம் மறுநாள் காலை குறிப்பிட்ட நேரத்தில் அமைச்சரவை கூடிய போது! அங்கு கண்ட காட்சியைப் பார்த்து, சேதுபத்திரரும் மார்த்தாண்ட பூபதியும் ஒரேயடியாக பிரமித்து விட்டார்கள்! அவர்கள் மயங்கிக் கீழே சாயாததுதான் ஆச்சரியமெனலாம்! ஏனெனில். மன்னரின் பக்கத்தில் சம ஆசனம் போட்டு அங்கு மார்த்தாண்டவர்மன் உட்காரவைக்கப்பட்டிருந்தார். சிறிது தூரத்தில் அவருடைய நம்பிக்கைக்குரிய காவலர்கள் மரியாதையாகக் கைக்கட்டி நின்று கொண்டிருந்தனர்.

இந்த வியப்புக்குரிய காட்சியை ஒரு அற்புதம்போல பார்த்துக் கொண்டே, மன்னருக்கு மரியாதை செய்து கொண்டே அமைச்சர்கள் ஒவ்வொருவரும் தங்கள் ஆசனங்களில் அமர்ந்தனர்; அதோடு இன்னொரு வியப்புக்குரிய காட்சியும் அங்கு காணப்பட்டது அமைச்சர் ஆசனங்களில் இறுதியில் இரு ஆசனங்களில் முஸ்லிம் பிவ் அத்ஹமும் இன்னொரு அரபியும் அமர்ந்திருந்தன.ர்

PDF ISLAM

மன்னர் சேரமான் பெருமாள், தனது இனிய முகத்தில் புன் சிரிப்புத் தவழ அனைவரையும் நோக்கி, நீங்கள் ''நாட்டின் நடந்த கால சம்பவங்களையும், நிகழ்ச்சி கால நடைமுறைகளையும் பற்றிய உண்மைகளையும் அறிந்து கொள்ள, உங்கள்முன்னால் அரசர் மார்த்தாண்ட வர்மனே உங்களுக்கு விளக்கிச் சொல்வார். அவர் கூறுவதில் உங்களுக்கு ஏதாவது ஐயங்கள் ஏற் படும் பட்சத்தில், நீங்கள் குறுக்கிட்டு விளக்கங்கள் கேட்க லாம்! அப்படிச் செய்வதற்கு யாரும் தயக்கம் கொள்ளத் தேவையில்லை! உங்கள் கேள்விகளினால் நாமும் பல உண்மை களைப் புரிந்துகொள்ள உதவும்!'' என்று கூறி, அவரைப் பேசும்படி தமது கைகளை உயர்த்திச் சைகை செய்தார்.

மார்த்தாண்ட வர்மன் எழுந்து நின்று கைகளைக் கூப்பி அனைவரையும் மரியாதைச் செய்துவிட்டுப் பேசலுற்றார்:-

''என் அன்புக்கும் மரியாதைக்கும் உரிய. மகா உன்னத புருஷரான மன்னர் பிரான் அவர்கள், மிகவும் பெருமனது கொண்டு. எம்மை மன்னித்து உங்களிடம் எனது நிலைமையை விளக்க இந்த வாய்ப்பை நல்கியதற்காக, அவர் களின் கால்களைத் தொட்டு கண்களில் ஒற்றிக்கொண்ட வனாக நாம் உண்மையைக் கூறுகிறோம்...'' என்று சொல் வத் தொடங்கியபோதே அவரையும் அறியாமல் கண் கள் கலங்கின. அதை அவர் சமாளித்துக்கொண்டு தம் பேச்சைத் தொடர்ந்தார்.

''சேரமான் பெருமாள் வம்சத்து மூன்றாவது சேரமான் பெருமாளாக நமது மன்னர் பிரான் அவர்கள் சென்ற ஓராண்டுக்கு முன் பதவி ஏற்பதற்கு முன்பு கடந்த மூன் றாண்டுகளாக நாமே அரசராக இருந்து ஆட்சி செய்து வந்ததையும் இங்கே இருக்கும் உங்களில் பலர் நமது அமைச் சராக இருந்து ஆதரவளித்து வந்ததையும் நாம் இங்கே நினைவூட்டுவதற்குக் காரணம் உங்களில் புதியவர்களாக

PDF ISLAM

வுள்ள இரண்டொருவருக்காகவே ஆகும். படைத்தள பதியாக இருந்து நாம் வந்தச் சூழ்நிலையில் திடீரென நம்மை மன்னராகப் பிரகடனப் படுத்திக் கொண்டோம் என்பதை இங்குள்ள மூத்த அமைச்சர் சேதுபத்திரர் முதற்கொண்டு பலர் அறிவீர்கள்! மிகவும் தெய்வபற்றுடைய' அதே சமயம் திருஞான சம்பந்தர் பெருமானின் நேரடி ஆசி பெற்ற மாட்சிமை தங்கிய இரண்டாவது சேரமான் பெருமாள் அவர்கள் திடீரென்று ஒருநாள் மாயமாய் மறைந்து விட்டார்கள் ஏன் எப்படி எங்கிருந்து அவர்கள் மறைந்தார்கள் என்பது ராஜகுரு அவர்களின் மூலமாக அறிவிக்கப்பட்டதைத் தவிர வேறு எந்த உண்மையும் இதுவரை யாருக்கும் தெரியாது! எந்த நிருபணங்களும் இல்லை; அவர்கள் ஒரு நாள் நள்ளிரவில் தமது மடாலயத்துக்கு வந்து அன்றிரவு கடலோரத்தில் அமர்ந்து கடுந்தவம் ஒன்றை மேற்கொள்ளப் போவதாகவும் தம்மை வந்து ஆசீர்வதிக்கும்படியும் கேட்டுக் கொண்டதற்கிணங்க தாம் போய் தவத்தைத் தொடங்கி விட்டு வந்ததாகவும், மறுநாள் அதி காலையிலிருந்து காணப்படவில்லையென்றும், அன்றிரவு அவர்கள் தமது கனவில் தோற்றமளித்து, தாம் முக்தி நிலை அடைந்து விட்டதாகவும் ராஜ்ய பரிபாலனத்தை ராஜகுருவாகிய தம்மையே மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டதாகவும் கூறினர். இதில் நமக்கு சந்தேகமிருந்தாலும் வெளியே காட்டிக்கொள்ள முடியவில்லை, இந்தச் செய்தியை மூத்த அமைச்சர் சேதுபத்திரர் அவர்களைக் கலந்துக்கொண்டு முடிவெடுப்போம் என்று மட்டும் கூறிவிட்டு வெளியேறி, உடனே சேதுபத்திரர் அவர்களைச் சந்தித்து, நடந்த பேச்சுக்களைக் கூறினேன்! அதை சேதுபத்திரர் அவர்களே கூறுவார்கள்.'' என்று சொல்லி நிறுத்தினர்.

மூத்த அமைச்சர் சேதுபத்திரர் அவர்கள் மிகவும் கவலை தோய்ந்த முகத்தினராய், ''மார்த்தாண்டவர்மன் கூறி

PDF ISLAM

யது முற்றிலும் உண்மை! அரச பிரான் அமரராவது பற்றி அந்தச் சமயத்தில் ஆராய என் மனம் முற்படவில்லை. இந்தச் செய்தி பரவுவதற்குள் ஒரு புதிய மன்னரைப் பிர கடனப்படுத்தி விடவேண்டும் என்றே முடிவு செய்தேன். ராஜகுரு நாட்டின் ராஜ்ய பரிபாலனத்தை ஏற்றுக்கொள் வது என்பது என்னால் ஒப்புக்கொள்ள முடியாததாக இருந் தது. சேரமான் பெருமாளின் வாரிசு ஒருவரே ஆட்சிபீடம் ஏறவேண்டும் என்ற திட்டவட்டமாக முடிவு செய்துகொண் டேன். நேரடி வாரிசாகிய இன்றைய மன்னர் பிரான், சம ணர்களின் பிரச்சாரங்களை முடிவெடுக்க, சோழ நாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தார்கள். துறவியும், ஞானவானுமாகிய அவர்களைச் சந்தித்து, நிலைமையை விளக்கி, அரசியலுக்குக் கொண்டுவர போதிய அவகாசமில் லாதிருந்தது! சேரமான் பெருமாள் உயிருடன் அமரராகி விட்டார் என்ற செய்தி வெகு துரிதமாகப் பரப்பப் பட்டு, அன்றே நாடு முழுவதிலுமுள்ள கோயில்களில் விசேஷ பூஜைகள் நடக்கத் தொடங்கின. அதை கனவில் தோன்றி' ராஜகுருவை ராஜ்ய பரிபாலனம் செய்யக் கேட் டுக்கொண்டுள்ளதாகவும் செய்திகள் பரவச் செய்யப்பட் டன. இந்தச் சூழ்நிலையில், படை பலத்தின் மூலம் ஆட்சியை உடனடியாகக் கைப்பற்றிக் கொள்ளும்படி, மார்த்தாண்டவர்மனுக்கு நான்தான் ஆலோசனைச் சொன் னேன. அப்படிக் கூறியதற்கு வேறொரு சரியான காரணமு மிருந்தது, மார்த்தாண்டவர்மன் முதலாவது சேரமான் பெருமாள் வம்சத்தைச் சேர்ந்தவராகவும் இருந்தார் மேலும், நேரடி வாரிசாகிய இன்றைய நமது மன்னர் தாய கம் திரும்பியவுடனேயோ அல்லது சோழ நாடு சென்று அவர்களைச் சந்தித்து அழைத்து வந்தவுடனேயோ அவர்கள் விரும்பினால் ஆட்சியை அவர்களிடம் ஒப்படைத்துவிட வேண்டும் என்ற நிபந்தனையையும் விதித்தேன்...'' என்று கூறி, மேலும் மார்த்தாண்டவர்மனையே விளக்கும்படி கேட்டுக்கொண்டார்.

PDF ISLAM

முதலாவதாக ராஜகுரு சொன்ன மன்னரின் மறைவு பற்றிய உண்மை தெரியவேண்டும். இரண்டாவதாக சேரமான் வம்சத்து அரச உரிமை ஒரு பிராமணர் கைக்கு மாறக்கூடாது என்ற இரண்டு கொள்கைகளின் அடிப்படையிலேயே, நான் அவர்களையும் முக்கிய பிரமுகர் களையும் கூட்டி, படை பலத்தை முன் வைத்துக் காட்டி என்னையே அரசனுகப் பிரகடனப் படுத்திக்கொண்டேன். இந்த நிகழ்ச்சிகளுக்கு வந்த ராஜகுரு எம்மை எதிர்த்து வாய் திறக்க முடியவில்லை ராஜகுருவின் அதிகாரத்தையும் நாம் பறித்துவிடுவோமோ என்ற அச்சத்தில் அவரும் எம்மை அரசனுக ஏற்றுக்கொண்டார். ஆனுல் மிகவும் தந்திரசாலியான அவர், எம்மைத் தன் இச்சைக்கு வழி நடத்த பல உத்தியினைக் கடைப்பிடித்தார். நாமும் மிகவும் ராஜதந்திரமாக நடந்து அவரைப் பகைத்துக்கொள்ளா மலேயே ராஜ்யத்தை நடத்திச் சென்ருேம். எனினும் தனக் குள்ள கோயில்களின் செல்வாக்கைக் கொண்டு நம்மீது பல அவதூறுகளைத் திட்டமிட்டும் பரப்பிக்கொண்டே வந்தார். சில நபர்களை ஏவி நம்மை கொல்லவும் ஏற்பாடு செய்தார். ஆனுல் தன்னைப் பொறுத்து சாட்சிகள் எதுவும் இல்லாமல் மிகவும் எச்சரிக்கையாக நடந்து கொண்டு வந்தார். ஒற்றர் படைப் பிரிவு அவர் ஆதிக்கத்தில் இருந்ததால் நமக்கு எந்த செய்தியும் எட்டாமலேயே அவரால் காரியமாற்ற முடிந்தது. மேலும் எனக்குக் கீழே, துணைத் தளபதிகளாக இருந்த சிலரைத் தன் கைக்குள் போட்டுக் கொண்டு, நாட்டில் பல அக்ரமங்களைச் செய்து, நமது ஆணையின் படியே அவை நடப்பதாக மக்களை நம்பச் செய்தார். மற்ற நிகழ்ச்சிகளை மன்னர் பிரானும் சேதுபத்திரர் அவர் களுமே நன்கறிவார் என்று கூறி முடித்தார்.

மன்னர் சேரமான் பெருமாள் அதைத் தொடர்ந்து பேசலுற்ருர்.-

PDF ISLAM

''நமக்குச் சிறுவயதிலிருந்தே அரசியலில் ஆர்வம் இல்லை, இப்போதும்கூட இல்லை. நாம் சோழ மண்டல சுற்றுப் பயணத்தை முடித்துவிட்டுப் பாண்டிய நாட்டில் நமது பயணத்தைத் தொடர்ந்துகொண்டிருந்தபோது ஒரு நாள் எதிர்பாராதவிதமாக ராஜகுரு நம்மைச் சந்தித்தார். அவருடைய தோற்றமும் பேச்சுத் திறனும் நம்மை மிகவும் கவர்ந்தன. அவர் மார்த்தாண்டவர்மனைப் பற்றி நம்மிடம் கூறுகையில் எம் பாட்டனுர் இரண்டாம் சேரமானை, மார்த் தாண்டர் கொலை செய்துவிட்டதாகவும், படை பலத்தைக் கொண்டு ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டு, மக்களுக்கு மாபெரும் தொல்லைகளை அளித்து வருவதாகவும், ஆட்சியின் சரியானவாரிசாகிய நாம்முன்வந்தாலொழிய நாட்டையோ மக்களையோ காப்பாற்ற முடியாது என்று கூறினுர். வற் புறுத்தினுர், நாம் ஆட்சிக்காக ஒரு யுத்தத்தை நடத்த விரும்பவில்லை என்று கூறியபோது, எந்த யுத்தமும் இல்லா மல் சமாதானமாகவே ஆட்சி மாற்றம் செய்ய தாம் பொறுப்பேற்றுக் கொள்வதாகவும், பாண்டிய நாட்டிலி ருந்து சேர நாட்டுக்கு நாம் வரும் நாளை முன்கூட்டியே தெரிவித்துவிட்டால் போதுமெனக் கூறினுர். நாம் தீர்க்க மாக யோசித்து இறுதியில் அவர் ஆலோசனையை ஏற்றுக கொண்டோம். அதன் பின் அவர் என்ன செய்தாரோ நமக் குத் தெரியாது. நாம் சேர நாட்டுக்குள் நுழையும்போது மாபெரும் வரவேற்புகள் நடத்தப்பட்டன. கோயல்களில் பூஜைகள் நகழ்ந்தன. அனைத்துப் பகுதிகளிலும் மக்கள் நம்மை மகிழ்வோடு வரவேற்றனர். எனினும் நம்மை யாரும் சுதந்திரயாகச் சந்திக்கவிடாமல் பலதத காவல்கள் போடப்பட்டிருப்பதை உணர்ந்தோம்!''

மன்னர் இவ்விதம் கூறியதைத் தொடர்ந்து, மார்த் தாண்டவர்மன் விளக்குகையில் ''நாமும் சேரமான் வம்சத்தைச் சேர்ந்தவர்தான் எனினும், நேரடி வாரிசான மன்னர் பிரான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதில்

PDF ISLAM

எந்தவிதமான ஆட்சேபனையும் இருந்ததில்லை. மன்னர் பிரானைச் சந்திக்க வாய்ப்புக் கிடைத்திருந்தால், நாம் மகிழ்வோடு முன் வந்து, பதவி விலகியிருப்போம்' அத்தகைய வாய்ப்பே நமக்குக் கொடுக்கப்படவில்லை. அதற்கு மாறாக, படையினருக்குள்ளேயே சண்டைகள் மூட்டப்பட்டு நம்மைக் கொல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நாம் நம்மீது விஸ்வாசமுள்ள சிலருடன். தலை நகரைவிட்ட வெளியேற வேண்டியதாகிவிட்டது, நம்மீது ராஜதுரோகக் குற்றம் சாட்டப்பட்டு விட்டது, நாம் யுத்தம் செய்து மீண்டும் ஆட்சியைப் பிடிக்க முயற்சிப்பது போல் வதந்திகள் பரப்பட்டன. நம்மைக் கொள்ள கொலைக்காரர்கள் ஏவப்பட்டனர், ஆதலால் தற்காத்துக் கொள்ளும் சூழ்நிலையில்தான் இருந்துவந்தோம், இப்போது நம்மீது படையெடுத்து வந்த செய்தியை அறிந்தபோது, யாரும் எதிர்த்துப் போராடக் கூடாது என்ற உத்திரவிட்டபின் நாமே துறைமுகத்துக்கு வந்து, அதைமுற்றுகையிட்டிருந்த அரபித் தலைவரிடம் நம்மை நாமே அறிமுகம் செய்துகொண்டு, மன்னர் பிரானைச் சந்திக்க வாய்ப்பளிக்க வேண்டினோம். அவர்கள் பெருந்தன்மையோடு அதை நிறைவேற்றினார்கள்'' என்றார்.

மன்னர் சேரமான் பெருமாள் சிறிது நேரம் அமைதியாக இருந்து, அமைச்சர்கள் குழுவிலிருந்து ஏதேனும் மறுப்புக் குரல்கள் எழுகின்றனவா என்று பார்த்தார். அப்படி எதுவும் காணப்படாமல் போகவே. ''இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் நாம் தீர்க்கமாக உணரும்போது, நாட்டின் விபரீத நிலைகளுக்கெல்லாம் காரணம், ராஜகுரு ராம நம்பியே என்பது தெளிவாகத் தெரிகிறது. அவருக்கு நாம் என்ன தண்டனை கொடுக்கலாம்?'' என்று கேட்டார்,

அமைச்சர்கள் பலர் ஆத்திரத்துடன், ''அவரைக் கழுவில் ஏற்ற வேண்டும்!'' என்று ஒருமித்த குரல் கொடுத்தனர்.

PDF ISLAM

மன்னர் சேரமான் பெருமாள் மிகவும் அமைதியாக, "என்ன குற்றம் செய்தாலும் ஒரு பிராமணனைக் கொல்வது பாபங்களிலெல்லாம் மகா பாபமாக மக்கள் நம்பும் படி அவர்கள் செய்து வைத்திருக்கிறார்கள். ஆதலால் அந்தப்பாபத்தை நாம் செய்து விட்டதாக ஒரு சரித்திரத்தை உண்டாக்குவதை நாம் விரும்பவில்லை. மேலும் ராமநம்பி ராஜகுருவின் இந்தத் துணிவுக் கெல்லாம் காரணம் அவர் சில ரகசியங்களைத் தெரிந்து வைத்திருப்பதே ஆகும்; அந்த ரகசியங்களிலெல்லாம் தலையாயது, இத்தலைநகரிலும், மற்றுமுள்ள முக்கியமான பட்டணங்களிலும் உள்ள மடாலயங்களிலுள்ள ரகசிய பாதைகளே! அந்தப் பாதைகள் அவர்களுக்குள் பாரம்பர்யமந்திரமாகப் போதித்துக் கொள்ளப்படுகின்றன. அந்தப் பாதைகளைப் பயன்படுத்தி, அவர்களால் மிகவும் சாமார்த்தியமாக எதையும் செய்துவிட முடிகிறது. உதாரணமாக. இந்த அரண்மனையிலேயே பல ரகசிய வழிகள் இருக்கின்றன. இரண்டொரு வழிகளை மட்டும் மிகவும் சிரமத்துடன் நம்மால் கண்டுபிடிக்க முடிந்ததே தவிர இன்னும் அனைத்துப பாதைகளும் நமக்கே தெரியாது! மடாலயத்துக்கும் அரண்மனைக்கும் கூட ரகசிய வழிகள் உள்ளன. அரண்மனையில் நடக்கும் எந்தொரு விஷயத்தையும் ராஜகுருவால் தெரிந்துக் கொள்ள முடிவதற்கு அவ்வழிகளே காரணம், நம் படுக்கை அறை வரை கூட அவருடைய ஆட்களால் ரகசியமாக நுழைய முடிகிறது என்பதை நாம் பல சந்தர்ப்பங்களில் தெரிந்து கொண்டுள்ளோம்! ஆதலால் தான், அவரைக் கொண்டே அவற்றைக் தெரிந்துக் கொள்ள வேண்டும் என்று திட்டமிட்டு; அவர் நீண்ட கால மவுன பூஜை மேற்கொள்வதாகக் கூறி, அவரை ஒரு அறையில் அடைக்கச் செய்து "அங்கிருந்து தப்பிக்க விட்டோம்!" என்று கூறி நிறுத்தினார்.

என்ன! தப்பித்து விட்டாரா?" என அனைவரும் ஆச்சரியத்தோடு குரல் கொடுத்தனர்;

PDF ISLAM

ஆம்! தப்பித்துப் பிடிபட்டு விட்டார். அரபு நாட்டிலிருந்து வந்துள்ள நமது வர்த்தக நண்பர்களின் முழு ஒத்துழைப்பு நமக்குக் கிடைத்திரா விட்டால்' அந்த ரகசிய வழிகளையும் நாம் கண்டு பிடித்திருக்க முடியாது! ராஜகுருவும் பிடிபட்டிருக்கமாட்டார்; நாமும் மோட்சலோகத்துக்கு நேரடியாக போய்விட்ட கதைக்கு எப்போதோ உள்ளாக்கப் பட்டிருப்போம்! இப்போது, அரபு வர்த்தகக் குழுவின் தலைவர் முஸ்லிம் பின் அத்ஹம் எல்லா உண்மைகளையும் விளக்குவார்'' என்று மன்னர் கூறி அத்ஹமை நோக்கி கையசைத்து, பேசுங்கள் என சைக்கினைச் செய்தார்.

முஸ்லிம் பின் அத்ஹம் ஒழுந்து, அனைவருக்கும் குனிந்து மரியாதை செய்து நிமிர்ந்து, ',உங்கள் அனைவருக்கும் அல்லாஹ் சிறப்பையும் வெற்றியையும் நல்குவானாக! உங்கள் நாட்டுக்கு வரவும் மாட்சிமைத் தாங்கிய மன்னர் பிரான் அவர்களின் அன்பைப் பெறவும் அருட் செய்த அல்லாஹ்வுக்குநன்றி செலுத்தியவனாக, மன்னர் பிரானின் கட்டளைப்படி எங்களுடைய நடவடிக்கைகள் பற்றிய உண்மைகளை உங்கள் முன், என் சார்பாகவும் என் நண்பர்கள் சார்பாகவும் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று தொடங்கி அமைதியாகப் பேசலுற்றார்:-

''நாங்கள் உங்கள் நாட்டுக் கெனப் பயணப்பட்டு வரவில்லை என்பதையும் முதலில் தீவுகளுக்குச் சென்று எங்கள் வர்தகத்தை நிறைவேற்றி விட்டு அங்கிருந்து சீனு தேசம் வரை சென்று திரும்பவே நாங்கள் பயணத்தை மேற்கொண்டிருந்தோம். இடையில் இயற்கையின் சீற்றத்தால் உங்கள் பூமியை நாங்கள் நெருங்க வேண்டியிருந்தது. அச்சமயம், மீன் பிடிப்பவர்களைப் போல நூற்றுக்கணக்கான படகுகளில் வந்த ஒரு கூட்டத்தினர் எங்கள் பாய்மரக்

PDF ISLAM

கப்பலைச் சூழ்ந்து, எங்களைத் தாக்கிக் கொள்ளையிட முற்பட்டனர். இத்தகைய தாக்குதல்களை நாங்கள் ஏற்கனவே சந்தித்துள்ள தால் அவர்களை வெற்றிகொள்வது ஒரு பெரிய காரியமாக இல்லை, அவர்களில் பலரைப் பிடித்தும் வைத்துக் கொண்டோம். நான் அடிமையாக இருந்த காலத்தில் உங்கள் நாட்டுக்கு வியாபாரத்துக்காக இரு முறை அழைத்து வரப்பட்டுள்ளேன். உங்கள் பழைய மன்னரையும் சந்தித்துள்ளேன். அவர் மிகவும் உயர்ந்தவர், நேர்மையாளர் அறிந்துள்ளேன். அவரிடம் எங்கள் கைதிகளை ஒப்புவித்து' நியாயம் கேட்கவேண்டுமென்றே இங்கு கரைஇறங்க முடிவு செய்தோம்.

''இடையில் எங்கள் கைதிகளை விசாரித்த போது, நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்களையும், புதிய மன்னர் பதவி ஏற்றிருப்பதையும். தாங்கள் ராஜகுருவின் ஆணைப்படி இக் கடல் கொள்ளையில் ஈடுபட்டு வருவதாகவும், மன்னருக்கு இது தெரியாது என்றும் கூறினர்கள். மன்னர் பிரான் பெரும் நீதிவான் என்றும் தாங்கள் செய்துள்ள காரியத்தை நாங்கள் மன்னித்தாலும் மன்னர் மன்னிக்க மாட்டார் என்றும் கெஞ்சினர்கள். அவர்களும் பரம்பரைக் கடல் கொள்ளைக்காரர்கள் அல்லவென்றும் எங்களால் புரிந்துக் கொள்ள முடிந்தது. ஆதலால் அவர்களில் முக்கியமான சிலரை மட்டும் வைத்துக் கொண்டு மற்றவர்களை மன்னித்து நாங்கள் விடுதலை செய்து விட்டோம்.

''அந்த முக்கியமானவர்களில் இருவரைக் கொண்டு நாங்கள் வழிகாட்டப்பட்டு நான் அன்றிரவே மன்னர் பிரானை ரகசியமாகச் சந்தித்து, நடந்த உண்மைகளைக் கூறினேன். உடனே மன்னரவர்கள் தனது மெய்ப்பாது காப்பாளர்களுடன் மாறுவேடத்தில் எங்களுடன் வந்து

PDF ISLAM

உண்மையைக் கண்டறிந்து, மற்றவர்களையும் விடுதலைச் செய்யச் சொல்லி, எங்களைக் கடலோர மாளிகையில் தங் கும்படி ஆணையிட்டு, நாளை மறுநாள் நடைபெறப் போகும் தன்னுடைய ஆட்சி முதலாண்டு விழாவில் கலந்து கொள் ளக் கேட்டுக் கொண்டார்கள். நடந்த கடல் கொள்ளை விஷயத்தையோ தான் நேரில் ஆஜரானதையோ, தன்னைச் சந்தித்ததையோ யாரிடமும், வெளிபடுத்த வேண்டா மென்றும் உத்தரவிட்டார்கள். அதன்படியே நடந்து கொண்டோம்.

முஸ்லிம் பின் அத்ஹம் தொடர்ந்து விளக்கினார்,

''விழா தினத்தன்று நடந்ததையெல்லாம் நீங்கள் நன்கு அறிவீர்கள்! ராஜகுரு அவர்கள் எங்களை எந்த அளவுக்கு இழிவு படுத்த வேண்டுமோ அதற்கு மேலும் கேவலப்படுத்தினார். மன்னர் பிரான் அவர்கள் எங்களுக்கு எந்த அளவுக்கு கண்ணியம் கொடுக்க வேண்டுமோ அதற்கு மேலும் கண்ணியம் கொடுக்கத் தொடங்கினார் கள், ராஜகுரு அவர்கள் எங்கள் மீது கடும் ஆத்திரம் கொண்டு எங்களை எப்படியாவது இழிவுபடுத்தி நாட்டை விட்டு வெளியேற்றிவிடவோ அல்லது கொன்று விடவோ முயற்சித்ததின் காரணம், ஆரம்பத்திலேயே அவருடைய ரகசியங்கள் பலவற்றை நாங்கள் புரிந்து கொண்டதும், நாங்கள் விடுதலை செய்தவர்களில் அவருடைய நம்பிக்கை யைப் பெற்ற ஒரிருவர், நடந்த உண்மைகளை அவரிடம் கூறிவிட்டதே ஆகும்''. என்று கூறி நிறுத்தி விட்டு, மேற் கொண்டும் நடந்த விஷயங்களைக் கூறலாமா என்று கேட் பது போல மன்னரின் முகத்தைப் பார்த்து மலைத்து நின்றார்.

PDF ISLAM

மன்னர் சேரமான் தன் முகத்தில் புன் சிறிப்பை வெளிப்படுத்திக் காட்டி, ''எதையும் மறைக்க வேண்டாம் அனைத்தையும் கூறுங்கள்'' என்றார்.

முஸ்லிம் பின் அத்ஹாம் மேலும் தொடர்ந்தார்;-

''மன்னர் பிரான் அவர்கள் எங்களுக்கு முழு பாதுகாப்புக் கொடுத்தார்கள். படைத் தளபதி மார்த்தாண்ட பூபதியவர்கள் முழு மனதோடு எங்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்தார். நாங்கள் வர்த்தகப் பயணிகளாக இருந்தாலும், இங்கு அதைச் செய்யவில்லை. மன்னர் பிரானின் உயிரைப் பாதுகாப்பதும், இங்கு ராஜகுருவால் நடத்தப்பட்ட சூழ்ச்சிகளைக் கண்டு பிடிப்பதும் எங்கள் வேலையாக்கப்பட்டன. அதன் முதற்கட்டமாக, அரண்மனை, கோயில்கள்' மடாலயம் ஆகியவற்றுக்கு வெளியே யுள்ள ரகசிய வழிகளைக் கண்டு பிடிப்பதும், நள்ளிரவு நடமாட்டங்களின் உண்மைகளைப் புரிவதும் எங்கள் வேலை யாக்கப்பட்டன. இந்த வேலையில் மன்னர் பிரான் அவர்களும் எங்களோடு சேர்ந்துக் கொண்டார்கள். முதலில். மன்னரவர்களின் படுக்கை அறைக்கு வெளியிலிருந்து வரும் இரண்டு ரகசிய வழிகளையும், அடுத்து, கடற்கரை மாளிகையிலிருந்து அரண்மனைக்குள் நுழையும் ரகசிய வழியையும் கண்டுபிடித்தோம். அதன் முலம் தினமும் நாங்கள் மன்னர் பிரானைச் சந்தித்து, அவர்கள் ஆணையிட்டபடி செயல்பட்டு வந்தோம்.

''அதே போன்று மடாலயத்திலிருந்து வெளியே வரவும் செல்லவும் உள்ள ரகசிய வழியையும் கண்டுபிடித்தோம். அதன் மூலம் ராஜகுருவுடையவும், அவரின் ஒற்றர்கள், கொலைகாரர்கள் ஆகியோருடையவும் ரகசிய நடமாட்டங்களையும் எங்களால் புரிந்து கொள்ள முடிந்தது ராஜகுருவின் காமவெறிமிக்க ஒழுங்கீன வாழ்வையும் படு

PDF ISLAM

கொலைகளையும் நாங்கள் புரிந்துக்கொள்ள முடிந்தது. ஒவ்வொரு உண்மையையும் நாங்கள் அவ்வப்போது மன்னர் பிரானுக்குத் தெரிவித்தும், அந்த ரகசிய வழிகளைக் கண்காணித்தும் எங்கள் பணிகளை நிறைவேற்றி வந்தோம் அதே சமயம், மன்னர் பிரானைக் கொல்ல பத்து தடவைக்குமேல் செய்யப்பட்ட முயற்சிகளைத் தடுக்கவும் எங்களால் முடிந்தது.

''கடைசியாக எங்களால் கண்டு பிடிக்க முடியாமல் இருந்தது ராஜகுருவின் சொர்க்கவாசலே ஆகும். ராஜ குருவைத் தவிர அதை அறிந்த மற்றொரு நபர் விஷ்ணு பட்டரே எனத்தெரிந்தபோது, அவரிடம் ராஜகுருவின் ஓலையைக் கொடுக்கச் செய்து சிறையிலிருந்து தப்பிக்கும் வலையை விரித்தோம். அதன் மூலம், வெளியே வந்து, கடல் வழியாகத் தப்பித்துச் செல்ல முயன்ற ராஜகுருவையும் விஷ்ணுபட்டரையும், விலை மதிக்கவொண்ணாத அளவுக்குள்ள தங்கம், வைரம், வைடூரியம், சாமிசிலைகளின் ஆபரணங்கள் ஆகிய அனைத்தையும் எங்களால் பிடிக்க முடிந்தது,' என்று கூறிக் கொண்டே வந்தபோது, மன்னரைத் தவிர, மூத்த அமைச்சர் சேதுபத்திரர், தளபதி மார்த்தாண்ட பூபதி உட்பட அனைவரும் ஆச்சரியமேலிட்டால், ''ஹா!' என்ற சப்தத்தை வெளிப்படுத்தினர்.

மன்னர் சேரமான் பெருமாள் பேசத் தொடங்கினார்.

''அன்புள்ளவர்களே! அரபு மக்களின் சேவைக்கு நாம் எத்தனை ஆயிரம் நன்றிகளைக் கூறினாலும் அது நிறைவாகாது. அவர்கள் நம்மிடமிருந்து எந்தப் பிரதி பிரயோஜனத்தையும் எதிர்பாராது, முற்றிலும் விஸ்வாசத்துடன், நம் நாட்டின் நலனுக்காக உழைத்துள்ளார்கள். கடல் கொள்ளைக் காரர்களாக மாற்றப்பட்ட நமது மீனவ சமுதாயத்தை நேர்மை மிக்க நல்லதொரு சமுதாயமாக மாற்றி விட்டார்கள். அவர்களிடமிருந்த மதுவருந்தும் தீயப் பழக்கத்தை அடியோடு அகற்றி விட்டார்கள்.

PDF ISLAM

சண்டை சச்சரவு குணங்களை வேரோடு ஒழித்து விட்டார்கள். அவர்களிடையே இருந்த ஜாதிப் பிரிவுகளை இல்லாமலாக்கி விட்டார்கள். ஆதலால் அவர்கள் இன்னும் சிறிது காலம் நமது நாட்டில் இருக்க வேண்டும் என்பது நமது விருப்பமாகும். ஆனல் அவர்கள் வர்த்தகர்களாக இருப்பதால், நமது வேண்டுகோளை ஏற்றுக் கொள்ள முடியாத நிலையை நம்மிடம் விளக்கிக் கூறியதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டியதாயிற்று அவர்கள் நமக்குத் தேவையான குதிரைகள், பேரீத்தம் பழங்கள், சிலவகைப் பாதுகாப்பு ஆயுதங்கள், தங்க ஆபரணங்கள் வாசனை திரவியங்கள் முதலியவற்றைதேடி இன்னும்ஆறுமாதகாலத்தில் திரும்பிவர வாக்குறுதி பெற்றுள்ளோம்! அவர்களுக்குத் தேவையான' கிராம்பு, ஏலக்காய், கொப்பரை, தேங்காய்நார் விரிப்புகள், மீன் வலைகள் முதலான பொருட்களை தேவையான அளவுக்கு இப்போது கொண்டு செல்ல அனுமதியளித்துள்ளோம். அவற்றுக்குப் போதிய அளவு தங்கத்தை நமக்கு அளித்து, அதை நாணயமாக்கவும் அதற்கு மதிப்பை நிர்ணயித்து செலாவணிக்குக் கொண்டு வரவும், நமக்குக் கற்றுக் கொடுத்துள்ளார்கள். அவர்களின் ஞாபகார்த்தமாக வெகு விரைவில் நமது நாட்டில் தங்க நாணயச் செலவாணியை ஆரம்பிக்கப் போகிறோம். மேலும் நாளை மறுநாள், அவர்களை வழியனுப்பும் விழாவை, அரசு சார்பில் பெரிதாக நடத்தத் திட்டமிட்டுள்ளோம்'' என்று கூறி முடித்தார்.

அமைச்சர்களில் ஒருவர் எழுந்து, ''ராஜத்துரோகக் குற்றம்புரிந்து மன்னியில் இந்த நாட்டை நாசப் பாதைக்கு இழுத்துச் சென்ற ராஜகுரு எங்கே வைக்கப்பட்டிருக்கிறார் என்பதையும் நாங்கள் அறியலாமா'' என்றார்.

பா. 20

PDF ISLAM

"ராஜகுருவும் விஷ்ணுபட்டரும் வைக்கப்பட்டுள்ள இடம் ரகசியமாகவுள்ளது. இனிதான் நாமும், சேதுபத்திரரும், மார்த்தாண்டரும் அவரைப் போய்ச் சந்தித்து அவருடைய வாக்கு மூலத்தைப் பெற்று, அதன் பின் தண்டனையை நிச்சயிக்க வேண்டும்" என்றார் சேரமான் பெருமாள்.

மூத்த அமைச்சர் சேதுபத்திரர் எழுந்து நின்று, எல்லோரையும் ஒரு முறை இலேசான புன் முறுவலுடன் நோக்கி விட்டு, ஏதோ சொல்ல விரும்புபவர் போலும், சொல்லலாமா கூடாதா என்று தயங்குபவர் போலும் காணப்பட்டார்.

மன்னர் வியப்புடன் அவரை நோக்கி, "மூத்த அமைச்சர் அவர்கள் தம் மனதில் பட்டதைச் சொல்ல இவ்வளவு தயக்கம் காட்டுவது புதிதாகவுள்ளதே!" என்ற போது அவர் புன் சிரிப்புடன் மார்த்தாண்ட பூபதியை நோக்க, மார்த்தாண்டர். 'சொல்லி விடுங்கள்' என்று கூறுவதுபோல் தலையால் சைக்கினைக் செய்தார்.

சேதுபத்திரர், தனது தொண்டையைக் கனைத்து சரி செய்துக் கொண்டு, "என்னுடைய கருத்தை மன்னர் பிரான் அவர்களும், அமைச்சர்களாகிய நீங்களும், மார்த்தாண்டவர்மரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நான் வற்புறுத்திச் சொல்லவில்லை, தளபதி மார்த்தாண்ட பூபதியவர்கள் என்னிடம் கூறிய தகவல்களைக் கொண்டு உங்கள் எல்லோருடைய ஆலோசனையையும் பெறக்கூடிய விதத்தில் நான் மிகுந்த அச்சப்பாட்டுடன் தான் கூறுகிறேன், நம்மில் யார் ஒருவருக்கு, மிக இலேசான ஆட்சேபனை இருந்தாலும். என் கருத்தை நான் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன் அதற்காக நான் யார்மீதும்

PDF ISLAM

வருத்தப்பட மாட்டேன்!'' என்று கூறிவிட்டு, முகத்தில் புன் முறுவலுடன் மீண்டும் அனைவரையும் நோக்கினார்.

மன்னர் சேரமான் பெருமாள், தானும் முறுவலித் தவராக, சேதுபத்திரரவர்களின் முகபாவத்திலிருந்து, ஏதோ நல்லதொரு விஷயத்தைக் கூற விரும்புகிறார் என்று தெரிகிறது. ஆனால் அவர் போடும் பீடிகை ஏதோ போலத் தெரிகிறது! அதைச் சீக்கிரமாக அறிய நமக்கும் ஆர்வம் எழுகிறது'' என்றார். எல்லோருடைய முகத்திலும் புன் சிரிப்பு வெளிப்பட்டது.

மூத்த அமைச்சர் சேதுபத்திரர் மிகவும் அமைதியாக, ''அரபுகள் அனைவரையும் நாம் ஒரேசமயத்தில் வழியனுப்பி விடாமல் அவர்களில் சிலரையாவது நம் நாட்டிலேயே! தங்கச் செய்தால், நமது நாட்டுக்கும் அரபுநாட்டுக்கும் ஒரு நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ள வாய்ப்பாக இருக்கும். நமக்குக் கிடைத்துள்ள சில ரகசிய தகவல்களின்படி, அவர் களில் ஐந்தாறு நபர்கள் அவ்விதம் தங்க விருப்பமுடைய வர்களாக உள்ளனர் என்பதும் தெரிகிறது. அதோடு அவர் கள் ஜாதிபேதங்கள் பார்க்காதவர்களாக இருப்பதால், நம் நாட்டு ''மாப்பிள்ளா''களாக ஆக்கிக் கொள்ளவும் முடியு மெனத் தெரிகிறது!'' என்று சிரித்த முகத்தோடு கூறினார்.

''மாப்பிள்ளை'க்களாகவா? அது எப்படி?'' என்று கேட்டார் மன்னர்.

சேது பத்திரர், தளபதி மார்த்தாண்ட பூபதியை நோக்க, அவரும் சிரித்தமுகத்துடன், ''மீனவப் பெண்களில் இரண்டொருவர் மீது விருப்பம் கொண்டுள்ளார்கள் என் பது தெரிகிறது மேலும், மன்னர் பிரானும், மற்ற அமைச் சர் பெருமக்களும் சம்மதித்தால் தனது மகள்களில் ஒருத்தி யையும் அரபுகளில் ஒருவருக்குத் திருமணம் செய்து வைக்க, மூத்த அமைச்சர் அவர்கள் துணிவு கொண்டிருக்கிறார்கள்!'' என்றார்.

PDF ISLAM

மற்ற அமைச்சர்கள் அனைவரும், ஆச்சரியத்துடன் ஒருமித்த குரலில், ''என்ன!'' என்று குரல் எழுப்பினர்.

மன்னர் சேரமான் பெருமாள், எவ்விதப் பதட்டமும் அடையாமல் ''நமது பூமியில் இது மிகப் பெரும் சமுதாயப் புரட்சியாகும். எம் காலத்தில் இந்தப் புரட்சியைத் தொடங்கிவைப்பதில் நாம் அஞ்சவில்லை! இதற்கு மாறாக நாம் மிகவும் பெருமைப்படுகிறோம். மூத்த அமைச்சர் சேதுபத்திரர் அவர்களே அதற்கு உறுதுணையாக இருக்க முன் வந்திருப்பது எமக்கு மிகவும் மகிழ்வைத் தருகிறது. எனினும் இது சம்பந்தமாக அரபுகள் யாரும் எம்மிடம் ஒரு சிறு குறிப்பும் காட்டியதில்லை. நாமும் கற்பனை செய்து கூடப் பார்த்ததில்லை, துறவியாகிய எமக்கு இது பற்றிச் சிந்தனை ஏற்றிபடாததில் ஆச்சரியமில்லை. ஆதலால், இத்தகைய சில திருமணங்கள் நடக்க எப்படி சாத்தியமாகும் என்பதை அரபுகள் தரப்பில் நமக்கு விளக்கினால் நாம் நமது எண்ணத்தை வெளிப்படுத்த எளிதாக இருக்கும்'' என்றார்.

எல்லோரும் முஸ்லிம் பின்அத்ஹறமை நோக்கினர். அவரும் வியப்புடன் காணப்பட்டவராய், ''மாட்சிமை மிக்க மன்னர்பிரான் அவர்களே! மற்றும் அமைச்சர் பெருமக்களே! இப்படிப்பட்ட எண்ணம் மீனவர்கள் சிலரிடையே ஏற்பட்டுள்ளதோ அல்லது எங்களில் சிலருக்கு உண்டாகியிருப்பதோ அல்லது மூத்த அமைச்சரவர்கள் பெருமனம் கொண்டுள்ளதோ எனக்குச்சிறிதளவும் தெரியாது என்பதை உண்மையுடன் உறுதிப்படுத்துகிறேன். அதே சமயம், அல்லாஹ்வின் நாட்டம் அதுவாக இருப்பின் நாங்கள் புறக்கணிக்கக் கூடியவர்களாக இல்லை. எங்களில் யார் இந்த உணர்வுக்கு ஆளாகியுள்ளார்களோ அவர்களையும், சம்பந்தம் ஏற்படுத்திக் கொள்ள உங்களில் யார் விருப்பமுடைய

PDF ISLAM

வர்கள் இருக்கிறார்களோ அவர்களேயும், மன்னர் பிரான் அவர்களே அழைத்துப்பேசி எடுக்கக் கூடிய முடிவுக்கு நாங் கள் கட்டுப்படுகிறோம்'' என்றார்.

மன்னர் சேரமான் பெருமாள் சிரித்துக் கொண்டே, எமது ''மக்களுக்காக நாமே பொறுப்பேற்றுக் கொள்கி றோம்! திருமணம் சம்பந்தமாக உங்களுடைய நிபந்தனை கள் என்ன? பகிரங்கமாகக் கூறுங்களேன்; எல்லோருமே தெரிந்து கொள்கிறோம்!'' என்றார்.

''மாண்புமிக்க மன்னர் பிரான் அவர்களே! எங்களுக் கென்று எந்தத்தனி நிபந்தனேயும் இல்லை, எங்கள் மார்க்கம் என்ன நிபந்தனைகளைவிதித்திருக்கிறதோ, எங்கள் தலைவரான நபிகள் நாயகம் (ஸல்-அம்) அவர்கள் எந்த வழிகளைக்காட்டி யுள்ளார்களோ அவைதான் எங்கள் திருமண முறையாகும்.' என்றார் முஸ்லிம் பின் அத்ஹம்.

''அவைகள் என்ன?'' என்றார் மன்னர்.

''முதலாவது, அவர்கள் முஸ்லிம்களாக இருக்க வேண் டும்'' என்று அத்ஹம் கூற, அதை எப்படிச் செய்யவேண் டும்?'' என்று மன்னர் கேட்டார்.

''வணக்கத்துக்குஉரியவன் அல்லாஹ் ஒருவனே! அவன் உருவமற்றவன்! இணை துணையில்லாதவன்! அவனை யாரும் பெறவுமில்லை! யாராலும் பெறப்படவுமில்லை. அவனே சர்வ சக்தி வாய்ந்தவன்! எங்கும் நிறைந்தவன், அவனுடைய இறுதித் தூதர் முஹம்மத் ஸல்லல் லாஹு அலைஹிவஸல்லம் ஆவார்கள்என்று மனதால் உறுதிச்செய்துகொண்டு வாயால் அறிவிப்புச் செய்யவேண்டும்''என்றார் அத்ஹம்.

PDF ISLAM

''இந்த அறிவிப்பை எங்கு போய்ச் செய்ய வேண்டும்? இதற்கு என்ன சடங்குகள் செய்ய வேண்டும்?'' என்று கேட்டார் அரசர்.

''எங்கும் போக வேண்டியதில்லை! எந்த சடங்கும் செய்ய வேண்டியதில்லை, ஒருவர் இருவர் முன்னிலையில் பகி ரங்கமாக அறிவித்து விட்டால் போதுமானது உள்ளத்தைச் சுத்தம் செய்து கொள்வதுபோல, குளித்து முழுகி உடம்பை யும் சுத்தம் செய்து கொண்டு, இந்த உறுதிப்பாட்டை மேற்கொள்வதிலும் இன்னும் சிறப்பாகும். அதோடு மரணத்துக்குப் பின், மறுபடியும் எழுப்பப்படுவோம் என்றும் அல்லாஹ்விடம் விசாரணைக்கு உட்படுவோம் என்றும், குற்றங்களுக்குத் தண்டனையும், நேர்மைக்கு நற்பலன்களும் கிடைக்கும் என்றும், நம்முடைய ஒவ்வொரு செயல்களையும், அல்லாஹ் அறிந்து வருகின்றான் என்றும் மனதிற்குள் திட மாக முடிவு செய்து கொள்ள வேண்டும் என்றார் அத்தூம்?

''இவ்விதம் வாயினால் கூறி, நெஞ்சத்தினால் நினைத் துக் கொண்டால் ஒருவர் முஸ்லிமாகி விடுகிறாரா?'' என்று வியப்புடன் கேட்டார் மன்னர்.

''முஸ்லிமாகி விடுகிறார்! அதோடு அவர் படிப்படியாக 'மூமின்' ஆகவேண்டும் இறைவனை, நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் வழி காட்டிய பிரகாரமே இறைவனை வணங்க வேண்டும், நோன்பு...'' என்று சொல்லிக் கொண்டு வரும் போது மன்னர் குறுக் கிட்டு, ''திருமணத்துக்கு உள்ள சடங்குகளை மட்டும் இப்போது கூறுங்கள்! உங்களுடைய வழி முறைப்படி தாலி எப்படியிருக்க வேண்டும்? ஹோம குண்டம் எந்த இடத்தில் அமைக்க வேண்டும்? திருமணம் யார் செய்து வைக்க வேண்டும்? முதலான விபரங்களைக் கூறுங்கள்'' என்றார் மன்னர்?

PDF ISLAM

''தாங்கள் சொல்வது எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஒரு ஆணும்-பெண்ணும் கணவன்-மனைவி என்று வாழ விருப்பம் கொண்டு விட்டால், அதற்கான அவர்கள் வாழ்க்கை ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டும்! இதற்கு இரண்டு சாட்சிகள் வேண்டும்! அவ்வளவுதான்! இந்த சாட்சிகளாக புத்தி சுவாதினமுடைய யார் வேண்டுமானாலும் இருக்கலாம்! வேறு சடங்கு-சம்பிரதாயங்கள் எதற்கும் தாங்கள் குறிப்பிட்டதுபோல, தாலி, ஹோமகுண்டம் என்பது என்னவென்றே எங்களுக்குத் தெரியாது! எங்கள் பூமியில் பலவிதமான பழக்க வழக்கங்கள் அவரவர் பூர்வீக வழமைப்படி இருந்தன. அவைகளை யெல்லாம் எங்கள் நபிகளார் அவர்கள் தேவையில்லை என்று அறிவித்துள்ளார்கள். அதைத்தான் நாங்கள் இப்போது கடைப்பிடித்து வருகிறோம்!'' என்றார் முஸ்லிம் பின் அத்ஹம்.

''வாழ்க்கை ஒப்பந்தம் என்று சொன்னீர்களே, அதைப் பதிவு செய்து கொள்வதா?'' என்று கேட்டார் சேதுபத்திரர்.

''விரும்பினால் பதிவு செய்துகொள்ளலாம்! விரும்பாவிட்டால் அதுவும் தேவையில்லை. சாட்சிகளே போதுமானவர்கள்'' என்றார் அத்ஹம்.

''இரண்டுபேர் மட்டும்தான் சாட்சிகளாக இருக்க வேண்டுமா?'' என்று ஒரு அமைச்சர் கேட்டார்.

''குறைந்தபட்சம் இரண்டு பேர் மேலும் இருதரப்பினரிலும் எத்தனைப்பேர்கள் வேண்டுமானாலும் சாட்சிகளாக இருக்கலாம்'' என்றார் அத்ஹம்.

''உங்கள் தரப்பில் என்ன நிபந்தனைகள் வைக்கிறீர்கள்?'' என்றார் அரசர்.

''மாட்சிமை மிக்க மன்னர் பிரான் அவர்களே! எங்கள் தலைவர்களிலும் தலைவரான அல்லாஹ்வின் தூதுவர்

முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், முஸ்லிம்களின் திருமண உடன்பாட்டிற்கான பொதுவான நிபந்தனைகளை அல்லாஹ்வின் ஆணைப்படி அறிவித்துள்ளார்கள் அதை முஸ்லிம்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களாக இருக்க வேண்டும். அவை தவிர அவரவர் சூழ் நிலைக்கேற்ப சில நிபந்தனைகளை, மணமக்களோ அவர்கள் சார்பில் உள்ளவர்களோ நிர்ணயித்துக் கொள்ளலாம்!'' என்றார் அத்ஹம்.

''உங்கள் நபிகள் அறிவித்துள்ள பொதுவான நிபந்தனைகள் யாவை? அவற்றைச் சுருக்கமாகக் கூற முடியுமா?'' என்று மன்னர் கேட்க, முஸ்லிம் பின் அத்ஹம் கூற லுற்றார்:-

''முதலில் ஆணும் பெண்ணும் முஸ்லிமாக இருக்க வேண்டும். எந்தவொரு தரப்பிலும் நிர்ப்பந்தம் இருக்கக் கூடாது. ஆண் பெண்ணுக்கு ஒரு தொகையை அளிக்க வேண்டும். அல்லது வாக்குறுதி செய்ய வேண்டும். அதற்கு 'மஹர்' என்று பெயர். திருமணத்துக்குப் பின் சேர்ந்து வாழ்வதில் கருத்து வேறுபாடு ஏற்பட்டு அது சமரசமாகப் பேசித் தீர்க்க முடியாதது என்று ஆகிவிட்டால், திருமண ஒப்பந்தத்தை இருதரப்பினரும் ரத்து செய்து கொள்ள லாம். இது போன்று பெண்ணுக்குச் சில உரிமைகளும் ஆணுக்குச் சில உரிமைகளும் அளிக்கப்பட்டுள்ளன. அவை பொதுவான சட்டங்கள்! இதற்கு உட்பட்ட வகையில், இருதரப்பாரும் தாங்களே சில நிபந்தனைகளை வைத்துக் கொள்ளலாம். உதாரணமாக பெண்ணுக்கு நிர்ணயிக்கப் படும் 'மஹர்' தொகையின் அளவு, மற்றும் கொடுக்கல் வாங்கல் முதலியனவாகும்!'' என்றார் அத்ஹம்.

முஸ்லிம் பின் அத்ஹம் விளக்கத்தை மன்னர் உட்பட மற்ற அமைச்சர்களும் மிகவும் வியப்போடு கேட்டுக்

PDF ISLAM

கொண்டிருந்தனர். சிலர் அவ்வப்போது ஒருவருக்கொரு வர் ஏதோ ரகசியமாகப் பேசிக் கொண்டனர். சிலர் மன்னரையும், மூத்த அமைச்சர் சேதுபத்திரரையும், மார்த்தாண்ட வர்மரையும் மாறி மாறிப் பார்த்தனர். இதைக் கண்ணுற்ற மன்னர் சேரமான் பெருமாள் அனைவரையும் நோக்கி ''அன்புக்குரியவர்களே! நாம் நம் நாட்டில் என்றுமில்லாத, கேள்விப்பட்டிராத, மக்கள் யாரும் அறிந்திராத ஒரு புதிய விஷயத்தைப்பற்றி இங்கு விவாதித்துக் கொண்டிருக்கிறோம். இது சம்பந்தமாக நாளை மக்களிடை ஏற்படும் சந்தேகங்கள் அல்லது குழப்பங்களுக்கு நாம் தான் பதில் கூறியாக வேண்டும்! ஆதலால் உங்களுக்கு என்ன சிறு சந்தேகம் ஏற்பட்டாலும், அவைகளைக் கொஞ்சமும் மனதில் வைக்காமல், பகிரங்கமாக இங்கே வெளிப்படுத்தி விடுங்கள் மன்னராகிய என் மீது நீங்கள் கொண்டுள்ள அன்பு காரணமாக, எனக்குக்கட்டுப்படுவதாக மனதில் கொண்டு, உங்களுக்கு திருப்தியளிக்காத எந்த வொரு சிறு விஷயத்துக்கும் நீங்கள் ஒப்புதல் அளித்து விடாதீர்கள்! என்னைப் பொறுத்தவரை, இந்த அரபுகளின் உண்மையான சேவைகளை நான் உணர்ந்து, அவர்களை மதிக்கிறேனே தவிர, அவர்களுடைய இஸ்லாம் மார்க்கம் பற்றி நான் ஒன்றும் அறிய மாட்டேன் அதை முழுவதுமாக அறிந்துவந்து, அவர்களுடைய ஆட்சி முறையும், சட்ட திட்டங்களும் நம் நாட்டு மக்களுக்குப் பலன் தருமா என சிந்தித்து, நமது ஆட்சியில் சில மாற்றங்களை உண்டாக்க முடியுமா என்பது நமது பல நாள் விருப்பமாகும். இந்தக் கருத்தை நான் ஏற்கனவே ஒரு முறை வெளிப்படுத்தியுள்ளேன். அந்தப் பயணத்தை நமக்கு சவுகரியமான ஒரு நேரத்தில் செய்ய முற்படுவோம்! அதற்கும் இந்தத்திருமணயோசனைக்கும் எந்த சம்பந்தமுமில்லை! இந்தத்திருமணயோசனை அரபுகள் தரப்பிலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருந்தால், நான் நிச்சயமாக அதை மறுத்திருப்

PDF ISLAM

பேன், இதை நமது தரப்பிலிருந்து எழுப்பியுள்ளதால்தான் இங்கே ஆலோசிக்கிறோம்'' என்று கூறி மேலும் விவாதத்தைத் தூண்டினார்.

அமைச்சர்களில் ஒருவர் எழுந்து, ''கீழ்ஜாதிக்காரர்களான மீனவர்களிலிருந்து இந்த அரபிகள் சில பெண்களைத் திருமணம் செய்து கொண்டு போய் விடுவதனால் நமக்குப் பெரிய நஷ்டம் ஒன்றும்ஏற்பட்டு விடப்போவதில்லை! ஆனால் மூத்த அமைச்சர் சேதுபத்திரர் அவர்களே தமது மகளை இந்த அந்நிய நாட்டவருக்குத் திருமணம் செய்து கொடுக்க விரும்பியுள்ளதாக இங்கு அறிவிக்கப்பட்டுள்ள செய்தி எங்களுக்கு அதிர்ச்சியைத் தந்துள்ளது. கண்ணியமான ஜாதியைச் சேர்ந்த அவர் இந்தக்காரியத்தைச் செய்ய எப்படி முடிவுக்கு வந்தார் என்பது தெரியவில்லை!'' என்றார்.

அவர் சொன்னதை அங்கீகரிப்பது போல் மற்றவர்கள் தலையை ஆட்டினர். அதற்கு சேரமான் பெருமாள் எந்த பதிலும் சொல்லாமல், சேதுபத்திரரை நோக்கினார். அந்தப் பார்வைக்குப் பொருள் 'நீங்களே பதில் சொல்லுங்கள்' என்பதாக இருந்தது.

சேதுபத்திரர் தனது முகத்தில் புன்னகைத் தவழ, 'இந்த வினாவை இங்கு எழுப்பிய அமைச்சருக்கு நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்! மீனவத்தலைவர்கள் சிலர் வந்து என்னைச் சந்தித்து, அரபுகளில் சிலரைத் திருமணம் செய்து கொள்ளத் தங்கள் இனப் பெண்கள் விரும்புவதாகவும், இது சம்பந்தமாக தாங்கள் அவர்களை அணுகிப் பேசிப்பார்த்தபோது, அத்தகைய விருப்பம் தங்களுக்கும் இருப்பதாக ஒப்புக் கொண்டு, ஆனால், மன்னர் பிரானின் அங்கீகாரம் இல்லாமல், அப்படியொரு காரியத்தை இந்த பூமியில் செய்ய முடியாது என்று ஒரேடியாக

PDF ISLAM

மறுத்துவிட்டதாகவும் கூறினர் நான் அவர்களிடம் கேட்ட முதல் கேள்வி, 'நீங்கள் மற்றவர்களைவிட அதிகமாக அரபு களிடம் பழகி வருகிறீர்களா! உங்கள் பெண்களையும் அவர் களுக்கு உதவியாக வேலைகளைச் செய்ய நெருங்கிப் பழக விட்டிருக்கிறீர்களே, அவர்களில் யாராவது உங்கள் பெண் களிடம் தவறுக நடந்துள்ளார்களா? நடக்க முயற்சித்துள் ளார்களா? என்பது தான்! அதற்குப்பதிலாக அவர்கள் கூறி யது. அப்படியொரு சின்னஞ் சிறு நிகழ்ச்சிக்கு இடம் ஏற் பட்டிருந்தால் கூட, நாங்கள் இங்கே திருமணம் பேசி வந் திருக்கமாட்டோம்! அவர்களை வெட்டிக் கடலில் வீசிவிட்டு, அதற்குரிய தண்டனையைக் கேட்டு வந்திருப்போம் என்று கூறிய அந்த வார்த்தையே முதலில் என் சிந்தனையைத் தூண்டியது...'' என்று கூறி சிறிது நிறுத்திவிட்டு மேலும் தொடர்ந்தார்.

'அரபுகள் தங்களை முஸ்லிம்களென்றும், மற்ற நம் அனைவரையும் முஸ்லிமல்லாதவர்கள் என நினைக்கிறுர்களே தவிர ஜாதிப்பிரிவுகளின் கண்ணேட்டம் கொண்டு யாரை யும் பார்க்கவோ யாரிடமும் பழகவோ முற்படுவதில்லை. முஸ்லிமல்லாதவர்கள் அனைவரையும் தங்கள் ''சகோதரர் கள் போல் கருதுகிறுர்களே தவிர, வேறு விதமாக எண்ணு வதில்லை. நாம் தீயர், புலேயர், நாயாடி என்று ஒதுக்கி வைத்திருப்பவர்கள் கொடுக்கும் தண்ணீரையும் தயக்க மின்றி வாங்கிப் பருகுகின்றனர். அவர்களின் அன்றுட இறை வணக்கம் மிக எளிதாக இருக்கிறது. கடலை நோக்கி, வெறும் மணலில் நின்று தொழும்போது, இந்த பூமியையே கோயிலாக்கிக் கொள்வதாக என்மனதில் படுகிறது. அவர் களுடைய நல்லொழுக்கங்களும் நேர்மையும் என்னை மிகவும் கவர்ந்துள்ளன. ஆதலால் நான் என் மகளிடம் எனது மன நிலையைக்கூறி அவர்களில் ஒருவரை 'மாப்பிள்ளா' வாக எடுத்து எங்கள் குடும்பத்துடன் இணைத்துக் கொள்ளத்

PDF ISLAM

துணிந்தேன். மன்னர் பிரான் அவர்கள் அனுமதித்தால் மட்டுமே இக்காரியம் நடக்கும்!'' என்று கூறி முடித்தார் மூத்த அமைச்சர் சேதுபத்திரர்.

கூட்டத்தில் சிறிது நேரம் அமைதி நிலவியது. வேறு மாறுபட்ட கருத்துக்கள் வருகின்றனவா என்று கவனித்த சேரமான் பெருமாள், அப்படி எதுவும் வராததைக்கண்டு ''சேதுபத்திரர் கூறியதில் நமக்கு எதுவும் புதுமையாகப் படவில்லை, நமது திராவிட பாரம்பர்யத்தின் கொள்கையே அது தான்! நமது மூதாதையர்கள் நம் சமூகத்தை இனத்தால் திராவிடர் என்றும் மொழியால் தமிழர் என்றும் தான் கண்டனர். தொழிலால் அவர்களை இனம் பிரித்தனர். போர்களத்தில் நடத்திச் சென்றவர்களைப் ''படையாட்சிகள்'' எனக் குறிப்பிட்டனர். பறை முழங்கிச் சென்றவர்களைப் ''பறையர்'' என்றனர். அகழ்குழி பதுங்குக் குழி வெட்டும் பிரிவினரை ''பள்ளர்'? ''வெட்டியார்'' என்று குறிப்பிட்டனர். நாய்களை ஏவி எதிர்படைகளைச் சிதறடிப் போரையும், வேட்டையாடுவோரையும்' ',நாயாடிகள்'' என்றனர். தீப்பந்தம் ஏந்தி காவல் புரிந்தோரைத் ''தீயர்'' என்றனர். படகுகள் செலுத்துவோரை ''படவர்'' அல்லது ''செம்படவர்'' என்று குறிப்பிட்டனர். இவ்விதமாக ராணுவ அமைப்பிலிருந்தும் மற்றும் செய் தொழில்களிலிருந்தும் பலவாறாக மக்களைச் சுட்டிக்காட்டினர், ஆனால், ஆரியர் என்ற இனத்தவர் இந் நாட்டில் நுழைந்த பிறகு தான் நான்கு வர்ணங்கள் உண்டாயின. அதுவும் ஆரம்ப காலத்தில் நல்ல நோக்கத்துடன் உண்டாக்கப்பட்டது. ஆலய காரியங்களிலும் போதனைப் பணிகளிலும் ஈடுபட்டோர் அனைவரையும் ''அந்தணர்'' என்றும் போர்பணிகளில் ஈடுபட்டோர் அனைவரையும் ''க்ஷத்திரியர்', என்றும், தொழில் துறைகளில் ஈடுபட்டோரை ''வைசியர்''என்றும், எல்லாவற்றுக்

PDF ISLAM

கும் சூத்திரமான விவசாயத்தில் ஈடுபட்டோரை ''சூத்திரர்'' என்றும் சமஸ்கிருத மொழியில் மக்களை நான்கு தலைப்புகளில் ஒன்றிணைத்தனர். ஆனால் பிற்காலத்தில் வந்தவர்கள், வேத சாத்திரங்கள் என்று ஒவ்வொரு வர்ணத்திலும் பல பிரிவுகளை உண்டாக்கி, உயர்வு தாழ்வுகளுக்கு இடம் கொடுத்து விட்டனர். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பதுதான் நமது பூர்வீக திராவிட இறைக் கோட்பாடு. ''அவன் உருவமற்றவன். எங்கும் நிறைந்தவன் ''என்பது இறைத்தன்மை இதை 'அத்வைதம்' என்றுகூறி தனிக்கொள்கையாக்கி விட்டு, விக்ரக வழிபாட்டைப் புகுத்தி, அதை 'த்வைதம்' என்று பரப்பி விட்டனர். எங்கள் தலைவர் திருஞான சம்பந்த பெருமான் இந்த உண்மையை நிலைநாட்டவே போராடினார், நாமும் அந்த நம்பிக்கையுடையவர்களே! அரபுகளை மொழியால் நம்மால் பிரித்துப் பார்க்க முடிகிறதே தவிர' வழி முறையால் நம்மைச் சார்ந்தவர்கள் தான் என்பது நமது அபிப்ராய மாகும்'! என்று கூறி முடித்தார்.

மன்னர் பிரானின் இந்த விளக்கத்தைக் கேட்ட அமைச்சர்கள் அனைவரும் ஆச்சரியத்தால் பிரமித்துப் போயினர் எத்தகைய சிறந்த ஞானவானை நாம் மன்னராகப் பெற்றுள்ளோம் என அவர்கள் கொண்ட மகிழ்ச்சி முகத்தில் வெளிப்பட்டது. அதே சமயம் அரபுகளோடு திருமண சம்பந்தம் செய்து அவர்களை 'மாப்பிள்ளாக்'களாக ஏற்றுக் கொள்வதற்கு ஒப்புதல் அளித்து விட்டார் என்பதைப் புரிந்து கொண்டார்கள்.

மன்னர் பிரானின் இந்த விளக்கம் அரபுகளுக்கும் வியப்பாகவே இருந்தது. அவர்கள் தங்களுடைய நபியாகிய முஹம்மது அவர்கள் ''நான் கொண்டு வந்துள்ள மார்க்கம் புதுமையான தல்ல. பூர்வீகமானது! நபி இப்ருஹிம் கொண்டு வந்த மார்க்கத்தையே கூறுகிறேன்'' என்று அடிக்கடி நினைவூட்டி வருவதற்கும் மன்னர் பிரானின்

பேச்சுக்கு உள்ள தொடர்பை ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டனர். முஸ்லிம் பின் அத்ஹம் எழுந்து, ''இத் திரு மணம் சம்பந்தமாகத் தன்னுடைய நண்பர்களைக் கலந்து மன்னர் பிரானின் சமூகத்தில் விபரத்தைச் சமர்ப்பிக்கின் றேன். அதன் பிறகு அவர்களுடைய தீர்ப்புக்குக் கட்டுப் படுகிறோம்'' என மரியாதையாகக் கூறியது அனைவருக்கும் திருப்தியளித்தது.

அமைச்சரவை சிறிது நாழிகைகளுக்குப் பிறகு கலைந்து மன்னர் பிரானும் சேதுபத்திரரும், மார்த்தாண்ட பூபதி யும் தனித்துப் பேசி, ராஜகுருவைச் சந்திக்க நேரத்தை நிர்ணயித்தனர்.

அன்றிரவு ஊர் அரவமெல்லாம் அடங்கியவுடன் மன் னர் சேரமான் பெருமாள், மூத்த அமைச்சர் சேதுபத்திரர், தளபதி மார்த்தாண்ட பூபதி ஆகிய மூவரும் மாறுவேடங் கள் அணிந்து, கடலோரத்தில் சென்று கொண்டிருந்தனர். அரசரின் மெய்ப்பாதுகாப்பாளர்கள் இருவரும் மூவரின் பின் னால் சிறிது தூரத்தில் பின் தொடர்ந்து வந்து கொண்டிருந் தனர்.

அரபுகளின் பெரியவர்த்தகக் கப்பல் நங்கூரம் பாய்ச்சி நின்று கொண்டிருந்த இடத்துக்கு வந்தவுடன், அதை வேடிக்கைப் பார்ப்பவர்கள் போல் காணப்பட்ட மூவரும் சுற்று முற்றும் பார்த்து யாரும் தங்களை கவனிக்கவில்லை என்று தெரிந்து கொண்டதும், கப்பலின் மேல் தளத்தை நோக்கி அங்கு நின்று தங்களை கவனித்து கொண்டிருந்த காவலனுக்கு ஏதோ அடையாளம் காட்டினர். அதைப் புரிந்து கொண்ட அக்காவலன் அரபி மொழியில் ஏதோ உத்தரவிட, கப்பலிலிருந்து கயிற்றால் கட்டப்பட்ட படிகள் ஒரு ஓரத்தில் இறக்கப்பட்டன. மூவரும் ஒருவர் பின் ஒரு வராக அதில் தாவி ஏறினர். அப்படிகள் உடனே மேலே இழுத்துக் கொள்ளப்பட்டன, பின் தொடர்ந்து வந்த மெய்க்காவலர்கள் கீழேயே காவலுக்குநின்று கொண்டனர்.

PDF ISLAM

காரியங்களெல்லாம் திட்ட மிட்டபடி நடந்தன. ஒரு அரபி மாலுமி மூவரையும் அழைத்துக் கொண்டு ஏதேதோ இண்டு இடுக்கு வழிகளில் சென்று, கடைசியாகக் கப்பலின் ஒரு மூலையில் இருந்த, பழுது பட்ட சாமான்களைக் குவித்து வைத்திருந்த ஒரு இருட்டறையைத் திறந்து விட்டார், அதோடு தன் கையில் கொண்டு வந்திருந்த ஒரு கை விளக்கையும் அங்கு ஒரு இடத்தில் மாட்டி விட்டு, அறைக்கு வெளியே போய் நின்றார்.

மன்னருக்கும் மற்றவர்களுக்கும் அந்த அறைக்குள் என்ன இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளவே சிறிது நேரம் ஆகியது. சரியான பார்வை வந்தவுடன் தான் அங்கு ஒட்டை உடைசல் சாமான்களுக்கிடையில் ராஜகுரு ராம நம்பியும், அவருடைய சீடர் விஷ்ணுபட்டரும் கைகள் பின் புறமாகக் கட்டப்பட்டு, கால்களும் கட்டப்பட்ட நிலையில் கீழே விழுத்தாட்டிக் கிடக்க வைத்திருப்பது தெரிந்தது.

சேரமான் பெருமாள் தனது சைக்கினையின் மூலம் ராஜ குருவின் கட்டுகளை அவிழ்த்து விட தளபதி மார்த்தாண்ட பூபதிக்கு உத்தரவிட அதன்படி அவர் அவிழ்த்து விடப்பட்டார்.

ராஜகுரு தனதுபழைய கம்பீரத்தையெல்லாம் இழந்து, கூனிகுறுகி, தலைகவிழ்ந்து நின்றார். வெளியே நின்ற அரபி மாலுமி மீண்டும் உள்ளே வந்து, ஒரு ஓரத்தில் இருந்த ஒரு மூட்டையைத் தூக்கிக் கொண்டு வந்து அவர்கள் எதிரே வைத்து, அதைத் திறந்தார்.

அந்த இருட்டின் விளக்கொளியில், அம்மூட்டையில் இருந்த வைர, வைடூரியங்களும், தங்க ஆபரணங்களும் தக தகவென மின்னி மேலும் பிரகாசத்தை உண்டாக்கின! அவற்றைப் பார்த்த மூவருமே ஆச்சர்யமுற்றனர். எல்லோரையும் விட சேரமான் பெருமாள் வியப்புற்று, தன்னையும்

PDF ISLAM

அறியாத நிலையில், ''என்ன! நமது நாட்டில் இவ்வளவு வைர, வைடூரிய ஆபரணங்களும், தங்க காசுகளும் உள்ள னவா? நான் கொஞ்சங்கூட எதிர்பார்க்கவில்லையே!'' என் ருர்.

''இவைகளெல்லாம் நாட்டின் பல கோயில்களிலிருந்த தெய்வங்களின் ஆபரணங்கள்! சொத்துக்கள்!'' என்ருர் சேதுபத்திரர்.

''இவைகளெல்லாம் இவர் கைக்கு எப்படி வந்தன?'' என்ருர் சேரமான்.

''அன்றைக்குப் பெரிய கோயிலில் கூடிய அர்ச்சர்களின் கூட்டத்தின் மூலம் முக்கிய ஆபரணங்களைக் கொண்டு வர வேண்டும் என்று ராஜகுரு உத்திரவு போட்டிருந்தார். அதன்படி கொண்டு வரப்பட்டன. இதை சந்தேகத்துடன் சிங்கராயர் கூறினுர்'' என்ருர் மார்த்தாண்டர்,

''என்ன காரணம் கூறி கொண்டு வரச் சொன்னுர் என்பதை அறிந்தீர்களா?'' என்ருர் அரசர்.

''மாட்சிமை தங்கிய மன்னர் பிரானுகிய தாங்கள், திராவிட இனத்தலைவராகிய திருஞான சம்பந்தர் பெருமானுரின் வழியினராம்! தங்கள் தலைவர் விக்ரகங்களுக்கு ஆபரணங்கள் அணிவதை எதிர்ப்பவராம்! அவர் அவ்வப்போது தெய்வங்களின் ஆபரணங்களை உருக்கி காசாக்கி, ஏழை எளியவர்களுக்கு திருக்கை வழக்கென அள்ளியள்ளிக் கொடுத்து விடுவாராம்! ஆண்டவனுக்காகச் செல்வர் வழங்கும் காணிக்கைகள் ஏழைகளுக்கு வழங்குவதற்கே உரியது என்பது ஞான சம்பந்தர் பெருமானின் கொள்கையாம்! ஆதலால் தெய்வ ஆபரணங்களுக்குத் தங்களால் திடீரென ஆபத்து விளையக் கூடுமென்று கூறி அவற்றைச் சில காலம் தமது பாதுகாப்பில் வைத்துக் கொண்டிருந்துவிட்டு, திருப்பி அளிப்பதாகச் சொன்னதின் பேரில் கொண்டுவந்து கொடுத்துள்ளார்கள் எனச் சொல்லப்பட்டது'' என்ருர்.

PDF ISLAM

மன்னர் ராஜகுருவை நோக்கி "ஏ! ராம நம்பி! இதெல்லாம் என்ன?" என்று தம் கோபத்தை உள்ளடக்கிக் கொண்டு, பற்களைக் கடித்துக் கொண்டு கேட்டார்.

ராஜகுரு தன் தலையை நிமிராமல் குனிந்த நிலையில் "மகா பிரபு! இந்த புத்தி கெட்டவனுக்கு உயிர்ப் பிச்சைக் கொடுக்க வேண்டும்!" என்று கூறி ஓ' வென அழத் தொடங்கினார்.

"இவன் மகா தந்திரக்காரன் மகாப் பிரபு! என்னையே சதிகாரன் என்று பகிரங்கமாகத் துணிந்து குற்றஞ்சாட்டியவன்! தங்களையும், என்னையும், தளபதியையும் மட்டுமல்ல இந்த ராஜ்யத்தையே அழித்துத் தனக்கு அடிமைப் படுத்த முயன்ற, மிகப் பெரும் தேசத் துரோகி!" இவனை உயிருடன் விடுவது, நாகப் பாம்பை நம்பி நடமாட விடுவது போலாகும். இதை விட வேறு பெரிய ஆபத்து எதுவும் இருக்காது. இவனை ஒரு போதும் உயிர் வாழ அனுமதிக்கலாகாது" என்றார் சேதுபத்திரர்.

மார்த்தாண்ட பூபதியோ, முகம் சிவக்க, இவனை என் கையால் வெட்டிக் கொல்ல அனுமதியுங்கள் பிரபு!" என்றார்.

கீழே கட்டி குப்புற வீழ்த்தப்பட்டிருந்த விஷ்ணுபட்டர் அந்த நிலையிலேயே, "மகாராஜா! அன்பு கூர்ந்து என்னையும் அவிழ்த்து விடச் சொல்லுங்கள். இந்தமகாபாவியின் எல்லா ரகசியங்களையும் கூறி விடுகிறேன்" என்று அழு குரலில் கூறினான்.

மன்னர் சைக்கினைச் செய்து அவனையும் அவிழ்த்துவிடச் சொன்னதின் பேரில், தளபதி மார்த்தாண்ட பூபதி, தன் இடுப்பிலிருந்த சிறு கட்டாரியால் அவன் கால்களிலும், கைகளிலும் கட்டப்பட்டிருந்த கயிற்றை அறுத்து விட்ட நிலை

PDF ISLAM

யில் அவன் பக்கத்தில் நின்றார். விஷ்ணுபட்டர் சிரமத்தோடு எழுந்து நின்றான்.

ராஜகுரு தலையை நிமிர்த்தி அவனைக் கொடூரமாக ஒரு பார்வை பார்த்து விட்டு மீண்டும் தலை குனிந்து கொண்டார். மன்னரையோ மற்றவர்களையோ ஏறிட்டுப் பார்க்கவில்லை.

மன்னர் விஷ்ணுபட்டரை நோக்கி, ''நீ என்ன சொல்லப் போகிறாய்?'' என்று கேட்க, ''மகாராஜா! இந்தப்பாவி ராமநம்பியின் அக்ரமங்கள் அனைத்துக்கும் துணை நின்றவர்களில் நானும் ஒருவன். எனக்கு முன்னால், முழு நம்பிக்கையோடு இவனிடம் நடந்துகொண்ட ஒவ்வொருவரையும், இவன் சமயம் பார்த்து தீர்த்துவிடுவான். பிரசாதம் என்ற பெயரில் இவன் கொடுத்த பொருட்களைத் தின்று உயிர் நீத்தவர்கள் பலபேர். அதில் தப்பித்தவர்களை காளி மாரி, குண்டன் ஆகியவர்களை ஏவி படுகொலை செய்து விடுவான். நான் ஒருவன்தான் இவனிடம் எச்சரிக்கையாக தப்பித்துக்கொண்டு வருபவன். இவனுடைய எல்லா ரகசியங்களையும், ரகசிய வழிகளையும் அறிந்தவன். இவனை யாரும் ஒன்றும் செய்ய முடியாது என்ற நம்பிக்கை உள்ளவன். கடைசியாக இவன் எழுதிய ஓலையில், தன் ரகசியங்களில் பல தங்களுக்குத் தெரிந்துவிட்டதாகவும் நாட்டை விட்டு வெளியேற பெரும் பொருளுடன் தயாராக இருப்பதாகவும்' அதில் கால் பாகத்தை எனக்களிப்பதாகவும், சொர்க்க வாசல் வழியாக வந்து தன்னை அழைத்துச் செல்லும்படியும் எழுதியிருந்தான். சொர்க்க வாசல் என்பது மடாலயத்திலிருந்து இந்த நகருக்கு அப்பால் ஒரு பாழடைந்த கோயிலுக்குக் கொண்டுபோய் சேர்க்கும் ரகசிய வழியாகும். அது இப்போது உயிரோடு இருப்பவர்களில் என்னையும் இவனையும் தவிர, காளி, மாரி, குண்டன் ஆகிய மூவருக்கும் மட்டுமே தெரியும். மிகவும்

PDF ISLAM

ஜாக்கிரதையாக அந்த வழியைப் பயன்படுத்துவோம். இவன் அனுபவிப்பதற்காக பலவந்தமாகக் கொண்டுவரும் பெண்களுக்கும், அவர்கள் கொல்லப்பட்டவுடன் வெளி யேற்றப்படும் சடலங்களுக்கும் இந்த வழியாகதான் இருந் தது. முன்னால் இந்த நாட்டை ஆண்ட அரசர்கள் சிலர் இந்த வழியாகத்தான் கொண்டுவரப்பட்டே கொல்லப் பட்டதாக ராமநம்பி என்னிடம் கூறியுள்ளான். இவ்வழி பரம ரகசியமாக பாதுகாக்கப்பட்டு வந்தது. எங்களு டைய முடிவு காலத்துக்கு இந்த அரபியர்கள் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் மிகவும் சாமார்த்தியமாக என்னைப் பின்பற்றி வந்து, சொர்க்க வாசலைக் கண்டு பிடித்து, அங்கிருந்த பாழடைந்த கோயிலில் பதுங்கி யிருந்து, நாங்கள் வெளியே வரும்போது திடீரென எங்களைப் பிடித்துக் கட்டி இங்கு கொண்டு வந்துவிட் டார்கள்'' என்று கூறினன்,

மன்னர் பிரான் ராஜகுருவை நோக்கி, இதற்குப் பிறகும் நீர் என்ன சொல்ல விரும்புகிறீர்?'' எனக் கேட்க ராம நம்பி, தன் தலையை உயர்த்தி, இரு கை களையும் கூப்பி, ''மன்னர் பிரானே! சேதுபத்திரரே கருணை கூர்ந்து என்னை மன்னித்து உயிர் பிழைக்க விடுங்கள் சகல கலா ஞானமும் இருந்தும், அவற்றை நான் துர் வழியில் செலுத்தி விட்டேன். இந்தப் பாபகிருத்தி யங்களுக்குரிய பரிகாரணங்களைச் செய்து; நான் இறை வனிடம் போய்ச் சேர அருள் பாலியுங்கள்! எனக்கு ஒரு பொருளும் வேண்டாம். என்னைச் சோழ நாட்டு எல்லையில் கொண்டு போய்விட்டுவிடச் செய்யுங்கள். நான்யாசகனாய் அலைந்து உண்மையான துறவியாய் வாழ்ந்து பாப மன்னிப்பைத் தேடிக் கொள்கிறேன்'' என்று கண்களில் நீர் மல்கக் கேட்டுக் கொண்டே மண்டியிட்டு விட்டார்.

PDF ISLAM

மகா பெரிய சக்தியாகத் திகழ்ந்த ராஜகுருவின் இந்த நிலை அனைவருடைய உள்ளத்தையும் உருக்கக்கூடியதாக இருந்தது. இரக்கமுள்ள மன்னர் சேரமான் பெருமாளின் கண்களில் கண்ணீர் மல்க ஆரம்பித்தது. இதைக் கண்ட சேதுபத்திரரும், மார்த்தாண்டரும் மன்னருடைய மன நிலைக்கு ஒத்துப்போவது போல, தலையை அசைத்தனர்.

மன்னர் அப்படியே சிறிது நேரம் பிரமித்தாற்போல நின்றுவிட்டு, சேதுபத்திரரையும், மார்த்தாண்டரையும் நோக்கி, ''ராமநம்பி. தானே கேட்டுக்கொண்ட தண்டனையை அவருக்கு அளித்துவிடுங்கள்'' என்று கவலையோடு கூறிவிட்டுத் தலையைத் திருப்புகையில், யாரும் சிறிதும் எதிர்பாராத வகையில், விஷ்ணுபட்டர் திடீரெனப் பாய்ந்து தளபதி மார்த்தாண்ட பூபதியின் இடுப்பிலிருந்த குத்துவாளை வெடுக்கெனப் பிடுங்கி, முழந்தாளிட்டிருந்த ராஜகுரு ராமநம்பியின் இருதயத்தில் மாறி மாறி இரு முறைக் குத்திவிட்டு, அதை வெளியே எடுத்துத் தனது நெஞ்சிலும் ஓங்கிக் குத்திக்கொண்டுவிட்டார், சில விநாடிகளில் திடீரென நடந்துவிட்ட இந்த பயங்கர நிகழ்ச்சியைத் தடுக்க யாராலும் முடியவில்லை. இரண்டாவது முறை தன்னைக் குத்திக்கொள்ள விஷ்ணுபட்டர் முயன்ற போதே, மார்த்தாண்ட பூபதியினால் அவர் கையை இறுகப் பிடித்து நசுக்கி குத்துவாளைக் கீழே விழச் செய்விக்க முடிந்தது. ஆனால் அதே சமயம் விஷ்ணுபட்டரும் கீழே சாய்ந்துவிட்டார்.

ராஜகுரு கீழே சாய்வதற்கு முன் மன்னர் சேரமான் பெருமாள் பாய்ந்து சென்று அவரைத் தன் மடியில் கிடத்திக்கொண்டார். இரத்தம் வேகமாக வெளிப்பட்டு, மன்னருடைய உடம்பெல்லாம் பீய்ச்சிக்கொண்டிருந்தது. 'துணைக்குச் சேதுபத்திரரும் சேர்ந்து ரத்தத்தில் நனைந்தார்'

PDF ISLAM

இந்த திடீர் நிகழ்ச்சியினால், அனைவரும் அதிர்ச்சியடைந்தாலும் ராஜகுருவின் முகத்தில் மட்டும் எந்தப் பீதியும் வெளிப்படவில்லை, அதற்கு மாறாக அவர் முகத்தில் ஒரு சாதாரணமான புன் சிரிப்பும் தெளிவும் ஏற்பட்டது,

அவர் மிகவும் திணறிக் கொண்டே, ''மன்னவா! நான் மகா பெரிய பாக்கியங்களைப் பெற்றுவிட்டேன். கருணைக் கடலான உங்களின் மன்னிப்பைப் பெற்றது ஒரு பாக்கியம்! அதைவிட உங்கள் உடம்பையும், காலடியையும் என் இரத்தத்தால் கழுவும் பாக்கியம் பெற்றது மற்றொரு பாக்கியம்! அதோடு உங்கள் மடியின் மீது என் உயிரை விடக்கிடைத்தது மகா சிறந்த பாக்கியம், இப்படிபட்ட ஒரு உன்னதமான மரணம் எனக்குக் கிடைத்தது பகவானுடைய மகா பெரிய கிருபையாகும்!'' என்று அமைதியாக கூறிவிட்டு, ''சேதுபத்திரரே, இரத்தம் வேகமாக வெளிப்படுவதை உங்கள் துணியைக்கொண்டு அடையுங்கள்! நான் இன்னும் கொஞ்சம் பேச வேண்டும்!'' என்று சிரித்த முகத்துடனேயே கூறினார்.

சேதுபத்திரர் தனது முண்டாசைக் கிழித்துத் துண்டாக்கி, ராஜகுருவின் ரத்தக் காயக் குறிகளை அவசர அவசரமாக அடைத்தார்.

''மன்னருக்கு மன்னரே! குருவுக்கு குருவே! என் மரணத்தை மறைத்துவிடாதீர்கள்! உயிர் போனபின் என்னை சொர்க்கவாசல் வழியாகவே என் பூஜை அறைக்குக் கொண்டு சென்று, காயங்களை மறைத்து முறைப்படி என்னை அலங்கரித்து, என் ஆசனத்தில் அமரச் செய்து, நான் என் பூஜையின் மூலம், பூதவுடம்பை விட்டு விட்டு, மோட்ச லோகத்துக்குப் போய்விட்டதாகக் கூறி மக்களை என்னை தரிசிக்கச் செய்து சாஸ்த்ரோதத முறைப்படி என்னை அக்னி பகவானுக்கு அர்ப்பணிக்கச் செய்யுங்கள்!'' என்று கூறி சிறிது நிறுத்தி, மீண்டும் சக்தியை வரவழைத்

PDF ISLAM

துக்கொண்டு, ''இது எனக்காக நான் சொல்லிக்கொள்ள வில்லை! தங்கள் ஆட்சி மீதும் என் மரணத்தின் மீதும் சந்தேகம் எதுவும் ஏற்படாமலிருக்க நான் இறுதியாகச் சமர்ப்பிக்கும் வேண்டுகோள் வாழ்க...சேர...மான்... வம்ச...'' என்று தட்டுத் தடுமாறிக்கொண்டிருந்தபோதே ராஜகுரு ராம நம்பியின் உயிர் பிரிந்தது.

தளபதி மார்த்தாண்ட பூபதி தன் இடுப்புத்துண்டைக் கிழித்து, விஷ்ணுபட்டரின் காயத்தை அடைத்துக் கட்டுப் போட்டார். அவன் அழுது கொண்டே, ''என்னைக் காப் பாற்றுதீர்கள்! தயவு செய்து சாகவிடுங்கள்!'' என்று திரும் பத் திரும்ப அலறினான்.

இந்த சப்தத்தைக் கேட்டு வெளியில் காவல் நின்ற அரபி எட்டி பார்க்க, மன்னர் அவனை நோக்கி 'அத்ஹம் எங்கே?' என்று கேட்டார். அவன் அதற்கு பதில் சொல் லாமல்' அங்கிருந்து ஓடி, சில நிமிடங்களில்' முஸ்லிம் பின் அத்ஹம் மற்றும், எப்போதும் அவருடன் இருக்கும் மற்றும் நான்கு அரபிகளுடன் வந்து நின்றான்,

அவர்கள் ஆச்சரியத்துடன் அங்குள்ள காட்சியைப் பார்த்தனர். மன்னரின் மடியில் ராஜகுருவின் சடலமும், மார்த்தாண்டருக்குப்பக்கத்தில் விஷ்ணுபட்டரின் உடல் துடித்துக் கொண்டிருப்பதையும் கண்ட அவர், அரபிமொழி யில் ஏதோ சொல்ல, ஒரு நபர் மிக வேகமாக விரைந்து சென்று, கையில் ஒரு பையுடன் உள்ள வேறொரு அரபியை அழைத்து வந்தான். அவர் யாருடைய அனுமதியையும் எதிர் பாராமல் முதலில் ராஜகுருவின் கையைப் பிடித்துப் பார்த்துவிட்டு அவருக்கு உயிர் இல்லை என்று உதட்டைப் பிதுக்கித் தலையை ஆட்டி விட்டு, பிறகு நெஞ்சில் காதை வைத்து கவனித்து, அரபியில் ஏதோ சொல்லிவிட்டு, மிக வேகமாக வைத்தியம் செய்யத் தொடங்கினார்.

PDF ISLAM

களிமண்போன்ற ஏதோ ஒருமாவை வைத்து, கத்திக் குத்துக்காயம் ஏற்பட்ட புண்ணை அடைத்து இரத்தக் கசிவை உடனே நிறுத்தினர், ஏதோ தண்ணீர் போன்ற மருந்தை விஷ்ணுபட்டரின் வாயில் ஊற்றினர். தைலம் போன்ற ஒன்றை உடம்பு முழுவதுமாகத் தடவத் தொடங்கினர். இதைத்தடவ இன்னொரு அரபியையும் துணைக்கு அழைத்துக்கொண்டார்! பிறகு அரபியில் ஏதோ சொல்லி விட்டு, மன்னருக்குத் தலை குனிந்து மரியாதைச் செய்து விட்டு வெளியேறினர்.

அந்த அரபி வைத்தியரின் செய்கையிலிருந்து, ராஜகுரு உயிர் முற்றிலும் பிரிந்துவிட்டது என்பதையும் விஷ்ணு பட்டர் உயிர் காப்பாற்றப்பட்டது என்பதையும் அனைவரும் புரிந்து கொண்டனர்.

ராஜகுருவின் பிணத்தை மன்னரின் மடியிலிருந்து கீழே இறக்கி, வைத்து விட்டு ''அத்ஹம்! இங்கு மன்னர் குளிக்க வசதியுள்ளதா?'' என சேதுபத்திரர் கேட்க, அவர் தலையை ஆட்டி 'வசதியுள்ளது' என்று ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து, முஸ்லிம்பின் அத்ஹமே மன்னரை அழைத்துச் சென்றார்.

தளபதி மார்த்தாண்டர் மீது அதிகமாக ரத்தம் எதுவும் படாமல் இருந்ததால், எங்களுக்குக் கைகால்கள் அலம்ப சிறிதளவு தண்ணீர் கொண்டு வாருங்கள் என ஒரு அரபியைப்பார்த்து கேட்க அவர் வேகமாக வெளிச்சென்று அரை பீப்பாய் அளவு தண்ணீரை இரண்டுபேர் தூக்கிக் கொண்டு வந்து கொடுத்தனர். அதைக்கொண்டு முதலில் சேது பத்திரரும், அடுத்து மார்த்தாண்டரும், தங்கள் கைகால்களை அலம்பி விட்டுக் காத்திருந்தனர்.

PDF ISLAM

சிறிது நேரம் கழிந்து மன்னர் வந்தார். அவரைக் கண்டவுடன் சேதுபத்திரரும் மார்த்தாண்டரும் மட்டுமல்ல அங்கிருந்த அரபுகளெல்லாம் கூட ஆச்சரியத்தால் தங்கள் கண்களை அகலத்திறந்து பார்த்தனர். அவர் மன்னர் சேரமான் பெருமாள்தானு என வியப்புடன் நோக்கினர். காரணம் அவர் அணிந்திருந்த அரபு உடையாகும்!

முழு நீள வெள்ளை அங்கி அணிந்து, தலையில் துண்டு கட்டி, அதன் மீது அரபுகள் அணியும் நாற்சதுரவேடு அணிந்து அரபுகள் அணிவது போன்ற பாதரட்சையுடன் அவர், யாரும் கற்பனை செய்யாத தோற்றத்துடன் காணப் பட்டார். அவருடைய சிவந்த உடம்புக்கும், அழகிய முகத் துக்கும் அவர், கொஞ்சம் கூட சந்தேகத்துக்கிடமின்றி ஒரு அரபியை விட அழகான தோற்றத்துடன் காணப்பட்டார். அது மட்டுமல்ல, அவர் முகத்தில் யாரும் என்றும் பார்த் திராத ஒரு அழகிய ஜோதியும் பிரகாசித்தது.

மன்னரும் முஸ்லிம்பின் அத்ஹமும் என்ன பேசிக் கொண்டார்களோ தெரியவில்லை, அவர் மற்றவர்களை நோக்கி, ''வாருங்கள் போகலாம்! மற்ற வேலைகளையெல் லாம் நமது அரபு நண்பர்கள் கவனித்துக் கொள்வார்கள். ராஜகுருவின் விருப்பம் போல எல்லா சடங்குகளும் நடை பெறும். இங்கு அவர்களுடன் வந்த ஆபாரணங்களையும், தவிர, வைடூரிய கற்களையும், தங்க காசுகளையும் எடுத்துச் செல்வோம்'' என்று மார்த்தாண்டரைப் பார்த்துக் கூற அவர் அந்த மூட்டையைத் தூக்கிப்பார்த்து, கனம் தாங்கா மல் மீண்டும் கீழே வைத்து விட்டார். மன்னர், முஸ்லிம் பின் அத்ஹமைப் பார்க்க அவர் சைக்கினையின்படி இரு அரபுகளும் மூட்டையைத் தூக்கிக் கொண்டனர்.

அவர்கள் கப்பலில் நடந்து வந்து கொண்டிருந்தபோது சேது பத்திரர் முஸ்லிம் பின் அத்ஹமை நோக்கி, சிறு

நகைச்சுவையாக. ''எங்கள் மன்னரை நீங்கள் உங்கள் முஸ்லிம் போலவே ஆக்கி விட்டீர்கள்!'' என்றார்.

முஸ்லிம்பின் அத்ஹம் அமைதியாக, ''மூத்த அமைச்சர் அவர்களே! எங்கள் மார்க்க நம்பிக்கைப்படி மன்னர் பிரான் அவர்கள் இன்னொரு மகா பாக்கியத்துக்கும் உள்ளாகியிருக்கிறார்கள் அதாவது, நாங்கள் மிகவும் புனிதமாகக் கருதும் 'ஜம் ஜம்' தண்ணீரைக் கொண்டு கடைசியாகத் தம் உடம்பையும் கழுவும் வாய்ப்பைப் பெற்றுள்ளார்கள். இந்த வாய்ப்பு எங்களில் கூட யாருக்கும் கிடைத்ததில்லை'' என்றார்.

'அது என்ன ஜம் ஜம்?' என்று வியப்போடு கேட்டார்.

''அது மக்கமா நகரில் உள்ள புனித ஆலயமான, எங்கள் நம்பிக்கைப்படி உலகில் முதன் முதலாகக் கட்டப்பட்ட ஆலயமான கஃபா ஷரீப் என்ற கட்டிடத்திலிருந்து ஐயாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் ஊற்றுநீராகும், இதை நாங்கள் மிகவும் பரிசுத்தமானதாகவும், மருந்தாகவும் பய பக்தியுடன் உபயோகித்து வருகிறோம்'' என்றார் முஸ்லிம் பின் அத்ஹம்.

'அது உங்களுக்கு இங்கு எப்படிக் கிடைத்தது?' என்று கேட்டார் சேதுபத்திரர்.

'மகாப்பிரபு! எங்கள் கடல் பயணத்தை எங்கள் பூமியிலிருந்து நாங்கள் தொடங்கும் போது, போதிய ஜம்ஜம் தண்ணீரைச் சேகரித்துக் கொள்ளாமல் புறப்படமாட்டோம். எங்கள் துறைமுகங்களுக்கு, மக்கமா நகரிலிருந்து ஒட்டகங்கள் மூலம் கொண்டு வந்து கொடுப்பார்கள். எங்கள் பயணம் நிறைவு பெற்று நாங்கள் தாயகம் திரும்பும் வரை அதைப் பாதுகாப்போம்'' என்றார் அத்ஹம்.

PDF ISLAM

'அப்பாடா! அவ்வளவு தண்ணீரா? உங்கள் கப்பல் முழுவதும் தண்ணீராகக் கொண்டு வந்தால் கூட, உங்கள் எண்ணிக்கைக்கு அது போதாதே!'' என்றார் மார்த்தாண்டர்.

''தளபதி அவர்களே ! தாங்கள் நினைப்பதுபோன்றல்ல! ஒரு குறிப்பிட்ட அளவே எடுத்துக் கொள்ளலாம் ! எங்களுக்குத் தண்ணீர் கிடைக்கும் நாடுகளில் போதிய தண்ணீரை எடுத்துக்கொண்டு, ஜம்ஜம்மில் சிறிதளவு அத்துடன் கலந்து குடிப்போம். எங்களில் யாராவது வியாதியஸ்தரானால், அவருக்கு ஒரிரு வேளை தனி ஜம்ஜம் நீரைக் கொடுத்தோமானால் அது உடம்பைச்சுகப்படுத்தும் மருந்தாகிவிடும். குறிப்பாகக் கடல் வியாதிக்கு ஜம்ஜமைவிட வேறு சிறந்த மருந்தில்லை! அதோடு எந்த எண்ணங்களை மனதில் கொண்டு குடிக்கிறோமோ அந்த எண்ணம் நிறைவேறுகிறது என்பது எங்கள் நம்பிக்கை !'' என்றார் அத்ஹம்.

''நீங்கள் பல மாதங்கள் கடலிலும் கரையிலும் அலைகிறீர்களே ! அந்தத் தண்ணீர் கெட்டுப்போகாதா ?'' என்று சேதுபத்திரர் கேட்டார்.

''பல வருடங்களானாலும் கெட்டுப் போகாது மகா பிரபு ! தாங்கள் விரும்பினால் அதைப் பரீட்சித்துப் பார்க்கலாம்! சிறிதளவு தண்ணீரை இங்கு நாங்கள் தங்களிடம் தந்துவிட்டுப் போகிறோம் ! தாங்கள் அதைப் பத்திரப் படுத்திவையுங்கள் ! அல்லாஹ் நாடினால் சில ஆண்டுகளுக்குப் பிறகு நாங்கள் வந்து உங்களைச் சந்திக்கிறோம். அல்லது வேறு யாரும் எங்கள் பூமியினர் இங்கு வருவார்கள் அந்த தண்ணீர் கெட்டுப்போயோ அல்லது அதன் சுவையில் சிறிதளவு மாறுபட்டோ இருந்தால், எங்களை பொய்யர்கள் என்று முடிவுகட்டிவிடலாம், இந்த நாட்டில் நாங்கள் இறங்குவதைக் கூடத் தடை செய்துவிடலாம் !'' என்று கெம்பீரமாகக் கூறினார் முஸ்லிம் பின் அத்ஹம்.

PDF ISLAM

''நாமே அதைப் பார்ட்சிப்பதாகச் சொல்லியிருக்கிறேம்'' என்று கூறிய மன்னர், ''கடைசியாக அந்தத் தண்ணீரால் நமது உடம்பைத் துடைக்கும்போது நீங்கள் ஒரு மந்திரம் சொல்லிக் கொடுத்தீர்களே, அதையும் பற்றிக் கூறுங்கள்'' என்ருர்.

''அது மந்திரமில்லை எமது மதிப்புமிக்க மன்னவா! அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் ஆரம்பம் செய்கின்றேன் என்ற சொல்லை ''பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்'' என்ற அரபுச் சொல்லால் குறுப்பிட்டுச் சொன்னேம். நீங்கள் அந்த நீரைப் பருகிப் பார்க்க விருப்பப்பட்டபோது, அதையே உங்களுக்குச் சொல்லிக் கொடுத்துப் பருகச் செய்தேன்'' என்ருர் முஸ்லிம் பின் அத்ஹம்!

''அதை மீண்டும் ஒரு முறைச் சொல்லுங்கள்'' என்ருர் மன்னர்.

''பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்'' என்ற ஒவ்வொரு வார்த்தையையும் மூவரும் உடனுக்குடன் திருப்பி கூறினர்.

''பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம் என்ற அரபிச் சொல் அழகாகவும். இனிமையாகவும். அதன் பொருள் கருத்தாழமிக்கதாகவும் இருக்கிறது. எங்களுடைய திரு ஞானசம்பந்தர் பெருமாள். ''எல்லாம் அவன் செயல்'' என்றும், ''எதையும் அவன் திருநாமம் போற்றி''த் தொடங்க வேண்டும் என்றும், ''இதனுல் 'நான்' என்ற அகம்பாவம் அழிந்து, நல்ல காரியங்களையே செய்யவும் தீமைகளிலிருந்து விலக்குப் பெறவும் முடியும்'' என்றும் அருளியிருப்பதை அப்படியே பிரதிபலிப்பதாக உள்ளது. அதற்கு முற்றிலும் பொருத்தமாக, ''பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்'' என்ற சொல் அமைந்துள்ளதால்

PDF ISLAM

இனி நாமும் எதைத் தொடங்குவதாயினும், இதே அரபிச் சொல்லைக்கொண்டு தொடங்க முடிவு செய்துவிட்டோம் என்றார் சகல கலையும், பன்மொழிகளையும் கற்றுத் தேர்ந்த மாமேதை, சேரமான் பெருமாள்.

''நீங்கள். பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்'' என்ற சொல்லை ஒரு அரபியைவிடச் சுத்தமாகவும் தெளிவாகவும் உச்சரிப்பது எங்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறது? என்று முஸ்லிம் பின் அத்ஹறம் கூற, சேதுபத்திரரும், மார்த்தாண்டரும், பிஸ்மில்லாஹ்...வைக்கூறி, எங்கள் உச்சரிப்பு எப்படி என்று கேட்க, அவர்களுக்கு நாக்கு சரியாக வரவில்லை என்பதைச் சுட்டிக்காட்டும் விதத்தில் மென்மையாகச் சிரிக்க, முஸ்லிம் பின் அத்ஹறமும் மற்ற அரபிகளும் அவ்விதமே சிரித்தனர்.

கப்பலிலிருந்து பாலம் வழியாக மன்னரும் மற்றவர்களும் இறங்கியவுடன், அங்கு கீழே நின்றுகொண்டிருந்த மெய்க் காவலர்களிடம், நகை-நாணய மூட்டைகள் ஒப்புவிக்கப்பட்டன. அவர்கள் அதைவிட ஆச்சரியமாக அரபு வேடத்திலிருந்த தங்கள் மன்னரையே ஆச்சரியத்துடன் பார்த்தனர். அவர்களைப் பார்த்ததும் மன்னரும் சிரித்துக் கொண்டார்.

மன்னர் முஸ்லிம் பின் அத்ஹறமை நோக்கி, ''நீங்கள் நாம் பேசிக் கொண்ட காரியங்களையெல்லாம் முடித்த பின் இரவு எந்நேரமானாலும், சேதுபத்திரரை அவர் இல்லத்தில் சந்திக்கிறீர்கள்!'' என்று கூறிய போது. அத்ஹறம், குனிந்து ''தங்கள் ஆணை மன்னவா!'' என்று ஏற்றுக் கொண்டார்.

மன்னரும், மூத்த அமைச்சரும், தளபதியும், இரு மெய்க்காவலர்களும், கடலோர மணற்பரப்பில் நடந்து சென்று சவுக்குத் தோப்புக்குள் நுழையும் வரை அரபுகள் கப்பலிலிருந்து அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தனர்

PDF ISLAM

அடுத்தநாள் விடியற்காலே ராஜகுருவின் மடாலயத்தில் பெரியதொரு பரபரப்பு! துப்புரவுக்காகக் கதவைத் திறந்த காவலர்கள், ராஜகுரு தமது ஆசனத்திலேயே சமாதியாகி யிருந்த நிலேயைக் கண்டு, பதட்டமுற்று, செய்தியைப் பரப் பவே, மடாலயத்தில் பணி புரிந்தவர்கள் அனைவரும் வந்து கூடிவிட்டனர். அவர்கள் உள்ளே சென்று பார்க்க காவலர் கள் அனுமதிக்காததால் தூரத்தில் நின்றே ராஜகுரு இறந்து பட்ட நிலேயில் கம்பீரமாக அமர்ந்திருந்த காட்சியைக் கண்டு 'கோ' வெனக் கதறிக் கீழே விழுந்து கும்பிட ஆரம் பித்தனர். செய்தி பரவப்பரவ அக்கம் பக்கத்துவாழ் மக் களும் கூட்டங் கூட்டமாக வரத் தொடங்கினர்.

காவலர்கள் உடனடியாக அந்த அறையைப் பூட்டி விட்டு. மன்னரும் மூத்த அமைச்சரும், தளபதியும் வந்து பார்த்த பின்னர் தான் மீண்டும் அறை திறக்கப்படும் என்று அறிவித்தனர். அதோடு, தகவலேச் சொல்ல சில காவலர்களேயும் அனுப்பினர். நேரத்துக்கு நேரம் மக்கள் கூட்டம் அதிகமாகவே, மேலும் அதிகமான காவலர்களே அனுப்ப தளபதிக்கு வேண்டுகோள் விடுத்து ஆளே அனுப் பினர்.

அவ்வளவு சீக்கிரமாகத் தளபதியும் படையினரும் எப் படி வந்தார்கள் என ஆச்சரியப்படத்தக்க வகையில் படை யினர் வந்து குவிந்து, கூடிக் கொண்டிருந்த கூட்டத்தை ஒழுங்குபடுத்தத் தொடங்கினர்கள். மன்னரும் மூத்த அமைச்சரும் வந்து கொண்டிருக்கிருர்கள் என அறிவிக்கப் பட்டது.

முதலில் மூத்த அமைச்சர் சேதுபத்திரர் தான் வந்தார். அவர் பூஜை அறையைத் திறக்கச் சொல்லி வெளியில் நின்ற

PDF ISLAM

வாறே, ராஜகுரு தமது ஆசனத்தில் கம்பீரமாகச் சமாதி ஆகியிருப்பதைக் கண்டு, இரு கையும் கூப்பிக் கும்பிட்டார். மக்களின் ஆரவாரம் அதிகமாகவே, அவர் அமைதி! அமைதி! எல்லோரும் குருமகானைச் சந்திக்கலாம்! சில நிமிடங்கள் பொறுங்கள்!'' எனக் கூற அவர் கூறிய வார்த்தையை, தளபதி மார்த்தாண்டரும், மற்றுமுள்ள காவலர் தலைவர்களும் எடுத்துக் கூற கூட்டத்தினர் முண்டியடித்துக் கொண்டாலும் அமைதியைக் கடைப்பிடித்தனர்.

மடாலயத்தின் அடுத்த பொறுப்பிலிருந்த அர்ச்சகரிடம் சேதுபத்திரர் ஏதோ சிறிது நேரம் விவாதித்தார். அதை யொட்டி எங்கிருந்தோ பிரகாசமான குத்து விளக்குகளும் மேலும் சிறிய கை விளக்குகளும் கொண்டு வரப் பட்டன. அதோடு தயாராக வைத்திருந்தது போல் பெரிய பெரிய மலர்மாலைகளும் கொண்டுவரப்பட்டன.

ராஜகுருவின் தலைமட்டும் தெரிய கூடிய விதத்தில் உடம்பெல்லாம் பூரணமாக மூடிய நிலையில் அந்த மாலைகள் அணிவிக்கப்பட்டன. அறைமுழுவதும் ஜெகஜ் ஜோதியாய் பிரகாசிக்கும் வண்ணம் விளக்குகள் கொழுத்தப்பட்டன. அத்துடன் பித்தளையில் செய்யப்பட்ட ஒரு புகை விளக்கு கொண்டு வரப்பட்டது. அதில் நிறையவாசனைத் துகள்கள் நிரப்பப்பட்டு, அது புகையச் செய்யப்பட்டது.

இந்தச் சடங்குகளெல்லாம் முடிந்த சிறிது நேரத்தில் மூத்த அர்ச்சகரை நோக்கி, ''குருமகானின் இரண்டு சீடர்களும் எங்கே?'' என்றார் ஒன்றுமறியாதவர்போல் சேதுபத்திரர். அதற்கு அவர், ராஜகுரு தனது மௌன பூஜையை ஆரம்பிக்குமுன் அவர்கள் எங்கேயோ ஓடிவிட்டார்கள்'' என்றார்.

'அப்படியானல் இவருக்கான ஈமச்சடங்குகளைச் செய்வோர் யார் என்று கேட்டார்,

''மகாப்பிரபு சம்பிரதாயப்படி, பிணத்தை நாங்கள் யாரும் தீண்டக்கூடாது! மரணதோஷம்எங்களுக்கெல்லாம் ஏற்பட்டுவிடும்! சீடர்கள் இருந்தாலும் அவர்களும் தீண்ட மாட்டார்கள். கொள்ளிவைக்க மட்டும்தான் அவர்களுக்கு உரிமை இருக்கிறது! பிணத்தைச் சுத்தப்படுத்தவும், அலங்கரிக்கவும் புலையர்களான கீழ்ஜாதியில் ஒரு பிரிவினர் உள்ளனர். அவர்கள் தான், தாங்கள் சொல்வது போல் அனைத்துக் காரியங்களும் செய்து சுடுகாடுவரை கொண்டுபோய்ச் சேர்த்து, எரிபொருளும் அடுக்குவார்கள்!'' என்ருர்.

''அப்படியானல் அவர்களை நம்மை வந்து பார்க்கச் செய்யுங்கள் என்று கூறிக் கொண்டு இருக்கும்போதே, கூட்டத்தினரின் கூக்குரல் அதிகமாகியதால், மார்த்தாண்டரை அழைத்து, மக்களை வரிசையாக தரிசித்துச் செல்ல ஏற்பாடு செய்யுங்கள். யாரும் நின்று பார்க்கவோ, அறைக்குள் செல்லவோ அனுமதிக்கமாட்டீர்கள் என்பது நான் சொல்ல வேண்டிய அவசியமில்லை! என்ருர்.

மார்த்தாண்டர் காவலர்களைக் கொண்டு சிறிது நேரத்தில் அதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். மக்கள் வரிசைப் படுத்தப்பட்டு; ஒவ்வொருவராக, பூஜை அறையில் சமாதி இருந்த ராஜகுருவைக் கும்பிட்டுக் கொண்டே நடந்தவாறு இருந்தனர். ஒரே அழுகைச்சப்தமும் சோகக்குரலும் எழும்பிக் கொண்டிருந்தன.

சிறிது நேரத்தில், 'மன்னர் பிரான் வருகிருர்'' என்ற பேரொலி எழுந்தது. கூட்டமெல்லாம் சப்தம் குறைந்து, அமைதியாக ஒதுங்கி நின்றது?

PDF ISLAM

மன்னர் சேரமான் பெருமாள், தனது மெய்க்காவலர் புடைசூழ, அமைதியாக மடாலயத்துக்குள் நுழைந்தார். அவர் அந்த மடாலயத்தை ஏற்கனவே பார்த்திராதவர் போல, அதன் அமைப்புகளை நோட்டமிட்டவாறு நடந்து சென்றார். இரு பக்கமும் நின்ற மக்கள் அழுதுகொண்டே கை கூப்பி வணங்கி மன்னருக்குத் தங்கள் மரியாதையைச் செலுத்தினர்.

ராஜகுரு சமாதியாகியிருக்கும் பூஜை அறையை நெருங்கிய மன்னர், தன் இரு கைகளையும் கூப்பி, அவரைக் கும்பிட்ட நிலையில் சிறிது நேரம் நின்றார். அவரையும் மீறி அவர் கண்களில் நீர் பொல பொலவென உதிர ஆரம்பித்தது. இதைக் கண்ட மக்களும் 'ஓ' வெனக் கதற ஆரம்பித்தார்கள்.

''ராஜகுருவே உங்களுக்கா இந்த நிலை? உங்களை முற்றிலும் நம்பி இருந்தேனே! உங்களைக் கொண்டு ஒரு நல்லாட்சியை அமைத்துவிட முடியும் என்று கற்பனை செய்திருந்தேனே! நீங்கள் மோசம் செய்து விட்டீர்களே! உங்களை இன்றளவும் நம்பி உங்களுக்காகக் கதறும் மக்களை நீங்கள் புரிந்துகொள்ளவில்லையே! அவர்களையும் ஏமாற்றி விட்டீர்களே! ஐயகோ!'' என்று புலம்பினார்! மன்னர் மனம் வெதும்பிக் கூறுகிறார் என்ற உண்மையை மக்கள் புரிந்துகொண்டார்கள். ஆனால் அதன் அகப்பொருளை, சேதுபத்திரரும், மார்த்தாண்டரும், மன்னரின் இரு மெய்க்காவலர்கள் மட்டுமே விளங்கிக் கொள்ள முடிந்தது.

சிறிது நேரம் தங்கியிருந்த மன்னர் சேதுபத்திரரிடம் ஏதோ மெதுவாகப் பேசிவிட்டு, மடாலயத்தை விட்டு வெளியேறினர். அவர் திரும்பும்போது தனது கைகளை உயர்த்தி மக்களைச் சமாதானம் அடையுமாறு சைக்கினைச்

PDF ISLAM

காட்டிக் கொண்டே சென்றார். மக்கள் கூட்டம் மீண்டும் தரிசனத்துக்குச் சுழல ஆரம்பித்தது.

ராஜகுருவின் மரணத்தை யொட்டி, அன்றும் மறு நாளும் அரசாங்க விடுமுறை விடப்பட்டது. நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் மக்கள் வந்து தரிசிக்க, ஈமச் சடங்குகள் மறுநாள் மாலை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

மற்ற அமைச்சர்கள். வேதியர்கள், மந்திரிகள், வைசியர்கள் அனைவரும் தொடர்ந்து வந்து தரிசனம் செய்து கொண்டிருந்தனர். கீழ் ஜாதியினரான புலையர்கள், நீதவர்கள், சக்கிலிகள் முதலானவர்கள் உள்ளே அனுமதிக்கப் படாததால், தெருவிலேயே ஒரு ஓரத்தில் ஆண்களும் பெண்களுமாகக் கூடி நின்றனர். மறுநாள் பகல் வரை அதாவது, ராஜகுருவின் இறுதி யாத்திரை ஆரம்பிக்கும்வரை தொடர்ந்து மக்கள் கூட்டம் கூடிக்கொண்டே இருந்தது.

பிணத்தைப் பாடையில் வைத்து அலங்கரிக்கும் புலையர்கள் எட்டுபேர் மட்டுமே குளித்து ஈரத்துணி அணிந்த நிலையில் பூஜை அறையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் கதவை மூடிக்கொண்டு ஏதோதோ சடங்குகளைச் செய்து விட்டு. பாடையில் பிணத்தைச் சுமந்தவண்ணம் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தனர். வெளியிலேயே தயாராகச் செய்து வைக்கப்பட்டிருந்த புஷ்பப் பல்லக்கிலே அப் பாடையை வைத்துவிட்டு, எடுத்துச் செல்ல தயாராக இருந்தார்கள்.

சேதுபத்திரரே முன்னின்று எல்லா காரியங்களையும் கவனித்தார். அவர் அடிக்கடி அர்ச்சகர்களிடம் ஆலோசனை

PDF ISLAM

கள் கேட்டு அதன்படி நடந்தார். அவருக்குத் துணையாக மார்த்தாண்ட பூபதி செயல்பட்டார். ஒரே யொரு பிரச்னை மட்டும் சிக்கலாக இருந்தது. அதாவது, ராஜகுருவின் சடலத்துக்கு அவரின் சீடர்களில்ஒருவர்தான் கொள்ளி வைக்க வேண்டுமென்பதாகும். அதுவும் தீர்ந்துவிட்டது. பிணம் தூக்கப்படுவதற்கு சில விநாடிகளுக்கு முன் திடீரென இரண்டு சீடர்களும், குளித்து முழுகியவர்களாக ஈரத்துணியுடன் வந்து நின்றனர். அவர்களில் மூத்தவன் நெருப்புச் சட்டியையும், மற்றவன் தண்ணீர்க் குடத்தையும் சுமந்து கொண்டார்கள்.

அன்று சிறைக் கைதிகளெல்லாம் விடுதலை செய்யப் பட்டார்கள், ராஜகுருவின் ஆட்கள் என்று கைது செய்யப்பட்டவர்களும். காளி, மாரி மற்றும் அவன் சகாக்களும் கூட விடுதலை பெற்றனர். சிங்கராயரின் ஒற்றர்படை, பல மாறு வேடங்களில், மக்களுக்கிடையே கலந்து, குறிப்பிட்ட சிலரைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தது.

தாரை, தம்பட்டைகள். துந்துபிகள் முன்னால் முழங்கிச் செல்ல அதைத் தொடர்ந்து ராணுவ வீரர்கள் அணிவகுத்துச் செல்ல, நெருப்பு நீருடன் சீடர்கள் தொடர வேதியர்கள் வேத கோஷங்களுடன் நடக்க புலையர்கள் எட்டுபேர் நான்கு தான்கினராக மாறி மாறிப் பல்லக்கைச் சுமக்க சாலையில் இரு மருங்கிலும் ஏராளமான மக்கள் கூடி நின்று, பிணத்தின் மீது மலர் மாலைகளை வீச ராஜகுருவின் பூதவுடல், உயர் ஜாதிக்காரர்களின் தனிச் சுடுகாட்டை நோக்கிப் புறப்பட்டது. சேது பத்திரரும் மார்த்தாண்டரும் கூட அதைப் பின் தொடர்ந்தனர்.

சாலையின் இரு பக்கத்திலும் முற்றிலும் வெள்ளையுடை யுடுத்திய அரபுகளின் கூட்டம், அணிவகுத்து ராணுவம் போல் நின்று மரியாதை செய்த காட்சி இதுவரை அந்

PDF ISLAM

நாட்டுமக்கள் என்றும் கண்டிராத ஒரு அற்புதக் காட்சியாக இருந்தது. அநேகமாக பிணத்தைப் பின் தொடர்ந்து செல்வோர் அனைவருமே மேலாடை இல்லாத நிலையில், அரபுகள் மட்டும் முழுஉடையோடு காணப்பட்டது ஒரு தனி அம்சமாகத் திகழ்ந்தது. அதோடு இடையில் வாள்அணிந்திருந்த அவர்கள், அவ்வாட்களை உறுவி அதன் முனையை பூமியில் குத்தியவாறு சிறிது தலையைக் கவிழ்த்த நிலையில் காணப்பட்டது முற்றிலும் புதுமையாகப் பட்டது. அவர்களுடைய மரியாதையை ஏற்றுக் கொண்டது போல், மூத்த அமைச்சரும், படைத்தளபதியும் தலையை அசைத்துக் கொண்டனர்.

ராஜகுரு ராமநம்பியின் சவஊர்வலம் மிகவும் பிரமாண்டமானதாக இருந்தது. அவர் கடுந்தவம் மேற்கொண்டு நேரடியாக மோட்சலோகம் போய்விட்டார். என்ற செய்தி தீவிரமாகப் பரவி, நாட்டின் அனைத்து பகுதிகளிலிருந்தும் கடைசி தரிசனத்துக்கு, ஏராளமான மக்கள் தலைநகர் வந்து குவிந்து தங்கள் அஞ்சலியை செலுத்தினர். மன்னரின் பிறந்தநாள் மற்றும் முதலாண்டு நிறைவு விழாவுக்கு வந்து கூடிய மக்களைவிட, அதிகமான கூட்டம் நகரில் நுழைந்து வழிந்தது. அன்று நகர்முழுவதுமே துக்கத்தில் மூழ்கி இருந்தது எனலாம்.

சவ எரிப்புச் சடங்குகள் அனைத்தும் மூத்த அமைச்சர் சேதுபத்திரர், தளபதி மார்த்தாண்டபூபதி, ஆகியோரின் நேரடி மேற்பார்வையிலேயே நடந்து முடிந்தது. மற்ற அமைச்சர்கள் அதிகாரிகள் பிரமுகர்கள் அனைவரும் ஆஜராகி இருந்தனர். கொள்ளி வைக்கும் கடைசி சமயத்தில் மட்டும். மன்னர் சேரமான் பெருமாள் நேரடியாக ஆஜராகி தனது இறுதி அஞ்சலியைச் செலுத்தினார்.

PDF ISLAM

அன்று இரவு முன்நேரத்தில் அரச அவையில் அமைச்சர்களின் விசேஷ சந்திப்பு நடைபெற்றது. அதில் நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் வந்திருந்த முக்கிய அதிகாரிகளும் கலந்து கொண்டனர். ராஜகுருவின் மரணத்துக்கு அனுதாபத் தீர்மானம் முதலாவதாக நிறைவேற்றப்பட்ட பின், மேற்கொண்டு மடாலய நிர்வாகம் பற்றி ஆலோசிக்கப் பட்டது.

அந்நாட்டு வழக்கப்படி, ராஜகுருவின் மரணத்துக்கு பிறகு, அவரின் சீடர் ளில் முதலாவதாகவுள்ள ஒருவரையே ராஜகுருவாக நியமிப்பது [வழி முறையாகும். சீடர்களில் தகுதியானவர்கள் ;யாரும் இல்லையெனில், தகுதியான ஒருவரை அரசரே தேர்ந்தெடுத்து பிரகடனப் படுத்துவது மரபாகும்.

மூத்த அமைச்சர் சேதுபத்திரர் இதுபற்றி விளக்குகையில், சீடர்கள்இருவரும் சிறுவர்களாக உள்ளதாலும் மேலும் மடாலயத்தை விட்டு அவர்கள் வெளியேறி விட்டதாலும் ராஜகுருவுக்குத் தகுதியானவர்கள் அவர்களில் யாருமில்லை', எனக்கூறி, ''மன்னர் பிரான் சாவதானமாக யோசித்து, புதிய நபர் ஒருவரைக் கண்டுபிடித்து அறிவிப்பார்'' எனக் கூறியதை அனைவரும் ஆட்சேபணை, எதுவுமின்றி ஏற்றுக் கொண்டனர்.

மன்னர் சேரமான் பெருமாள் இதுபற்றித் தனது கருத்தை ஒரு நீண்ட பிரசங்கமே செய்தார் :-

''நாட்டில் நல்வாழ்வில் பொறுப்புள்ளவர்களே! எனக்குச்சில புதிய கருத்துக்கள் தோன்றுகின்றன. அவற்றை உங்கள் முன் சமர்ப்பித்து விடுவது எனது கடமை என உணர்கிறேன். தயவு செய்து ஒவ்வொருவரும் ஆழ்ந்து சிந்தித்து

PDF ISLAM

கொஞ்சமும் அஞ்சாமல், மனந்திறந்து உங்கள் அபிப்பிரா யத்தைக் கூறுங்கள். மனதில் ஏதாவது மறைத்து வைத்தீர் களானால் குற்றம் புரிந்தவர்கள் நீங்களே ஆவீர்கள்!

காலஞ் சென்ற நமது ராஜகுரு, சகல கலாஞானமும் பெற்ற சிறந்த அறிவாளியாக விளங்கினார். இரண்டு தலை முறைகளாக அவர் ராஜகுருவாக இருந்து, பல அரிய சேவை களைச் செய்துள்ளார். ராஜரீகத்தில் மத சம்பந்தமான விவ காரங்கள் எழும்போது அவற்றுக்கு உரிய ஆலோசனைகள் கூறி மதநெறிவழுவாமல் நாட்டை நடத்திச் செல்லவே ராஜகுருபதவியை நமது முன்னோர்கள் ஏற்படுத்தினர். நமது ராஜகுருவோ, மதத்துறையில் மட்டுமல்லாமல், அரசியல் துறையிலும் மிக்க அறிவாற்றல் மிகுந்தவராக இருந்து, நமக்கு முன்னால் இருந்தவர்களுக்கும் வழிகாட்டி நம்மை அரசராக்கப் பெரு முயற்சி மேற்கொண்டு, அர சாட்சிக்குப் புதியவனான நமக்கும் வழிகாட்டி வந்தார் அவ ருடைய பிரிவு பெரிய நஷ்டமாயினும், அது அவரே தேர்ந் தெடுத்துக்கொண்ட முடிவாகும், முன்னால் இருந்த என்னு டைய சேரமான் வம்சத்து மன்னர்கள் நேரடியாக உயிரு டன் மோட்சலோகத்துக்குச் சென்றவழியை அவர் பின் பற்றி, கடுந்தவம் மேற்கொண்டு, மோட்சத்தை அடைந்து விட்டார்.

"அவருக்கு நிகராக மற்றொரு அனுபவமிக்க, ஞான மிக்க ஒருநபர், நம்மை வழிநடத்த ஆற்றல் மிக்கவர் வேறொருவர் இந்நாட்டில் இருப்பதாக நம்மால் நம்ப முடிய வில்லை. நாம் குருநாதரே என்று மரியாதை செய்யக்கூடிய ஒரு நபர், நாமறிந்தவரை எங்கும் இருப்பதாக தெரிய வில்லை. ஆதலால், 'ராஜகுரு' என்ற பதவியை நாம் ரத்து செய்துவிடுவது என்ற கருத்தைக் கொண்டிருக்கிறோம்"

PDF ISLAM

என்று கூறிய போது கூட்டத்தில் ஒரு சிறிய சலசலப்புத் தோன்றியது.

அதைக்கண்ட மன்னர், தனது கையை அமர்த்தி, ''தயவு செய்து யாரும் அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வந்து விடாதீர்கள்! எனது கருத்துக்களை முழுவதும் கேட்டபின் நீங்கள் ஒவ்வொருவரும், உங்கள் மனதில் பட்டதை தைரியமாகக் கூறலாம். நாம் அவற்றை மரியாதையுடனும், பெருமையோடும் வரவேற்போம்!'' என்று கூறிவிட்டு மன்னர் மேலும் தொடர்ந்தார்.

'மத சம்பந்தமான காரியங்கள் அனைத்தும், எப்போதும் நடைபெற்று வருவது போல ஒரு குறையும் இன்றி தொடர்ந்து நடந்து வரும். அதில் அரசாங்கத்தின் ஈடுபாடு எந்த அளவுக்கு இருந்து கொண்டு வருகிறதோ அதில் ஒரு சிறிதும் குறையின்றி நடந்துவரும். எந்தெந்தகோயில்களில் யார் அர்ச்சகர்களாக இருந்து, பயபக்தியுடன் மதக்காரியங்களை நடத்தி வருகிறார்களோ, அவர்களும் அவர்களுடைய பரம்பரையினரும் தொடர்ந்து காரியங்களைச்செய்து வருவார்கள். அதை அரசின் சார்பாக ஒரு பிரதிநிதி மேற்பார்த்து தெய்வ காரியங்கள் மேலும் சிறப்பாக நடைபெற உதவிகள் செய்வார்கள். மக்கள் விரும்பாத அர்ச்சகர்கள் சரியான பரிசீலனைக்குப்பின் அகற்றப்படுவார்கள் இதை ஏன் நாம் இங்கே குறிப்பிடுகிறோம், என்றால் திறமைமிக்க நமது ராஜகுரு அவர்கள், மத அதிகாரங்கள் மட்டுமில்லாமல் ஒற்றர் படையின் தலைமை அதிகாரத்தையும் மேற்கொண்டிருந்தார் என்ற ரகசியமும், அந்த ஒற்றர்களில் பலராக கோயில் அர்ச்சகர்களிலேயே பலர் நியமிக்கப்பட்டிருந்தார்கள் என்பது உங்களில் பலருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பிருக்காது என்பதால்தான்!'' என்று மன்னர்

PDF ISLAM

கூறிய போது. [கூட்டத்திலிருந்து பலர் ''ஆ'' என சப்த மிட்டு விட்டனர்.

ஒருவர் எழுந்து 'மகாராஜா! இந்த ரகசியம் எங் களுக்குக் கொஞ்சமும் தெரியாது! நாங்கள் பல அக்ரமங் களுக்கு உள்ளாகியிருக்கிறோம்!'' என்றார்.

''பொறுமையைக் கடைபிடியுங்கள்! நாம் அதை ராஜ குரு அவர்களிடமேபேசி, ஒற்றர் படைத்தலைமையை அவ ரையே கைவிடச் செய்து, ஒற்றர்களாக இருந்த அர்ச்சகர் கள் அனைவருடைய ஒற்றர் பதவியையும் ரத்து செய்து விட் டோம். அவர்கள் இனி தெய்வகாரியங்களை மட்டும் கவனிப் பார்கள். சிலர், நீங்கள் தெய்வங்களுக்கு அளித்த காணிக் கைகளைக் கொண்டு தயார் செய்த விலைமதிப்பு மிக்க முக்கிய ஆபரணங்களையெல்லாம் அப்புறப்படுத்தியிருக்கின்றனர். நாம் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டாமா!'' என்று கேட்டு மன்னர் நிறுத்தினார்.

அந்தப் பாவிகளையெல்லாம் பிடித்துக் கழுவிலேற்ற வேண்டும்!'' என்று ஒருவர் கூச்சலிட்டார். பலரும் அதை ஆமோதித்து குரல் எழுப்பினர்.

'இன்னும் ஒரு விஷயத்தைச் சொன்னால் நீங்கள் மிகவும் ஆத்திரபடுவீர்கள்! தயவு செய்து பொறுமையைக் கடைப் பிடித்து நான் சொல்வதைநீங்கள்கவனமாகக்கேட்டுஉண்மை யைப்புரிந்து கொள்ளுங்கள்'' என்று மன்னர்கூறி, ''வெறும் ஆபரணங்களை மட்டுமல்ல. தங்கத்தாலும், தங்கத்துக்கு நிக ரான ஐம்பொன்னாலும் நமது முன்னோர்கள் தயாரித்து வைத்திருந்த விக்ரகங்களையும் அவர்கள் திருடி அவற்றுக்கு பதிலாக மட்டமான உலோகங்களால் செய்யப்பட்ட போலி

விக்ரகங்களையும் தயாரித்து வைத்திருக்கிறார்கள். இதில் துரதிருஷ்டவசமாக, ராஜகுரு மகானவர்களின் தொடர்பும் இருக்கிறது என்று சொல்ல நாம் மிகவும் வேதனைப்படுகிறோம். என்று மன்னர் குறிப்பிட்டபோது கூட்டத்தில் மீண்டும் சலசலப்பு ஏற்பட்டது,

ஒருவர் ஆத்திரத்தோடு 'அடப்பாவிகளா! இதற்குத் தான் எங்களைக் கடவுள்கள் பக்கம் நெருங்கக் கூடாது என்று வைதிது, தூரத்திலே நிற்க வைத்து வணங்கி விட்டுச்செல்ல வைத்துள்ளார்களோ?'' என்று இரைந்தார்.

இன்னொருவர் 'தெய்வங்களையே திருடுகிறார்களா? இதென்ன அக்ரமம்? அந்த தெய்வங்களும் இதற்கு எப்படி இடங்கொடுக்கின்றன? அவர்களின் கைகால்களை அங்கே முடமாக்கிப் போடவேண்டாமா? என்றுகத்தினார்.

''மகாராஜா! இந்தக் குற்றம் செய்தவர்களை மக்கள் முன்னால் விட்டு அவர்களையே அடித்துக் கொல்ல தாங்கள் ஆணையிட வேண்டும்!'' என்று இன்னொருவர் கத்தினார்.

மன்னர் சேரமான் பெருமாள், தன் கைகளை அசைத்துக் காட்டி, அமைதி, அமைதி!' என்று சைக்கினைச் செய்தார்.

,'கடவுளிடமிருந்து அப்புறப்படுத்தப்பட்ட ஆபரணங்கள் அனைத்தும அதிருஷ்ட வசமாக நமது கைக்கே திரும்ப வந்து விட்டன. ஆதலால் அதைப்பற்றி கவலைப்படத் தேவையில்லை. மேலும், திருடப்பட்ட விலைமதிப்பு மிக்க விக்ரகங்கள் யார் யாரிடம் உள்ளன என்பதை நமது ஒற்றர்கள் மிக விரைவில் கண்டு பிடித்து விடுவர் என்பதில் ஐயமில்லை. சில விக்ரகங்கள் மட்டும் பாண்டிய நாட்டுக்கும் சோழ நாட்டுக்கும், வடக்கத்திய நாடுகள் சில வற்றுக்கும் கடத்தப்பட்டுள்ளன. என்பதும் தெரிய வந்துள்ளது. ராஜ

PDF ISLAM

ரீக முறையில் பேச்சு வார்த்தைகள் நடத்தி அவற்றை மீண்டும் நம் நாட்டுக்கே கொண்டு வந்து விடுவோம் என நம்புகிறோம்.'' என்று அரசர் சமாதானம் கூறியபோது, கூடியிருந்த பிரமுகர்களிடம் ஓரளவு அமைதி நிலவியது.

அவையில் ஆஜராகி இருந்த ஒருவர்எழுந்து, மாட்சிமை தங்கிய மன்னர் பிரான் அவர்களே! இந்த விக்ரகங்கள் திருட்டுக்கும் அரபு வர்த்தகர்களுக்கும் ஏதேனும் சம்பந்தம் இருக்குமோ?'' என்று கேட்டார்.

'அரபுகள் விக்ரகங்களைக் கரங்களால் கூடத் தீண்டாதவர்கள். இந்த விக்ரகக்கடத்தல்களும் அரபுகள் இந்நாட்டுக்கு வருவதற்குப் பல காலங்களுக்கு முன்பிருந்தே நடந்து வந்துள்ளன; மேலும் கடைசியாகக் கொள்ளையிடப்பட்ட தெய்வ ஆபரணங்களை மீட்டுக் கொடுத்தவர்கள் அரபியர்களே ஆவார்கள். அவர்களுக்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்'' என்றார் மன்னர்.

அரபுகள் இந்நாட்டில் திருமணங்கள் செய்து கொள்ளப் போவதாகப் பரவலாகப் பேசப்படுகிறதே! மன்னர் பிரான் அவர்கள் அதற்கு அனுமதியளித்துள்ளீர்களா? அவ்விதம் அனுமதித்திருந்தால் அவர்கள் எந்த ஜாதிப் பெண்களைத் திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்?'' என்று கேட்டார் மற்றொரு பிரமுகர்.

'நாம் அதற்கு ஆட்சேபனைகள் கூறாதது உண்மை! ஆனால் இதுசம்பந்தமாக நம்மைவிட முழுவிபரங்கள் தெரிந்தவர் நமது மூத்த அமைச்சர் சேதுபத்திரர் அவர்களேயாவார்கள் ஆதலால் அவர்களே விளக்கம் சொல்வார்கள்' என்று மன்னர் கூறினார்.

PDF ISLAM

மூத்த அமைச்சர் சேது பத்திரர் எழுந்து, தொண்டையைக்கனைத்துக் கொண்டு, சிரித்த முகத்தினராய் பேசலுற்றார் :-

பெருமைக்குரியவர்களே!

''அரபுகள் நம் நாட்டுக்கு வியாபாரத்துக்கே வந்தார்கள். ஆரம்பத்தில் நாம் அவர்களை அனைத்து வழிகளிலும் சந்தேகப்பட்டோம். அவர்களுடைய நடவடிக்கைகள் ஒவ்வொன்றையும் மிகவும் கூர்ந்து கவனித்து வந்தோம். அவர்களில் ஒவ்வொருவருடைய செயல்களும் நன்னடத்தையும், நேர்மை மிக்கதாகவும் இருக்கக் கண்டோம். மனித சமுதாயத்தின் அடிப்படைத் தீமையான மதுவருந்துதல், விபச்சாரம் செய்தல். சூதாடுதல் ஆகியவற்றுக்கு முற்றிலும் அப்பாற் பட்டவர்களாக இருந்ததோடு, நமது கலாச்சாரத்தின் அடிப்படைத் தீமையான தீண்டாமை, ஜாதி பேதம் ஆகியவற்றுக்கும் மாறுபட்டவர்களாக இருக்கக் கண்டோம்.

அவர்களில் சிகப்பானவர்களும் உள்ளார்கள், கறுப்பானவர்களும் உள்ளார்கள். ஆனால் நிறம் காரணமாக அவர்கள் தங்களுக்கிடையில் உயர்வு தாழ்வு கொண்டவர்களாய் இல்லை' மேலும் தெய்வீக விஷயங்களிலும் அவர்களின் குறுக்கீடுகள் எதுவும் நமக்கு ஏற்படவில்லை. அவர்கள் கடலை நோக்கி-அதாவது மேற்குப்பகுதியை நோக்கி நின்று தங்கள் முன் எந்த விக்ரகமும் இல்லாமல் கடவுளைவணங்குகிறார்கள். எல்லாவற்றையும் விட மேலாக அவர்கள் வணக்கத்தில் நமது பூமியில் அவர்கள் தங்கள் நெற்றியையும் மூக்கு நுனியையும் வைத்துப் பலமுறை முத்தமிடுவதுபோல வணக்கம் புரிகிறார்கள். நாம் கூட பூமா தவிக்கு இவ்வளவு பெரிய மரியாதை செய்ததில்லை. யாயளவில் தான் பேசி வருகிறோம்.

PDF ISLAM

'நாம் கீழ்ஜாதியினராகவும் புலையர்கள், தியர், மீனவர் என்றெல்லாம் ஒதுக்கி வைத்துள்ள மக்களிடம் அவர்கள் சரிசமமாகப் பழகுகிறார்கள். அவர்கள் வீடுகளில் தண்ணீர் வாங்கிப் பருகுகிறார்கள். அவர்கள் சமைத்தப் பொருட்களைச்சர்வ சாதாரணமாக வாங்கிச் சாப்பிடுகிறார்கள். அதுபோன்றே அவர்கள், உயர்ந்த ஜாதியினரிடம் சமமாக நடந்துக்கொள்கிறார்கள். இது ஒரு புதுமையான கலாச்சாரமாகவுள்ளது. அதே சமயம் மனித சமுதாயம் அனைத்தையும் சகோதரர்களாகக் கருதக்கூடியதாகவுள்ளது.

'மேலும் நமது நாட்டைப் பொறுத்தவரை அவர்கள் மிகவும் ராஜ விஸ்வாசிகளாய் நடந்து வந்துள்ளார்கள். ஆட்சிக்கும் உதவியாளர்களாய் இருந்து வந்துள்ளார்கள்.

அவர்களின் திருமணம் சம்பந்தமான பிரச்னை அவர்கள் எழுப்பியதல்ல, நாம்-அதாவது நமது மக்கள்-எழுப்பியுள்ள பிரச்னையே ஆகும். மீனவ சமூகத் தலைவர்கள் சிலர் நம்மை வந்து சந்தித்து, தங்களுடைய பெண்களில் சிலரை அவர்களில் சிலருக்குத் திருமணம் செய்து கொடுக்க விரும்பியதாகவும் அதற்கு அவர்கள் இந்நாட்டு மன்னரும் மற்றும் மந்திரிப்பிரதானிகளும் அதிகாரப் பூர்வமாக அனுமதியளித்தாலன்றி தாங்கள் ஒப்புக் கொள்ள முடியாத நிலையில் இருப்பதாகவும் கூறியதாக நம்மிடம் தெரிவித்தார்கள்.

''நாம் இதுபற்றி மன்னர்பிரான் அவர்களிடம் ஆழ்ந்த ஆலோசனை மேற்கொண்டோம். பெருமைக்குரிய அரசரவர்கள் அதற்கு ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. ஆனால் சிலயோசனைகளைத் தெரிவித்து அவர்களிடம் பேச்சுவார்த்தைகள் நடத்த அனுமதித்துள்ளார்கள். அந்தப்பேச்சு வார்த்தைகள் வெற்றி பெற்றால் இந்தத் திருமண சம்பந்தத்தை நாம் ஏற்றுக் கொள்ளலாம் இல்லாவிடில் மறுத்து விட வேண்டியது தான்!'' என்று கூறி முடித்தார் சேதுபத்திரர்.

PDF ISLAM

''அந்தப்பேச்சு வார்த்தைகள் ராஜ ரகசியமா அல்லது பொதுவாக நாங்களெல்லாம் தெரிந்து கொள்ளக்கூடியதா? என்று கேட்டார் ஒரு பிரதானி.

'ராஜ ரகசியமல்ல! அனைவரும் தெரிந்து கொள்ளக் கூடியதே! அவர்களில் திருமணமாகாதவர்கள் மட்டும் இங்கு திருமணம் செய்து கொள்வதாயின், அவர்கள் கும்பிட்ட காலம்வரை இங்கு தங்கியாக வேண்டும்? மனைவிகளை அழைத்துச் செல்லக் கூடாது. மேலும் குறிப்பிட்டமீனவர் ஜாதியில் மட்டும் திருமணம் செய்து கொண்டால் அவர்கள் ஒரு தனி ஜாதியினர்' ஆகிவிடுவார்கள்! அந்தச் சூழ்நிலை நம் நாட்டில் ஏற்பட நாம் விரும்பவில்லை. மேலும் அவர்கள் தங்கள் விருப்பத்துக்குத் திருமணம் செய்துக் கொள்ள இங்கு அனுமதிக்க முடியாது. ஒவ்வொரு திருமணத்துக்கு முன்பும் பெண் விட்டார் அரசுக்கு மனுச் செய்ய வேண்டும். அரசு அதைப் பரிசீலித்து, திருமணம் செய்துக் கொள்ள முன் வருபவர்களையும் விசாரித்து, அரசு திருப்தி பட்டால் அனுமதிக்கும். மேலும் எந்த ஜாதி பெண் அரபி ஒருவரைத் திருமணம் செய்துக் கொள்ள விரும்புகிறாளோ, அந்த ஜாதியின் பிரதான தலைவர்களின் சம்மதமும் அரசுக்குத் தேவை. அந்த ஜாதியினர் விரும்பா விட்டால். அத்திருமணத்தை ஏற்றுக் கொள்ளாது.

''அரபுகள் தங்கள் நாட்டில், மனிதர்களை வாங்கி விற்கிறார்கள் எனக் கேள்விப்பட்டிருக்கிறோம். நம் நாட்டுப் பெண்களை மனைவிகள் என்ற பெயரில் திருமணம், செய்துக் கொண்டு போய் அவர்கள் விற்று விட்டால் நம்மால் என்ன செய்ய முடியும்?'' என்று பிரதானி கேட்டார்,

''நீங்கள் கேள்விப்பட்டுள்ளது உண்மையே! அவ்விதம் நடக்க நமது அரசு ஒரு போதும் வாய்ப்பளிக்காது, அவர்

கள் நம் நாட்டுப் பெண்களைத் திருமணம் செய்துக் கொள்வதாயின் அவர்களின் பழக்க வழக்கங்களை நாம் கேட்டறிய வேண்டும் அவைச் சரியாகப்பட்டால் மட்டுமே நாம் அனுமதியளிக்க முடியும்'' என்றார் சேதுபத்திரர்;

''அவர்களை விசாரிப்பது பகிரங்கமாக இருக்குமா? அல்லது மன்னர்பிரான் அவர்களே விசாரித்து முடிவு செய்ய இருக்கிறார்களா?'' என்று கேட்டார் அந்தப் பிரதானி.

சேதுபத்திரர் ஒரு கணம் திகைத்து நின்று மன்னர் முகத்தைப் பார்த்தார். மன்னர் அவரைத் தன் சமீபம் அழைத்துக் காதில் சில வார்த்தைகள் மெதுவாககூறினார்.

சேதுபத்திரர் கம்பீரமான குரலில், ''அவர்கள் பகிரங்கமாக விசாரிக்கப்படுவர்ர்கள் என்பது மன்னர்பிரான் அவர்களின் விருப்பமாகும்!'' என்றார்.

அவையினர் அனைவரும், ''வாழ்க எங்கள் மன்னர்! வளம் பெருக நமது ஆட்சி!,' என மகிழ்ச்சிக் குரலெழுப்பினர். அன்றைய அவை நிகழ்ச்சி அத்துடன் நிறைவுற்றது.

திருமண சம்பந்தமான பேச்சு வார்த்தைக்கு. இரண்டொரு தினங்கள் கழித்து, ஒரு நாள் அரச அவையிலேயே ஒரு பெரிய விருந்து ஏற்பாடு செய்யப்பட்டது, அரபுக்கள் அனைவரும் ஒரு பக்கமும், மந்திரிப் பிரதானிகள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் ஒரு பக்கமும் அமர்ந்தனர். மன்னர் சேரமான் பெருமாள் தமது சிம்மாசனத்தில் நீதிபதியாக அமர்ந்திருந்தார்.

முதலில் பேச்சு வார்த்தையைத் தொடங்கி வைத்த மூத்த அமைச்சர், முஸ்லிம் பின் அத்ஹமை நோக்கி, ''நீங்கள், சில தினங்களுக்கு முன்பு உங்களைச் சேர்ந்த

PDF ISLAM

சிலர் எங்கள் நாட்டுப் பெண்கள் சிலரைத் திருமணம் செய்து கொள்ள விருப்பமுடையவர்களாக இருக்கிறார்கள் என்று கருத்துத் தெரிவித்ததுண்டா ?''

''ஆமாம் மகா பிரபு !''

''அவ்விதம் விருப்பம் தெரிவித்தவர்கள் எத்தனை பேர்?''

முஸ்லிம் பின் அத்ஹம் இந்தப்பேச்சைஅரபி மொழியில் தன் நண்பர்களுக்கு கூற, அவர்களில் ஏழுபேர் கையை உயர்த்தினார்கள்அதை சேதுபதி எண்ணிவிட்டு, ',இந்த ஏழுபேரும் தாங்கள் விரும்பும் பெண்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டுவிட்டார்களா?''

முஸ்லிம் பின் அத்ஹம் இதை அரபு மொழியில் கூற மூவர் மட்டும் கையை உயர்த்தினர்; அதைக் கண்ட சேதுபதியார், ''மற்ற நால்வர்கள், இந் நாட்டில் திருமணம் செய்துகொள்ள விரும்பும் காரணமென்ன ?''

இது மீண்டும் அரபியில் சொல்லப்பட, அவர்கள்ஏதோ பதில் சொல்ல, முஸ்லிம் பின் அத்ஹம் அதை விளக்கி ''அவர்கள் இந்த நாட்டை விரும்புகிறார்களாம்! இங்கு திருமணம் செய்துகொள்வதன் மூலம். இங்கு தங்கி, வியாபாரப் பொருட்களை சேகரித்து அரபு நாடுகளுக்கு அனுப்பியும், உலகின் பல்வேறு சிறந்த பொருட்களை அரபுகளிடமிருந்து வாங்கி இந் நாட்டுக்கு அளிக்கவும் விரும்புகிறார்கள்'' என்றார்.

''மற்ற மூன்றுபேர்?'' என்று சேதுபத்திரர் கேட்க, மீனவ சமூகத்துத் தலைவர் எழுந்து ''அவர்களும் அதே எண்ணம் உடையவர்களே !எனினும்எங்கள் பெண்கள்செய்த பணிவிடைகள் காரணமாகவும், எங்கள் பெண்களிடம்

PDF ISLAM

அவர்கள் நடந்துகொண்ட கண்ணியமான முறைகள் காரண மாகவும், ஒருவரை யொருவர் விரும்பியுள்ளதும் காரண மாகும்'' என்றார்.

இந்த விவாதத்தை மன்னர் சேரமான் பெருமாள் புன்சிரிப்போடு கவனித்துக்கொண்டிருந்தார்.

''எங்கள் நாட்டுப் பெண்களை நீங்கள் திருமணம் செய்துகொள்வதானால், சில கடுமையான சட்டங்களுக்கு நீங்கள் உட்பட்டாக வேண்டும்'' என்று கூறிய சேதுபத்தி ரர், இரு தினங்களுக்கு முன்பு அரசவையி ல்நடத்தப்பட்ட பேச்சு வார்த்தைகளை விளக்கிக் கூறினார். இவை அரபி மொழியில் அத்ஹம் கூற அரபுகள் அனைவரும் மகிழ்ச்சி யுடன் ஏற்றுக் கொண்டனர்.

''உங்களுடைய நிபந்தனைகள் என்று சேதுபத்திரர் கேட்டபோது, முஸ்லிம் பின் அத்ஹம், தன் தொண்டை! யைக் கனைத்துக் கொண்டு, ''மன்னர் பிரான் அவர்களே) மகாப் பிரபு அவர்களே! இந்நாட்டின் சட்டங்கள், வாழ்க்கை முறைகள் அனைத்துக்கும் நாங்கள் கட்டுப்பட்டு நடக்க உறுதியளிக்கிறோம். ஆனால், திருமணச் சட்டம் என் பது எங்களைப் பொறுத்து முற்றிலும் தனிப்பட்டது. எங் ளுடைய மார்க்கத் தலைவர் முஹம்மது நபி (ஸல்-அம்) அவர்கள் எங்களுக்கு வழிகாட்டியுள்ளதை மட்டுமே நாங் கள் ஏற்போம் அவற்றுக்கு முழு சுதந்திரமும் அளிக்கப் பட்டால்தான் நாங்கள் இங்கு திருமணம் செய்துகொள்ள முடியும்! ஆதலால் மன்னர் பிரான் அவர்கள் அந்தச் சுதந்திரங்களைக் கருணைகூர்ந்து எங்களுக்கு அளிக்க வேண் டும்'' என்றார்.

''என்ன அந்த சுதந்திரங்கள்? அதை நீங்கள் இங்கே எல்லோரும் விளங்கும்படி இப்போதே தெளிவாகக் கூறி விடுங்கள்!'' என்று உத்திரவிட்டார் சேரமான் பெருமாள்.

PDF ISLAM

''முதலாவதாக திருமணம் என்பது எங்களுக்கு வாழ்க்கை ஒப்பந்தமாகும். இந்த ஒப்பந்தத்தில், பெண்ணின் அபிப்ராயத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம். ஆகக் குறைந்தபட்சம் இரு சாட்சிகளின் முன்னால் முதலில் ஆணிடம் சம்பந்தம் பெறுகிறோம். அதற்கு ஊர்ஜிதமாக ஆண் அப் பெண்ணுக்கு ஒரு தொழுகையை அன்பளிப்பாக அளிக்க, அல்லது அறிவிக்க முன் வருகிறார், இதைப் பெண்ணிடம், அவன் உறவினர் தெரிவித்து, சம்மதம் பெற்றுக வேண்டும் இந்த தொகைக்கு 'மஹர்' என்று பெயர், பெண் சம்மதித்தால் மட்டுமே வாழ்க்கை ஒப்பந்தம் செய்யப்படும்'' என்றார் அத்ஹம்.

''இதுசாதாரணமாகநல்லவிஷயம்தானே!''என்றார்மன்னர் முஸ்லிம் பின் அத்ஹம் சிரித்துக்கொண்டே, இதற்குப் பின்தான் இந்த நாட்டில் இல்லாத ஒரு கடினமான விஷயமும் உள்ளது ! இவ்விதம் வாழ்க்கை ஒப்பந்தம் செய்து கொண்ட, இருவரில் ஒருவருக்குப் பிடிக்காவிட்டால், இருவரும் கணவன்-மனைவி பந்தத்தை விட்டு விலகிக் கொள்ளலாம்'' என்று சொல்லும்போதே அனைவரும் ''ஹா'' என்று ஆச்சரியத்தால் வாயைத் திறந்தனர்,

''கணவனால் விலக்கப்பட்டாலும், அல்லது கணவன் இறந்துபோய்விட்டாலும்மனைவியானவள்சுதந்திரமடைந்து விடுகிறாள். அதாவது வேறொரு நபரை மணந்துக் கொள்ள உரிமைப் பெறுகிறாள்'' என்று முஸ்லிம் பின் அத்ஹம் தொடர்ந்து கூறும்போது, மன்னர் சேரமான் பெருமாளைத் தவிர மற்றவர்கள், ''என்ன? விதவைக்கும், விலக்கப் பட்டவளுக்கும் மறு வாழ்வா?'' என்று வியப்புடன் கேட்டனர்.

ஆனால், மன்னர் பிரான் குறுக்கிட்டு' ''அவளும் மனித ஜீவன்தானே!,' என்று கூறியதும் அனைவரும் வியப்புடன் மன்னரை நோக்கினர்.

PDF ISLAM

முஸ்லிம் பின் அத்ஹம் அமைதியாக, ''இதன் காரணத்தால் தான் திருமணம் செய்து கொள்ளும் இரு வரும் முஸ்லிம்களாக இருக்க வேண்டும் என்று விதிக்கப் பட்டிருக்கிறது'' எனக் கூறினர். யாரும் எதுவும் கூருமல் ஒன்றும் புரியாதவர்களைப் போல ஒருவருக்கொருவர் கேள்வி கேட்கும் பாணியில் பார்த்துக் கொண்டனர்.

மீண்டும் சேரமான் பெருமாள் குறுக்கிட்டு, ''எப்படி முஸ்லிமாவது என்பதை அவையில் சிறிது விளக்கமாகச் சொல்லுங்கள்'' என்ருர். சபையிலுள்ள அனைவரும், முஸ் லிம் பின் அத்ஹம் சொல்வதைக் கூர்ந்து கேட்டனர்.

''ஏற்கனவே இதைச் சுருக்கமாகச் சொல்லும் ஒரு வாய்ப்பு எனக்களிக்கப்பட்டபோது, ஒரு நபர் முஸ்லிம் ஆவதில் எந்தச் சடங்கும் சம்பிரதாயமும் இல்லை என்ப தைக் குறிப்பிட்டுள்ளேன். ஒரு நபர் முஸ்லிம் ஆவது என் பது முதலில் இறைவனைப்பற்றியும், அந்த இறைவனின் வழி முறையைக் கற்றுக் கொடுத்த முஹம்மது ஸல்லல் லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைப் பற்றியும் நம்பிக் கைக் கொள்ளலுமே ஆகும்!' என்ருர்

அவையில் ஒருவர், ''அது எப்படி?'' என்று கேட்க, முஸ்லிம் பின் அத்ஹம், ''வணக்கத்துக்கும் வழிபாட்டுக்கும் உரியவன் இறைவன் ஒருவனே ஆவான். அவன் தனித்த வன்! இணைதுணையற்றவன்' யாருடைய.எந்தத் தேவையு மற்றவன்; அவன் யாராலும் பெறப்படவில்லை. யாரை யும் பெறவில்லை; அவன் உருவமற்றவன். எங்கும் நிறைந் தவன்; மறுமை (மரணத்துக்குப் பின் ஒரு) நாளில் நம்மை எழுப்பி விசாரிப்பவன். அவனே சகல சக்தியும் உடையவன் என்று உள்ளத்தால் நம்பி வாயினுல், ''லாயிலாஹா இல்லல்லாஹ்'' என்றும், அவனுடைய

PDF ISLAM

இறுதித்திருதூதர் முஹம்மது நபி என்றும் அவர்கள் அவனுடைய பரிசுத்தமான நல்லடியார், அவனுடைய சரியான, நிரப்பமான வழியைக் காட்டியவர்கள், அவர்களே முழுவதும் பின் பற்றத் தக்கவர்கள்! அவர்களுடைய விளக்கமே அல்லாஹ்வின் பூரணமான விளக்கமாகும் என்று நம்பி ''முஹம்மதுர் ரசூலுல்லாஹ்'' என்றும் வாயால் கூறி ஒப்புக் கொள்வதே இஸ்லாம் மார்க்கத்தில் இணைவதாகும். இதன் பின்னுள்ள நான்கு கடமைகளை ஒப்புக் கொண்டு அவற்றை நிறைவேற்ற முயற்சிப்பது ஒரு முஸ்லிமுடைய செயல்களாகும் என்றார்.

''அவை என்ன அடுத்த கடமைகள்!'' என்று ஒரு பிரமுகர் கேட்க, ''அவை முஸ்லிமானபின் செய்துவரக் கூடிய வழிகள், நமது திருமண ஆலோசனைக்கு சம்பந்தப் பட்டப்பெண், லாயிலாஹா இல்லல்லாஹ், முஹம்மதுர் ரசூலுல்லாஹ்'' என்று பகிரங்கமாக அறிவிப்புச் செய்தாலே முதலில் போதுமானது. நாங்கள் திருமணம் செய்து கொண்டு விடுவோம். அதன்பின் இஸ்லாத்தின் வழிமுறைகளைப் படிப்படியாக அந்தப் பெண்ணுக்குச் சொல்லிக் கொடுத்து விடுவோம்'' என்றார் முஸ்லிம் பின் அத்ஹம்.

''ஆண்களுக்கும் இதே பிரகடனம் தானா?'' என்று மற்றொருவர் கேட்க, ''ஆம்'' என்று தலையை அசைத்துப் பதில் சொன்னார் அவர்.

''இதில் ஒரு சங்கடமும் இல்லையே!'' என்று கூறிய மூத்த அமைச்சர் சேதுபத்திரர்'' முஸ்லிம் பின் அத்ஹம் என் மகளைத் திருமணம் செய்து கொள்ள சம்மதிப் பாராயின், அவர் சொன்னது போல என் மகளும் பிரகடனப் படுத்தத் தயாராக இருக்கிறாள்'' என்றார்.

''முஸ்லிம் பின் அத்ஹம் அவர்களின் சகா நோழராக இருந்து செயல்படும்' அப்துல் மஜீது பின் அர்க்கம்

PDF ISLAM

அவர்கள் சம்மதிப்பாராயின் என் தங்கையையும் அவ் விதம் பிரகடனம் செய்யச் செய்து' திருமணம் செய்விக்க தானும் தயாராக இருக்கிறேன்'' என்றார் தளபதி மார்த் தாண்ட பூபதி.

மீனவர் சமுதாயத் தலைவர் எழுந்து, ''எங்களின், மூன்று ஜாதிப் பிரிவினரில் ஐந்து பெண்கள் இஸ்லாமாக வும். அரபுகளைத் திருமணம் செய்து கொள்ளவும் தயாராக இருக்கிறார்கள்'' என்றார்,

மன்னர் சேரமான் பெருமாள் சிரித்துக் கொண்டே, நீங்கள் சொல்வதைப் பார்த்தால்' நம் நாட்டை அரபு நாட்டின் மருமகள் தாயகமாகவும், அரபு நாட்டை நம் நாட்டுக்கு மருமகன்கள் தாயகமாகவும் ஆக்கி விடுவீர்கள் போலத் தெரிகிறதே'' என்றார்,!

மூத்த அமைச்சர் சேதுபத்திரர் புன் சிரிப்போடு' ''முதலில் நாம் நமது பெண்களைத் திருமணம் செய்து கொடுப்பதால் நமது நாடு ''மாப்பிள்ளா'' தாயகமாக ஆகிறது! நமது மாப்பிள்ளைகளின் தொடர்பினால் நமது நாடும் அரபு நாடும் சம்பந்த நாடுகளாகின்றன? என்றார்,

மீனவ ஜாதியின் மூத்தத் தலைவர் ஒருவர் எழுந்து ''எங்கள் உயிருக்குயிரான மன்னர் பிரான் அவர்களே! தாங்கள் பெண்களை இஸ்லாம் மார்க்கத்தில் இணைய அங்கீகாரமளிப்பதோடு, ஆண்களாகிய எங்களில் விருப்ப முடையோரும் எங்கள் குடும்பத்தினரோடு இஸ்லாத்தில் இணையவும் அங்கீகாரம் கொடுத்தருள வேண்டும்'' என்றார்

மன்னர் சேரமான் பெருமாள் சிறிது நேரம் அமைதி யாக இருந்து, அவையினரிடமிருந்து, ஏதாவது மாறு பட்ட கருத்துக்கள் வருகின்றனவா என்று பார்த்தார், ஆனால் அவையினரும் அமைதியோடு இருந்து, மன்னர்

PDF ISLAM

என்ன சொல்லப் போகிறார் என்பதை எதிர்பார்த்தவர்களாகக் காணப்பட்டனர்.

சிறிது நேர மவுனத்துக்குப் பிறகு, மன்னர் சேரமான் பெருமாள், ''ஒவ்வொரு தனி மனிதருக்கும் ஒவ்வொரு மனம் உண்டு! அந்த மனதுக்குச் சுதந்திரமுமுண்டு, பிறருக்குத் தீமை பயக்கா வண்ணம் அந்தச் சுதந்திரத்தை அவரவர் பயன் படுத்திக் கொள்ள விரும்புவராயின் நமது அரசு அதில் குறுக்கிட விரும்பவில்லை. இப்போது பல ஜாதிகளாக இருக்கும் நம்மில் சிலர் இஸ்லாம் என்ற மார்க்கத்தில் இணைந்துக் கொள்வதன் மூலம், ஒரு தனி பிரிவினராவதில் நமக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை! இந்தப்பிரிவு பல ஜாதிகளை ஒழிக்கிறது என்று அறிவதில் நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம், ஆதலால் நம் நாட்டில், இஸ்லாம் மார்க்கத்தின் மீது விருப்பம் கொள்வதில் அரசுக்கு எவ்வித ஆட்சேபணையுமில்லை என்பதை, இந்த அவையின் மூலம் நாடறியப் பிரகடனப் படுத்துகிறோம்'' என்று அறிவிப்புச் செய்தார். அவையினர் அனைவரும் மன்னரின் பெருங்குணத்தைக் கண்டு, 'வாழ்க! சேரமான் வம்சம்! உயர்க மன்னர் புகழ்!'' என கோஷமிட்டனர்.

மன்னர் சேரமான் பெருமாளின் இந்தப்பிரகடனம் நாடு முழுவதும் பரவப்பரவ சேரநாட்டுமக்களுக்கு அரபுகள் ஒரு கண்காட்சிப் பொருளைப் போன்று ஆயினர், தலைநகர் வரக்கூடிய மக்களெல்லாம், அரபுகள் முகாமிட்டிருந்த கடலோரபங்களாவுக்கு வந்துகூட்டங் கூட்டமாகவேடிக்கை பார்க்கத் தலைப்பட்டனர். பலர் பல கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தனர், அரபுகளில் சிலருக்கு மட்டுமே தமிழ் தெரிந்திருந்ததால், அவர்களின் அரைகுறைத் தமிழில் பதில்கள் கூறினர். மற்றவர்கள் அரபியில் பேசிக் கொள்வதை அவர்கள் நகைச்சுவையாக ரசித்தனர்.

PDF ISLAM

தங்களைச்சந்திக்க வந்தவர்களை ஜாதி பேதம் பாராமல் அரபுகள் அன்போடு வரவேற்று உபசரித்தனர்? மக்களும் தங்கள் அன்பின் அடையாளமாக, வாழைதார்கள், இளநீர் தேங்காய்கள், மரவள்ளிகிழங்குகள், தேங்காய் கொப்பரைகள், பலாப்பழங்கள், நாரத்தம் பழங்கள் போன்ற பலவகைப் பொருட்களையும் கொண்டு வந்து கொடுத்தவண்ணமாக இருந்தனர். அவற்றுக்கு பதிலாக பேரீத்தம் பழங்கள், உலர்ந்த திராட்சைகள், ஆட்டுத் தோல்கள், சிறிய கைக் கட்டாரிகள் போன்ற ஆயுதங்கள். முதலான தங்களிடமிருந்த பொருட்களை அரபுகள் அன்பளிப்புச் செய்தனர். தங்கள் கப்பலையும் சுற்றிக் காட்டிப் பெருமிதம் அடைந்தனர்.

மன்னர் பிராமே, முஸ்லிம் பின் அத்ஹம் உட்பட தமிழ் நன்குகத் தெரிந்த ஐந்து அரபுகளைப் பகல் முழுவதும் தன்னுடன் வைத்துக்கொண்டு, இஸ்லாம் பற்றியும், முஹம்மது நபி (ஸல்-அம்) அவர்களைப்பற்றியும் பல கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தார். இதில் அவ்வப்போது மூத்த அமைச்சர் சேதுபத்திரரும் தளபதிமார்த்தாண்டபூபதியும் கலந்துகொண்டனர்.

திருமணம் சம்பந்தமானப்பேச்சு வார்த்தைகள் நடந்த போது, முதல்கட்டமாக ஏழு திருமணங்கள் உறுதிசெய்யப் பட்டன அரபுகளில் திருமணமாகாதவர்களாக இருந்த ஏழு பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களில் முஸ்லிம்பின் அத்ஹமின் வலக் கரமாகத்திகழ்ந்தவர்களான, ஹாமித்பின் அர்கம், ஹம்ஸாபின் உத்பா ஆகியோரும் மற்றும் தமிழ் தெரியாத ஐந்து அரபுவாலிபர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். முஸ்லிம் பின் அத்ஹம் ஏற்கனவே திருமணமானவராக இருந்தபடியாலும், வர்த்தகக்கப்பலைக் கொண்டு செலுத்த வேண்டியப் பொறுப்புடையவராக இருந்ததாலும் அவர் தனக்குப் பெண் கொடுக்க முன் வந்த மூத்த அமைச்

PDF ISLAM

சர் சேதுபத்திரரைச்சமாதானம் செய்து, ஹாமித் பின் அர்கம் என்ற தனது மதிப்புக்குரிய நண்பரை வரனுகத் தேர்ந்தெடுக்கச் செய்தார். இந்த ஏழு அரபு மாப்பிள்ளா மார்களுக்கும் ஒரு குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றுல் அனைவரும் கலப்பட இனத்தைச் சேராத சிவந்த மேனியின ரான அரபுகளே ஆவார்கள்.

இந்தத் திருமணங்கள் நடைபெறுவதற்கு முன்னே, இந்தச் செய்தி அண்டை நாடான பாண்டிய நாட்டுக்கும் எட்டி, மதுரையை ஆண்ட மகா வீரபாண்டியன் இரு தூத தவர்களை அனுப்பி தமிழ் தெரிந்த மூன்று அரபுகளை மதுரைக்கு அனுப்பி வைக்குமாறும்' அவர் தனது நாட்டில் குதிரைப்படையொன்றை அமைக்க அரபுகளிலிருந்து குதிரைகள் கொண்டு வர ஏற்பாடு செய்யப்போவதாகக் கேட்டுக் கொள்ளவே முஸ்லிம் பின் அத்ஹம் ஹாமித் பின் அர்க்கம், ஹம்சா பின் உத்பா ஆகிய மூவரும் செல்ல வேண் டியதாகி விட்டது. அவர்களின் பயணப் பாதுகாப்புக்காக மன்னர் சேரமான் பெருமாள் தனது படைவீரர்களில் சிலரையும் அனுப்பி வைத்தார்.

அவர்கள் மதுரை போய்த்திரும்பி வர பதினைந்து தினங் களுக்கு மேலாகி விட்டன. அதற்கிடையில், தலைநகரில், திருமண ஏற்பாடுகள் வெகு தடபுடலாக நடந்து வந்தன. நாட்டின் அனைத்துப்பகுதிகளிலிருந்தும் பிரமுகர்கள் அனை வரும் அழைக்கப்பட்டிருந்தனர். நகரமெங்கும் வெகு அழ காக ஜோடிக்கப் பட்டிருந்தது. மன்னருடைய பிறந்தநாள் அலங்காரத்தையும் மிஞ்சக் கூடியதாக இருந்தன.

பாண்டிய நாடு போய் வந்த முஸ்லிம் பின் அத்ஹம், மன்னர் மகா வீரப்பாண்டியன் தங்களுக்கு மிகவும் கவுரவம் தந்து வரவேற்றதாகவும், சேரநாட்டில் தங்கள் சம்பந்தப் பட்டு நடந்துள்ள விஷயங்கள் அனைத்தையும் கேட்டுத் தெரிந்து கொண்டதாகவும் சொல்ல வேண்டிய அளவு

PDF ISLAM

மட்டும் தான் சொன்னதாகவும் மிகவும் முற்போக்கான உள்ளம் கொண்டதாகவும், மகாஞானியாகவும் மன்னர் சேரமான் பெருமாளைக் குறிப்பிட்டு, மன்னர் பிரானுக்குத் தனது வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்ததாக மன்னரிடம் கூறினர்.

மேலும் வர்த்தக சம்பந்தமான பேச்சு வார்த்தைகளை விளக்குகையில், பாண்டியமன்னர் 50 குதிரைகளை அளிக்க உத்திரவிட்டுள்ளதாகவும். அவற்றைப் படை நடத்திச் செல்ல பயிற்றுவிக்கும் ஐந்து அரபு 'இராவுத்தர்' ('இரவி' என்றால் குதிரை; அவற்றைப் படைக்குப் பயிற்றுவிப்போர் இராவுத்தர்) களையும் அவற்றுடன் அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டதாயும் அவர்கள் திருமணம் செய்து கொள்ளாதவர்களாக இருந்து அந்த நாட்டிலேயே அவர்கள் திருமணம் செய்து கொள்ள விரும்பினால், சேர நாட்டைப் போல திருமணத்துக்கு அனுமதியளிக்க தயாராக இருப்பதாக கூறியதாகவும், அதே போல தனது கடற் படையை விரிவாக்க, பத்து அரபு 'மரக்கலராயர்' களை (இந்த மரக்கலராயர் என்பது தான் இப்போது மரைக்காயர்' என்று மரவியுள்ளது) யும் அனுப்பி உதவினால் அவர்களுக்குத் தக்க ஊதியம் அளிப்பதோடு அவர்களுக்கும் அவர்கள் மதர்ச்சாரப்படி திருமண உரிமை வழங்குவதாகத் தெரிவித்ததாயும் கூறினர்.

அதோடு அடுத்த கப்பலை கிழக்குக் கரையோர கடல் பக்கம் நங்கூரம் பாய்ச்சுமாறு கேட்டுக் கொண்டதாகவும் கூறினர்.

இந்த விபரங்களைக்கேட்ட மன்னர் சேரமான்பெருமாள் அளவிலா மகிழ்ச்சியடைந்தார், அவர் சிரித்துக் கொண்டே ''முதல் சம்பந்திகள் சேரர்கள் தான் என்பதை மறந்து விடாதீர்கள்'' என்று கூறினர்.

PDF ISLAM

திருமண நிகழ்ச்சிகள் அரசாங்கக் கொலு மண்டபத்தி லேயே நடந்தன. மன்னர் சேரமான்பெருமாள் விழாவுக்குத் தலைமை வகித்தார். இந்நிகழ்ச்சிக்குச் சிறப்பு விருந்தினராக வந்திருந்த பாண்டிய நாட்டு அரசர் மகாவீர பாண்டியன் சேரமான் பெருமாளுக்குச் சமமான ஆசனம் அளிக்கப்பட்டு பக்கத்தில் அமர்ந்திருந்தார். அவரையடுத்து சேர நாட்டின் முன்னாள் அரசராக இருந்த மார்த்தாண்ட வர்மனும் அமர்ந்திருந்தார்.

மந்திரிப் பிரதானிகளின் வரிசையில் மூத்த அமைச்சர் சேதுபதி தளபதி மார்த்தாண்ட பூபதி, மற்றும் சில சேர நாட்டு அமைச்சர்களும். அவர்களோடு பாண்டிய நாட்டி லிருந்து மன்னருடன் வந்த அந்நாட்டு அமைச்சர்களில் சில ரும் அமர்ந்திருந்தனர்.

பிரமுகர்களின் வரிசையில், ராஜ்யத்தின் பல பாகங்களி லிருந்து வந்திருந்த முக்கிய தலைவர்கள், அறிஞர்கள், கவி ஞர்கள் முதலானோரும் காணப்பட்டனர். அரபுகளுக்குத் தனிஇடம் ஒதுக்கப்பட்டிருந்தது. அவர்கள் ஒரே மாதிரி வெள்ளையுடை உடுத்தி, தலையில் கறுப்புக் கட்டம் கட்டி அமர்ந்திருப்பது ஒரு தனிக்காட்சியாக இருந்தது.

இந்தப் புதுமையானத் திருமண வைபவத்தைப்பார்க்க நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வந்திருந்த மற்றும் தலை நகரிலுமுள்ள மக்களுக்கு, கீழே விரிப்புகள் விரிக்கப்பட்டு அவற்றில் இடைவெளியின்றி மக்கள் நெருக்கியடித்துக் கொண்டு அமர்ந்திருந்தனர். மண்டபம் நிறைந்துவிட்ட தால், இவர்கள் போக எஞ்சியிருந்த மக்கள் கூட்டம், கொலு மண்டபத்தைச்சுற்றி அமைக்கப்பட்டிருந்த மேல் தளத்திலும் நிறைந்திருந்தது போக, வெளியில்நின்று எட்டி வெட்டிப் பார்க்கக் கூடியக்கூட்டமும் வழிந்து நின்றது.

ராஜாங்க முறைப்படி கொலு மண்டபத்தின் தொடக் கம் பிராமணர்களின் பூஜை புனஸ்கரத்துடன்தான் நடை

PDF ISLAM

பெறுவது வழக்கமாகும். இதை முன்பெல்லாம் ராஜகுரு தொடங்கி வைப்பார். இப்போது அவர் இல்லாததால், அவருடைய இரு சீடர்களும், சடங்கு சம்பிரதாயங்களுடன் தொடங்கி வைத்து, கற்பூரம் கொளுத்தி, மன்னருக்குத் திருஷ்டி கழித்து முடித்தனர். அதையொட்டி வாத்திய ஓசைகளும் நடத்தி முடிக்கப்பட்டன.

மன்னர் பிரான் முஸ்லிம் பின் அத்ஹமை நோக்கி, ''உங்கள் சம்பிரதாயப்படி இனி திருமண காரியத்தைத் தொடங்கலாம்! என்று அனுமதியளித்தார்.

முஸ்லிம் பின் அத்ஹம் எழுந்து மன்னர் பிரானுக்கும் மற்றுமுள்ளோருக்கும் அரபுகளின் முறைப்படி குனிந்து சலாம் செய்த பின், ''மாட்சிமை தங்கிய மன்னர் பிரான் அவர்களே! இது முதன்முதலாக, அயல் நாட்டில் நாங்கள் செய்யும் திருமணமாக இருப்பதால், மணப்பெண்களை பகிரங்கமாக அழைத்து எல்லோருடைய முன்னிலையிலும் முஸ்லிமாக்கவும், அவர்களுடைய சம்மதங்களைப் பெறவும் வேண்டியதாகவுள்ளது என்றார்.

மன்னர் சேதுபத்திரரைப் பார்த்துத் தலையை அசைக்க அவர் மெதுவாகத் தன் கரங்களைத் தட்ட எல்லாம் முன்னேற்பாடாக செய்து வைத்திருந்தாற் போல, வாத்திய இசைகள் முழங்கின ஒரு அறையிலிருந்து ஏழு மணப்பெண்கள், ஒவ்வொருவரும் இரு தோழிகளுடன் அழைத்து வரப்பட்டனர். இதில் சிறப்பான காட்சியாதெனில், அந்த ஏழு பெண்களும், ஒரே மாதிரியான உடை உடுத்தி, ஒரே மாதிரியான ஆபரணங்கள் அணிந்து, ஒரே மாதிரியாக அலங்கரிக்கப்பட்டிருந்ததே ஆகும். மலர்கள் கூட அவர்களுக்கு ஒரே மாதிரியாக சூடப் பட்டிருந்தன. அது போன்றே பெண்களின் தோழிகள் அனைவரும் வேறு வண்ண ஆடைகளில் ஒரே மாதிரியான அலங்காரத்துடன் தோற்றமளித்தனர்.

PDF ISLAM

இதுவே ஜனரஞ்சகமான கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது, யார் யாருடைய மகள்? சேதுபத்திரர் மகள் யார் மார்த்தாண்ட பூபதியின் தங்கை யார்? மீனவ இனத்தின ரின் பெண்கள் யார்? என்று புரிந்துக் கொள்ள முடியாமல், அவரவரும் விளக்கம் கூறிக்கொள்ள முற்பட்டனர், பெண் களில் சிலருடைய நிறங்களை வைத்து, 'இவர் அவராகத் தான் இருக்க வேண்டும்'' என்றும் யூகம் பேசிக்கொள்ள முடிந்ததே தவிர நிச்சயமாக யாராலும் யாரையும் உறுதிப் படுத்திச் சொல்ல முடிய வில்லை.

அது போன்றே அரபு மாப்பிள்ளைகளையும் அவர்கள் அடையாளம் கண்டு கொள்ள முடிய வில்லை, சிகப்பர்களும் கறுப்பர்களாகவும் கலந்து சுமார் 40 பேர் ஒரே மாதிரியான வெண்ணுடையில் காணப்பட்டதால். அவர்களையும் பற்றி யூகம் பேசிக் கொண்டனர்.

மணப் பெண்கள் அனைவரும் அழைத்து வரப்பெற்று. அவர்களுக்காகவே முன் கூட்டியே ஏற்பாடு செய்யப்பட்டி ருந்த தனித்தனி பலகைத் துண்டுகளில் உட்கார வைக்கப் பட்டு அவர்களின் இரு தோழிகளும் இருபக்கங்களில் நின்ற னர். அவரவர்களுகளு எதிரே மற்றொரு மணப்பலகை போடப்பட்டிருந்தது. பெண்ணுக்குப் பக்கத்தில் மணப் பலகைப் போடும் பலக்கமுள்ளமக்கள் எதிரெதிரே போடப் பட்டிருப்பதையும், ஹோம குண்டம் காணப் படாததும் ஒரு புதுமையான விஷயமாகப் பார்த்து ரசித்தனர். அதோடு வழக்கம் போல் அல்லாமல் மணப்பெண்கள் தலையை மூடி முக்காடு போடப்பட்டிருப்பதும் அவர்களுக்கு வியப்பாக இருந்தது அடுத்து என்ன சடங்குகள் நடக்கப் போகின்றன என்று ஆவலோடு பார்த்துக் கொண்டிருந் தனர்.

மூஸ்லிம் பின்அத்ஹூம் அவர்கள் மணப்பெண்களின் எதிரே வந்து நின்று, 'முதலில் நான் சொல்வதை அனை

PDF ISLAM

வரும் சொல்லுங்கள்'' என்று கூறிவிட்டு. ''பிஸ்மில்லாஹ் ஹிர்ரஹ்மான்... நிர்ரஹீம்'' என்று ஒவ்வொரு வார்த்தையாகச்சொல்ல, அவர்கள் அனைவரும் அவ்விதமேக் கூறினார்.

அதைத் தொடர்ந்து, லாயிலாஹா... இல்லல்லாஹு... முஹம்மதுர்... ரசூலுல்லாஹி... என்று ஒவ்வொரு சொல்லாகக் கூற அதையும் மணப்பெண்கள் கூறினர். அதே சமயம் மற்றவர்களுடைய வாய்களும் அதைமுணு முணுத்தன.

அந்த சமயத்தில் மன்னர் சேரமான் பெருமாள் குறுக்கிட்டு, 'அத்ஹம் அவர்களே! நீங்கள் சொன்ன மந்திரத்தின் அர்த்தம் என்னவென்று பகிரங்கமாகக் கூற முடியுமா ?'' எனக் கேட்க, முஸ்லிம் பின் அத்ஹம் மன்னரின் நோக்கத்தைப் புரிந்து கொண்டு, ''மாட்சிமை தங்கிய மன்னர் பிரான் அவர்களே ! நான் கூறியது எந்த மந்திரமும் அல்ல? அரபிச் சொற்களே !

முதலில் கூறியதற்கு, அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திரு நாமத்தால் ஆரம்பஞ் செய்கிறேன்'' என்று பொருளாகும்.

இரண்டாவது கூறியதற்கு, ''வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை-எதுவுமில்லை. முஹம்மது நபி (ஸல்-அலை) அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதராக இருக்கிறார்கள்'' என்பதாகும்.

''சரி ; மீண்டும் தொடருங்கள் என்றார்'' மன்னர்

முஸ்லிம் பின் அத்ஹம் மணப் பெண்களைப் பார்த்து, ''நான் இபபோது தமிழில் சொல்லியதை மீண்டும் சொல்லிக் கொடுக்கிறேன். சொல்லுங்கள்!,' என்று கூறி, மீண்டும் ஒவ்வொரு வார்த்தையாகச் சொல்லிக் கொடுக்க அவர்கள் திருப்பிச் சொன்னார்கள். அது முடிந்தவுடன், முஸ்லிம் பின் அத்ஹம்,

அல்ஹம்ந்து...லில்லாஹி...ரப்பில் ஆலமீன்.

அர்ரஹ்மான்...னிர்ரஹீம் ..
மாலிக்கி...யவ்மித்தீன்...

இய்யாக்க...நஃபுதுன்வ...இய்யாக்க நஸ்தயீன்...

இஹ்தினஸ்...ஸிராத்தல்...முஸ்தகீம்...

சிராத்தல்லதீன...அன்அம்த.. அலைஹிம்...

கைருல்...மஹ்லூபி...அலைஹிம்...

வலன்னால்லீன்

என்று ஒவ்வொரு வார்த்தையாகக் கூற மணப் பெண்கள் அதைத் திருப்பிக் கூறினார்கள். அதைத் தொடர்ந்து, ''புகழனைத்தும் அண்ட சராசரங்களைப் படைத்துப் போஷித்துப் பரிபாலிக்கப் படுத்துவோனாகிய அல்லாஹ்வுக்கே! அவன் அளவற்ற அருளாளன் நிறைவற்ற அன்புடையோன். நியாயத் தீர்ப்பு நாளின் அதிபதியும் ஆவான். அல்லாஹ்வே உன்னையே வணங்குகிறோம் உன்னிடமே உதவி தேடுகிறோம், வழி தவறிப் போனவர்களின் பாதையில் அல்லாமல். உன் கோபத்துக்குள்ளானவர்கள் வழியிலல்லாமல் எம்மை நேர்வழி நடத்துவாயாக; என்பது இதன் பொருள்'' இதையும்

''அந்த அல்லாஹ் தனித்தவன் யாருடைய தேவையுமற்றவன், அவனை யாரும் பெறவுமில்லை; எவராலும் பெறப்படவுமில்லை; அவனே சர்வ வல்லமையும் மிக்கவன்'' என்பதையும் நீங்கள் எண்ணத்தால் நம்பிக்கை வைக்கிறேன் என்று உறுதி கொண்டு ''நான் முஸ்லிம் ஆகிறேன்...நான் முஸ்லிம் ஆகிறேன்...நான் முஸ்லிமாகிறேன்'' என்று மூன்று விடுத்தம் சொல்லுமாறு கூற அவர்கள் அவ்விதமே கூறினார்கள்.

PDF ISLAM

முஸ்லிம் பின் அத்ஹம் மன்னர் பிரானை நோக்கி, இவர்கள் முஸ்லிம்களாகிவிட்டார்கள்! இனி திருமணத்தை நடத்த தாங்கள் அனுமதி கொடுக்க வேண்டும் என்றார்.

மன்னர் சிரித்துக்கொண்டே முஸ்லிம் ஆவது என்பது இவ்வளவுதானா? அப்படியானால் நீங்கள் சொன்ன அனைத்தையும் நானும் சொன்னேனே! நானும் முஸ்லிமாகிவிட்டேனா? என்று கேட்டார்.

''மாட்சிமைத் தாங்கிய மன்னர் பிரான் அவர்களே! நான் சொன்னதை வாயால் திரும்பக் கூறி விடுவதனால் மட்டும் ஒருவர் முஸ்லிமாகி விட முடியாது. அதை உள்ளத்தால் ஏற்று, படிப்படியாக வாழ்க்கைக்குக் கொண்டு வரவேண்டும். இஸ்லாம் என்பது நடைமுறை மார்க்கமே தவிர வாயினால் சொல்லிவிடும் மந்திரங்களின் அமைப் பல்ல!'' என்றார் முஸ்லிம் பின் அத்ஹம்.

''இந்தப் பெண்கள் உள்ளத்தால் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதாக எப்படித் தெரிந்து கொண்டீர்கள்?'' என்று கேட்டார் மன்னர்.

இவர்கள் தாங்கள் இஸ்லாத்தில் சேர்ந்து முஸ்லிம் கணவர்களைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறோம் என்பதை முன் கூட்டியே மனதால் ஒப்புக் கொண்டுதான் இங்கு வந்துள்ளார்கள் என்பதை மேன்மைக்குரிய தாங்கள் அறிவீர்கள், அதன் அடிப்படையில்தான். இப்போது ஆரம்ப 'கலிமா' சொல்லிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இனி அவர்கள் தீதறவாக அறிந்துக் கொள்ள அவர்களின் கணவன்மார்கள் உதவுவார்கள்,'' என்றார் அத்ஹம்.

''சரி! திருமணச் சடங்குகளை ஆரம்பியுங்கள் பார்க்கலாம்'' என்றார் மன்னர்.

PDF ISLAM

''திருமணத்தில் சடங்கு எதுவும் இல்லை! மன்னர் பிரானுகிய நீங்களே சாட்சியமாக இருந்து எங்களுக்கு அனுமதி பெற்றுக் கொடுக்க வேண்டும்!', என்றூர் அத்ஹம்.

''அதென்ன சாட்சியம்?'' என்று மன்னர் கேட்க, ''ஒவ்வொரு பெண்ணிடமும் இன்ன நபரை நான் நூறு பொற்காசுகள் ' 'மஹருக்கு'' திருமணம் செய்து கொள்ள சம்மதிக்கிறேன் என்று ஒப்புதல் வாங்கித்தர வேண்டும்'' என்றூர்.

''மஹர் என்றல் என்ன? என்று மன்னர் வினவ,'' திரு மணத்தின் போது கணவன் பெண்ணுக்குக் கட்டாயமாக வழங்க வேண்டிய தொகை!'' என்றூர் அத்ஹம்.

''அப்படி வழங்க வேண்டிய தொகை இல்லாவிட்டால் திருமணம் செய்து கொள்ள முடியாதா?'' என்று மன்னர் கேள்வி எழுப்ப, கையில் தொகை இருந்தால் உடனே கொடுத்து விடலாம்! இல்லா விட்டால் வாக்களித்து விட்டு வாழ்நாளில் கொடுத்து விடலாம்'' என்றூர் அவர்.

''வாழ்நாளில் கொடுக்கா விட்டால்...!'' என்று மன்னர் கேள்விக்கு, ''கணவன் இறந்து விட்டால் அவன் சொத்திலிருந்து அப்பெண் கைப்பற்றிக் கொள்ளலாம்'' என்று அத்ஹம் கூற, ''அவள் முதலில் இறந்து விட் டால்?'' என்று மன்னர் மடக்க, அந்தத் தொகையை அவளின் சந்ததிகள் பெற்றுக் கொள்ளலாம்'' என்று அத்ஹம் விடையளித்தர். அதோடு, ''இப்போது திரு மணம் செய்து கொள்ளப் போகும் எனது நண்பர்கள், ''மஹர்'' தொகையை உடனே செலுத்த வசதியுடைய வர்களாக இருப்பதால் இங்கேயே வழங்கி விடுவார்கள்'' என்று கூறி முடித்தார் அத்ஹம்.

PDF ISLAM

''சரி எந்த ஆணும் எந்த பெண்ணும் திருமணம் செய்து கொள்ளப் போகிறார்கள்?'' என்று மன்னர் மூத்த அமைச்சர் சேதுபத்திரரை கேட்க, அவர் முதலில் பெண்ணின் பெயரையும் அவளைத் திருமணம் செய்து கொள்ளப் போகும் ஆணின் பெயரையும் ஒவ்வொன்றாக குறிப்பிட்டார்.

திருமணம் செய்து கொள்ளப் போகும் பெண்கள் வலது புறமும் ஆண்கள் இடது புறமும் வந்து நின்றனர் சேதுபத்திரர் சொன்ன பட்டியல்படி மன்னர் முதலில் ஒவ்வொரு பெண்ணின் பெயரையும் கூறி அழைத்து, அவளைத் திருமணம் செய்து கொள்ளப் போகும் ஆணின் பெயரையும் குறிப்பிட்டு, முதலில் பெண்ணிடமும் பிறகு ஆணிடமும் சம்மதம் வாங்கினார். அதோடு, அவரவர் பெற்றோர்களையும் அழைத்து அவர்களுக்கு ஏதாவது ஆட்சேபனை உள்ளதா என்று ஒப்புதல் கேட்டு அதையும் பெற்றார். ஒவ்வொரு சம்மதத்தின் போதும், ஆணை அப்பெண்ணிடம் நூறு பொற் காசுகளைக் கொடுக்கச் சொன்னார்.

அதன்படி முதல் திருமணம் நடைபெற்றவுடன், மன்னர் முஸ்லிம் பின் அத்ஹமை நோக்கி ''எங்கள் நாட்டு வழக்கப்படி திருமணம் என்றால் குறைந்தபட்சம் மணமக்களுக்கு மலர் மாலைகள் அணிவிப்பது வழக்கம் இதில் உங்களுக்கு ஆட்சேபணையில்லையே ?'' என்று கேட்க' முஸ்லிம் பின் அத்ஹம் முகத்தில் புன் சிரிப்புத் தவழ ''இல்லை. மன்னர் பிரானே!'' என்று கூற, தயாராக வைக்கப்பட்டிருந்த இரு மாலைகள் ஒன்று ஆணின் கையிலும் மற்றொன்று பெண்ணின் கையிலும் கொடுக்கப்பட அவர்கள் ஒருவருக்கொருவர் அணிந்து கொண்டனர் இவ்விதமே அனைத்துத் திருமணங்களும் வரிசையாக நடந்தேறின.

PDF ISLAM

முஸ்லிம் பின் அத்ஹம் அரபி மொழியில், குத்பா'வின் 'துஆ'வும் ஓதினார், அது யாருக்கும் புரியவில்லை. ஆனால் அங்கிருந்த அரபுகளும், மாப்பிள்ளைகளும் கையேந்தி, 'ஆமீன்' என்று கூறியதைக் கண்ட மணப் பெண்களும் தங்கள் கணவன்மார்களைப் பின் பற்றிக் கையேந்தினர், சிறிது நேரம் பொறுத்துப்பார்த்த மன்னரும் கையேந்தினார். அதைக் கண்ணுற்ற அவையிலிருந்த ஒவ்வொருவரும் கையேந்தி, 'ஆமீன்' என்று குரல் கொடுத்தனர்,

'துஆ' ஓதி முடிந்தவுடன், ',இப்போது நீங்கள் அரபியில் சொன்ன மந்திரத்தின் பொருள் என்ன? என்று மன்னர் கேட்க, ,'மன்னர் பிரானே? இது எந்த மந்திர மும்மில்லை! கடவுளிடம் இம்மணமக்களுக்காகச் செய்யப் பட்ட பிரார்த்தனை!'' என்றார் முஸ்லிம் பின் அத்ஹம்,

மன்னர் சார்பாக மூத்தஅமைச்சர் சேதுபத்திரர் அவையினரை நோக்கி, இந்தத் திருமணங்களில் கலந்து கொண்ட அனைத்து மக்களும் விருந்தளிக்கும் செலவுகளை அரபுகளே ஏற்றுள்ளார்கள், நமது மரபுபடி விருந்துகள் தயாரிக்கப் பட்டுள்ளன. மேலும், திருமண தம்பதிகள் இந்நாட்டின் எந்த பாகத்திலும் போய்த்தங்கி ஒரு வாரம் உல்லாசமாகப் பொழுது போக்கி வர அரசு அனுமதியளித்துள்ளது, அதற்கிடையில் அவர்களுக்குத் தனி இல்லங்கள் கட்டிக் கொடுக்கப்படும், மேலும், மற்ற அரபுகள் நாளை பயணப்படுகிறார்கள். அதையொட்டி மன்னர் பிரான் அவர்கள் ஒரு முக்கிய அறிவிப்பைச் செய்கிறார்கள், என்று கூறி முடிக்கும் போது, சேதுபத்திரரின் நாத்தழுதழுத்தது கண்கள் கலங்கின அனைவரும் ஆச்சரியத் தோடு அவரை நோக்கினர்.

''என் அன்புக்குரிய மக்களே! நீங்கள் யாரும் ஆச்சரியப் படவோ கவலைக் கொள்ளவோ வேண்டாம்! நாம்

PDF ISLAM

அரபுகளுடன் பயணப்படுவதாக முடிவெடுத்துள்ளோம், இதற்குக் காரணம். அந்நாட்டின் தலைவராகவும், மக்க ளின் உயிராகவும் இறைவனின் தூதராகவும் திகழ்கின்ற முஹம்மது பின் அப்துல்லா அவர்களைச் சந்திக்கவும், அவர் கள் மனித சமுதாயத்திற்குச் செய்துள்ள சேவைகளை நேரில் அறிந்து வந்து, நம் நாட்டிலும் அத்தகைய சீர் திருத்தங்களை மேற்கொண்டு மக்களை வாழ வைப்பதற்கு மேயாகும். நாம் திரும்பி வரும்வரை, ஏற்கனவே உங்கள் மன்னராக இருந்த மார்த்தாண்டவர்மன் அவர்களே மன்னர் பொறுப்பை ஏற்று, மூத்த அமைச்சர் சேது பத்தி ரர்! தளபதி மார்த்தாண்ட பூபதி மற்றும் அமைச்சர் பெருமக்களின் ஆலோசனைகளில் நாட்டை வழி நடத்து வார். நாம் இருப்பது போலவே எல்லா காரியங்களிலும் முறையுடன் நடைபெறும். பாண்டிய நாட்டு மன்னர் மகா வீர பாண்டியன் அவர்கள், வழக்கம் போல் நமது நண்பராகத் திகழ்ந்து நமது நாட்டுக்கு அனைத்து வழி களிலும் துணையாக இருப்பார்! ஆதலால் நீங்கள் அனைவரும் எம் வேண்டுகோளை மதித்து விடை கொடுப்ப துடன், உங்களில் சவுகரியப்படுவோர் மட்டும் நாளை அதி காலை இரண்டாம் ஜாமத்தில் துறைமுகம் வந்து எங்களை வழி அனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்கிறோம்', என்று இரண்டு கையையும் கூப்பி கும்பிட்டார்.

மன்னர் சேரமான்பெருமாள் தனது இறைவழி பாட்டின் சமயத்தைத் தவிர, வேறு எந்த சமயத்திலும் இரு கை கூப்பி நின்றதை யாரும் பார்த்ததில்லை கூடியிருந்த மக்கள் அனைவருடைய கண்களும் கலங்கிவிட்டன.

மன்னர் சேரமான் பெருமாள் அவர்களின் கண்களும் கலங்கி, இருதுளி நீரையும் வெளியே தள்ளிவிட்டது. அவை யில் ஒரு அமைச்சர் எழுந்து, 'ஓ' வெனக் கதறியவாறு, ''எங்கள் உயிருக்கு உயிரான மன்னர் பெருமானே! தங்

பா. 24

PDF ISLAM

களின் இந்த யோசனையில் மாற்றம் செய்து கொள்ள சிறிதும் இடமில்லையா?'' எனக்கேட்டார் அதை ஆதரித்து மேலும் பல குரல்கள் எழுந்தன.

மன்னவரவர்கள் மிகவும் அமைதியான முறையில், ''எல்லோரும் என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்!'' என்றார். மன்னிப்பு என்ற வார்த்தையை மன்னர், உபயோகித்ததில்லையாதலால், அனைவரும் வாய்மூடி மவுனிகளாகி விட்டனர்.

மறுநாள் அதிகாலை. இருள் அகலுமுன்னே துறைமுகத்தில் பிரம்மாண்டமான கூட்டம் கூடிவிட்டது. மேலும் ஆண்களும், பெண்களும் சாரைசாரையாக மூன்று திசைகளிலிருந்தும் வந்துகொண்டிருந்தனர். சிலர் இரவு முழுவதும் வழி நடந்து வந்துள்ளார்கள் என்பதைக் காட்டும் விதத்தில் அவர்கள் கையில் தீப்பந்தங்களும் தீ எரியும் குச்சிக்கட்டுளும் காணப்பட்டன. கஞ்சிக் கலயங்களும் சிலர் கையில் காணப்பட்டன.

மேற்றிசையில் கடல் நீர்விரிந்து பரந்து கிடந்தது. கடற்கரை மணற்பரப்பில் மனித சமுத்திரம் அலையலையாக விரிந்து கொண்டிருந்தது.

அதிகாலை, கப்பலின் உச்சியிலிருந்து பாங்கு ஒலித்தது. ''அல்லாஹு அக்பர்! அல்லாஹு அக்பர்'' என்று முதல் சப்தம் வெளிப்பட்டபோது, கூடியிருந்த மக்கள் அதன் பொருள் தெரியாமல், ஏதோ மன்னரைப் புகழும் கோஷம் என்றெண்ணி அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் என்று தாங்களும் கூறினார்கள்.

பாங்கு சொல்லி முடித்தவுடன் கூட்டத்தில் பெரிய பரப்பு ஏற்பட்டது. ,' மன்னர் வருகிறார்! மன்னர்

PDF ISLAM

வருகிறார்!'' ஒருவருக்கொருவர் பரபரப்புடன் கூறித் திரும்பி நோக்கினர்.

மன்னர் சேரமான் பெருமாளின் பல்லக்கு தூரத்திலிருந்து மிதந்து வந்து கொண்டிருந்தது அதற்கு அடையாளமாக அரசாங்க யானை பூரண ஜோடனைகளுடன் முன்னால் வந்து கொண்டிருந்தது. அதன் பின்னால் ராணுவ வீரர்கள் அணிவகுத்து வந்து கொண்டிருந்தனர், நடுவில் மன்னரின் பல்லக்கும், அதன் பின்னால் ராணுவ அணிவகுப்பும், பிரமுகர்களின் அணிவகுப்பும் தொடர்ந்து கொண்டிருந்தன. அரசு வாத்தியமும் அலையாக முழங்கிய ஒலி அனைவருக்கும் கேட்டது. அதையும் மிஞ்சும் விதத்தில், ''மன்னர் சேரமான் பெருமாள் வாழ்க!'' என்ற மக்களின் வாழ்த்தொலி வானைப் பிளக்கத் தொடங்கியது.

மன்னர் பிரான் கப்பலை வந்து சேர்வது எளிய காரியமாக இருக்கவில்லை மக்கள் வழி விட்டாலும், வழி நெடுக பூமியில் சாஷ்டங்கமாக விழுந்து எழுந்து கொண்டே இருந்தனர். மன்னர் இரு பக்கங்களிலும் தன்கையை அசைத்து அவர்களை ஆசீர்வதித்துக்கொண்டே வந்தார்.

இதற்கிடையில் கப்பலிலிருந்த அரபுகளெல்லாம் கீழே இறங்கி வந்து கப்பலின் சிறிது தூரத்தில் மணல் பரப்பில் பெரியதொரு விரிப்பை விரித்து, அதில் வரிசையாக நின்று தங்கள் 'பஜர்' தொழுகையை நிறைவேற்றத் தொடங்கினர். இந்தத் தொழுகையில், முதல் நாள் திருமணம் செய்துகொண்ட அரபியரும் வந்து கலந்து கொண்டனர். ஏற்கனவே தொழுகையைப் பார்த்திராதவர்கள். ''இந்த அரபுகள் ஏன் நின்று குனிந்து உட்கார்ந்து பூமியை மாறி மாறி முத்தமிடுகிறார்கள்!'' என்று ஒருவருக்கொருவர் கேட்டுக் கொண்டனர்,

PDF ISLAM

அரபுகள் தொழுகையை முடிப்பதற்கும், மன்னர் பிரான் கப்பலை நெருங்குவதற்கும் சரியாக இருந்தது. அரபுகள மரியாதையாக அணிவகுத்து கப்பல் வாசற்படியின் இருபக்கங்களிலும் நின்று, குனிந்து சலாம் செய்து மன்னரை வரவேற்றனர். மன்னர் சேரமான் பெருமாள் தம்முடைய வணக்கப்படி, கையசைத்து அவர்களை ஆசீர்வதித்த வண்ணம் பல்லக்கிலிருந்து இறங்கினார்.

பல்லக்குத் தூக்கிகளைப் பார்த்த முஸ்லிம் பின் அத்ஹம் ஆச்சரியத்தால் பிரமித்துப்போய் ஓடிச்சென்று அவர்களின் கைகளைப் பற்றிக் கொண்டார். மூத்த அமைச்சர் சேதுபத்திரரும் புதிய மன்னர் மார்த்தாண்டவர்மரும் முன்பக்கமும் தளபதிமார்த்தாண்ட பூபதியும் ஒற்றர்படைத் தலைவர் சிங்கராயர் பின் பக்கமும் பல்லக்கைச் சுமந்து வந்திருந்தனர். அவர்களின் உதவிக்கு மன்னரின் பாதுகாவலர்கள் முன்னாலும் மற்றவர் பின்னாலும் இருந்தனர்.

முஸ்லிம் பின் அத்ஹம் இஸ்லாமிய முறைப்படி, அந்த நால்வரையும் நெஞ்சோடு அணைத்து 'முஆனகா' செய்தார் இந்தக் காட்சியைக் கண்ட மன்னர் பிரான் அதே போன்று அவர்களைக் கட்டிப்பிடித்து நெஞ்சோடு அணைத்து விடை பெற்றுக் கப்பலின் படிகளில் ஏறினார் அவரைத் தொடர்ந்து மெய்ப்பாதுகாவலர்கள் இருவரும் ஏறினர்.

மேல் தட்டில் மன்னர்பிரான் நின்று தன் கைகளை உயர்த்தியபோது, ஜன சமுத்திரம் அனைத்தும் தங்கள் கைகளை உயர்த்தி வாழ்த்தொலி முழங்கிக் கொண்டிருந்தது. கப்பலின் கொடி மரத்தில் ஒரு பக்கம் சேரநாட்டுக் கொடி ஏற்றப்பட்டது மறு மக்கம் வர்த்தகக் கப்பல்

PDF ISLAM

என்பதைக் காட்டும், அக்கப்பலின் வழக்கமான கொடி ஏற்றப்பட்டது.

மன்னரின் பக்கத்தில் வந்து நின்ற முஸ்லிம் பின் அத்ஹம் நங்கூரத்தை உயர்த்த அனுமதி கேட்க, அதை ஏற்று மன்னர் தலையசைக்க, கப்பல் பணியாளர்களான அரபுகள் சுறுசுறுப்புடன் அங்கும் இங்கும் இயங்க கடலை நோக்கிக் கப்பல் நகரத் தொடங்கியது. மக்களின் வாழ்த் தொலிகளும் வானைப்பிளந்து கொண்டிருந்தன. கப்பல் நகர நகர ஒலி மங்கியது உருவங்களும் மங்கின,

மேல் தட்டில் நின்றவாறே மன்னர் தன் பூமியை நோக்கிக் கொண்டே இருந்தார் அது வர வர சிறிதாகி பின் ஒரேயடியாக மறைந்தது. கப்பலும் வரவரச் சிறி தாகி ஆழ்கடலில் மறையும் வரை மக்களும் பார்த்துக் கொண்டிருந்தனர் மன்னருக்கு வெறும் கடல் மட்டும் தெரிந்தது போல் மக்களுக்கும் விரிந்து பரந்த கடல் மட்டுமே தெரிந்தது.

ஆசிரியர் குறிப்பு:- மன்னர் சேரமான் பெருமாள் மதீனமாநகர் போய்ச் சேர்ந்து ரசூல் (ஸல்-அம்) அவர் களைச் சந்தித்து, கலிமா சொல்லி இஸ்லாத்தில் இணைந்த தாகவும். கடைசி ஹஜ்ஜில் அவர் கலந்து கொண்டதாக வும் சில குறிப்புகள் கூறுகின்றன, ஆனால் ஹதீஸ்களில் இதற்கு எந்தவிதமான சிறு ஆதாரமும் இல்லை. அது போன்று. அவர் மக்கமாநகர் சென்று இஸ்லாத்தில் இணைந்து ஹஜ்ஜை நிறைவேற்றியதாகவும் அப்போது ரசூல் [ஸல்அம்] அவர்கள் வஃபாத்தகி விட்டதாகவும் ஆதலால் மதீனா சென்று அவர்களின் நல்லடக்க ஸ்தலத்தை 'ஜியாரத் செய்து விட்டு, அங்கேயே தங்கிவிட்டதாகவும் மற்றொரு குறிப்புக் கூறுகிறது. ஆனால் இதற்கும் சரித்திரப் பூர்வ

PDF ISLAM

மான ஆதாரம் எதுவும் கிடைக்க வில்லை. மன்னர்சென்ற கப்பல் நடுவழியில் கடற் கொள்ளைக்காரர்களால் தாக்கப் பட்டு மூழ்கடிக்கப்பட்டது என்றும் சொல்லப்படுவதற்கும் சரியான நிருபணம் எதுவும் கூறமுடியவில்லை அதுபோன்ற ராஜகுரு ராமநம்பியின் விஸ்வாசமுடையவர்கள். நடுக் கடலில் ஒரு படையை நிறுத்தி வைத்து திடீர் தாக்குதல் நடத்தி மன்னரைக் கொன்று கப்பலையும் கடலில் ஆழ்த்தி விட்டார்கள் என்று சொல்லப்படுவதற்கும், கேரள வர லாற்றில் ஒரு சிறு ஆதாரமும் இல்லை அல்லாஹு அஃலம்! உண்மையை அல்லாஹ்வே அறிவான். [நிறை வுற்றது.]

இஸ்லாமிக் புரபகேஷன் சென்டர்

இஸ்லாமிக் புரபகேஷன் சென்டரின் குர்ஆன் கேஸட்டுகளும், சொற்பொழிவு கேஸட்டுகளும், மார்க்க சம்பந்தப்பட்ட புத்தகங்களும் கிடைக்கும்.

61, காயிதே மில்லத் ரோடு - திருச்சி - 1.

PDF ISLAM

இஸ்லாம் மார்க்கம் வடக்கு 'சிந்து'வில் நுழையும் போது வாள் முனையைச் சந்திக்க நேர்ந்தது! ஆதலால் வாளால் பதில் சொல்ல வேண்டி வந்தது!

தெற்கே "கேரளா"வுக்கு இஸ்லாம் வரும் போது வர்த்தக வழியில் வரவேற்கப்பட்டது. ஆதலால் அன்புக்கு ஆட்பட்டு, மனிதப் பண்பை வளர்த்தது!

மாமேதை மூன்றாவது சேரமான் பெரும... காலத்தில் அந்த அற்புதம் நடந்தது! "இஸ்லாம் என்ற... என்ன?" என்ற உண்மை கேரள மண்ணில் புரிய வை...கப்பட்டது. அதைத் தொடர்ந்து தமிழகமும் புதுமை கண்டது.

இஸ்லாத்தின் இந்த இனிய வரலாறு கரடுமுரடாய்ச் சொல்லப்படாமல் கதை வடிவில், வரலாற்று நவீனமாகத் தரப்பட்டுள்ளது.

இந்தியாவில் எந்த மொழியிலும் இதுவரை எழுதப்படாத ஒப்பற்ற தொரு காவியம்! பெண்களும், சிறுவர்களும் கூடப் படிக்கத் தக்க எளிய தமிழ் நடை! ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்க வேண்டிய இலக்கியப் பொக்கிஷம்!

50 ஆண்டுகள் எழுத்தனுபவமுள்ள, "மறுமலர்ச்சி" ஆசிரியர் அல்ஹாஜ் A.M. யூசுப் சாஹிபின் பேனா முனையில் வெளிப்பட்ட அமுதகம்!

PDF ISLAM